அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது".

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேறியது.)

3. வினாக்கள் விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

முதல் பட்டியல்

1—

உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு வழங்கப்பட்ட பயணப்படி விவரங்கள்.

Question No. 2822 - Tmt. V.G. Manimegalai : Will the Hon'ble the Chief Minister be pleased to state —

(a) The details of Travelling Allowances paid to the Judges of the High Court during the last two years Judgewise?

(b) Monthlywise.

விடை.-

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

Month–wise details of T.A. claims of Judges of High Court from January 1990 to August 1993.

1990		1991		1992		1993	
Month.	Amount.	Month.	Amount.	Month.	Amount.	Month.	Amount.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	Rs.		Rs.		Rs.		Rs.
1/90	28,677	1/91	..	1/92	1,333	1/93	14,937
2/90	5,394	2/91	663	2/92	..	2/93	28,198
3/90	2,811	3/91	7,067	3/92	8,961	3/93	..
4/90	600	4/91	..	4/92	6,309	4/93	39,996
5/90	1,506	5/91	..	5/92	12,512	5/93	6,893
6/90	2,789	6/91	380	6/92	..	6/93	3,279
7/90	1,723	7/91	..	7/92	3,137	7/93	70
8/90	15,522	8/91	280	8/92	625	8/93	16,910
9/90	8,422	9/91	2,857	9/92	4,199	..	..
10/90	34,100	10/91	..	10/92	41,358	..	..
11/90	1,948	11/91	..	11/92	8,708	..	..
12/90	9,251	12/91	1,258	12/92	32,554	..	..
	1,12,643		**12,258**		**1,19,696**		**1,10,913**

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு கடந்த இரண்டாண்டுகளாக 1-1-1990 முதல் 31-12-1990 வரையிலும் மற்றும் 1-1-1991 முதல் 31-8-1993 வரையிலும் மாதவாரியாக அளிக்கப்பட்ட பயணப் படி (Travelling Allowance) விவரங்கள்.

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/90	2/90	3/90	4/90	5/90	6/90	7/90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1 திரு. நீதிபதி எஸ். நயினார் சுந்தரம் (Now Chief Justice at Gujarat High Court).	..	..	..	..	..	..	..
2. திரு. நீதிபதி கே. வெங்கடசாமி.	..	..	..	..	..	..	..
3. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	..	..	..	..	..
4. திரு. நீதிபதி பி. பாஸ்கரன் (Now Chairman, State Administrative Tribunal, Madras).	..	..	735	600	616	839	600
5. திரு. நீதிபதி ஈ. ஜே. பெல்லி	..	..		..	..	..	..
6. திரு. நீதிபதி எம். சீனிவாசன்	..	..		..	..	..	..
7. திருமதி நீதிபதி பத்மினி ஜேசுதுரை (Now in Central Administrative Tribunal)	..	..	..	..	..	..	..

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/90	2/90	3/90	4/90	5/90	6/90	7/90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
8. திரு. நீதிபதி எஸ். ராமலிங்கம் (Now Chairman, T.N. Land Reforms Special Appellate Tribunal).	..	..	..	..	..	..	..
9. திரு. நீதிபதி எ. அப்துல்ஹாடி	..	..	..	..	..	..	..
10. திரு. நீதிபதி எஸ். ஜனார்தனம்	..	..	..	..	..	..	..
11. திரு. நீதிபதி எ. எஸ். ஆனந்த் (முன்னாள் தலைமை நீதிபதி).	28,677	5,394	1,737	..	890	..	1,023
12. திரு. நீதிபதி எம். மருதமுத்து (ஓய்வு).	..	..	..	..	..	..	..
13. திரு. நீதிபதி எஸ். கோவிந்தசாமி (மறைவு).		..	..	..	..	1,950	..
14. திரு. நீதிபதி கே. சுவாமிதுரை	..	..	..	..	..	..	..
15. திரு. நீதிபதி டி. சோமசுந்தரம்	..	..	..	..	..	..	..
16. திரு. நீதிபதி கே. கனகராஜ்	..	..	..	..	..	..	..
17. திரு. நீதிபதி டி. இராஜு	..	..	..	..	..	..	..

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/90	2/90	3/90	4/90	5/90	6/90	7/90
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
18. திரு. நீதிபதி ஏ. ஆர். லட்சுமணன்	..	..	..	..	..	..	..
19. திரு. நீதிபதி பி. எஸ். மிஸ்ரா	..	..	..	..	..	..	..
20. திரு. நீதிபதி பி. கே. சேதுராமன் (மறைவு).	..	..	..	..	..	..	..
21. திரு. நீதிபதி ஏ. தங்கமணி	..	..	..	..	..	..	..
22. திரு. நீதிபதி எஸ். பிரதாப் சிங்	..	..	..	..	..	..	..
23. திரு. நீதிபதி டி. எஸ். அருணாசலம்	..	..	..	..	..	..	..
24. திரு. நீதிபதி கே. ஏ. தணிகாசலம்	..	..	..	..	..	..	..
25. திரு. நீதிபதி கே. எஸ். பக்தவச்சலம்.	..	..	339	..	..	..	..
26. திரு. நீதிபதி என். ஆறுமுகம்	..	..	..	..	..	..	..
27. திரு. நீதிபதி எஸ். டி. ராமலிங்கம் (ஓய்வு).	..	..	..	..	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/90	9/90	10/90	11/90	12/90	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. திரு. நீதிபதி எஸ். நயினார்சுந்தரம் (Now Chief Justice at Gujarat High Court).	..	..	..	..	..	..
2. திரு. நீதிபதி கே. வெங்கடசாமி	..	..	..	..	..	..
3. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	..	..	..	..
4. திரு. நீதிபதி பி. பாஸ்கரன் (Now Chairman, State Administrative Tribunal, Madras).	..	360	5,455	..	1,509	10,714
5. திரு. நீதிபதி ஈ. ஜே. பெல்லி	..	..	..	..	..	..
6. திரு. நீதிபதி எம். சீனிவாசன்	..	..	..	..	..	..
7. திருமதி நீதிபதி பத்மினி ஜேசுதுரை (Now in Central Administrative Tribunal).	..	..	..	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/90	9/90	10/90	11/90	12/90	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
8. திரு. நீதிபதி எஸ். ராமலிங்கம் (Now Chairman, Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal).	..	..	..	..	..	..
9. திரு. நீதிபதி எ. அப்துல்ஹாடி.	..	..	..	..	..	..
10. திரு. நீதிபதி எஸ். ஜனார்தனம்.	..	..	..	..	..	..
11. திரு. நீதிபதி எ. எஸ். ஆனந்த் (முன்னாள் தலைமை நீதிபதி).	14,553	7,500	20,783	..	..	80,557
12. திரு. நீதிபதி எம். மருதமுத்து (ஓய்வு).	8	..	..	..	..	..
13. திரு. நீதிபதி எஸ். கோவிந்தசாமி (மறைவு).	..	..	..	..	3,592	5,542
14. திரு. நீதிபதி கே. சுவாமிதுரை.	..	..	..	..	..	..
15. திரு. நீதிபதி டி. சோமசுந்தரம்.	..	..	..	..	..	..
16. திரு. நீதிபதி கே. கனகராஜ்.	..	..	..	..	..	..
17. திரு. நீதிபதி டி. இராஜு.	..	..	..	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர். (1)	8/90 (9) ரூ.	9/90 (10) ரூ.	10/90 (11) ரூ.	11/90 (12) ரூ.	12/90 (13) ரூ.	மொத்தம் (14) ரூ.
18. திரு. நீதிபதி ஏ. ஆர். லட்சுமணன்.	8	..	..	..	..	..
19. திரு. நீதிபதி பி. எஸ். மிஸ்ரா.	..	..	7,862	..	4,150	12,012
20. திரு. நீதிபதி பி. கே. சேதுராமன் (மறைவு).	..	..	..	1,948	..	1,948
21. திரு. நீதிபதி ஏ. தங்கமணி.	..	..	..	..	..	..
22. திரு. நீதிபதி எஸ். பிரதாப் சிங்.	..	..	..	..	..	..
23. திரு. நீதிபதி டி. எஸ். அருணாசலம்.	..	..	..	..	..	..
24. திரு. நீதிபதி கே. எ. தணிகாசலம்.	..	..	..	..	..	..
25. திரு. நீதிபதி கே. எஸ். பக்தவச்சலம்.	969	562	..	..	..	1,870
26. திரு. நீதிபதி என். ஆறுமுகம்.	..	..	..	..	..	..
27. திரு. நீதிபதி எஸ். டி . ராமலிங்கம் (ஓய்வு).	..	..	..	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/91	2/91	3/91	4/91	5/91	6/91	7/91
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. திரு. நீதிபதி எஸ். நயினார் சுந்தரம் (Now Chief Justice at Gujarat High Court).	..	..	..	..	..	..	..
2. திரு. நீதிபதி கே. வெங்கடசுவாமி.	..	..	..	..	..	..	..
3. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	..	..	..	..	..
4. திரு. நீதிபதி என். ஆறுமுகம்.	..	..	138	..	..	..	..
5. திரு. நீதிபதி ஈ. ஜே. பெல்லி.	..	..	..	..	..	..	..
6. திரு. நீதிபதி எம். சீனிவாசன்.	..	..	..	..	..	..	..
7. திருமதி நீதிபதி பத்மினி ஜேசுதுரை.	..	..	..	..	..	..	..
8. திரு. நீதிபதி எஸ். ராமலிங்கம் (Now Chairman, Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal).	..	..	..	..	..	..	..
9. திரு. நீதிபதி எ. அப்துல் ஹாடி	..	..	..	..	..	..	..
10. திரு. நீதிபதி எஸ். ஜனார்தனம்.	..	..	..	..	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/91	2/91	3/91	4/91	5/91	6/91	7/91
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
11. டாக்டர் நீதிபதி எ. எஸ். ஆனந்த் (முன்னாள் தலைமை நீதிபதி).	..	..	7,067	..	..	380	..
12. திரு. நீதிபதி எம். மருதமுத்து (ஓய்வு).	..	..	..	..	..	..	..
13. திரு. நீதிபதி எஸ். கோவிந்தசாமி (மறைவு).	..	..	..	..	..	..	..
14. திரு. நீதிபதி கே. சுவாமிதுரை.	..	..	..	..	..	..	..
15. திரு. நீதிபதி டி. சோமசுந்தரம்.	..	..	..	..	..	..	..
16. திரு. நீதிபதி ஜே. கனகராஜ்.	..	..	..	..	..	..	..
17. திரு. நீதிபதி டி. இராஜு.	..	..	..	..	..	..	
18. திரு. நீதிபதி ஏ. ஆர். லட்சுமணன்.	..	..	..	..	..	..	..
19. திரு. நீதிபதி பி. எஸ். மிஸ்ரா.	..	..	..	..	..	..	..
20. திரு. நீதிபதி கே. எஸ். பக்தவச்சலம்.	..	..	..	..	..	..	..
21. திரு. நீதிபதி ஏ. தங்கமணி.	..	..	..	..	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/91	2/91	3/91	4/91	5/91	6/91	7/91
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
22. திரு. நீதிபதி எஸ். பிரதாப் சிங்	..	..	..	..	..	..	..
23. திரு. நீதிபதி டி எஸ். அருணாசலம்.	..	663	..	..	..	..	..
24. திரு. நீதிபதி கே. எ. தணிகாசலம்.	..	..	..	..	..	..	..
25. திரு. நீதிபதி எஸ். டி ராமலிங்கம் (ஓய்வு, ஜூலை, 1991)	..	..	..	..	..	..	..
26. திரு. நீதிபதி பி. பே. சேதுராமன் (மறைவு).	..	..	..	..	..	..	..

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/91	9/91	10/91	11/91	12/91	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. திரு. நீதிபதி எஸ். நயினார் சுந்தரம் (Now Chief Justice at Gujarat High Court).	..	..	..	..	..	..
2. திரு. நீதிபதி கே. வெங்கடசுவாமி.	..	..	..	..	..	..
3. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	984	..	..	984
4. திரு. நீதிபதி என். ஆறுமுகம்.	..	..	..	..	..	138
5. திரு. நீதிபதி ஈ. ஜே. பெல்லி.	..	..	..	..	..	..
6. திரு. நீதிபதி எம். சீனிவாசன்.	..	..	..	..	..	..
7. திரு. நீதிபதி பத்மினி ஜேசுதுரை.	..	..	..	..	..	..
8. திரு. நீதிபதி எஸ். ராமலிங்கம் (Now Chairman, Tamil Nadu Land Reform Special Appellate Tribunal).	..	..	5,276	..	..	5,276
9. திரு. நீதிபதி எ. அப்துல்ஹாடி	..	..	..	..	..	..
10. திரு. நீதிபதி எஸ். ஜனார்த்தனம்.	..	..	..	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/91	9/91	10/91	11/91	12/91	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
11. டாக்டர் நீதிபதி எ. எஸ். ஆனந்த் (முன்னாள் தலைமை நீதிபதி).	280	2,857	..	..	..	10,584
12. திரு. நீதிபதி எம். மருதமுத்து (ஓய்வு).	..	..	..	..	1,258	1,258
13. திரு. நீதிபதி எஸ். கோவிந்தசாமி (மறைவு).	..	..	..	..	..	..
14. திரு. நீதிபதி கே. சுவாமிதுரை.	..	..	..	..	..	..
15. திரு. நீதிபதி டி. சோமசுந்தரம்.	..	..	..	..	..	..
16. திரு. நீதிபதி ஜே. கனகராஜ்.	..	..	..	..	..	..
17. திரு. நீதிபதி டி. இராஜு.	..	..	..	..	..	..
18. திரு. நீதிபதி ஏ. ஆர். லட்சுமணன்.	..	..	..	..	..	..
19. திரு. நீதிபதி பி. எஸ். மிஸ்ரா.	..	..	..	..	..	..
20. திரு. நீதிபதி கே. எஸ். பக்தவச்சலம்.	..	..	..	..	..	..
21. திரு. நீதிபதி ஏ. தங்கமணி.	..	..	..	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/91	9/91	10/91	11/91	12/91	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
22. திரு. நீதிபதி எஸ். பிரதாப் சிங்.	..	..	..	..	..	..
23. திரு. நீதிபதி டி எஸ். அருணாசலம்.	..	..	..	..	..	663
24. திரு. நீதிபதி கே. எ. தணிகாசலம்.	..	..	..	..	..	..
25. திரு. நீதிபதி எஸ். டி ராமலிங்கம் (ஓய்வு, ஜூலை 1991)	..	..	..	..	..	..
26. திரு. நீதிபதி பி. பே. சேதுராமன் (மறைவு).	..	..	..	..	..	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/92	2/92	3/92	4/92	5/92	6/92	7/92
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. திரு. நீதிபதி எஸ். நயினார் சுந்தரம் (தற்போது குஜராத் மாநில தலைமை நீதிபதி).	..	..	2,138	2,033	8,850	..	..
2. குமாரி நீதிபதி காந்த குமாரி பட்நகர் (முன்னாள் தலைமை நீதிபதி).	..	..	..	..	..	..	..
3. திரு. நீதிபதி வி. ரத்தினம் (தலைமை நீதிபதி) (தற்போது தலைமை நீதிபதி, இமாச்சல பிரதேசம்).	..	..	..	945	1,262	..	..
4. திரு. நீதிபதி கே. வேங்கடசுவாமி.	..	..	625	945	..	..	..
5. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	575	..	..	..	3,137
6. திரு. நீதிபதி ஈ. ஜே. பெல்லி.	..	..	3,298	1,441	..	..	..
7. திரு. நீதிபதி எஸ். ஜனார்தனம்.	1,333	..	..	..	..	..	..
8. டாக்டர் நீதிபதி எ. எஸ். ஆனந்த் (முன்னாள் தலைமை நீதிபதி).	..	..	325	..	..	..	..
9. திரு. நீதிபதி டி இராஜு.	..	..	1,625	..	..	..	..

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/92	2/92	3/92	4/92	5/92	6/92	7/92
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
10. திரு. நீதிபதி எஸ். பிரதாப் சிங்.	..	..	..	..	..	..	..
11. திரு. நீதிபதி எஸ். கோவிந்தசாமி (மறைவு).	..	..	..	..	2,400	..	..
12. திரு. நீதிபதி பி. எஸ். மிஸ்ரா.	..	..	375	945	..	..	..
13. திரு. நீதிபதி ஜே. கனகராஜ்.	..	..	..	..	..	..	..
14. திரு. நீதிபதி ஏ. ஆர். லட்சுமணன்.	..	..	..	..	..	..	..
15. திரு. நீதிபதி எம். சீனிவாசன்.	..	..	..	..	..	..	..
16. திரு. நீதிபதி டி எஸ். அருணாசலம்.	..	..	..	..	..	..	..
17. திரு. நீதிபதி அப்துல் ஹாடி.	..	..	..	..	..	..	..
18. திரு. நீதிபதி சி. வி. கோவர்தன்.	..	..	..	..	..	..	..
19. திரு. நீதிபதி வி. ரங்கசாமி.	..	..	..	..	..	..	..

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/92	9/92	10/92	11/92	12/92	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. திரு. நீதிபதி எஸ். நயினார் சுந்தரம் (தற்போது குஜராத் மாநில தலைமை நீதிபதி).	..	..	..	..	..	13,021
2. குமாரி நீதிபதி காந்தகுமாரி பட்நகர் (முன்னாள் தலைமை நீதிபதி).	625	1,500	22,942	350	..	25,417
3. திரு. நீதிபதி வி. ரத்தினம் (முன்னாள் தலைமை நீதிபதி, தற்போது தலைமை நீதிபதி, இமாச்சல பிரதேசம்).	..	2699	9,994	..	1,150	16,950
4. திரு. நீதிபதி கே. வேங்கடசுவாமி.	..	..	..	400	..	1,970
5. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	..	2,252	..	5,964
6. திரு. நீதிபதி ஈ. ஜே. பெல்லி.	..	..	750	..	..	5,489
7. திரு. நீதிபதி எஸ். ஜனார்தனம்.	..	..	..	..	900	2,233
8. டாக்டர் நீதிபதி எ. எஸ். ஆனந்த் (முன்னாள் தலைமை நீதிபதி).	..	..	..	..	..	325
9. திரு. நீதிபதி டி இராஜு.	..	..	..	..	..	1,625

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	8/92	9/92	10/92	11/92	12/92	மொத்தம்
(1)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
10. திரு. நீதிபதி எஸ். பிரதாப் சிங்.	..	..	1,125	..	..	1,125
11. திரு. நீதிபதி எஸ். கோவிந்தசாமி (மறைவு).	..	..	..	..	..	2,400
12. திரு. நீதிபதி பி. எஸ். மிஸ்ரா.	..	..	..	..	..	1,320
13. திரு. நீதிபதி ஜே. கனகராஜ்.	..	..	2,250	..	..	2,250
14. திரு. நீதிபதி ஏ. ஆர். லட்சுமணன்.	..	..	400	..	..	400
15. திரு. நீதிபதி எம். சீனிவாசன்.	..	..	3,897	..	..	3,897
16. திரு. நீதிபதி டி. எஸ். அருணாசலம்.	..	..	..	..	400	400
17. திரு. நீதிபதி அப்துல் ஹாடி	..	..	..	5,706	..	5,706
18. திரு. நீதிபதி சி. வி. கோவர்தன்.	..	..	..	..	24,100	24,100
19. திரு. நீதிபதி வி. ரங்கசாமி.	..	..	..	..	6,004	6,004

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/93	2/93	3/93	4/93	5/93
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. குமாரி நீதிபதி காந்தகுமாரி பட்நகர் (முன்னாள் தலைமை நீதிபதி).	11,048	18,714	..	..	..
2. திரு. நீதிபதி எஸ். ஏ. காதர் (ஓய்வு).	814	..	..	..	6,243
3. திரு. நீதிபதி கே. வேங்கடசாமி.	..	725		4,175	..
4. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	3,496	..	..	..
5. திரு. நீதிபதி எஸ். ராமலிங்கம்.	..	1,416	..	..	..
6. திரு. நீதிபதி டி எஸ். அருணாசலம்.	1,309	245	..	3,075	..
7. திரு. நீதிபதி ஜனார்தனம்.	1,140	1,258	..	..	..
8. திரு. நீதிபதி அப்துல் ஹாடி	..	..	..	18,900	..
9. திரு. நீதிபதி டி. கே. எஸ். பக்தவச்சலம்.	400	..	..	3,246	..
10. திரு. நீதிபதி வி. ரத்தினம்.	..	650	..	2,800	650

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	1/93	2/93	3/93	4/93	5/93
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
11. திரு. நீதிபதி சி. வி. கோவர்தன்.	..	1,694	..	..	..
14. திரு. நீதிபதி கே. ஏ. சுவாமி.	..	..	..	..	..
15. திரு. நீதிபதி டி ராஜு.	..	..	..	..	..
16. திரு. நீதிபதி வி. ரங்கசுவாமி.	226	..	..	7,800	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	6/93	7/93	8/93	மொத்தம்
(1)	(7)	(8)	(9)	(10)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1. குமாரி நீதிபதி காந்தகுமாரி பட்நகர் (முன்னாள் தலைமை நீதிபதி).	..	..	..	29,762
2. திரு. நீதிபதி எஸ். ஏ. காதர் (ஓய்வு).	..	..	2,262	9,319
3. திரு. நீதிபதி கே. வேங்கடசாமி.	1,000	..	1,698	7,598
4. திரு. நீதிபதி கே. எம். நடராஜன்.	..	..	..	3,496
5. திரு. நீதிபதி எஸ். ராமலிங்கம்.	..	..	..	1,416
6. திரு. நீதிபதி டி எஸ். அருணாசலம்.	587	..	..	5,216
7. திரு. நீதிபதி ஜனார்தனம்.	..	..	..	2,398
8. திரு. நீதிபதி அப்துல் ஹாடி	1,592	..	..	20,992
9. திரு. நீதிபதி டி கே. எஸ். பக்தவச்சலம்.	..	..	..	3,646
10. திரு. நீதிபதி வி. ரத்னம்.	..	700	..	4,800

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண் மற்றும் நீதிபதியின் பெயர்.	6/93	7/93	8/93	மொத்தம்
(1)	(7)	(8)	(9)	(10)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
11. திரு. நீதிபதி சி. வி. கோவர்தன்.	..	..	..	1,694
14. திரு. நீதிபதி கே. ஏ. சுவாமி.	..	..	6,450	6.450
15. திரு. நீதிபதி டி. ராஜு.	..	..	6,500	6,500
16. திரு. நீதிபதி வி. ரங்கசுவாமி.	..	..	..	8,026

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2—

சிறைக் கைதிகளுக்கு உணவு வழங்குவதில் முறைகேடுகள்.

வினா எண் 11777-டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைக் கைதிகளுக்கு உணவு வழங்குவதில் முறைகேடு என்பது பற்றி தமிழகத்தில் உள்ள அனைத்துச் சிறைகளிலும் 1-1-1989 முதல் 15-6-1991 வரை பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?

(ஆ) அவை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துச் சிறைகளிலும் உள்ள சிறைவாசிகளுக்கு உணவு வழங்குவதில் முறைகேடுகள் குறித்து 1-1-1989 முதல் 15-6-1991 வரை மொத்தம் 5 மனுக்கள் பெறப்பட்டன.

(ஆ) சிறைகளில் உணவுப் பொருட்கள் வழங்குவதில் முறைகேடுகள் இருப்பதாகக் குற்றம் சாட்டி பெறப்பட்ட மேற்படி 5 புகார் மனுக்கள் மீதும் சிறைத் துறைத் தலைவரால் தீரவிசாரணை மேற்கொள்ளப்பட்டு அதில் கூறப்பட்டிருந்த புகார்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை மட்டுமின்றி ஆதாரமற்றவை என கண்டறியப்பட்டது. ஆகவே அவைகளின் மீது நடவடிக்கை கைவிடப்பட்டது.

3—

சட்டப்படிப்பு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

வினா எண் 21005-திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சட்டப் படிப்பு முடித்து போதிய பணியின்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

இல்லை. எனினும் இத்தகைய இளம் வழக்கறிஞர்கள் அரசின் பல்வேறுபட்ட துறைகளில் தகுதிக்கு ஏற்ப நியமிக்கப்படுகின்றனர்.

1994 நவம்பர் 3]

அல்லாமலும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த இளம் வழக்குரைஞர்களுக்கு ஒரு முதுநிலை வழக்கறிஞருடன் பயிற்சியளிக்கப்படுகிறது. இப்பயிற்சி காலத்தில் இவ்வழக்குரைஞர்களுக்கு ரூ. 500 பிரதி மாதம் மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. மேலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த இளம் வழக்குரைஞர்களுக்கும் இத்தகைய பயிற்சி திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக பிரதி மாவட்டத்திலும் இரண்டு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த இளம் வழக்குரைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பயிற்சி காலத்தில் ரூ. 750 பிரதி மாதம் மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது.

4—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள குடும்ப நீதிமன்றங்கள்.

வினா எண் ***23020***-*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் எங்கெங்கு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம் முதன் முதலில் சென்னையில் மட்டும்தான் ஏற்படுத்தப்பட்டு 3-10-1988 முதல் இயங்கி வருகிறது. அதன் வேலைப் பளு அதிகமாக இருப்பதை முன்னிட்டு அதை கவனிக்கும் பொருட்டு மாவட்ட நீதிபதி தரம் 1-ல் ஒரு கூடுதல் முதன்மை நீதிபதி பதவியும் அதற்கு துணையான பணியாளர்களும் வழங்கப்பட்டுள்ளது. அதே போல், மதுரையிலும், ஒரு குடும்ப நீதிமன்றம் ஏற்படுத்த 1993-ல் ஆணை வழங்கப்பட்டு விரைவில் அங்கு துவங்கப்பட உள்ளது. வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் குடும்ப நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

புதுக்கோட்டை தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை.

வினா எண் ***16673***-*திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, காமராஜபுரம், போஸ்நகர், கோவில்பட்டி போன்ற இடங்களில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

காமராஜபுரம் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருக்கும் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்வதற்குரிய லே-அவுட்கள் ஒப்புதல் பெறப்பட்டவுடன் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப பட்டா வழங்கப்படும். போஸ்நகர் பகுதி நீர்நிலைப் புறம்போக்காக இருப்பதால் ஒப்படை செய்ய இயலாது. கோவில்பட்டி பகுதி பாறை புறம்போக்காக இருப்பதால் அதனை நத்தமாக வகைமாற்றம் செய்த பின்னர் பட்டா வழங்கப்படும். இவ்வகை மாற்றத்திற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு புதுக்கோட்டை கோட்டாட்சியர் அறிவுறுத்தப் பட்டுள்ளார்.

6—

கீழப்பாவூர் ஒன்றியம் இராமனூர் கிராமத்திற்கு குடும்ப அட்டைகள் வழங்குதல்.

வினா எண் **20651-திரு. எஸ். எஸ். ராமசுப்பு** : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா, கீழப்பாவூர் ஒன்றியம், இராமனூர் கிராம மக்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி தாலுகா, கீழப்பாவூர் ஒன்றியம் இராமனூர் கிராம மக்களிடமிருந்து பெறப்பட்ட குடும்ப அட்டைகளுக்கான மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு தகுதியான குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

7–

அவினாசித் தொகுதியில் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் அளவை உயர்த்த திட்டம்.

வினா எண் **23971**-டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், அன்னூர் ஒன்றியங்களில் நெசவுத் தொழிலுக்கு மண்ணெண்ணெய் மிக அத்தியாவசியமாகிறபடியால் 3 லிட்டர் மண்ணெண்ணெய் என்பதை 5 லிட்டராக உயர்த்தித் தர அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து அமல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அரசு வழங்கியுள்ள, சுமார் 1,50,00,000 குடும்ப அட்டைகளுக்கு வழங்க, மத்திய அரசு தற்பொழுது ஒதுக்கீடு செய்யும் மண்ணெண்ணெய் போதுமானதாக இல்லை. எனவே, அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், அன்னூர் ஒன்றியங்களில் நெசவுத் தொழிலுக்கென மண்ணெண்ணெய் அளவினை உயர்த்திட இயலாது. எனினும், இணை விற்பனைத் திட்டத்தின் கீழ் வெளிச் சந்தையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதால், நெசவுத் தொழிலுக்கான மண்ணெண்ணெய் வெளிச்சந்தையில் வாங்க வாய்ப்புண்டு.

8—

நிலக்கோட்டை தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை.

வினா எண் **17458**-திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நிலக்கோட்டைத் தொகுதியில் கட்டிட வசதி இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) கட்டிட வசதி இல்லாத சுகாதார நிலையங்களுக்கு நடப்பு ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நிலக்கோட்டை தொகுதியில் சிறு நாயக்கன்பட்டி மட்டப்பாறை ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டிட வசதி இல்லாமல் இருந்தன. 9-3-1992 ஆம் நாளைய சுகாதாரத் துறை அரசு ஆணை (நிலை) எண்.432-ன்படி இவ்விரண்டு இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எஸ். தும்மலப்பட்டி, விராலிப்பட்டி, மல்லாளம்பட்டி, சத்திய நாயக்கனூர் ஆகிய இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் வாடகை இல்லாத அந்தந்த பஞ்சாயத்துக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. அம்மையநாயக்கனூர், வீகுவீடு ஆகிய இடங்களில் உள்ளவை அரசு கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கூறிய ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட போதுமான நிலங்கள் கையகப்படுத்துதலும், பொது நன்கொடை பெறுவதிலும் சில நடைமுறை சிக்கல்கள் உள்ளன. சிக்கல்கள் தீர்ந்தபின் அரசு கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் போதுமான மருந்துகள் அளிக்க நடவடிக்கை.

வினா எண் **23661**-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு போதுமான மருந்துகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

1993-94 ஆம் ஆண்டுக்கு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்குத் தேவையான உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தேவைப் பட்டியலின் அடிப்படையில் வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட இணை இயக்குநர் வாயிலாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் இம் மருத்துவ மனையின் மருத்துவ அலுவலருக்கு அவசரத் தேவைக்கான மருந்துப் பொருட்களை கொள்முதல் செய்ய நிதி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 3]

இம் மருத்துவமனைக்கு 1993-ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலத்துக்கு ரூ. 6,32,812 பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் இம் மருத்துவமனையில் நோயாளிகளுக்குப் போதுமான அளவு மருந்துகள் அளிக்கப்பட்டு வருவதால் மருந்துப் பொருட்கள் கிடைக்கப்பெறவில்லை என எவ்வித புகாரும் வரவில்லை.

10—

குளத்தூர் தொகுதி கீரனூர் அரசு மருத்துவமனைக்கு அவசரகால ஊர்தி வழங்குதல்.

வினா எண் ***25345***-*திரு. சி. குழந்தைவேலு:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, கீரனூர் அரசு மருத்துவமனைக்கு அவசர கால ஊர்தி (ஆம்புலன்ஸ்) வாங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

15 படுக்கைகள் கொண்ட கீரனூர் அரசு மருத்துவமனையை 32 படுக்கைகளாக அதிகரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசின் கொள்கைப்படி தற்போது 50 படுக்கைகளுக்கு மேற்பட்ட அரசு மருத்துவமனைக்கு மட்டும் ஆம்புலன்ஸ் வசதி படிப்படியாக வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது. 50 படுக்கைகளுக்கு மேலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் ஆம்புலன்ஸ் வசதி செய்யப்பட்டவுடன் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு 50 படுக்கைகளுக்குக் கீழுள்ள மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்ய அரசு ஆவன செய்யும்.

11—

வாகனவரி செலுத்துபவர்களுக்கு ஏற்படும் இன்னலை நீக்கத் திட்டம்.

வினா எண் ***19665***-*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாகன வரி செலுத்துபவர்கள் வரி கட்டத் தவறினால், அபராதத்துடன் வரி வசூலிக்கப்பட்டாலும், மேற்கொண்டு காம்பவுண்டிங் பீஸ் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னலை போக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

போக்குவரத்து வாகனங்களுக்கு வரி செலுத்துவதற்கான உரிய காலத்தில் வரி செலுத்தப்படாவிட்டால், அபராதம் மற்றும் தண்டத் தொகையுடன் வரி வசூல் செய்ய, 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம் பிரிவு 15(எ) மற்றும் 15(பி)-யின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. உரிய காலத்திற்குள் வரி செலுத்த வேண்டியது வாகன உரிமையாளர்களின் கடமையாகும்; அவ்விதம் செய்யத் தவறுவோர் மீதுதான் அபராதம் வசூலிக்கப்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு இன்னல்கள் ஏதும் இல்லை.

12—

கடலூரிலிருந்து புதுக்குப்பம் வரை பேருந்து இயக்குதல்.

வினா எண் ***20842*—செல்வி கோ. மல்லிகா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கடலூர் (ஓடி)யிலிருந்து பரங்கிப்பேட்டை வரை இயங்கும் தடம் எண் 4 பேருந்தை சாமியார்பேட்டை, வேளங்கிராயன்பேட்டை வழியாக புதுக்குப்பம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): கடலூர் (ஓடி.) பரங்கிப்பேட்டை வழித்தடத்தில் இயங்கும் தடம் எண் டி4 நகரப் பேருந்தினை புதுக்குப்பம், வேளங்கிராயன்பேட்டை வழியாக சாமியார்பேட்டை வரை நீட்டித்தால் தடநீளம் 35.6 கி.மீட்டராகின்றது. நீட்டிக்கக் கோரும் புதுக்குப்பம், சாமியார்பேட்டை தடப் பகுதிகள் தற்போது நகரப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்று வருவதாலும், கோரியவாறு நீட்டித்தால் தட நீளம் நகரப் பேருந்துகள் இயக்கிட அனுமதிக்கப்பட்ட உச்ச கட்ட நீளமான 30 கிலோ மீட்டருக்கு கூடுதலாவதாலும் மோட்டார் வாகன விதிகள் 1989-ன் படி நீட்டித்து இயக்கிட இயலாது.

1994 நவம்பர் 3]

13—

கரூரிலிருந்து ஈசநத்தத்திற்குப் பேருந்து மீண்டும் இயக்குதல்.

வினா எண் ***23447—****திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கரூரிலிருந்து காக்காவாடி, கீழ்பசுபதிபாளையம் வழியாக ஈசநத்தத்திற்கு இயங்கி வந்த தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகப் பேருந்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இவ்வழித்தடத்தின் நீளம் 35.5 கிமீ. ஆகும். இத்தடத்தில் இதுவரை பேருந்து ஏதும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படவில்லை. ஈசநத்தம் என்ற பகுதியில் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தின் நீளம் 30 கிலோ மீட்டருக்கு மேல் உள்ளதால் நகரப் பேருந்து இயக்க இயலாது.

14—

கரூர் — ஆலமரத்துப்பட்டி வரைப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***23580—****திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கரூர்-சின்னமநாயக்கன்பட்டி வழி நத்தமேடு, கந்தசார்பட்டி, ஆலமரத்துப்பட்டி வரை தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கரூர்-ஆலமரத்துப்பட்டி (வழி) சின்னமநாயக்கன்பட்டி, நத்தமேடு, கந்தசார்பட்டி வழித் தடத்தின் நீளம் 22.2 கி.மீ. இவ்வழித் தடத்தில் வீரணம்பாளையம் பிரிவு முதல் கந்தசார்பட்டி வரை சுமார் 2.5 கி.மீ. நீளத்திற்கு மண்சாலையாக உள்ளதால், அவ்வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தால் நகரப் பேருந்து இயக்க இயலாது.

15—

கரூரில் ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்துதல்.

வினா எண் ***23617*****—*திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—***

திருச்சி மாவட்டம், கரூரில் ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது திருச்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கனரக வாகன ஓட்டுனர் பயிற்சிப் பள்ளி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகையால் கரூரில் நடத்த இப்போது திட்டம் ஏதும் இல்லை.

16—

அவிநாசித் தொகுதி முதலிபாளையத்திற்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***23957*****—*டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—***

அவிநாசி தொகுதி. முதலிபாளையத்திற்கு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அவிநாசி தொகுதி, முதலிபாளையம் கிராமத்திற்கு சேரன் போக்குவரத்துக் கழகம் 17-2-1994 முதல் தினசரி நான்கு நடைகள் பேருந்து வசதி செய்து கொடுத்துள்ளது.

1994 நவம்பர் 3]

17—

அழகாபுரி அணைக்கட்டினை மராமத்து செய்தல்.

வினா எண் 276—திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, அழகாபுரி அணைக்கட்டின் மறு கட்டுமானப் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

1. கொடகனாறு நீர்த்தேக்க மறு கட்டுமானத் திட்டம் 920 லட்சம் செலவில் அமைக்க அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. அணையின் கட்டுமான பணிகள் அனைத்தும் தற்பொழுது முடிவுறும் நிலையில் உள்ளது.

3. இடது பிரதான கால்வாய் மற்றும் பிரிவு வாய்க்கால் வேலைகள் யாவும் முடிவு பெற்றுள்ளது.

4. குடகனாறு மறுகட்டுமானத் திட்டத்தில், அணைப்பகுதியில் இரும்பு நடைபாதை பாலம் அமைக்கும் பணி இத்துறையின் மூலம் செய்ய வேண்டியுள்ளது.

5. அணையின் மேல் மின் விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

6. வலது பிரதானக் கால்வாயில் சில கொப்பு வாய்க்கால் வெட்டும் பணி செய்ய வேண்டியுள்ளது.

18—

மின்சார ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்.

வினா எண் 4604—திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார ஒப்பந்தக்காரர்கள், மின்சார ஊழியர்கள், ஒயரிங் லைசன்ஸ் பெற்று இலட்சக் கணக்கானவர்கள் பணியாற்றுவது அரசுக்குத் தெரியுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் என்றால், பல ஊழியர்களுக்குச் சலுகைகள், குடும்பநலத் திட்டங்கள் வழங்கப்பட்டும் மின்சார ஊழியர்களுக்கு ஏன் எந்த உதவியும் வழங்கப்படவில்லை ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மின்சார வேலைகள் செய்திட தகுதியுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிமமும், மின்சார வேலைகள் செய்ய தகுதியுடையவர்கள் அவர்கள் திறனுக்கு ஏற்ற சான்றிதழ்களையும் மின் உரிமம் வழங்கும் வாரியத்திடம் (Electrical Licencing Board) பெற்று மின் ஒப்பந்தக்காரர்களிடமோ அல்லது நிறுவனங்களிலோ மின்சார பணிகளை செய்பவர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அந்தப் பணியாளர்களைப் பொறுத்தவரை அவரவர்கள் பணிபுரியும் நிறுவனங்களில் கடைபிடிக்கப்படும் விதிகளின்படி சலுகைகள், மற்றைய உதவிகள் பெறுகிறார்கள்.

19—

பள்ளிக்கரணை பெரியார் நகரில் கூடுதல் மின் அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை.

வினா எண் **13642**-திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த வேளச்சேரி ரோட்டில் பள்ளிக்கரணை கிராமம் பெரியார் நகரில் கடந்த 18-5-1992-ம் நாள் புதிதாக டிரான்ஸ்பார்மர் மாற்றி மின் இணைப்புக் கொடுத்ததில் சுமார் 150 முதல் 200 வீடுகளில் பல்புகள், வானொலி, டேப்ரிக்கார்டர் போன்ற சாதனங்கள் எரிந்து சாம்பலானது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) சென்னையை அடுத்த வேளச்சேரி ரோட்டில் பள்ளிக்கரணை பெரியார் நகரில் 18-5-1992 அன்று காலையில் பலத்த காற்றின் காரணமாக மின் கம்பிகள் ஒன்றோடு ஒன்று தொட்டுக் கொண்டதினால் ஒரு பகுதியில் மின் அழுத்தம் சற்று கூடுதலாக ஏற்பட்டு, நான்கு, ஐந்து வீடுகளில் மின் விளக்குகள் பழுது அடைந்து விட்டன என்று தமிழக மின்வாரியத்தின்

1994 நவம்பர் 3]

மேடவாக்கப் பிரிவு அலுவலகத்திற்கு புகார் வந்தது. மின் அழுத்தம் கூடுதலாக ஏற்பட்ட காரணத்தினால் வானொலி டேப்ரிக்கார்டர் போன்ற சாதனங்கள் பழுது அடைந்ததாக புகார் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

(ஆ) 18-5-1992 அன்று இரவு மின்வாரிய பணியாளர்கள் விரைந்து சென்று பாதித்தப் பகுதியைப் பார்வையிட்டு சரியான மின் அழுத்தம் உள்ளவாறு சரி செய்தனர். இயற்கையின் சீற்றத்தால்தான் மின் அழுத்தம் சற்று கூடுதலாகி இந்நிலை ஏற்பட்டது. எனவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வாய்ப்பு எழவில்லை.

20—

ஆலங்குளம் தொகுதியில் மடைகளுக்கு அடைப்பானை பொருத்த நடவடிக்கை.

வினா எண் **14852**-திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியத்தில் உள்ள கங்கை கொண்டான் அருகில் காரிசங்குளம் அணைக்கு கிழக்கே ராஜபாதிபாலம் வரை உள்ள 7 மடைகளுக்கு அடைப்புகள் போட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சிற்றாறின் குறுக்கே அமைந்துள்ள கங்கைகொண்டான் அல்லது கரிசங்குளம் அணைக்கட்டிலிருந்து கங்கைகொண்டான் குளத்திற்கு தண்ணீர் வழங்கும் வாய்க்காலில் அணையிலிருந்து ராஜபாதி பாலம் வரை 5 மடைகள் உள்ளன. வரும் 1993-94-ம் நிதியாண்டின் நிதிநிலைக்கேற்ப முன்னிரிமை கொடுத்து மடைகளில் ஏற்பட்டுள்ள மராமத்து பணிகளை மேற்கொண்டு அடைப்பானை பொருத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

மானூர் ஒன்றியத்தில் பெரியகுளம் ஓடையில் தடுப்புச்சுவர் கட்டுதல்.

வினா எண் **14855**-திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[*1994 நவம்பர் 3*

ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், குறிச்சிக்குளம் கிராமத்திற்கு அருகில் பெரியகுளத்திற்கு தண்ணீர் போகும் ஓடையில் மண் அரிப்பு உள்ள இடங்களில் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மானூர் ஒன்றியத்திலுள்ள குறிச்சிக்குளம் கிராமத்தில் குறிஞ்சிக்குளம்—பெரியகுளம் உள்ளது. இக்குளத்தின் ஆயக்கட்டு 98.90 ஏக்கர் ஆகும். இக்குளத்திற்கு சிற்றாற்றின் குறுக்கே அமைந்துள்ள பள்ளிக்கோட்டை அணையிலிருந்து பிரிந்து செல்லும் பள்ளிக்கோட்டை கால்வாயில் மடை எண் 11-ன் மூலம் ஓடையின் (ஊட்டுக் கால்வாய்) நிலம் சுமார் 300 மீட்டர் ஆகும். இந்த ஓடையின் கரையில் சில இடங்களில் மண் அரிப்புகள் ஏற்பட்டுள்ளன. அரிப்புகள் ஏற்பட்ட இடத்தில் கரைகளை பலப்படுத்துவதற்கு தேவையான மதிப்பீடு தயாரித்து 1993-94-ல் வருட நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்றவாறு முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

வாணியம்பாடி ரயில் பாதைக்கு மேம்பாலம் கட்டுதல்.

வினா எண் ***15147*—டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி ரயில் பாதைக்கு மேம்பாலம் (லெவல் கிராஸிங்) கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

வாணியம்பாடி புறவழிச்சாலை அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது. எனவே இப்புறவழிச் சாலையில் கி.மீ.3/6-ல் ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் 8-வது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக் கொள்ள மைய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. ரயில்வே மேம்பாலம் அமைக்க, அதிக அகலம், நிலம் கையடக்கம் செய்ய வேண்டியுள்ளது. இத்திட்டம் மைய அரசின் 1992-93 ஆம் ஆண்டு திட்டத்தில் இடம் பெறவில்லை. 1993-94 ஆம் ஆண்டு திட்டத்தில் இடம் பெற்றால், இதற்கான மதிப்பீடு தயார் செய்து தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

23—

பரமக்குடி அருகே ரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

*வினா எண் **16098**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை 49-ல் பரமக்குடி அருகே உள்ள கமுதக்குடி அருகே ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

24—

சென்னை துரித ரயில் போக்குவரத்து திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களின் விவரம்.

Question No. 3218 :— Thiru M. Sundaradoss: Will the Hon'ble Minister for Housing and Urban Development be pleased to state—

(a) Whether the Government has handed over the lands for the Madras Road Transport systems to the Railway Board and the Southern Railway.

(b) The details thereof?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சென்னை துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் சென்னை கடற்கரையிலிருந்து மைலாப்பூர் வரை உள்ள 8.55 கி.மீ. தூரத்திற்கான திட்டப் பணிகள் 1984 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக தேவைப்படும் நிலம், அரசால் மற்றும் தனியாரால் கொடுக்கப்பட்ட மற்றும் கொடுக்கப்பட வேண்டிய நிலங்களின்

விவரம் பின் வருமாறு:

1. அரசு நிலங்களின் விவரம்:

1. முதலில் தேவைப்பட்ட நிலம்	..	18.61	ஹெக்டேர்
2. கூடுதலாக தேவைப்பட்ட நிலம்	..	1.08.28	ஹெக்டேர்.
வேப்பேரி	..	0.01.07	
சேப்பாக்கம்	..	0.25. 49.5	
திருவல்லிக்கேணி	..	0.40.19	
லாயட்ஸ் ரோடு	..	0.41.52.51	
3. மொத்தமாக தேவைப்பட்ட நிலம்	..	19.69	ஹெக்டேர்
4. வருவாய்த்துறையினரால் அளிக்கப்பட்ட நிலம்	..	18.61	ஹெக்டேர்
5. தேவைப்படும் கூடுதல் அரசு நிலம்	..	1.08.28	ஹெக்டேர்.
6. இதுவரையில் ஒப்படைக்கப்பட்ட நிலம்	..	16.77.77	ச.மீ.
7. கூடுதல் நிலம் (சேப்பாக்கம்)	..	0.25.49.5	ச.மீ.
		17.03.26.5	ஹெக்டேர்.

2. தனியார் நிலங்களின் விவரம்:

1. முதலில் தேவைப்பட்ட நிலம்	..	2.27 ஹெக்டேர். 2.05 ஹெக்டேர். எம்டி.பி. குடியிருப்பு உள்பட
2. இதுவரையில் ஒப்படைக்கப்பட்ட நிலம்	..	0.05. 25.5 ஹெக்டேர்.
3. தீர்ப்பாணையம் வழங்கப்பட்ட நிலம்	..	0.21.22.5 ஹெக்டேர்.
4. 'லஸ்' என்ற பகுதியில் கூடுதலாக தேவைப்படும் நிலம்	..	0.21.22.0 ஹெக்டேர்.
5. தனியாரின் மொத்தமாக தேவைப்படும் நிலம்.	..	0.47.70.0 ஹெக்டேர்.
6. வருவாய்த் துறையினரால் கணிக்கப்பட்ட நிலம்	..	2.27 ஹெக்டேர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

3. (1) மொத்தமாக அரசு கொடுக்க

வேண்டிய நிலம்	..	18.61 ஹெக்டேர்.
தனியார் நிலம்	..	2.27 ஹெக்டேர்.
		20.88 ஹெக்டேர்.

(2) மொத்தமாக தேவைப்படும்

அரசு நிலம்	..	19.69 ஹெக்டேர்
தனியார் நிலம்	..	0.47.70 ஹெக்டேர்
		20.16.70 ஹெக்டேர்.

25—

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தொழிற் கூடங்கள் அமைத்தல்.

வினா எண் **7982**—திரு. எம்.ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) தொழில் கூடங்கள் அமைக்க என்ன நெறிமுறைகளை பின்பற்றுகிறது?

(ஆ) தற்போது எந்தெந்த மாவட்டங்களில் இதன் தொழில் கூடங்கள் உள்ளன ?

(இ) எந்தெந்த மாவட்டங்களில் புதிதாக தொழில் கூடங்கள் அமைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தற்போது சுமார் 1,500 சதுர அடி முதல் 6,000 சதுர அடி வரை பரப்பளவுள்ள தொழிற்கூடங்களை தமிழ்நாட்டில் அமைந்துள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளில் கட்டி வருகிறது. தொழிற்கூடங்களை கட்டுவதற்கு முன்பு ஒவ்வொரு மாவட்ட வாரியாக "தேவை கணிப்பு" (Demand Survey) செய்யப்படுகிறது. இந்தத் தேவை கணிப்பு விளம்பரங்கள் தினசரி செய்தித்தாள்கள் மூலமாகவும் மாவட்ட தொழில் முனைவோர்கள் சங்கத்தின் வாயிலாகவும், மாவட்ட தொழில் மையங்களின் மூலமாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டப்பட வேண்டிய தொழிற் கூடங்களின் தேவையை அறிந்து தொழிற்கூடங்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. பின்பு மாவட்ட வாரியாக கணிப்பு எடுக்கப்படுகிறது. தொழிற்கூடங்களை கட்டுவதற்கான முன் திட்டங்கள் வரையப்பட்டு அதன் அடிப்படையில் தொழிற்கூடங்களை சிட்கோ நிறுவனத்தின் கட்டுமான பிரிவின் மூலம் கட்டப்படுகின்றன.

சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் தேவைப்படும் தொழில் முனைவோர்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள சிட்கோ கிளை அலுவலகங்களில் இருந்தோ அல்லது சிட்கோ தலைமை அலுவலகத்தில் இருந்தோ விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தொழில் முனைவோர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தக்க தகவல்களுடன் இணைத்து ரூபாய் 1,000 முன்வைப்புத் தொகையுடன் சிட்கோ கிளை அலுவலகத்திலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ சமர்ப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பங்கள் சிட்கோ தலைமை அலுவலகத்தில் முன் வரிசைப்படுத்தி தொழில் முனைவோர்களுக்கு சிட்கோ தலைமை அலுவலகத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒதுக்கீடு கிடைத்த 30 நாட்களுக்குள், மேம்படுத்தப்பட்ட மனையாயிருப்பின் முழு தொகையையும் செலுத்த வேண்டும்.

தொழிற்கூடங்களாக இருப்பின் தொழிற்கூடத்தின் மதிப்பில் 20 சதவீதம் விளிம்பு தொகையாக செலுத்த வேண்டும். தொழிற்கூடத்தின் மீதி தொகையை விண்ணப்பதாரர் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் (TIIC) அல்லது வங்கிகள் மூலமாகவோ கடன் உதவி பெற்று சிட்கோ நிறுவனத்திற்கு கட்ட வேண்டும். சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்கள் தவணை முறையிலும் அளிக்கப்படுகிறது. தொழிற்கூடங்களின் மதிப்பில் 10 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் வரை விளிம்புத் தொகையும் 5 சதவிகிதம் சேவைக் கட்டணமாகவும், சிட்கோ நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். மீதியுள்ள 80 சதவிகித கட்டிட மதிப்பில் 10 அரையாண்டு தவணைகளில் கட்ட வேண்டும்.

(ஆ) தற்போது கீழ்க்கண்ட மாவட்டங்களில் சிட்கோவின் தொழிற்கூடங்கள் உள்ளன :—

1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். .. (கும்மிடிபூண்டி, மாதவரம், கொடுங்கையூர், காக்களூர், அம்பத்தூர், திருமழிசை, மறைமலை நகர், காஞ்சிபுரம், ஆலத்தூர்).

1994 நவம்பர் 3]

2. சிதம்பரனார்	..	(கோவில்பட்டி, தூத்துக்குடி)
3. கோயம்புத்தூர்	..	(திருப்பூர், குடிமங்கலம், பல்லடம், குறிச்சி.)
4. தர்மபுரி	..	(ஓசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி)
5. திண்டுக்கல் அண்ணா	..	(திண்டுக்கல், வத்தலகுண்டு)
6. காமராஜர்	..	(விருதுநகர்)
7. கன்னியாகுமரி	..	(மார்த்தாண்டம், கோணம்)
8. சென்னை	..	(வில்லிவாக்கம், அரும்பாக்கம், கிண்டி)
9. மதுரை	..	(தேனி, மதுரை, கப்பலூர்)
10. நாகப்பட்டினம் காயிதே மில்லத்	..	(நாகப்பட்டினம்)
11. நெல்லை கட்டபொம்மன்	..	(பேட்டை)
12. வட ஆற்காடு அம்பேத்கார்	..	(காட்பாடி, முகுந்தராயபுரம், ராணிப்பேட்டை, அரக்கோணம்)
13. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்	..	(காரைக்குடி, சிவகங்கை)
14. பெரியார்	..	(ஈரோடு)
15. புதுக்கோட்டை	..	(மானூர்)
16. இராமநாதபுரம்	..	(பரமக்குடி, இராமநாதபுரம், கீளநாகச்சி, ஊரப்பள்ளி)
17. சேலம்	..	(மேட்டூர், சேலம், திருச்செங்கோடு, நாமக்கல்)
18. தென் ஆற்காடு வள்ளலார்	..	(கடலூர், வடலூர்)
19. தஞ்சாவூர்	..	(கும்பகோணம், தஞ்சாவூர், பிள்ளையார்பட்டி)
20. நீலகிரி	..	(ஊட்டி)
21. திருச்சிராப்பள்ளி	..	(கரூர், திருவெறும்பூர், துவாக்குடி, அரியமங்கலம், ஆத்தூர்)
22. திருவண்ணாமலை சம்புவராயர்	..	(திருவண்ணாமலை)

(இ) தற்போது கீழ்க்கண்ட மாவட்டங்களில் தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன :—

1. செங்கற்பட்டு—எம்.ஜி.ஆர். .. (ஆலத்தூர், அம்பத்தூர், திருமழிசை, செம்பரம்பாக்கம், காக்களூர்)
2. கோயம்புத்தூர் .. (குடிமங்கலம், பல்லடம்)
3. இராமநாதபுரம் .. (பரமக்குடி)
4. திருநெல்வேலி கட்டபொம்மன் .. (பேட்டை)
5. தர்மபுரி .. (ஓசூர்)
6. மதுரை .. (கப்பலூர்)
7. திருச்சிராப்பள்ளி .. (கரூர்)

26—

தமிழ்நாட்டில் காளான் வளர்ப்பை ஊக்கப்படுத்த திட்டம்.

வினா எண் ***22640*** — *டாக்டர் வெ. சரோஜா :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் காளான் உற்பத்தி செய்யப்படுகின்றன ?

(ஆ) இதர மாவட்டங்களிலும் காளான் வளர்ப்பை ஊக்கப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் செங்கை எம்.ஜி.ஆர்., சேலம், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் காளான் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மற்ற மாவட்டங்களில் குறைந்த அளவில் காளான் உற்பத்தி செய்யப்படுகிறது.

(ஆ) ஆம். இதர மாவட்டங்களிலும் காளான் வளர்ப்பை ஊக்கப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளது. காளான் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் இரண்டு விதைக்காளான் உற்பத்தி நிலையங்களும், இரண்டு நுண்கிருமி நீக்கம் செய்த கம்போஸ்ட் நிலையங்களும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 3]

மேலும் எல்லா மாவட்டங்களிலும் 2,400 விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு முறை பற்றி பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் இவ்வாண்டு தொடங்கி எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் ரூ. 69.00 லட்சம் செலவில் நிறைவேற்றப்படும்.

27—

கெங்கவல்லி கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **24537**-திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தால் நிலம் ஒதுக்கீடும் பங்குத் தொகையும் வழங்கினால் கெங்கவல்லி கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கெங்கவல்லி கால்நடை மருந்தகம் அவ்வூராட்சியில் 3-வது கால்நடை மருந்தகமாகும். தற்போது கால்நடை-மருந்தகம் வாடகையில்லாக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட வேண்டுமானால், அவ்வூராட்சி ஒன்றியம் ஒரு ஏக்கர் நிலம் வழங்க வேண்டும். கட்டிடம் கட்டுவதற்காகும் செலவில் ஊராட்சி ஒன்றியத்தின் பங்குத் தொகையாக 75 சதவீதம் வழங்க வேண்டும். ஊராட்சி ஒன்றியம் நிலம் மற்றும் பங்குத்தொகை வழங்குமெனில் அரசு மான்யம் பெற்று கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

28—

மலைப்பகுதிகளில் நடமாடும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்துதல்.

வினா எண் **24901**-திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைப்பகுதிகளில் நடமாடும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

மலைப்பகுதிகளில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தித் தர அரசால் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(1) பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் அரசால் கீழ் குறித்த இடங்களில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

ஏற்காடு, கருமாந்துறை, கொல்லிமலை, நரிப்பாடி, அச்சன்குட்டப்பட்டி, சித்தேரி, வெள்ளிமலை, ஜமுனா மருதூர், அத்தனாவூர் மற்றும் உதகமண்டலம்.

(2) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1993-94-ம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூர் மற்றும் கோத்தகிரி ஆகிய இடங்களில் நடமாடும் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த ரூ.6.50 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(3) மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின்கீழ் 1993-94-ம் ஆண்டில் கோவை மாவட்டத்தைச் சார்ந்த வேட்டைக்காரன்புதூர் மற்றும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த உத்தமபாளையம் ஆகிய இடங்களில் நடமாடும் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த ரூ.6.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

29—

ஓசூரில் தொழிலகங்களின் மூலம் வருமானம் விவரம்.

வினா எண் 22205-திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூரில் உள்ள தொழிலகங்களின் மூலமாக விற்பனை வரியாக ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் அரசுக்கு வருகிறது ?

(ஆ) அதில் எத்தனை சதவீதம் மைய அரசு எடுத்துக்கொள்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர் :

(அ) ஓசூரில் உள்ள தொழிலகங்களின் மூலமாக 1992-93-ல் தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் ரூ.748.26 இலட்சங்களும் மத்திய

1994 நவம்பர் 3]

விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ரூ.531.60 இலட்சங்களும் வரியாக அரசுக்குக் கிடைத்துள்ளது.

(ஆ) மேற்படி வருவாயில் மைய அரசு எந்தத் தொகையையும் எடுத்துக்கொள்வதில்லை.

30—

ராதாபுரம் தொகுதியில் தொழிற்சாலை ஏற்படுத்தத் திட்டம்.

வினா எண் **59**-திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதியில் கார்னட் மணல் தொழிற்சாலை அல்லது Joint Sector திட்டத்தில் ஒரு தொழிற்சாலை நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தாலுக்கா, கரைச்சுத்து உவரி கிராமத்தில் கார்னட் மணல் பெருமளவில் காணப்படும் 5 ஏக்கர் தனியார் பட்டா நிலப் பரப்பினைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் தெரிவு செய்து சுரங்க உரிமத்திற்கு அரசிற்கு விண்ணப்பித்துள்ளது. மேற்படி தனியார் நிலம் இதுவரை கையகப்படுத்தப்படாததால் அவ்விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது. சுரங்க உரிமம் பெற்ற பின்னர், கார்னட் மணலுடன் கலந்திருக்கும் பிற கனிமங்கள் போன்றவற்றை நீக்கி சுத்தமாக கார்னட் மணலைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் நிறுவும்.

31—

தமிழ்நாட்டில் கனிம நிறுவனங்களின் மூலம் கிடைத்த வருமானம்.

வினா எண் **844**-திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கனிம நிறுவனங்களின் மூலம் 1990-91-ல் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஆ) அரசே இக்கனிம நிறுவனங்களை அமைத்து அரசுக்கு அதிக லாபம் ஈட்ட நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ் நாட்டில் வெட்டியெடுக்கப்படும் பல கனிமங்களுக்காக சுரங்கக் குத்தகைதாரர்களிடமிருந்து 1990-91-ம் ஆண்டில் 57.16 கோடி ரூபாயும், 1991-92 ஆம் ஆண்டில் 22.14 கோடி ரூபாயும், 92-93 ஆம் ஆண்டில் 63.17 கோடி ரூபாயும் வருவாயாக அரசுக்குக் கிடைத்துள்ளது.

(ஆ) அரசுத் துறையில் அமைக்கப்பட்டுள்ள திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆகியவை வணிக ரீதியில் கனிமம் சார்ந்த தொழில்களில் பயன்படக்கூடிய கனிமப் படிவங்களை வெட்டியெடுத்துப் பயன்படுத்தி வருகின்றன.

32—

தமிழ்நாட்டிலுள்ள மைகா சுரங்கங்களின் விவரம்.

Question No 2820-Thirumathi V. G. MANIMEGALAI:- Will the Hon'ble Minister for Industries be pleased to state:-

(a) Whether mica mines are available in Tamil Nadu areas?

(b) If so, the details thereof.

(c) The quantity of mica collected in a year generally.

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், பந்தலூர், சேரன்கோடு, கொல்லப்பள்ளி மற்றும் சேரம்பாடி ஆகிய இடங்களில் மைகா சுரங்கங்கள் இருந்தன. இவற்றிலிருந்து மஸ்கோவைட் மற்றும் பையோடைட் வகை மைகா வெட்டியெடுக்கப்பட்டு வந்தன. வணிக அடிப்படையில் செயல்பட இயலாததால், இச்சுரங்கங்கள் அனைத்தும் ஏற்கனவே மூடப்பட்டு சுரங்கத் தொழில் கைவிடப்பட்டுவிட்டது. எனவே, தற்சமயம் இப்பகுதியில் மைகா சுரங்கங்கள் எதுவும் செயல்படவில்லை. வெப்பத்தால் பல மடங்குகள் விரிவடைகின்ற பையோடைட் மைகாவின் சிதைவிலிருந்து உண்டாகிற

1994 நவம்பர் 3]

வெர்மிகுலைட்மைக்காவை வெட்டியெடுக்கும் சுரங்கம் ஒன்று வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சேவாத்தூரில் செயல்பட்டு வருகிறது. இச்சுரங்கம் தற்போது திருவாளர்கள் தமிழ்நாடு கனிம நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

(இ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள மைகா சுரங்கங்களைப் பொறுத்தவரையில் 1975-ம் ஆண்டு மைகா உற்பத்தி 40 டன்களாக இருந்தது. இதன்பிறகு ஆண்டு உற்பத்தி 7 டன்களிலிருந்து 93 டன்கள் வரை நிலையற்று மாறிக்கொண்டிருந்தது. கடைசியாக பதிவு செய்யப்பட்ட 7 டன்கள் உற்பத்தி 1985-ம் ஆண்டில் ஆகும். இதன் பிறகு இப்பகுதியில் மைகா உற்பத்தி ஏதும் இல்லை. வெர்மிகுலைட் மைகாவைப் பொறுத்தளவில் கடந்த ஆறு ஆண்டுகளில் உற்பத்தி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

1988	..	922 டன்கள்.
1989	..	1,091 டன்கள்.
1990	..	876 டன்கள்.
1991	..	806 டன்கள்.
1992	..	899 டன்கள்.
1993 (28-2-1993 வரை)	..	99 டன்கள்.

33—

தமிழகத்தில் ஆற்று மணலை ஏலம் விட நடவடிக்கை.

வினா எண் **4426**-திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

தமிழகத்தில் உள்ள அனைத்து ஆற்று மணலும் கள்ளத்தனமாக விற்கப்படுவதைத் தடுத்து மணல் ஏலம் விடப்பட்டு வருவாயைப் பெருக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

தமிழகத்தில் காணப்படும் அனைத்து ஆற்றுப் படுகைகளிலும் உள்ள ஆற்று மணல் பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் பொதுப்பணித்துறை, வடிகால் வாரியம் போன்ற அரசுத் துறைகளின் ஆட்சேபணைகளால் தடுக்கப்பட்ட பகுதிகள் நீங்கலாக உள்ள ஏனைய பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் குவாரிக் குத்தகை பொது ஏல முறையில் விடப்பட்டு வருகிறது. இத்தகைய மணற்குவாரிகள் ஏலமிடப்படுவதால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

ஆண்டுதோறும் அரசிற்கு வருவாய் அதிகரித்து வருகிறது. மேலும் தடுக்கப்பட்ட பகுதிகளிலும் ஏலமிடப்படாத பகுதிகளிலும் உள்ள மணற் படிவுகள் கள்ளத்தனமாக அகற்றப்படுவதைத் தடுக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

34—

காரைக்குடி தொகுதியில் கனிமவளம் கண்டுபிடிப்பு.

வினா எண் *4659*-திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த ஊரவியல் கிராமத்தில் சில ஆண்டுகளுக்கு முன் கனிமவளம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(ஆ) ஆம்.

(ஆ) ஊரவயல் கிராமத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மற்றும் மாநிலப் புவியியல் மற்றும் சுரங்கத் துறையினரால் கனிமவள ஆய்விற்காக மூன்று துரப்பணக் குழாய்கள் போடப்பட்டன. அதில் சுமார் 50-130 மீட்டர் ஆழத்திற்குட்பட்ட பகுதிகளில் பழுப்பு நிலக்கரியானது சிறிய அளவில் கொடிகளாகவும், மெல்லிய தகடுகளாகவும் மற்றும் குமிழ்களாகவும் அமைந்துள்ளது கண்டறியப்பட்டது. இது குறித்து மேலும் ஆய்வுகளை நடத்துமாறு மைய அரசின் இந்தியப் புவியில் ஆய்வுத்துறை கோரப்பட்டுள்ளது.

35—

கல்வராயன் மலையில் கருப்புக்கல்லை வெட்டி எடுக்க நடவடிக்கை.

வினா எண் *7897*—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் அதிக அளவில் கிடைக்கும் கருப்புக்கல்லை (Granite) சிறுதொழில் முனைவோர் மூலம் வெட்டியெடுத்து அரசின் வருவாயைப் பெருக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்.

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் ஏனைய பகுதிகளில் உள்ள பட்டா நிலங்களில் கிடைக்கும் கருப்புக் கற்கள் மற்றும் ஏனைய வண்ணக் கற்களையும் வெட்டியெடுத்து அரசின் வருவாயைப் பெருக்க, 1959ம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளின் உரிய பகுதியில் அரசாணை எண் 214, தொழில் துறை, நாள்: 10-6-1992 மூலம் திருத்தம் கொண்டு வந்து, அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது.

(ஆ) கல்வராயன் மலைப்பகுதியில் இதுவரை ஆய்வு செய்து கண்டறியப்பட்ட கருப்புக் கற்களின் படிவங்கள் பெரும்பாலும் அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ளதால், தமிழ்நாடு கனிம நிறுவனம் இத்தகைய இடங்களில், குவாரி செய்வதற்கான விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டு அதன் மூலம் அரசுக்கு வருவாய் பெருக வாய்ப்புகள் உள்ளன. அதேபோல் கல்வராயன் மலைப்பகுதியில் பட்டா நிலங்களில் கருப்புக் கற்கள் படிவங்கள் கண்டறியப்பட்டு தனி நபர்கள் உரிய முறையில் விண்ணப்பம் செய்தால் அவர்களுக்கும் தற்சமயம் நடைமுறையில் உள்ள விதிகளின்படி குத்தகை உரிமம் வழங்கப்படும். இதன் மூலமும் அரசுக்கு வருவாய் பெருக வாய்ப்புகள் உள்ளன.

36—

பரமக்குடி தொகுதியில் ஆற்றில் மணல் எடுக்க அனுமதித்தல்.

வினா எண் **16406-டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பரமக்குடி தொகுதியில் ஆற்றில் மணல் எடுப்பதற்கு வருடந்தோறும் டெண்டர் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ : பரமக்குடி தொகுதிக்கு உட்பட்ட வைகை ஆற்றுப் படுகைகளில் மணல் எடுக்கும் உரிமை மூன்றாண்டுக் காலத்திற்கு பொது ஏலம் மூலம் விடப்பட்டுள்ளது. அதன்படி 30-6-1994வரை குத்தகை விடப்பட்டுள்ளது. பொது மக்களும், விவசாயிகளும் ஆட்சேபணைகளை செய்வதாலும், குடிநீர் ஆதாரத்தைக் கருத்தில் கொண்டும் வைகை ஆற்றில் பொது ஏலம் மூலம் மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்குவதை நிறுத்தி

வைக்கவும், நடப்பில் உள்ள குத்தகைகளை ரத்து செய்யவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

37—

இராமநாதபுரம் மாவட்டத்தில் வனத்துறையின் மூலம் வருவாய் விவரங்கள்.

வினா எண் ***16834***-*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வனத் துறையின்கீழ் இருக்கும் நிரப்பரப்பு எவ்வளவு?

(ஆ) இதிலிருந்து அரசுக்குக் கிடைக்கும் வருமானம் 1991-92-ல் எவ்வளவு ?

(இ) வனத்துறையின் மூலம் மாவட்டத்தில் 1991-92-ல் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வனத்துறையின்கீழ் இருக்கும் நிலப்பரப்பு 23,810 ஹெக்டேர்.

(ஆ) இதில் இருந்து 1991-92-ம் ஆண்டில் அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ.126.77 இலட்சம்.

(இ) வனத் துறையின் மூலம் அம்மாவட்டத்தில் 1991-92-ல் சமூகக் காடுகள் திட்டம் அடங்கலாக செலவிடப்பட்ட தொகை ரூ.74.12 இலட்சம்.

38—

சந்தனக் கிடங்கில் பணிபுரியும் வேலையாட்களுக்குக் கூலி உயர்வு.

வினா எண் ***21386***-*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சந்தனக் கிடங்கில் வேலை செய்யும் வேலையாட்களின் தினசரிக் கூலி உயர்த்தப்படுமா?

(ஆ) இப்போது, ஆண், பெண்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கப்படுகிறது?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருப்பத்தூர் சந்தன மரக்கிடங்கில் பணிபுரியும் வேலையாட்களின் தினக்கூலி 1-4-1993 முதல் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு உயர்த்தி அளிக்கப்படுகிறது:-

(1) முதல் தரக் கூலியாட்களுக்கு (ஆண்கள் மட்டும் ரூ. 18-லிருந்து ரூ. 29.80-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

(2) இரண்டாம் தரக் கூலியாட்களுக்கு (ஆண்கள் மட்டும்) ரூ.16.50-லிருந்து ரூ.28.30-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

(3) மூன்றாம் தரக் கூலியாட்களுக்கு (ஆண் மற்றும் பெண் கூலியாட்கள்) ரூ. 14.00-லிருந்து ரூ. 25.80-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

சத்தியமங்கலம் அரசு சந்தன மரக் கிடங்கில் ஒப்பந்தக்காரர்களால் அமர்த்தப்படும் ஆண்/பெண் கூலியாட்களுக்கு தினக்கூலியாக முறையே ரூபாய் 35 முதல் 45 வரை குத்தகைதாரர்களால் வழங்கப்படுகிறது.

சேலம் சந்தன மர விற்பனை கிடங்கில் பாதுகாப்புப் பணிக்கும் மற்றும் பராமரிப்புப் பணிக்கும் நியமிக்கப்பட்டுள்ள 24 காவலர்களுக்கு மாத ஊதியம் ரூ.350 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சந்தனமர விற்பனைக் கிடங்கில் சந்தன மரங்களை செதுக்கும் பணிக்காக 60 தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகிறார்கள். இவர்கள் செய்து முடிக்கும் பணிக்கான செலவுத் தொகை வனவிகிதப்படி ஒட்டு மொத்தமாக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட தொகையை ஒப்பந்தக்காரர்கள் குறைந்த பட்சக் கூலி அடிப்படையில் ஆண்களுக்கு ரூ.14-ம் பெண்களுக்கு ரூ.10-ம் கூலியாக அளிக்கின்றனர். இது தவிர சந்தன மர விற்பனைக் கிடங்கில் ஆஜர் பட்டியல் மூலம் எந்தக் கூலியாட்களும் தினக்கூலி அடிப்படையில் பணி செய்பவில்லை.

39—

சந்தனக் கிடங்கில் பணிபுரியும் தினசரி கூலியாளரைப் பணி நிரந்தரம் செய்தல்.

வினா எண் ***21387***-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

சந்தனக்கட்டை கிடங்கில் தினசரி கூலியாகப் பணியாற்றுவோரை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் சந்தனமரக் கிடங்கில் பணிபுரிந்த 154 மஸ்தூர்களில், பணியில் இருந்து நின்ற 18 பேர்கள் நீங்கலாக, 136 பேர்கள் தொடர்ந்து பணிபுரிகின்றனர். இவர்களில், அரசாணை (நிலை) எண்.20, சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை, நாள் 6-1-1990-ன்படி மாதம் ரூ.600 தொகுப்பூதியம் பெறும் 58 மஸ்தூர்களைத் தவிர, கிரேட் 1, கிரேட் 2 மற்றும் கிரேட் 3 மஸ்தூர்களும் பணிபுரிகின்றனர். இவர்களின் ஊதியம் பின்வருமாறு ஆகும்:-

கிரேட் 1, 7 பேர்கள் (அதிக வயதுடைய வர்கள்).	தினக்கூலி ரூ.18 பிளஸ் ரூ. 11.80 (அகவிலைப் படி)	ரூ.29.80
கிரேட் 2 (43 பேர்கள்)	தினக்கூலி ரூ.16.50 பிளஸ் ரூ. 11.80 (அகவிலைப்படி)	ரூ.28.30
கிரேட் 3 (28 பேர்கள்)	தினக்கூலி ரூ. 14 பிளஸ் ரூ. 11.80 (அகவிலைப் படி)	ரூ.25.80

மஸ்தூர்களின் பணியை வரன்முறை செய்தல் மற்றும் அவர்களை மாதாந்திர அடிப்படைச் சம்பள விகிதத்தில் கொண்டுவர அரசு பரிசீலித்து வருகிறது.

2. சத்தியமங்கலம் சந்தனமரக் கிடங்கில் வன விகிதப்படி (Forest Schedule of Rates) ஒப்பந்தக்காரர் மூலம் வேலையாட்களுக்கு கூலி வழங்கப்படுகிறது. மேலும் சத்தியமங்கலம் சந்தனமரக் கிடங்கில் டிப்போவிற்கு வரும் சந்தனமரங்களைத் தணிக்கையிட்டும் அவைகளை தரம் பிரித்து, எடையிட்டு சுத்தம் செய்யப்பட்ட சந்தன மரங்களை டபுள் லாக்கில் சேர்க்கும் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட சரகருக்கு உதவியாக எழுதப் படிக்கத் தெரிந்த இரு மஸ்தூர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்குக் கூலியாக தலா ரூ. 350 வழங்கப்படுகிறது.

3. சேலம் சந்தனமரக் கிடங்கில் தினக்கூலியாகப் பணியமர்த்தப்பட்ட 24 பணியாளர்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பணியாற்றிய 4 டிப்போ வாச்சர்கள் மற்றும் 2 சுத்தம் செய்பவர்களின் பணி வரன்முறை தொடர்பாக அரசு பரிசீலித்து வருகிறது. இவர்களுக்கு பிரதி மாதம் ரூ. 350

1994 நவம்பர் 3]

வீதம் கூலி வழங்கப்படுகிறது. 4 டிப்போ வாச்சர்களில் 2 நபர்கள் வனக் காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

40—

'தமிழரசு' அரசு இதழ் விற்பனை விவரம்.

*வினா எண் **4094**-திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

(அ) அரசு வெளியிடும் செய்தி இதழான தமிழரசு தற்போது மாநிலம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பிரதிகள் விற்பனையாகின்றன?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :

(அ) ஆம். அரசு வெளியிடும் செய்தி இதழான தமிழரசு தற்போது மாநிலம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது.

(ஆ) தமிழரசு, தமிழ் இதழ் (மாதம் இருமுறை) தற்போது 30,500 பிரதிகளும், ஆங்கில இதழ் (மாதம் ஒரு முறை) 4,000 பிரதிகளும் அச்சிடப்படுகின்றன. தமிழ் இதழ் 29,300 பிரதிகளும் மற்றும் ஆங்கில இதழ் 2,500 பிரதிகளும் விற்பனையாகின்றன. தமிழ் இதழ் 1,200 பிரதிகளும் மற்றும் ஆங்கில இதழ் 1,500 பிரதிகளும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

41—

இளைஞர்கள் மூலம் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தல்.

*வினா எண் **7493**-திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

(அ) மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய படித்த இளைஞர்கள் பயன்படுத்தப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் கல்வித் தகுதி, சம்பளம் விகிதம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இவர்களுக்கு 2 மாதங்களுக்கு ஒருமுறை வழங்கப்படும் தொகை பின்வருமாறு:

பள்ளியிறுதியாண்டு அதாவது எஸ்.எஸ்.எல்.சி. படித்த இளைஞர்களுக்கு ..	ரூ. 150
பிளஸ் 2 படித்த இளைஞர்களுக்கு ..	ரூ. 225
பட்டதாரி இளைஞர்களுக்கு ..	ரூ. 300

42—

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை.

வினா எண் **20586**-திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மேநிலை, நடுநிலை, உயர்நிலை, தொடக்கப் பள்ளிகளில் இன்னும் நிரப்பப்படாமல் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் எத்தனை?

(ஆ) அவை எப்போது நிரப்பப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மேனிலை, உயர்நிலை நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளில் இன்னும் நிரப்பப்படாமல் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் பின்வருமாறு:-

மேல்நிலைப் பள்ளிகள் :	353
உயர்நிலைப் பள்ளிகள் :	2926
தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள். :	8000

(ஆ) பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை மொழியாசிரியர்கள் மற்றும் முதுகலைப் பாட ஆசிரியர்கள் காலி பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆசிரியர் பணியிடங்களை - அதாவது இடைநிலை ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட உள்ளது.

43—

அறிவொளி இயக்கத் திட்டத்தை மீண்டும் ஏற்படுத்துதல்.

வினா எண் **22682**-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அறிவொளி இயக்கத் திட்டத்தை மீண்டும் வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம் 1991-ம் ஆண்டு நவம்பர் 19-ம் தேதி துவக்கப்பட்டது . இத்திட்டத்தில் 4. 80 இலட்சம் பேர் பயன்பெற்றனர். இத் திட்டத்தின் தொடர்ச்சியாக அறிவொளி தொடர் கல்வி இயக்கம் (Total Literacy Campaign) 5-4-1993-ல் தொடங்கப்பட்டு அடுத்து வரும் இரண்டாண்டுகளுக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த அறிவொளி தொடர் கல்வி இயக்கத்தில் 3 இலட்சம் பேர் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர். ஏனவே மீண்டும் அறிவொளி இயக்கத் திட்டத்தை வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ஏற்படுத்தும் கேள்வி எழாது.

44—

பீடித்தொழிலாளர்களுக்குத் தனியாக மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் **23855**-திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

பீடித் தொழிலாளர்களுக்கு தனியாக மருத்துவமனை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

பீடித் தொழிலாள்ர் நல நிதிச்சட்டம் மற்றும் விதிகளின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள மத்திய மற்றும் மாநில ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில்தான் பீடித் தொழிலாளர் நலன் குறித்து திட்டங்கள் நிறைவேற்றப்பட முடிவு செய்யப்படுகிறது. பீடித் தொழிலாளர்களின் மருத்துவ வசதியை முன்னிட்டு குடியாத்தம், சென்னை, மேலப்பாளையம், முக்கூடம், திருச்சி, ஆலங்குளம் போன்ற இடங்களில் புற நோயாளிகளுக்கான மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

45—

கூட்டுறவு வங்கிகளில் ஊதிய உயர்வு மற்றும் விதிமுறைகள் திருத்தம் பரிசீலனை.

வினா எண் **2381**-திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சுமார் 30 சதவீதம்வரை ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டதும் முன் தேதியிட்டு சம்பளம் பாக்கி வழங்கப்பட்டதும் அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், முறைகேடாகக் கொடுக்கப்பட்ட பணம் திரும்ப வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(இ) இம்மாதிரியான நிலைமைகள் இனிவரும் காலத்தில் ஏற்படாமல் இருக்க கூட்டுறவு விதிகளில் திருத்தம் கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் நிர்வாகப் பொறுப்பினை 10-10-1990 முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நிர்வாகக் குழுக்கள் சங்கங்களின் தற்கால செயல்முறையினையும், நிதிநிலைமை மற்றும் கொடுக்கும் சக்தியை ஆழ்ந்து பரிசீலிக்காமலும், பணியாளர்களின் ஊதிய விகித மாற்றம் உள்ளிட்ட கோரிக்கைகளைப் பரிசீலிக்கையில் கையாளப்படும் வகையில் துறையினால் வழங்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் சட்டபூர்வமான உத்திரவுகளுக்குப் புறம்பாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் செயல்முறைக்கு ஊறு விளைவிக்கும் வகையில், பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மாற்றி அமைத்துள்ளன.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களில், சங்கங்களின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஊதிய மாற்ற விகிதங்கள் உள்ளிட்ட இதர நிதிப் பயன்களையும் நிர்வாகக் குழுக்கள் அனுமதித்துள்ள விவரங்கள் தெரிய வந்ததும் ஊதிய விகித மாற்றங்கள் செய்யப்படுகையில் ஏற்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்யவும், இவ்வகை ஒப்பந்தங்களினால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவின தொகைகளை வசூல் செய்யவும் துறை அலுவலர்களால் சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அவ்வாறான சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுப்பதற்கும், ஏற்கனவே நிர்வாகக் குழுக்களால் அனுமதிக்கப்பட்ட ஊதிய உயர்வு உள்ளிட்ட இதர நிதிப்பயன்களை ரத்து செய்யவும் கூட்டுறவுப் பதிவாளருக்கும் துறை அலுவலர்களுக்கும் சட்ட பூர்வமான அதிகாரம் கிடையாது என வாதிட்டு கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் தொழிற் சங்கங்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் சுமார் 200-க்கும் மேற்பட்ட வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, துறையின் நடவடிக்கைகளை

1994 நவம்பர் 3]

நிறுத்தி வைத்து உயர் நீதி மன்றத்தின் தடை ஆணைகளைப் பெற்றுள்ளன. இவ்வழக்குகள் உயர் நீதி மன்றத்தின் முன்பாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேற்படி தீர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களுக்கு சாதகமாக இருந்த நிலையில் இதன் பொருட்டு உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு (SLP) தாக்கல் செய்வது பற்றி தனியாகப் பரிசீலிக்கப்பட்டு சட்டத்துறை மற்றும் வழக்குரைஞர் தலைவரின் கருத்திற்கிணங்க சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யத் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டது.

(இ) இம்மாதிரி நிலைமைகள் இனி வரும் காலங்களில் ஏற்படாமலிருக்க தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றிய கருத்துரு கூட்டுறவுச் சங்களின் பதிவாளரின் பரிசீலனையில் உள்ளது.

46—

புதிய விவசாயப் பயிர்க் கடன் வழங்குதல்.

வினா எண் *21008*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமக் கூட்டுறவு சேவை சங்கத்தின் பழைய உறுப்பினர், புதிய உறுப்பினர்கள் அனைவருக்கும் புதிய விவசாய பயிர்க் கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறி கடன் நிலுவையை கருத்திற்கொள்ளாமல் புதிய மற்றும் பழைய உறுப்பினர்களுக்குக் கீழ்க்கண்ட நெறி முறைகட்குட்பட்டு கடன்கள் வழங்கலாம் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(1) கடன்களை முழுமையாகத் திருப்பி செலுத்தி புதிய கடன்கள் கோரும் உறுப்பினர்கள்.

(2) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு முதன் முறையாக பயிர்க்கடன்கள் வழங்கும் தகுதி பெற்ற புதிய உறுப்பினர்கள்.

(அ) புதிய உறுப்பினராகச் சேர்ந்து கடன் கோரும் உறுப்பினர் பயிர்க் கடன் கோரும் நிலத்திற்கு ஏற்கனவே கடன் வழங்கப்பட்டு நிலுவை இருக்கக் கூடாது.

(ஆ) இவ்வாறு சேர்க்கப்பட்ட புதிய உறுப்பினர்களின் குடும்பத்தில் வேறு எவரும் கடன் பெற்று தவணை தவறியிருக்கக்கூடாது.

47—

ஆத்தூர் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்துதல்.

வினா எண் ***3496***—*திரு. எஸ். எம். துரை :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட சோத்தாள் நாயக்கன் கோம்பை நீர்த்தேக்கத்திலிருந்து, நீலமலைக்கோட்டை, புதுச்சத்திரம், பலக்கனூத்து ஆகிய பஞ்சாயத்துகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட நீலமலைக்கோட்டை புதுச்சத்திரம், பலக்கனூத்து ஊராட்சி மற்றும் 61 குடியிருப்புகளை இணைத்து சோத்தாள் நாயக்கன் கோம்பை நீர்த்தேக்கத்தை நீராதரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கு தகுந்த சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

48—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் மருங்கப்பள்ளம் குறுக்குச் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் ***6720***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் நாடியத்திலிருந்து ஊடையக்காடு வழியாக மருங்கப்பள்ளம் செல்லும் குறுக்குச் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள நாடியத்திலிருந்து உடையநாடு வழியாக மருங்கப்பள்ளம்

1994 நவம்பர் 3]

செல்லும் குறுக்குச் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

49—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் சாலைகளை மராமத்து செய்தல்.

*வினா எண் **7549**-திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் தில்லங் காட்டிலிருந்து வடக்கே அடைக்கலம் காத்தான் கோவிலுக்குச் செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக்கி தரவும், இச்சாலையில் மூன்று இடத்தில் மூன்று கல்வெர்ட் அமைத்துத் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை மராமத்து செய்து கப்பிச் சாலையாக்கவும் மூன்று கல்வெர்ட் அமைத்துத் தரவும் எந்தத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. எனவே, நிதிவசதி இல்லாத காரணத்தினால் இவ்வேலையைச் செய்திட செயற்குறிப்பு ஏதுமில்லை.

50—

செங்கம் தேர்வு நிலைப் பேரூராட்சியில் சுகாதாரப் பணியாளர்கள் நியமனம்.

*வினா எண் **14976**-டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தேர்வுநிலைப் பேரூராட்சியில் போதுமான சுகாதாரப் பணியாளர்கள் இல்லாமையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதலாக சுகாதாரப் பணியாளர்களை நியமிக்க அரசு உடன் ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பேரூராட்சிகளின் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க நியமன அளவீடு நிர்ணயம் செய்து 2-6-1987 தேதிய அரசாணை எண் 450, ஊரக வளர்ச்சித் துறையில் உத்தரவிடப்பட்டுள்ளது. இதில் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள தெருக்களின் நீளம் 1 கிலோ மீட்டர் இருந்தால் ஒரு துப்புரவுப் பணியாளரும், மற்ற பகுதிக்கு 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு துப்புரவுப் பணியாளரும் நியமனம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. செங்கம் பேரூராட்சியில் குடியிருப்புப் பகுதியில் உள்ள தெருக்களின் நீளம் 12,600 கிலோ மீட்டர். மேற்கூறப்பட்ட அரசாணையின்படி இப்பேரூராட்சியில் 12 துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்ய தகுதி உள்ளது. ஆனால் இப் பேரூராட்சியில் 13 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். நியமன அளவீடு நிர்ணயம் செய்துள்ள அரசாணையின்படி ஏற்கெனவே இப்பேரூராட்சியில் ஒரு துப்புரவுப் பணியாளர் தேவைக்குமேல் பணியாற்றி வருகிறார்.

(ஆ) செங்கம் பேரூராட்சியில் ஏற்கெனவே தேவைக்கு அதிகமாக துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றி வருவதால், கூடுதலாக துப்புரவுத் தொழிலாளர்கள் நியமனம் செய்யும் வாய்ப்பு எழவில்லை.

51—

கொரடாச்சேரி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகளைப் பழுது பார்த்தல்.

வினா எண் **15653-டாக்டர் க. கோபால்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நன்னிலம் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், அபிவிருத்தீஸ்வரம் காலனி (தொகுப்பு) வீடுகள் பழுதடைந்து உள்ளது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், அவர்கட்கு புதிய வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக்

கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப் பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

52—

பேராவூரணி ஒன்றியம் நல்லமான் புஞ்சை ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் 15830-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கு மதன்பட்டவூர், நல்லமான் புஞ்சை ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் காலனி வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

53—

கொடுமுடி ஒன்றியத்தில் சாலை வசதி அமைத்தல்.

வினா எண் 19487-திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் சோளங்காபாளையம் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போதிய நிதி வசதி இல்லாததால் சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் சாலை வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

54—

கொடுமுடி ஒன்றியம் எமகண்டனூரில் தார்ச் சாலை அமைத்தல்.

வினா எண் *19488*—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், எமகண்டனூர் கிராமத்தில் மாரியம்மன் கோவிலில் தென்புறத்திலிருந்து மேற்கே உள்ள வண்டிப் பாதைக்கு தார் போட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போதிய நிதி வசதி இல்லாததால் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள வண்டிப் பாதைக்கு தார் போட செயற்குறிப்பு இல்லை.

55—

கொடுமுடி ஒன்றியம் சென்னசமுத்திரத்தில் சாலைகளை மராமத்து செய்தல்.

வினா எண் *19489*-திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சென்னசமுத்திரம் கிராமம் பழைய சோளக்காளி பாளையத்தில் கீழபுறம் மயானத்திற்குச் செல்லும் பாதை செப்பனிடப்பட்டு பழைய சோளக்காளி பாளையத்திலிருந்து புகளூர் வாய்க்கால் வரை தார்ச் சாலை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போதிய நிதி வசதி இல்லாததால் சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பழைய சோளக்காளி பாளையத்திலிருந்து புகளூர் வாய்க்கால் வரை தார்ச் சாலை போடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

56—

கொடுமுடி ஒன்றியம் குளத்துப்பாளையம் - ஊஞ்சலூர் சாலையைச் செப்பனிடுதல்.

வினா எண் *19512*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், குளத்துப்பாளையம்-ஊஞ்சலூர் செல்லும் சாலையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

குளத்துப்பாளையம்-ஊஞ்சலூர் சாலை பகுதியில் குடிநீர் வடிகால் வாரியக் குழாய்கள் சாலைக்கு அடியில் செல்வதால் அடிக்கடி குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு, சாலையில் பழுதுகள் ஏற்படுகின்றன. அத்தகைய பழுதுகள் அவ்வப்பொழுது செப்பனிடப்படுகின்றன. தற்சமயம் இப் பகுதியில் நொடி ஒட்டுதல் வேலை செய்யப்பட்டு சாலைப் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் இருக்கிறது.

57—

ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகள் விவரம்.

வினா எண் 1726—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆதிதிராவிடக் கல்லூரி மாணவர் விடுதிகள் எத்தனை?

(ஆ) இவற்றில் சொந்தக் கட்டிடம் உள்ள ஆதிதிராவிட கல்லூரி மாணவர் விடுதிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஆதிதிராவிடக் கல்லூரி மாணவர் விடுதிகள் 37. அவை கீழ்க்கண்டவாறு:-

1. அரசு கல்லூரி மாணவர் விடுதி, அருப்புக் கோட்டை, காமராஜர் மாவட்டம்.

2. அரசு கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம்.

3. அரசு கல்லூரி மாணவர் விடுதி, கடலூர், தென்னாற்காடு மாவட்டம்.

4. அரசு கல்லூரி மாணவர் விடுதி, செய்யார், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.

5. அரசு கல்லூரி மாணவர் விடுதி, பொன்னேரி, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம்.

6. அரசு கல்லூரி மாணவர் விடுதி, வேலூர், வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.

7. அரசு கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி, வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.

8. அரசு கல்லூரி மாணவர் விடுதி, வாலாஜா, வடஆற்காடு – அம்பேத்கார் மாவட்டம்.

9. அரசு கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர், திருச்சி மாவட்டம்.

10. அரசு கல்லூரி மாணவர் விடுதி, வடசென்னிமலை, சேலம் மாவட்டம்.

11. அரசு கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

12. அரசு கல்லூரி மாணவர் விடுதி, பாளயங்கோட்டை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.

13. அரசு கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி, சிதம்பரனார் மாவட்டம்.

14. அரசு கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

15. அரசு கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி.

16. அரசு கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

17. அரசு கல்லூரி மாணவர் விடுதி, பழனி, திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

18. அரசு கல்லூரி மாணவர் விடுதி, விழுப்புரம், தென்னாற்காடு மாவட்டம்.

19. அரசு கல்லூரி மாணவர் விடுதி, விருதாசலம்-தென்னாற்காடு மாவட்டம்.

20. அரசு கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு, பெரியார் மாவட்டம்.

21. அரசு கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர்.

22. அரசு கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்..

23. அரசினர் எம்.சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதி, சென்னை-35.

24. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, நந்தனம்.

25. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கோடம்பாக்கம்.

26. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, பெரம்பூர்.

27. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, திருவல்லிக்கேணி.

28. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, மதுரை.

29. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்.

30. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

31. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, மயிலாடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

32. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

33. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

34. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கரூர், திருச்சி மாவட்டம்.

35. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, சேலம் மாவட்டம்.

36. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல், சேலம் மாவட்டம்.

37. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை.

(ஆ) 27 விடுதிகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. அவை கீழ்கண்டவாறு:—

1. அரசு கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

2. அரசு கல்லூரி மாணவர் விடுதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.

3. அரசு கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி, சிதம்பரனார் மாவட்டம்.

4. அரசு கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.

5. அரசு கல்லூரி மாணவர் விடுதி, தர்மபுரி.

6. அரசு கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டம்.

7. அரசு கல்லூரி மாணவர் விடுதி, பழனி, திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

8. அரசு கல்லூரி மாணவர் விடுதி, விழுப்புரம், தென்ஆற்காடு மாவட்டம்.

9. அரசு கல்லூரி மாணவர் விடுதி, விருதாசலம், தென்னாற்காடு மாவட்டம்.

10. அரசு கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு, பெரியார் மாவட்டம்.

11. அரசு கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர்.

12. அரசு கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம்.

13. அரசு எம்.சி. ராஜா கல்லூரி மாணவர் விடுதி, சென்னை-35.

14. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, நந்தனம்.

15. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கோடம்பாக்கம்.

16. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, பெரம்பூர்.

17. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, திருவல்லிக்கேணி.

18. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, மதுரை.

19. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்.

20. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்.

21. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, மயிலாடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம்.

22. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, திருவாவூர், தஞ்சாவூர் மாவட்டம்.

23. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

24. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, கரூர், திருச்சி மாவட்டம்.

25. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, சேலம் மாவட்டம்.

26. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல், சேலம் மாவட்டம்.

27. அரசினர் கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை

58—

ஆதிதிராவிடர் காலனிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

வினா எண் ***4995***—*திரு. கே. கந்தசாமி:* மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) ஆதிதிராவிடர் காலனிகளுக்குத் தனியாக தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

59—

புவனகிரி தொகுதி, வயலாமூரில் ஆதிதிராவிடர்களுக்கு சுடுகாடு அமைத்தல்

வினா எண் 7660-செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, வயலாமூர் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு சுடுகாடு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

(ஆ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் வயலாமூர் கிராம ஆதி திராவிடர்களுக்கு ரி.ச.175 ஓடைப்புறம் போக்கில் 0.21.0 ஹெக்டேர் பரப்பில் புதியமயானம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

60—

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நற்கந்தங்குடியில் வீட்டு மனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 7786—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், நற்கந்தங்குடி காலனியில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், நற்கந்தகுடி கிராமத்தில் 1966-ல் சர்வே எண் 235/3பி-யில் 0.53.0 ஹெக்டேர் இடம் வீட்டுமனைக்காக கையகம் செய்யப்பட்டுள்ளது. இதில் தற்போது 10 வீட்டுமனைகளில் வீடுகள் கட்டப்படாமல் உள்ளன. மேலும் சர்வே எண் 238/13 பி-ல் 0.30.0 ஹெக்டேர் பரப்பு 66 நபர்களுக்கு வீட்டு மனைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தற்போது வடக்குப்பாகத்தில் ஒரே ஒரு வீடு மட்டும் கட்டப்பட்டுள்ளது. தெற்குப்புற ஓரத்தில் சாலையின் அருகாமையில் கிழக்கு பாகத்தில் சுமார் 8 செண்ட் பூமியில் வைக்கோல் போர் போடப்பட்டுள்ளது. ஒரே ஒரு வீட்டைத் தவிர மற்ற இடம் முழுவதும் காலியாக உள்ளது. ஏற்கனவே வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்ட இடத்தையே பயனாளிகள் பயன்படுத்தாத நிலை உள்ளதாலும் இம்மக்கள் நெருக்கடியாக வசிக்கின்றனர் என்ற நிலை இல்லாததாலும், புதியதாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

61—

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்குதல்

வினா எண் **10250**—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஆடு வளர்க்கும் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் இலாபத்தின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 108 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஓர் உறுப்பினருக்கு 20 பெட்டை ஆடுகளும், ஒரு கிடாவும் வழங்கப்படுகின்றன. இதற்கான

1994 நவம்பர் 3]

கடன்கள் வங்கிகள் மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் இவ்வாறு வழங்கப்படும் ஆடுகளுக்கான கடன் மதிப்பு ரூ. 8,000 ஆகும். இதில் 50 சதவிகிதம் மானியமாக ஆதிதிராவிடர்-பழங்குடி இன உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது.

62—

புவனகிரி பேரூராட்சி கள்ளிக்காட்டு ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் ***12774***—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி கள்ளிக்காட்டு காலனி ஆதி திராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புவனகிரி பேரூராட்சியில் உள்ள கள்ளிக்காட்டு காலனி மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவது தொடர்பாக சிதம்பரம் ஆதி திராவிடர் நல தனி வாட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான முன் மொழிவுகள் வரப்பெற்றதும் மேல் நடவடிக்கை தொடரப்பட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படும்.

63—

இராதாவளாகம் ஆதிதிராவிடர்களுக்கு மயானப் பாதை அமைத்தல்

வினா எண் ***15455***—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் இராதாவளாகம் ஆதிதிராவிடர்களுக்கு மயானப் பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை ஒன்றியம் இராதாவளாகம் ஆதி திராவிடர்களுக்கு பின்னத்தூர் கிராம எல்லையில் மேடைக்களம் புறம்போக்கில் மயானம் உள்ளது. இந்த மயானப் பாதையை இராதா வளாகம் ஆதி திராவிடர்கள் கிள்ளைக்குச் செல்லும் பிரதான சாலையின் வழியாக சென்று கடந்த 15 வருட காலமாக பயன்படுத்தி வருகின்றனர். இதற்குப் பாதை வசதி ஏற்கனவே உள்ளதால் புதிதாக மயானப்பாதை வசதிக்காக நிலம் கையகம் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை.

64—

வேளாண்மைத் துறை மூலம் பயன்பெற்றுள்ள மலைவாழ் மற்றும் ஆதி திராவிடர்கள் விவரம்

வினா எண் 16000—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலம் இலவச பூச்சிக் கொல்லி மருந்து, பொறுக்கு விதைகளால் 1991-92 ஆம் ஆண்டில் எத்தனை மலைவாழ் மக்கள் மற்றும் ஆதி திராவிடர்கள் பயன் பெற்றனர்?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையால் பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் பொறுக்கு விதைகள் ஆதிதிராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அத்துறை மூலம் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மட்டும், ஆதி திராவிடர் சிறப்பு நல திட்டத்தின் கீழ் 50 சதவிகிதம் மான்ய விலையில் மேற்படி இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. 1991-92-ல் மேற்படி இடுபொருட்கள் வழங்கப்பட்டதால் பயன்பெற்றவர் எண்ணிக்கையும் இதற்காக செலவிடப்பட்ட தொகையும் கீழ்வருமாறு:-

இடுபொருட்கள் பற்றிய விவரம்.	பயன்பெற்றவர்களது எண்ணிக்கை.	செலவிடப்பட்ட தொகை
(1)	(2)	(3)
1. பூச்சிக்கொல்லி மருந்து வழங்குதல்	14,948	ரூ.24,93,873,85
2. பொறுக்கு விதைகள் வழங்குதல்	36,395	ரூ.46,14,539.05

1991-92 ஆம் ஆண்டு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் வாயிலாக இலவச பூச்சிகொல்லி மருந்துகள் மற்றும் பொறுக்கு விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவில்லை. ஆனால் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை மலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 1991-92ஆம் வருடம் கீழ்க்கண்டவாறு பூச்சிக்கொல்லி மற்றும் பூஞ்சான மருந்துகள் தேயிலைக் கன்றுகள் மற்றும் வேளாண் கருவிகள் மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினருக்கு விநியோகிக்கப்பட்டன.

திட்டம்—மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

பரப்பு.	இடுபொருள் விவரம்.	செலவு.	பயனடைந்தோர் எண்ணிக்கை.
1000 ஹெக்.	பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 சத மான்ய விலையில்		
130 இலட்சம் எண்ணிக்கை	தேயிலைக் கன்றுகள் 50 சத மான்ய விலையில்	225.51	561
288 எண்ணிக்கை	வேளாண் கருவிகள் 50 சத மான்ய விலையில்		

65—

காமராஜர் மாவட்டத்தில் தாட்கோ அலுவலகமும் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குள்ளே அமைத்தல்

வினா எண் **19373**—திரு. *சஞ்சய் ராமசாமி:* மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டத்தில் மாவட்ட தாட்கோ அலுவலகமும் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குள்ளே மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : காமராஜர் மாவட்ட தாட்கோ மேலாளர் அலுவலகத்தை நிர்வாக வசதி கருதி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகவளாகத்திற்குள்ளேயே இயங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இட ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் காமராஜர் மாவட்ட தாட்கோ மேலாளர் அலுவலகம் அங்கு செயல்படும்.

66—

ஜோலார்பேட்டை-திருப்பத்தூர் ஒன்றியங்களின் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாய நலக்கூடம் அமைத்தல்

வினா எண் ***22673***—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

ஜோலார்பேட்டை திருப்பத்தூர் ஒன்றியங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாய நலக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் இந்த ஒன்றியங்களில் சமூக நலக்கூடம் கட்டுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

67—

மதுரையில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு அகில இந்திய பணிகளுக்கான முன்தேர்வுப் பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் ***26936***—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகரில் ஆதி திராவிட இன மாணவர்களுக்கு அகில இந்திய பணிகளுக்கான முன் தேர்வுப் பயிற்சி மையம் (Pre Examination Training Centre) அமைக்கும் செயற்குறிப்பு தற்போது எந்நிலையில் உள்ளது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

மதுரை நகரில் ஆதிதிராவிட இன மாணவர்களுக்கு அகில இந்திய பணிகளுக்கான முன் தேர்வுப் பயிற்சி மையம் (Pre Examination Training Centre) அமைக்கும் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு இவ்வரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

68—

தாட்கோ ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழக தலைமை அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *27207*—திரு. மு.அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாட்கோ ஆதி திராவிடர் மேம்பாட்டு கழக தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமாக கட்டிடம் கட்ட அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

அரசு ஆணை நிலை எண் 778, வருவாய் துறை, நாள் 27-5-1981-ல் தமிழ்நாடு ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழக தலைமையகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக, சென்னை, மைலாப்பூரில் சர்வே எண் 3847/96-ல் 641 சதுர மீட்டரை ஒதுக்கி தாட்கோவிற்கு கட்டிடம் கட்டுவதற்காக வருவாய்த் துறை சில நிபந்தனைகளுடன் ஆணை வெளியிட்டது. இந்த நிலத்தின் விலையும் மற்றும் நில எடுப்புத் தொகையாகவும் ரூபாய் 44870/- 8-9-1991 அன்று செலுத்தப்பட்டு இந்த நிலம் 18-12-1991-ல் தாட்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த இடம் குடியிருப்பு அடிப்படை பகுதியாக (Primary residential zone) அறிவிக்கப்பட்டுள்ளதால் தாட்கோவில் அலுவலக கட்டிடம் கட்டுவதற்காக அந்த இடத்தை கலப்பு குடியிருப்புப் பகுதியாக (Mixed residential Zone) அறிவிக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் கழக ஆணையகத் திடம் கேட்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் கழகம் (MMDA) இது குறித்து முடிவெடுத்து நாளிதழ்களில் அறிவிக்கை

வெளியிட்டுள்ளது. இக்கழகத்தில் தொழில் நுட்பக் குழுவின் ஒப்புதல் பெற்றவுடன் 'தாட்கோ' நிறுவனத்திற்கு சொந்தமாக அலுவலகக் கட்டிடம் கட்டப்படும்.

69—

வயலாமூர் ஆதிதிராவிட மக்களுக்கு கட்டப்பட்ட கோயிலை பூர்த்தி செய்தல்

வினா எண் 7661—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வயலாமூர் ஆதி திராவிட மக்களுக்கு கட்டப்பட்ட கோயிலை பூர்த்தி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், வயலாமூர் அருள்மிகு முத்தாலம்மன் திருக்கோயில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடைபெற்று விட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

70—

அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோயில் மகளிர் கலைக் கல்லூரியை விரிவாக்கம் செய்தல்

வினா எண் 13852—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி, அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோயில் மகளிர் கலைக்கல்லூரியின் விரிவாக்கத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

பழனி அருள்மிகு பழனி ஆண்டவர் திருக்கோயில் மகளிர் கலைக் கல்லூரியில் 1994-95-ம் கல்வியாண்டில் இளம் அறிவியல் (கணிபொறியியல்)

மற்றும் பி.பி.ஏ. வகுப்புகள் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதுரை காமராஜர் பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் துவங்கப்படும்.

71—

தஞ்சாவூர் பேருந்து நிலையத்திலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்தை திருப்பணி செய்தல்

வினா எண் 15938—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் பேருந்து நிலையத்திலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இத்திருக்கோயிலின் திருப்பணி பேருந்து நிலையத்திலுள்ள வணிகப்பெருமக்களாலும், சோழன், போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் போக்குவரத்து உரிமையாளர்களாலும் உபயத் திருப்பணியாக செய்யப்பட உள்ளது.

72—

அருள்மிகு மருதமலை திருக்கோயில் திருப்பணிக் குழு அமைத்தல் மற்றும் சொத்து விவரம்

வினா எண் 16089—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு மருதமலை திருக்கோயில் திருப்பணிகள் நடத்த குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) கோயிலின் நிலையான சொத்துக்கள், தொகை, நகைகள் ஆகியவற்றின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம். அருள்மிகு மருதமலை திருக்கோயில் திருப்பணிகள் நடத்த 12 உறுப்பினர்கள் கொண்ட திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இத் திருக்கோயிலுக்கு 16.58 ஏக்கர் நிலமும், தங்க ஆபரணங்கள் மற்றும் நகைகள் சுமார் ரூ. 28,85,258 மற்றும் முதலீடு ரூ. 1.95 கோடிக்கும் உள்ளன.

73—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களின் வருமான விவரம்

*வினா எண் **17348**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயில் நிலங்களை குத்தகைக்கு விடுவதால் திருக்கோயில்களுக்கு, இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) இதைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,75,578.

(ஆ) 60:40 என்றிருந்த குத்தகை விகிதத்தை 75:25 என்று மாற்றப்பட்டுள்ளதால் குத்தகை மூலம் கூடுதல் வருமானம் பெறவாய்ப்பில்லை.

74—

திருவையாறு வட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல்

*வினா எண்கள்—**17581, 17582, 17593, 17594, 17595, 17605**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்திலுள்ள:—

1. புது அக்ரகாரம், விநாயகர் ஆலயம்.

1994 நவம்பர் 3]

2. கண்டியூர், மணவாள மூனீஸ்வரர் ஆலயம்.

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்திலுள்ள:—

3. மேல்விடையல், சித்தேஸ்வரர் சுவாமி ஆலயம்.

4. மேலவிடையல், சக்தி விநாயகர் ஆலயம்.

5. மேலவிடையல், மாரியம்மன் ஆலயம்.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம்:—

6. சுப்புரமணிய ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

75—

பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல்

வினா எண்கள் ***17584, 17585, 17586, 17587, 17589, 17590, 17591***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள:

1. வளச்சேரிக்காடு, பிள்ளையார் ஆலயம்.

2. வெண்டாக்கோட்டை, சித்தி விநாயகர் ஆலயம்.

3. வெண்டாக்கோட்டை, சுப்பிரமணியசாமி ஆலயம்.

4. வேப்பங்காடு உக்கடை, அங்காளம்மன் ஆலயம்.

5. கல்யான ஓடை, மாரியம்மன் ஆலயம்.

6. கல்யாண ஓடை, பிடாரியம்மன் ஆலயம்.

7. கீழக்குறிச்சி, கைலாசநாதசுவாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

76—

பெரும்புரியூர் தண்ணீர் பந்தல் தர்மாலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண் **17601**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பெரும்புரியூர் தண்ணீர் பந்தல் தர்மாலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் **17634, 17635, 17637, 17640, 17644, 17655**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள:

1. வெங்கட சமுத்திரம் கைலாசநாதர் ஆலயம்.
2. விஷ்ணம்பேட்டை கைலாசநாதர் ஆலயம்.
3. அலமேலுபுரம் புதுச்சத்திரம் வேணுகோபாலசுவாமி ஆலயம்.
4. தஞ்சாவூர் இரயிலடி செயத்சந்தி விநாயகர் ஆலயம்.
5. கார்த்திகை தோட்டம் மாரியம்மன் ஆலயம்.
6. தஞ்சை கீழவாசல் வல்லப விநாயகர் ஆலயம்.

1994 நவம்பர் 3]

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

78—

பாபநாசம் வட்டம், இடையிருப்பு சியாமளா தேவியம்மன் ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண் **17681**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், இடையிருப்பு சியாமளாதேவியம்மன் ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

79—

பாபநாசம் வட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் **17691, 17692, 17695, 17697**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டத்திலுள்ள,

1. கள்ளர் நத்தம் காளியம்மன் ஆலயம்.
2. கள்ளர் நத்தம் கீழத்தெரு காளியம்மன் ஆலயம்.
3. அத்வானபட்டி காளியம்மன் ஆலயம்.
4. ஆவடி நத்தம் காளியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

ஆதனூர் தர்மராஜா் ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண் *17751*—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ஆதனூர் தர்மராஜர் ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

வலங்கைமான் வட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் *17781, 17782, 17783, 17786, 17787, 17794, 17797*- திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்திலுள்ள:

1. தொழுஊர் அமர்நீதி அம்மன் ஆலயம்.
2. தொழுஊர் பழனியாண்டவர் ஆலயம்.
3. தொழுஊர் நவநீத கிருஷ்ணசாமி ஆலயம்.
4. கிளியூர் விநாயகர் ஆலயம்.

1994 நவம்பர் 3]

5. மருவத்தூர் காத்த பெருமாள் அய்யனார் மற்றும் செல்லியம்மன் ஆலயம்.

6. வலங்கைமான் செட்டித்தெரு மழைமாரியம்மன் ஆலயம்.

7. வலங்கைமான் வைத்தீஸ்வரர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

தஞ்சை வலங்கைமான் வட்டத்திலுள்ள கோயில்களைப் புதுப்பித்தல்

வினா எண்கள் *17788, 17789, 17790 17791, 17792, 17795*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் வட்டத்திலுள்ள:

1. மேலவிடையல் பத்ரகாளியம்மன் ஆலயம்.

2. மேல்துறையூர் கைலாசநாதர் மற்றும் லட்சுமி நாராயண பெருமாள் ஆலயம்.

3. வடக்குப்பட்டம் காத்த விநாயகர் ஆலயம்.

4. வடக்குப்பட்டம் செல்லியம்மன் ஆலயம்.

5. வடக்குப்பட்டம் பசுபதீஸ்வரர் ஆலயம்.

6. வலங்கைமான் நாகலாப்பிள்ளையார் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

வலங்கைமானிலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் ***17798, 17799, 17801, 17802, 17803, 17804, 17805***—*திரு. ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்திலுள்ள:

1. வலங்கைமான், காசிவிஸ்வநாதசாமி ஆலயம்.
2. வலங்கைமான், வரதராஜபெருமாள் ஆலயம்,
3. வலங்கைமான், வெள்ளாளத் தெரு அங்காளம்மன் ஆலயம்.
4. வலங்கைமான், ராஜ விநாயகர் ஆலயம்.
5. வலங்கைமான், கருந்தாலம்மன் ஆலயம்.
6. வலங்கைமான், சிங்கு தெரு அங்காளம்மன் ஆலயம்.
7. வலங்கைமான், சிங்கு தெரு பொய்யாத விநாயகர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் ***17808, 17810, 17812, 17814, 17816, 17818, 17821, 17822, 17823***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள:

1. வலங்கைமான் வட்டம், வலையமாபுரம் ஆலமுத்து அய்யனார் ஆலயம்.

1994 நவம்பர் 3]

2. வலங்கைமான் வட்டம், விருப்பாட்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்.

3. வலங்கைமான் வட்டம், விருப்பாட்சிபுரம் லெட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம்.

4. வலங்கைமான் வட்டம், ஆபுடைநத்தம் பிள்ளையார் ஆலயம்.

5. வலங்கைமான் வட்டம், திரௌபதியம்மன் ஆலயம்,

6. வலங்கைமான் வட்டம், மேலூர் சித்தி விநாயகர் ஆலயம்.

7. மன்னார்குடி வட்டம், பேரையர் கூத்துப் பெருமாள் ஆலயம்.

8. மன்னார்குடி வட்டம், பல்லவராயன் குடிகாடு கோவிந்தராஜ பெருமாள் ஆலயம்.

9. மன்னார்குடி வட்டம், வடுவர் அழகிய சுந்தரியம்மன் ஆலயம்

ஆகிய திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசு செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

மன்னார்குடி வட்டத்திலுள்ள திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***17826, 17830, 17835, 17838, 17839, 17840, 17845, 17846, 17848, 17849, 17850***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்திலுள்ள:

1. கரவாக்குறிச்சி வரதராஜ பெருமாள் ஆலயம்.
2. மகாதேவப்பட்டிணம், பட்டண மாரியம்மன் ஆலயம்.

3. நெம்மேலி, பழனியாண்டவர் ஆலயம்.

4. பரவாக்கோட்டை, கள்ளர்வீட்டு அய்யனார் ஆலயம்.

5. தமிழ்க்கோட்டை, சுப்பிரமணியசாமி ஆலயம்.

6. தழிக்கோட்டை, காத்தவராயசாமி ஆலயம்.

7. பரவாக்கோட்டை, தைலத்தம்மன் ஆலயம்.

8. மேலக்கழிக்கோட்டை, கணேசசாமி ஆலயம்.

9. எடகீழையூர், புலிகண்ட அய்யனார் ஆலயம்.

10. எடமேலையூர், செல்வ விநாயகர் ஆலயம்.

11. வள்ளிப்பேட்டை, சேதுகாளியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

திருவையாறு வட்டத்திலுள்ள கட்டளைகளை புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***17911, 17912, 17913, 18062, 18063, 18064, 18076***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்திலுள்ள:

1. விஷ்ணம்பேட்டை, திருக்கானூர் சோமவாரமண்டப கட்டளை.

2. வெங்கடசமுத்திரம், கைலாசநாதசுவாமி ஆலயத்துடன் இணைந்த குறிப்பிட்ட கட்டளை.

3. வெங்கடசமுத்திரம் வாத்தலை நாச்சியம்மன் ஆலயத்துடன் இணைந்த காலசந்தி கட்டளை.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டத்திலுள்ள:—

4. மன்னை, இராஜகோபாலசுவாமி கோயிலுடன் இணைந்த ஏர்.ஆர்.ஏ. கட்டளை.

5. மன்னை, சின்னசாமி அய்யர் கட்டளை,

6. மன்னை, யானைமால் தோட்டக் கட்டளை.

7. மன்னை, மகாசிவராத்திரி கட்டளை.

ஆகிய கட்டளைகளை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

தருமத்துப்பட்டியில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் வருமான விவரம்.

வினா எண் **21814**—திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், தருமத்துப்பட்டியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றின் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் வட்டம், தருமத்துப்பட்டியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நன்செய் நிலம் 1.81 ஏக்கரும், புன்செய் நிலம் 9.78 ஏக்கரும் உள்ளன. அந்நிலங்களின் மூலம் வரும் ஆண்டு வருமானம் ரூ. 17,385 ஆகும்.

88—

ஆத்தூரில் அருள்மிகு வண்டி காளியம்மன் திருக்கோயில் வருமான விவரம்.

வினா எண் **21816**—திரு. எஸ்.எம். துரை: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம்,ஆத்தூரில் உள்ள அருள்மிகு வண்டி காளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றின் மூலம் எவ்வளவு ஆண்டு வருமானம் கிடைக்கிறது ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் அருள்மிகு வண்டிகாளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நன்செய் நிலம் 1.32 ஏக்கரும், புன்செய் நிலம் 5.89 ஏக்கரும் உள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ.14,490 ஆகும்.

89—

கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில் நிதியிலிருந்து நிதி உதவி அளித்தல்.

வினா எண் **27330**—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சித்த மருத்துவமனை, அன்பு இல்லம், முடி காணிக்கைச் செலுத்துதல் ஆகியவற்றிற்குக் கட்டிடம் கட்ட திருக்கோயில் நிதியிலிருந்து நிதி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான போதிய நிலங்கள் இல்லாத நிலையில், கட்டிடம் கட்ட திருக்கோயில் நிதியிலிருந்து நிதி அளிக்க இயலாது.

90—

கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் மாணவ விடுதிகளுக்கு காய்கறிகள் வழங்குதல்.

வினா எண் **843**—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு காய்கறிகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் நடைபெறும் கூட்டுறவு சொசைட்டிகளில் வாங்காமல் தனியார் கடைகளில் வாங்குவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களும், கூட்டுறவு பண்டகசாலை மூலமே காய்கறி வாங்கவும், தனியார் கடைகளில் வாங்குதலை தவிர்க்கவும் அவ்வப்பொழுது வலியுறுத்தப்பட்டு வருகின்றனர். கூட்டுறவு பண்டகசாலை இல்லாத இடங்களில் ஒப்பந்தப்புள்ளி மூலமோ, ஒப்பந்தப்புள்ளி பெற இயலாத இனங்களில் விடுதிகள் நகராட்சி எல்லைக்குட்படாத இடங்களில் மூன்று நபர் விலைப் புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி அளிப்பவரிடம் வாங்கவும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

91—

சீர்காழி தொகுதியில் கால்நடை குடிநீர்த் தொட்டிகளில் நீர் நிரப்ப நடவடிக்கை

*வினா எண் **8537**—திரு. து. மூர்த்தி:* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் கால்நடை குடிநீர்த் தொட்டிகள் அனைத்தும் தண்ணீர் நிரப்பப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்ப எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) சீர்காழி தொகுதியில் கால்நடை மருந்தகங்கள் வளாகத்தில் இத்துறை கட்டுப்பாட்டில் கால்நடை குடிநீர்த் தொட்டிகள் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

92—

கோயம்புத்தூர் அருகில் மீன் மார்க்கெட் அமைத்தல்

*வினா எண் **34025**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் அருகில் நவீன மீன் மார்க்கெட் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) கோயம்புத்தூர் அருகில் நவீன மீன் மார்க்கெட் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

1994 நவம்பர் 3]

(ஆ) கிருஷ்ணகிரி, பாரூர், மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் ஆகிய நீர்த்தேக்கப்பகுதியில் சுகாதார முறையில் கையாளும் வகையில் மீன் விற்பனைக் கூடங்கள் மத்திய அரசு நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளன.

93—

டாப் செங்காட்டுப்பட்டியில் மீன் விற்பனை நிலையம் அமைத்தல்

வினா எண் ***34063***—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, டாப் செங்காட்டுப்பட்டியில் மீன் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): உப்பிலியாபுரம் தொகுதி, டாப் செங்காட்டுப்பட்டியில் மீன் விற்பனை நிலையம் ஆரம்பிப்பது குறித்து, கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. எனவே, எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்ற வினா எழாது.

94—

சின்னசேலம் பிற்பட்டோர் மாணவர்கள் விடுதிக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் ***34246***— திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் பிற்பட்டோர் மாணவர்கள் விடுதிக்குக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) சின்னசேலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கவில்லை. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்குகிறது. அம்மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

95—

சிறு நாவலூரிலுள்ள பிற்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் ***34368***—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, சிறுநாவலூரிலுள்ள பிற்பட்டோர் நலத்துறை மாணவர் விடுதிக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) உப்பிலியாபுரம் தொகுதி சிறுநாவலூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. ஏற்கனவே விடுதி இயங்கும் ஊரில்தான் கட்டிடம் கட்ட இயலும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

96—

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் இயங்கும் பள்ளிகள் விவரம்

வினா எண் **34525**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதிலும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் எத்தனை பள்ளிகள் இயங்குகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 265 பள்ளிகள் இயங்கி வருகின்றன.

(ஆ)	(1)	மேல்நிலைப்பள்ளிகள்	5
	(2)	உயர்நிலைப்பள்ளிகள்	20
	(3)	நடுநிலைப்பள்ளிகள்	22
	(4)	ஆரம்பப்பள்ளிகள்	218

97—

துளுவ வேளாளர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் **34528**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

துளுவ வேளாளர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரை ஏதுமின்றி துளுவ வேளாளர் இனத்தை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது.

98—

கரூர் வட்டம் தென்னிலையில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதி துவங்குதல்.

*வினா எண் **34530**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், தென்னிலையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி துவக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், தென்னிலையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

99—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்கள் விவரம்

*வினா எண் **1725**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்கள் எத்தனை?

(ஆ) இம்மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் புண்ணியஸ்தலங்கள் உட்பட சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மையங்கள் 12 உள்ளன.

(ஆ) அச்சுற்றுலா மையங்களின் விவரங்களும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கு அரசு எடுத்த விவரமும் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இணைப்பு-1

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் விவரம்:

1 இராமேசுவரம் (புனிதமான மற்றும் வரலாற்றுப் புகழ் மிக்க இடம்)
2 திருப்புல்லானி (புண்ணியஸ்தலம்)
3 சேதுக்கரை (புண்ணியஸ்தலம்)
4 ஏர்வாடி (முஸ்லீம்களின் புண்ணியஸ்தலம்)
5 நைனார் கோவில் (புண்ணியஸ்தலம்)
6 உத்திரகோசமங்கை (புண்ணியஸ்தலம்)
7 தேவிபட்டினம் (புண்ணியஸ்தலம்)
8 திருவாடானை (புண்ணியஸ்தலம்)
9 உப்பூர் (புண்ணியஸ்தலம்)
10 ஓரியூர் (கிறிஸ்தவர்களின் புண்ணியஸ்தலம்)
11 தொண்டி (வரலாற்றுப் புகழ்மிக்க இடம்)
12 ஆற்றங்கரை (மாவட்ட உலாத்தலம்)

இணைப்பு-2

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஒரு சுற்றுலா அலுவலகம் மற்றும் ஒரு சுற்றுலா தகவல் மையம் செயல்படுகிறது.

2. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இராமேசுவரத்திலும் மண்டபத்திலும் "ஓட்டல் தமிழ்நாடு" நடத்துகிறது.

3. ஆண்டுதோறும் பொங்கல் சுற்றுலா விழா நடத்தப்படுகிறது.

4. மாவட்ட உலா மையங்கள் திட்டத்தில் தொண்டி மற்றும் ஆற்றங்கரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

5. அவ்வப்போது கையேடுகள் (Folders) சுவரொட்டிகள் (Posters) வெளியிடப்படுகின்றன. வட இந்தியாவில் பல மொழிகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுகிறது.

6. சுற்றுலா வழிகாட்டிகள் (Tourist Guides) நியமிக்கப்பட்டுள்ளனர்.

7. மத்திய அரசு உதவியுடன் ஒரு சுற்றுலா வரவேற்பு மையம் ரூபாய் 18.45 இலட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது.

8. மாநில அரசின் பகுதி 2 திட்டத்தில் ரூபாய் 12.50 இலட்சம் செலவில் சிற்றுண்டி விடுதி (Restaurant Block) கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

100—

பழைய சட்டக் கல்லூரி விடுதியைச் சுற்றுலா உணவு விடுதியாக மாற்ற திட்டம்

*வினா எண் **10488**—திரு. ஆ. சுப்புரத்தினம்:* மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வே பகுதியிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியை, சுற்றுலா உணவு விடுதியாக மாற்றும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

சென்னை பிராட்வே பகுதியிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியில் உணவு விடுதியுடன் கூடிய வணிக வளாகம் (Commercial Complex with Hotel) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இரண்டாம் பட்டியல்.

1—

தாண்டாம் பாளையம் கூட்டுறவு அங்காடிக்கு மண்ணெண்ணெய் வழங்குதல்

*வினா எண் **19272**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் சிவகிரி தாண்டாம்பாளையம் கூட்டுறவு அங்காடிக்கு மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?

5. அவ்வப்போது கையேடுகள் (Folders) சுவரொட்டிகள் (Posters) வெளியிடப்படுகின்றன. வட இந்தியாவில் பல மொழிகளில் விளம்பரங்கள் வெளியிடப்படுகிறது.

6. சுற்றுலா வழிகாட்டிகள் (Tourist Guides) நியமிக்கப்பட்டுள்ளனர்.

7. மத்திய அரசு உதவியுடன் ஒரு சுற்றுலா வரவேற்பு மையம் ரூபாய் 18.45 இலட்சத்தில் கட்டப்பட்டு வருகிறது.

8. மாநில அரசின் பகுதி 2 திட்டத்தில் ரூபாய் 12.50 இலட்சம் செலவில் சிற்றுண்டி விடுதி (Restaurant Block) கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

100—

பழைய சட்டக் கல்லூரி விடுதியைச் சுற்றுலா உணவு விடுதியாக மாற்ற திட்டம்

*வினா எண் **10488**—திரு. ஆ. சுப்புரத்தினம்:* மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வே பகுதியிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியை, சுற்றுலா உணவு விடுதியாக மாற்றும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

சென்னை பிராட்வே பகுதியிலுள்ள பழைய சட்டக் கல்லூரி விடுதியில் உணவு விடுதியுடன் கூடிய வணிக வளாகம் (Commercial Complex with Hotel) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

இரண்டாம் பட்டியல்.

1—

தாண்டாம் பாளையம் கூட்டுறவு அங்காடிக்கு மண்ணெண்ணெய் வழங்குதல்

*வினா எண் **19272**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் சிவகிரி தாண்டாம்பாளையம் கூட்டுறவு அங்காடிக்கு மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் சிவகிரியில் உள்ள தாண்டாம்பாளையம் கூட்டுறவு அங்காடிக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

2—

குடவாசல் ஒன்றியம், மஞ்சக்குடி ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் **22644**—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் மஞ்சக்குடி ஊராட்சியில் அமைந்துள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

இல்லை. மேற்படி கிராமத்தில் தற்போது இயங்கி வரும் வாடகை கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் மிகக் குறைவாக இருந்ததால் குறுவைப் பருவத்தில் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை. மேற்படி மஞ்சக்குடி கிராமத்திற்கு அருகில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வடவேர் என்ற கிராமத்தில் நிரந்தர நேரடி கொள்முதல் நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருவதால், மஞ்சக்குடி கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டும் அவசியம் எழவில்லை.

3—

இலவச மருத்துவ பரிசோதனையால் பயனடைந்தோர் விவரம்

வினா எண் **22231**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் இலவச மருத்துவ பரிசோதனையினால் எவ்வளவு பேர்கள் பயன் அடைந்துள்ளனர்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: 1992 ஆம் ஆண்டில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா மருத்துவ நலத்திட்டத்தின் கீழ் 9,226 சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டு, 51,64,641 பேர் பல்வேறு குறைபாடுகளுக்காகச் சிகிச்சைப் பெற்று பயன் அடைந்தனர்.

2. அதனைத் தொடர்ந்து, 1993 ஆம் ஆண்டில், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ முகாம்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்தது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 1,320 முகாம்கள் நடத்தப்பட்டு, 2,11,840 மகளிரும், 2,19,806 குழந்தைகளும் பயன் அடைந்துள்ளனர்.

3. 1993 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் ஜோலார் பேட்டை இரயில் சந்திப்பில் நடைபெற்ற 'நடமாடும் இரயில்' மருத்துவமனை முகாமில் இளம்பிள்ளை வாதநோயினால் பாதிக்கப்பட்ட 207 குழந்தைகளுக்கு, அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆறு பேருக்கு காது, மூக்கு, தொண்டைக்கான அறுவை சிகிச்சையும், 219 பேருக்கு கண் புரைநோய் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது.

4. சென்ற 14-2-1994 முதல் அனைத்து மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் சில மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் நடைபெற்ற புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா இளம்பிள்ளைவாத அறுவை சிகிச்சை மருத்துவ முகாம்களில் இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்ட 1,937 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

4—

கல்வராயன் மலைப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் தங்கி பணிபுரிதல்

வினா எண் **5569**—திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் டாக்டர்கள் அங்கேயே தங்காமல் மாதம் ஒரு முறை மட்டும் அங்கு செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்கள் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்கி பணிபுரிய அரசு ஆவன செய்யுமா?

(இ) மலைப்பகுதியில் பணிபுரியும் டாக்டர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை அளித்து அங்கேயே தங்கி பணிபுரிய அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) கல்வராயன் மலைப்பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் தங்கி பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) மலைப்பகுதிகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு, அவர்கள் அங்கேயே தங்கி பணிபுரிய ஊக்கத்தொகையாக ரூ.200 உச்சவரம்புக்கு மேற்படாமல் அவரவர்களுடைய மாத ஊதியத்தில் 20 விழுக்காடு தொகையை மலைப்படி (Hill Allowance) ஆக ஏற்கனவே அரசு வழங்கி வருகிறது.

5—

நன்னிலம் தாலுக்கா, பாவட்டக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் **22906**—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, பாவட்டக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 1993-94-ல் புதிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

பாவட்டக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டிடம் கட்டுவதற்கான நிலம் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை. தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், கட்டிடம் கட்டுவது பற்றி அரசினால் பரிசீலிக்கப்படும்.

6—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள சுகாதார நிலையங்கள் விவரம்

வினா எண் **27784**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

(ஆ) இவற்றில் மருத்துவர்கள் நியமிக்காத இடங்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) 62.

(ஆ) 5.

7—

பேராவூரணி-ரெட்டவயல் செல்லும் நகரப் பேருந்தை கூடுதலாக இயக்குதல்

வினா எண் **13429**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து வலப்பிரமன்காடு, மணக்காடு வழியாக ரெட்டவயல் வரை செல்லும் நகரப் பேருந்தை 1992-93-ல் 8 சிங்கிலாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

8—

மணவாளக்குறிச்சி-நாகர்கோவில் செல்லும் நகரப் பேருந்தை கூடுதலாக இயக்குதல்

வினா எண் **22268**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் இருந்து நாகர்கோவிலுக்கு பள்ளி மாணவர், பொதுமக்கள் நலன் கருதி கூடுதல் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நேசமணி போக்குவரத்துக்கழகத்தின் மூலம் நாளொன்றிற்கு 12 பேருந்துகளில் 136 சுற்றுக்கள் மணவாளக்குறிச்சியிலிருந்து நாகர்கோயிலுக்கு பள்ளி நேரம் உள்ளிட்டு இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 6 புறநகர் பேருந்துகள் 12 சுற்றுகள் நாகர்கோவிலுக்கு மணவாளக்குறிச்சி கிராமத்தை தொட்டு இயக்கப்பட்டு வருகின்றன. நெருக்கடி நேரங்களில் மட்டும் சுமார் 10 நிமிட இடைவேளையில் ஒரு பேருந்து வீதம் மணவாளக்குறிச்சி வழியாக உள்ளது. இந்த பகுதியில் இயக்கப்பட்டு வரும் நகர பேருந்துகளில் பயணி இருப்பு விகிதம் சராசரியாக 55 சதவிகிதம் மட்டுமே உள்ளதால் கூடுதல் பேருந்து இயக்க உடனடி தேவை எழவில்லை.

9—

மயிலாடுதுறையிலிருந்து பழைய கடலூர் செல்லும் நகரப் பேருந்தை பேராவூர் வரை இயக்குதல்

வினா எண் **22283**-திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில், மயிலாடுதுறையிலிருந்து பழைய கடலூர் வரை செல்லும் சோழன் போக்குவரத்துக்கழக நகரப் பேருந்து எண் 29-ஐ பேராவூர் வரை சென்று வர செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறையிலிருந்து இயக்கப்படும் பேருந்து தடம் எண் 29, பழைய கடலூர், வேட்டமங்கலம் ஆகிய இரு வழித் தடங்களில் இயக்கப்படுகிறது. பழைய கடலூரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள பேராவூர் வரையிலுள்ள சாலை அகலம் குறைவாக உள்ளது. பேருந்து சென்றால் எதிரே வரும் வாகனங்கள் மாறிச் செல்லவோ பிற வாகனங்களை முந்தவோ இயலாது. விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேலும், இப்பேருந்தை பேராவூர் வரை நீட்டித்தால் தற்பொழுது இயங்கிக்கொண்டிருக்கும் தடங்களில் கால அட்டவணை மாற்றம், நடைகுறைப்பு மற்றும் பேருந்தின் தினசரி இயக்க மொத்த கி.மீ. அதிகரிப்பு ஆகிய விளைவுகள் ஏற்படும். ஏற்கனவேயுள்ள தடங்களில் நடைக்குறைப்பு, நேரமாற்றம் ஆகியவற்றை அப்பகுதி மக்கள் விரும்பமாட்டார்கள். எனவே இக்கோரிக்கையை நிறைவேற்ற இயலாத நிலை உள்ளது.

10—

புவனகிரி ஒன்றியம், தில்லைநாயகபுரத்திற்கு பேருந்து வசதி செய்தல்.

*வினா எண் **22389**—செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், தில்லைநாயகபுரத்திற்கு பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சிதம்பரத்திலிருந்து 3.9 கிமீட்டர் தூரத்தில் தில்லைநாயகபுரம் அமைந்துள்ளது. இப்பகுதியின் வழியாக தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தால் இயக்கப்பட்டுவரும் பல்வேறு நகரப் பேருந்துகளால் நாளொன்றுக்கு 54 நடைகளில் இக்கிராமத்திற்கு தற்பொழுது போக்குவரத்து வசதிகள் உள்ளன. கூடுதலாக தனியார் பேருந்து வசதிகளும் உள்ளன. நடைமுறையில் தற்பொழுது இருந்து வரும் இவ்வசதிகள் போதுமானவையாகும்.

11—

திண்டுக்கல் — ஆத்தூர் செல்லும் நகரப் பேருந்தை கூடுதலாக இயக்குதல்.

*வினா எண் **22820**—திரு. எஸ். எம். துரை:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-ஆத்தூர் வழித்தடத்தில் தற்போது ஓடிக் கொண்டிருக்கும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

1994 நவம்பர் 3]

(ஆ) இவற்றை மேலும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திண்டுக்கல்-ஆத்தூர் வழித்தடத்தில் நான்கு நகரப் பேருந்துகள் மூலமாக 46 தனி நடைகள் தேவைக்கேற்ப இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பயணிகளின் விழுக்காடுகள் அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் நடைகள் இந்த வழித் தடத்தில் இயக்கப்படும்.

12—

பாலக்காடு-பழனிக்கு கூடுதலாக விரைவுப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 23626—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலக்காட்டிலிருந்து பழனிக்கு கூடுதலாக விரைவு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இது ஒரு மாநிலங்களுக்கிடையேயான வழித்தடமாதலால் இருமாநில ஒப்பந்த அடிப்படையில் முடிவு எடுக்க வேண்டியுள்ளது. தற்போது பாலக்காட்டிலிருந்து பழனிக்கு கூடுதலாக விரைவு பேருந்து விட செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

13—

வடக்கன்குளம் — சென்னைக்கு இடையே விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 24965—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வடக்கன் குளத்திலிருந்து ராதாபுரம் வழியாகச் சென்னைக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் அல்லது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இந்த வழித்தடத்தில் விரைவுப் பேருந்து இயக்குவது தற்போது சாத்தியமில்லை. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு நாள்தோறும் 24 பேருந்துகள் 24 ஒரு வழிப் பயணமாக காவல்கிணறு வழியாக இயக்கப்படுகின்றன. காவல்கிணறிலிருந்து வடக்கன் குளம் 2 கிலோ மீட்டர் தொலைவிலும் ராதாபுரம் 11 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. காவல் கிணறிலிருந்து வடக்கன் குளத்திற்கும் இராதாபுரத்திற்கும் போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. இந்த வசதியை வடக்கன் குளம், இராதாபுரம் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் இத்தடம் நீண்டதூர வழித்தடமாக இருப்பதால் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்க இயலாது.

14—

பூம்புகார் கப்பல் கழகத்திற்கு சொந்தமான கப்பல்களின் எண்ணிக்கை விபரம்.

*வினா எண் **26505**—திரு. ஆ. சுப்புரத்தினம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசுக்கு சொந்தமான பூம்புகார் கப்பல் கழகம் 1992-93 ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டியுள்ளதா?

(ஆ) இக்கழகத்திற்குச் சொந்தமான கப்பல்கள், படகுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) மேலும் புதிதாகக் கப்பல்கள், படகுகள் வாங்கும் திட்டமுள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மூன்று கப்பல்கள், மூன்று படகுகள்.

(இ) ஆம்.

15—

ஜெயங்கொண்டம்-திருச்சிக்கு புதிய நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **26985**—திரு. ஆர். சிங்காரம்* : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஜெயங்கொண்டத்திலிருந்து இரும்புலிக்குறிச்சி செந்துறை வழியாக திருச்சிக்குப் புதிய பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

ஜெயங்கொண்டத்திலிருந்து செந்துறைக்கு இரும்புலிக்குறிச்சி வழியாக தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தினசரி போக வர 30 தனி நடைகளும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலிருந்து செந்துறை சென்னை (வழி) இரும்புலிக்குறிச்சி வழித்தடத்தில் தினசரி இரண்டு நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டத்திலிருந்து இரும்புலிகுறிச்சி, செந்துறை பகுதிகளுக்கு போதுமான பேருந்து வசதி உள்ளது. எனவே திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் இருந்து இரும்புலிக்குறிச்சி, செந்துறை வழியாக திருச்சிக்கு பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

16—

பவானியிலிருந்து எல்லப்பாளையம் வரை நகரப்பேருந்தை நீட்டித்து இயக்குதல்.

*வினா எண் **26990**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

பவானியிலிருந்து, ஆலத்தூர், ரெட்டிப்பாளையம் வரை இயங்கும் பேருந்தை எல்லப்பாளையம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பவானியிலிருந்து ரெட்டிப்பாளையம் வரை இயங்கும் பேருந்தின் வழித்தட நீளம் 30 கி.மீ. ரெட்டிப்பாளையத்திலிருந்து தடத்தை எல்லப்பாளையம் வரை நீட்டித்தால் வழித்தட நீளம் 31.8 கி.மீ. ஆகும். அரசு நிர்ணயித்துள்ள உச்ச அளவு வழித்தட நீளமான 30 கி.மீட்டரை விட கூடுதலாக இருப்பதால் இப்பேருந்தினை ரெட்டிப்பாளையத்தில் இருந்து எல்லப்பாளையம் வரை நீட்டித்து இயக்க இயலாது.

17—

திருச்சியிலிருந்து-புங்கனூர் வரை நகரப்பேருந்தை நீட்டித்து இயக்குதல்.

வினா எண் 26991—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியிலிருந்து திருவையாறு தொகுதியிலுள்ள கீழதிருவிழாப்பட்டி, இராயமுண்டாம்பட்டி, வெண்டையம்பட்டி, மனையேறிப்பட்டி, ராயராம்பட்டி, கோட்ராப்பட்டி கிராமங்கள் வழியாக புங்கனூர் வரை நகரப்பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு ஆணையின்படி நகரப் பேருந்துகளை 30 கிலோ மீட்டருக்கு மேல் இயக்க இயலாது. திருச்சி-புங்கனூர் (வழி) கீழதிருவிழாப்பட்டி, இராயமுண்டாம்பட்டி, வெண்டையம்பட்டி, மனையேறிப்பட்டி, ராயராம்பட்டி கோட்ராப்பட்டி, வழித்தடத்தின் மொத்த தூரம் 41.0 கி.மீ. இதில் கோட்ராப்பட்டியிலிருந்து புங்கனூர் வரையுள்ள 2.0 கி.மீ. சாலை பேருந்து போக்குவரத்துக்கு ஏற்புடையதாக இல்லை. குண்டும் குழியுமாகவும், மழையினாலும் அரிப்பு ஏற்பட்டும் உள்ளது. மீதமுள்ள ஏனைய அனைத்துப்

பகுதிகளும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் மூலம் போதிய வசதி பெற்ற பகுதிகளாகும்.

கோட்ராப்பட்டி முதல் புங்கனூர் வரை உள்ள சாலையினை பேருந்து போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் சரி செய்த பிறகு, திருவரம்பூரில் இருந்து கோட்ராப்பட்டி வரை தற்போது இயக்கப்படும் நகரப் பேருந்தை புங்கனூர் வரை நீட்டித்து இயக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18—

ஜெயங்கொண்டம்-மத்துமடக்கி செல்லும் நகரப்பேருந்தை கூடுதலாக இயக்குதல்.

வினா எண் ***26995***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, மத்துமடக்கி கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

ஜெயங்கொண்டம்-பொன்பரப்பி (வழி) மத்துமடக்கி, வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தின் மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்படுகின்றன. தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்து வசதி செய்து தர தற்போது அவசியமேற்படவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

19—

ஜெயங்கொண்டம்-ஆனந்தவாடி செல்லும் நகரப்பேருந்தை பரணம் வரை இயக்குதல்.

வினா எண் ***27013***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டத்திலிருந்து ஆனந்தவாடி செல்லும் நகரப் பேருந்தை பரணம் என்ற ஊருக்குள் சென்று வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜெயங்கொண்டம்-ஆனந்தவாடி (வழி) உடையார்பாளையம், பரணம், இரும்புலிக்குறிச்சி வழித்தடத்தில் பேருந்து தினசரி 6 நடைகள் இயக்கப்படுகிறது. மேற்படி தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்து பரணம் என்கிற ஊரின் மத்தியில்தான் சென்றுவருகிறது.

20—

ஈரோடு-கரூர் செல்லும் பேருந்தை கொடுமுடி வழியாக இயக்குதல்.

*வினா எண் **27281**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஈரோடு-கரூர் சாலையில் கொடுமுடி வழியாக அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஈரோடு-கரூர் (வழி) கொடுமுடி வழித்தடத்தில் ஜீவா போக்குவரத்துக்கழகம் மூலம் தற்போது சராசரியாக 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் தினசரி 231 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கூடுதலாக 20 தனி நடைகள் மார்ச் 94 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கூடுதலான பேருந்துகள் இயக்குவதற்கு போதிய பயணிகள் விகிதாச்சாரம் இல்லையாதலால், கூடுதல் பேருந்துகள் தற்பொழுது இயக்குவது சாத்தியமில்லை.

21—

ஈரோடு-கரூருக்குப் புதிய வழித்தடம் வழியாக நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **27282**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

ஈரோடு-கரூர் மார்க்கத்தில் கொம்மனைபுதூர், தாமரைப்பாளையம் வழியாகவும் ஊஞ்சலூர் வழியாகவும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஈரோடு-கரூர் வழித்தடத்தில் ஊஞ்சலூர் வழியாக 175 தனி நடைகளும் கொம்மனைபுதூர், தாமரைப்பாளையம் வழியாக 56 தனி நடைகளும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் தற்போது இயக்கப்படுகின்றன. இதன் மூலம் இப்பகுதி மக்களுக்கு போதிய அளவு பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

22—

கொடுமுடியிலிருந்து தாமரைப்பாளையம், கருமாண்டம் பாளையம் வழித்தடங்களில் பேருந்து இயக்குதல்.

வினா எண் **27283**—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடியிலிருந்து கொடுமுடிக்கும், தாமரைப்பாளையம், கருமாண்டாம்பாளையம், ஊஞ்சலூர் ஆகிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொடுமுடி-கொடுமுடி, கொம்மனைபுதூர், தாமரைப்பாளையம், கருமாண்டாம்பாளையம், ஊஞ்சலூர் வழியாக 4-4-1994 முதல் ஜீவா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கப்படுகிறது.

23—

கொடுமுடி-வேலூருக்கு இடையே செல்லும் நகரப்பேருந்தை கூடுதலாக இயக்குதல்.

வினா எண் **27284**—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி-வேலூருக்கு இடையே இயக்கப்படும் நான்கு நகரப் பேருந்துகளில், இரண்டு பேருந்துகளை ஊஞ்சலூர் வரை வழித் தடத்தை அதிகரித்தும், மற்ற இரண்டில் ஒன்றை, தாமரைப்பாளையம் வரை வழித் தடத்தை அதிகரித்தும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொடுமுடியை மையமாகக் கொண்டு இயக்கப்படும் 4 நகரப் பேருந்துகளும் பலமுனை வழித்தடத்தில் இயக்கப்படுவதால், தாமரைப்பாளையம் மற்றும் ஊஞ்சலூர் வரை நீட்டித்து இயக்க இயலாது.

24—

ஊஞ்சலூர்-கரூர் இடையே நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **27288**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊஞ்சலூரிலிருந்து கரூருக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கரூரிலிருந்து ஊஞ்சலூர் 34 கி.மீ. தொலைவில் உள்ளது. ஊஞ்சலூர்-கரூர் வழித்தட நீளம் நகரப் பேருந்துகள் இயக்க அரசு நிர்ணயித்துள்ள உச்ச அளவு நீளத்தைவிட அதிகமாக இருப்பதால் நகரப் பேருந்து இயக்க இயலாது.

25—

ஊஞ்சலூர்-அரச்சலூருக்கு பனப்பாளையம் வழியாக நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **27290**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

ஊஞ்சலூரிலிருந்து அரச்சலூருக்கு பனப்பாளையம் வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஊஞ்சலூரிலிருந்து பனப்பாளையம் செல்லும் பாதை மிகவும் குறுகலாக உள்ளதாலும், ஊஞ்சலூரிலிருந்து 1 கி.மீ. இல் உள்ள ரெயில்வே கிராசிங்கைக் கடந்து பேருந்தைத் திருப்புவது மிகவும் சிரமமானதாலும், பனப்பாளையம் வழியாகப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

26—

ஊஞ்சலூர்-ஈரோடு செல்லும் நகரப் பேருந்தை கூடுதலாக இயக்குதல்.

வினா எண் ***27291****—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊஞ்சலூரிருந்து ஈரோடுக்கு இயக்கப்படும் நகரப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஈரோடு-ஊஞ்சலூர் தடத்தில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் 22 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. புறநகர் பேருந்துகள் மூலம் 175 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இருப்பினும், இப்பகுதிக்கு புதிய பேருந்து வழித்தடங்கள் தொடங்கப்படும்போது கோரிக்கையினை கருத்தில் கொண்டு, கூடுதல் பேருந்து இயக்குவதற்கு ஜீவா போக்குவரத்துக் கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

கொடுமுடி நகரப் பேருந்தை புதிய வழித்தடம் வழியாக கூடுதலாக இயக்குதல்.

வினா எண் ***27323****—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னசமுத்திரம் பேரூராட்சி பகுதியில் இயக்கப்படும் கொடுமுடி-கொடுமுடி பேருந்தை சிட்டப்புள்ளாபாளையம், சோளக்காளிப்பாளையம் ஆகிய ஊர்களுக்கு இயக்கும் வகையில் வழித்தடத்தை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜீவா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து எ.கே.5 கொடுமுடி-கொடுமுடி தடத்தில் சிட்டப்புள்ளாம்பாளையம், சோளக்காளிப்பாளையம் வழியாக 4-4-1994 முதல் இயக்கப்படுகிறது.

28—

கொடுமுடி—கரூர் நகரப் பேருந்தை ஆவுடையாம்பாறை வரை நீட்டித்தல்.

வினா எண் 27325—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி-கரூர் வழித்தடத்தில் செல்லும் நகரப் பேருந்துகளில் ஒரு பேருந்தின் வழித்தடத்தை ஆவுடையாம்பாறை வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கரூர்-கொடுமுடி பிரதான சாலையில் உள்ள ஆவுடையாம்பாறை பிரிவிலிருந்து ஆவுடையாம்பாறை கிராமம் 2.0 கி.மீ-ல் உள்ளது. இந்தப் பாதையானது மிகவும் குறுகியதாகவும், ஒரு வழிப் பாதையாகவும் எதிரே வரும் சைக்கிளுக்கு கூட ஒதுங்க இடம் இல்லாமலும், கிராமத்திலும் பேருந்து சென்று திருப்பக் கூடிய அளவுக்கு வசதி இல்லாமலும் இருப்பதால் இச்சாலையில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. இப்பாதையை அகலப்படுத்தி கிராமத்தினுள் பேருந்து சென்று திரும்ப வசதியாக போதுமான அளவு இடவசதி ஏற்படுத்தி கொடுத்த பின்னர் இக்கிராமத்திற்கு நகரப் பேருந்து வசதி செய்ய பரிசீலிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

29—

துறையூரிலிருந்து பக்கத்து கிராமங்களுக்கு கூடுதலாக நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***33249***—*திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உப்பிலியாபுரம் தொகுதியில், துறையூரிலிருந்து வெங்கடேசாபுரம், கலிங்கமுடையான்பட்டி, மெய்யரன்பட்டி, சேனப்ப நல்லூர், புதூர், செம்பியம்பட்டி, கண்ணனூர் வரை உள்ள பகுதி மக்களுக்கு கூடுதலாக அரசு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேற்கூறப்பட்டுள்ள தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து ஒரு நகரப் பேருந்து மூலம் தினசரி நான்கு தனி நடைகளும், தனியார் துறையிலிருந்து ஒரு நகரப் பேருந்து மூலம் தினசரி 14 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ள பேருந்து வசதி போதுமானதாக உள்ளதால் வருங்காலத்தில் கூடுதல் பேருந்து வசதி தேவைப்படும்போது, அதற்கேற்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.

30—

துறையூரிலிருந்து பச்சைமலை கோம்பை பகுதிகளுக்கு கூடுதலாக பேருந்து இயக்குதல்.

வினா எண் ***33364***—*திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலை, கோம்பை மஜாரா செம்புலிச்சான்பட்டிக்கு துறையூரிலிருந்து கூடுதலாக பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேலே குறிப்பிடப்பட்டுள்ள தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பேருந்தின் மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போதைய பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. வருங்காலத்தில் கூடுதல் பேருந்து வசதி தேவைப்படும்போது அதற்கேற்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.

31—

இடையக்குறிச்சி—ஜெயங்கொண்டம் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் *33751*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இடையக்குறிச்சியிலிருந்து ஜெயங்கொண்டத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தில் ஜெயங்கொண்டம் கொடுக்கூர் நகரப் பேருந்து மூலம் ஜெயங்கொண்டம் இடையகுறிச்சிக்கு தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

32—

கரூர்-மூலனூர் வரை பேருந்து இயக்குதல்.

வினா எண் *34202*—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர்-அரவக்குறிச்சி கன்னிவாடி (வழி) பள்ளப்பட்டி, கோவிலூர் வழியாகச் செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தை மூலனூர் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கரூர் அரவக்குறிச்சி-கன்னிவாடி (வழி) பள்ளப்பட்டி கோவிலூர் வழியாக கன்னிவாடி வரை இயக்கப்பட்ட தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து 1-4-1994 முதல் மூலனூர் வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

33—

கூட்டுறவு சார்பதிவாளர்களுக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை வழங்குதல்.

வினா எண் **8675**—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி அலுவலர்களாக கூட்டுறவு சார்பதிவாளர்கள் நிரந்தரமாக பணியமர்த்தப்பட்டு 10 வருடங்கள் நிறைவு பெற்றும் அவர்களை தேர்வு நிலை கைத்தறி அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்காமல் உள்ளதற்கான காரணம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

கைத்தறித் துறைக்கு, கூட்டுறவுத் துறையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட தகுதியான கூட்டுறவு சார்பதிவாளர்களுக்கு தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை 1994 முதல் வழங்கப்பட்டுள்ளது.

34—

நெசவாளர் குடும்பங்களுக்கு கூடுதல் குடியிருப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் **15860**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் சுமார் 30 லட்சம் மக்கள் தொகை கொண்ட நெசவாளர் குடும்பங்களுக்கு நடப்பு 1992-93-ல் இரண்டாயிரம் குடியிருப்பு வீடுகள் கட்டித்தர திட்டமிட்டுள்ளதை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

இல்லை.

35—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்க விவரங்கள்.

வினா எண் **22440**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டம், பரமக்குடி எமனேஸ்வரம் பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1992-93-இல் கட்டப்பட்ட நெசவாளர்கள் காலனி எத்தனை?

(ஆ) எத்தனை கூட்டுறவு சங்கங்களுக்கு காலனி வீடுகள் வேண்டி அரசுக்கு பரிந்துரை வந்துள்ளது?

(இ) எந்த ஆண்டுகளில் இவை அமல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) ஏதுமில்லை.

(ஆ) 1991-92 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நெசவாளர் காலனி வேண்டி எந்தவொரு சங்கமும் பிரேரணை சமர்ப்பிக்கவில்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

36—

திருப்பத்தூர் தொகுதியில் கூட்டுறவு கைத்தறிக்கூடம் நிறுவ நடவடிக்கை.

வினா எண் **22984**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் கூட்டுறவு கைத்தறிக்கூடம் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

தற்போது இல்லை.

37—

வெளி மாநிலங்களில் கைத்தறி விற்பனை நிலையங்கள் விவரம்.

வினா எண் **23032**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் மற்றும் திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிமாநிலங்களில் கைத்தறி (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை நிலையம் எங்கெங்கு உள்ளன?

(ஆ) அவை அனைத்தும் லாபத்தில் இயங்குகின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) வெளிமாநிலங்களில் செயல்படும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களின் விவரம் (மாநில வாரியாக) இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) விற்பனை நிலையங்கள் பெரும்பாலும் லாபத்தில் இயங்குகின்றன. அவ்வாறு இயங்காதவைகள் லாபத்தில் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளி மாநிலங்களில் செயல்படும் கைத்தறி (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை நிலையங்கள்:

1. கர்நாடக மாநிலம்—

1. பசவங்குடி (பெங்களூர்)
2. ஐஸ்வர்யா (பெங்களூர்)
3. சாமுண்டி (பெங்களூர்)
4. ஜெயநகர் (பெங்களூர்)
5. மல்லேஸ்வரம் (பெங்களூர்)

6. மதிகேரா
7. ரமாமந்தீர் (பெங்களூர்)
8. இராஜாஜி நகர்-2 (பெங்களூர்)
9. உல்சூர்-பழையது (பெங்களூர்)
10. தேவராஜ் அர்ஸ் ரோடு (பெங்களூர்)
11. கோலார் கோல்ட் ஃபீல்டு
12. கொள்ளேகால்
13. மூகாம்பிகை (பெங்களூர்)
14. மாண்டியா
15. மங்களூர்
16. மைசூர்
17. மெர்க்காரா
18. திப்தூர்
19. தும்கூர்
20. உடுப்பி
21. ஹசான்
22. அனந்தப்பூர்
23. தர்மாவரம்
24. இந்துபூர்
25. விஜயநகர்
26. ரேஷமந்தாரா (பெங்களூர்)
27. பெல்காம்
28. பத்ராவதி
29. சித்ரதுர்கா
30. தேவாங்கீர்
31. ஹூப்ளி (மெயின்)
32. ஷிமோகா
33. ஹூப்ளி டீ ஜலண்டு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

2. பம்பாய்

(அ) மகாராஷ்டிரா மாநிலம்

1. மகாலட்சுமி (பம்பாய்)
2. செம்பூர் (பம்பாய்)
3. பிரபாதேவி (பம்பாய்)
4. ரஜினிநிகேதன் (பம்பாய்)
5. சயான் (பம்பாய்)
6. ஃபோர்ட் (விடு)
7. பூனே-1
8. மாஹிம் (பம்பாய்)
9. ஷோலாப்பூர்
10. வாஷ் (பம்பாய்)

(ஆ) மத்திய பிரதேச மாநிலம்

1. பிலாய்
2. போபால்

(இ) கோவா

ஸாயோ ரூயோ, கோவா

(ஈ) குஜராத்

1. சபர்மதி-ஏ.எச்.டி.

3. எர்ணாகுளம்

(அ) கேரளா மாநிலம்:

1. பத்மநாபா எல்.பி. (திருவனந்தபுரம்)
2. கொட்டாரக்கரா
3. கொல்லம்
4. அலெப்பி மூலக்கல்
5. ஷேர்தலை
6. மல்லப்பள்ளி
7. திருவில்லா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8. மேகலா எஸ்.பி. (எர்ணாகுளம்)
9. ஐயப்பா (எர்ணாகுளம்)
10. ஆல்வாயி
11. அங்கமாலி
12. மூவாட்டுபுழா
13. பகவதி (கொச்சின்)
14. பாலை
15. கிளாத் பஜார் (எர்ணாகுளம்)
16. பரசுராம், அலெப்பி
17. வைகம்
18. திருவாபரணம் (திருவனந்தபுரம்)
19. கோட்டயம் சாசர்
20. பதனம்திட்டா
21. கொல்லம்-புதியது
22. கல்பெட்டா
23. காசர்கோடு
24. பொன்னானி
25. பய்யனூர்
26. காலிகட் எஸ்.எம்.எஸ்டி.
27. மஞ்ஜேரி
28. கண்ணனூர் எஸ்.என்.குரு
29. குன்னம்குளம்
30. மனான்டோடி
31. சாலக்குடி
32. கண்ணனூர் பஜார்
33. காலிகட் காயிதே மில்லத்
34. பால்காட் எஸ்.பெட்
35. சுல்தான் பேட்டரி

1994 நவம்பர் 3]

36. திருச்சூர்

37. பால்காட் புதியது

4. ஐதராபாத்

(அ) ஆந்திர பிரதேச மாநிலம்:

1. அபிட்ஸ் (நவ்ரங்) (ஐதராபாத்)
2. அடோனி
3. சிக்கடபள்ளி (ஐதராபாத்)
4. குண்டக்கல்
5. கறீம் நகர்
6. கோடாட்
7. கர்நூல்
8. குஷ்பூ எஸ்.பி.(ஐதராபாத்)
9. நந்த்யால்
10. சங்கரெட்டி
11. கோஹினூர் (ஐதராபாத்)
12. சுல்தான் பஜார் (ஐதராபாத்)
13. வாரங்கல்
14. மிர்யாலகுடா
15. லாவண்யா (சிபி) (ஐதராபாத்)
16. திவ்யா (சி.பி.2) (ஐதராபாத்)

(ஆ) கர்நாடக மாநிலம்:

1. ரெய்ச்சூர்
2. குல்பர்கா
3. பெல்லாரி பான் ரோடு
4. பெல்லாரி கார் தெரு
5. பெல்லாரி ஹாண்ட்லூம் ஹவுஸ்
6. ஹோஸ்பெட்
7. கங்காவதி

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. புது தில்லி:

(அ) புது தில்லி

1. கரோல்பாக் (புது தில்லி)
2. யமுனா (புது தில்லி)
3. பூம்புகார் பீ.பீ (புது தில்லி)
4. நேரு பிளேஸ் (புது தில்லி)
5. லாஜ்பட் நகர் (புது தில்லி)
6. கான் மார்க்கெட்-பாலா (புது தில்லி)
7. ஜனக்புரி (புது தில்லி)

(ஆ) உத்திரபிரதேச மாநிலம்:

1. வாரணாசி
2. கான்பூர்
3. ஆக்ரா
4. ஆசார்ட் கன்ஜ்
5. அலகாபாத்
6. சண்டிகார்
7. கோம்தி (லக்னோ)

(இ) இராஜஸ்தான்

1. ஜெய்ப்பூர்

(ஈ) மேற்கு வங்காள மாநிலம்

1. ஆசாரா ரோடு (கல்கத்தா)
2. ஷாம்பஜார் (கல்கத்தா)
3. எஸ்பிளனேட் டி.லேன் (கல்கத்தா)
4. ஆர்.பி.அவின்யு
5. கரக்பூர்
6. சில்க் சென்டர் (சி.ஐ.டி.) (கல்கத்தா)
7. பெகலா (கல்கத்தா)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

உ. பீகார்

1. பாட்னா-1 (கங்கா)
2. சக்ஷி-ஜாம்ஷெட்பூர்

ஊ. மத்திய பிரதேச மாநிலம்

1. குவாலியர்
2. விஜயாவாடா

6. ஆந்திரபிரதேச மாநிலம்

1. அனகாபள்ளி
2. பீமாவரம்
3. குடிவாடா
4. ஏலூரு (விசாகப்பட்டினம்)
5. குண்டூர்-1
6. குண்டூர்-2
7. காக்கிநாடா
8. மசூலிப்பட்டணம்
9. நரசாபூர்
10. நிடாடாரோலி
11. பாலகோல்
12. பார்வதிபுரம்
13. இராஜாமுந்திரி
14. தாடிப்பள்ளிகூடம்
15. தெனாலி
16. தூணி
17. ஏலூர் ரோடு (விஜயவாடா)
18. கவர்னர்பேட் (விஜயவாடா)
19. பார்க்ரோடு (விஜயவாடா)
20. விசாகப்பட்டினம்
21. சூர்யாபாக் ரோடு (விசாகப்பட்டினம்)
22. விஜயநகரம்
23. பெத்தபுரம்
24. ஸ்ரீகாகுளம் ஜி.டி. ரோடு
25. நெல்லூர்-1
26. நெல்லூர் கிம்ஹபுரி

வேலூர் வட்டாரம்

1. நாகலாபும்
2. திருப்பதி-1
3. பாலாஜி சில்க் ஹவுஸ் (திருப்பதி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. சித்தூர் எஸ்.பி.

5. கடப்பா

6. மதனபள்ளி

7. பகாலா

8. விஜயவாடா

7. ஒரிசா மாநிலம்

1. பெர்ஹாம்பூர்-2

2. புவனேஸ்வர்

3. பர்லேக்முண்டி

4. ராயகுடா

38—

திருப்பத்தூர் கோ - ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை விரிவு படுத்தல்.

வினா எண் ***23294***—*திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரில் உள்ள கே-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் :

இல்லை.

39—

வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்றவர்களுக்கு களப்பணியாளர் பணி நியமனம் அளித்தல்.

வினா எண் ***19732***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மை ஓராண்டு பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களுக்கு பனை எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தில் களப்பணியாளர் பணிக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன். வேளாண்மைத்துறை அமைச்சர்: இல்லை.

40—

கீரம்பூரில் நெற்களம் அமைத்தல்.

வினா எண் *33244*—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கீரம்பூரில் நெற்களம் அமைத்து தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) 1994-95 ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித்துறையின் மூலமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு பத்து தானிய களங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994-95 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நான்கு தானிய களங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நெற்களம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை பரிசீலனை செய்து முடிவு எடுத்த பின்னர், கீரம்பூரில் தானிய களம் அமைப்பதைப் பற்றி முடிவு எடுக்கப்படும்.

41—

மேலநீலீதநல்லூர் ஒன்றியம் சொக்கலிங்கபுரத்தில் நெற்களம் அமைத்தல்.

வினா எண் *33417*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மேலநீலித நல்லூர் ஒன்றியம் சொக்கலிங்கபுரத்தில் நெற்களம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

42—

மருங்கப்பள்ளம் பால் வழங்கும் சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன் வழங்குதல்.

***வினா எண் 26356*—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மருங்கப்பள்ளம், பால் வழங்கும் சங்கத்திற்கு மாடுகள் வாங்க கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

மருங்கப்பள்ளம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் 16 உறுப்பினர்கட்குச் சேதுபாவாச்சத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் மான்யத்துடன் கூடிய கறவை மாட்டுக் கடன் வழங்கவும், மேலும் 15 உறுப்பினர்கட்கு மருங்கப்பள்ளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் மான்யமில்லாக் கறவைக் கடன் வழங்கவும், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இக்கறவைக் கடனைத் தஞ்சை மாவட்டக் கூட்டுறவு வங்கி அனுமதிக்கும் போது, மேற்படி, சங்க உறுப்பினர்கட்கு கறவை மாடுகள் வாங்கியளிக்கப்படும்.

43—

தமிழ்நாட்டில் கூடுதல் வணிக வரிச் சோதனைச் சாவடிகள் அமைத்தல்.

***வினா எண் 26510*—திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது எத்தனை இடங்களில் வணிக வரிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) இவற்றின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் திட்டம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித் துறை அமைச்சர்:

மத்தியத் தொகுப்பிலிருந்து இந்திய உணவுக் கழகத்தின் மூலம் கிடைக்கும் அரிசி பெரும்பாலும் பச்சரிசியாகவே இருக்கின்றது. தமிழக அரசு கொள்முதல் மூலம் கிடைக்கும் நெல்லை புழுங்கல் அரிசியாக மாற்றி பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கி வருகின்றது. புழுங்கல் அரிசி இன்னும் அதிகமாக அனுப்பப்பட வேண்டுமென்றும் தமிழக அரசு இந்திய உணவுக் கழகத்திடம் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது.

1994 நவம்பர் 3]

தற்பொழுது ஒவ்வொரு குடும்ப கார்டுக்கும் 6 கிலோவுக்கு குறையாமல் புழுங்கல் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. புழுங்கல் அரிசியின் கையிருப்பைப் பொறுத்து அவ்வப்போது அதிகமாக வழங்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

12—

ஆலங்குடி தொகுதியில் குடும்ப அட்டைகள் வழங்குதல்.

வினா எண் **25254**—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதி, வானக்கன்காடு, பொன்னன்விடுதி போன்ற பகுதிகளில் 1993-ஆம் ஆண்டு குடும்ப அட்டைகள் பெற எத்தனை நபர்கள் விண்ணப்பித்து உள்ளனர்?

(ஆ) அதில் எத்தனை நபர்களுக்கு குடும்ப அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி, பொன்னன்விடுதி, வானக்கன்காடு ஆகிய பகுதிகளில் முறையே 31-10-1993 வரை பெறப்பட்ட மனுக்கள் 481, 504 மற்றும் 371 ஆகும். இவை அனைத்தும் விசாரணை செய்து தகுதியான இனங்களில் முறையே 38, 65, 286 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. ஏனையவை நிராகரிக்கப்பட்டன. 1-11-1993 முதல் 28-2-1994 வரை பெறப்பட்ட மனுக்கள் விசாரணையில் உள்ளன.

13—

திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு குடிநீர் வசதியைப் பெருக்குதல்.

வினா எண் **8693**—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் அரசு மருத்துவமனையை சுத்தமாக வைத்து இருக்கும் அளவுக்கு குடிநீர் சப்ளை வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

தற்பொழுது திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு ஆழ் குழாய்க் கிணறு மற்றும் மேல்நிலை குடிநீர் தொட்டி ரூ. 3 லட்சம் செலவில் அமைக்க 1994-95-ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

14—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 14184—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இல்லை.

15—

பரமக்குடி மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதியை ஏற்படுத்துதல்.

வினா எண் 22266—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரிக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகரிக்க செயற்குறிப்பு அரசுக்கு வரவில்லை.

16—

சென்னை பொது மருத்துவமனையில் கூடுதல் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் ***24155***—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பொது மருத்துவமனையில் எல்லா பிரிவுகளின் பொது வார்டுகளுக்கும் (General Wards) போதுமான கழிப்பிட வசதி செய்யவும் பொது வார்டுகளை மிகத் தூய்மையாகப் பராமரிக்கவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சென்னை அரசு பொது மருத்துவமனையில் அனைத்து பிரிவுகளின் வார்டுகளுக்கும் தக்க கழிப்பிட வசதி உள்ளதாலும் அனைத்து வார்டுகளும் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருவதாலும் இவை தொடர்பாக அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

17—

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்தல்.

வினா எண் ***12425***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்கவும் கடைநிலை ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை மாற்றி அமைக்கவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படுத்தப்படும் 12(3) ஒப்பந்தத்தின்படி ஊதிய நிர்ணயம் செய்யப்படுகிறது. தொடர் ஊதிய திட்டத்தின் (Longivity Pay Scheme) படி ஊதிய நிர்ணயமும் பதவி உயர்வும் வழங்கப்படுகின்றன. 31-8-1992 தேதி வரை போக்குவரத்துக் கழக கடைநிலை ஊழியர்களின் சம்பள விகிதம் ரூ. 740-15-950 ஆக இருந்தது. 1992-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஊதிய ஒப்பந்த பேச்சு வார்த்தைகளின் முடிவில் கடைநிலை ஊழியர்களின் சம்பள விகிதம் 1-9-1992 முதல் ரூ. 990-15-1,350 என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

18—

திருவான்மியூரில் சென்னை தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 19720—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தமான அலுவலகக் கட்டிடத்தை திருவான்மியூரில் விரைவில் கட்டி முடிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஆம்.

1994 நவம்பர் 3]

19—

கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கும் விவரம்.

*வினா எண் **22769**—திரு. பி. வி. இராஜேந்திரன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு வீடு கட்டும் சங்கம், வீடு கட்ட கடன் வழங்குவதில் எத்தனை சதவீத வட்டியில் வழங்கப்படுகிறது?

(ஆ) மற்ற துறைகளில் அமைந்த வட்டி வீதத்தைப்போல் இதிலும் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் மூலமாக வழங்கப்படும் கடன் தொகை 13.5 சதவீதத்திலிருந்து 17.5 சதவீதம் வரையிலான வட்டி விகிதத்தில் கடன் தொகையைப் பொறுத்து கணக்கீடு செய்து வழங்கப்படுகிறது.

(ஆ) அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதத்தைப் போல் போக்குவரத்துக் கழகத்திலும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

கரூர் நந்தனூர்-திண்டுக்கல் செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தை கூடுதல் நடைகள் இயக்குதல்.

*வினா எண் **23416**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து நந்தனூர், வெஞ்சமாங்கூடலூர், சின்னவலையப்பட்டி, அரவக்குறிச்சி வழியாக திண்டுக்கல் செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தை இரண்டு முறை இந்த வழித்தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் புறநகர் பேருந்து கரூர்-திண்டுக்கல் (வழி) நந்தனூர் வெஞ்சமாங்கூடலூர் தடத்தில் 2 நடைகள் இயக்கப்பட்டு போதிய அளவில் மக்கள் பயன்படுத்தாத காரணமாக நிறுத்தப்பட்டது. இப்பேருந்திற்கு பதிலாக நகரப் பேருந்து ஒன்று அரவக் குறிச்சியிலிருந்து வெஞ்சமாங்கூடலூர் வரை 2 நடைகளும், கரூர்-வெஞ்சமாங்கூடலூர் தடத்தில் 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. மேலும் கரூர்-திண்டுக்கல் (வழி) வெஞ்சமாங்கூடலூர் வழித் தடத்தில் தனியார் துறை புறநகர் பேருந்து ஒன்று 4 நடைகளும், திண்டுக்கல்-கரூர் தடத்தில் (வழி) வெஞ்சமாங்கூடலூர் 3 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானது.

21—

கரூரிலிருந்து பழனி வழியாகப் பள்ளப்பட்டி செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தை சில கிராமங்கள் வழியாக நீட்டித்து இயக்குதல்.

வினா எண் ***23421***—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து பழனி வழியாக பள்ளப்பட்டி செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தை பாப்பநாயக்கன் பட்டி, மொண்டி ஆத்தாங்கரை மார்க்கம்பட்டி, எல்லப்பப்பட்டி, நவமரத்துப்பட்டி, கருப்பபிள்ளை புதூர் ஆகிய ஊர்கள் வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கரூர்-பழனி (வழி) பள்ளப்பட்டி, மார்க்கம்பட்டி, காமாட்சிபுரம், இடையக்கோட்டை, ஒட்டன்சத்திரம் வழியாக இயக்கப்பட்ட 2 நடைகளும் பேருந்தின் வருவாய் மிகக் குறைவாக இருந்தமையால் நிறுத்தப்பட்டது. எனினும் இவ்வழித்தடத்தில் பல்நோக்கு திட்டத்தின் கீழ் இயக்கப்படும் நகரப் பேருந்து மூலம் 2 நடைகள் இயக்கப்படுகின்றன. இதை தவிர தனியார் துறை புறநகர் பேருந்து ஒன்றின் மூலம் கரூர்-பழனி வரை 12 நடைகளும், பள்ளப்பட்டி-மூலனூர் வரை 6 நடைகளும், பள்ளப்பட்டி தாராபுரம் வரை 8 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

22—

பாலக்குறிச்சியிலிருந்து வளநாடு, முடுக்குப்பட்டி வழியாக புத்தானத்தம் வரை நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***23673*—திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பாலக்குறிச்சியிலிருந்து வளநாடு, முடுக்குப்பட்டி வழியாக புத்தானத்தம் வரை நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பாலக்குறிச்சி-புத்தானத்தம் (வழி) வளநாடு, முடுக்குப்பட்டி தடத்தின் நீளம் 17.0 கி.மீ. ஆகும். பாலக்குறிச்சியிலிருந்து வளநாடு வரை போதிய பேருந்து வசதி உள்ளது. வளநாடு முதல் சொரியம்பட்டி வரையிலான 3.0.கி.மீ. தூர சாலை பேருந்து இயக்க இயலாத அளவிற்கு மோசமாக உள்ளது. சொரியம்பட்டி முதல் புத்தானத்தம் வரையிலான பகுதிக்கு நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே பாலக்குறிச்சி புத்தானத்தம் (வழி) வளநாடு, முடுக்குப்பட்டி தடத்தில் நகரப் பேருந்து நேரடியாக இயக்க இயலாது.

TRUTH ALONE TRIUMPHS

23—

ஆத்தூர் நகரப் பேருந்து எண் 10-ஐ ஆயர்பாடியிலிருந்து தேனூற்றுவாரி வரை நீட்டித்து இயக்குதல்.

வினா எண் ***23759***—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் நகரப் பேருந்து எண் 10-ஐ ஆயர்பாடியிலிருந்து தேனூற்றுவாரி வரை நீட்டித்து கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சேலத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அதிகாரியிடமிருந்து அனுமதிபெற்ற பின்பு இத்தடத்தில் தேனூற்றுவாரி வரை நகரப் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

24—

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடன் உதவியாளர்களும் செல்ல இல்வச பஸ் பாஸ் வழங்குதல்.

வினா எண் ***24381***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடன் உதவியாளர்களும் செல்ல இலவச பஸ் பாஸ் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

1994 நவம்பர் 3]

25—

மல்லிநாயனப்பள்ளிக்கு கிருட்டினகிரியிலிருந்து நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***25673***—**திரு.** *கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருட்டினகிரி தொகுதி, மல்லிநாயனப் பள்ளிக்கு கிருட்டினகிரியிலிருந்து மல்லியநாயனப்பள்ளி தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, மல்லிநாயனப்பள்ளி கிராமமானது தற்போது பேருந்து வசதியுள்ள மல்லிநாயனப்பள்ளி கிராமத்திலிருந்து 1 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ள காரணத்தால் தற்போதுள்ள அரசு ஆணைப்படி பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது. எனவே மல்லிநாயனப் பள்ளிக்கு தற்போது பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

26—

பொள்ளாச்சியிலிருந்து நடுப்புளிவரை ஒரு புதிய வழித்தடப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***26986***—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து ஆர்.பொன்னாபுரம், சி.அர்த்தநாரிபாளையம், சி.கோபாலபுரம் கருமாண்ட கவுண்டனூர் வழியாக நடுப்புளிவரை ஒரு புதிய வழித்தட பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சியிலிருந்து ஆர். பொன்னாபுரம், சி.அர்த்தநாரிபாளையம், சி.கோபாலபுரம் மற்றும் நடுப்புளி கிராமங்கள் ஏற்கனவே போதிய பேருந்து வசதிகள் பெற்றுள்ளதாலும், சி.கோபாலபுரம் முதல் கருமாண்டக் கவுண்டனூர் வரை பேருந்து இயக்குவதற்கு ஏற்ற சாலை வசதி இல்லாததாலும் மற்றும் கருமாண்டக் கவுண்டனூர்-நடுப்புளி கிராம சாலையின் நடுவில் ஒரு ஓடை உள்ளதாலும் புதிய வழித்தடப் பேருந்து மேற்படி வழித் தடத்தில் இயக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

27—

பொள்ளாச்சியிலிருந்து நெகமம்வரை நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 26988—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து ராசக்காபாளையம் வழியாக திருப்பூர் சாலையில் சென்று கள்ளிப்பட்டி, கணக்கம்பட்டி, கருமாபுரம், ஆவலம்பட்டி, ஜோத்தம்பட்டி, மூலனூர் வழியாக நெகமம் வரை புதிய நகரப் பேருந்து இயக்குவதற்கு நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சியிலிருந்து நெகமம் (வழி) ராசக்காபாளையம் ஆவலம்பட்டி, ஜோத்தம்பட்டி, மூலனூர் கிராமங்கள் தற்போது, போதிய பேருந்து வசதி பெற்றுள்ளதாலும், கள்ளிப்பட்டி, கணக்கம்பட்டி, கருமாபுரம், கள்ளிப்பட்டிபுதூர் வரையிலான பகுதிகளில் பேருந்து இயக்கத்திற்கேற்ற சாலை வசதியில்லாததாலும் நடப்பாண்டில் புதிய வழித்தடப் பேருந்து மேற்படி வழித் தடத்தில் இயக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

1994 நவம்பர் 3]

28—

மூலக்காட்டிலிருந்து சேராபட்டுக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் **33011**—*திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூலக்காட்டிலிருந்து, சேராப்பட்டுக்கு கடந்த *1 1/2* ஆண்டுக் காலமாக பேருந்து இயக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)*: இத்தடத்தில் மூலக் காட்டிலிருந்து சேராப்பட்டு வரையிலான *15* கி.மீ. தூரப்பகுதி *1992-93*-ஆம் ஆண்டு பொழிந்த அடர் மழையால் முழுவதும் சேதமடைந்ததால் இச்சாலையில் பேருந்து இயக்கிட இயலாத நிலையேற்பட்டது. பேருந்து போக்குவரத்துக்குக் கள்ளக் குறிச்சியிலிருந்து மூலக்காடு வரை வரையறுக்கப்பட்டது. இச்சாலை சீரமைப்புக்குப் பின் *21-3-1994* முதல் கள்ளக்குறிச்சியிலிருந்து சங்கராபுரம், மூலக்காடு வழியாக சேராப்பட்டு வரை மீண்டும் பேருந்து இயக்கப்படுகிறது.

29—

கரூர்-தென்னிலைப் பேருந்தை கனம்பட்டி வரை நீட்டித்து இயக்குதல்.

வினா எண் **33037**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து தென்னிலைக்கு இயக்கப்படும் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை கனம்பட்டி வரை நீட்டித்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கரூரிலிருந்து தென்னிலைக்கு தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 2 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 10 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இந்த பத்து நடைகளில் 4 நடைகள் தென்னிலையிலிருந்து கனம்பட்டி வரை நீடித்து இயக்கப்பட்டு வருகிறது.

30—

சூரியணப்பள்ளிக்கு நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **33080**—திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளி ஒன்றியம், சூரியனப்பள்ளி கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) தற்போது கிருஷ்ணகிரியிலிருந்து நல்லூர் வரை ஒரு நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அத்துடத்திலிருந்து ஒரு கி.மீ. தொலைவில் சூரியனப்பள்ளி கிராமம் உள்ளது. அப்பாதை போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை. மற்றும் அரசு ஆணைப்படி 1 கி.மீ தொலைவு நடைபயண தூரமே ஆகும். எனவே, பேருந்து விடும் சாத்திய கூறு ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

31—

கீழ்மாளிகைக்கு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **33753**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, கீழ் மாளிகைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜெயங்கொண்டம்—பொன்பரப்பி (வழி) வீராக்கன், கீழ்மாளிகை வழித் தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றின்மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. தற்போது சாலைப் பழுதுகாரணமாக ஜெயங்கொண்டம்—ராக்கன் வரை மேற்படி பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. சாலை சரி செய்யப்பட்டவுடன் மேற்படி வழித்தடத்தில் மீண்டும் வழக்கம்போல பேருந்து இயக்கப்படும்.

32—

கொடுமுடி ஒன்றியத்தில் கே. 9 பேருந்தை இயக்க நடவடிக்கை.

வினா எண் *33761*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் கிராமத்தில் கோட்டை காட்டு வலசு வழியாக கே. 9 பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் கே. 9 பேருந்து கோட்டைக்காடு வலசு வழியாக 2 தனி நடைகளும், வளந்தான் கோட்டை வழியாக 4 தனி நடைகளும் எனப் பல முனை வழித் தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றது. அனைத்துத் தனி நடைகளும் கோட்டை காட்டுவலசு வழியாக இயக்கினால் வளந்தான் கோட்டைப் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதினால் மாற்றி இயக்க இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

33—

சிவகிரி விசைத்தறி கூடத் தொழிலாளர்கள் தொழில் புரிய விசைத் தறிகள் வழங்குதல்.

வினா எண் ***26645***— *திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் சிவகிரி விசைத்தறிக் கூடத் தொழிலாளர்கள் தங்கள் வீட்டிலேயே தொழில் புரிய விசைத் தறிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் சிவகிரி விசைத் தறிக் கூடத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தங்கள் வீட்டிலேயே தொழில் புரிய விசைத் தறிகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

சென்னை—விழுப்புரம் சாலையில் நான்கு வழிப்பாதை அமைத்தல்.

வினா எண் ***12419***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—விழுப்புரம் சாலையில் நான்கு வழிப்பாதை விரிவுப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னை—விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் தற்சமயம் சென்னை முதல் மாமண்டூர் வரை அதாவது கி.மீ. 0/0 முதல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கி.மீ.67/0 வரை நான்கு வழிப்பாதை ஆக்கும் வேலை பல்வேறு நிலையில் உள்ளது. கி.மீ.0/0 முதல் கி.மீ. 11/6 வரை அதாவது சென்னையிலிருந்து கிண்டி வரை ஏற்கனவே நான்கு வழிப் பாதையாக உள்ளது. கி.மீ.11/6 முதல் 15/4 வரை அதாவது கிண்டி முதல் திரிசூலம் வரையிலான பணி நகர்புற மேம்பாடு துறை மூலமும், கி.மீ.15/4 முதல் கி.மீ.27/8 வரை மற்றும் தாம்பரம் முதல் மாமண்டூர் வரையிலான பணிகள் தேசிய நெடுஞ்சாலை 45 துறை மூலமும் நடைபெற்று வருகின்றது.

கி.மீ.67/0 முதல் கி.மீ.160/0 வரை அதாவது மாமண்டூரிலிருந்து விழுப்புரம் வரை நான்கு வழித்தடம் அமைக்கும் கருத்துருவினை 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலத்தில் (92-97) செயல்படுத்த மத்திய அரசுக்கு மாநில அரசு ஏற்கெனவே பரிந்துரை செய்துள்ளது. இது குறித்து மைய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

35—

புவனகிரி தொகுதி விவசாயிகளுக்கு தானியக்களம் அமைத்தல்.

வினா எண் ***20848***—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி விவசாயிகளுக்கு விவசாய தானியக்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1994-95-ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு எட்டு தானிய களங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நெற்களம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை பரிசீலனை செய்து முடிவு எடுத்த பின்னர் புவனகிரி தொகுதியில் தானிய களம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

36—

தானியக் களம் அமைத்தல்

*வினா எண் **22958**—திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிக்கத்தம்பூர் கோட்டம்பாளையம், கி. மேட்டூர் பாலகிருட்டிணம்பட்டி, ஆலத்துடையான்பட்டி ஆகிய இடங்களில் நெல் அறுவடைக் காலங்களில் சமுதாயக் களம் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1994-95-ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு பத்து தானிய களங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994-95-ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நான்கு தானிய களங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நெற்களம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை பரிசீலனை செய்து முடிவு எடுத்த பின்னர் சிக்கத்தம்பூர், கோட்டம்பாளையம், கி. மேட்டூர், பாலகிருட்டிணம்பட்டி, ஆலத்துடையான்பட்டி ஆகிய இடங்களில் தானியக்களம் அமைப்பதை பற்றி முடிவு எடுக்கப்படும்.

37—

சங்ககிரி தொகுதியில் தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள்.

*வினா எண் **25085**—டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சங்ககிரி தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளின் விவரம் என்ன?

(ஆ) திட்டத்தின் சிறப்பு அம்சம் என்ன?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சங்ககிரி தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளின் விவரம் பின்வருமாறு:

1. சங்ககிரி
2. எலாச்சிபாளையம்
3. மகுடஞ்சாவடி
4. மல்லசமுத்திரம்

(ஆ) 1. சீர்கேடு அடைந்து வரும் சுற்றுச் சூழலைத் தடுத்து ஆரோக்கியமான சுற்றுச் சூழலை உருவாக்கி பராமரித்தல்.

2. நிலப்பகுதியில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துதல் மற்றும் மழை நீர் வீணாகாமல் தடுத்து தொடர்ந்து மண்ணில் ஈரம் காக்கும் நிலையை ஏற்படுத்துதல்.

3. மானாவாரி நிலப்பகுதியில் உணவு மற்றும் பல்வேறு பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குதல்.

4. இப்பகுதியில் உள்ள பல்வேறு வளங்களைக் கொண்டு ஏழை மக்களுக்கு சுய வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல். இதன் மூலம் கிராமத்தில் வாழும் ஏழை மக்கள் வேலை வாய்ப்பினைத் தேடி நகர்ப்புறம் நோக்கி செல்வதைத் தடுத்தல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

38—

விவசாயிகளுக்கு மானியத்துடன் டிராக்டர் கடன் வழங்குதல்:

*வினா எண் **26054**—திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு மானியத்துடன் டிராக்டர் கடன் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு (1993) எத்தனை நபர்களுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் டிராக்டர் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இந்த ஆண்டு (1993) புதுக்கோட்டை மாவட்டத்தில் 7 நபர்களுக்கு டிராக்டர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

39—

ஏமகண்டலூரில் கான்கிரீட் நெற்களம் அமைத்தல்.

வினா எண் *26442*—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஏமகண்டலூரில் விவசாய வேலைகளுக்கு கான்கிரீட் நெற்களம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

40—

கொடுமுடி ஒன்றியத்தில் சமுதாயக் களங்கள் அமைத்தல்:

வினா எண் *26808*—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஒன்றியம், கொடுமுடி கணபதி பாளையம், வ. மூர்த்திபாளையம், நகப்பாளையம், தருவப்பாளையம் 4 சாலைப்புதூர், கோளக்காளிப்பாளையம், ஆவுடையார் பாறை ஆகிய ஊர்களில் சமுதாய களங்கள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

41—

வாசுதேவநல்லூர் ஒன்றியம் சிவகிரியில் நெற்களம் அமைத்தல்.

*வினா எண் **27395**—திரு. ஆர் சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவ நல்லூர் ஒன்றியம், சிவகிரியில் விவசாயிகள் நெற்களம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்.

இல்லை.

42—

தென்காசி ஒன்றியம், காசிமேஜர்புரத்தில் நெற்களம் அமைத்தல்

*வினா எண் **27406**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஒன்றியம், காசிமேஜர்புரத்தில் நெற்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

43—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி வேளாண்மை மையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **30194**—திரு. எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி வேளாண்மை மையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

44—

வெட்டன்விடுதி துணை வேளாண்மை மையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 30196—திரு. எஸ்.சண்முகநாதன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதியில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் துணை வேளாண்மை மையத்திற்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

45—

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கும் திட்டம்.

வினா எண் 33099—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்ட 6-ஆம் வகுப்பு மாணவர் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இதற்கான மொத்த செலவு எவ்வளவு?

(இ) இந்தத் திட்டத்தை விரிவு படுத்தி தொடர்ந்து அளிக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) *1993-94*-ஆம் ஆண்டு இலவசமாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்ட *6*-ஆம் வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கை *1,50,000*.

(ஆ) இதற்கான மொத்த செலவு ரூ. *29,22,149*.

(இ) நடப்பு ஆண்டில் (*1994-95*) இத்திட்டத்தின் கீழ் *4,00,000* தென்னங்கன்றுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

46—

சங்ககிரி ஒன்றியம், சுண்ணாம்புக்குட்டையில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்துதல்.

வினா எண் **23212**—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி ஒன்றியம், தேவண்ணகவுண்டனூர் பஞ்சாயத்து, சுண்ணாம்புக் குட்டையில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

இல்லை.

47—

கண்டமங்கலம் ஒன்றியம், புதுக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் துவங்குதல்.

வினா எண் **23861**—*திரு. வீ. சுப்பிரமணியன்:* மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்திலுள்ள புதுக்குப்பம் கிராமத்தில் புதிதாக கால்நடை மருந்தகம் துவக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

48—

புதுக்கோட்டை ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனைகள் ஏற்படுத்துதல்.

*வினா எண் **25501**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், வைத்தூர் அல்லது அண்டக்குளம் மற்றும் முள்ளூர் கிராமங்களில் கால் நடை மருத்துவமனைகள் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

இல்லை.

49—

கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனைகள் அமைத்தல்.

*வினா எண் **25503**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை ஒன்றியம், மஞ்சப்பேட்டை ஊராட்சி மற்றும் கோமாபுரம் ஊராட்சிகளுக்குப் புதியதாக கால் நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

50—

வேலூரில் போலி அனுமதிச் சீட்டு வழங்கிய தியேட்டர் உரிமையாளர் மீது நடவடிக்கை.

Question No. 7946—Thiru M. Sundaradoss: Will the Honourable Minister for Commercial Tax be pleased to state—

(a) Whether the Assistant Collector of North Arcot District has detected issue of bogus cinema tickets at Vellore theatres during September, October 1991?

(b) the details thereof?

விடை.—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) வேலூர் விருகம்பட்டு விஷ்ணு தியேட்டரில் *6-10-1991* அன்று போலி அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டது. பயிற்சி சார் மாவட்ட ஆட்சியரால் கண்டுபிடிக்கப்பட்டது. பயிற்சி சார் மாவட்ட ஆட்சியரும் கோட்டாட்சியரும் ரூ.2,750 மதிப்பு முத்திரையிடப்படாத போலி அனுமதி சீட்டுகள் அடங்கிய இரண்டு உறைகளைக் கைப்பற்றி உள்ளனர். உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

51—

சொந்தமாகத் தொழில் நடத்த கடனுதவி கோரி விண்ணப்பித்தோர் விவரம்.

*வினா எண் **5455**— திரு. எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொந்தமாகத் தொழில் நடத்த கடனுதவிக் கோரி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்திடம் *1989-90, 1990-91*ல் ஜனவரி மாதம் முடிய கடனுதவிக் கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு?

(ஆ) அளிக்கப்பட்ட கடனுதவி மேற்படி காலத்தில் எவ்வளவு? அதில் அரசின் மானிய உதவி எவ்வளவு?

(இ) கடனுதவி பெற்றும் இன்னும் தொழில்கள் ஏதும் ஆரம்பிக்காமல் இருப்போர் பற்றி விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) சொந்தமாக தொழில் நடத்த கடனுதவி கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை:

	தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்				தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம்.			
	1989-90		*1990-91*		*1989-90*		*1990-91*	
	எண்.	தொகை (ரூ. இலட்சத்தில்)	எண்.	தொகை (ரூ. இலட்சத்தில்)	எண்.	தொகை. (ரூ.இலட்சத்தில்)	எண்.	தொகை. (ரூ. இலட்சத்தில்)
சென்னை	*1525*	*3082*	*2993*	*4344*	*1*	*102*	*2*	*76.00*
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்	*1371*	*5402*	*628*	*3753*	*17*	*1061*	*6*	*490.04*
தென்னாற்காடு	*528*	*1273*	*389*	*371*	*3*	*332*	*4*	*456.00*
வடஆற்காடு (திருவண்ணாமலை சம்புவராயர் சேர்த்து)	*500*	*1556*	*196*	*317*	*4*	*253*	*7*	*444.40*
கோவை (நீலகிரி உட்பட)	*9637*	*2908*	*1148*	*4519*	*12*	*671*	*6*	*388.50*
சேலம்	*690*	*2669*	*730*	*2466*	*5*	*339*	*7*	*447.00*
பெரியார்	*617*	*2590*	*651*	*2434*	*2*	*100*	*3*	*270.00*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தர்மபுரி	584	2577	626	2537	6	410	4	166.18
மதுரை	899	592	1522	785	–	-	4	280.50
திண்டுக்கல் அண்ணா	433	495	253	344	11	513	5	240.00
பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர்	212	221	178	199	3	229	..	..
இராமநாதபுரம்	294	251	255	240	1	50	..	..
திருநெல்வேலி கட்டபொம்மன்	399	372	201	318	..	..	1	138.00
காமராஜர்	492	394	131	310	6	328	1	78.00
சிதம்பரனார்	243	158	148	262	1	116	2	140.00
கன்னியாகுமரி	151	271	236	427	2	167	..	..
திருச்சி	1063	668	718	701	1	20	1	65.00
தஞ்சாவூர் (நாகப்பட்டினம் காயிதேமில்லத் சேர்த்து)	567	281	518	301	..	..	..	..
புதுக்கோட்டை	310	357	200	318	1	176	..	..
மொத்தம்	**11836**	**26117**	**11731**	**24946**	**77**	**4867**	**53**	**3679**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அளிக்கப்பட்ட கடன் உதவி மற்றும் மானியம்.

(ரூபாய் இலட்சத்தில்.)

ஆண்டு.	கடன் வழங்கிய நிறுவனத்தின் பெயர்.	கடனுதவி		மானியம்	
		எண்.	தொகை.	எண்.	தொகை.
1989-90	தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்	7606	11268	490	602.00
1990-91	தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்	5395	13092	828	1002.00
1989-90	தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம்	77	4867	16	71.70
1990-91	தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம்	70	5126	23	324.53

(இ) கடனுதவி பெற்றும் தொழில்கள் ஏதும் ஆரம்பிக்காமல் இருப்போர் விவரம் 29-2-1992 நிலவரப்படி).

கடன் வழங்கிய நிறுவனத்தின் பெயர்.	எண்ணிக்கை.	(தொகை ரூபாய் இ

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

52—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏலம் விடப்பட்ட குவாரிகள் விவரம்.

வினா எண் ***10213***—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை குவாரிகள் ஏலத்திற்கு விடப்பட்டன?

(ஆ) அதன் மூலம் இந்த வருடம் அரசுக்கு கிடைத்த வருமானத்தின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 1401-ஆம் பசலி முதல் 1403-ஆம் பசலி முடிய உள்ள மூன்று பசலி ஆண்டுகளுக்கு கற்கள் உடைக்கும் உரிமைக்காக 1991—ஆம் ஆண்டு ஜூன் மாதம் 114 குவாரிகள் ஏலம் விடப்பட்டன.

(ஆ) அதன் மூலம் 1401-ஆம் பசலிக்கு மட்டும் ரூபாய் 12,30,144 வசூல் செய்யப்பட்டுள்ளது.

53—

சங்ககிரி தொகுதியில் கல்குவாரிகள் மூலம் கிடைத்த வருவாய் விவரம்.

வினா எண் ***23303***—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதியில் எத்தனை கல்குவாரிகள் இருக்கின்றன?

(ஆ) அதன் மூலம் அரசுக்குக் கிடைக்கும் ராயல்டி தொகை எவ்வளவு?

(இ) ராயல்டி செலுத்தாத கல்குவாரிகள் எத்தனை?

(ஈ) அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) சங்ககிரி தொகுதியில் சிறு கனிமங்கள் வகையில் கல் குவாரிகள் ஏதுமில்லை.

(ஆ) கல்குவாரிகள் இல்லாததால் வினாவிற்கு இடமில்லை.

(இ) மற்றும் (ஈ): வினாவிற்கு இடமில்லை.

54—

பூம்புகார் நிறுவனம் மூலம் தங்கத்தேர் செய்து திருப்பதி கோவிலுக்கு வழங்குதல்.

*வினா எண் **24028**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பதி கோவிலுக்கு பூம்புகார் நிறுவனம் தங்கத் தேர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

திருப்பதி கோவிலுக்கு, திருமலை-திருப்பதி தேவஸ்தானத்திற்கு ரூபாய் 2.50 கோடி செலவில் 21.5 அடி உயரமுள்ள தங்க ரதம் செய்யும் பணியை அரசு நிறுவனமான தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சிக் கழகம் தற்போது செய்துவருகிறது.

55—

போளூர் வட்டம் நரியம்பேட்டையில் சத்துணவு மையம் ஏற்படுத்துதல்.

*வினா எண். **22436**—திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், களம்பூர் பகுதி, நரியம்பேட்டையில் புதியதாக ஒரு புரட்சித் தலைவர் எம்ஜிஆர். சத்துணவு மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பரிசீலிக்கப்படும்?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): குழந்தைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப இவ்வருடம் பரிசீலிக்கப்படும்.

56—

மாம்பட்டு ஊராட்சி இராமாபுரத்தில் சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண் 22437—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு ஊராட்சி, இராமாபுரம் கிராமத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

புவனகிரி ஒன்றியத்தில் தெற்குதிட்டை கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளியில் சத்துணவு மையத்தை சீர்செய்தல்.

வினா எண் 22559—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்தில் உள்ள தெற்குதிட்டை கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி சத்துணவு மையங்களை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

58—

ஆலங்குடி தொகுதியில் சத்துணவு மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

*வினா எண் **23000**—திரு. எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி யூனியன், பெரியவாடி வாணக்கண்காடு, கே. தெற்குத் தெரு போன்ற பள்ளிச் சத்துணவு மையங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தற்சமயம் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

59—

குத்தாலம் தொகுதி மாந்தை கிராமத்தில் சத்துணவு மையக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **23091**—திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மாந்தை கிராமத்தில் சத்துணவு மையக் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

60—

மழவேனிற்காட்டிலுள்ள பால்வாடிக் கட்டிடத்திற்கு கூரையை மாற்றுதல்.

*வினா எண் **23137**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மழவேனிற்காட்டிலுள்ள பால்வாடி கட்டிடத்திற்குக் கூரையை மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

61—

மேலநெடும்பூரில் சத்துணவு மையக்கட்டிடம் கட்டுதல்

*வினா எண் **23783**—திரு. என். ஆர். ராஜேந்திரன்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோவில் தொகுதி ஊராட்சி ஒன்றியம், மேலநெடும்பூர் கிராமத்திற்கு சத்துணவு மையக் கட்டிடம் கட்டித்தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக கருத்துரு வந்தால், அரசால் பரிசீலிக்கப்படும்.

62—

பொரும்பூரில் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்டுதல்.

*வினா எண் **23885**—திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பொரும்பூர் கிராமத்தில் உள்ள பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1994 நவம்பர் 3

63—

வாய் பேசாத, காது கேளாதோர் பள்ளிகள் விவரம்.

வினா எண் ***24958*—*திரு. ஆர். பி. பரமசிவம்:*** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வாய் பேசாத, காது கேளாதோர் பள்ளிகள் எத்தனை உள்ளது?

(ஆ) அவற்றில் எத்தனை மாணவர்கள் படிக்கின்றனர்?

(இ) மாணவர் சேர்க்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) 34

(ஆ) 4,822

(இ) மாணவர் சேர்க்கையை அதிகரிக்க வாய்ப்பில்லை.

64—

அத்தானிக்காலனி சத்துணவு மையத்திற்கு கட்டிட வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் ***24995*—*திரு. வே. பெரியசாமி:*** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, அத்தானிக்காலனி சத்துணவு மையத்திற்கு கட்டிட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

65—

களப்பாலகரம் கிராமத்தில் சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***25094***—*திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு *சமூக* நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், களப்பாலகரம் கிராமத்திலுள்ள சத்துணவு மையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு புதிய நிரந்தர சத்துணவுக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

66—

அன்னியூர் மற்றும் வடமட்டம் ஊராட்சியிலுள்ள சத்துணவு மையங்களுக்கு நிரந்தர கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***25147***—*திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு *சமூக* நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அன்னியூர் மற்றும் வடமட்டம் ஊராட்சியிலுள்ள சத்துணவு மையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

67—

புதுக்கோட்டை தொகுதி, சங்கம் விடுதிக்கு சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் ***25197***—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு *சமூக* நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, சங்கம் விடுதிக்கு புதியதாகச் சத்துணவுக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): குழந்தைகள் எண்ணிக்கைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

68—

மல்லிநத்தம் சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் **25201**—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுப்பட்டி ஊராட்சி, மல்லிநத்தம் கிராமத்திற்கு சத்துணவு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை வரப்பெறின் அரசு பரிசீலிக்கும்.

69—

பரவாக்கரை ஊராட்சி, சத்துணவு மையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **25947**—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம், பரவாக்கரை ஊராட்சி சத்துணவு மையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் இருந்து செயற்குறிப்பு வரப்பெற்றால், அரசால் பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

70—

சந்திரசேகர் பூங்காவிலுள்ள குழந்தைகள் மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***26637***—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி பேரூராட்சி 7-வது வார்டு சந்திரசேகர் பூங்காவிலுள்ள குழந்தைகள் மையத்திற்கு புதிதாகக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

71—

மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள சத்துணவு கூடங்களைப் பழுது பார்த்தல்.

வினா எண் ***26801***—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள சத்துணவுக் கூடங்களை நடப்பாண்டில் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

அரசின் நிதிநிலைக்கேற்ப பழுது பார்க்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

72—

கும்பகோணம் ஒன்றியத்தில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் ***26948***—*திரு. இராம. இராமநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

(அ) கும்பகோணம் ஒன்றியம், பட்டீஸ்வரம் திருமேற்றழிகை ஆதிதிராவிடர் தெரு, கோபிநாத பெருமாள் கோவில் ஆதிதிராவிடர் தெரு ஆகிய இடங்களில் பால்வாடி அமைக்கும் திட்டம் அரசின் பாரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தேவையான குழந்தைகள் இருப்பின் அங்கு பால்வாடி அமைக்க அரசு பரிசீலனை செய்யும்.

73—

ஊஞ்சலூர் பேரூராட்சி அலுவலகம் அருகிலுள்ள சத்துணவுக் கூடத்திற்கு சமையல் கூடம் கட்டுதல்.

வினா எண் *27306*—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊஞ்சலூர் பேரூராட்சி அலுவலகம் அருகிலுள்ள சத்துணவுக் கூடத்திற்குச் சமையல் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு வரப்பெறின் அரசு பரிசீலிக்கும்.

74—

புவனகிரி ஒன்றியத்தில் சத்துணவுக் கூடம் சீர்செய்தல்.

வினா எண் *27922*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம், மருதூர் காலனி கிராமத்தில் சத்துணவுக் கூடம் சீர்செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தக்க செயற்குறிப்பு வரப்பெறின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

1994 நவம்பர் 3]

75—

வல்லத்தில் சத்துணவுக் கூடம் கட்டித்தர நடவடிக்கை.

வினா எண் ***27924***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, வல்லத்தில் ஒரு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து தக்க கருத்துரு வரப்பெற்றால், அது அரசால் பரிசீலனை செய்யப்படும்.

76—

ஈச்சன் விடுதியில் சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண் ***27925***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஈச்சன் விடுதியில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக கருத்துரு வரப்பெற்றால் அரசால் அது பரிசீலனை செய்யப்படும்.

77—

வெங்கடாசலபுரம் கிராமத்தில் குழந்தைகள் சத்துணவு மையம் ஏற்படுத்துதல்.

வினா எண் ***27930***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், மேல நீலதநல்லூர் ஒன்றியம், வெங்கடாசலபுரம் கிராமத்தில் குழந்தைகள் சத்துணவு மையம் துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

தேவையான குழந்தைகள் இருந்தால் அங்கு மையம் தொடங்க அரசால் பரிசீலிக்கப்படும்.

78—

சேத்தியா தோப்பு பேரூராட்சியில் சத்துணவுக் கூடங்கள் அமைத்தல்.

வினா எண் **27931**— *திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேத்தியா தோப்பு பேரூராட்சி, சென்னிநத்தம், புவனகிரி பேரூராட்சி, அழிச்சிக்குடி ஆதிவராக நத்தம், சுத்துக்குழி, கீழ் புவனகிரி கிராமங்களில் சத்துணவுக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

79—

குறிஞ்சிக் கொல்லையில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை சீர் செய்தல்.

வினா எண் **27932**— *திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம், குறிஞ்சிக் கொல்லையில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையைப் பெற்று அரசு பரிசீலிக்கும்.

1994 நவம்பர் 3]

80—

கவரைப்பட்டு ஆதிதிராவிடர் காலனிக்கு சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண் *27933*— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரங்கிப்பேட்டை ஒன்றியம், கவரைப்பட்டு ஆதிதிராவிடர்கள் வாழும் காலனிக்கு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக தக்க கருத்துரு வரப்பெற்றால், அவை அரசால் பரிசீலனை செய்யப்படும்.

81—

வளையமாதேவியில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் *27934*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஊராட்சி ஒன்றியம், வளையமாதேவி கிராமத்திற்கு சத்துணவுக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக தக்க கருத்துரு வரப்பெற்றால், அவை அரசால் பரிசீலிக்கப்படும்.

82—

மிராளூரில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் *27937*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஒன்றியம், மிராளூர் ஆதிதிராவிடர் பகுதியில் சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

83—

கும்மங்குளத்தில் சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***27938*—*திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கும்மங்குளம் கிராமத்தில் சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: பரிசீலிக்கப்படும்.

84—

வடுகபாளையத்தில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் ***27939*—*திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் வடுகபாளையத்தில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

85—

செருவாவிடுதி தெற்கில் சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண் ***27940*—*திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, செருவாவிடுதி தெற்கில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: பரிசீலிக்கப்படும்.

86—

கத்தாழை காலனிக்கு சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் ***27942***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய கத்தாழை காலனிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

87—

கி. முட்லூர் ஆதிதிராவிடர் காலனிக்கு சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் ***27943***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஊராட்சி ஒன்றியம், கி. முட்லூர் ஆதிதிராவிடர் காலனிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக கருத்துரு வந்தால் அரசால் அது பரிசீலிக்கப்படும்.

88—

தமிழரசு அச்சிடப்படுவதின் விவரம்.

வினா எண் ***5369***—*திரு. எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

(அ) செய்தி மக்கள் தொடர்புத் துறையில் ஆங்கிலம் மற்றும் தமிழில் மாதமிருமுறை வெளியிடப்படும் "தமிழரசு" பிரதிகள் எவ்வளவு அச்சிடப்படுகிறது?

(ஆ) இவை தனியார் கடைகளில் விற்பனைக்காக விநியோகிக்கப்படுகிறதா? அவற்றின் விவரம் என்ன?

(இ) இலவசப் பிரதிகளாக (Complimentary copies) எவ்வளவு பிரதிகள் அனுப்பப்படுகின்றன?

(ஈ) இதற்கான நெறிமுறைகள் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) தமிழரசு, தமிழ் இதழ் (மாதமிருமுறை) தற்பொழுது *30,500* பிரதிகளும், ஆங்கில இதழ் (மாதம் ஒரு முறை) *4,000* பிரதிகளும் அச்சிடப்படுகின்றன.

(ஆ) ஆம். தமிழரசு பிரதிகள் தனியார் கடைகளில் விற்பனைக்காக விநியோகிக்கப்படுகிறது. தமிழரசுக்கு முகவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களிடம் உரிய முன்வைப்புத் தொகை ஒரு பிரதிக்கு ரூ. *3* வீதம் பெற்றுக் கொண்டு இதழ்கள் தனியார் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. தமிழரசு இதழுக்கு தமிழ்நாடு முழுவதும் *15* முகவர்கள் இருக்கிறார்கள். முகவர்களுக்கு *25* சதவீத கழிவுத் தொகை (கமிஷன்) வழங்கப்படுகிறது. முகவர்களுக்கு அனுப்பப்படும் இதழ்களில் விற்பனையாகாத பிரதிகளை திரும்ப எடுக்கும் முறை பின்பற்றப்படுவதில்லை.

(இ) தமிழரசு தமிழ் இதழ் *800* பிரதிகள் அஞ்சல் மூலமும், மேலும் *400* பிரதிகள் நேரிடையாக மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், அரசு செயலர்களுக்கும், தலைமைச் செயலக நூலகத்திற்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது. தமிழரசு ஆங்கில இதழ் *1,000* பிரதிகள் அஞ்சல் மூலமும், மேலும் *500* பிரதிகள் மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கும், தலைமைச் செயலக நூலகத்திற்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

(ஈ) அரசு ஆணை (நிலை) எண் *39*, பொது (செய்தி மக்கள் தொடர்பு, தமிழரசு) துறை, நாள் *6-1-1978*-ல் குறிப்பிட்டுள்ளபடி, செய்தி மக்கள்

1994 நவம்பர் 3]

தொடர்புத்துறை இயக்குநருக்கு உட்பட்ட அதிகாரத்தின்படியோ அல்லது இயக்குநரால் நியமிக்கப்பட்ட துணை இயக்குநர் (வெளியீடு) மூலமாகவோ கீழ்க்கண்ட முக்கிய பிரமுகர்களுக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு இலவசமாக வழங்கலாமென ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி செயல்படுத்தப்படுகிறது.

(1) அயல்நாடு மற்றும் அயல் மாநிலங்களிலிருந்து வரும் அமைச்சர்கள், அரசு அலுவலர்கள் அல்லது முக்கிய பிரமுகர்கள் தமிழகத்திற்கு வருகை தரும்போது.

(2) அயல் நாட்டிலிருந்து வரும் முக்கியமானவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அயல்நாட்டுக் கலைஞர்கள்.

(3) அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்கள்.

(4) விளையாட்டுக் குழுவினர் (அகில இந்திய கிரிக்கெட் குழுவினர் மற்றும் இது போன்ற மற்ற விளையாட்டுக் குழுவினர்கள்).

(5) மற்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள்.

(6) தமிழரசு இதழுக்கு விளம்பரம் தரும் நிறுவனங்கள் (ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 2 பிரதிகள் வீதம் இதழில் விளம்பரம் வெளிவந்ததை நிரூபிக்க).

(7) அவ்வப்போது தமிழரசு இதழுக்கு, விளம்பரம் சேகரித்துக் கொடுக்கும், விளம்பர நிறுவனங்களுக்கு நிலையான சந்தாப்பட்டியல் மூலம் அனுப்புவது. இத்துடன் விளம்பரங்களை பெறப்போகும்போது விளம்பர நிறுவனங்களுக்கும் விளம்பர முகவர்களுக்கும் வழங்குவது.

(8) தமிழரசு இதழில் வெளிவரும் கதை/ கவிதை/ கட்டுரைகளுக்குரியவர்களுக்கு வழங்குவது.

(9) மற்ற பத்திரிகைகளுக்கு மாற்றுப் பிரதியாக வழங்குவது.

(10) அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

(11) சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசுச் செயலர்களுக்கு இலவசப் பிரதிகள் விநியோகிக்கப்படுகின்றன.

[1994 நவம்பர் 3

89—

மாவட்டங்களிலுள்ள விளையாட்டு மையங்களை சீரமைக்கும் திட்டம்.

*வினா எண் **22507**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மாவட்டங்களிலுள்ள விளையாட்டு மைதானங்களை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மாவட்டங்களிலுள்ள விளையாட்டு மைதானங்களை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

90—

தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.

*வினா எண் **24126**—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம், தலைவாசல் தொகுதி அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சேலம் தலைவாசல் தொகுதி, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் கல்லூரி முதல்வரிடமிருந்து இவ்வாண்டில் பெறப்படவில்லை. கல்லூரி முதல்வரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டால், பரிசீலிக்கப்பட்டு, நிதிநிலைக்கேற்ப முடிவெடுக்கப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

91—

அரியாணிப்பட்டி ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண் ***25475***—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை ஒன்றியம், அரியாணிப்பட்டி ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர்கள் தேர்வாணைக்குழு மூலம் இடைநிலை ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்ட பின்பு தான், அரியாணிப்பட்டி ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் நியமனம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

92—

ஆதனக்கோட்டை உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***25483***—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, ஆதனக்கோட்டை உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இது குறித்து அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

93—

மலைவாழ் மக்களுக்கு தொழில் நுட்பக் கல்லூரி தனியாகத் துவங்குதல்.

வினா எண் ***26152***—*திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் நலன் கருதி தொழில்நுட்பக் கல்லூரி தனியாகத் துவங்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மலைவாழ் மக்கள் நலன் கருதி தொழில் நுட்பக் கல்லூரி தனியாகத் துவங்க திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை. மேலும், தற்போது தமிழ்நாட்டில் 132 பாலிடெக்னிக்குகள் உள்ளன. அவற்றில் உள்ள இடங்களில் 1 சதவீத இடம் மலைவாழ் மக்களுக்கு எனத் தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒரு சதவீத இடம் முழுவதுமாக பூர்த்தி செய்ய இயலவில்லை. இந்நிலையில் மலைவாழ் மக்களுக்கென தனியாக ஒரு தொழில்நுட்பக் கல்லூரி துவங்க அவசியம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

94—

தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துதல்.

வினா எண் **26937—திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளுக்கென தனியாக தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது தொடர்பாக மாநில உயர் கல்வி ஆலோசனைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. அவர்களது அறிக்கை பெறப்பட்டவுடன் அதன் மீது அரசு தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளும்.

1994 நவம்பர் 3]

95—

கொடுமுடியில் நூலகம் கட்டுதல்.

*வினா எண் **27286**ஏ—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடியில் பொது மக்கள் இலவசமாக அளிக்கும் நிலத்தில் நூலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பெரியார் மாவட்ட நூலக ஆணைக் குழுவின்கீழ் கொடுமுடி என்ற ஊரில் கிளை நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. கொடுமுடி கிளை நூலகம் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. நூலகத் துறையின் குறிக்கோளின்படி இலவசமாக காலி மனைகள் பெற்று நூலக ஆணைக்குழு நிதியில் இருந்து நூலகங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதால் கொடுமுடி நூலகத்திற்கு உள்ளாட்சி நிறுவனமோ, வருவாய்த் துறையோ, பொது மக்களோ இலவசமாக காலிமனை அளித்தால் நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து நூலகக் கட்டிடம் கட்டப்படும்.

96—

கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.

*வினா எண் **27433**—திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரிக்கு சுற்றுச் சுவர் கட்டுவது குறித்து கருத்துரு எதுவும் அக் கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்படவில்லை. கருத்துரு பெறப்பட்டால் விதிமுறைகளின்படி பரிசீலித்து அரசின் நிதி நிலைக்கேற்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

97—

கிருஷ்ணகிரி அன்னை சந்தியா அரசு மகளிர் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *27437*—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி அன்னை சந்தியா அரசு மகளிர் கல்லூரிக்குப் போதிய கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கிருஷ்ணகிரி அன்னை சந்தியா அரசினர் மகளிர் கல்லூரிக்கு மாணவியர் எண்ணிக்கைக்கேற்ப கட்டிட வசதிகள் இல்லாததால் தற்போதைய பிரதான கட்டிடத்தின்மேல் ரூ. 17.00 இலட்சம் செலவில் வகுப்பறைகள் கட்டுவதற்கு கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டது. நிதிநிலை இடம் தராத நிலையில் சென்ற நிதியாண்டில் இதனை நிறைவேற்ற இயலவில்லை. நிதிநிலை இடமளிக்குமானால் வரும் ஆண்டுகளில் இதனை அரசு பரிசீலிக்கும்.

98—

பர்கூரில் தந்தை பெரியார் பொறியியற் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *27449*—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்கூரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தந்தை பெரியார் பொறியியற் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பர்கூரில் புதிதாக அரசு பொறியியற் கல்லூரி ஒன்று 1995-96-ஆம் கல்வி ஆண்டிலிருந்து துவங்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. பர்கூரில் கல்லூரிக்கென நிலம் ஆர்ஜிதம் செய்யத் தேவையான

1994 நவம்பர் 3]

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் (AICTE) அனுமதி பெற்றவுடன் கல்லூரிக்கான கட்டிடம் மற்றும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்த மாநில அரசு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

99—

அருள்வாடி கிராம கூட்டுறவு வங்கிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 25260—திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாளவாடி ஒன்றியம், அருள்வாடி கிராமத்தில் கூட்டுறவு வங்கிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், தாளவாடி ஒன்றியம், அருள்வாடி கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டிடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

கொடுமுடி பேரூராட்சியில் நியாயவிலைக் கடைக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 26602—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி பேரூராட்சி 2-வது வார்டில் (எமகண்டனூர்) உள்ள புறம்போக்கு நிலத்தில் இயங்கி வரும் நியாயவிலைக் கடைக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கொடுமுடி பஞ்சாயத்து யூனியன் கூட்டுறவு பண்டகசாலை கொடுமுடி பேரூராட்சி 2-வது வார்டில் (எமகண்டனூர்) ஒரு நியாயவிலைக் கடையை நடத்தி வருகிறது. இந்த நியாயவிலைக் கடை தற்போது ரூ. 175 மாத

வாடகையில் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இப்பண்டகசாலையின் தற்போதைய நிதிநிலைப்படி, இந்த நியாயவிலைக் கடைக்குக் கட்டிடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

எமகண்டனூரில் புல எண் 275/1-ல் உள்ள 1-1/2 சென்ட் நத்தம் புறம்போக்கு நிலத்தை பண்டகசாலைக்குக் கையகப்படுத்தப் பெற்று, நியாய விலைக் கடைக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இலவசமாக கட்டிடம் கட்டிப் பெற தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பண்டகசாலையின் தனி அலுவலருக்கு பெரியார் மண்டல இணைப் பதிவாளர் அறிவுரை வழங்கியுள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

நான்காம் பட்டியல்.

1—

தமிழகத்திற்கு மாதந்தோறும் வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு விவரம்

*வினா எண் **26894**—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தற்போது தமிழகத்திற்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு எவ்வளவு?

(ஆ) மேலும் கூடுதலாக வழங்க வேண்டும் என்று மைய அரசிடம் கேட்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

*மாண்புமிகு திரு. **இராம வீரப்பன், உணவு அமைச்சர்:***

(அ) மத்திய அரசு மாதத்திற்கு 71,380 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் இம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்து வருகிறது.

(ஆ) மேலும் கூடுதலாக 10,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

(இ) இதுகுறித்து ஆய்வு செய்யப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2—

பரமக்குடி மருத்துவமனையில் வல்லுநர்களை நியமனம் செய்தல்

*வினா எண் **2234**—திரு. டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பரமக்குடி தாலுகா மருத்துவமனையில் டி.எல்.ஓ.டி.ஓ., டி.ஏ. ஆகிய பணிகளில் வல்லுநர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பரமக்குடி தாலுகா மருத்துவமனைக்கு டி.ஏ. தகுதிபெற்ற மருத்துவர் ஜெ. மார்ரேட் இருதயம் அவர்கள் 3-2-1994 நாள் முதல் பணிபுரிந்து வருகிறார். தற்சமயம் எம்.எஸ்டி.ஜி.ஓ., டிசிஎஸ்டி.வி., எம்டி. தகுதிபெற்ற மருத்துவர்களும் இம்மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்கள்.

டிஎல்.ஓ., டி.ஓ., தகுதிபெற்ற வல்லுநர்களை இம்மருத்துவமனையில் பணியமர்த்த அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

3—

தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்.

*வினா எண் **4168**—டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களுக்கு சுற்றுச் சுவர்கள் உள்ளன?

(ஆ) எத்தனை நிலையங்களுக்கு இல்லை?

(இ) இல்லாதவைகளுக்கு காம்பவுண்ட் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தில் மொத்தமுள்ள 1417 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 181 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் உண்டு.

(ஆ) மீதமுள்ள 1,236 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச், சுவர் இல்லை.

(இ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி வருகின்ற நிதி ஆண்டுகளில் நிதி நிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

4—

போளூர் களம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவ மனையாக்குதல்.

வினா எண் *6190*—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் களம்பூர் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அரசு பொது மருத்துவமனையாக ஆக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

5—

போளூர் வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் *21317*—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், வாழியூர், கேளூர், திருச்சூர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்போது இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட திட்டம் ஏதுமில்லை. எனினும் இனி வருங்காலத்தில் இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிலம் கையகப்படுத்தியவுடன் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் நிதி நிலைகளுக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

6—

குடவாசல் ஒன்றியம் அரசினர் சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***22900*****—*திரு. எஸ். ஆசைமணி:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் மற்றும் குடவாசல் ஒன்றியம், சுனரக்காவூர் கிராம அரசினர் சுகாதார நிலையத்திற்கு இலவசமாக வழங்கப்பட்ட இடத்தில் 1993-94-ல் புதிய கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இனி வருங்காலத்தில் நிதி நிலைக்கேற்றவாறு ஆவன செய்யப்படும்.

7—

பேரளம் அரசு மருத்துவமனையில் ஆண் பணியாளரை இரவுக் காவலராக நியமித்தல்.

வினா எண் ***24169*****—*டாக்டர் க. கோபால்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரளம் அரசு மருத்துவமனையில் இரவுக் காவலராக நியமிக்கப்பட்டுள்ள ஒரு பெண் ஊழியருக்குப் பதிலாக ஒரு ஆண் பணியாளர் ஒருவர் நியமிக்க ஆவன செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பேரளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவுக் காவலர் பதவி ஏற்படுத்தப்படாத நிலையில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் பாதுகாப்பை முன்னிட்டு, ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த அடிப்படைப் பணியாளர்கள் சுழல் முறையில் பணியமர்த்தப்படுவதாக திருவாரூர் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அலுவலகத்திலிருந்து அறியப்பட்டது.

1994 நவம்பர் 3]

ஆனால் இனி மேல் பெண் பணியாளரை இரவுப் பணிக்கு அமர்த்தக்கூடாது என்று துணை இயக்குநர் (சு.ப.) திருவாரூர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

8—

நாகரசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***24818*—திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகரசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென தனிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தர்மபுரி மாவட்டம் நாகசரம்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட போதுமான நிலம் இன்னும் கையகப்படுத்தப்படவில்லை. போதுமான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் கட்டிடம் கட்ட அரசு நிதிநிலைமைக்கேற்ப ஆவன செய்யும்.

9—

பனகமுட்லு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***24860*—திரு. கா. பூ. முனுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டணம் தொகுதி பனகமுட்லு கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பனகமுட்லு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்ட நிலம் இன்னும் கையகப்படுத்தப்படாத நிலையில் உள்ளது. போதுமான நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் கட்டிடங்கள் கட்ட நிதி நிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும்.

[1994 நவம்பர் 3

10—

மாவட்டத் தலைநகரங்களில் நெசவாளர்களுக்குக் கூட்டுறவு நூல் சங்கம் அமைத்தல்.

வினா எண் ***23540—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:*** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகரங்களில் நெசவாளர்களுக்குக் கூட்டுறவு நூல் சங்கம் வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்:

இல்லை.

11—

பேருந்தில் மீன்களை எடுத்துச்செல்ல தனிப் பேருந்து விடுதல்.

வினா எண் ***13767—திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, அதிராம்பட்டினம் முதல் கட்டுமாவடிவரை மீன்களை பேருந்தில் கொண்டு போக 1992-93-ல் தனிப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கடற்கரையோர பகுதிகளில் இயக்கப்படும் குறிப்பிட்ட பேருந்துகளில் பின்புறம் மீன்கூடைகளை ஏற்றிட தனிப்பெட்டி அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாத இடங்களில், பேருந்துகளில் மீன்கூடைகளை கீழே சரியான தட்டுகளில் வைத்து மேற்கூரையில் (Luggage Carrier) ஏற்றிச் செல்ல ஓட்டுநர் நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மீன்களை கொண்டுபோக தனிப்பேருந்து இயக்கத் தேவையில்லை.

1994 நவம்பர் 3]

12—

பிள்ளையார் அக்ரகாரம் கிராமத்தில் பேருந்துகள் நின்று செல்ல நடவடிக்கை.

*வினா எண் **24807**—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கிருட்டிணகிரி தொகுதி, கெலமங்கலம் ஊராட்சி, பிள்ளையார் அக்ரகாரம் கிராமத்தில் ராயக்கோட்டை-ஓசூர், ஓசூர்-ராயக்கோட்டை செல்லும் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெங்களூர் தடத்தில் இயங்கும் பேருந்துகள் நீங்கலாக மற்ற அனைத்துப் பேருந்துகளும் பிள்ளையார் அக்ரகாரத்தில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

13—

பரமக்குடி மருதுபாண்டியர் போக்குவரத்துக்கழக கிளை பணிமனையில் பணியில் (On Duty) இருப்பவர்கள் விவரம்.

*வினா எண் **17346**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக கிளை பணிமனையில் பணியில் (on duty attendance) இருப்பதாக வருகைப் பதிவேட்டில் குறிக்கப் பெறுபவர்கள் எத்தனை பேர்?

(ஆ) இதனால் வேலைகள் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஒருவர்.

(ஆ) அலுவலகப் பணி எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்வி எழாது.

14—

அந்தியூர் தொகுதியில் பழுதடைந்த தார்ச்சாலையை சீர்படுத்துதல்

*வினா எண் **14723**—திரு. வே. பெரியசாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் கொல்லபாளையம் பிரிவு ஆரம்பிக்கும் இடம் முதல் ஆதிரெட்டியூர் வழியாக வெள்ளி திருப்பூர் வரை உள்ள தார்ச்சாலை பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சாலையினை சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15—

பரமக்குடி பொதுப்பணித் துறையில் கட்டிடங்களை பராமரிக்க செலவுகள் விவரம்

*வினா எண் **15746**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடியில் பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் அலுவலகத்தின் மூலம் 91-92-ல் பழைய கட்டிடங்களைப் பராமரிக்க ஆகிய செலவு எவ்வளவு?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பரமக்குடியில் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அலுவலகத்தின் மூலம் 1991-92-ல் பழைய கட்டிடங்களைப் பராமரிக்க ஆகிய செலவு ரூ. 29.79 இலட்சம்.

16—

ராஜன் வாய்க்காலில் 'ஷட்டர்ஸ்' அமைக்கும் திட்டம்

வினா எண் ***15867***—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதியில் தில்லை நாயகபுரம் கிராமத்துக்கும் வீரசோழபுரம் கிராமத்துக்கும் இடையில் ராஜன் வாய்க்காலில் 'ஷட்டர்ஸ்' அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

17—

குழிச்சார் பாசன வாய்க்காலை தூர் எடுத்தல்

வினா எண் ***17267***—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, குழிச்சார் பாசன வாய்க்காலைத் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை தொகுதி, குழிச்சார் பாசன வாய்க்கால் வரும் ஆண்டு கோடையில் தூர் வார திட்டமிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

18—

கூழையாறு தெற்கு தெருவிற்கு மின்வசதி செய்தல்

வினா எண் **19111**—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் கூழையாறு தெற்கு தெருவிற்கு மின்வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கூழையாறு தெற்கு தெருவில் 3 தெரு மின் விளக்குகள் பொருத்தி ஏற்கனவே மின் வசதியளிக்கப்பட்டு விட்டது. மேலும் கூடுதலாக தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பம் எதுவும் வாரிய அலுவலகத்தின் நிலுவையில் இல்லை.

19—

மோளப்பாளையத்தில் வேகத்தடை ஏற்படுத்துதல்

வினா எண் **19268**—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் கொல்லங்கோயில் கிராமம் கந்தசாமிபாளையம் பொதுமக்களின் நலன் கருதி மோளப்பாளையம் ஊரில் வேகத்தடை வைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

1994 நவம்பர் 3]

20—

மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகை விவரம்

வினா எண் ***20130*—ஆ. சுப்புரத்தினம்** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் 28-2-1993 தேதி வரை முதலீடுகளாக பொதுமக்கள் அளித்த வைப்புத் தொகை எவ்வளவு ?

(ஆ) அந்நிதி என்னென்ன செயல்களுக்கு பயன்படுத்தப்படுகிறது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் 28-2-1993 வரை பொதுமக்கள் முதலீடுகளாக செலுத்திய வைப்புத் தொகை ரூ. 333.27 இலட்சம்.

(ஆ) இந்நிதியை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தவணைக் கொள்முதல் (Hire Purchase Finance) கடனாக வழங்கப்பட்டுள்ளது.

21—

அரசு தோட்டக்கலைப் பண்ணையின் வருவாய் விபரங்கள்

வினா எண் ***20868*—டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசிற்குச் சொந்தமான தோட்டம் மூலம் பேச்சிப் பாறைப் பகுதியில் விளையும் மிளகு, அன்னாசி மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

(ஆ) கிராம்பு, மிளகுச் செடிகள் 1991-92ல் எவ்வளவு விற்கப்பட்டுள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) பேச்சிப்பாறை அரசு தோட்டக்கலைப் பண்ணையில் கீழ்க்கண்டவாறு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது :

1987-88..	..	ரூ. 1,104 இலட்சம்.
1988-89..	..	ரூ. 1,587 இலட்சம்.
1989-90..	..	ரூ. 1.20 இலட்சம்.
1990-91..	..	ரூ. 1.05 இலட்சம்.
1991-92..	..	ரூ. 1.04 இலட்சம்.
1992-93..	..	ரூ. 2.71 இலட்சம்.
1993-94..	..	ரூ. 6.24 இலட்சம்.

(ஆ) 1991-92-ம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு கிராம்பு, மிளகுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்.)

குட்ட நாடன் மிளகு வேர்ச் செடிகள்	..	1.76
பள்ளியூர் மிளகு வேர்ச் செடிகள்	..	0.57
மொத்தம்	..	2.33
கிராம்புச் செடிகள்	..	0.14
1993-94—		
குட்டநாடன் மிளகு வேர்ச் செடிகள்	..	0.09
கருப்பு மிளகு வேர்ச் செடிகள்	..	0.19
மொத்தம்	..	0.28
கிராம்புச் செடிகள்	..	0.29

இந்தப் பண்ணை இலாபத்தில் இயங்கி வருகிறது.

22—

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கரும்புகளை தமிழக அரசே எடுத்துக் கொள்ளுதல்

வினா எண் ***24348***—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் கரும்புகளை தமிழக அரசு எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கரும்புகளை தமிழக அரசு எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. 1966 ஆம் ஆண்டின் கரும்பு கட்டுப்பாடு சட்டத்தின்படி, கரும்பு ஆலைக்கு வழங்கப்பட்ட 14 நாட்களுக்குள் பணம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கத் தவறினால் சர்க்கரைத்துறை ஆணையர் சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுத்து வருவதால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கரும்புக்கு விலை உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. எனவே கரும்புகளை அரசே எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு உடன் பணம் வழங்கத் தேவை எழவில்லை.

23—

சொட்டுநீர் பாசனம் வசதி செய்தல்

வினா எண் ***25677***—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பொறியியல் துறை மூலம் 1992-93 ஆம் ஆண்டு எத்தனை ஹெக்டேருக்கு சொட்டு நீர் பாசனம் வசதி செய்து கொடுக்கப்பட்டது ?

(ஆ) அதன் மொத்த செலவு எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) 1992-93-ம் ஆண்டில் மொத்தம் 3609.347 ஹெக்டேருக்கு சொட்டு நீர்ப்பாசன வசதி அமைத்துக் கொடுக்கப்பட்டன.

(ஆ) அரசு உதவி இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 388.382 இலட்சம் வழங்கப்பட்டது.

[1994 நவம்பர் 3

24—

உப்பிலியாபுரம் தொகுதியில் சமுதாயக்களம் அமைத்தல்.

வினா எண் ***25962***—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலை கோம்பை மஜாரா ஏரிக்காட்டில் சமுதாயக் களம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துக் கொடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) 1994-95 ஆம் ஆண்டு திருச்சி மாவட்டத்தில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 4 (நான்கு) சமுதாயக்களங்களும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 10 சமுதாயக்களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. விவசாயிகளின் தேவையையும், அவசியத்தையும், உள்ளூர் நிலவரத்தையும் கவனத்தில் கொண்டு உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலை கொம்பை மஜாரா ஏரிக்காட்டில் சமுதாயக்களம் அமைப்பதைப்பற்றி முடிவு எடுத்து சமுதாயக்களம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

பேராவூரணி தொகுதியில் நெற்களம் அமைத்தல்.

வினா எண் ***27333***—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப் புலிக்காடு, மாணியக்காடு, தொக்காளிக்காடு, மகிழங்கோட்டை, ராஜாமடம், கீழத்தோட்டம் கிராமம், ஏரிப்புறக்கரை, பழவேற்காடு ஆகிய இடங்களில் நடப்பாண்டில் சமுதாய நெற்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் *10* சமுதாயக்களங்களும், பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் *6* (ஆறு) சமுதாயக்களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. விவசாயிகளின் தேவையையும் அவசியத்தையும் உள்ளூர் நிலவரத்தையும் கவனத்தில் கொண்டு பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுபுளிக்காடு, மானியக்காடு, தொக்காணிக்காடு, ராஜாமடம், கீழத்தோட்டம் கிராமம் ஏரிப்புறக்கரை, பழவேற்காடு ஆகிய இடங்களில் சமுதாயக்களம் அமைப்பதைப் பற்றி முடிவு எடுத்து பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

பேராவூரணி ஒன்றியத்தில் சமுதாய நெற்களம் அமைத்தல்,

*வினா எண் **27334**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், நரியங்காடு, வலசக்காடு, தென்னங்குடி வடக்கு, தென்னங்குடி சீவன் குறிச்சி, பழைய நகரம், மாவடு குறிச்சி பாளத்தலி ஊராட்சி எழுத்தணி வயல், சானாக்கரை, ஆண்டா கோட்டை, படப்பவார் வயல், பட்டத்தூரணி பனஞ்சேரி, ஆவணம், அம்மையாண்டிகுயில், செங்கமங்கலம், மணவயல், குறிச்சி ஊராட்சி மேட்டு வயல் ஆகிய இடங்களில் நடப்பாண்டில் சமுதாய நெற்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் *10* தானியக் களங்களும் *1994-95* ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் *6* தானிய களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. விவசாயிகளின் தேவையையும், உள்ளூர் நிலவரத்தையும் கருத்தில் கொண்டு பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம், நரியங்காடு, வலசக்காடு, தென்னங்குடி வடக்கு,

தென்னங்குடி சீவன்குறிச்சி, பழைய நகரம், மாவடுகுறிச்சி ஆண்டாபாளத்தலி ஊராட்சி எழுத்தணிவயல், சானாக்கரை, கொட்டை, படப்பனார் வயல், பட்டத்தூரணி பனஞ்சேரி ஆவணம், அம்மையாண்டிகுயில், செங்கமங்கலம், மணவயல், குறிச்சி ஊராட்சி மேட்டு வயல் ஆகிய இடங்களில் நடப்பாண்டில் சமுதாய நெற்களம் அமைப்பதைப் பற்றி முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

27—

பேராவூரணியில் சில கிராமங்களில் சமுதாய நெற்களம் அமைத்தல்.

*வினா எண் **27361**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், துறவிக்காடு குறுக்கவிடுதி, பழய பேராவூரணி, பைங்கால், சித்தாகிக்காடு, பின்னவாசல், ஆதனூர் கருப்பமனை, ஆத்தாளூர் நாட்டாணிக்கோட்டை தெற்கு, கரம்பை, ஏனாதி ஈச்சன் விடுதி, செருவா விடுதி தெற்கு, செருவா விடுதி வடக்கு, மடத்திக்காடு ஆகிய இடங்களில் நடப்பாண்டில் சமுதாய நெற்குளம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 தானிய களங்களும், பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் 6 தானிய களங்களும், அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. கிராம விவசாயிகளின் தேவையையும் அவசியத்தையும் கருத்தில் கொண்டு உள்ளூர் நிலவரத்தை அறிந்த பின், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், துறவிக்காடு துலுக்கவிடுதி, பழைய பேராவூரணி, பைங்கால், சித்தாகிக்காடு, பின்னவாசல், ஆதனூர் கருப்பமனை, ஆத்தாளூர், நாட்டாணிக்கோட்டை தெற்கு, கரம்பை, ஏனாதி ஈச்சன் விடுதி, செருவா விடுதி தெற்கு, செருவா விடுதி வடக்கு, மடத்திக்காடு ஆகிய இடங்களில் நடப்பாண்டில் சமுதாய நெற்களம் அமைப்பதைப்பற்றி முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

1994 நவம்பர் 3]

28—

பேராவூரணியில் சமுதாயக் களம் அமைத்தல்.

வினா எண் ***27377***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் உப்பு விடுதி பொக்கன்விடுதி தெற்கு, பொக்கன்விடுதி, நவகொல்லை பானத்தலி ஊராட்சி எழுத்தணிவயல், சானாக்கரைகாடு, மதன்பட்டவூர், ஒட்டங்காடு, தெற்குக்காடு, ஆணைக்காடு, கல்லூரிணிக்காடு, களத்தூர், சித்துக்காடு, காலகம், திருப்பூரணிக்காடு, கொன்றைக்காடு, நாட்டாணிக்கோட்டை, பொன்னாங்கண்கலிக்காடு ஆகிய இடங்களில் நெல் அறுவடை காலங்களில் மழை பெய்வதால் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க 1993-94-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1994-95-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 சமுதாயக் களங்களும், 1994-95 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 6 சமுதாயக் களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. கிராம விவசாயிகளின் தேவையையும், அவசியத்தையும், உள்ளூர் நிலவரத்தையும் கவனத்தில் கொண்டு பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், உப்புவிடுதி, பொக்கன்விடுதி தெற்கு, பொக்கன்விடுதி, நவகொல்லைக்காடு, மதன்பட்டவூர், ஒட்டங்காடு, தெற்குகாடு, ஆணைக்காடு, கல்லூரணிக்காடு, களத்தூர், சித்துக்காடு, காலகம், திருப்பூரணிக்காடு, கொன்றைக்காடு, நாட்டாணிக்கோட்டை, பொன்னாங்கண்கலிக்காடு ஆகிய இடங்களில் சமுதாயக் களம் அமைப்பதைப் பற்றி முடிவு எடுத்து பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

29—

வலச்சேரிக்காடு மற்றும் திருச்சிற்றம்பலத்தில் சமுதாயக் களம் அமைத்தல்.

வினா எண் ***28939***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஒன்றியம், வலச்சேரிக்காடு மற்றும் திருச்சிற்றம்பலத்தில் நெல் அறுவடை காலங்களில் பயன்படுத்த சமுதாய களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் *10* சமுதாயக் களங்களும், *1994-95* ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் *6* சமுதாயக் களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. விவசாயிகளின் தேவையையும், அவசியத்தையும் மற்றும் உள்ளூர் நிலவரத்தையும், கவனத்தில் கொண்டு பேராவூரணி ஒன்றியம், வலச்சேரிக்காடு மற்றும் திருச்சிற்றம்பலத்தில் சமுதாயக்களம் அமைப்பதைப் பற்றி முடிவு எடுத்து பின் நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

கலிங்கப்பட்டியில் நெற்களம் அமைத்தல்

வினா எண் ***28940*—*திரு. ஆர். சிங்காரம்* :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஒன்றியம் கலிங்கப்பட்டியில் நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

31—

நடராஜபுரத்தில் நெற்களம் அமைத்தல்.

வினா எண் ***28941*—*திரு. ஆர். சிங்காரம்* :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை ஒன்றியம், நடராஜபுரம் கிராமத்திற்கு நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

32—

பள்ளிக்கொண்டாவில் சமுதாயக்களம் அமைத்தல்

வினா எண் ***28942***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டாவில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 சமுதாயக் களங்களும், 1994-95 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 6 சமுதாயக் களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. கிராம விவசாயிகளின் தேவையையும் அவசியத்தையும், உள்ளூர் நிலவரத்தையும் அறிந்த பின்னர் பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக் கொண்டாவில் சமுதாயக்களம் அமைப்பதைப்பற்றி முடிவு எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

முடச்சிக்காட்டில் சமுதாயக்களம் அமைத்தல்

வினா எண் ***28943***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக் காட்டில் நெல் அறுவடை காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 தானிய களங்களும், 1994-95 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 6 தானிய களங்களும் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. விவசாயிகளின் தேவையையும் அவசியத்தையும் உள்ளூர் நிலவரத்தையும் கருத்தில் கொண்டு பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் முடச்சிக்காட்டில் சமுதாயக்களம் அமைப்பதைப்பற்றி முடிவு எடுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

சங்ககிரி தொகுதியில் துணை வேளாண்மைக் கிடங்கு அமைத்தல்

வினா எண் **28944**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி தேவர் வேளாண்மைத் துறை அலுவலகத்திற்கு ஒரு வேளாண்மைத் துணைக் கிடங்கு அமைக்கவும் அலுவலகத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

35—

டி.என். புதுக்குடியில் நெற்களம் அமைத்தல்

வினா எண் **28945**—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம் டி.என். புதுக்குடி விவசாயிகளுக்கு நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

36—

செங்கோட்டை பார்வதிபுரத்தில் நெற்களம் அமைத்தல்

வினா எண் ***28946***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் பார்வதிபுரம் கிராம விவசாயிகளுக்காக நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

37—

இலத்தூரில் நெற்களம் அமைத்தல்.

வினா எண் ***28947***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் இலத்தூர் கிராம விவசாயிகளுக்காக, நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

38—

லாலாகுடியிருப்பில் நெற்களம் அமைத்தல்

*வினா எண் **28948**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் லாலாகுடியிருப்பு கிராம விவசாயிகளுக்காக நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

39—

செங்கோட்டையில் நெற்களம் அமைத்தல்

*வினா எண் **28949**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் செங்கோட்டை விவசாயிகளுக்காக நெற்களம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

40—

அச்சன்புதூரில் நெற்களம் அமைத்தல்

*வினா எண் **28950**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் அச்சன்புதூர் கிராம விவசாயிகளுக்காக நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளாதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

41—

ஆய்க்குடியில் நெற்களம் அமைத்தல்

வினா எண் **28951**—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை ஒன்றியம், ஆய்க்குடி கிராம விவசாயிகளுக்காக நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

42—

செங்கோட்டை ஒன்றியம் மூன்று வாய்க்காலில் நெற்களம் அமைத்தல்

வினா எண் **28952**—**திரு ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், மூன்று வாய்க்கால் கிராம விவசாயிகளுக்கு நெற்களம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: இல்லை.

43—

கேசவபுரத்தில் நெற்களம் அமைத்தல்

*வினா எண் **28953**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், கேசவபுரம் விவசாயிகளுக்காக நெற்களம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: இல்லை.

44—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி வேளாண்மை மையத்தின் மூலம் கொடுத்த மானியத் தொகை விவரம்

*வினா எண் **30198**—திரு எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி வேளாண்மை மையத்தின் மூலம் 1993-ம் ஆண்டு கொடுத்த மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) வரும் நிதியாண்டில் இந்த மையத்தின் மூலம் எவ்வளவு மானியம் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் 1993-94 ஆம் ஆண்டு மானியமாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ.6,20,500 ஆகும்.

1994 நவம்பர் 3]

(ஆ) 1994-95 நிதி ஆண்டில் இந்த மையத்தின் மூலம் மானியமாக வழக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.8,50,000 ஆகும்.

45—

கால்நடை கிளை நிலையங்களை மத்தகிரி மற்றும் சானமாவு கிராமங்களுக்கு மாற்றுதல்

*வினா எண் **19557**—திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முதுகானப்பள்ளி மற்றும் உத்தனப்பள்ளி கிராமங்களில் கால்நடை மருந்தக இடங்களை தொடங்கியதால் அங்கு ஏற்கனவே இருந்த கால்நடை கிளை நிலையங்களை மத்தகிரி மற்றும் சானமாவு கிராமங்களில் மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) எப்பொழுது அங்கு மருத்துவ மையங்கள் பணி செய்ய தொடங்கும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): முதுகானப்பள்ளி மற்றும் உத்தனபள்ளி கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் துவக்க ஆணை பிறப்பிக்கப்படவில்லை. மேற்படி இடங்களில் கால்நடை மருந்தகங்கள் துவங்கும்பொழுது அங்கு இயங்கி வந்த கால்நடை கிளை நிலையங்களை மத்தகிரி மற்றும் சானமாவு கிராமங்களுக்கு மாற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

தமிழ்நாடு கோழி வளர்ப்பு கழகத்தின்மூலம் வான்கோழிகறி விற்பனை செய்தல்

Question No. 22806—Dr. BEATRIX D'SOUZA: Will the Hon'ble Minister for Dairy Development be pleased to state—

Whether there is a proposal with the Government to sell Duck, Turkey at Tamil Nadu Poultry Development Corporation Ltd. outlets.

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

இல்லை, கிருஸ்துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டு தினங்களில் வான்கோழி கறி அடையாரில் உள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு கழக விற்பனை நிலையத்தில் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.

47—

மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல்

வினா எண் ***22976***—திரு ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, செலந்தம்பள்ளி, கதிரம்பட்டி, அகரம், குரிசிலாப்பட்டு, ஒமக்குப்பம் முதலிய கிராமங்களுக்கு மகளிர்க்கான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

தற்சமயம் திருப்பத்தூர் தொகுதியில் குரிசிலாப்பட்டு, ஒமக்குப்பம், பெரியகரம் ஆகிய 3 கிராமங்களில் பாலுற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் (பொது) மட்டுமே இயங்கிக் கொண்டு வருகின்றன. மற்ற இரண்டு கிராமங்களான கிதிரம்பட்டி, செலந்தம்பள்ளி ஆகிய கிராமங்களில் பாலுற்பத்தி, நிலையைப் பொறுத்து சாத்தியக்கூறுகள் இருப்பின் மகளிர் சங்கங்கள் அமைக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

48—

திருப்பத்தூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் ***23066***—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போது வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர், வாணியம்பாடி, குடியாத்தம் ஆகிய தாலுக்காக்களுக்கு மைய பகுதியான: ஆம்பூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று 30,000 லிட்டர் கொள்ளளவோடு இயங்கி வருகின்றது. இக்குளிரூட்டும் நிலையத்தின் தற்போதைய கொள்ளளவான 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி குளிரூட்டும் நிலையம் திருப்பத்தூர், வாணியம்பாடி, குடியாத்தம் தாலுக்காக்களுக்கு மைய பகுதியில் அமைந்துள்ளதால் திருப்பத்தூர் வட்டத்தில் பால் குளிரூட்டும் நிலையம் தற்போது அமைக்க வாய்ப்பில்லை.

49—

தர்மபுரி மாவட்டத்தில் இயங்கும் கூட்டுறவு பால் சங்கங்களின் விவரம்.

வினா எண் **27462**—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை கூட்டுறவு பால் சங்கங்கள் இயங்குகின்றன?

(ஆ) தினசரி எத்தனை லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 542 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் இயங்குகின்றன.

(ஆ) தினசரி 83,500 லிட்டர்கள் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

50—

உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கோழிப்பண்ணை அமைத்தல்.

வினா எண் **34060**—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1993-ஆம் ஆண்டு கோழிப்பண்ணை அமைக்க எத்தனை பேருக்கு கடன் வழங்கப்பட்டு உள்ளது?

(ஆ) அதில் ஆதிதிராவிடர் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) டாப்கோ மூலம் மேற்குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியத்தில் 1993-ம் ஆண்டு கோழிப் பண்ணை அமைக்க கடன் வழங்கப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

51—

வணிகவரி மற்றும் அறநிலையத்துறை.

வினா எண் ***20749—திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நட்சத்திர அந்தஸ்து இல்லாத சாதாரண ஓட்டல்களில் சாப்பிடுவோரிடம் விற்பனை வரி வசூலிப்பதில் இருந்து விலக்கு அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர்:

தற்போது வருட விற்பனைத் தொகை ரூ.3 லட்சம் வரை உள்ள ஓட்டல்களுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நட்சத்திர அந்தஸ்து இல்லாத சாதாரண ஓட்டல்களில் விற்பனை செய்யப்படும் பண்டங்களுக்கு விற்பனை வரி வசூலிப்பதிலிருந்து விலக்கு அளிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

52—

நன்னிலம் தொகுதியிலுள்ள சத்துணவுக் கூடங்களின் விவரம்.

வினா எண் ***17314—டாக்டர் க. கோபால்:*** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்கள் எத்தனை?

(ஆ) புதிதாக எங்கெங்கு சத்துணவுக்கூடம் அமைக்க வேண்டுமென கடந்த 3 ஆண்டுகளில் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன?

(இ) அவற்றில் எங்கெங்கு புதிதாக சத்துணவுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) நன்னிலம் தொகுதியில், நன்னிலம், திருமருகல் என்ற இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நன்னிலம் ஒன்றியத்தில் 100 சத்துணவு மையங்களும், திருமருகல் ஒன்றியத்தில் 131 மையங்களும் உள்ளன.

(ஆ) நன்னிலம் ஒன்றியத்தில்:

1. நன்னிலம்,2.ஆணைக்குப்பம், 3. தலையூர், 4. மேனாங்குடி, 5. சலிபேரி, 6. கோவில் திருமானம், 7. பேரளம் பேரூராட்சி-2, 8. குவளைக்கால், 9. கடுவங்குடி, 10. திருமென்சூர்.

திருமருகல் ஒன்றியத்தில் :

1. கருப்பூர், 2. விற்குடி, 3. எரவாஞ்சேரி, 4. கீழத்தஞ்சாவூர், 5. இடையாத்தாங்குடி, 6. பனங்குடி, 7. வடகரை, 8. திருமருகல், 9. கொட்டாரக்குடி, 10. திருப்புசனூர், 11. நரிமணம், 12. சேஷமூலை, 13. பில்லாவி, 14. சொந்தகை ஆகிய இடங்களில் கட்டிடங்கள் கட்ட பரிந்துரைகள் பெறப்பட்டன.

(இ) நன்னிலம் ஒன்றியத்தில்:

1. நன்னிலம்,2. ஆணைக்குப்பம். 3. தலையூர், 4. மேனாங்குடி ஆகிய இடங்களிலும்,

திருமருகல் ஒன்றியத்தில்:

1. கருப்பூர், 2. விற்குடி, 3. எரவாஞ்சேரி, 4. கீழத்தஞ்சாவூர், 5. இடையாத்தாங்குடி.

ஆகிய இடங்களிலும் 1991-92-ல் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

எஞ்சிய 17 இடங்களில் 1992-93-ல் கட்டிடங்கள் கட்டுமானப்பணி நடைபெற்றது.

53—

முதியோர், ஊனமுற்றோர், இலவசத் திருமணம் போன்ற உதவித் திட்டங்கள்.

வினா எண் 22992—திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர், ஊனமுற்றோர் எத்தனை பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) இலவசத் திருமணம் எத்தனை பேருக்கு செய்து வைக்கப்பட்டுள்ளது ?

(இ) அரசுத் தொட்டில் குழந்தைகளை எத்தனை பேர் எடுத்து வளர்க்க முன்வந்துள்ளனர் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) முதியோருக்கான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 6,09,174 முதியோர்களுக்கும் இதில் 27,940 ஊனமுற்றோர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இலவசத் திருமணங்கள் ஏதும் அரசால் நடத்தப்படுவதில்லை. எனினும், பல்வேறு திட்டங்களின்கீழ் திருமண உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

(இ) அரசுத் தொட்டில் குழந்தைகளை வளர்க்க 9 பேர்கள் முன்வந்துள்ளனர்.

54—

செங்கற்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் இயங்குதல்.

Question No. 23316-Thirumathi K. Mariam Ul Asia: Will the Hon'ble Minister for Social Welfare be pleased to state:–

(a) whether the Government Special Home students at Chengalpattu run by the Directorate of Social Welfare have registered a high percentage of passes in Government Examinations in 1993 and

(b) the details thereof?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) செங்கற்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் 1986-ம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்படி நிறுவப்பட்டு, சென்னை, சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் இயங்கி வருகிறது. 1993-ம் வருடம் மார்ச்சு மாதம் நடைபெற்ற 10-ம் வகுப்பு பொதுத் தேர்விற்கு செங்கற்பட்டு, அரசினர் சிறப்பு இல்ல மாணவர்கள் 21 பேர் தேர்வு எழுதியதில் 20 பேர் தேர்ச்சிபெற்று 95 விழுக்காடு தேர்ச்சி பெற்றனர். தேர்ச்சி பெற்ற 20 மாணவர்களில் 17 பேர்கள் தொழிற்பயிற்சி நிலையத்திலும் (ஐ.டி.ஐ.) 3 பேர் மேல்நிலைப் பள்ளியிலும் மேற்படிப்பிற்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

1994 நவம்பர் 3]

55—

சி. மானம்பாடி கிராமத்தில் பால்வாடி கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **24298**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, கிள்ளை பேரூராட்சியில் உள்ள சி. மானம்பாடி கிராமத்திற்கு பால்வாடி கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

56—

ஊனமுற்றோர் உதவித் தொகையை உடனுக்குடன் வழங்குதல்.

*வினா எண் **24321**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை, மூன்று சக்கர வண்டிகள் ஆகியவை உடனுக்குடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

இத்தகைய உதவிகள் வழங்குவதில் தாமதமில்லை, குறிப்பிட்ட தாமதங்களை துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.

57—

ஊனமுற்றோர்களின் நலன் உரிமைகளைப் பாதுகாக்க புதிய சட்டம்.

*வினா எண் **24435**—திரு ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றவர்களின் நலன் உரிமைகளை பாதுகாக்க புதிய சட்டம் கொண்டு வர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: உடல் ஊனமுற்றோர்களின் நலன் உரிமைகளை பாதுகாக்க 'அரசு கொள்கை' வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

58—

அந்தியூர் தொகுதியில் குழந்தைகள் மையம் அமைத்தல்.

வினா எண் ***24487***—திரு வே. பெரியசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதி, இந்திரா நகர் (கீழவாணி ஊராட்சி) வேம்பத்தி ஊராட்சி, கூலி வகை பச்சம்பாளையம் ஊராட்சி, பள்ளபாளையம், மைக்கேல்பாளையம் ஊராட்சி, ஆத்தப்பம்பாளையம் ஆகிய இடங்களில் குழந்தைகள் மையம் அமைக்க வேண்டிய அவசியம் பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மையங்கள் அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

59—

திருமண உதவித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றோர் விவரம்.

வினா எண் ***24806***—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் 5 வகையான திருமண உதவி திட்டத்தின் கீழ் பயன் பெற்றோர் ஒன்றியம் வாரியாக எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு இன்னும் அதிக பண உதவி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

1994 நவம்பர் 3]

இணைப்பு.

தர்மபுரி மாவட்டம்.

ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்களின் கீழ் 1993-94 ஆம் நிதியாண்டில் பயன்பெற்றோர் எண்ணிக்கை.

ஊராட்சி ஒன்றியம் வாரியாக:

வ. எண்.	ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்.	மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டம்.	விதவை மகள் திருமண உதவித் திட்டம்.	தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்.	விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்.	ஆதரவற்ற மகளிர் திருமண உதவித் திட்டம்.	மொத்தம்
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	தர்மபுரி	21	2	1	..	1	25
2.	நல்லம்பள்ளி	64	2	..	2	..	68
3.	அரூர்	39	1	1	2	..	43
4.	ஊத்தங்கரை	25	2	2	..	..	29
5.	பாப்பிரெட்டிப்பட்டி	31	..	..	..	..	31
6.	பெண்ணாகரம்	38	1	..	1	1	41
7.	காரிமங்கலம்	24	10	1	2	..	37
8.	காவேரிப்பட்டினம்	26	1	1	..	..	28
9.	கிருஷ்ணகிரி	13	2	2	1	..	18
10.	பர்கூர்	27	..	..	..	..	27
11.	சூளகிரி	16	3	..	..	..	19
12.	கெலமங்கலம்	23	..	..	..	..	23
13.	ஓசூர்	18	..	2	..	..	20
14.	தளி	30	2	..	..	..	32
15.	பாலக்கோடு	51	5	..	..	..	56
16.	லத்தூர்	18	..	..	..	..	18
17.	மொரப்பூர்	63	..	1	..	..	64
18.	வேப்பனபள்ளி	9	..	..	..	..	9
	நகராட்சி–						
1.	கிருஷ்ணகிரி	11	..	3	..	..	14
2.	தர்மபுரி	33	1	1	..	..	35
	மொத்தம்	**580**	**32**	**15**	**8**	**2**	**637**

60—

டாக்டர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் மூலம் பயன் அடைந்தோர் விவரம்.

*வினா எண் **25099**-திரு. பி. வி. இராஜேந்திரன்:—* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு (1992-93) நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

(ஆ) ஒதுக்கீட்டு அளவு அதிகரிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

			ரூ.
(அ)	1992-93 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு	..	23,10,000
	1993-94 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு		23,10,000
	கூடுதல் ஒதுக்கீடு		5,00,000

(ஆ) ஒதுக்கீட்டு அளவை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

61—

குத்தாலம் தொகுதியில் சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **25948**—திரு எஸ். ஆசைமணி:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சர்குணஸ்வாபுரம் ஊராட்சி வடுகக்குடி கிராமத்திலுள்ள சத்துணவு மையத்திற்கு நிரந்தர கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக தக்க கருத்துரு பெறப்பட்டால் அவை அரசால் பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

62—

புதுக்கோட்டை யூனியனில் பால்வாடிகளுக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***26019*****—திரு** *சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை யூனியன் ராஜாவயல் கிராம பால்வாடி, கணக்கன்பட்டி கிராம பால்வாடி ஆகியவற்றிற்கு புதியதாக கட்டிடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தக்க கருத்துரு பெறப்படின் பரிசீலிக்கப்படும்.

63—

வெட்டன்விடுதி சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***26043*****—திரு.** *சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி சத்துணவு மையத்திற்குக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு வந்தால், அரசால் பரிசீலனை செய்யப்படும்.

64—

மகிழங்கோட்டையில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் ***27425*****—திரு** *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் பாலர் பள்ளி அமைக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப பாலர் பள்ளி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

65—

பால்கணபதியாபுரத்தில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் *27923*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் பால்கணபதியாபுரத்தில் பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: குழந்தைகள் எண்ணிக்கை அடிப்படையில் பால்கணபதியாபுரத்தில் பாலர் பள்ளி அமைக்க பரிசீலிக்கப்படும்.

66—

சேந்தமங்கலத்தில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் *27926*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி சேந்தமங்கலத்தில் ஒரு பால் வாடி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பால்வாடி அமைத்துக் கொடுக்கப்படும்.

67—

வல்லவன்வயலில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் *27927*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம் வல்லவன் வயலில பால்வாடி ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் பால்வாடி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

68—

கைவனவயலில் பால்வாடி அமைத்தல்.

வினா எண் 27928—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கைவனவயல் ஆதி திராவிடர் குடியிருப்பில் பால்வாடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பால்வாடி அமைக்கப்படும்.

69—

குப்பத்தேவன் மேற்கில் பாலர்பள்ளி துவங்குதல்.

வினா எண் 27929—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் மேற்கில் பாலர் பள்ளி ஒன்று துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாலர் பள்ளி அமைக்கப்படும்.

70—

வலச்சேரிகாட்டில் பாலர் பள்ளி அமைத்தல்.

வினா எண் 27935—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரிகாட்டில் பாலர் பள்ளி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாலர் பள்ளி அமைக்கப்படும்.

71—

மட்டம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் கட்டுதல்.

வினா எண் 27936—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தேவண்ணக் கவுண்டனூர் பஞ்சாயத்து மட்டம்பட்டி ஆதிதிராவிடர் குடியிருப்பு தெற்கு வளவில் ஒரு குழந்தைகள் காப்பகம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும்.

72—

மழவேனிற்காட்டில் பால்வாடி கட்டிடத்திற்கு கூரையை மாற்றுதல்.

வினா எண் 27941—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காட்டில் உள்ள பால்வாடி கட்டிடத்திற்கு கூரையை மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

73—

ஏகாதிகரம்பையில் சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***27944***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஏகாதிகரம்பை மேற்கு ஆதிதிராவிடர் தெருவில் சத்துணவுக் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

குழந்தைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

74—

சிவகாமிபுரம் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குதல்.

வினா எண் ***27945***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, பணக்குடி பஞ்சாயத்து சிவகாமிபுரம் குழந்தைகளுக்கு சத்துணவு அங்கேயே வைத்து வழங்கிட செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

அங்கேயே வழங்க வேண்டும் என்றுதான் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

75—

இந்திரா நகரில் குழந்தைகள் மையம் அமைத்தல்.

வினா எண் ***27946***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், கீழவாணி ஊராட்சிக்கு சேர்ந்த 'இந்திரா நகரில்' குழந்தைகள் மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மையம் அமைக்கப்படும்.

76—

புதுக்கோட்டை தொகுதியில் சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண் *27947*—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக தக்க கருத்துரு பெறப்பட்டால் அதை அரசு பரிசீலிக்கும்.

77—

தென்கிருஷ்ணவரம் காலனிக்கு சத்துணவுக்கூடம் கட்டுதல்.

வினா எண் *27948*—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி ஊராட்சி ஒன்றியம், தென் கிருஷ்ணவரம் காலனிக்கு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

78—

சம்பைப்பட்டினத்தில் சத்துணவுக் கூடம் கட்டுதல்.

வினா எண் **27949**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சம்பைப்பட்டினத்தில் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

79—

பின்னவாசலில் சத்துணவுக்கூடம் கட்டுதல்.

வினா எண் **27950**—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பின்னவாசலில் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக தக்க கருத்துரு வரப் பெற்றால் அவை அரசால் பரிசீலனை செய்யப்படும்.

80—

மட்டம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.

வினா எண் **27951**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, மட்டம்பட்டியில் ஒரு குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கை அடிப்படையில் மட்டம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

81—

திருமலாபுரத்திற்கு குழந்தைகள் நலமையம் கட்டுதல்.

வினா எண் 27952—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலித நல்லூர் ஒன்றியம் வடக்குப் பனைவடலி ஊராட்சியைச் சார்ந்த திருமலாபுரத்திற்கு குழந்தைகள் நல மையக் கட்டிடம் கட்ட அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப குழந்தைகள் நல மையங்கள் அமைக்கப்படும்.

82—

பனைவடலி சத்திரத்தில் ஊட்டச் சத்துணவுத் திட்ட மையம் துவங்குதல்.

வினா எண் 27953—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம் பனைவடலி சத்திரத்திற்கு ஊட்டச்சத்துணவுத் திட்ட மையம் துவங்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

83—

கொல்லம்பட்டியில் சத்துணவுக்கூடம் அமைத்தல்.

வினா எண் ***28993*—*திரு. சி. சுவாமிநாதன்:*** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி கந்தம்பட்டி ஊராட்சி கொல்லம்பட்டியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து தக்க கருத்துரு இது சம்பந்தமாக வரப்பெற்றால் அவை அரசால் பரிசீலிக்கப்படும்.

84—

தண்ணீர்ப்பந்தல்பட்டியில் பால்வாடி மையம் அமைத்தல்.

வினா எண் ***28994*—*திரு. சி. சுவாமிநாதன்:*** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி தண்ணீர்ப்பந்தல் பட்டியில் புதியதாக பால்வாடி மையம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பால்வாடி அமைக்கப்படும்.

85—

சுருண்டபட்டியில் சத்துணவு மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***28995*—*திரு. சி. சுவாமிநாதன்:*** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி மூட்டாம்பட்டி ஊராட்சி சுருண்டபட்டி கிராமத்தில் சத்துணவு மையத்துக்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

86—

வைத்திக்கோயில் கிராமத்தில் பால்வாடி மையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 28996—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி வைத்தூர் ஊராட்சி வைத்திக்கோயில் கிராமத்தில் பால்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்படின், அரசு பரிசீலிக்கும்.

87—

பெரம்பூர் கிராமத்தில் சத்துணவு மையத்துக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 28997—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி குண்ணண்டார் கோயில் யூனியன் பெரம்பூர் கிராமத்தில் சத்துணவு மையக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

88—

அண்டைக்குளம் ஊராட்சியில் பால்வாடி மையத்துக்கு கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **28998**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, அண்டக்குளம் ஊராட்சி, தெம்மாண்டிபட்டி பால்வாடி மையத்துக்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலிக்கப்படும்.

89—

அம்புகோவிலில் சத்துணவு மைய கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **28999**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, நம்புகை ஊராட்சி, அம்புகோவிலில் புதியதாக சத்துணவு மையக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து இது சம்பந்தமாக கருத்துரு வரப்பெற்றால், அவை அரசால் பரிசீலிக்கப்படும்.

90—

முள்ளிக்காய்பட்டியில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.

*வினா எண் **29000**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, நெப்புகை ஊராட்சி, முள்ளிக்காய்பட்டி கிராமத்திற்கு புதியதாக சத்துணவுக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து செயற்குறிப்பு வரப்பெற்றால் அரசால் பரிசீலிக்கப்படும்.

91—

மஞ்சம்பட்டியில் சத்துணவுக் கூடம் அமைத்தல்

*வினா எண் **29001**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, மஞ்சம்பட்டி கிராமத்திற்கு புதியதாக சத்துணவுக் கூடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து தக்க கருத்துரு வந்தால், அது அரசால் பரிசீலிக்கப்படும்.

92—

வெட்டன்விடுதி சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்

*வினா எண் **30204**—திரு. எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி சத்துணவுக் கூடத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சியரிடமிருந்து தக்க கருத்துரு வரப்பெற்றால் அவை அரசால் பரிசீலனை செய்யப்படும்.

93—

திட்டப்புள்ளபாளையத்தில் குழந்தைகள் காப்பகம் அமைத்தல்

*வினா எண் **33343**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஒன்றியம் திட்டப்புள்ளபாளையம் கிராமத்தில் குழந்தைகள் காப்பகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்படின் பரிசீலிக்கப்படும்.

94—

சென்னசமுத்திரத்தில் பால்வாடி மையம் அமைத்தல்

வினா எண் ***33350***—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஒன்றியம், சென்னசமுத்திரம் கிராமத்தில் பால்வாடி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பால்வாடி மையம் அமைக்கப்படும்.

95—

தொட்டில் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

வினா எண் ***33353***—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டில் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் எத்தனை குழந்தைகளை இதுவரை அரசு எடுத்து வளர்த்து வருகிறது?

(ஆ) அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறைஅமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போது 66 குழந்தைகள் தொண்டு நிறுவனங்கள் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகின்றனர். நடப்பு நிதியாண்டில் வரவேற்பு இல்லத்திற்கென ரூ. 1.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் குழந்தை ஒன்றுக்கு ரூ. 5,000 அளிக்கப்படும்.

96—

குருக்கள்பட்டியில் வட்டார ஊட்டச்சத்துப் பயிற்றுநர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **33415**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலித நல்லூர் ஒன்றியம், குருக்கள்பட்டியில் வட்டார ஊட்டச்சத்துப் பயிற்றுநர் அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: பரிசீலிக்கப்படும்.

97—

அடைக்கலாபுரத்தில் ஊட்டச்சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண் **33416**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலித நல்லூர் ஒன்றியம், அடைக்கலாபுரம் கிராமத்தில் ஊட்டச்சத்துணவு மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: குழந்தைகள் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

98—

சத்துணவு அமைப்பாளர்களுக்கு தனித்தேர்வு நடத்துதல்.

வினா எண் **33437**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவு அமைப்பாளர்களுக்கு தனித் தேர்வு நடத்தி அவர்களை அரசுப் பணியில் சேர்த்துக் கொள்ள அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

இல்லை.

99—

சத்துணவு திட்டத்தில் பணியாற்றுபவர்களின் படிப்பு விவரம்.

*வினா எண் **33438**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் மேற்படிப்பு, பட்டதாரி, பிளஸ்-2 தேர்ச்சி பெற்ற அமைப்பாளர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குறிப்பிட்ட படிப்புகளுக்கும் இணையானவற்றிற்கும் பல்வகைக் கல்வி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கிடைத்ததும் தெரிவிக்கப்படும்.

100—

கடவரஹள்ளி கிராமத்தில் பால்வாடி மையம் அமைத்தல்.

*வினா எண் **33716**—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், மேட அக்ரஹாரம் பஞ்சாயத்து, கடவரஹள்ளி கிராமத்திற்கு பால்வாடி மையம் (குழந்தைகள் நலமையம்) இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பரிசீலனையில் உள்ளது.

ஐந்தாம் பட்டியல்.

1—

பெண் காவலர்கட்கு காக்கி நிறச்சேலையை அணிய அனுமதித்தல்.

வினா எண் 66—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் பணியாற்றும் பெண் காவலர்கட்கு பணி காலத்தில் காக்கி நிறச் சேலை (சீருடை) அணிய அனுமதி வழங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர்:

தற்போது பெண் காவலர்களுக்கு காக்கி புஷ்ஷர்ட்டும் முழுக்கால் சட்டையும், கீழ்க்கண்ட காரணங்களுக்காக வழங்கப்படுகின்றன:-

(1) மிடுக்குடன் கவாத்து செய்தல்.

(2) சுலபமாக இயங்குதல்.

(3) அன்றாடப் பணிகளில் வசதியை முன்னிட்டு எனினும், பேறு காலத்தில் மட்டும் அவர்கள் காக்கி நிறச் சேலையும், ரவிக்கையும் அணிய அனுமதிக்கப்படுகின்றனர்.

2—

வேலூரில் காவல்துறை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அமைத்தல்.

வினா எண் 5930—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் துறை அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியை மீண்டும் வேலூரில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர்:

இல்லை.

1994 நவம்பர் 3]

3—

காவல்துறையின் தொப்பியை மாற்றி அமைத்தல்.

வினா எண் **6044**—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறையினர் தொப்பியை மாற்றி அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

4—

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் அரைக்கால் சட்டை அணிதல்.

வினா எண் **10228**—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் முன்பு போல் அரைக்கால் சட்டை அணியச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர்:

இல்லை.

5—

கொடி நாள் மூலம் கிடைத்த வருவாய்.

வினா எண் **35506**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடி நாள் மூலம் 1993-94 ஆம் ஆண்டு வசூலான தொகை எவ்வளவு?

(ஆ) அதை மேலும் உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

(அ) கொடிநாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7 ஆம் தேதியன்று கொண்டாடப்படுவதால் அவ்வாண்டு டிசம்பர் 6 ஆம் தேதி வரை வசூலிக்கப்படும் தொகை ஓர் ஆண்டிற்கானதாகும். அதன்படி 7-12-1992 முதல் 6-12-1993 முடிய ஓர் ஆண்டின் கொடி நாள் வசூல் ரூ. 2,48,97,334.22 ஆகும். அதை போல் அடுத்த ஆண்டிற்கு இது வரையில் அதாவது 7-12-1993 முதல் 30-4-1994 வரை ரூ. 28,89,358.55 வசூலிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேதகு ஆளுநரைத் தலைவராகக் கொண்ட நிலையான கொடி நாள் அமைப்புக் குழு ஒவ்வொரு ஆண்டும் இலக்கினை நிர்ணயிக்கிறது . இக்குழு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் கூடி, அடுத்த ஆண்டிற்கான கொடி நாள் நிதி வசூலுக்கான இலக்கினை நிர்ணயிக்கிறது. மேதகு ஆளுநரும், மாண்புமிகு முதலமைச்சரும் கொடி நாளிற்கு மனமுவந்து நிதி வழங்கிட பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர். வானொலி மற்றும் தொலைக்காட்சியில் கொடி நாள் முக்கியத்துவம் குறித்தும் உரையாற்றுகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இலக்கினை எய்துவதை 15 நாட்களுக்கு ஒரு முறை கண்காணிக்கின்றனர்.

6—

நத்தம் புறம்போக்கை பட்டா வழங்குதல்.

வினா எண் 7784—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில், புவனகிரி பேரூராட்சியில் 7 வார்டு கள்ளிக்காட்டுக் காலனியில் உள்ளவர்களுக்கு நத்தம் புறம்போக்கை பட்டா செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சிதம்பரம் வட்டம், மேல்புவனகிரி கிராமம், கள்ளிக்காட்டுக் காலனியில் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் ரி.ச.53-ல் 72 மனைப் பட்டாக்களும், ரி.ச. 76-ல் 39 மனைப் பட்டாக்களும், ரி.ச.82/1-ல் 27 மனைப்பட்டாக்களும், ஆக மொத்தம் 138 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன.

1994 நவம்பர் 3]

7—

திருச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி துவங்க தனியார் நிறுவனங்கள் நிதி உதவி அளித்தல்.

*வினா எண் **3211**—திருமதி விஜி. மணிமேகலை:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி துவங்க தனியார் நிறுவனங்கள் நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட நல நிதிக் குழு, திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்க ரூ. 50,00,000 நன்கொடையாக வழங்க முன் வந்துள்ளது.

(ஆ) 18-9-1992 அன்று நடைபெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட நல நிதிக் குழுவின் கூட்டத்தில் திருச்சிராப்பள்ளியில் மருத்துவக் கல்லூரி அமைக்க ரூ. 50,00,000 கொடுப்பது என்றும், இது விவரம் அரசுக்கு தெரிவித்து அவர்கள் கருத்தை அறிய முடிவு செய்யப்பட்டது. இதனை அரசு பரிசீலித்து இந்த செயற்குறிப்பினை சில காலம் ஒத்தி வைக்கலாம் என்று முடிவு செய்துள்ளது.

8—

சென்னையில் கொசு ஒழிப்பு நடவடிக்கை.

*வினா எண் **6513**—திரு. எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் எம்.எம்.டி.ஏ. காலனி, மேத்தா நகர், சூளைமேடு, கீழ்ப்பாக்கம் குடிசை மாற்று வாரியப் பகுதிகள், டி.பி. சத்திரம் ஆகிய பகுதிகளில் கொசு ஒழிப்பு காஸ் மருந்தடிப்பு முறை, முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில் கொசு ஒழிப்புப்பணிக்கு 5 புகை பரப்பு இயந்திரங்கள் மூலம் மருந்து புகையினை பரப்பி கொசு ஒழிக்கப்படுகிறது.

9—

மருத்துவக் கல்லூரியில் நுழைவுக் கட்டணம் வசூலித்தல்.

வினா எண் *8494*— டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மேற்படிப்பு படிக்க தேர்வு செய்யப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடத்தில் நுழைவுக் கட்டணம் மற்றும் பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மேற்படிப்புப் படிக்க தேர்வு செய்யப்பட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 20 மாணவர்களிடத்தில் மற்ற மாணவர்களிடம் வசூலிப்பதைப் போன்று தவறுதலாக ஆகஸ்ட் 1980 மற்றும் 1981-ல் வசூலிக்கப்பட்ட படிப்புக் கட்டணம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டது. இது போன்ற நிகழ்வுகளைக் கவனமாகத் தவிர்க்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

10—

திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் வசதி அளித்தல்.

வினா எண் *13811*—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) ராதாபுரம் தொகுதி, திசையன்விளை மருத்துவமனையில் உள் நோயாளிகள் தங்க முடியாத நிலையில் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ராதாபுரம் தொகுதி, திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கைகள் உள் நோயாளிகள் தங்குவதற்கு உள்ளன. திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 கூடுதல் படுக்கை வசதிகள் கொண்டதாக மேம்படுத்தும் செயற்குறிப்பு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

11—

போக்குவரத்துக் கழகங்கள் மூலம் விபத்துக்களுக்கு நட்டஈடு தொகை வழங்கிய விவரம்.

வினா எண் **9309**—திரு. ஒ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களினால் ஏற்பட்ட விபத்துக்களுக்கு நட்ட ஈடு தொகை இது வரை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது?

(ஆ) கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ளது எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இது குறித்து விவர அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

ஆண்டு வாரியாக நஷ்ட ஈட்டுத் தொகையின் விவரங்கள்.

வரிசை எண் மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் பெயர். (1)	1988-89. (2) ரூ.	1989-90. (3) ரூ.	1990-91. (4) ரூ.
1 பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்.	23,59,987.00	54,42,200.00	48,78,946.00
2 தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்.	22,69,089.00	28,41,916.00	39,91,848.00
3 அண்ணா போக்குவரத்துக் கழகம்.	44,20,893.00	36,51,904.00	45,38,444.00
4 இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.	11,01,000.00	13,26,000.00	36,47,000.00
5 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.	55,55,650.05	63,35,135.25	1,25,22,430.00
6 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.	16,35,772.00	51,01,442.00	37,20,518.00
7 நேசமணி போக்குவரத்துக் கழகம்.	5,05,376.35	15,36,342.00	17,98,181.00
8 அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்.	1,47,519.79	9,14,370.50	14,18,027.00
9 பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.	21,20,720.05	24,11,633.20	72,78,018.00
10 மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்.	27,72,521.00	32,71,030.00	38,60,482.00
11 சேரன் போக்குவரத்துக் கழகம்.	40,18,201.00	70,00,673.00	52,60,492.00
12 சோழன் போக்குவரத்துக் கழகம்.	54,77,774.00	58,89,406.00	45,58,501.00
13 ஜீவா போக்குவரத்துக் கழகம்.	17,19,872.88	35,90,889.05	46,82,682.25

(1)	(2)	(3)	(4)
	ரூ.	ரூ.	ரூ.
14 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்.	62,55,000.00	1,08,00,000.00	1,37,00,000.00
15 பல்லவன் போக்குவரத்துக் கழகம்.	1,08,32,000.00	1,41,27,000.00	1,33,41,000.00
மொத்தம்	**5,11,91,376.12**	**7,42,39,941.00**	**8,91,96,569.25**

ஆண்டு வாரியாக நஷ்ட ஈட்டுத் தொகையின் விவரங்கள்- தொடர்ச்சி.

வரிசை எண் மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் பெயர். (1)	1991-92. (5)	மொத்தம். (6)
	ரூ. பை.	ரூ. பை.
1 பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்.	.70,76,929.00	1,97,58,062.00
2 தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்.	73,99,234.00	1,65,02,087.00
3 அண்ணா போக்குவரத்துக் கழகம்.	80,56,518.00	2,06,67,759.00
4 இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.	45,71,000.00	1,06,43,000.00
5 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.	1,24,00,119.00	3,68,13,334.30
6. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்	56,61,862.00	1,61,19,594.00
7 நேசமணி போக்குவரத்துக் கழகம்.	20,69,681.00	59,09,580.35
8 அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்	27,42,101.50	52,22.018.79
9 பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.	63,40,431.00	1,81,50.802.25
10 மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம்.	42.45.252.00	1,41,49,255.00
11 சேரன் போக்குவரத்துக் கழகம்.	90,68,337.20	2,53.47.703.20
12 சோழன் போக்குவரத்துக் கழகம்.	75,42,566.00	2,34,68,247.00

(1)	(5)	(6)
	ரூ. பை.	ரூ. பை.
13 ஜீவா போக்குவரத்துக் கழகம்.	87,81,683.00	1,87,75,127.18
14 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்.	1,77,00,000.00	4,84,55,000.00
15 பல்லவன் போக்குவரத்துக் கழகம்.	1,65,70,000.00	5,48,70,000.00
மொத்தம்	12,02,25,713.70	**33,48,53,600.07**

வரிசை எண் மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் பெயர்.	வழங்க வேண்டிய உத்தேச நஷ்ட ஈட்டுத் தொகை.
(1)	(2)
	ரூ. பை.
1 பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்.	11,61,90,941.00
2 தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்.	- -
3 அண்ணா போக்குவரத்துக் கழகம்.	21,03,56,072.00
4 இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம்.	27,35,000.00
5 தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.	42,88,38,579.08
6 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.	20,07,57,560.00
7 நேசமணி போக்குவரத்துக் கழகம்.	13,36,38,022.06
8 அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்.	6,74,76,556.21
9 பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.	7,41,40,507.25
10 மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம்.	10,93,77,740.00
11 சேரன் போக்குவரத்துக் கழகம்.	- -
12 சோழன் போக்குவரத்துக் கழகம்.	10,37,49,721.00
13 ஜீவா போக்குவரத்துக் கழகம்.	7,96,85,000.00
14 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்	22,36,00,000.00
14 பல்லவன் போக்குவரத்துக் கழகம்.	44,85,28,000.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

12—

திருப்பத்தூர் - பாண்டிச்சேரி பேருந்து வசதி

வினா எண் ***23165***—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து பாண்டிசேரிக்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை. இது இரு மாநிலங்களுக்கிடையிலான தடமாகும். இரு மாநில ஒப்பந்தத்தின் கீழ் இத்தடம் இடம் பெறவில்லை. அதனால் திருப்பத்தூரிலிருந்து பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்க இயலாது.

13—

செம்பியன் கோமலுக்கு பேருந்து வசதி

வினா எண் ***23886***—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறையிலிருந்து கோமல் வரை செல்லும் அரசு பேருந்துகளை "செம்பியன் கோமல்" வரை சென்றுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு.கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது பேருந்து தடம் எண் 10சி மூலம் மயிலாடுதுறையில் இருந்து கோமல் மற்றும் செம்பியன்-கோமல் வழியாக மூன்று நடைகள் கம்பூர் வரை இயக்கப்படுகிறது.

14—

கும்பகோணம் நகரப் பேருந்து 2 -ஐ மட்டியூர் சென்றுவர நீட்டித்தல்.

*வினா எண் **23887**—திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், உக்கரை கிராமத்திற்கு கும்பகோணத்திலிருந்து வரும் நகர பேருந்து எண் 2-ஐ (சோழன் போக்குவரத்துக் கழகம்) மட்டியூர் வரை சென்றுவர செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

உக்கரையிலிருந்து மட்டியூர் செல்லும் 2 கி.மீ. சாலை குறுகலாகவும், வளைந்தும் பேருந்து இயக்கத்திற்குத் தகுதியற்றதாக உள்ளது. இதனை செப்பனிட்டுத் தருமாறு சாலை பராமரிப்புத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சாலையை சீர் செய்து தகுதிச் சான்றிதழ் கிடைக்கப் பெற்ற பின் பேருந்தை மட்டியூர் வரை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

தச்சன்விளைக்கு பேருந்து விடுதல்

*வினா எண் **24785**—திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, மார்த்தாண்டத்தில் இருந்து திக்குறிச்சி வழியாக தச்சன்விளைக்கு பேருந்து விட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) திருவட்டார் தொகுதி, மார்த்தாண்டத்திலிருந்து திக்குறிச்சி வழியாக தச்சன்விளைக்குப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) நடப்பு நிதியாண்டில் தச்சன்விளைக்கு பேருந்து இயக்கப்படும்.

16—

கந்தர்வகோட்டை முதுகுளத்திற்கு பேருந்து வசதி.

வினா எண் 25210—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டையில் இருந்து முதுகுளத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போது மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத் திட்டத்தில் கந்தர்வகோட்டை-வீரடிப்பட்டி வழித்தடத்தில் நான்கு நடைகள் இயங்கி வருகிறது. வீரடிப்பட்டியிலிருந்து முதுகுளம் வரையிலான 5.0 கி.மீ. சாலை கிராவல் சாலையாகவும், குண்டும் குழியுமாக பேருந்து இயக்கிட தகுதியற்றதாக உள்ளதால் கந்தர்வகோட்டையிலிருந்து முதுகுளத்திற்கு பேருந்து வசதி செய்துகொடுக்க தற்போது இயலாது.

17—

மஞ்சப்பேட்டைக்கு பேருந்து வசதி

வினா எண் 25215—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை யூனியன், மஞ்சப்பேட்டைக்கு தஞ்சை சாலையில் இருந்து பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சோழன் போக்குவரத்துக் கழகம், ஏற்கெனவே, தஞ்சாவூர்-மஞ்சப்பேட்டை -கந்தர்வகோட்டை தடத்தில் (தடம் எண் 60) நகரப் பேருந்து மூலம் தினசரி 4 நடைகளையும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் 7-2-1994 முதல் கந்தர்வகோட்டை- வல்லம் (வழி) மஞ்சப்பேட்டை விலக்கு மற்றும் நாட்டானி வழித்தடத்தில் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் நான்கு நடைகளையும் இயக்கி வருகின்றன.

18—

விராலிப்பட்டி-நத்தமாடிப்பட்டிக்கு பேருந்து வசதி.

வினா எண் 25219— திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை யூனியன், விராலிப்பட்டியில் இருந்து நத்தமாடிப்பட்டி வரை பேருந்தை நீட்டித்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத் திட்டத்தில் கந்தர்வகோட்டை - விராலிப்பட்டி வழித்தடத்தில் 4 நடைகள் இயங்கி வருகிறது. விராலிப்பட்டியிலிருந்து நத்தமாடிப்பட்டி வரையிலான 3.5 கி.மீ. சாலை, மெட்டல் சாலையாகவும், சமீபத்திய மழையின் காரணமாக குண்டும் குழியுமாக பேருந்து இயக்கிட தகுதியற்றதாக உள்ளது. மேலும் விராலிப்பட்டிக்கும் நத்தமாடிப்பட்டிக்கும் இடையே எந்த கிராமமும் இல்லை. எனவே விராலிப்பட்டியிலிருந்து நத்தமாடிப்பட்டி வரை பேருந்தை நீட்டித்து இயக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

1994 நவம்பர் 3]

19—

துறையூரிலிருந்து தோளூருக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 25967—திரு.வி.ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, துறையூரிலிருந்து தோளூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி துறையூரிலிருந்து தோளூருக்குச் செல்லும் வழித்தடத்தில் மணலோடை முதல் தோளூர் வரையிலான பகுதியில் இரண்டு பாலங்கள் கட்டுமானப் பணியும் சாலை சீரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இப் பணிகள் முடிந்தபின் நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளரிடம் சாலைத்தகுதி சான்றிதழ் பெற்ற பின்னர் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

20—

கால்நடை மருத்துவருக்கு மருந்து வழங்குதல்

வினா எண் 5880—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து செயல்படும் கால்நடை மருத்துவருக்கு அரசிடமிருந்து மருந்து கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியத்திலிருந்து செயல்படும் கால்நடை விரிவாக்க அலுவலருக்கு (கால்நடை பராமரிப்பு உதவி மருத்துவர்) ரூ. 5,000 பெறுமானமுள்ள தேவையான மருந்துகளை 1991-92 நிதியாண்டு முதல் வழங்கிட கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

21—

பால்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

வினா எண் 21914—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: *மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பால்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

வட ஆற்காடு மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நாளொன்றுக்கு 3.16 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 2.85 லட்சம் லிட்டர் பாலை சென்னையில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அனுப்பப்படுவதால், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பால்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பட்சத்தில் அதற்கான மூலப் பொருளான பால் தங்குதடையின்றி கிடைக்க வாய்ப்பில்லை. மேலும் பால்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திடம் நிதி மற்றும் இட வசதிகள் இல்லை. எனவே, வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பால் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

1994 நவம்பர் 3]

22—

விற்பனையை உயர்த்த 'ஆவின்' நடவடிக்கை.

Question No. 22811—Dr. Beatrix D'Souza: Will the Hon'ble Minister for Milk and Dairy Development be pleased to state—

Whether there is proposal with the Government to have Aavin Food Festivals as a promotion venture?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

இல்லை.

23—

பதப்படுத்தப்பட்ட பாலை பாக்கெட்டுகளில் அறிமுகப்படுத்தல்.

Question No. 22813—Dr. Beatrix D'Souza: Will the Hon'ble Minister for Milk and Dairy Development be pleased to state—

Whether there is a proposal with the Government to introduce skimmed milk in packets for Diets?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

ஆகஸ்டு 1992-ல் கொழுப்பு நீக்கிய பால் டெட்ரா பேக்குகளில் சென்னை நகரில் அறிமுகப்படுத்தப்பட்டு அதன் விற்பனை, உற்பத்திச் செலவைக் கூட எட்டாததால், கைவிடப்பட்டது. அதனை மீண்டும் கொண்டுவர தற்போது திட்டமேதுமில்லை.

24—

ரப்பர் தொழிற்சாலை குமரி மாவட்டத்தில் அமைக்கும் திட்டம்.

வினா எண் 37— திரு. இரா. அப்பு நடேசன் மற்றும் திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் 300 கோடி ரூபாய் செலவில் ஒரு ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் நிறைவேற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் ரப்பரைப் பயன்படுத்தி மோட்டார் வாகனங்களுக்கு தேவைப்படும் டயர் மற்றும் ட்யூப் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அம்மாவட்டத்தில் கூட்டுத் துறையில் (Joint Sector) அமைக்க டிட்கோ நிறுவனத்திற்கு கடந்த டிசம்பர் 1992-ல் அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த ஃப்ரெடிரிக் ஜே. ஹாரிசன் மற்றும் அவரைச் சார்ந்தவர்களை கூட்டுத் தொழில் முனைவராக தேர்ந்தெடுக்கவும் அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 1993-ல் இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் ஒன்றினை, டிட்கோ நிறுவனமும், அமெரிக்க கூட்டு தொழில் முனைவோர் நிறுவனமும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இத்தொழிற்சாலை சுமார் ரூ. 400 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன் புத்தூரில் இத்தொழிற்சாலையை அமைக்க, டிட்கோ நிறுவனமும் அமெரிக்க தொழில் முனைவோர் நிறுவனமும் நேரடியாக பார்வையிட்டு தக்க இடத்தை கண்டறிந்துள்ளன. இத்தொழிற்சாலை 1996 ஆம் ஆண்டு இறுதியில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

25—

புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் கனிம வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் **4071**— திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 9-வது பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரையில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையில், கனிம வருவாய் இழப்பை தடுப்பதற்காக, நிர்வாகத்தை சீரமைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) இத்துறையின் தற்போதுள்ள நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : வருவாய் இழப்பைத் தவிர்க்க மாவட்டத்தின் சில பணியிடங்களையும் ஆய்வுக்காக சில குறிப்பிட்ட பணியிடங்களையும் ஏற்படுத்த புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். அரசு நிதி நிலையைக் கருத்தில் கொண்டும், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட தடை இருப்பதாலும், புவியியல் மறறும் சுரங்கத் துறை இயக்குநரின் செயற்குறிப்பை ஏற்க இயலவில்லை. எனினும், தற்போதுள்ள அலுவலர்களைக் கொண்டே கனிம வருவாய் இழப்பைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

26—

டயர் தொழிற்சாலை அரசின் கீழ் அமைத்தல்.

வினா எண் 7729— திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கான டயர் தொழிற்சாலை அரசின் கீழ் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

(இ) அத்தொழிற்சாலை எப்போது எங்கு துவக்கப்படவிருக்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) (ஆ) மற்றும் (இ) : கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் ரப்பரைப் பயன்படுத்தி, மோட்டார் வாகனங்களுக்கு தேவைப்படும் டயர் மற்றும் டியூப் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை அம்மாவட்டத்தில்

கூட்டுத் துறையில் (Joint Sector) அமைக்க டிட்கோ நிறுவனத்திற்கு கடந்த டிசம்பர் 1992-ல் அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த ப்ரெடரிக் ஜே. ஹாரிசன் மற்றும் அவரைச் சார்ந்தவர்களை கூட்டுத் தொழில் முனைவராக தேர்ந்தெடுக்கவும் அரசின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 1993-ல் இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர் ஒப்பந்தம் ஒன்றினை, டிட்கோ நிறுவனமும் அமெரிக்க கூட்டுத் தொழில் முனைவோர் நிறுவனமும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இத்தொழிற்சாலை சுமார் ரூ. 400 கோடி செலவில் அமைக்கப்பட உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன் புத்தூரில் இத்தொழிற்சாலையை அமைக்க, டிட்கோ நிறுவனமும் அமெரிக்க தொழில் முனைவோர் நிறுவனமும் நேரடியாக பார்வையிட்டு தக்க இடத்தை கண்டறிந்துள்ளது. இத்தொழிற்சாலை, 1996 ஆம் ஆண்டு இறுதியில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

27—

கொடிப்பள்ளம் கிராமத்தில் சத்துணவுக் கூடம் அமைத்தல்.

வினா எண் *33034*—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கொடிப்பள்ளம் கிராமத்தில் சத்துணவுக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மாவட்ட ஆட்சி தலைவரின் செயற் குறிப்பு வரப்பெறின் அரசு பரிசீலிக்கும்.

28—

வண்ணான் பொட்டல் கிராமத்தில் சத்துணவு மற்றும் ஊட்டச் சத்துணவு மையம் அமைத்தல்.

வினா எண் *33430*— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேல நீலிதநல்லூர் ஒன்றியம், வண்ணான் பொட்டல் கிராமத்தில் குழந்தைகள் சத்துணவு மையமும், ஊட்டச்சத்து மையமும் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

குழந்தைகள் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

29—

மலை வாழ் மக்கள் மாணவர் இல்லத்திற்கு சாலை வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் 6809— திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி கனியம்பாடி தெல்லையில் மலைவாழ் மக்கள் மாணவர் இல்லத்திற்குச் சாலை வசதி ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) கனியம்பாடி தெல்லையில், மலை வாழ மக்கள் மாணவர் இல்லத்திற்குச் செல்ல ஏற்கெனவே 6.64 கி.மீ நீளமுள்ள வனச்சாலை உள்ளது. எனவே, புதிதாக சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க அவசியமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

30—

அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிக போனஸ் வழங்குதல்.

*வினா எண் **19667**— திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ரப்பர் தோட்டங்களில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு அதிக போனஸ் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆண்டுதோறும் போனஸ் சட்டப்படி 8.33 சதவிகிதம் போனஸ் பெறத் தகுதியுடையவர்கள். இது தவிர ஆண்டு தோறும் தற்காலிக அடிப்படையில் அரசு நிர்ணயப்படி கருணைக் கொடையும் வழங்கப்படுகிறது. 1992-93 ஆம் ஆண்டு போனஸ் வழங்க போனஸ் சட்டப்படி அரசு ரப்பர் கழக தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனசும், உற்பத்தித் திறனையொட்டி (Productivity linked) கருணைத் தொகையாக ரூ. 800-ம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் மற்ற நிறுவன ஊழியர்களைக் காட்டிலும் ரூ. 300 கூடுதலாக பெற்றுள்ளனர். இதனால் ஒரு ஊழியருக்கு அதிகபட்சமாக ரூ. 2,400 அளவிலும் குறைந்த பட்சமாக ரூ. 1,850 அளவிலும் தொகை பெற்றனர்.

31—

கிருஷ்ணகிரி வனச்சரக அலுவலகத்திற்கு ஜீப் வழங்குதல்.

*வினா எண் **22851**—திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வனச்சரக அலுவலகத்திற்கு ஒரு ஜீப் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

விடை--

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி வனச் சரக அலுவலகத்திற்கு ஏற்கெனவே ஒரு ஜீப் வழங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது. மீண்டும் மற்றுமொரு ஜீப் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பொறியியல் பட்டதாரிகள் விவரம்.

வினா எண் **2840**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, பொறியியல் கல்வி ஆகியவற்றில் தகுதி பெற்றவர் எத்தனை பேர்?

(ஆ) இது மற்ற மாவட்டத்தைக் காட்டிலும் எத்தனை சதவீதம் குறைவாக உள்ளது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மைய அரசின் கணக்கெடுப்புத் துறையில் 1981-ல் எடுத்த விவரப்படி, பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தில் பட்டப்படிப்பு மற்றும் அதற்கு மேல் படித்தோர் எண்ணிக்கை 30,232 ஆகும்.

33—

மாநில அரசால் ஓட்டல் நிர்வாகம் மற்றும் சமையற்கலை பயிலகம் ஆரம்பித்தல்.

Question No. 3204—Thirumathi V.G. Manimegalai : Will the Hon'ble Minister for Education be pleased to state—

(a) Whether there are proposals for opening a Hostel Management and Catering School by the State Government in this State.

(b) If not, difficulties in setting such an institution.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஓட்டல் நிர்வாகம் மற்றும் சமையற்கலைப் பயிலகம் ஆரம்பிப்பது தொடர்பான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

34—

ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்குவதில் காலதாமதத்தை நீக்க நடவடிக்கை.

*வினா எண் **5435**—திரு. எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை, சிறப்பு நிலை தருவதில் பெருமளவில் காலதாமதம் ஆவது குறித்தும், சீனியாரிட்டி ஓவர்லுக் செய்யப்பட்டதாகவும், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மற்றும் ஆசிரியர் மன்றம் அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் செய்தனவா?

(ஆ) ஆம் எனில், அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35—

ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் ஓராசிரியர் பள்ளியை ஈராசிரியர் பள்ளியாக உயர்த்துதல்.

*வினா எண் **5669**—திரு. வே. பெரியசாமி:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) சிதம்பரனார் மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொட்டாரக்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த, கணபதி சமுத்திரம் ஓராசிரியர் பள்ளியை ஈராசிரியர் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், 1991-92-ல் கூடுதலாக ஆசிரியர் நியமனம் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1992-93 கல்வியாண்டில் அம்மாவட்டத்திற்கு கூடுதல் மாணவர் சேர்க்கைக்காக வழங்கப்பட்ட மூன்று இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஒரு பணியிடம் கணபதி சமுத்திரம் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

36—

கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆசிரியர்கள் காலி பணியிடங்களை நிரப்புதல்.

வினா எண் **8533**—திரு. ந. து. மூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் திட்டுப்படுகை, பில்படுகை, மகேந்திரபள்ளி, காட்டூர் ஆகிய இடங்களில் ஆசிரியர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் திட்டுப்படுகை துவக்கப்பள்ளியில் மூன்று இடைநிலை ஆசிரியர் பணி இடங்களும், மகேந்திரபள்ளி துவக்கப்பள்ளியில் இரண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் காலியாக உள்ளன. ஓய்வு மற்றும் பொது மாறுதல்களின்போது இப்பணியிடங்கள் காலியானது. மற்ற பில்படுகை, காட்டூர் பள்ளிகளின் பணியிடங்கள் ஏதும் காலியில்லை. இக்காலி பணியிடங்கள் புதிய நியமனங்கள் செய்யப்படும்போது நிரப்பப்பட்டுவிடும்.

[1994 நவம்பர் 3

37—

மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் திறத்தல்.

***வினா எண் 9120*—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதியில் புதிதாக மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம் (District Educational Office) திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பு இல்லை.

38—

கங்கம்பட்டியில் பள்ளி துவங்குதல்.

***வினா எண் 11212*—திரு சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்றாண்டார் கோவில் ஒன்றியம், கின்னனூர் பஞ்சாயத்து கங்கம்பட்டி கிராமத்தில் புதிதாக பள்ளி ஒன்று துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

39—

ஆரம்ப பள்ளிகளை ஒருங்கிணைத்து ஆரம்ப கல்வித்துறையாக ஏற்படுத்துதல்.

***வினா எண் 12141*—திரு ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

பல துறைகளின் கீழ் இயங்கி வரும் ஆரம்பப்பள்ளிகள் அனைத்தும் ஒருங்கிணைத்து ஆரம்பக் கல்வித்துறை என ஏற்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இத்தகைய கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

சொர்ணக்காடு தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் ***12152***—*திரு ஆர். சிங்காரம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு தொடக்கப்பள்ளியைத் நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

41—

வல்லத்தில் பள்ளிக்கூடம் துவங்குதல்.

வினா எண் ***12706***—*திரு. ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, வல்லத்தில் புதிதாக ஒரு பள்ளிக்கூடம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

42—

ஆணைக்காடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் **13196**— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஆணைக்காடு தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஏதுமில்லை.

43—

பாலத்தனி தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் **13199**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பாலத்தனி தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

44—

சம்பைபட்டினம் தொடக்கப் பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமனம் செய்தல்.

வினா எண் **13203**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சம்பைப்பட்டினம் தொடக்கப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

45—

பெருமாபாளையத்தில் தொடக்கப்பள்ளி துவங்குதல்.

வினா எண் ***16517***— *திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதி அந்தாணி பேரூராட்சி சிட்னூரான்காடு பெருமாபாளையம் ஆதிதிராவிட காலனியில் தொடக்கப்பள்ளி துவக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பள்ளி ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதிய துவக்கப்பள்ளி துவங்கக் கோரி கருத்துருக்கள் ஏதும் பெறப்படாததால் புதிதாக துவக்கப்பள்ளி அவ்வூரில் துவக்கப்படவில்லை.

46—

பொன்மாச நல்லூரில் தொடக்கப்பள்ளி துவங்குதல்.

வினா எண் ***16776***— *திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) மயிலாடுதுறை தொகுதியில் பொன்மாச நல்லூர் கிராமத்தில் ஓர் தொடக்கப்பள்ளி கொண்டு வர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கொண்டுவரப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

47—

புதுச்செந்நெல் குளம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆய்வகத்தை பழுது பார்த்தல்.

வினா எண் ***21969***—*திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

காமராசர் மாவட்டம்,புதுச்செந்நெல் குளம் அரசு மேல் நிலைப்பள்ளியிலுள்ள ஆய்வகம் (Laboratory) பழுதடைந்துள்ளதால் அதனைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

புதுச்செந்நெல்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியின் ஆய்வகத்தின், பழுது பார்ப்புப் பணிகள் பொதுப்பணித் துறையின் மூலம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

48—

சேனப்பநல்லூர் அரசு உயர் நிலைப்பள்ளிக்கு நிரந்தர கட்டிட வசதி.

வினா எண் ***27227***—திரு. வி. *ரவிச்சந்திரன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி, சேனப்பநல்லூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நிரந்தர கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

*1994-95*ம் நிதி ஆண்டில் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது, சேனப்பநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியும் நிதி நிலைமைக் கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

49—

பர்கூரில் சீர்மிகு பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***27429***—திரு. கே. *முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் பர்கூரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சீர்மிகுப் பள்ளிக்கு (School of excellence) சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்.

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) தற்போது நில ஆர்ஜிதப் பணி அரசின் பரிசீலனையில் உள்ளது. 1994-95 ஆம் கல்வியாண்டுக்குள் சொந்தக் கட்டிடம் கட்டப்படும்.

50—

போளூரிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண். ***23944***—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை.

51—

அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குதல்.

வினா எண் ***24469***—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் அளிக்கப்படும் ஐ.ஆர்.டி.பி. கடன் தொகையை பயன்படுத்துகின்ற முறையினை அரசு கண்காணிக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் ஒழுங்காக இத்தொகையினை செலுத்தியுள்ளார்கள்?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) 1991-92 ஆம் ஆண்டில் கடன் பெற்ற 53 பேர்களில் 5 பேர்களும் 1992-93 ல் கடன் பெற்ற 24 பேர்களில் 7 பேர்களும் மொத்தம் 12 நபர்கள் ஒழுங்காக கடன் தொகையினை திருப்பிச் செலுத்தியுள்ளார்கள். 1993-94-ம் ஆண்டில் 52 பேர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன்களுக்கு இன்னமும் தவணை ஏற்படவில்லை.

52—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்ட கூட்டுறவு வங்கி மூலம் கடன் பெற்றோர் விவரம்:

வினா எண் 25005—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட கூட்டுறவு வங்கியில் 1993 ஜூன் இறுதி வரை எத்தனை பேருக்கு ஐ.ஆர்.டி.பி.திட்டத்தின் கீழ் கடன் அளிக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலம் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் 1-4-1992 முதல் 31-3-1993 முடிய 3,929 நபர்களுக்கும் மற்றும் 1-4-1993 முதல் 30-6-1993 முடிய 590 நபர்களுக்கும் ஆக மொத்தம் 4519 நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

53—

கோட்டப்பாளையம் கூட்டுறவு வங்கியின் மூலம் கறவை மாட்டுக் கடன் வழங்குதல்.

வினா எண் 27252—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி கோட்டப்பாளையம் கூட்டுறவு வங்கியின் மூலம் கறவை மாட்டுக் கடன் பி. மேட்டூரில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:

உப்பிலியாபுரம் தொகுதி கோட்டப் பாளையம் கூட்டுறவு வங்கியின் மூலம் பி. மேட்டூரில் கறவை மாட்டுக்கடன் 1992-93ம் ஆண்டில் 5 பேருக்கு ரூ. 35,000ம் 1993-94-மும் ஆண்டில் 8 பேருக்கு ரூ. 38,000-மும் வழங்கப்பட்டுள்ளது.

54—

இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிற்கு மயானச் சாலை மற்றும் தகரக் கொட்டகை அமைத்தல்.

வினா எண் **2195**—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிற்கு மயானச் சாலை அமைத்துத் தகரக் கொட்டகை போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிற்கு மயானச் சாலை அமைத்துத் தகரக் கொட்டகை அமைக்க நிதி ஒதுக்கீடு இல்லாததால், வரும் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இவ்வேலையை எடுத்து செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.

55—

சேதுபாவா சத்திரம் ஒன்றியத்தில் சாலைகளை தார்ச்சாலையாக்குதல்

வினா எண் **6728**—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம். முதுகாடு ஊராட்சி ஆவுடையாணிக் கோட்டையிலிருந்து, கொடி வயல் செல்லும் சாலையையும், முதுகாடு வழியாக பெருமகளூர் செல்லும் சாலையையும் கப்பிச் சாலையாகவும், தார்ச்சாலையாகவும், மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ளபடி முதுகாடு ஊராட்சி ஆவுடையாணிக்கோட்டையிலிருந்து கொடிவயல் செல்லும் ஊராட்சி சாலையின் நீளம் 3 கீ.மீ. இச்சாலை கப்பிச் சாலையாக உள்ளது. முதுகாடு பெருமகளூர் சாலை 2.8 கி.மீ. நீளம் கொண்ட கருங்கல் ஜல்லிசாலையாக உள்ளது. இச்சாலை மேம்பாட்டிற்கு திட்டங்களில் ஒதுக்கீடு இல்லாததால் இச்சாலைப் பணியினை செய்திட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

56—

துறையூரில் சாலைகளை தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 6959—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் ஆதிதிராவிடர் தெருவிலிருந்து மரக்காவலசை வரை செல்லும் சாலையை மராமத்து செய்து, தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள துறையூர் ஆதிதிராவிடர் தெருவிலிருந்து மரக்காவலசை வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

57—

சாந்தாம்பேட்டை-குருவிக்கரம்பையில் சி.எம்.பி. ஆற்றுக்கரை சாலையை கப்பிச் சாலையாக்குதல்.

வினா எண் 7061—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சாந்தாம் பேட்டையிலிருந்து குருவிக்கரம்பைக்கு சி.எம்.பி. ஆற்றுக்கரை வழியாக செல்லும் சாலையை கப்பிச் சாலையாக ஆக்கித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர நிதி வசதி இல்லாத காரணத்தினால் எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

58—

மடத்திக்காட்டில் கல்வெர்ட் கட்டுதல்.

வினா எண் 7115—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மடத்திக் காடு குடியிருப்புப் பகுதியின் கீழ் தெருவிலும் மேல தெருவிலும் இரண்டு கல்வெர்ட் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள குடியிருப்புப் பகுதியின் கீழ தெருவிலும் மேல் தெருவிலும் இரண்டு கல்வெர்ட் கட்டிக் கொடுக்கப் போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது செயற்குறிப்பு இல்லை.

59—

பூவனம் ஆதிதிராவிடர்களுக்கு மயானச் சாலை அமைத்தல்.

வினா எண் 7345—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவனம் ஆதி திராவிடர்களுக்கு மயானச் சாலை அமைத்துத் தகரக் கொட்டகை போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள மயானச்சாலையை அமைத்துத் தகரக்கொட்டகை போட்டுத்தர நிதி ஆதாரம் இல்லாததால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1994 நவம்பர் 3

60—

புக்கரம்பைக்கு மயானச் சாலையைச் செப்பனிட்டு தகரக் கொட்டகை அமைத்தல்.

வினா எண் 7348—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புக்கரம்பைக்கு மயானச் சாலையை செப்பனிடவும், தகர கொட்டகை அமைத்துத் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

நிதி ஆதாரம் இல்லாததால் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள மயானச் சாலையை செப்பனிடவும் தகரக் கொட்டகை அமைத்துத் தரவும் அரசிடம் செயற்குறிப்பு இல்லை?

61—

ஆணைக்காடு-கல்லூரணிக்காடு சாலையில் பாலம் கட்டுதல்.

வினா எண் 7357—திரு. ஆர் .சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி பட்டுக்கோட்டை மெயின் சாலையிலிருந்து ஆணைக்காடு வழியாக கல்லூரணிக்காடு செல்லும் சாலையின் இடையில், பாலம் ஒன்று கட்டி செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், காலகம் ஊராட்சி பட்டுக்கோட்டை மெயின் சாலையிலிருந்து ஆணைக்காடு வழியாக கல்லூரணிக்காடு செல்லும் சாலையின் இடையில் பாலம் கட்டி செப்பனிட்டு தார்ச்சாலையாக மாற்றித்தர போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது செயற்குறிப்பு இல்லை.

1994 நவம்பர் 3]

62---

தில்லங்காட்டிலிருந்து பாடுவாங்கொல்லை சாலையை செப்பனிடுதல்

*வினா எண் **7550**---திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா---*

தஞ்சைமாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் தில்லங்காட்டிலிருந்து பாடுவாங்கொல்லைக்கு செல்லும் சாலையை அகலப்படுத்தி கப்பிச் சாலையாக்கவும் இரண்டு இடத்தில் இரண்டு கல்வெர்ட்டு அமைத்துத் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை---

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பகுதி, வண்டிப்பாதையாக அகலமில்லாது இருக்கிறது. அகலப் படுத்த வேண்டிய பகுதி பட்டா நிலமாக உள்ளதால் சாலை அமைக்க முடியாத நிலை உள்ளதுடன் நிதி வசதி இல்லாததால் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

63---

குண்டாங்கல் காடு-புளியம்பட்டிவரை சாலை அமைத்தல்.

*வினா எண் **10463**---டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---*

(அ) சங்ககிரி ஒன்றியம், குண்டாங்கல்காடு முதல் புளியம்பட்டி வரை சாலை போட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது?

விடை---

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்ககிரி ஒன்றியம், குண்டாங்கல் காடு முதல் புளியம்பட்டி வரை சாலை போட நிதி வசதி இல்லாத காரணத்தினால் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

[1994 நவம்பர் 3

64—

குண்டாங்கல்காடு-காவிரி கால்வாய் மேல் பாலம் அமைத்தல்.

*வினா எண் **10465**—டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, குண்டாங்கல்காடு, காவிரி கால்வாய் மேம்பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்.

நிதிவசதி இல்லாத காரணத்தினால் சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

65—

அண்ணாமலைபுதூர்-மேல மருதப்பபுரம் சாலையை சீர் செய்தல்.

*வினா எண் **14843**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், அண்ணாமலைபுதூரிலிருந்து மேலமருதப்பபுரம் வரை உள்ள சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை வெள்ளத்தால் சேதமடைந்து அதை நவம்பர் 1992-ல் ரூ. 1,500 மதிப்பீட்டில் சீர் செய்யப்பட்டது. தற்போது சாலையில் போக்குவரத்து நல்ல நிலைமையில் உள்ளது. சாலை முழுவதையும் புதுப்பிக்க, வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1994 நவம்பர் 3]

66—

ஆலங்குளம் ஒன்றியத்தில் சாலையைப் பழுதுபார்த்தல்.

*வினா எண் **14844**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் ஒன்றியம், அமுதாபுரம் சாலையிலிருந்து கல்லத்திக்குளம் வேலாயுதபுரம் சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை வெள்ள நிவாரண திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய எடுக்கப்பட்டு தற்பொழுது வேலைகள் முடிவுப் பெற்றுவிட்டன.

67—

வடக்குக் காவலர்குறிச்சி-கம்மாவூர் சாலையை விரிவு படுத்தல்.

*வினா எண் **14847**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் ஒன்றியம், வடக்கு காவலர்குறிச்சியிலிருந்து கம்மாவூருக்குச் செல்லும் சாலையை விரிவுபடுத்தி மெட்டல் போட்டுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட சாலையின் இரு மருங்கிலும் ஆக்கிரமிப்புக்கள் உள்ளதால் ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்பட்ட பின்னர் குறிப்பிட்ட சாலை பராமரிப்பு வேலையினை ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் மூலம் எடுத்து செய்யப்படும்.

68—

வீராணம் கால்வாயில் நடைபாதை பாலம் அமைத்தல்.

*வினா எண் **14858**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கீழப்பாவூர் ஒன்றியம், தாயார் தோப்பு கிராமத்தில் வீராணம் கால்வாயின் குறுக்கே ஒரு சிறிய நடைபாதை பாலம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள நடைபாதை பாலம் வெள்ள நிவாரணத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ரூ. *30,000* மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

69—

குளத்துப்பாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்.

*வினா எண் **19263**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடி ஒன்றியம், குளத்துப்பாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

70—

சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுக்கு யானைக்குட்டி வழங்குதல்.

*வினா எண் **124**—திரு. சோ. இராசாராமன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக "கோயில் யானை" இல்லாமல் பல ஆண்டுகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுக்கு ஒரு யானைக் குட்டி வழங்க 19-1-1994-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

71—

கிராமங்களில் உள்ள கோவில் நிலங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீடு கட்டுதல்.

வினா எண் 328—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களிலுள்ள கோவில் புன்செய் நிலங்களில் அரசு ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீடு கட்ட நிலம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

பிற்படுத்தப்பட்டோருக்கு குடியிருப்புக் காலனி அமைக்க நில ஆர்ஜித முறையின்கீழ் 15 திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

72—

கோவில்களில் பணிபுரியும் ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்துதல்.

வினா எண் 1330—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து கோவில்களில் பணிபுரியும் கோவில் ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவாக அது செயலாற்றப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) திருக்கோயில் பணியாளர்களின் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

73—

வேலூர் விநாயகர் கோயில் நிலம் ஆக்கிரமிப்பு பற்றிய விபரம்.

Question No. 3266—Thirumathi V. G. Manimegalai: will the Hon'ble Minister for Hindu Religious and Charitable Endowments be pleased to state—

(a) Whether the HR & CE Administration has found out encroachment of Arulmigu Salai Vinayakar temple lands at Vellore?

(b) The steps taken to restore the land to the temple?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர்களைச் சட்டப்படி வெளியேற்ற வேலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவை நிலுவையில் உள்ளன.

74—

பத்தூர் நடராஜர் சிலையை மீண்டும் கொண்டுவருவதற்கு ஆன செலவு.

*வினா எண் **4091**—திரு. ஆ. சுப்புரத்தினம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலையை மீண்டும் இம்மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கு எவ்வளவு செலவானது?

(ஆ) இதில் மாநில அரசின் பங்கு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) பத்தூர் அருள்மிகு நடராஜர் சிலையை மீண்டும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்கு இதுவரை ஏற்பட்ட மொத்த செலவு ரூ. 3,16,99,760 ஆகும்.

(ஆ) இச்சிலை வழக்குத் தொடர்பான வழக்கு கட்டணம் முழுவதும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் எனவும் இதர வகை செலவினங்களை (Miscellaneous Charges) மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என முடிவெடுக்கப்பட்டு, அதன்படி இம்மாநில அரசு செலவு செய்துள்ள தொகை ரூ. 22,14,716 ஆகும்.

75—

புதுக்கோட்டை ஒன்றியம் வடக்கு தொண்டமான் ஊரணியில் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*வினா எண் **6307**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியத்தில், வடக்கு தொண்டமான் ஊரணியில் புதிதாக ஒரு கல்யாண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

இல்லை.

[1994 நவம்பர் 3

76—

தமிழ்நாட்டில் உள்ள தனியார் இந்து சமய அறக்கட்டளைகள் பற்றிய விவரம்.

வினா எண் **6518**-திரு எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியாருக்குச் சொந்தமாக உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் (Hereditary Endowment Hindu Trust) விவரம் என்ன?

(ஆ) அவற்றின் சொத்து மற்றும் ஆண்டு வருவாய் விவரம் என்ன?

(இ) அவற்றின் நிர்வாகத்தில் அரசின் துறைக்குள்ள பொறுப்பு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் தனியாரால் நிறுவப்பட்டு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்திற்குள் செயல்பட்டு வரும் இந்து சமய அறக்கட்டளைகள் 427 ஆகும்.

(ஆ) அவற்றின் சொத்து மற்றும் வருமானம் பின்வருமாறு:

		நஞ்சை ஏ.செ.	புஞ்சை ஏ.செ.
(1)	அறக்கட்டளைகளுக்கு சொந்தமான நிலங்கள் மொத்த விஸ்தீரனம்	1548.17	675.91
(2)	கட்டிடங்கள் மொத்த எண்ணிக்கை	99	

(3) மனைப்பகுதிகள்-

(1) காலி நிலம் .. 7.73 ஏக்கர்

(2) மனைகள் .. 3,637 சதுர அடி

மேற்படி சொத்துக்களின் மூலம் ஆண்டு வருவாய் ரூ. 6,59,273 ஆகும்.

1994 நவம்பர் 3]

(இ) இந்து சமய அறநிலைய சட்டம் 22/1959 ன் கீழ் வகுக்கப்பட்ட அதிகாரங்களின்படி அறங்காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். மேலும் அச்சட்டத்தின் பிரிவுகள் மற்றும் விதிகளின்படி அறக்கட்டளைகளின் நிர்வாகம் அமைந்துள்ளதா என்பது கண்காணிக்கப்பட்டு கணக்குகள் தணிக்கை செய்யப்படுகின்றன.

77—

வெளிமாநிலங்களில் கோயில்களுக்குள்ள சொத்துக்கள் விவரம்.

வினா எண் 9304—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கோவில்களுக்கு வெளிமாநிலங்களில் நிலங்கள், வீடுகள் ஆகிய சொத்துக்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):

தமிழகத்திலுள்ள கோயில்களுக்கு வெளிமாநிலங்களில் உள்ள சொத்துக்களின் விவரம் பின்வருமாறு:

வரிசை எண்ணும் திருக்கோயிலின் பெயரும். (1)	சொத்துள்ள இடம். (2)	சொத்தின் விவரம். (3)
1. அருள்மிகு பார்த்த சாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை-5.	1. கண்டாவரம் கிராமம் நெல்லூர் வட்டம், ஆந்திரப் பிரதேசம்.	3.38 ஏக்கர்.
	2. சின்னத்தோட்ட கிராமம், ஆந்திரப் பிரதேசம்.	5.55 ஏக்கர் நஞ்சை நிலம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

வரிசை எண்ணும் திருக்கோயிலின் பெயரும். (1)	சொத்துள்ள இடம். (2)	சொத்தின் விவரம். (3)
	3. 128 டிஸ்பென்சரி ரோடு, 65, பழக்கடைத் தெரு, பெங்களூர்.	2. கட்டிடங்கள்.
2. அருள்மிகு ரெங்கநாதர் சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்.	1. மதனப்பள்ளி மண்டல தேவப்பூடி கிராமம், கிருஷ்ணா மாவட்டம் ஆந்திரப்பிரதேசம்.	0.60 ஏக்கர் நஞ்சை நிலம்
	2. பந்துமில்லி மண்டல மூலப்பூர் கிராமம், கிருஷ்ணா மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.	0.80 ஏக்கர் நஞ்சை நிலம்.
	3. பெந்தளூர் கிராமம், கிருஷ்ணா மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்	0.80 ஏக்கர் நஞ்சை நிலம்.
3. அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை.	சேத்தூர் கிராமம், காரைக்கால்.	19 மா, 74 6.58 ஏக்கர் நஞ்சை நிலம்.
4. அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், சோளிங்கர், வாலாசா வட்டம், வடஆற்காடு மாவட்டம்.	1. காலு, கொல்லு கிராமம், மந்தைவெளி வட்டம், கிருஷ்ணா மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.	1.09 ஏக்கர் நஞ்சை நிலம்
5. அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில், பரதராமி, குடியாத்தம் வட்டம்.	1. பச்சப்பூர் கிராமம், ஆந்திரா மாநிலம்	4.19 ஏக்கர் நஞ்சை நிலம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

வரிசை எண்ணும் திருக்கோயிலின் பெயரும் (1)	சொத்துள்ள இடம். (2)	சொத்தின் விவரம். (3)
	2. போகட்டபள்ளி கிராமம், ஆந்திரா மாநிலம்.	4.13 ஏக்கர் புஞ்சை நிலம்.
	3. பட்ராப்பள்ளி கிராமம், ஆந்திரா மாநிலம்.	14.26 ஏக்கர் புஞ்சை நிலம் 0.58 ஏக்கர் புஞ்சை நிலம்.
	4. பாவாடை தாரூர் கிராமம், ஆந்திரா மாநிலம்	4.27 ஏக்கர் புஞ்சை நிலம்.
6. அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில், உத்தம பாளையம் வட்டம், மதுரை மாவட்டம்	1. தலையாங்காவலர், கேரளா மாநிலம்	6.15 ஏக்கர் பு.நிலம்
	2. ஆடு கடந்தான், கேரளா மாநிலம்	12.96 ஏக்கர் பு.நிலம்.
	3. சாந்துருவி, கேரளா மாநிலம்	6.49 ஏக்கர் பு.நிலம்.
7. அருள்மிகு பண்டரிநாத சுவாமி திருக்கோயில், பீமநகர், பண்டரிபுரம், திருச்சி வட்டம் மற்றும் மாவட்டம்.	1. கண்டோன்மெண்ட், பெங்களூர். கர்நாடகா மாநிலம்	கதவு எண் 5 மற்றும் 6ல் உள்ள கட்டிட ங்கள்
	2. சுல்தான்ஜ்குண்டா ரோடு, பெங்களூர், கர்நாடக மாநிலம்.	கதவு எண் 58,59,60 மற்றும் 61

வரிசை எண்ணும் திருக்கோயிலின் பெயரும் (1)	சொத்துள்ள இடம். (2)	சொத்தின் விவரம். (3)
	3. திம்மையா ரோடு, பெங்களூர், கர்நாடக மாநிலம்	கதவு எண் 284,285, 286/1, 286/2 286/3, மற்றும் 287
8. அருள்மிகு தட்சிணா மூர்த்தி மடம், சாந்தல், உதகை வட்டம், நீலகிரி மாவட்டம்.	காளந்தவாடி கிராமம், கர்நாடகா மாநிலம்.	3.40 ஏக்கர் நஞ்சை நிலம்.

78—

பெருமகளூர் அருள்மிகு சோமநாத சுவாமி கோவிலைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண் 13607—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பெருமகளூர் அருள்மிகு சோமநாத சுவாமி கோவிலை 1992-93-ல் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

79—

சிறந்த பேச்சாளர்களை வைத்து சமய சொற்பொழிவு நடத்துதல்.

வினா எண் 15810—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் சிறந்த பேச்சாளர்களை வைத்து சமய சொற்பொழிவு நடத்த அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் விழாக் காலங்களில், சிறந்த சமயச் சொற்பொழிவாளர்கள் மற்றும் சமய வித்தகர்கள் சமய சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டு சமயச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

80—

புதுக்கோட்டை தொகுதி, தெற்குவாண்டான் விடுதி, காரைக் குறிச்சி முனியன் கோவில் குளத்தை சீர் செய்தல்.

வினா எண் ***16266***—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில், தெற்கு வாண்டான் விடுதி கிராமத்தில் இருக்கும் காரைக்குறிச்சி முனியன் கோவில் குளத்தை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்கோயில் அரசு புறம்போக்கு இடத்தில் உள்ளது. இதற்கு அருகாமையிலுள்ள குளம் வருவாய்த்துறைக்கு உட்பட்டதாகும். இக்குளத்தினை சீரமைப்பதற்கான செயற்குறிப்பு அறநிலையத்துறையிடமோ அல்லது வருவாய்த் துறையிடமோ இல்லை.

81—

புதுக்கோட்டை மாவட்டம், குருந்திரக்கோட்டை ஸ்ரீமகாளி அம்மன் ஆலயத்தைப் புதுப்பித்தல்.

வினா எண் ***16925***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், குருந்திரக்கோட்டை ஸ்ரீமகாளி அம்மன் ஆலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

82—

கேந்தனூர் குருபூஜை மடத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

*வினா எண் **16957**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கேந்தனூர் குருபூஜை மடத்தை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

83—

தமிழகக் கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், மேளம் வாசிப்பவர்களுக்கு சம்பளத்தை உயர்த்துதல்

*வினா எண் **20786**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், மேளம் வாசிப்பவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

84—

தமிழகத்தில் வேத ஆகமக் கல்லூரி துவங்குதல்.

*வினா எண் **20788**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) தமிழகத்தில் வேத ஆகமக் கல்லூரி எப்போது எங்கு தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதில் எந்தெந்த சாதியினர் பயிற்சி பெற வாய்ப்புள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி சங்கத்திற்கு 17-1-1994 அன்று அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் 7-2-1994 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. வேதம் மற்றும் ஆகமம் ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்யவும், அவற்றைக் கற்றுக் கொடுக்கவும், ஒரு நிலையம் ஏற்படுத்துவதற்காக, திருச்சி மாவட்டத்தில் உள்ள கம்பரசம் பேட்டையில் 9.49 ஹெக்டேர் நிலம் தமிழ்நாடு வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதில் எல்லா சாதியினரும் பயிற்சி பெற வாய்ப்புள்ளது.

85—

திருப்பத்தூர் புற்றுக்கண் அம்மன் ஆலயத்தை விரிவுபடுத்துதல்.

வினா எண் 21928—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் உள்ள புற்றுக்கண் அம்மன் கோயிலை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதியில் உள்ள புற்றுக்கண் அம்மன் கோயிலை விரிவுபடுத்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

[1994 நவம்பர் 3

86—

செங்கம் பார்த்தசாரதி பெருமாள் கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுதல்.

வினா எண் 22655— டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் ஸ்ரீவேணுகோபால பார்த்தசாரதி பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

செங்கம் ஸ்ரீவேணுகோபால பார்த்தசாரதி பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் திருமண மண்டபம் கட்ட ஆலயத்தில் நிதி வசதி இல்லாததாலும் அரசு நிதி வழங்கிட இயலாத நிலையிலும், திருமண மண்டபம் கட்ட இயலாது.

87—

கொடுமுடி மகுடேஸ்வரர் கோயிலுக்கு முடி எடுக்கும் கொட்டகை அமைத்தல்.

வினா எண் 26650— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி, அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலுக்கு முடி காணிக்கை செலுத்த வரும் பக்தர்களுக்கு தனியாக முடி எடுக்கும் கொட்டகை ஒன்றை ஏற்படுத்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

கொடுமுடி, அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் இல்லாததால் பக்தர்கள் முடி காணிக்கை செலுத்த தனி மண்டபம் கட்ட இயலாத நிலை உள்ளது.

1994 நவம்பர் 3]

88—

பரமத்தி ஈஸ்வரன் கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டுதல்.

வினா எண் ***23753—திருமதி கே. மரியம் உல் ஆசியா:*** *மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருச்சி மாவட்டம் க. பரமத்தியிலுள்ள ஈஸ்வரன் கோவிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

மேற்படி திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

89—

திருக்கோயில்களில் உள்ள அன்பு இல்லங்கள் பற்றிய விவரம்.

வினா எண் ***26497—திரு ஆ. சுப்புரத்தினம்:*** *மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தற்போது எத்தனை திருக்கோயில்களில் அன்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன?

(ஆ) அதற்காக ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவிடப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) தற்போது *22* திருக்கோயில்களில் அன்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

(ஆ) அதற்காக ஆண்டொன்றுக்கு ஏற்படும் மொத்த செலவினம் *ரூ.36,09,802* ஆகும்.

90—

பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை மூலம் இயங்கும் பள்ளிகள் விவரம்.

வினா எண் ***22259***—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) தமிழ்நாட்டில் பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் நடைபெறும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல் நிலைப்பள்ளிகள் எத்தனை?

(ஆ) இவைகளில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறும் உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் நடைபெறும் உயர்நிலைப்பள்ளிகள்: 20, மேல் நிலைப்பள்ளிகள்: 5.

(ஆ) ஏதுமில்லை.

91—

காஞ்சி கிராமத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு விடுதிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***23331***—*டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி கிராமத்தில் பிற்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு நடப்பு நிதியாண்டில் அரசிடம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை.—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்:

செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் நல விடுதி ஏதும் இல்லாத நிலையில், விடுதி கட்ட வாய்ப்பில்லை.

92—

வையப்ப மலையில் பிற்பட்டோர் மாணவியர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **24628**—டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலையில் அமைந்துள்ள பிற்பட்டோர் மாணவியர் விடுதிக்கு அரசுக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே அது செயல்படுத்தப்படுமா?

விடை.—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், வையப்பமலையில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்கு அரசு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

93—

புதுக்குப்பத்தில் மீனவர்களுக்கு திருமண மண்டபம் கட்டுதல்.

*வினா எண் **26852**—செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் மீனவர்களின் மைய இடமான புதுக்குப்பம் கிராமத்தில் மீனவர்களுக்கு திருமண மண்டபம் ஒன்றைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): *புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் மீனவர்களின் மைய இடமான புதுக்குப்பம் கிராமத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. 1993-94 ஆம் ஆண்டில் புதுக்குப்பம் கிராமம் மாதிரி மீனவர் கிராமமாக தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்ட போதிலும், இக்கிராமத்தில் 50 வீடுகள் மட்டும் கட்டப்படுவதால் சமூக நலக் கூடம் கட்டி வழங்கிட வாய்ப்பு ஏதுமில்லை. 75 வீடுகளுக்கு மேல் கட்டப்படும் கிராமத்தில் மட்டுமே சமூகநலக்கூடம் ஒன்று அமைத்திட மைய அரசு அறிவித்துள்ளது.*

94—

தேசிய கடல் மீனவர் சேமிப்பு நிதியிலிருந்து இராமநாதபுர மாவட்டத்தில் கடன் பெற்றோர் விவரம்.

வினா எண் ***33498***—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தேசிய கடல் மீனவர் சேமிப்பு நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் பெற்ற தொகை 1992-93-ல் எவ்வளவு?

(ஆ) மீனவர்கள் இத்திட்டத்தின் மூலம் மேலும் பயன் பெற அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாவை?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): *1992-93-ல், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 9,364 கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசின் நிவாரணத்*

1994 நவம்பர் 3]

தொகை ரூ. 66,51,990 பெற்றனர். இத்திட்டத்தில் கிடைக்கும் பலன்களை மீனவர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் மீனவர்களுக்கு விளக்கப் படுகின்றன. அதன் பயனாக 1993-94-ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 12,148 மீனவர்கள் சேர்ந்து பயன் பெற்றனர். (முந்தைய 1992-93 ஆம் ஆண்டில் 9,364 மீனவர்கள் மட்டுமே பயனடைந்துள்ளனர்) அவர்களுக்கு வழங்கப்பட்ட மத்திய மாநில அரசின் நிவாரணத் தொகை ரூ. 86,50,890 ஆகும்.

95—

மங்கலதேவி கண்ணகி கோவிலைப் புதுப்பித்தல்.

வினா எண் 136—திரு. ந.சோ. இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வரலாற்று சிறப்புமிக்க மங்கலதேவி கண்ணகி கோவிலைச் சுற்றுலாத் துறை மூலம் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

96—

புவனகிரி தொகுதி எம்.ஜி.ஆர். திட்டுவை சுற்றுலா மைய மாக்குதல்.

வினா எண் 344—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். திட்டு சுற்றுலா மையமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இல்லை. ஏனெனில் மத்திய அரசு வெளியிட்டுள்ள கடலோராப் பகுதிகள் ஒழுங்குமுறை விதிகள் அறிக்கையின்படி இப்பகுதியில் எந்த ஒரு மேம்பாட்டு நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது.

97—

சுற்றுலாத் துறை மூலம் சுற்றுலா விடுதிகள் துவங்குதல்.

*வினா எண் **6288**— திரு. எம். ஆண்டி ஆம்பலம்:* மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சுற்றுலாத்துறை மேலும் எங்கெங்கு சுற்றுலா விடுதிகள் துவங்க திட்டமிட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

கட்டுமானப் பணி வேலைகள் முடிந்து திறக்கும் தருவாயுள்ள ஓட்டல்கள்:

திருக்கழுக்குன்றம், திருத்தணி, மேட்டுப்பாளையம், குன்னூர், இராமேஸ்வரம் சுற்றுலா தகவல் மையம்.

கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கும் ஓட்டல்கள்:

உத்திரகோசமங்கை, கொடை ரோடு, சாத்தூர், கும்பகோணம், பழநி, சேலம்.

***1993-94*—க்கான மத்திய அரசின் நிதி உதவி பெற்று கட்டுமானப் பணி தொடங்க இருக்கும் ஓட்டல்கள்.**

1. பெரம்பலூர் 2. நாமக்கல் 3. விருதுநகர் 4. கிருஷ்ணகிரி. 5. சமயபுரம்.

பின்வரும் இடங்களில் ஓட்டல்கள் கட்டுவதற்கான கருத்துருக்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளன. மத்திய அரசின் நிதியுதவி எதிர்பார்க்கப்படுகிறது.

1. குற்றாலம். 2. திருநெல்வேலி.

1994 நவம்பர் 3]

98—

இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உணவகம், ஓட்டல் மற்றும் ஓய்வு இல்லம் தமிழகத்தில் துவங்குதல்.

Question No. 7937—Thirumathi V.G. Manimegalai: will the Hon'ble Minister for Tourism be pleased to state—

(a) Whether India Tourism Corporation consult the Tamil Nadu State Tourism Corporation before opening any restaurant hotel or rest houses in this State?

(b) The details thereof.

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

99—

தளிமலைக்கோட்டையை சுற்றுலா மையமாக்குதல்.

வினா எண் ***8623***—திரு கா. பூ. முனுசாமி: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சிறிய இங்கிலாந்து (Little England) என அழைக்கப்பெறும் தளிமலை கோட்டை வாழ்விடமாகக் கருதப்பட்டு சுற்றுலா மையமாக ஆக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 நவம்பர் 3

(ஆ) கேள்வி எழவில்லை.

100—

பழுதுபட்ட பள்ளிவாசல் மற்றும் கபரஸ்தான் சீரமைப்புப் பணிக்கு நிதி உதவி வழங்குதல்.

வினா எண் ***11829***—*திரு எம். எம். எஸ்.அபுல்ஹசன்:* *மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பழுதுபட்ட பள்ளிவாசல் மற்றும் கபரஸ்தான் சீரமைப்புப் பணிக்கு அரசு மீண்டும் நிதி உதவி வழங்குமா?*

(ஆ) *ஆம் எனில், விவரம் என்ன?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) *ஆம்.*

(ஆ) *1993-94-ஆம் ஆண்டில் கபரஸ்தான் சீரமைப்புப் பணிக்கு மட்டும் தனியாக ரூ. 5.00 லட்சம் சிறு கடன் நிதியுதவியாக அரசால் வழங்கப்பட்டது. இக்கடன் தொகை பின்னர் மானியமாக மாற்றி ஆணையிடப்பட்டது. 1994-95-ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ. 5.00 லட்சம் மானியமாக வழங்க அரசு உத்தேசித்துள்ளது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

ஆறாம் பட்டியல்

1—

10 (ஏ) (1)-ன் கீழ் பணிபுரிந்த இளநிலை உதவியாளர்கள் மீண்டும் பணியமர்த்த நடவடிக்கை.

*வினா எண் **3907**—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சமீப காலங்களில் 10 (ஏ) (1)-ன் கீழ் இளநிலை உதவியாளர்களாக பணி புரிந்தவர்களை பணி நீக்கம் செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கருணை அடிப்படையில் மீண்டும் அவர்களை பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 15-11-1980 முதல் 24-6-1984 வரை மற்றும் 1986 முதல் 15-5-1991 வரை இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்களில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு பணியாற்றிய மற்றும் பணியாற்றும் நபர்களின் பணியை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தனித் தேர்வு நடத்தி குறிப்பிட்ட மதிப்பீடுகள் பெற்றால் முறைப் படுத்த அரசு ஆணை நிலை எண். 25, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பணியமர்த்தல்) துறை, நாள் 20-1-1994 மற்றும் அரசு ஆணை நிலை எண் 433, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பணியமர்த்தல்)துறை, நாள் 14-12-1993-ல் முறையே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2—

அரசு தேர்வாணைக் குழு குரூப் 1,2,3 தேர்வுகள் நடத்த தேர்வு மையங்கள் அமைத்தல்.

*வினா எண் **4023**—திரு. தேனி பன்னீர்செல்வம்:மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு தேர்வாணைக் குழு நடத்தும் குரூப் 1,2,3 தேர்வுகள் சென்னையில் மட்டும் நடத்தப்படுவதால் ஏற்படும் சிரமங்களை கருத்தில்

கொண்டு தேர்வு மையங்களை வேறு நகரங்களுக்கு விரிவு படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலும் தேர்வு மையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினரால் நடத்தப்படும் குரூப் 1,2 மற்றும் 3 ஆகியவற்றிற்கான தேர்வுகள் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மையங்களில் ஏற்கெனவே நடத்தப்பட்டு வருகின்றன. 200-க்கும் குறைவான நபர்கள் தேர்வு எழுதினால் சென்னையில் மட்டும் நடத்தப்படும்.

3—

அரசு வேலை வாய்ப்பில் வயது வரம்பை உயர்த்துதல்.

வினா எண் ***4417***—திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வேலை வாய்ப்பில் சேர அரசு நிர்ணயித்திருக்கும் வயது வரம்பை உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

4—

பேராவூரணியில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்குதல்.

வினா எண் ***20745***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரத்தில் ஆவணம் சாலையில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

பேராவூரணி நகரில் ஆவணம் சாலையில் பேராவூரணி கூடுதல் கொள்முதல் நிலையம் சிதம்பரம் செட்டியார் அரிசி ஆலையில் 1994 சம்பா பருவத்தில் 17-1-1994 முதல் இயங்கி வந்தது. அந்த நேரடிக் கொள்முதல் நிலையத்தில் சம்பா பருவத்தில் 395.64 டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. போதிய நெல்வரத்து இன்மையால் 20-4-1994 முதல் பேராவூரணி கூடுதல் நேரடிக் கொள்முதல் நிலையம் மூடப்பட்டுள்ளது.

5—

பரமக்குடி பெண் மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.

வினா எண் **1636**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் பெண்கள் மருத்துவமனை புறநோயாளர் பகுதிக்கும் வார்டுக்கும் இடையே உள்ள நகராட்சிப் பாதையை எடுத்து விட்டு ஒரே சுற்றுச் சுவராக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

6—

ஆயக்குடி மருத்துவமனையில் மருத்துவர் தங்க நடவடிக்கை எடுத்தல்.

வினா எண் **6087**—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடி அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களில் எவரும் மருத்துவமனை வளாகத்தில் உள்ள இல்லத்தில் தங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இரவு நேரத்தில் அவசர மருத்துவ உதவி கொடுப்பதற்கு ஒரு மருத்துவர் கட்டாயம் அங்கு தங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பழனி வட்டம் பழைய ஆயக்குடி அரசு மருத்துவமனையின் வளாகத்தில் உள்ள மருத்துவமனை குடியிருப்பில் பொறுப்பில் உள்ள மருத்துவ அலுவலர் (டாக்டர் பி. ராஜலட்சுமி, எம்.பி.பி.எஸ்.,) தங்கிப் பணிபுரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் *10-5-1994* முதல் மருத்துவமனை வளாகத்தில் தங்கி பணிபுரிந்து வருகிறார்.

7—

திருவட்டாறு தொகுதி ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலாக மருத்துவர்கள் நியமித்தல்.

வினா எண் ***20953***—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டாறு தொகுதியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மாலையில் நோயாளிகளைப் பரிசோதிக்க மருத்துவர்கள் இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவட்டாறு தொகுதியிலுள்ள அனைத்து கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாலையில் நோயாளிகளைப் பரிசோதிக்க மருத்துவர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். மாலை நேரங்களில் வராமலிருந்தால் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

பச்சமலை டாப்செங்காட்டுப்பட்டி மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.

வினா எண் ***22068***—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சமலை டாப்செங்காட்டுப்பட்டி மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பச்சமலை டாப்செங்காட்டுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

9—

கடுகூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பாடு செய்தல்.

வினா எண் ***33652***—**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டம், கடுகூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பாடு செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

தற்சமயம் இல்லை.

10—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் தொலைபேசி வசதி செய்து தருதல்.

வினா எண் ***35709***—**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் நோயாளிகள், பொதுமக்கள் வசதிக்காக தொலைபேசி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

அரசு மருத்துவமனைகளில் பொது மக்கள் வசதிக்காக தொலைபேசி வசதி செய்து தர அரசு விதிகளில் இடமில்லை. எனினும், அரசு மாவட்ட

தலைமை மருத்துவமனைகளில் மட்டும் பொது மக்கள் மற்றும் நோயாளிகள் வசதிக்காக தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

11—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஒரே பயணச் சீட்டாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

வினா எண் 8862—திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஒருபயணக் கட்டணத்திற்கு ஒன்றுக்கு மேல் பயணச்சீட்டு வழங்குவதைத் தவிர்த்து காகித சிக்கனத்தை கருத்தில் கொண்டு ஒரே பயணச்சீட்டாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் கணணி முறையில் முன் பதிவு செய்யும்போது ஒரு நபருக்கோ அல்லது குழுவினருக்கோ ஒரே ஒரு பயணச்சீட்டு மட்டும் வழங்கப்படுகிறது. கணணி முறையில் முன்பதிவு இல்லாத இடங்களிலும், பிரயாணத்தின் போது பேருந்துகளில் வழங்கவும் பயணச்சீட்டுகள் கட்டண வகையில் அச்சடிக்கப்படுகின்றன. ஒரு பயணக்கட்டணத்திற்கு ஒரு பயணச் சீட்டு மட்டும் பயணிகளுக்கு அளிக்கும் பொருட்டு, 'பயணக் கட்டணம்' வாரியாக பயணச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டால், வகைகளின் எண்ணிக்கை அளவுக்கு அதிகரிப்பதுடன் பயணக்கட்டணம் மாறும்போது சிலவகைப் பயணச்சீட்டுகள் உபயோகமற்று அவைகள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இத்தகையப் பயணச் சீட்டுகளை நடத்துனர் கையாள்வதும் கடினம். மேலும் இதனால் ஏற்படும் அச்சுச் செலவு இழப்பினைத் தவிர்ப்பதற்காகவும், வழித்தடப் பயணச் சீட்டுகள் கட்டண வகைகளில் அச்சடிக்கப்பட்டு சில சமயங்களில் கூட்டு முறையில் வழங்கப்படுகின்றன.

1994 நவம்பர் 3]

12—

செல்லப்பிள்ளையார் கோவிலுக்கு நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **12417**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, சேதுபாவாச்சத்திரம் ஒன்றியம், செல்லப்பிள்ளையார் கோவில் வழியாக 1992-93-ல் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேராவூரணி, கட்டுமாவடி (வழி) பெருமகளூர் அத்தானி, திருவப்பாடி பிரதான சாலையில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் செல்லப்பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது. அரசு ஆணைப்படி பேருந்து இயக்கப்படும் சாலையில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்றவையாக கருதப்படும். எனவே, செல்லப்பிள்ளையார் கோயில் வழியாக நகரப்பேருந்து விட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

13—

பல்லவன் போக்குவரத்துக் கழக வழித்தடம் குறித்த நூல் தயாரித்தல்.

*வினா எண் **12516**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையிலும் அதன் புறநகரிலும் பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்து அதிகமாக இயங்குவதால் அந்த எண்ணுள்ள பேருந்துகள் எங்கே செல்லும் என்பதை அறிய வழித்தடங்கள் குறித்த நூல் ஒன்றை வெளியிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வெளியிடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து பிரித்து டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் என்ற புதிய போக்குவரத்துக்

கழகம் ஆரம்பிக்கப்பட்டு செயல் பட்டு வருவதால் இரு கழகங்களுக்கும் பொதுவான ஒருமித்த வகையில் வரைபட பேருந்து வழிகாட்டி தயார் செய்து விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14—

வடரெங்கத்திற்கு புதிய வழித்தடம் அமைத்தல்

வினா எண் ***14399*****—***திரு. து. மூர்த்தி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் இருந்து கீழமாத்தூர், குள்ளம் வழியாக வடரெங்கத்திற்கு புதியதாக பேருந்துவசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

சீர்காழியில் இருந்து அரசூர், ஓலாயம்புத்தூர், கீழ்மாத்தூர் வரை 6 நடைகள் தனியார் துறைப் பேருந்து இயக்கப்படுகிறது. சீர்காழியிலிருந்து புத்தூர் குன்னம் வழியே வடரெங்கம் வரை சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து 4 நடைகளும், தனியார்துறைப் பேருந்து 14 நடைகளும் இயக்கப்படுகின்றன. கீழமாத்தூருக்கும், குன்னத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3/4 கிலோ மீட்டர் மட்டுமே. பேருந்து வசதி பெற்ற தடத்தில் இருந்து 1 கி.மீ. தூரத்திற்குள் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்ற பகுதியாகவே கருதப்படுவதால், கோரிக்கை தடத்தில் புதியதாக பேருந்து இயக்கத் தேவையில்லை.

15—

வி.கே.புதூருக்கு புதிய பேருந்து இயக்குதல்.

வினா எண் ***15122*****—***திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன் கோவிலிலிருந்து வீராணம் வழியாக வி.கே.புதூர் வரை போதுமான பேருந்து வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்கரன் கோவில், வீராணம், வி.கே.புதூர் வழித்தடத்தில் (36.0 கி.மீ) தற்போது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் இரண்டு புறநகர் பேருந்தும் 2 தனியார் புறநகர் பேருந்தும் சேர்த்து தினசரி 16 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுபோல சங்கரன் கோவில், வீராணம் வழித்தடத்தில் 6 பேருந்துகள் மூலம் 28 சுற்றுக்களும், வீராணம், வி.கே. புதூர் (5.0 கி.மீ. தூரம்) வழித்தடத்தில் 7 நகரப் பேருந்துகள் மூலம் 44 சுற்றுக்களும் தனித்தனியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு மேற்கண்ட பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

16—

தென்காசி-சென்னை திருவள்ளுவர் பேருந்தை புதிய வழித்தடம் வழியாக இயக்குதல்.

*வினா எண் **15640**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசியிலிருந்து சென்னை செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை கீழப்பாவூர், சுரண்டை, சங்கரன் கோவில், ராஜபாளையம் வழியாக இயக்க 1992-93-ல் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இல்லை.

17—

இராமநாதபுரம் மாவட்டம், கள்ளிக்குடிக்கு பேருந்து வசதி செய்தல்.

*வினா எண் **15885**— டாக்டர். எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் 1,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை இருக்கும் கள்ளிக்குடிக்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

கள்ளிக்குடி, மதுரை, இராமநாதபுரம் பிரதான சாலையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்படி சாலை மண் சாலையாக பேருந்து இயக்கத் தகுதியில்லாத சாலை என பரமக்குடி கோட்டப் பொறியாளர் (நெ. ஊ. து.) சாலை அமைத்தபின் கள்ளிக்குடிக்கு பேருந்து இயக்க பரிசீலனை செய்யப்படும்.

18—

வைத்தீஸ்வரன்கோவில் - தென்னலக்குடி பேருந்து வசதி செய்து கொடுத்தல்.

*வினா எண் **16118**—திரு.து. மூர்த்தி:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி வைத்தீஸ்வரன் கோவிலில் இருந்து எடக்குடி, வடபாதி வழியாக தென்னலக்குடிக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை

19—

கறம்பக்குடி-சென்னை திருவள்ளுவர் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

*வினா எண் **16123**—திரு.எஸ்.சண்முகநாதன்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் இருந்து சென்னைக்கு இயங்கிய திருவள்ளுவர் விரைவுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கறம்பக்குடியிலிருந்து சென்னைக்கு 6-10-1989 முதல் இயக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் போதுமான அளவு பயணிகள் பயன்படுத்தாததால் நிறுத்தப்பட்டன. புதுக்கோட்டையிலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள கறம்பக்குடி மக்கள், புதுக்கோட்டைக்கும் சென்னைக்கும் இடையே இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 3 பேருந்துகளைப் பயனபடுத்த அதிக வாய்ப்புள்ளதால் கறம்பக்குடி-சென்னை தடத்தினை மீண்டும் இயக்க வாய்ப்பில்லை.

20—

நன்னிலத்திற்கு திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **17318**—டாக்டர் க. கோபால்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சென்னை-வேதாரண்யம் தடத்தில் இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நன்னிலம் அருகேயுள்ள சன்னநல்லூர் வழியாக இயக்கப்படுகின்றன. நன்னிலம் என்ற இடமானது பிரதான சாலையிலிருந்து விலகி 4 கி.மீ. ஒதுக்குப்புறமாக உள்ளது. நன்னிலம் வழியாக இயக்கினால் பயணக் கட்டணமும், பயண நேரமும் அதிகரிக்கும். இதனை நெடுந்தூரம் பயணம் செய்யும் பயணிகள் விரும்பமாட்டார்கள். பயணிகளின் விகிதாச்சாரத்தைக் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது நன்னிலத்திலிருந்து சென்னைக்குத் தனிப்பேருந்து இயக்குவதற்குத் தற்போது அவசியமில்லை எனத் தெரிய வருகிறது.

21—

பேராவூரணி-இராமேஸ்வரம் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் ***17331*****—***திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு நேரடிப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை-சேதுபாவாசத்திரம்-இராமநாதபுரம் தடத்தில் சோழன் போக்கவரத்துக் கழகம் மூலம் 10 நடைகளும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் மூலம் 10 நடைகளும் இயக்கப்படுகின்றன. பட்டுக்கோட்டை-சேதுபாவாசத்திரம்-இராமநாதபுரம்-இராமேஸ்வரம் தடத்தில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் மூலம் 10 நடைகள் இயக்கப்படுகின்றன.

பேராவூரணியிலிருந்து சேதுபாவாசத்திரத்திற்கு 20 நடைகளும், கட்டுமாவடிக்கு 30 நடைகளும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பேராவூரணி-இராமேஸ்வரம் தடத்தில் மேற்குறிப்பிட்டவாறு பகுதி பகுதியாக பேருந்து வசதி போதிய அளவு உள்ளதால், புதியதாக நேரடிப் பேருந்து இயக்கத் தேவையில்லை.

22—

நாகப்பட்டிணம்-பூந்தோட்டம் நகரப் பேருந்தினைக் கூடுதலாக இயக்குதல்.

வினா எண் ***17414*****—***டாக்டர் க. கோபால்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதி, நாகப்பட்டிணம்-அண்ணா மண்டபம் பொறக்குடி வழியாக பூந்தோட்டம் வரை செல்லும் பேருந்தின் பயண எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாகப்பட்டிணம்-பூந்தோட்டம் (வழி) நாகூர், திட்டச்சேரி, திருமருகல், அண்ணா மண்டபம், பொறக்குடி தடத்தில் ஏ2ஏ பேருந்து சோழன் போக்குவரத்துக் கழகத்தால் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இயக்கப்படும் நடைகளிலே போதிய மக்கள் பயன்பாடு இல்லாத காரணத்தினால் கூடுதல் நடைகள் இயக்க இயலாது.

23—

திருவட்டாறு-விலவூர் கோணத்திற்கு பேருந்து வசதி செய்தல்.

வினா எண் ***19309***—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் விலவூர்கோணம்-ஆதி திராவிடர் காலனிக்குப் பேருந்து வசதி இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வூருக்கு மார்த்தாண்டத்தில் இருந்தும் தக்கலையில் இருந்தும் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): விலவூர் கோணம் கிராமம், குலசேகரம்-திற்பரப்பு நேரடி சாலையிலிருந்து சுமார் 0.8 கி.மீ. தூரத்தில் உள்ளடங்கி உள்ளது. இக்கிராமத்திற்கு செல்லும் சாலை பேருந்து இயக்கத்தக்க நிலையில் இல்லை. மேலும் பேருந்து வசதி பெற்றுள்ள சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்திற்கும் குறைவாக உள்ள தூரத்தில் உள்ளதால், விலவூர் கோணத்தைப் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படும்.

24—

புதுக்கோட்டை-பெருமகளூர் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் ***20315***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி வழியாக பெருமகளூர் வரை இயக்கப்பட்ட மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை-பெருமகளூர் (வழி) அறந்தாங்கி வழித்தடத்தில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் பேருந்தை இயக்கவில்லை. இவ்வழித் தடப் பகுதிகளில் போதுமான அளவில் போக்குவரத்துக் கழக மற்றும் தனியார் பேருந்துகள் இயங்குவதால் புதுக்கோட்டை-பெருமகளூர் (வழி) அறந்தாங்கி வழித்தடத்தில் நேரடிப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

25—

சென்னை-நிலக்கோட்டை இடையே திருவள்ளுவர் பேருந்து இயககுதல்.

வினா எண் 20358—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-நிலக்கோட்டை (வழி) திண்டுக்கல், காந்தி கிராமம், கொடைரோடு, சில்க்வார்பட்டி மூலமாக நிலக்கோட்டைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் சென்னையிலிருந்து திண்டுக்கல்லுக்கு 10 பேருந்துகள் 20 ஒரு வழிப் பயணங்களுடன் இயக்கப்படுகின்றன. திண்டுக்கல்லிலிருந்து நிலக்கோட்டை 32 கி.மீ. தொலைவில் தான் உள்ளது. நிலக்கோட்டைக்கு திண்டுக்கல்லிலிருந்து ஏராளமானப் பேருந்து வசதிகள் உள்ளன. இந்த வசதியை நிலக்கோட்டைப் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். நிலக்கோட்டைக்குத் தனியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

1994 நவம்பர் 3]

26—

கரிசலூர் கிராமத்திற்கு மீண்டும் பேருந்து இயக்குதல்.

வினா எண் 20635—திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், கரிசலூர் கிராமத்திற்கு ஏற்கனவே இயக்க நிறுத்தப்பட்டுள்ள பேருந்து தடம் எண் 3சி-ஐ மீண்டும் இயக்கி அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

வி.கே. புரம்-ஆவுடையாலூர் செல்லும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தடம் எண். 3சி வாயிலாக கரிசலூர் கிராமத்திற்கு 4 சுற்றுகள் தற்போது முறையாக இயக்கப்பட்டு வருகிறது.

27—

துறைமுகங்களுக்கு பொருட்கள் வழங்கும் நிறுவனங்கள்.

Question No. 20823—Thiru S. Rajaraman: Will the Hon'ble Minister for Transport be pleased to state—

(a) The number of individuals and firms who have sought permission to supply (1) Deck/Engine stores and (2) non-bonded provisions and stores during the year 1991-92 and

(b) The persons and firms selected ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) 12.

(ஆ) தூத்துக்குடி துறைமுகம்-

1. லாஷ்ரான் டிரேடிங் கம்பெனி,
82, எஸ்.பி.ஜி. கோவில் தெரு,
தூத்துக்குடி-628 001.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. கொரமெண்டல் மெரைன் கார்ப்பரேஷன்,
135, விக்டோரியா தெரு,
தூத்துக்குடி-628 001.

சென்னைத் துறைமுகம்-

1. லாஷ்ரான் டிரேடிங் கம்பெனி,
33, அங்கப்பநாயக்கன் தெரு,
சென்னை-600 001.

ஹால்டியா துறைமுகம்-

1. நியூ இந்தியா ஸ்டோர்ஸ்,
16/152, ஆர்பன் ஹன்ஜ் மார்க்கட்,
கிடர்ப்பூர், கல்கத்தா-700 023.

2. எவரஸ்ட் சப்ளை கம்பெனி,
16/151, ஆர்பன் ஹன்ஜ் மார்க்கட்,
கிடர்ப்பூர்,கல்கத்தா-700 023.

28—

வேலூர்-படவேடு பேருந்து வசதி செய்தல்.

வினா எண் **2151**—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், ஏ.கே படவேடு அம்மன் கோயிலுக்குச் செல்ல வேலூர்-படவேடு பேருந்து வசதி செய்து தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேற்படி கோயிலுக்கு பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்கேற்ப வேலூரிலிருந்து படவேட்டிற்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்துகள் இரு தடங்கள் மூலம் 4 நடைகளும், தனியார் பேருந்துகள் 3 தடங்களின் மூலம் 18 நடைகளும் இயக்கப்பட்டு

1994 நவம்பர் 3]

வருகிறது. ஆடி, ஆவணி மாதங்களில் நடக்கும் திருவிழாக் காலங்களில் மட்டுமே மேற்படி கோயிலுக்கு பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். அப்போது பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் பல சிறப்புப் பேருந்துகளை இயக்கி பொது மக்களுக்கு நிறைவான பயண வசதியை அளித்து வருகிறது.

29—

திருப்பத்தூர்-மதுரை இடையே திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

வினா எண் **21563**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து–மதுரைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து விடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 981 திருச்செந்தூர்-திருப்பதி வழித்தடத்தில் திருப்பத்தூர், மதுரை வழியாக இயக்கப்படுகின்றது. இப் பேருந்தில் நான்கு இருக்கைகள் திருப்பத்தூருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, திருப்பத்தூரிலிருந்து மதுரைக்கு நேரடியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

30—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பற்றிய விவரம்

வினா எண் **21570**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்படும் பேருந்துகள் எத்தனை?

(ஆ) இதனால் அரசுக்கு 1992-93-ல் கிடைத்த வருவாய் எவ்வளவு?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை (31-3-1993)-951.

		ரூ.
(ஆ)	இயக்கியதினால் ஈட்டிய வருமானம் (இலட்சத்தில்)	10,786.75
	இதர வகையில் ஈட்டிய வருமானம் (இலட்சத்தில்)	441.68
	மொத்த வருமானம் (இலட்சத்தில்) ..	**11,228.43**

31—

குடவாசல்-திருவாரூர் இடையே கூடுதலாக பேருந்து இயக்குதல்.

வினா எண் 21605—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டிணம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா, மஞ்சக்குடி ஊராட்சியில் உள்ள மாணவ-மாணவியருக்கு பயன்படும் வகையில் குடவாசலிலிருந்து, திருவாரூருக்கு கூடுதலாக நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

குடவாசலில் இருந்து மஞ்சக்குடி வழியாக திருவாரூருக்கு கீழ்க்கண்டவாறு புறநகர் மற்றும் நகரப் பேருந்து வசதிகள் உள்ளன.

1994 நவம்பர் 3]

		சோழன்	தனியார்
புறநகர் நடைகள்	..	134	20
நகர நடைகள்	..	12	..
மொத்த நடைகள்	..	**146**	**20**

இருப்பினும் கூடுதலாக திருவாரூர்-குடவாசல் தடத்தில் நகரப்பேருந்து நடைகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

32—

நாகர்கோவில்-அஞ்சு கிராமம் பேருந்து இயக்குதல் தொடர்பாக.

வினா எண் ***21999***—திரு ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர் கோவிலிலிருந்து அஞ்சு கிராமத்திற்கு இயக்கப்பட்ட 1சி பேருந்து காலை நேரத்தில் ரத்து செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அக்கிராமத்திற்கு காலை நேரத்தில் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நாகர்கோவிலிருந்து அஞ்சு கிராமத்திற்கு நேசமணி போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்பட்டு வரும் தடம் எண் 1சி பேருந்தின் காலை நேர நடை ஏதும் ரத்து செய்யப்படவில்லை. அனைத்து சுற்றுக்களும் கால அட்டவணைப்படி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றது.

[1994 நவம்பர் 3

33—

சிவகாசி-சென்னை இடையே திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

வினா எண் 22015—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண். 185, செங்கோட்டை-சிவகாசி-திருவொற்றியூர் (சென்னை) தடத்தில் நாள் தோறும் 2 பேருந்துகள் 2 ஒரு வழிப் பயணங்களுடன் இயக்கப்படுகின்றன. இப்பேருந்தில் அனைத்து இருக்கைகளும் சிவகாசியிலிருந்து பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பேருந்தில் பயணிகள் விகிதாச்சாரம் அதிகரிக்கும் போது கூடுதல் பேருந்துகள் விடப்படும்.

34—

சிவகாசி-துரைசாமிபுரம் இடையே கூடுதலாகப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 22021—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசியிலிருந்து திருவில்லிப்புத்தூர் ம. துரைசாமி புரத்திற்கு மம்சாபுரம் வழியாக கூடுதலாக பேருந்துகள் விடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சிவகாசியிலிருந்து ம. துரைசாமிபுரத்திற்கு ஒரு பேருந்தின் மூலம் தினசரி நான்கு தனிச்சுற்றுகள் பாண்டியன் போக்குவரத்து கழகத்தினால்

1994 நவம்பர் 3]

இயக்கப்படுகிறது. வினாவில் கோரியுள்ளபடி எம் . துரைசாமிபுரம் மம்சாபுரம் வழியாக சிவகாசியிலிருந்து திருவில்லிபுத்தூர் தடம் இயக்கினால் வழித்தட தூரம் நகர பேருந்துக்கு வரையறுக்கப்பட்ட வழித்தட தூரத்தினை விட கூடுதலாக வருவதால் இத்தடத்தில் நகரப் பேருந்துகளை இயக்க இயலாது.

35—

இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பயணிகள் பற்றிய விவரம்.

வினா எண் **22580**—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணச்சீட்டு வாங்காமல் பயணம் செய்யும் பயணிகள் திடீர் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த 6 மாத காலத்தில் எவ்வளவு பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அபராதமாக எவ்வளவு தொகை வசூல் செய்யப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பரிசோதனை ஆய்வாளர்களால் 2,855 தடவைகள் கண்டுபிடிக்கப்பட்டு 85 நடத்துனர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) பயணச் சீட்டு வாங்காமல் பயணம் செய்த பயணிகளிடம் பயணக் கட்டணத்துடன் அபராதமாக ரூ. 29,386 வசூல் செய்யப்பட்டுள்ளது.

36—

பேருந்துகளில் புகை பிடித்தல் பற்றிய விவரம்.

வினா எண் 22827—*திரு. எஸ்.எம். துரை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) பேருந்துகளில் புகை பிடிக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ள தடை, சரிவர அமல் நடத்தப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தடையை கண்டிப்புடன் அமல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பேருந்துகளில் புகை பிடிக்கக்கூடாது "மீறினால் பேருந்திலிருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துனரால் இறக்கிவிடப்படும்" என்ற வகையில் வாசகங்கள் எல்லா அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் எழுதப்பட்டுள்ளது. மேலும் புகை பிடிப்பதைக் கண்டிப்பாகத் தடை செய்யும் பொருட்டு ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஓட்டுநர்/நடத்துநர்கள் பணிபுரியும் போது புகை பிடிக்கக் கூடாது என்று அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது. புகை பிடித்தலை அனுமதிக்கும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. திடீர் சோதனைகள் மூலம் புகைபிடித்தல் கண்காணிக்கப்படுகிறது.

37—

திருப்பத்தூர்—மிட்டூர் இடையே நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 23174—*திரு.ஏ.கே.சி.சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

திருப்பத்தூரிலிருந்து பல்பநத்தம்-மிட்டூர் பஞ்சாயத்துக்கு நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

திருப்பத்தூர்-ஆலங்காயம் பிரதான சாலையிலிருந்து மிட்டுர் பஞ்சாயத்தில் 3.4 கி.மீ தூரத்தில் பல்பநத்தம் கிராமம் உள்ளது. மேலும் 3.4 கி.மீட்டர் தூர சாலை மிகவும் மேடு பள்ளமாகவும், பெரும் ஜல்லிகளாகவும் சாலையின் குறுக்கே ஒரு காட்டாறு ஓடுவதாலும், சாலையின் குறுக்கே 3 பெரும் பாறைகள் இருப்பதாலும், சாலையின் ஓரத்தில் ஒரு இடத்தில் ஒரு பெரிய கிணறு இருப்பதாலும், போதிய பாதுகாப்பு இல்லாமையால் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

38—

கன்னியாகுமரி மாவட்டம், குமாரபெருமாள்புரம், நவமியாபுரத்திற்குப் பேருந்து வசதி செய்தல்.

வினா எண் 23254—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது புதிதாக இயங்கிக் கொண்டிருக்கும் தடம் 2டி பேருந்து போக்குவரத்து வசதி இதுவரை இல்லாத குமாரபெருமாள்புரம், நவமியாபுரம் ஆகிய ஊர்களுக்குச் சென்று வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண். 2 டி பேருந்தின் நேரம் மாற்றியமைக்கப்பட்டு, பிசிஜி என்ற வேறு தடம் மூலம் கடந்த 27-9-1993 முதல் குமாரபெருமாள்புரம், நவமியாபுரம் வழியாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

[1994 நவம்பர் 3

39—

பரமக்குடி டெப்போவில் உள்ள பழைய பேருந்துகளை புதுப்பித்தல்.

வினா எண் ***23862***—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமகுடி தொகுதியில் பரமக்குடி டெப்போவில் உள்ள பழைய பேருந்துகளை புதுப்பிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

தற்பொழுது மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய மாடல் பேருந்துகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு மாற்றும்பொழுது பரமகுடி டெப்போவிலுள்ள பழைய பேருந்துகளும் பதிய மாடல் பேருந்துகளாக மாற்றப்படும்.

40—

சத்திரக்குடி செல்லும் பேருந்துகளை சரஸ்வதி நகரில் நின்று செல்ல நடவடிக்கை எடுத்தல்.

வினா எண் ***23866***—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தாலுகா, சத்திரக்குடி செல்லும் பேருந்துகளை (சிட்டி பஸ்) சரஸ்வதி நகரில் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பரமக்குடியிலிருந்து சத்திரக்குடி வழியாக செல்லும் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்து நகரப் பேருந்துகளையும் சரஸ்வதி நகரில் நிறுத்திப்பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல ஓட்டுநர், நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

1994 நவம்பர் 3]

41—

மஞ்சக்கொல்லை, பொட்டிதட்டி ஊர்களுக்கு நகரப் பேருந்து இயக்க வழி செய்தல்.

வினா எண் ***23872***— *டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம்-மஞ்சக்கொல்லை, இராமநாதபுரம்-பொட்டிதட்டி நகரப் பேருந்து விட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்துகள் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம்-மஞ்சக்கொல்லை (வழி) பொட்டிதட்டி தடத்தின் தூரம் 34.0 கிமீ. ஆகும். இதில் அனைத்துப் பகுதிகளும் பேருந்து வசதி பெற்ற பகுதிகளாக இருப்பதால் 30.0 கி. மீட்டருக்கு மேல் உள்ள இவ்வழித் தடத்தில் நகரப் பேருந்தினை இயக்க இயலாது.

மேலும், இராமநாதபுரத்திலிருந்து பொட்டிதட்டி வழியாக அரசு மற்றும் தனியார் பேருந்துகள் 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயங்கி வருகின்றன. எனவே, இராமநாதபுரம்-பொட்டிதட்டி நகரப் பேருந்து விட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

மேல் சோழங்குப்பத்திற்கு மீண்டும் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***23940***—*திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மேல் சோழங்குப்பத்திற்கு மாம்பட்டு, திருசூர் வழியாக இயக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள நகரப் பேருந்து எண் 19-க்கு எதிர் வண்டி இயக்கப்படுமா?

(ஆ) இல்லையெனில், முன்பிருந்தவாறு இயக்கப்படுமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ): தடம் எண். 19 மாம்பட்டு, திருசூர் வழியாக போளூர், மேல் சோழங்குப்பத்திற்கு தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. இது போளூரிலிருந்து ஒரு சுற்றுத் தடமாகும். அதனால் பயணிகள் விரும்பி ஏற்கவில்லை. இதற்கு மாற்று ஏற்பாடாக தடம் எண். ஏ22 போளூர்-எடப்பிறை (வழி) மாம்பட்டுக்கு தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. திருசூர் கிராமம் போளூர்-செங்கம் பிரதான சாலையிலிருந்து 6 கி.மீ. தூரம் உள்ளது. அதனால் எதிர் வண்டி இயக்கும் அவசியம் ஏற்படவில்லை.

43—

மார்த்தாண்டம்-மஞ்சாலுமூடுக்குப் பேருந்து வசதி செய்தல்.

வினா எண் ***24786***—*திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, மார்த்தாண்டத்திலிருந்து முகவூர் வழியாக மஞ்சாலுமூடுக்குப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் பேருந்து இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): உத்திரம்கோடு-மஞ்சாலுமூடு சாலையில், பிலாவிளை சாலை சந்திப்புக்கும், மிதப்பன் கோட்டிற்கும் மத்தியிலிருந்து முகவூர் செல்லும் 1 கி.மீ. சாலை பெரிய வாகனங்கள் இயக்கத்தக்க அளவிற்கு அகலமாக அமைந்திருக்கவில்லை. சாலையை விரிவுபடுத்தி போக்குவரத்திற்கு உகந்ததாக சீர் செய்த பின்னர் பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும்.

44—

அரசுப் பேருந்துகளில் தனியார் விளம்பரம் செய்யும் திட்டம்.

வினா எண் ***25051***—*திரு. கா. பூ. முனுசாமி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

அரசுப் பேருந்துகளில் தனியார் நிறுவனங்கள் விளம்பரம் செய்திட அனுமதிக்கப்பட்டால், அரசுக்கு வருவாய் கிட்ட வாய்ப்பு உள்ளதால் அதனை அமுலாக்கிட அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த வெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதை தடுத்தல்) திருத்தச் சட்டத்தில் பொதுமக்கள் பார்வையில் படக்கூடிய இடங்களிலும் இயக்கூர்திகளின் மீதும் சுவரொட்டிகளை ஒட்டுவதை தடுப்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளதால் அரசு பேருந்துகளில் எந்த ஒரு நபரும் (போக்குவரத்துக் கழக தலைவர் அவர்களின் அனுமதியின்றி) விளம்பரங்கள் செய்ய இயலாது.

45—

அன்னியூர்-நன்னிலம் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் ***25087***— திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம்-குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், அன்னியூர் கிராமத்திலிருந்து பேரளம் வழியாக நன்னிலம் பேரூராட்சிக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித்தரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இத்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன. தடத்தின் நீளம் 30 கி.மீ.க்கு மேல் இருப்பதால் இத் தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. மேலும் அன்னியூர் முன்பே பேருந்து வசதி பெற்ற இடமாகும்.

நன்னிலத்திலிருந்து அன்னியூருக்கு பேரளம், கொல்லுமாங்குடி வழியாக செல்வது சுற்று வழித் தடமாகும். பயணிகள் இதனை விரும்ப மாட்டார்கள். எனவே, இத்தடத்தில் பேருந்து வசதி ஏற்படுத்த இயலாது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1994 நவம்பர் 3

46—

பச்சக்குப்பத்தில் மேம்பாலம் (லெவல் கிராசிங்) அமைத்தல்.

*வினா எண் **15146**—டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம், பச்சக்குப்பத்தில் ரயில் பாதைக்கு (லெவல் கிராசிங்) மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டம், பச்சக்குப்பம் அருகே ரயில்வே மேம்பாலம் அமைக்க *1993-94*-ஆம் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்க கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. அதற்குத் தேவையான நிலம் கையடக்கம் செய்யும் வேலை நடைபெற்று வருகிறது. முழு நிலமும் கையடக்கம் செய்த பின்பு தான், மேம்பாலம் அமைக்கும் மதிப்பீட்டுக்கு மைய அரசின் ஒப்புதல் பெற முடியும். மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

47—

சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குழல் விளக்குகள் பொருத்துதல்.

*வினா எண் **20439**—திரு. மா. சுந்தரதாஸ்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதியில் விளாத்துறை பேரூராட்சி பகுதிகளில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குழல் விளக்கு பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பொருத்தப்படும்?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி வட்டத்தைச் சேர்ந்த விளவங்கோடு தொகுதி, விளாத்துறை பேரூராட்சி பகுதிகளில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் குழல் விளக்கு பொருத்தும் திட்டம் ஏதும் இல்லை.

48—

அரசினர் தோட்டத்திலுள்ள பழுதடைந்த வீடுகளைச் சரிசெய்தல்.

வினா எண் ***26006***—திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் தோட்டத்தில் உள்ள பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

அரசினர் தோட்டத்தில் உள்ள குடியிருப்புகளில் அரசின் நிதி நிலைமைக்கேற்ப மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1993-94-ஆம் நிதியாண்டில் ரூ. 4,05,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தியாவசியமான குடியிருப்புகளுக்கு பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

49—

சிவகிரி முத்தூர் சாலை பழுதினை சீர் செய்தல்.

வினா எண் ***26623***— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

சிவகிரி முத்தூர் சாலை பழுது அடைந்து உள்ளதால் இதனை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இச்சாலைப் பகுதியில் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள கி.மீ. 11/8, 10/8, 10/8, 10/10 மற்றும் 11/8 ஆகிய இடங்களில் சாலை பழுதுபார்க்கும் பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளது. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

50—

சிவகிரி தென்கால்குளம் மராமத்து செய்தல்.

*வினா எண் **27530**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம் சிவகிரி தென்கால்குளம் மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தென்கால்குளம் 104.13 ஏக்கர் ஆயக்கட்டு கொண்டதாகும். இக்குளத்திற்கு 1993-94 நிதியாண்டில் கரை மராமத்துப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. குளம் நல்ல நிலையில் இருப்பதால் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தற்போது திட்டம் ஏதுமில்லை.

51—

பவானி ஆற்றின் குறுக்கே நெல்லித்துறையில் பாலம் கட்டுதல்.

*வினா எண் **28451**— திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பவானி ஆற்றின் குறுக்கே நெல்லித்துறை கிராமத்திற்கு செல்ல வன பத்ரகாளியம்மன் அருகில் மைய அரசு மூலம் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் ரூ. 6 லட்சம் மதிப்பீட்டில் இப்பணி சேர்க்கப்பட்டு திட்ட ஒப்புதலுக்காக மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்புதல் கிடைத்தவுடன் இப்பணியை செயலாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

52—

FILING OF FALSE AFFIDAVITS IN COURT

Question No 2816— Tmt. V.G. MANIMEGALAI: Will the Honourable Minister for Housing and Urban Development be pleased to state:-

(a) Whether the attention of the Government has been drawn to the filing of false affidavits in Court during 1990 by the planning officers of Madras Metropolitan Development Authority in Courts by Advocates?

(b) The action taken in this regard?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) மேற்கூறிய தகவல் தவறான ஒன்று என்று கண்டறியப்பட்டதால் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

53—

வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான உச்சவரம்பு சட்டம்.

வினா எண் ***8736***— **திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலச் சீர்திருத்தச் சட்டம் போல வீடுகள் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் உடைமை மீதும் உச்சவரம்பு ஏதேனும் விதிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

நிலச் சீர்திருத்த சட்டம் போல வீடுகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றின் உடைமை மீதும் உச்சவரம்பு விதிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

54—

சங்ககிரி வீட்டு வசதி சங்க பதிவு எண் SLM-HSQ-67 பற்றிய விவரம்.

வினா எண் ***22006***— *டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி வட்டம், கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் பதிவு எண் SLM-HSQ-67ல் அரசிடமிருந்து சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகை நிலுவையை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

விரைவில் தொகை வழங்க ஆவன செய்யப்படும்.

55—

வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***24342***— *திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, காலகம் ஊராட்சியில் வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கான அலுவலகத்தைக் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

56—

வேளாண்மைக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.

*வினா எண் **35469**— திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, நம்புகை ஊராட்சியில் விவசாயத்திற்குப் புதியதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, நம்புகை ஊராட்சியில் விவசாயத்திற்கு புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. இருப்பினும் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் கிணறுகள் அமைக்க மற்றும் ஆழ்படுத்த 2,000 சிறு/குறு விவசாயிகள் பயனடையும் வகையில் மான்யம் வழங்கும் பொருட்டு 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 100 இலட்சம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்தொகையில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் பொறுப்பில், வேளாண்மை பொறியியல் துறையினால் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்தில் சமுதாய ஆழ்குழாய்க் கிணறுகளும் குழாய்க் கிணறுகளும் மற்றும் கிணறுகள் மேம்படுத்தவும், மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் திட்டம் வகுத்துள்ளார். இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

57—

உள்ளாட்சி அமைப்புகளுக்கு மான்யம் அளித்தல்.

*வினா எண் **19664**— திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகளும் வசூலிப்பதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு விற்பனை வரி உபரி சட்டம் 1971 பிரிவு 3 (1-ஏ)-ன் படி, வசூலிக்கப்படும் உபரி வரியில் நிர்வாக செலவினங்கள் போக மீதியுள்ள

தொகையை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அரசாணை நிலை எண் 744, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 21-12-1990-ன்படி சென்னை மாநகராட்சிக்கு அதன் எல்லைக்குள் வசூலிக்கப்படும் உபரி வரியில் 50 சதவீதம் அளிக்கவும், அரசாணை நிலை எண் 726, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 17-12-1990-ன்படி மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளுக்கும், தனி நிலை நகராட்சிகளுக்கும் மற்றும் இதர நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், நகரியங்களுக்கும், அதன் எல்லைக்குட்பட்ட உபரி வரி வசூலில், 20 சதவீதம் ஜனத் தொகை அடிப்படையில் மானியம் அளிக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலைமையை ஆய்வு செய்யவும், மாநில அரசுக்கும், உள்ளாட்சிகளுக்குமிடையே வரி வசூல்களால் (மற்றும்) இதர கட்டணங்கள் மூலம் கிட்டும் நிதியினை பகிர்ந்தளிக்கவும், அந்நிதிகளை மாவட்ட நிர்வாகம், ஊராட்சி ஒன்றியம் (மற்றும்) கிராம பஞ்சாயத்துகளுக்கு பகிர்ந்தளிக்கப் பரிந்துரைகள் செய்யவும் அரசாணை எண் (நிலை) 350, நிதி, நாள்: 23-4-1994-ல் தற்போது நிதிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகள் வசூலிப்பதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியம் அளிக்க வேறு எந்த செயற்குறிப்பும் அரசிடம் இல்லை.

58—

தர்மபுரி ஸ்டீல் கேஸ்டிங் லிமிடெட் தொழிற்சாலையை மீண்டும் திறத்தல்.

வினா எண் 5173— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், தொட்டம்பட்டியில் நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள "தர்மபுரி ஸ்டீல் கேஸ்ட்டிங் லிமிடெட்" தொழிற்சாலையைத் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

தர்மபுரி ஸ்டில் காஸ்டிங் லிமிடெட் நிறுவனம், தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்து வந்தது. மின்வெட்டு, அதிக உற்பத்திச் செலவு, உற்பத்தித் திறனை குறைவாக பயன்

படுத்துதல் போன்ற பல காரணங்களினால் 1-5-1983 முதல் பணியாளர்களுக்கு பணி நிறுத்தம் வழங்கப்பட்டு, உற்பத்தியும் நிறுத்தப்பட்டது. இந்நிறுவனத்தை மீண்டும் இயங்க வைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனளிக்காமல் போகவே 1984-ஆம் ஆண்டில், இந்நிறுவன நிர்வாகத்தை அதன் பங்குதாரர்களிடம் டிட்கோ நிறுவனம் ஒப்படைத்துவிட்டது. இதற்கிடையில், இந்நிறுவனத்தின் கடன்தாரர்களில் ஒன்றாகிய யூகோ வங்கி, நிறுவனத்தின் சொத்துக்களை ஏலத்துக்குக் கொண்டு வர நீதிமன்ற ஆணை பெற்றுள்ளது. இதற்கு எதிராக நிறுவனத்தின் பணியாளர்கள் ரிட் மனு ஒன்றினை பதிவு செய்துள்ளனர். இவ்வழக்கு நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இச்சூழ்நிலையில் தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங் நிறுவனத்தை மீண்டும் திறந்திட வாய்ப்புகள் இல்லை.

59—

அரசு நிலங்களில் கனிமப் பொருட்களை வெட்டி எடுத்தல்.

வினா எண் *11269*— திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிலங்களில் கனிமப் பொருட்களை வெட்டி எடுக்க குத்தகை எடுத்த தனியார், குத்தகைக்கு எடுத்த நிலத்தில் மட்டுமல்லாது, பக்கத்திலுள்ள நிலப் பரப்பிலும் கனிமப்பொருட்களை வெட்டி எடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) அரசு நிலங்களில் கனிமப் பொருட்கள் வெட்டி எடுக்க குத்தகை எடுத்த தனியார், குத்தகைக்கு எடுத்த நிலத்தில் மட்டுமல்லாது பக்கத்திலுள்ள நிலப்பரப்பிலும் கனிமப் பொருட்களை வெட்டி எடுத்தது என்ற நிகழ்வு சேலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மட்டுமே நடந்துள்ளது. மற்ற ஏனைய மாவட்டங்களில் திருட்டுத் தனமாக கனிம எடுப்பு ஏதும் நடைபெறவில்லை என்னும் அறிக்கையினை மாவட்ட ஆட்சியாளர்கள் அரசுக்கு அனுப்பியுள்ளார்கள்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் குத்தகை எடுத்த தனியார் மூன்று பேர் நான்கு தருணங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அபராதம் செலுத்த

உத்தரவிடப்பட்டனர். தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் கள்ளத்தனமாக மணல் குவாரி செய்த ஒரு தனியார் மீதும் அபராதம் விதிக்கப்பட்டது. இது போன்று சட்டவிரோதமாக கனிமங்கள் எடுப்போர் மீது, புவியியல் மற்றும் சுரங்கத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் அவ்வப்போது தலப் பார்வையிட்டு கண்காணித்து வருகின்றனர். குத்தகைக்கு எடுத்த நிலத்தில் மட்டுமல்லாது, பக்கத்திலுள்ள நிலப்பரப்பிலும் கனிமப் பொருட்களை வெட்டி எடுக்கப்படுவது கண்டறியப்பட்டால் சந்பந்தப்பட்ட குத்தகைதாரர்கள் மீது விதிமுறைகளின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

60—

தென்பெண்ணை ஆற்றில் மணல் எடுக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்தல்.

*வினா எண் **14541**— திரு. கா.பு. முனுசாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், காவேரிபட்டினம் தொகுதி, அரசம்பட்டி அருகில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தின் அருகில் மணல் எடுக்கப்படுவதால் பாலம் பழுதடைவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

காவேரிபட்டினம் தொகுதியில் அரசம்பட்டி கிராமத்திற்கு அருகில் தென்பெண்ணை ஆற்றில் கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு இருபுறமும் நூறு மீட்டர் இடைவெளி விடப்பட்டு மணல் எடுக்க அனுமதிக்கப்படுவதால் பாலம் பழுதடைய வாய்ப்புகள் இல்லை.

61—

மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பணிகளை விளம்பரப்படுத்துதல்.

*வினா எண்**23829**—டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் முன்னேற்றப் பணிகளை விளம்பரப்படுத்த அரசிடம் சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாளிதழ்கள், வானொலி, தொலைக் காட்சி மூலமாகவும் மற்றும் தனிப்பட்ட முறையிலும் தொடர்ந்து விளம்பரம் செய்து மக்களிடையே சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. மாணவர்களிடையே சுற்றுச் சூழல் பற்றிய பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவைகளை அண்ணா, நேரு, காந்தி ஆகியோர் பிறந்த நாட்களில் நடத்தி வருகின்றது. பல நிறுவனங்களுடன் இணைந்து "சுற்றுப்புறச் சூழல்" பாதுகாப்பு குறித்த கருத்தரங்குகளையும் வாரியம் நடத்தி வருகின்றது.

மாவட்ட அளவில் "உலக பூமி நாள்" "உலக சுற்று சூழல் தின நாள்" ஆகிய தினங்களில் கருத்தரங்குகளை வாரியம் நடத்தி வருகின்றது. "மாசுக் கட்டுப்பாடு" குறித்த வாரியத்தின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளால் வானொலி மூலம் உரை நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள பெரியார் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தில் சுற்றுச்சூழல் அரங்கு (Environmental Pavilion) ஒன்றினை வாரியம் அமைத்துள்ளது. இவ்வரங்கத்தில் தொண்டு நிறுவனங்களும் மற்றும் சுற்றுச் சூழல் சார்ந்த நிறுவனங்களும் தங்கள் கூட்டங்களை நடத்தும் வகையில் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய பொருட்காட்சியினை இங்கு நிரந்தரமாக நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. வாரியத்தில் அமைந்துள்ள "மகளிர் சுற்றுச்சூழல் கழகத்தின்" உறுப்பினர்கள் மரம் நடுதல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய பல நிகழ்ச்சிகளைக் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களைக் கொண்டு நடத்தி வருகின்றார்கள்.

62—

பெண்களுக்குச் சம உரிமை வழங்க தீவிரப்படுத்தல்.

*வினா எண் **10734**—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பெண்களுக்கு சம உரிமை கொடுக்கவும் அதைத் தீவிரப்படுத்தவும் தமிழ்நாடு அரசு ஏதேனும் சட்டம் கொண்டு வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

பெண்கள் ஆணைக்குழு (Women's Commission) அமைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்துள்ளோம். விரிவான அமைப்பு விவரங்கள் பரிசீலனையில் உள்ளன.

63—

பணிபுரியும் மகளிர் விடுதிகள் விவரம்.

Question No. 35128—Thiru M. SUNDARADOSS: Will the Honourable Minister for Social Welfare be pleased to state—

(a) Whether large number of Hostels for working women are to be set in this State now?

(b) The places where these hostels to be set up and the total accommodaition to be provided in them are?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விவரங்கள் ஆய்வில் உள்ளன.

64—

தமிழ்ப் புலவர் தகுதி பெற்றவர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்தல்.

வினா எண் ***8887*— திரு. செ. து. வரதராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்ப்புலவர் தகுதியுடையவர்களை நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்கு உள்ள அரசாணை செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், இதே முறையை மற்ற பள்ளிகளுக்கும் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்ப் புலவர் தகுதியுடையவர்களை மட்டுமே நடுநிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்றும் அரசாணைகளை எதிர்த்து தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பில் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், பட்டதாரி தகுதியடைந்த அனைத்து ஆசிரியர்களையும் அவர்களின் பணிமூப்பின்படி பரிசீலித்து ஆணைகள் வழங்க தக்க கொள்கை முடிவுகள் அரசு எடுக்க வேண்டும் என ஆணையிட்டது. 4-10-92 நாளிட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளின் அடிப்படையில் 1-6-1988-க்கு முன்னர் நியமனம் பெற்ற தமிழாசிரியர் / பட்டதாரி ஆசிரியர்களை முதலில் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுகளுக்குப் பரிசீலித்துவிட்டு எஞ்சியுள்ள காலிப் பணியிடங்களை 1-6-1988-க்குப் பிறகு நியமனம் பெற்ற தமிழாசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் உரிய கல்வித் தகுதிகள் கொண்ட ஒன்றிய தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஆகிய இம்மூன்று வகை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த பட்டியலில் அவர்களின் இடைநிலை ஆசிரியர் பணிமூப்பின் அடிப்படையில் தலைமையாசிரியர்களாக நியமனம் அளிக்கலாம் என சார்நிலை அலுவலர்களுக்கு ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் (நகராட்சி/ ஊராட்சி ஒன்றியம்) பொருந்தும்.

65—

திருவையாறு தொகுதியில் மாணவ மாணவியருக்கு நவீன கழிப்பிடம் அமைத்தல்.

வினா எண் 11350— **திரு.ப.கலியபெருமாள்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியில், செங்கம்பட்டி, பூதலூர், ராஜகிரி, கோவிலடி, திருப்பந்துருத்தி, சாத்தனூர், அகரப்பேட்டை, திருவையாறு ஆகிய ஊர்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவியருக்கு நவீன கழிப்பிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்போது நவீன கழிப்பிட வசதி செய்வது குறித்தான செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

[1994 நவம்பர் 3

66—

பைங்கால் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி, தளவாடச் சாமான்கள் வழங்குதல்.

*வினா எண் **14216**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பைங்கால் உயர்நிலைப் பள்ளிக்கு 1992-93-ல் கட்டிட வசதி, தளவாடச் சாமான்கள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், பைங்கால் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதிக்காக ரூ. 1.95 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன. தளவாடச் சாமான்கள் வழங்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

67—

ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகள் துவங்குதல்.

*வினா எண் **16843**— டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் ஆரம்பப் பள்ளிகள் வேண்டி பரிந்துரைக்கப்பட்ட இடங்கள் எத்தனை?

(ஆ) அவ்விடங்களில் எந்த ஆண்டு ஆரம்பப் பள்ளிகள் துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) பரமக்குடி தொகுதியில் புதியதாக ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகள் துவங்க 5 கிராமங்களில் பரிந்துரை செய்யப்பட்டன.

(ஆ) 1992-93-ஆம் கல்வியாண்டில் 2 கிராமங்களில் மட்டும் புதிய ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிகள் துவங்கப்பட்டன.

1994 நவம்பர் 3]

68—

டி. குண்ணத்தூரில் உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் நியமனம்.

வினா எண் ***17166***—*திரு. எஸ். ஆண்டித்தேவர்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், டி. குண்ணத்தூரில் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியானதில் இருந்து ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணி நிரப்பப்படாமல் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தலைமையாசிரியர் பணியிடத்தை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டது.

69—

புத்தாம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்.

வினா எண் ***25455***—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், புத்தாம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆழ் குழாய்க்கிணறு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

70—

மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு இயக்குநர் நியமனம் செய்தல்.

வினா எண் ***26155***— *திரு.சோ. இராசாராமன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்குத் தனியாக இயக்குநர் நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

71—

ஆசிரியர்களை மாவட்டம் முழுமைக்கும் பணிமாறுதல் செய்தல்.

*வினா எண் **26679**— திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒன்றியத் துவக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை மாவட்டம் முழுமைக்கும் பணி மாறுதல் செய்யும் முறையைக் கொண்டுவருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

72—

பழையபேட்டை நகராட்சி உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் நியமனம்.

*வினா எண். **27440**— திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி நகரம் பழையபேட்டை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடம் நிரப்பப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இப்பள்ளிக்கான தலைமையாசிரியர் பணியிடம் 3-1-1994 அன்று பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. திரு. எஸ். கணபதி என்பவர் தலைமை ஆசிரியராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

73—

அரியலூர் கலைக் கல்லூரிக்குக் கட்டிடங்கள் கட்ட பரிசீலனை

*வினா எண் **33649**--- டாக்டர் சு. மணிமேகலை:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் கலைக் கல்லூரிக்குப் போதுமான அளவுக்கு வகுப்பறைகள் இல்லாமையால் புதிய கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் கலைக் கல்லூரிக்கு போதுமான அளவுக்கு வகுப்பறைகள் கட்ட வேண்டியது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. தற்போதைய நிதிநிலையையும் கருத்திற்கொண்டு தக்க நடவடிக்கை எடுத்து உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும்.

74—

பொய்யாத நல்லூர் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **33651**— டாக்டர் சு. மணிமேகலை:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் ஒன்றியம் இலுப்பையூர் ஊராட்சி பொய்யாத நல்லூர் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இது குறித்து அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

75—

க. பரமத்தி அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **33983**— திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், க. பரமத்தி அரசு உயர்நிலைப்பபள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலைனையில் இல்லை.

76—

பீடித் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்தல்.

வினா எண் ***23167***—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பீடித் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு *1975* முதலே குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்து அரசு அதை அமுல்படுத்தி வருகிறது. தற்போது *30-3-1993* தேதியிட்ட அரசாணை (2டி) எண். *14* மூலம் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு மறு நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் *31.3.1993* முதல் அமுலுக்கு வந்துள்ளது. இவ்வரசாணையின்படி பீடி சுற்றும் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியங்கள் பின்வருமாறு மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன:-

வரிசை எண் மற்றும் பீடியின் தன்மை	குறைந்தபட்ச ஊதியம்.		
	அடிப்படை ஊதியம்.	அகவிலைப். படி	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
	ரூ. பை.	ரூ. பை.	ரூ. பை.
1. 1,000 ஜாடி பீடிகள் சுற்ற	16.25	7.65	23.90
2. 1,000 சாதா பீடிகள் சுற்ற	16.05	7.65	23.70

மேற்கூறியுள்ளவாறு பீடித் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதிய மறு நிர்ணயம் செய்துள்ளது.

1994 நவம்பர் 3]

77—

தொழிற் பிரிவு தொழிற் பழகுநர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்.

Question No. 23341—Tmt. K. MARIAM UL ASIA: Will the Hon'ble Minister for Labour Welfare be pleased to state—

(a) Whether the stipends issued to the various trade apprentices have been increased?

(b) The details of the present rates issued to the apprentices.

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தொழிற் பழகுநர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

1. முதல் வருடம் ரூ. 460.
2. இரண்டாம் வருடம் ரூ. 530.
3. மூன்றாம் வருடம் ரூ. 610.
4. நான்காம் வருடம் ரூ. 700.

78—

கூட்டுறவு நியாய விலைக் கடைகளை அதிகரித்தல்.

வினா எண் **23047**— *திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரிலுள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் 17 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. நியாயவிலைக் கடைகளை அதிகரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

[1994 நவம்பர் 3

79—

ஓசூர் கோட்டத்திற்கு கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் துவங்குதல்.

*வினா எண் **24852**—திரு. கா. பூ. முனுசாமி:* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூர் கோட்டத்திற்கு என தனியே ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம் துவக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஓசூர் கோட்டத்திற்கு எனத் தனியே ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம் துவக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

80—

பழம் பதனிடும் ஆலையின் கொதிகலனைப் பழுது பார்த்தல்.

*வினா எண் **26184**— திரு. மா. சுந்தரதாஸ்:* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம்-விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனை நிலையம் (கே.வி.டி.சி.எம்.எஸ்.)-285-ன் கீழ் செயல்படும், பழம் பதனிடும் ஆலையின் கொதிகலன் பழுதுபட்டுள்ளதால், அந்த ஆலை சரியாக இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கொதிகலனைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேற்படி பழம் பதனிடும் ஆலையில் தற்போதுள்ள கொதிகலன் இந்திய கொதிகலன் வரையறைகளுக்கு உட்பட்டதாக இல்லாததால் அதனை உடனே அகற்றிட வேண்டுமென, சென்னை முதன்மைக் கொதிகலன் ஆய்வாளர் ஆணையிட்டதற்கிணங்க அந்தக் கொதிகலன் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளது. அதனை விற்றுவிட்டு புதிய

1994 நவம்பர் 3]

கொதிகலன் வாங்கி நிறுவி மேற்படி ஆலையை மீண்டும் இயக்க சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

81—

திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி வழங்கிய கடன் விவரம்.

வினா எண் ***26933***—*திரு. டி. வேலையா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

தாட்கோ மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1991,1992,1993 ஆகிய ஆண்டுகளில் திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கி திருநெல்வேலி தொகுதியில் வழங்கிய கடன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் 1991-92, 1992-93 மற்றும் 1993-94 ஆகிய ஆண்டுகளில் தாட்கோ மற்றும் ஐ.ஆர்.டி.பி. திட்டங்களின்கீழ் கீழ்க்கண்டவாறு கடன்கள் வழங்கியுள்ளது.

தாட்கோ திட்டம். ரூ. லட்சத்தில்.

வரிசை எண்.	காரியம்	ஆண்டு. 1991-92 பயனடைந்தோர் எண்ணிக்கை.	தொகை	1992-93 பயனடைந்தோர் எண்ணிக்கை.	தொகை	1993-94 பயனடைந்தோர் எண்ணிக்கை.	தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	வண்டிமாடு	29	2.67	23	2.19	23	2.20
2.	கறவை மாடு	..	..	..	..	13	1.23
3.	டயர் வண்டி	7	0.72	..	..	10	1.55
4.	உழவு மாடு	2	0.06	..	..	3	0.14
5.	வெள்ளாடு	..	..	..	..	1	0.02
6.	சிறுதொழில்	3	0.28	25	2.34	48	4.55
	கூடுதல்	**41**	**3.73**	**48**	**4.53**	**98**	**9.69**

ஐ.ஆர்.டி.பி. திட்டம்: ரூ. லட்சத்தில்.

வரிசை எண். (1)	காரியம். (2)	(3)	(4)	ஆண்டு. (5)	(6)	(7)	(8)
1.	வண்டிமாடு.	..	..	2	0.12	..	..
2.	கறவை மாடு	..	..	..	..	8	0.76
3.	செம்மறி ஆடு	..	..	..	..	1	0.09
4.	உழவு மாடு..	..	..	..	..	3	0.29
5.	சிறுதொழில்	..	..	..	..	6	0.90
	கூடுதல்	..	..	**2**	**0.12**	**18**	**1.64**

82—

திருப்பத்தூர் கூட்டுறவு நகர வங்கி ஈட்டிய லாபம்.

வினா எண் 27791—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு நகர வங்கி 92-93-இல் ஈட்டிய லாபம் எவ்வளவு?

(ஆ) 1992-93-இல் கொடுக்கப்பட்ட நகைக்கடன் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) திருப்பத்தூர் நகர கூட்டுறவு வங்கி 1992-93-ல் ரூ. 7,74,710.59 லாபம் ஈட்டியுள்ளது.

(ஆ) திருப்பத்தூர் நகர கூட்டுறவு வங்கி 1992-93-ல் வங்கியின் 5,797 உறுப்பினர்களுக்கு ரூ. 224.90 இலட்சம் நகைக் கடனாக வழங்கியுள்ளது.

83—

திருப்புவனம் பேரூராட்சியில் வாரச் சந்தை அமைத்தல்.

வினா எண் 1460—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் பேரூராட்சியில் அரசு புறம்போக்கு இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வாரச் சந்தை நடத்தப்படுவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்றி பேரூராட்சியின் மூலமாக வாரச்சந்தையை நடத்த அரசு பரிசீலிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருப்புவனம் பேரூராட்சியில் தற்போது நடைபெற்று வரும் வாரச் சந்தை இடமானது சிவகங்கை தேவஸ்தானத்திற்குப் பாத்தியமானது. வாரச் சந்தை அமைக்கும் அளவிற்கு திருப்புவனம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடமோ அல்லது புறம்போக்கு இடமோ இல்லாததால் பேரூராட்சியிலிருந்து வாரச் சந்தை அமைக்க இயலாது.

84—

கழனிவாசல் பள்ளியருகில் பேருந்து நிழற்குடை அமைத்தல்.

வினா எண் ***11632***—*திரு. ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி கழனிவாசல் பள்ளியருகில் 1992-93-ல் பேருந்து நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் பள்ளி அருகில் 1991-92-ம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்ட 25 சதவீதம் ஊராட்சி பங்கு வேலை திட்ட ஒதுக்கீட்டில் ரூ. 12,997 செலவில் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

85—

ஆலங்குடியில் சாலையைப் பழுது பார்த்தல்.

வினா எண் ***12543***— *திரு. எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி கே.வி.எஸ். நகர் செல்லும் சாலையை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி கே.வி.எஸ். நகர் செல்லும் சாலை பழுது பார்க்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

86—

இடையாத்தி ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்டுதல்.

வினா எண் *12588*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992-93-ல் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

87—

இடையாத்தி-மந்திக்கோன் விடுதியில் ஒரு நிழற்குடை அமைத்தல்.

வினா எண் *13407*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியில் 1992-93-ல் பஸ் நிழற்குடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி ஊராட்சியைச் சேர்ந்த மந்திக்கோன் விடுதியில் பேருந்து நிழற்குடை கட்ட மேற்படி ஊராட்சியில் நிதி ஆதாரம் போதுமான அளவு இல்லை. தற்போது கையிருப்பு ரூ.2,900 தான் உள்ளது. 1992-93-ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் மேற்குறித்த ஊராட்சியில் நிழற்குடை கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

88—

கொல்லைக்காடு தெருவில் பேருந்து நிழற்குடை அமைத்தல்.

வினா எண் 16524—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வா. கொல்லைக்காடு கடைத்தெருவில் 1992-93-ல் பேருந்து நிழற்குடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டை கொல்லைக்காட்டில் 1992-93-ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயணிகள் நிழற்குடை அமைப்பதற்கு திட்டம் எதுவும் இல்லை. மேற்படி ஊராட்சியில் போதுமான நிதி வசதியும் இல்லை.

89—

சேத்தியாதோப்பு இருளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல்.

வினா எண் 10574—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேத்தியாதோப்பில் பழங்குடியினர்களான இருளர்களுக்கு நிரந்தர வீட்டு வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் சேத்தியாதோப்பு கிராமத்தில் இருளர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட இடத்தின் விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1 இலட்சம் ஆகின்றது. விலை குறைவாகவும் போக்குவரத்துக்கு வசதியாகவும் உள்ள இடமாக தெரிவு செய்யும்படி மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். நிலம் கையகப்படுத்தப்பட்டு வீட்டு மனைகள் வழங்கியவுடன் இருளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

90—

திருமுல்லைவாசலில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்.

வினா எண் 15487—திரு. நு. மூர்த்தி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் திருமுல்லைவாசலில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

இல்லை.

91—

சோசியர் ஆலங்குளத்தில் சமுதாயக்கூடம் அமைத்தல்.

வினா எண் 22264—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சோசியர் ஆலங்குளம் கிராமத்தில் ஆதி திராவிடர் மக்களுக்கு சமுதாயக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

சமுதாயக் கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

92—

அருள்மிகு ஸ்ரீராமர் கோயிலைச் செப்பனிடுதல்.

வினா எண் 6162—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர், படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் கோவில் அருகில் உள்ள அருள்மிகு ஸ்ரீராமர் கோயிலைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செப்பனிடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டம், அ.கோ. படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் சுவாமி திருக்கோயிலின் உப கோயிலான அருள்மிகு இராமச்சந்திரன் சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் அனைத்தும் உபயதாரர்களால் செய்யப்பட்டு 8-9-1993 அன்று குடமுழுக்கு நடைபெற்றது.

93—

மகுடேஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்தல்.

வினா எண் 12112— திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி மகுடேஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்யப்படுவதற்கு நிதி ஒதுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயில் திருப்பணி வேலைகளை முழுமையாகச் செய்து முடிக்க ரூ. 20 லட்சம் நிதி தேவையாக உள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளதால் அதில் பாதியை பொதுமக்களிடமிருந்து நன்கொடை மூலம் பெறப்பட்டால் மீதி நிதியை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்களைப் புதுப்பித்தல்.

*வினா எண்கள் **15939, 16940, 16962, 16963**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. பட்டுக்கோட்டை வட்டம், அருள்மிகு விஸ்வநாத சுவாமி ஆலயம்.

2. வலங்கைமான் வட்டம், ஆலயங்குடி அருள்மிகு அருணாசலேஸ்வரர் கோயில்.

3. நீடாமங்கலம் வட்டம், சோனாப்பேட்டை அருள்மிகு குருந்துரை அய்யனார் கோவில்.

4. ஒரத்தூர் அருள்மிகு திரௌபதியம்மன் கோயில்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

95—

இராமநாதபுரம் மாவட்டம் திருக்கோயில்களின் சொத்து விவரம்.

*வினா எண் **16065**—டாக்டர் எஸ் .சுந்தரராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கோயில் நிலங்கள் சொத்துப் பதிவேட்டில் கோயில் பதிவில் இருக்கிறதா அல்லது தனியார் பெயரில் இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ். இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் அந்தந்த திருக்கோயிலின் சொத்துப் பதிவேட்டில் கோயில் பதிவில்தான் உள்ளன. தனியார் பெயரில் இல்லை.

96—

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்களைத் திருப்பணி செய்தல்.

*வினா எண்கள் **16944, 16945, 16946, 16947, 16948, 16949, 16952, 16953, 16954, 16955**—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. சாத்தனூர் அருள்மிகு சிவலோகநாதசுவாமி கோயில்.
2. அருள்மிகு செல்லியம்மன் மற்றும் அய்யனார் கோயில்.
3. காரணநத்தம் அருள்மிகு வீரசக்தி விநாயகர் கோயில்.
4. திருவோணமங்கலம் அருள்மிகு பிள்ளையார் கோயில்.
5. திருவோணமங்கலம் அருள்மிகு விஸ்வேஸ்வரியம்மன் ஆலயம்.
6. திருவோணமங்கலம் அருள்மிகு ஆலயம் அமர்ந்த கோயில்.
7. பாப்பாக்குடி அருள்மிகு மாரியம்மன் மற்றும் செல்லியம்மன் கோயில்.
8. பெருங்குடி அருள்மிகு சேவுகராய அய்யனார் மற்றும் செல்லியம்மன் கோயில்.
9. கேந்தனூர் அருள்மிகு விநாயகர் கோயில்.
10. கேந்தனூர் அருள்மிகு தோமலை சுவாமிகோயில்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ். இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

97—

நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் வட்டங்களிலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல்.

வினா எண்கள் ***16956, 16958, 16959, 16960, 16961, 16964, 16965, 16969, 16971***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்த சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டம் மற்றும் வலங்கைமான் வட்டம்—

1. கேத்தனூர் அருள்மிகு திரௌபதியம்மன் கோயில்.
2. பாப்பாக்குடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.
3. கோட்டையூர் அருள்மிகு அகஸ்தீஸ்வர் ஆலயம்.
4. நரிக்குடி அருள்மிகு யமுனேஸ்வரர் மற்றும் அய்யனார் கோயில்.
5. காளஞ்சேரி அருள்மிகு மாரியம்மன் கோயில்.
6. கரிச்சான்குடி அருள்மிகு சினாரப்பன் கோயில்.
7. அய்யம்பேட்டை அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் கோயில்.
8. வீரமங்கலம் அருள்மிகு வீரசக்தி பிள்ளையார் ஆலயம்.
9. மணக்குண்டு அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்துத் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

1994 நவம்பர் 3]

98—

தஞ்சாவூர், திருவையாறு வட்டங்களிலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18685, 18686, 18687, 18688, 18689, 18690, 18692, 18693, 18694, 18695***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம் மற்றும் திருவையாறு வட்டம்-

1. பள்ளி அக்ரஹாரம் அருள்மிகு சிறைகாத்த அய்யனார் ஆலயம்.
2. பாலவலம் அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயம்.
3. திட்டை அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.
4. தஞ்சாவூர் ராஜப்பா நகர் அருள்மிகு கமல ஆஞ்சநேயசுவாமி ஆலயம்.
5. தஞ்சாவூர் மோத்தரப்பசாவடி அருள்மிகு வீர ஆஞ்சநேயசாமி ஆலயம்.
6. தஞ்சாவூர் சொல்லுப்பேட்டைத் தெரு அருள்மிகு வேணுகோபாலசாமி ஆலயம்.
7. சிரைக்காவூர் அருள்மிகு குஜபதிஸ்வரர் ஆலயம்.
8. சூலமங்கலம் அருள்மிகு சியாமலாதேவியம்மன் ஆலயம்.
9. வடக்கால் அருள்மிகு சுப்பிரமணியசாமி ஆலயம்.
10. வல்லம்புதூர் அருள்மிகு செம்போண்டி அய்யனார் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ். இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

99—

திருவையாறு, தஞ்சாவூர் மற்றும் பாபநாசம் வட்டங்களிலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18691, 18700, 18703, 18732, 18744, 18745, 18746, 18747, 18749, 18750*****—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், தஞ்சாவூர் வட்டம் மற்றும் பாபநாசம் வட்டம்.

1. ஒலதேவராயப்பேட்டை அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.
2. இராமநாதபுரம் அருள்மிகு கருப்பண்ணசாமி ஆலயம்.
3. நடுக்காவேரி அருள்மிகு விநாயகர் ஆலயம்.
4. தஞ்சாவூர் அருள்மிகு ஆனந்தவிநாயகர் மாரியம்மன் ஆலயங்கள்.
5. அருள்மிகு செல்லியம்மன் ஆலயம்.
6. அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் ஆலயம்.
7. அருள்மிகு இரட்டை பிள்ளையார் ஆலயம்.
8. பட்டுக்குடி அருள்மிகு பிள்ளையார் ஆலயம்.
9. புள்ளமாங்குடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.
10. புலிமங்கலம் அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

1994 நவம்பர் 3]

100—

திருவையாறு மற்றும் வலங்கைமான் வட்டங்களிலுள்ள கோயில்களைப் புதுப்பித்தல்.

*வினா எண்கள் **18696, 18697, 18698, 18699, 18701,18702, 18705, 18731, 18733, 18734**—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருவையாறு வட்டம் மற்றும் வலங்கைமான் வட்டம்—

1. வலங்கைமான் அருள்மிகு சுப்பிரமணி ஆலயம்.
2. வல்லம் அருள்மிகு திரெளபதியம்மன் ஆலயம்.
3. வரவுக்கோட்டை அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.
4. வல்லம் அருள்மிகு சஞ்சீவராயசாமி ஆலயம்.
5. நாடார் அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் ஆலயம்.
6. திருவையாறு அருள்மிகு செந்தலை கொங்கியம்மன் ஆலயம்.
7. நடுக்காவேரி அருள்மிகு பிராமணர் (அரிப்பிரம்மேசுவரர்) ஆலயம்.
8. மேலசித்தக்காடு அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயம்.
9. அன்னிகுடி அருள்மிகு பொன்னியம்மன் ஆலயம்.
10. அன்னிகுடி அருள்மிகு பிள்ளையார் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

ஏழாம் பட்டியல்

1—

கொலை செய்யப்படுகிற அரசு ஊழியர் மற்றும் பொது மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குதல்.

*வினா எண் **68**—திருமதி ரமணி நல்லதம்பி:* மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பணிக் காலத்தில் சமூக விரோதிகளால் கொலை செய்யப்படுகிற அரசு ஊழியர் குடும்பத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் அரசு எத்தகைய நிவாரணங்கள் அளித்து வருகிறது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

பணிக் காலத்தில் சமூக விரோதிகளால் கொலை செய்யப்படுகிற அரசு ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் கீழ்க்கண்ட நிவாரணங்கள் அரசு வழங்கி வருகிறது.

(அ) *அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம்:* பணிக் காலத்தில் சமூக விரோதிகளால் கொலை செய்யப்படுகிற அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில், பணிக் காலத்தில் மரணமுறும் அரசு அலுவலர்களுக்குப் பொதுவாக அரசு ஊழியர்களுக்கான விதிமுறைகளின்படி அளிக்கப்படும் சலுகைகளான குடும்ப ஓய்வூதியம் பணிக் கொடை, குடும்ப நலநிதி ஆகியவைகளும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசுத்துறையில் வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இது தவிர சமூக விரோதிகளால் கொலை செய்யப்படும் அரசு ஊழியர் குடும்பங்களுக்கு, முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும் நிகழ்விற்கேற்ப நிவாரணம் ரூ. 10,000 முதல் ரூ. 10 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) *சமூக விரோதிகளால் கொலை செய்யப்படும் பொது மக்களின் குடும்பங்களுக்கு நிவாரணம்:* இனக் கலவரங்களின் போது சமூக விரோதிகளால் கொலை செய்யப்படும் ஆதி திராவிடர்கள்/பழங்குடி மக்கள் உள்ளிட்ட பொது மக்களின் குடும்பத்தில் கொலை செய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் ரூ. 10,000 வீதம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனே நிவாரணம் அளிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இனக் கலவரங்கள்

1994 நவம்பர் 3]

அல்லாத மற்ற நிகழ்வுகளில் நிகழ்விற்கேற்ப முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் ரூ. 10,000 வழங்கப்பட்டு வருகிறது.

2—

ஓய்வு பெறும் அரசு ஊழியர் இறந்தால் நிவாரணம் வழங்குதல்

வினா எண் 6097— திரு. உ. பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர் பணிக் காலத்தில் இறந்தால் ரூ.60,000 நிவாரணம் அளிப்பதுபோல் ஓய்வு பெறும் அரசு ஊழியர் இறந்தாலும் அத்தொகையை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர்:

அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

தங்கக் கை குலுக்கல் திட்டம்.

வினா எண் *8527-டாக்டர் வெ. புருஷோத்தமன்:* மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மத்திய அரசின் சிக்கன நடவடிக்கைகளில் ஒன்றான ஆட்குறைப்புத் திட்டமான "தங்க கை குலுக்கல்" என்கிற திட்டம் பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறான திட்டத்தை அமுல் படுத்த மாநில அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) தங்கக் கை குலுக்கல் என்ற திட்டம் தற்பொழுது மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

4—

மாவட்ட நிர்வாக நடைமுறை நூல் திருத்தி வெளியிடுதல்.

வினா எண் 9289—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட நிர்வாக நடைமுறை நூல் (District Office Manual) கடைசியாக எப்போது திருத்தி வெளியிடப்பட்டது?

(ஆ) அதில் மேலும் மாற்றங்கள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) மாவட்ட அலுவலக நடைமுறை நூல் 30-9-1969 வரை வெளியிட்டுள்ள திருத்தங்களுடன் 1976-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இந்நடைமுறை நூலினை மாவட்ட அலுவலகங்கள் மட்டுமல்லாது தலைமைச் செயலகத் துறைகள் தவிர மற்ற எல்லாத் துறைகளும் பின்பற்றி செயல்படும் பொருட்டு "தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்" என்று மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்ய உத்தேசிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

5—

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடி நிதி உதவி வழங்குதல்.

வினா எண் 11796—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக உதவ எவ்வளவு நிதியைப் பொது நிதியாக வைத்துக் கொள்ள வரம்பு உள்ளது?

(ஆ) முதல்வர் நிவாரணமாக தரும் நிதி எவ்வளவு?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் உடனடி நிவாரணம் வழங்குவதற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 1 இலட்சம்

1994 நவம்பர் 3]

வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக உதவ பொது நிதியாக வைத்துக் கொள்வதற்கு அனுமதி கிடையாது.

(ஆ) தீ, இடி, மின்னல், மின்சாரம் முதலியவைகளினால் ஏற்படும் விபத்தில் மரணமுற்றவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 2,000-ம், காடுகளில் வனவிலங்குகளால் தாக்கப்பட்டு மரணமுற்றவர்களின் குடும்பங்களுக்கு ரூ. 5,000-ம், புயல், வெள்ளம் நிலநடுக்கம் முதலிய இயற்கை இடர்பாடுகளினால் மரணமுற்றவர்களின் குடும்பங்களுக்கும் சமூகக் கலவரங்களில் உயிர் துறந்தவர்களின் குடும்பங்களுக்கும் ரூ. 10,000-ம் வீதமும் இருதயம் மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சைகளுக்கு அதிகபட்சம் ரூ. 20,000 வரையும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர, சில தனி நிகழ்வுகளுக்கு முதலமைச்சரின் உத்தரவுகளின் படி ரூபாய் பத்து லட்சம் வரையிலும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கப்படுகின்றது.

6—

முதல்வர் நிவாரண நிதிக்கு நிதி ஒதுக்குதல்.

வினா எண் 11797— திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதல்வர் நிவாரண நிதிக்கு எந்த விதத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது?

(ஆ) 1991-92-ல் எவ்வளவு நிதி உள்ளது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா, முதலமைச்சர்:

(அ) முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு அரசு ஏதும் நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. பொது மக்கள் பொதுத்துறை நிறுவனங்கள் மூலமாக நன்கொடைகள் வழங்கப்படுவதை முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் சேர்க்கப்படுகிறது. இந் நிதியை வங்கிகளில்-பொதுத் துறை நிறுவனங்களில் நிரந்தர வைப்பு நிதியிலும், வங்கிகளில் சேமிப்பு கணக்குகளிலும் போடப்பட்டுள்ளது.

(ஆ) (1) 1991-92-ல் வங்கிகளிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் வைப்பு நிதியாக (Fixed Deposit) உள்ள தொகை ரூ. 8,69,50,000.

(2) வங்கிகளில் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகை ரூ. 1,22,41,878.81 பை.

[1994 நவம்பர் 3

7—

சட்ட ஆலோசகர் பணி அமர்த்தும் திட்டம்.

*வினா எண் **23385**—திரு என். ஆர். சிவபதி:* மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல் நிலையம், பதிவு அலுவலகம், தாலூகா அலுவலகம், ஆகியவைகளில் சட்ட ஆலோசகர் பணி அமர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

தற்பொழுது மாநிலத்தில் குற்றவியல் நடுவர் நீதி மன்றங்கள் (Judicial Magistrate Court) மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (District Munsif Courts) பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்களில் உள்ள அரசு வழக்குகளை குற்றவியல் அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலை-2 (A.P.P. Grade II) மற்றும் அரசு வழக்குரைஞர் (P.D.G.W.) முறையே நடத்தி வருகின்றனர். இவர்களே, காவல் நிலையம், பதிவு அலுவலகம், தாலுகா அலுவலகம் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வேண்டிய வழக்கு தொடர்பான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி வருகின்றனர்.

2. எனவே, காவல் நிலையம், பதிவு அலுவலகம், தாலுகா அலுவலகம் ஆகியவைகளில் சட்ட ஆலோசகர் பணி அமர்த்தும் திட்டம் ஏதும் இல்லை.

8—

வடக்குமடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருந்துகள் வழங்குதல்.

*வினா எண் **26868**—செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், வடக்குமடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான மருந்து மாத்திரைகளை வழங்க அரசு முன் வருமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

அரசு ஆணை (நிலை) எண். 1080, சுகாதாரம், நாள் 4-8-1993-ல் ஒவ்வொரு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ரூபாய் 75,000 மதிப்புக்கு மருந்து மாத்திரைகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை தாங்கள் குறிப்பிட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் உட்பட மாநிலத்தில் உள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் பொருந்தும்.

9—

இராயப்பேட்டை மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுள்ள பிண அறைகள் கட்டுதல்.

வினா எண் 33387–**Question No. 33387—Thiru M. Sundaradoss:** Will the Hon'ble Minister for Health be pleased to state—

(a) Whether the Royapettah Hospital in Madras has any air-Conditioned rooms to keep dead bodies intended for Post-mortem.

(b) If so, the details of steps taken to construct such air conditioned rooms.

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) உள்ளது. ஆனால் இரண்டு ஆண்டுகளாகப் பழுது அடைந்துள்ளது.

(ஆ) குளிர்பதன வசதி கூடிய பிணவறை புதிதாக கட்டுவது மிகவும் அவசியம் என்பதை அறிந்து 1994-95-ஆம் ஆண்டு பகுதி 2-திட்டத்தின்கீழ் ரூ. 50.00 இலட்சம் செலவில் புதிய பிணவறை கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 நவம்பர் 3

10—

கீழ்க்காவட்டாங்குறிச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*வினா எண் **35920**—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், கீழ்க்காவட்டாங்குறிச்சியில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட வேண்டும் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கீழ்க்காவட்டாங்குறிச்சியில் அமைக்க இயலாது.

11—

ஆத்தூர்-வாழப்பாடி ஏ.டி.சி. நகரப்பேருந்துகளை கூடுதல் இடங்களுக்கு இயக்குதல்.

*வினா எண் **8433**—திரு வெ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

ஆத்தூரிலிருந்து வாழப்பாடி செல்லும் ஏ.டி.சி டவுன் பஸ்கள் (ரூட் நம்பர் 21,14) தமையனூருக்குச் செல்லாமல் மேற்கு இராஜபாளையத்தோடு நின்றுவிடுவதால் ஆத்தூரிலிருந்து வாழப்பாடி செல்லும் பஸ் ரூட் 1-ஐ தமையனூர் வடுகத்தாம்பட்டி வழியாக செல்லவும் ஆத்தூரிலிருந்து பைத்தூர் வரை செல்லும் ஏ.டி.சி டவுன் பஸ்ஸை தவளப்பட்டி வரை விடவும் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

அண்ணா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் தடம் எண். 14,21 ஆகிய இரு பேருந்துகளும் ஆத்தூரிலிருந்து மேற்கு இராஜபாளையம், தமையனூர், வடுக்கத்தாம்பட்டி வழியாகத்தான் வாழப்பாடிக்குத் தற்பொழுது தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது நேர்வழியில் ஆத்தூர்-வாழப்பாடி என இயக்கும் தடம் எண் 1 என்ற பேருந்தையும் தமையனூர் வடுகத்தாம்பட்டி, வழியாக இயக்க வகையில்லை. மேலும் இத்தடங்களில் தற்பொழுது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளன. ஆத்தூர்-பைத்தூர் வரை இயக்கப்பட்டு வந்த பேருந்து 5-8-1992 முதல் தவளப்பட்டி வரை தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

12—

நத்தம் தொகுதியில் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்துதல்.

வினா எண் ***8459***—*திரு. எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் உள்ள மாவட்ட சுற்றுலாத்தலமான திருமலைக்கேணிக்கு திண்டுக்கல் திருமலைக்கேணி, மதுரை, நத்தம்-திருமலைக்கேணி, திருச்சி-துவரங்குறிச்சி-செந்துறை-திருமலைக்கேணி ஆகிய வழித்தடங்களில் சரியான அளவு பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) மேற்படி மாவட்ட சுற்றுலாத்தலம் முருகன் திருத்தலமாகவும் இருப்பதால் குறிப்பாக கிருத்திகை, பவுர்ணமி, சோமவார நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் கூடுதல் பேருந்துகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தினால் சுற்றுலாத்தலமான திருமலைக்கேணிக்கு போதிய அளவு நகர புறநகர

பேருந்துகள் திண்டுக்கல் மற்றும் நத்தத்திலிருந்து இயக்கப்படுகின்றன. இவை தவிர, பகுதி வாரியாக பல பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. திருச்சியிலிருந்து திருமலைக்கேணிக்கு நேரடிப் பேருந்து இயக்கும் அளவிற்குப் பயணிகள் இருக்க மாட்டார்கள்.

(ஆ) திண்டுக்கல் மற்றும் நத்தத்திலிருந்து திருமலைக்கேணிக்கு விசேச நாட்களில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

13—

திருக்காட்டுப்பள்ளி-பூதலார் பகுதியில் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்துதல்.

வினா எண் *11786*—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி-பூதலூர் செல்லும் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் விள்ளை வாய்க்கால் இடது கரையிலிருந்து தீட்ச சமுத்திரம், ஆற்காடு, ரெங்கநாதபுரம், இராஜகிரி, உஞ்ஞினி, மேகளத்தூர், கச்சமங்கலம் ஆகிய கிராமங்கள் பயனடைய பேருந்துகள் விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கையில் உள்ள தீட்ச சமுத்திரம் கிராமத்திற்குச் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நகரத் தடம் எண் 12, தினசரி நான்கு நடைகள் இயக்கப்படுகின்றன. ஆற்காடு மேகளத்தூர், கச்சமங்கலம் கிராமங்களுக்கு இக்கழகத்தின் புறநகர் பேருந்து ஒன்றின் மூலமாக 10 நடைகள் இயக்கப்படுகின்றன. தடம் எண் 51 மூலமாக உஞ்ஞினி கிராமத்திற்கு 4 நடைகளும் அதே பேருந்து இளங்காடு வரை 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. ரெங்கநாதபுரம் மக்கள் 1/2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள உஞ்ஞினி, இளங்காடு வழியாக இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். எனவே, மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்குத் தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

1994 நவம்பர் 3]

14—

பேராவூரணி-ரெட்டவயல் பேருந்தை கூடுதல் நடை இயக்குதல்.

வினா எண் ***12912***—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து வலபிரமன்காடு, மணக்காடு வழியாக ரெட்டவயல் வரை செல்லும் நகரப் பேருந்து 10 சிங்கிள்கள் இயக்க 1992-93-இல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பேராவூரணி-ரெட்டவயல் (வழி) வலப்பிரம்மன்காடு, மணக்காடு வழியாக சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பேருந்து தடம் எண் 3 தற்போது நான்கு நடைகள் இயக்கப்படுகின்றது. இப்பேருந்தைப் பயணிகள் பயன்படுத்துவது குறைந்து, வருவாய் குறைவாக உள்ளதால், இத்தடத்தில் கூடுதல் நடை இயக்க இயலாது.

15—

பேராவூரணி குருவிக்கரம்பைப் பேருந்தை கூடுதல் நடை இயக்குதல்.

வினா எண் ***13428***—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து குருவிக்கரம்பை, வாத்தலைக்காடு, நாடாக்காடு வழியாகச் செல்லும் நகரப்பேருந்தை 1992-93-இல் 8 சிங்கிளாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேராவூரணி நகரப் பேருந்து தடம் எண் 8, பேராவூரணி பட்டுக்கோட்டை (வழி) வாத்தலைக்காடு குருவிக்கரம்பைத் தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதால், கூடுதல் நடைகள் இயக்கத் தேவையில்லை.

16—

பேராவூரணியிலிருந்து பழனிக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் ***13764***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து புதுக்கோட்டை வழியாக பழனிக்கு 1992-93-இல் ஒரு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

17—

பேராவூரணியிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் ***13765***—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து திருச்சிக்கு 1992-93-இல் ஒரு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

18—

திருமலாபுரம் கிராமத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்

வினா எண் ***15121***—*திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், திருமலாபுரம் கிராமத்திற்கு ஓரிரு முறை வந்து கொண்டிருக்கிற தடம் 37சி பேருந்தை மேலும் இரண்டு தடவை வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தடம் எண் 37 சி நகரப்பேருந்து திருநெல்வேலி சந்திப்பிலிருந்து புறப்பட்டு திருநெல்வேலி டவுன், சேதுராயன் புதூர், ரஸ்காமானூர், நல்லம்மாள்புரம், திருமலாபுரம் வழியாக தினசரி 14 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தடம் எண் 37சியில் இயக்கப்படும் அனைத்துச் சுற்றுகளும் திருமலாபுரம் வழியாக இயக்கப்படுவதால் மேலும் கூடுதல் சுற்றுகள் இயக்க வேண்டிய அவசியமில்லை.

19—

சங்ககிரி-சென்னை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***15160***—*டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

சங்ககிரியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இரு சொகுசுப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு சாதாரண விரைவுப் பேருந்து இரண்டு ஒரு வழிப் பயணங்களுடன் எடப்பாடியிலிருந்து சங்ககிரி, சேலம், ஆத்தூர் மற்றும் திண்டிவனம் வழியாக சென்னைக்கு இயக்கப்படுகின்றன. சங்ககிரி, எடப்பாடிக்கு முன்னதாக 16 கி.மீ. தொலைவில் உள்ளது. சங்ககிரியிலிருந்து பயணம் செய்ய விரும்புவோர் இப்பேருந்தினைப் பயன்படுத்திக் கொள்வதால், சங்ககிரியிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

20—

லால்குடி-கண்ணனூர் இடையே பேருந்து வசதி செய்து கொடுத்தல்.

வினா எண் ***16340***—திருமதி ஜெ.லோகாம்பாள்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

லால்குடியிலிருந்து பூவாளூர், வெள்ளனூர், புள்ளம்பாடி, கல்லக்குடி, மேலரசூர், மால்வாய் வழியாக கண்ணனூருக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து நகரப் பேருந்து ஒன்று கடந்த 10 வருடங்களாக லால்குடியை மையமாக வைத்து லால்குடி-குளத்தூர் (வழி) பூவாளூர், வெள்ளனூர், புள்ளம்பாடி கல்லக்குடி, மேலரசூர், மால்வாய், கண்ணனூர் வழித்தடத்தில் தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், அரியலூர், மால்வாய் (வழி) இலுப்பைக்குடி, குளத்தூர், கண்ணனூர் வழித் தடத்தில் நகரப் பேருந்து ஒன்று தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

1994 நவம்பர் 3]

21—

சீர்காழி-பூம்புகார், திருநகரி வழியாகப் பேருந்து வசதி செய்து கொடுத்தல்.

*வினா எண் **16458**—திரு.து.மூர்த்தி:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி-பூம்புகார், திருநகரி வழியாகப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

சீர்காழியிலிருந்து திருநகர் வழியாகப் பூம்புகாருக்கு நகரப் பேருந்து ஒன்று 6 நடைகள் சோழன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படுகிறது. இத்தடத்திற்குத் தற்போதுள்ள நடைகளே போதுமானது என்பதால் புதிய பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

22—

சீர்காழி கூழையாறு செல்ல புதியதாகப் பேருந்து வசதி செய்து கொடுத்தல்.

*வினா எண் **16473**—திரு.து. மூர்த்தி:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் தேவருடை, வேட்டக்குடி வழியாக கூழையாறு செல்ல புதியதாகப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தில் சீர்காழிக்கும், கூழையாறுக்கும் இடையே திருமுல்லைவாசல், கொடுவாய் வழியாக ஒரு நகரப் பேருந்து மூலம் 18

நடைகள் இயக்கப்படுகின்றது. மேலும், வேட்டன்குடி முதல் கேவருடை வழியாக கூழையாறு வரை உள்ள 4 கி.மீ. தூரம் சிவப்பு கப்பிச் சாலை குறுகலாகவும், குண்டும் குழியுமாகப் பேருந்து இயக்கத்திற்குத் தகுதியற்றதாக உள்ளது.

இந்நிலையில் சீர்காழியில் இருந்து கேவருடை, வேட்டங்குடி வழியாக கூழையாறு செல்ல புதிய தடப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

23—

மூவலூர் கடைவீதிவரை சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை இயக்குதல்.

வினா எண் 17218—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, மூவலூர் கடைவீதி வரை சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து சென்று வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மூவலூர் கடைவீதி மயிலாடுதுறை கும்பகோணம் செல்லும் பிரதான சாலையில் மயிலாடுதுறையில் இருந்து 4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கிராமமாகும். இந்த மூவலூர் கிராமத்தில் காலையில் பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் குழந்தைகளுக்காக சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இரண்டு நடைகள் இயக்கப்படுகின்றது. இது தவிர, இந்த கிராமம் கும்பகோணம்-மயிலாடுதுறை பிரதான சாலையில் அமைந்துள்ளதால் இதில் நகரப் பேருந்துகள் மூலமாக 166 நடைகளும் புறநகர் பேருந்துகள் மூலமாக 396 நடைகளும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலமாக இயக்கப்படுகின்றன. இப்பேருந்து வசதியே மூவலூர் கிராம மக்களுக்குப் போதுமானதாகும்.

1994 நவம்பர் 3]

24—

குடவாசல் சுப்பிரமணிய கோவிலுக்கு புதிய வழித்தடங்கள் வழியாகப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **17315**—டாக்டர் க. கோபால்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், கங்களாஞ்சேரி, நீலக்குடி, வடகண்டம், எட்டியனூர் வழியாக குடவாசலுக்கும், எங்கள் சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கும் புதிய வழித்தடத்தில் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கோரிக்கையில் உள்ள தடங்களில் கங்களாஞ்சேரியில் இருந்து மணக்கால் பாலம் வரை 8 கி.மீ. தூரம், சாலை இதுவரை பேருந்து இயக்கப்படாத பகுதியாகும். மேலும் பொம்மாதத்தம், கர்ணாவூர் நீலக்குடி, எட்டியனூர் கிராமங்களின் மக்கள் தொகை 1,000–க்கு குறைவாக உள்ளதாலும், பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு தற்போது இல்லை.

25—

பட்டுக்கோட்டையிலிருந்து செல்லும் பேருந்துகளை குருவிக் கரம்பை பேராவூரணி வழியாக செல்ல நடவடிக்கை எடுத்தல்.

*வினா எண் **17330**—திரு.ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து மதுரை காரைக்குடி திருப்பத்தூர், திருச்சி செல்லும் பேருந்துகளை பள்ளத்தூர், குருவிக்கரம்பை பேராவூரணி வழியாகச் செல்வதற்கு தக்கவாறு மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்து மதுரை, காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் பயணிகள் பள்ளத்தூர், குருவிக்கரம்பை, பேராவூரணி, வழியாக 11 கி.மீ கூடுதலாக சுற்றிச் செல்வதால் காலம், கட்டணம் தூரம் கருதி விரும்ப மாட்டார்கள். இதனால் போதிய மக்கள் பயன்பாடும் இருக்காது. பேராவூரணியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு போதிய பேருந்து வசதி உள்ளது. பட்டுக்கோட்டையிலிருந்து தஞ்சை வழியாக திருச்சிக்குப் பேருந்து வசதிகள் உள்ளமையால் திருச்சி செல்லும் பேருந்துகளை பேராவூரணியிலிருந்து இயக்கத் தேவையில்லை. எனவே பட்டுக்கோட்டையிலிருந்து மதுரை, காரைக்குடி, திருப்பத்தூர், திருச்சி செல்லும் பேருந்துகளை பள்ளத்தூர், குருவிக்கரம்பை, பேராவூரணி வழியாக மாற்றி அமைக்க செயற்குறிப்பு இல்லை.

26—

மனோரா-திருச்சி இடையே நேரடிப்பேருந்து இயக்குதல்.

வினா எண் ***17332—திரு ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மனோராவிலிருந்து திருச்சிக்கு நேரடிப் பேருந்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்சமயம் மனோராவிலிருந்து நேரடியாக திருச்சிக்கு பேருந்து இல்லை. ஆனால், அத்தடத்தில் பகுதி பகுதியாக பட்டுக்கோட்டை-மல்லிப்பட்டினம் தடத்தில் 100 நடைகளும் பட்டுக் கோட்டை/தஞ்சாவூர்/திருச்சி/ தடத்தில் 158 நடைகளும கழக மற்றும் தனியார் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. நேரடி பேருந்து இயக்கினால் போதிய மக்கட் பயன்பாடும் வருவாயும் இருக்காது.

1994 நவம்பர் 3]

27—

சென்னை-இராமேஸ்வரம் வழி பட்டுக்கோட்டை சென்ற திருவள்ளுவர் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

*வினா எண் **20313**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து பட்டுக்கோட்டை, கட்டுமாவடி வழியாக இராமேஸ்வரத்திற்கு இயக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் சென்னையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பட்டுக்கோட்டை கட்டுமாவடி வழியாக பேருந்து எதுவும் இயக்கப்படவில்லை. இதுபோன்ற வழிகளில் பேருந்துகள் இயக்கப்பட்டால் சென்னையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு துரிதமாக செல்பவர்களுக்கு அது வசதியுள்ளதாக இராது. எனவே இவ்வழித்தடம் இயக்குவது இயலாது.

28—

மதுரை-அறந்தாங்கி மருதுபாண்டியர் பேருந்தை மீண்டும் பேராவூரணி வழியாக இயக்குதல்.

*வினா எண் **20314**—திரு. ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து அறந்தாங்கி வழியாக பேராவூரணி வரை இயக்கப்பட்ட மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

மதுரை-பேராவூரணி (வழி) அறந்தாங்கி வழித்தடத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து 21-5-1993-ம் தேதி முதல் 2 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

29—

சுரண்டை சங்கரன் கோவில் தடம் எண் 23 பேருந்தை திருப்பி இயக்குதல்.

வினா எண் **20735**—திரு எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், பரங்குன்றாவரம் லட்சுமிபுரம், மரியதான்புரம், வாடியூர் வழியாக சுரண்டை, சங்கரன்கோவில் தடம் எண் 23 பேருந்தை திருப்பி விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

தற்போது தடம் எண் 23 நகரப் பேருந்து சுரண்டையிலிருந்து பங்களா சுரண்டை, வாடியூர், கரையாவனூர், குறிச்சான்குளம், குறுந்தன்மொழி, மேலக்கலங்கனி, பெரியசாமிபுரம், வேப்பங்குளம் வழியாக சங்கரன்கோவில் செல்கிறது. இத்தடத்தில் தற்போதைய தூரம் 30.0 கி.மீ. ஆக இருப்பதாலும், மேற்படி நகரப்பேருந்தை கோரிக்கையில் கேட்டுள்ள கிராமங்கள் வழியாக திரும்ப இயக்கினால் நகரப்பேருந்து இயக்க அரசு அமைத்துள்ள 30 கி.மீட்டர் தூரத்திற்கும் கூடுதலாகிவிடுமாதலால் கோரிக்கையின்படி தடம் மாற்றி இயக்க இயலாது.

1994 நவம்பர் 3]

30—

ஆலங்குளம்—சுரண்டை கே.டி.சி. பேருந்தை புதிய வழித்தடம் வழியாக இயக்குதல்.

வினா எண் ***20740***—*திரு.எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் ஆலங்குளம், சுரண்டை செல்லும் தடம் 43-டி, கே.டி.சி. பேருந்தை பரங்குன்றாபுரம், அச்சக்குன்றம்-இராஜகோபாலப்பேரி ஆகிய கிராமங்கள் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்போது ஆலங்குளம், சுரண்டை (வழி) வி.கே.புதூர் நேர்வழித் தடத்தில் இயக்கப்பட்டு வரும் இந்த நகரப் பேருந்தை கோரிக்கையில் கேட்டுள்ளபடி இராஜகோபாலப்பேரி, அச்சங்குன்றம், பரங்குன்றம் ஆகிய கிராமங்கள் வழியாக சுற்று வழித்தடத்தில் தடம் மாற்றி இயக்கினால் தடத்தின் தூரம் சுமார் 6.0 கி.மீ. அதிகரிப்பதுடன் கூடுதல் பயணக்கட்டணம் பயணநேரம் அதிகரிப்பு போன்ற குறைபாடுகள் ஏற்பட அது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்க ஏதுவாகும். தற்சமயம் இராஜகோபாலப்பேரி, அச்சங்குன்றம், பரங்குன்றாபுரம் ஆகிய கிராமப் பொதுமக்கள் அருகிலுள்ள முக்கியமான ஊர்களான ஆலங்குளம், சுரண்டை, வி.கே. புதூர் செல்வதற்குப், போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. எனவே தடம் எண் 43 டி பேருந்தை கோரிக்கைகளில் கேட்டுள்ளபடி இயக்கப்படவேண்டிய அவசியம் ஏதுமில்லை.

31—

சிதம்பரம்-சேத்தியாதோப்பு தடம் எண். 21–ஐ கூடுதலாக இயக்குதல்.

வினா எண் ***20836***—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து வீராணம் ஏரிக்கரை வழியே 3 முறை சேத்தியா தோப்பு செல்லும் தடம் எண் 21-ஐ ஆறு முறை இயக்கவும் தெற்கு விருதாங்கன் கிராமத்திற்குள் சென்று வரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினால் தடம் டி 21 சிதம்பரம்-சேத்தியாதோப்பு (வழி வீராணம் ஏரிக்கரை) தடத்தில் தற்போது இயக்கப்படும் பேருந்துகளில் பயணியரின் சராசரி விழுக்காடு கூடுதல் நடைகளை அளித்திடும் அளவிற்கு இல்லை என்பதால் தற்போதைய நிலையில் இத்தடத்தில் கூடுதல் நடைகளை அளித்திட இயலாது. மேலும் தெற்கு விருதாங்கன் கூட்டுச்சாலையிலிருந்து தெற்கு விருதாங்கன் கிராமம் வரையிலான ஒரு கிலோ மீட்டர் சாலை பேருந்து இயக்குதலுக்கு இயலாத நிலையில் உள்ளதால் இந்நகரப் பேருந்தினை அக் கிராமத்திற்குள் சென்று வருமாறு இயக்கிட இயலாது. தவிரவும் ஒரு கிலோ மீட்டருக்குள் பேருந்து வசதி உள்ளதால் இக்கிராமம் பேருந்து வசதி பெற்ற பகுதியாகவே கருதப்படுகிறது.

32—

குடவாசல்—கம்பூர் சென்றுவந்த நெ.3, பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 21610—திரு.எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் – காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம் கம்பூருக்கு சென்றுவந்த நெ.3 பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறையிலிருந்து கம்பூருக்கு தற்போது சோழன் போக்குவரத்து கழகத்தில் மயிலாடுதுறை தடம் எண் 10 சி மூலம் 8 நடைகள் இயக்கப்படுகின்றன. முன்பு இயக்கப்பட்ட நன்னிலம்—கம்பூர் தடம் எண்

3 போதிய அளவு மக்கள் பயன்பாடு கிட்டாமல் நிறுத்தப்பட்டது. கம்பூருக்கு மயிலாடுதுறையிலிருந்து தற்போதுள்ள 8 நடைகளே போதுமானதாகையால் தடம் எண் 3-ஐ மீண்டும் இயக்கும் வாய்ப்பு இல்லை.

33—

வடமட்டம்–கும்பகோணம் செல்லும் பேருந்தைக் கூடுதலாக இயக்குதல்.

வினா எண் 21615—திரு. எஸ். *ஆசைமணி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் –காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், வடமட்டம் ஊராட்சியிலிருந்து கும்பகோணத்திற்குச் செல்லும் 58 அரசுப் பேருந்தை பல நடைகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்பகோணம் நகரப் பேருந்து தடம் எண் 58 பல்திசை வழித்தட அனுமதியின் கீழ் கும்பகோணம்—வடமட்டம், கும்பகோணம்–நக்கம்பாடி ஆகிய தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன. கும்பகோணம்–வடமட்டம் தடத்தில் 10 நடைகள் இயக்கப்படுகிறது. தற்போது வடமட்டத்திற்கு உள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளதால் கூடுதல் நடைகள் இயக்கத் தேவை ஏற்படவில்லை.

34—

சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சீர் செய்தல்.

வினா எண் ***22626***—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தின், குறிப்பாக வேதாரண்யம் பணிமனையிலுள்ள பேருந்துகள் சில பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் சீர் செய்ய அரசு முன் வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வேதாரண்யம் பணிமனையிலிருந்து 5 நகரப் பேருந்துகளும், 23 புறநகர் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. 23 புறநகர் பேருந்துகளில் ஒரு பேருந்து மட்டுமே சற்று வயது கூடுதல் உடைய பேருந்தாகும். ஏனைய 22 பேருந்துகளும் 1989-ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னரும் இயக்கப்பட்ட பேருந்துகளாகும். இவைகள் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு நல்ல நிலைமையில் இயக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்று நகரப் பேருந்துகளும் இரண்டு புறநகர்ப் பேருந்துகளும் பெரும்பழுது நீக்கும் பணி முடிக்கப்பட்டு தற்போது தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் பெய்த பெருமழை மற்றும் புயல் காரணமாக வேதாரண்யத்தை சுற்றி உள்ள தடங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பேருந்துகள் மேற்கண்ட தடங்களில் இயக்கப்படும்போது அடிக்கடி பழுதுக்கு உள்ளாகின்றன. பழுதுகள் அவ்வப்போது சரிசெய்யப்பட்டு இயக்கப்படுகின்றன.

35—

திருப்பத்தூர்-கோலார் தங்கவயல் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் ***23274*—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரில் இருந்து கோலார் தங்கவயலுக்கு பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கையிலுள்ள தடம் மூன்று மாநிலத்திற்கு உட்பட்ட தடமாகும். தமிழ்நாடு, ஆந்திரா மாநிலத்திற்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்து கோலார் தங்கவயல் இருக்கும் கர்நாடக மாநிலத்துடன் ஒப்பந்தம் இன்னும் ஏற்படவில்லை.

1994 நவம்பர் 3]

36—

போளூர் வட்டத்தில் பேருந்து வசதியைப் பெருக்குதல்.

*வினா எண் **23932**— திரு. தா. வேடியப்பன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு கிராமத்தின் வழியாக எடப்பிரை வரை ஏ-17 நகரப் பேருந்தை நீட்டித்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தின் தடம் எண் ஏ-17 நகரப்பேருந்து போளூர்-அத்திமூர் என தினசரி 2 நடைகள் இயக்கப்படுகிறது. தடம் எண் ஏ-22 போளூர்-எடப்பிரை என தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடங்களில் பயணிகள் கொள்ளளவு 50 சதவிகிதம் தான் உள்ளது. இந்நிலையில் ஏ-17 தடத்தை எடப்பிரைக்கு நீட்டித்து இயக்கினால் தற்போது பயன்பெற்று வரும் அத்திமூர் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே ஏ-17 பேருந்தினை எடப்பிரை வரை நீட்டித்து இயக்க சாத்தியமில்லை.

37—

நன்னிலம்—ஆடுதுறைக்கு நகரப்பேருந்து இயக்குதல்.

*வினா எண் **25089**—திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகைப்பட்டணம் மாவட்டம், நன்னிலம் பேரூராட்சியிலிருந்து தென்கரை, அன்னியூர் வடமட்டம் வழியாக ஆடுதுறைக்கு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தின் நீளம் 34 கி.மீ ஆகும். இத்தடத்தின் பகுதிகள் முழுவதும் பேருந்து வசதி பெற்றுள்ளன. பேருந்து வசதி பெற்ற இடங்களை இணைத்து 30 கி.மீ–க்கு மேல் நீளமுள்ள தடங்களில் நகரப் பேருந்துகளை இயக்கிட தற்போதுள்ள விதிகளின்படி இயலாது.

38—

கந்தர்வகோட்டைக்கு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **25203**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை யூனியன் புது நகருக்கு வருகின்ற நகரப் பேருந்து துடுசுபட்டி-பிகானத்தூர் வழியாக கந்தர்வகோட்டை செல்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர்-கந்தர்வகோட்டை சாலையில் புதுநகர் பிரிவு சாலையிலிருந்து துடுசுபட்டி 3.கி.மீ. தூரத்திலும், துடுசுபட்டியிலிருந்து பிகானத்தூர் 3 கி.மீ. தூரத்திலும் பிகானத்தூரிலிருந்து பிகானத்தூர் பிரிவுசாலை 2 கி.மீ. தூரத்திலும் உள்ளது. புதுநகர் பிரிவு சாலையிலிருந்து பிகானத்தூர் வரை 6 கி.மீ. தூரம் கப்பி சாலை ஆகவும் குண்டும் குழியுமாக பேருந்து இயக்க இயலாத அளவிற்கு பழுதாக உள்ளதால் கோரியுள்ள தடத்தில் நகரப் பேருந்து இயக்க தற்போது இயலாது.

39—

பொன்பரப்பிக்கு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **27271**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, அரியலூரிலிருந்து வீராக்கன் வழியாக பொன்பரப்பிக்கு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தற்போது வீராக்கன் வழித்தடத்தில் தினசரி 4 நடைகளும், ஜெயங்கொண்டம் -பொன்பரப்பி(வழி) வீராக்கன் வழித்தடத்தில் 10 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. அரியலூரிலிருந்து வீராக்கன் வழியாக பொன்பரப்பிக்கு நேரடியாக பேருந்து வசதி இல்லை என்றாலும் ஜெயங்கொண்டத்திலிருந்து பொன்பரப்பி செல்லும் பேருந்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

எனவே ஆண்டிமடம் தொகுதி, அரியலூரில் இருந்து வீராக்கன் வழியாக பொன்பரப்பிக்கு பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

40—

கொடுமுடி – சென்னை பேருந்து இயக்குதல்.

வினா எண் ***27321***—***திருமதி கவிநிலவு தர்மராஜ்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடியிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கொடுமுடி சென்னையிலிருந்து 413 கி.மீ. தொலைவில் உள்ளது. கொடுமுடியில் பராமரிப்பு மற்றும் பணிமனை வசதிகள் இல்லாததால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை கொடுமுடியைத் தொடங்கும் இடமாகக் கொண்டு இயக்குவது சாத்தியமில்லை. 39 கி.மீ. தொலைவிலுள்ள ஈரோட்டிலிருந்தும், 28. கி.மீ தொலைவிலுள்ள கரூரிலிருந்தும் இக்கழகத்தினால் சென்னைக்கு போதுமான பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கொடுமுடியிலிருந்து கரூருக்கும், ஈரோட்டுக்கும் அடிக்கடி பேருந்து வசதிகள் உள்ளதால் கொடுமுடி மக்கள் கரூர் அல்லது ஈரோடு வந்து சென்னைக்கு பயணம் மேற்கொள்ளலாம்.

41—

தென்காசி அருகில் அரசு உணவகம் கட்டுதல்.

வினா எண் 27405—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம் தென்காசி அருகில் செங்கோட்டை-சாம்பவர் வடகரை, தென்காசி—மதுரை ஆகிய சாலைகள் சந்திக்கும் இடத்தில் அரசு உணவகம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

இல்லை.

42—

விராலிமலையில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்.

வினா எண் 30168—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலையில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

43—

கொங்குடையாம்பாளையத்திற்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் 33349—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

கொடுமுடி ஒன்றியம், கொங்குடையாம்பாளையம் கிராமத்திற்கு கே.11 என்ற நகரப் பேருந்து மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பாதை பழுது காரணமாக மாற்று வழித்தடத்தில் இயக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழக தடம் எண்.கே. 11 பேருந்து தற்போது கொள்ளுடையாம்பாளையம் கிராமம் வழியாக உரிய வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது.

44—

சிவகிரி – கொளாநல்லிக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் 33762—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரி–கொளாநல்லி வழித்தடத்தில் இயக்கப்பட்ட நகரப்பேருந்து ஏ. 1 நிறுத்தப்பட்டுள்ளதால், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரச்சலூர் – சிவகிரி– கொளாநல்லி வழித்தடத்தில் இயக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழக ஏ.1 பேருந்து நிறுத்தப்பட்ட பின்னர், அரச்சலூர்-கொடுமுடி ஏ.3/22 பேருந்து மூலம் 12 தனிநடைகளும், கொடுமுடி—கொளாநல்லி கே.2 பேருந்து மூலம் 4 தனி நடைகளும், ஈரோடு—ஊஞ்சலூர் கொளாநல்லி வழியாக தடம் எண்.43 இரண்டு பேருந்துகள் மூலம் 22 தனிநடைகளும் பல்வேறு பகுதிகளில் இருந்து இயக்கப்பட்டு பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. இப்பேருந்து வசதியே தற்போது போதுமானதாக உள்ளதால் சிவகிரி – கொளாநல்லி தடத்தில் ஏ.1 பேருந்தினை மீண்டும் இயக்கத் தேவையில்லை.

[1994 நவம்பர் 3

45—

வெள்ளக்கோயில்—சிவகிரி அம்மன்கோவிலுக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் 33763— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளக்கோயிலிலிருந்து சிவகிரி அம்மன் கோவிலுக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், சிவகிரி அம்மன் கோவிலுக்கு வெள்ளக்கோயிலிலிருந்து இயக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்து கடந்த 1992–ம் ஆண்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின்போது, வழித்தடம் முழுவதும் பகுதி வாரியாக பேருந்து வசதி இருந்த காரணத்தினால் நிறுத்திவைக்கப்பட்டது. மேற்படி வழித்தடத்தில் வி.1/19 பேருந்து மூலம் 18-5-1994 முதல் மீண்டும் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

46—

மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதிகளை அதிகரித்தல்.

வினா எண் 34164—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதியில் சிவகிரி, கொளத்துப்பாளையம், தாமரைப்பாளையம், கணபதிபாளையம் ஆகிய இடங்களுக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சிவகிரி, கொளத்துப்பாளையம், தாமரைப்பாளையம், கணபதிபாளையம் ஆகிய இடங்களுக்கு இயக்கப்பட்ட ஜீவா போக்குவரத்துக்கழகப்

1994 நவம்பர் 3]

பேருந்துகள் எதுவும் நிறுத்தப்படவில்லை. மேலும் கொளத்துப்பாளையத்திற்கு 1 பேருந்து மூலம் 6 தனி நடைகளும், தாமரைப்பாளையத்திற்கு 4 பேருந்துகள் மூலம் 28 தனிநடைகளும், கணபதிபாளையத்திற்கு 9 பேருந்துகள் மூலம் 84 தனிநடைகளும், சிவகிரிக்கு 13 பேருந்துகள் மூலம் 114 தனிநடைகளும் பல்வேறு பகுதிகளில் இருந்து இயக்கப்பட்டு பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது.

47—

அரியலூர்—சென்னைக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண்.34213—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் 1-7-1989 முதல் ஒரு பேருந்து இரண்டு ஒருவழிப் பயணங்களுடன் அரியலூர் சென்னை தடத்தில் இயக்கப்பட்டது. இத்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்துகளில் பயன்படுத்திய பயணிகளின் விகிதாசாரம் மிகவும் குறைவாக இருந்தது. ஒரு வன்முறை நிகழ்ச்சியின் போது இத்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்து அரியலூர் அருகே எரிக்கப்பட்டுவிட்டது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் இரவு நேரப் பேருந்துகளாகும். எனவே பயணிகளின் பாதுகாப்பு கருதியும் பொதுச் சொத்துகளுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்க்கவும் மற்றும் வருவாய் இழப்பைத் தவிர்க்கவும் 24-10-1990 முதல் இந்த வழித்தடத்தில் பேருந்து நிறுத்தப்பட்டது. இப்பேருந்தினை மீண்டும் இயக்க திட்டம் ஏதும் இல்லை.

48—

ஆலங்காயத்திலிருந்து பெங்களூருக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண்.35452—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்காயத்திலிருந்து திருப்பத்தூர் வழியாக பெங்களூருக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கையில் உள்ள வழித்தடம் ஒரு இருமாநிலத் தடமாகும். அதற்குரிய உரிமம் தற்போது பெறப்படவில்லை. இரு மாநில ஒப்பந்தத்திலும் இத்தடம் இடம் பெறவில்லை. அதனால் ஆலங்காயத்திலிருந்து பெங்களூருக்கு திருப்பத்தூர் வழியாக பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து இயக்க இயலாது.

49—

கோயம்புத்தூர்-அன்னூர் நகருக்கு இரவுப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **35652**—டாக்டர் மு. சீனியம்மாள்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரிலிருந்து சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அன்னூர் நகருக்கு இரவு நேரப் பேருந்து மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஜீவா போக்குவரத்துக் கழகம் கோவையிலிருந்து சத்தியமங்கலத்திற்கு அன்னூர் வழியாக நடு இரவு வரை பேருந்துகளை இயக்கி வருகின்றது. இதன் காரணமாக கோயம்புத்தூரிலிருந்து அன்னூருக்கு சேரன் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்பட்டு வந்த இரவு நேரப் பேருந்து பயணிகளது அமர்வு மிகவும் குறைவாகிவிட்டதனால் இயக்கம் நிறுத்தப்பட்டது. தற்போது உள்ள பேருந்து வசதியே தேவைக்கேற்ப உள்ளதால் கூடுதலாக இரவு நேரப்பேருந்துகளை சேரன் போக்குவரத்துக் கழகத்தால் அன்னூருக்கு இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

1994 நவம்பர் 3]

50—

அவிநாசிக்கு கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் ***35667***—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அவிநாசி-கைலட்டிபுதூர்-அவிநாசிசந்தை-தேனம்பாளையம் அணைப்புதூர்-திருப்பூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அவிநாசி—கைலட்டிபுதூர்—அவிநாசி சந்தை—தேனம்பாளையம் மற்றும் அணைப்புதூர் ஆகிய பகுதிகள் ஏற்கெனவே நன்கு பேருந்து வசதி பெற்ற பகுதிகளாக உள்ளதாலும், பயணம் செய்யும் பயணிகளின் சராசரி ஆர்வம் குறைந்து காணப்படுவதாலும், புதிய வழித்தடப் பேருந்து மேற்படி ஊர்களின் வழியாக சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கிவிட சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

51—

பெரியாறு மேம்பாட்டுத் திட்டம்.

வினா எண் ***8039***—திரு.எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொண்டு செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகள் விவரம் என்ன?

(ஆ) மேலும் எந்தெந்த திட்டப்பணிகள் மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அண்ணா மாவட்டத்தில் பாசன மேம்பாடு பணிகளுக்கும் பாசன அலுவலர் குடியிருப்பு மற்றும்

அலுவலகங்கள் கட்டுதல், பிரதான கால்வாயின் கரைகளில் சாலை அமைக்கும் பணிகளும் கடந்த 3 ஆண்டுகளில் ரூ. 98.00 இலட்சங்களுக்கான திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வைகை அணையிலிருந்து பேரணை வரை சுமார் 32 கி.மீ. நீளத்திற்கு புதிய இணைப்புக் கால்வாய் தோண்டப்படுகிறது. கான்கிரீட் லைனிங் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. இதில் 13-வது கி.மீட்டரிலிருந்து 32 கி.மீ வரையுள்ள இணைப்புக் கால்வாய் அண்ணா மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது. இப்பணியில் சுமார் ரூ. 1057 இலட்சங்கள் மதிப்புள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) திண்டுக்கல் – அண்ணா மாவட்டத்தில், பெரியாறு வைகை திட்டத்தின்கீழ் இணைப்புக் கால்வாயையும், திருமங்கலம் பிரதான கால்வாயையும் இணைப்பதற்கு சுமார் ரூ. 171 இலட்சம் செலவில் வைகை ஆற்றின் குறுக்கே பேரணை மதகு அருகில் ஒரு சைபன் (Syphon) கட்டும் பணியும், சுமார் ரூ. 1 இலட்சம் செலவில் இணைப்புக் கால்வாயின்கீழ் கிளைக்கால்வாய்கள் வெட்டும் பணியும் மேற்கொள்ளப்பட உள்ளன.

52—

பாசன குளங்கள் தூர்வாருவதற்கு பொதுமக்களுக்கு அனுமதி.

வினா எண் 8753—திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித்துறை குளங்கள் தூர் வாருவதற்கு செங்கல், ஓடு செய்யும் தனியார் முன்வந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பாசன குளங்களை தூர் வாருவதற்கு அரசு விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

53—

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் கிராமப்புற நெடுஞ்சாலை அமைத்தல்.

வினா எண் 9216—திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் உள்ள பயணபுரத்தில் இருந்து எத்திக்கட்டை வரை கிராமப்புற நெடுஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் பயணபுரத்திலிருந்து எத்திக்கட்டை செல்லும் கிராமப்புற நெடுஞ்சாலையை அமைக்கும் பணி சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் 1991-92 ஆம் ஆண்டு பேருந்து வழித்தடத் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு 31-3-1994 இல் பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

54—

கீழப்பாண்டி சாலையும் பாலமும் கட்டுதல்.

வினா எண் ***13646***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கீழப்பாண்டி சாலையும் பாலமும் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பாண்டி – கீழப்பாண்டி – ஆதிரெங்கம் சாலை கி.மீ. 0/0.5/2 மேம்பாடு செய்தல் மற்றும் கி.மீ 2/2-ல் வளவனாரில் குறுக்கே சிறுபாலம் கட்டுதல் உள்ளடங்கிய பணி திருத்துறைப்பூண்டி அங்காடி மையத்திற்கு அணுகு சாலை அமைக்கும் பணியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வேலைக்கான மதிப்பீடு ரூ. 50.00 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டு ஏற்பளிப்பு அளிக்கப்பட்டவுடன் பணிகள் துவங்கி செயலாக்கப்படும்.

55—

பரம்பிக்குளம் — ஆழியாறு திட்டம்.

வினா எண் ***14109***—*திரு. கே.ஏ. மனோகரன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிகுளம் – ஆழியாறு திட்டம் தீட்டப்பட்ட நேரத்தில் எவ்வளவு ஏக்கர் நீர்ப்பாசன வசதி செய்யப்படும் என்று தீட்டப்பட்டது?

(ஆ) தற்சமயம் எவ்வளவு பகுதி நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது?

(இ) அத்திட்டத்தினால் அண்டை மாநிலமான கேரளாவில் எவ்வளவு நிலம் பாசன வசதி பெறுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டம் தீட்டப்பட்ட நேரத்தில் 2,40,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும் வகையில் திட்டம் தீட்டப்பட்டது.

(ஆ) தற்சமயம் 2.02 இலட்சம் ஏக்கர் பாசனம் செய்யப்படுகிறது. பரம்பிக்குளம்—ஆழியாறு விரிவாக்க ஆயக்கட்டு 1.75 இலட்சம் ஏக்கர், பரம்பிக்குளம் பழைய ஆயக்கட்டு 2.02 இலட்சம் ஏக்கருடன் சேர்த்து மொத்தம் 3.77 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பிற்கு பாசனம் அளிக்க புதிய சட்டம் 19-5-1993 அன்று இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின்படி மேலே குறிப்பிட்ட மொத்தம் 3.77 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பினை கீழ்க்கண்டவாறு நான்கு மண்டலங்களாகப் பிரித்து பாசனம் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(1) மண்டலம் 1		98,558 ஏக்கர்.
(2) மண்டலம் 2		98,418 ஏக்கர்.
(3) மண்டலம் 3		94,024 ஏக்கர்.
(4) மண்டலம் 4		86,152 ஏக்கர்.
மொத்தம்	..	3,77,152 ஏக்கர்.

(இ) பரம்பிகுளம் – ஆழியாறு திட்டத்தின் மூலம் கேரள மாநிலத்தில் 20,000 ஏக்கர் (இரு போகம்) நீர்ப்பாசனம் பெறுகிறது.

56—

பரமக்குடி ஒன்றியத்தில் தார்ச்சாலைகள் அமைத்தல்.

வினா எண் **14876**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியத்தில் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சூசையப்பர்பட்டிக்கும், கள்ளிக்குடிக்கும், கீழப்பருத்தியூரிலிருந்து ஏடுத்தலாள் கோட்டைக்கும் சாலைகள் ஆர். ஆர். திட்டத்தில் தார் ரோடாக மாற்ற பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

57—

தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை.

*வினா எண் **17234**—டாக்டர் மு. அம்மமுத்துப் பிள்ளை:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளம் மற்றும் ஆறுகளில் தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அவற்றை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில், குளம் மற்றும் ஆறுகளில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை படிப்படியாக வருவாய்த்துறை மற்றும் காவல்துறை உதவியுடன் அகற்றப்பட்டு வருகிறது. குளங்களை ஆழப்படுத்தும் வேலைகள் அரசின் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

58—

பாசனவசதி அணைக்கட்டுகள் விவரம்.

*வினா எண் **17307**—திரு. கே. ஏ. மனோகரன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள பாசன வசதி அணைக்கட்டுகள் எத்தனை?

(ஆ) ஒவ்வொரு திட்டத்தின் மூலமாக பயன்பெறும் நிலங்கள் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மாநிலத்திலுள்ள பாசன வசதி அணைக்கட்டுக்கள் 72 ஆகும். இவற்றின் மூலமாக 3,71,000 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் 16 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இவை முடிந்தால் மேலும் 20,000 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

59—

பரமக்குடி கோட்டத்தில் கண்மாய்க்கரை மற்றும் சாலைகள் விவரம்.

வினா எண் *17356*—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி கோட்டத்தில் கண்மாய்க்கரை மேலும் கண்மாய்க்கரை அருகிலும் செல்லும் சாலைகள் யாவை?

(ஆ) கண்மாய்க்கரை அருகில் செல்லும் சாலைகளுக்கு 'வி' வடிவ வடிகால் கட்ட அரசுக்குப் பரிந்துரைகள் வந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) பொதுப்பணித் துறை பரமக்குடி கோட்டத்தில் கண்மாய்க்கரை மற்றும் கண்மாய்க்கரை அருகில் செல்லும் சாலைகளின் விவரங்கள்:

எண். (1)	வட்டம். (2)	கண்மாயின் பெயர். (3)	சாலையின் பெயர். (4)
1	பரமக்குடி	வேந்தோணிக் கண்மாய்	முத்துசெல்லையாபுரம்–பரமக்குடி சாலை
2	"	காட்டுபரமக்குடி	அண்டக்குடி–பரமக்குடி சாலை.
3	"	வெங்கிடன்குறிச்சி	மருந்தூர்–பரமக்குடி சாலை.
4	"	சாலையூர்	தினைக்குளம்-கலையூர் சாலை.
5	"	செ.கருங்குளம்	பரமக்குடி-திருவரங்கம் சாலையிலிருந்து கலையூர் பிரிவு சாலை.
6	"	பாம்பூர்	பரமக்குடி – முதுகுளத்தூர் சாலையிலிருந்து பெத்தேனந்தல் பிரிவு சாலை.
7	"	பாம்புவிழுந்தான்	அண்டக்குடி-பரமக்குடி சாலை.
8	"	கமுதக்குடி	பரமக்குடி - பார்த்திபனூர் சாலையிலிருந்து பீயனேந்தல் கிராம பிரிவு சாலை.
9	"	அண்டக்குடி	மதுரை – ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை எண் 47லிருந்து விளத்தூர் விலக்கு சாலை.
10	"	மேலாய்க்குடி	மேற்படி
11	"	எஸ். காவலூர்	முதுகுளத்தூர் - பரமக்குடி சாலை.
12	"	தென்பொதுவக்குடி	பரமக்குடி - முதுகுளத்தூர் சாலையிலிருந்து சாத்தனூர் சாலை.

எண் (1)	வட்டம் (2)	கண்மாயின் பெயர் (3)	சாலையின் பெயர். (4)
13	பரமக்குடி	கஞ்சியேந்தல்	பரமக்குடி - முதுகுளத்தூர் சாலையிலிருந்து சாத்தனூர் சாலை.
14	“	விளத்தூர்	பரமக்குடி - முதுகுளத்தூர் சாலையிலிருந்து விளத்தூர் கிராமச்சாலை.
15	”	பொதுவக்குடி	பரமக்குடி கமுதக்குடி சாலையிலிருந்து பொதுவக்குடி கிராமச்சாலை.
16	“	குளவிப்பட்டி கண்மாய்	கமுதக்குடி - விளத்தூர் கிராமச் சாலை
17	”	மேலப்பெருங்கரை	மதுரை - இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை எண். 47.
18	“	புதுக்குடி	அருங்குளம் - புதுக்குடி சாலை.
19	”	வேப்பன்குளம்	வேப்பன்குளம் - பார்த்திபனூர் சாலை.
20	“	மாரவேரி	வேப்பன்குளம் - பார்த்திபனூர் சாலை.
21	”	கீழப்பருத்தியூர்	வீரசோழன் - கீழப்பருத்தியூர் சாலை.
22	“	தடுதலான்கோட்டை	வீரசோழன் - தடுதலான் கோட்டை சாலை.
23	”	கொட்டகுடி கொழுவீர்	தனியாப்புளி - அஞ்சாமடை சாலை.

எண் (1)	வட்டம் (2)	கண்மாயின் பெயர் (3)	சாலையின் பெயர். (4)
24	பரமக்குடி	கீழச்சிவன்குளம்	வீரசோழன் - கீழச்சிவன்குளம் சாலை.
25	"	கிளியர் கண்மாய்	கொடிக்குளம் - பாண்டியூர் சாலை.
26	"	சதுர்வேதிமங்கலம்	கொடிக்குளம் - பாண்டியூர் சாலை.
27	"	மணக்குடி கண்மாய்	கொடிக்குளம் – அரியான் கோட்டை சாலை.
28	"	புனிதவயல் கண்மாய்	அரியான்கோட்டை – பெரிய நகர மங்கலம் சாலை.
29	"	பெரியநகர மங்கலம் கண்மாய்	வடவனேரி - தவனைக் குளம் சாலை.
30	"	அகரம் கண்மாய்	கொடிக்குளம் -அரசனூர் சாலை.
31	"	பெருங்கானூர் கண்மாய்	கொடிக்குளம் - பெருங்காலூர் சாலை.
32	"	குளத்தூர் கண்மாய்	பாண்டியூர் - இராமநாதபுரம் சாலையில் இருந்து குளத்தூர் பிரிவுச் சாலை.
33	"	தெத்தான்கால் கண்மாய்	கிளியூர் - தூரத்தியேந்தல் சாலை.
34	"	பொட்டிதட்டி கண்மாய்	மதுரை – இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் ஆவ்ரேந்தல் பிரிவுச் சாலை.
35	"	போகலூர் கண்மாய்	மதுரை – இராமநாதபுரம் நெடுஞ்சாலை.
36	"	முதலூர் கண்மாய்	முதலூர் – தாஞ்சூர் சாலை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எண் (1)	வட்டம் (2)	கண்மாயின் பெயர் (3)	சாலையின் பெயர். (4)
37	பரமக்குடி	மென்னந்தி கண்மாய்	போகலூர் – காமன்கோட்டை சாலை.
38	கமுதி	முதல்நாடு கண்மாய்	அருப்புக்கோட்டை - கமுதி சாலை.
39	”	பொந்தம்புளி கண்மாய்	பெருநாழி - விலான்குளம் சாலை.
40	“	எருமைக்குளம் கண்மாய்	கோவிலாள்குளம் - நெருநாழிசாலை
41	”	பேரையூர் கண்மாய்	முதுகுளத்தூர் – கமுதி சாலை.
42	“	பம்மனேந்தல் கண்மாய்	கமுதி - சாயல்குடிச் சாலை
43	”	குண்டுகுளம் கண்மாய்	கமுதி - சாயல்குடிச் சாலை
44	“	ஓ. கரிசல்குளம் கண்மாய்	கமுதி - சாயல்குடிச் சாலை.
45	”	அபிராமம்குளம்	கமுதி - பார்த்திபனூர் சாலை.
46	முதுகுளத்தூர்	பூசேரி கண்மாய்	தேரிருவேலி - சத்திரக்குடி சாலை.
47	”	வளநாடு கண்மாய்	பூசேரி - வளநாடு சாலை.
48	“	இளம்செம்பர் கண்மாய்	சிக்கல் - முதுகுளத்தூர் சாலை.
49	”	சாத்தாகுளம் கண்மாய்	சிக்கல் - முதுகுளத்தூர் சாலை.
50	“	சடையனேரி கண்மாய்	சிக்கல் - முதுகுளத்தூர் சாலை.
51	”	சாயல்குடி கண்மாய்	இராமநாதபுரம் - சாயல்குடி சாலை.

1994 நவம்பர் 3]

(ஆ) மேற்படி கண்மாய்களின் அருகில் செல்லும் சாலைகளுக்கு 'வீ' வடிவ வடிகால் கட்ட அரசுக்கு பரிந்துரைகள் எதுவும் வரப்பெறவில்லை.

60—

கௌசிகா நதிப்பாலத்தை புதுப்பிக்கத் திட்டம்.

வினா எண் 17575— *திரு. சஞ்சய் ராமசாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள கௌசிகா நதிப்பாலத்தை புதுப்பிக்கும் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டும் வேலை ஆரம்பிக்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மதுரை-கன்னியாகுமரி சாலை கி.மீ. 45/6 ல் குறுக்கிடும் கௌசிகா நதியின் குறுக்கே உள்ள பாலத்தை திரும்பக் கட்டும் பணிக்காக தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) இடம் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைகளுக்குப் பின் ஒப்பந்தப்புள்ளிகளின் மீது அரசின் ஒப்புதல் பெற்று பணி துவங்கப்படும்.

61—

நெடுஞ்சாலைத் துறை ஆய்வு இல்லத்தை பழுதுபார்த்தல்.

வினா எண் 19594—*திரு. வே. பெரியசாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில் அந்தியூர் டவுனில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சேர்ந்த ஆய்வு இல்லம் பழுதடைந்து உள்ளதை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திட்டம் ஏதும் இல்லை.

62—

அருப்புக்கோட்டை தொகுதியில் மெட்டல் சாலைகள் அமைத்தல்.

வினா எண் 21777—திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள மண் சாலைகளை மெட்டல் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) தற்போது திட்டமேதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

63—

வாணியம்பாடி சாலை பாலத்தை பழுதுபார்த்தல்.

வினா எண் 21872—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி சாலை தொன்போஸ்கோ அருகில் பழுதடைந்துள்ள பாலத்தை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தர்மபுரி - திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலை கி.மீ. 65/2-ல் தொன்போஸ்கோ அருகில் அமைந்துள்ள சிமெண்ட் கற்காரைப் பாலத்தின் வலது புற கைப்பிடி சுவர் வேகமாகச் செல்லும் வாகனங்களின் போக்குவரத்தால் முற்றிலுமாக இடிக்கப்பட்டு பழுதடைந்திருந்தது. மேற்படி கைப்பிடிச்சுவர் தற்போது திரும்பக் கட்டப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

64—

தலையூர் பகுதியில் தார்ச்சாலைகள் அமைத்தல்.

வினா எண் 22005—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலையிலிருந்து திணைக்குளம் வழியாக தலையூர் வரையுள்ள சாலையை கிராமச்சாலைகள் கோட்டத்தின் மூலம் எந்த ஆண்டு தார்சாலையாக உயர்த்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை தேசிய நெடுஞ்சாலை 49-லிருந்து திணைக்குளம், கலையூர், கண்டுகொண்டான் மாணிக்கம் வழியாக பரமக்குடி-கீராந்தை சாலையில் இணைகிறது. இதில் கலையூர் கிராமம் ஏற்கெனவே தார்சாலையால் இணைக்கப்பட்டுள்ளது. பயன்பெறும் மற்ற கிராமங்களின் மக்கட்தொகை 1000-க்கு குறைவாக இருப்பதாலும், ஆதிதிராவிடர் மக்கட்தொகை 50 சதவீதம் குறைவாக இருப்பதாலும், பேருந்துகள் இச்சாலையில் இதுநாள் வரை செல்லவில்லை என்பதாலும், எந்தவொரு திட்டத்திலும் எடுத்துச் செய்ய இயலவில்லை.

65—

குன்னூரில் இருவழிப்பாதை அமைத்தல்.

வினா எண் 22180—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் மலைப்பாதை பகுதியை இருவழிப்பாதையாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் பெயர் நாகப்பட்டினம்-கூடலூர்–மைசூர் சாலையாகும். நீலகிரி மாவட்ட

எல்லைக்குள் இச்சாலையின் நீளம் 108.20 கி.மீ (கி.மீ. 397/2 முதல் 505/4 வரை) ஆகும். தற்போது இச்சாலையில் மொத்தம் 58.20 கி.மீ. நீளத்திற்கு இருவழிப்பாதையாக உள்ளது. மேலும் 1993-94 ஆம் ஆண்டு பாகம் 2 திட்டத்தின் கீழ் மேற்படி சாலையில் கி.மீ 455/0, 460/0 (5 கி.மீ.) வரையுள்ள சாலைப்பகுதியை இருவழிப் பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளது. மீதமுள்ள பகுதியில் சாலையை இருவழிப்பாதையாக அகலப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

66—

வேதாரண்யத்தில் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் ***22762****—திரு. பி.வி. இராஜேந்திரன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித் துறையின் உதவி செயற் பொறியாளர் அலுவலகம் ஒன்றினை வேதாரண்யத்தில் ஏற்படுத்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வேதாரண்யம் வட்டத்தில் உள்ள அரசு கட்டிடங்களைப் பராமரிக்க ஒரு பிரிவு அலுவலகம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. ஆகவே, வேதாரண்யத்தில் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

பரமக்குடி தாலுகாவில் கண்மாய்களைத் தூர்வார நடவடிக்கை.

வினா எண் ***22997****—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவில் உள்ள கண்மாய்களைத் தூர் வார 1992-93-ல் ஒதுக்கிய தொகை எவ்வளவு?

(ஆ) வரத்துக்கால்வாய்கள் தூர் வார அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகாவில் உள்ள கண்மாய்களைத் தூர்வார 1992-93 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) ஆம்.

(இ) உலக வங்கி உதவியுடன் வேலைகள் செய்ய பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வரத்துக்கால்வாய்கள் தூர்வாரவும் செப்பனிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி கால்வாய்கள் செப்பனிடுவது சம்பந்தமாக முடிவு எடுக்கப்பட்டவுடன் வேலைகள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

68—

செங்கம் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை கட்டிடங்கள் கட்டுதல்.

வினா எண் 23010—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை துறைக்குப் போதுமான அளவு கட்டிட வசதியுடன் கூடிய அலுவலகம் இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடத்தில் அலுவலகம் இயங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கம் பொதுப்பணித் துறை அலுவலகக் கட்டிடத்திற்குப் போதுமான கட்டிடமும், இடவசதியும் உள்ளது. செங்கம் நெடுஞ்சாலைத் துறை உபகோட்ட அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலகத்திற்கு என போதுமான அளவு வசதியுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் ஏதுமில்லை. மேற்கூறிய நெடுஞ்சாலைத் துறையின் இரு

அலுவலகங்களும் கிடங்கு கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி கட்டிடம் கட்ட தற்போதுள்ள அலுவலகத்தின் பக்கத்திலேயே தேவையான இடமுள்ளது. மேற்கூறிய இடத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு வேண்டிய அலுவலகக் கட்டிடம் போதிய வசதிகளுடன் கட்டுவதற்குத் தோராயமாக ரூ. 2.00 இலட்சம் தேவைப்படும். தற்போதுள்ள நிதி நிலைமையில் அதனை நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளில் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

முதல்சேரி கிராமத்தில் விவசாயத்திற்கு மின் இணைப்பு வழங்குதல்.

*வினா எண் **23749**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையை அடுத்த முதல்சேரி கிராமத்தில் விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையை அடுத்த முதல்சேரி கிராமத்தில் 1992-93 ஆம் ஆண்டு வரை 35 விவசாய பம்புசெட்டுகளுக்கும், 1993-94 ஆம் ஆண்டில் 6 விவசாய பம்புசெட்டுகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தற்பொழுது 15 விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இந்த விவசாயிகளுக்கு தஞ்சாவூர் மின் பகிர்மான வட்டத்திற்கான ஆண்டு இலக்கீட்டினைக் கருத்தில் கொண்டு, தயார் நிலையினை தெரிவிப்பதற்கான அறிவிப்புகள் விண்ணப்பப் பதிவு வரிசை அடிப்படையில் வழங்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

70—

பாம்பூரில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுதல்.

*வினா எண் **22265**— டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பாம்பூரில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

விடை.—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இராம்நாதபுரம் மாவட்டம், பாம்பூரில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்து பகுதி-2 (Part II Scheme) திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரின் அறிக்கை பெற்று நிதி நிலைக்கு ஏற்ப அரசால் பரிசீலிக்கப்படும்.

71—

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோயில்கள் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***13167, 18682, 19023, 19054, 19057, 19063, 19064, 19069, 19077***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. பேராவூரணி வட்டம், திருச்சிற்றம்பலம் அருள்மிகு பெரியநாயகி அம்மன் கோயில்.
2. தஞ்சாவூர் வட்டம், மானசபட்டி அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.
3. வலங்கைமான் வட்டம், கீழநெம்மேலி அருள்மிகு சித்தி விநாயகர் விக்னேஸ்வரர் மாகாளியம்மன் கூத்த அய்யனார் ஆலயம்.
4. திருவையாறு வட்டம், விளாங்குடி அருள்மிகு மகா கணபதி ஆலயம்.
5. திருவையாறு வட்டம் அன்னனூர் அருள்மிகு மகாகாளியம்மன் கணபதி ஆலயம்.
6. திருவையாறு வட்டம் ரெங்கநாதபுரம் அருள்மிகு திருவானேஸ்வரர் மற்றும் லெட்சுமி நாராயணப்பெருமாள் ஆலயம்.
7. திருவையாறு வட்டம், வனப்பக்குடி அருள்மிகு முனியாண்டவர் திருக்கோயில்.

8. திருவையாறு வட்டம், விஷ்ணம்பேட்டை அருள்மிகு விநாயகர் மற்றும் விஸ்வநாதர் தர்ம ஆலயம்.

9. வலங்கைமான் வட்டம், அம்மாப்பேட்டை அருள்மிகு கோதண்டராமர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதிப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

72—

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18713, 18717, 18726, 18727, 18728, 19882, 19932, 19933, 19934, 19936***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா----

தஞ்சாவூர் மாவட்டம்—

1. முதுகாடு, அருள்மிகு செல்லியம்மன் ஆலயம்.

2. வயலூர், அருள்மிகு வரதராஜப்பெருமாள் ஆலயம்.

3. வல்லம், அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.

4. வல்லம், அருள்மிகு பஞ்சேஸ்வரர் ஆலயம்.

5. வண்ணாரப்பேட்டை அருள்மிகு ஆதி விநாயகர் ஆலயம்.

6. அன்னப்பன்பேட்டை அருள்மிகு அங்காளம்மன் ஆலயம்.

7. அன்னப்பன்பேட்டை அருள்மிகு அய்யனார் ஆலையம்.

8. அன்னப்பன்பேட்டை அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

9. சகாஞ்சிகுடிபாடு அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

10. கீழ அமராவதி அருள்மிகு வரதராஜப்பெருமாள் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

73—

வலங்கைமான் மற்றும் பாபநாசம் வட்டங்களிலுள்ள கோயில்களை திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18735, 18736, 18737, 18738, 18739, 18740, 18741, 18742, 18743, 18748***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் மற்றும் பாபநாசம் வட்டம்—

1. அன்னிகுடி அருள்மிகு ஜெகந்நாதபரமேஸ்வரர் ஆலயம்.
2. ஆவூர் அருள்மிகு அய்யனார் ஆலயம்.
3. அனியமங்கலம் அருள்மிகு திருமேனியழகர் மற்றும் சந்நாசி அய்யனார் ஆலயம்.
4. ஆதிக்கமங்கலம் அருள்மிகு சுந்தரமூர்த்தி விநாயகர் ஆலயம்.
5. ஆதிக்கமங்கலம் அருள்மிகு சுந்தர மூர்த்தி விநாயகர் ஆலயம்.
6. கிளாக்காடு அருள்மிகு விருபாட்சீஸ்வரர் ஆலயம்.
7. கிளாக்காடு அருள்மிகு விருபாட்சீஸ்வரர் ஆலயம்.
8. கிளாக்காடு அருள்மிகு மாரியம்மன் மற்றும் அய்யனார் ஆலயம்.
9. கீழவிடையல் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் மற்றும் லெட்சுமி நாராயணப்பெருமாள் ஆலயம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 நவம்பர் 3

10. புள்ளபூதங்குடி அருள்மிகு வல்லப கணபதி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பிக்க திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

74—

பாபநாசம் மற்றும் மன்னார்குடி வட்டங்களிலுள்ள கோயில்களை திருப்பணி செய்தல்.

வினா எண் ***18751, 18752, 18754, 18755, 18756, 18757, 18758, 18763, 18764, 18792***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம் மற்றும் மன்னார்குடி வட்டம்—

(1) புத்தூர் அருள்மிகு இராமலிங்கசாமி ஆலயம்.

(2) புத்தூர் அருள்மிகு கும்மிடியம்மன் ஆலயம்.

(3) ரெங்கநாதபுரம் அருள்மிகு இராஜவிநாயகர் ஆலயம்.

(4) இராமச்சந்திரபுரம் அருள்மிகு சந்தான கிருஷ்ணசாமி ஆலயம்.

(5) சரபோஜிராஜபுரம் அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

(6) சரபோஜிராஜபுரம் அருள்மிகு லெட்சுமிநாராயண பெருமாள் ஆலயம்.

(7) மருங்கை, அருள்மிகு காளியம்மன் ஆலயம்.

(8) திருப்பாலத்துறை அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம்

(9) தங்காரம்பேட்டை அருள்மிகு இடுக்கண்தீர்த்த விநாயகர் ஆலயம்.

1994 நவம்பர் 3]

(10) நெடுவாங்கோட்டை அருள்மிகு நாட்டலங்கார மேல மாரியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

75—

ஒரத்தநாடு, மன்னார்குடி மற்றும் நீடாமங்கலம் வட்டங்களிலுள்ள திருக்கோயில்களை திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18775, 18776, 18777, 18778, 18779, 18780, 18781, 18782, 18783, 18784***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மன்னார்குடி வட்டம் மற்றும் நீடாமங்கலம் வட்டம்—

(1) முள்ளூர் பட்டிக்காடு அருள்மிகு சுப்பரமணியசாமி ஆலயம்.

(2) வடக்கூர் (வடக்கு) அருள்மிகு பெருவேம்பு அய்யனார் கோயில்.

(3) நெம்மேலி அருள்மிகு வில்வவனநாதர் ஆலயம்.

(4) புனவாசல் அருள்மிகு மாதபுரீஸ்வரர் ஆலயம்.

(5) சாத்தனூர் அருள்மிகு காளஸ்தீஸ்வரர் ஆலயம்.

(6) பேரையூர் அருள்மிகு சொக்கநாதர் மற்றும் விசுவநாதர் ஆலயம்.

(7) கோட்டூர் அருள்மிகு சந்தான கிருஷ்ணபெருமாள் ஆலயம்.

(8) வடக்குவாட்டார் அருள்மிகு பிள்ளையார் ஆலயம்.

(9) லெட்சுமாங்குடி அருள்மிகு நீலகண்டேஸ்வரசுவாமி ஆலயம்.

[1994 நவம்பர் 3

(10) மணக்கரை அருள்மிகு சுந்தரமூர்த்தி விநாயகர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

76—

நீடாமங்கலம், மன்னார்குடி மற்றும் வலங்கைமான் வட்டங்களிலுள்ள கோயில்களை புதுப்பித்தல்.

வினா எண்கள் ***18785, 18786, 18787, 18789, 18790, 18793, 18794, 18795, 18796, 18797*—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், மன்னார்குடி வட்டம் மற்றும் வலங்கைமான் வட்டம்—

(1) ஊட்டியாணி அருள்மிகு ஐராவதீஸ்வரர் ஆலயம்.

(2) புன்னமங்கலம் அருள்மிகு வடுகநாதபிள்ளையார் ஆலயம்.

(3) புலிமாங்குடி அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

(4) வேதானம் அருள்மிகு கரும்புடை அய்யனார் ஆலயம்.

(5) நட்டுவன்கோயில்பத்து அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி ஆலயம்.

(6) பட்டிமார் அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

(7) பாமணி அருள்மிகு மூக்குத்தியம்மன் ஆலயம்.

(8) கிளியூர் பருத்தியப்பர் சுவாமி ஆலயம்.

(9) வெள்ளக்குடி அய்யனார் ஆலயம்.

(10) காலபோகம் அருள்மிகு வீரசக்திபிள்ளையார் ஆலயம்.

1994 நவம்பர் 3]

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

77—

வலங்கைமான், மன்னார்குடி மற்றும் தஞ்சாவூர் வட்டங்களிலுள்ள கோயில்களை புதுப்பித்தல்.

வினா எண்கள் ***18798, 18835, 18837, 18872, 18874, 18909, 18914, 18915, 18917, 18920***—திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், மன்னார்குடி வட்டம் மற்றும் தஞ்சாவூர் வட்டம்—

(1) வடக்குப்பட்டம், அருள்மிகு காளியம்மன் ஆலயம்.

(2) மன்னார்குடி, அருள்மிகு வீரமாகாளியம்மன் ஆலயம்.

(3) மன்னார்குடி, அருள்மிகு மூர்க்க விநாயகர் ஆலயம்.

(4) தஞ்சாவூர், வடக்குவீதி அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் ஆலயம்.

(5) தஞ்சாவூர், பாம்பாட்டி தெரு அருள்மிகு சக்தி தேவியம்மன் ஆலயம்.

(6) இந்தலூர், அருள்மிகு அம்மையப்பசுவாமி ஆலயம்.

(7) உஜ்ஜனி, அருள்மிகு அண்ணாச்சியார் ஆலயம்.

(8) உஜ்ஜனி, அருள்மிகு முனியாண்டவர் ஆலயம்.

(9) பவனமங்கலம், அருள்மிகு பொன்னியம்மன் ஆலயம்.

(10) அலமேலுபுரம், அருள்மிகு ஓமாத்தாளம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

78—

மன்னார்குடி, நீடாமங்கலம் வட்டங்களிலுள்ள கோயில்களை திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18802, 18804, 18831, 18832, 18833, 18834, 18835, 18836, 18839, 18840***—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம் மற்றும் நீடாமங்கலம் வட்டம்—

(1) கருப்புகிளார், அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்.

(2) கத்தரிநத்தம், அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் ஆலயம்.

(3) மூவாநல்லூர், அருள்மிகு கொத்தவல்லி அய்யனார் ஆலயம்.

(4) ராதாநரசிங்கபுரம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம்.

(5) மாரநகரி, அருள்மிகு மாரியம்மன் கோயில்.

(6) மன்னார்குடி, அருள்மிகு வெள்ளைவிநாயகர் ஆலயம்.

(7) மன்னார்குடி, அருள்மிகு வல்லபவிநாயகர் ஆலயம்.

(8) மன்னார்குடி, அருள்மிகு அக்கரைமாரியம்மன் ஆலயம்.

(9) அகரவேணுக்குடி, அருள்மிகு பிரசன்ன வெங்கிடாசலபதி ஆலயம்.

(10) அதங்குடி, அருள்மிகு விருப்பாட்சீஸ்வரர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

79—

பட்டுக்கோட்டை, நீடாமங்கலம் மற்றும் மன்னார்குடி வட்டங்களிலுள்ள கோயில்களை திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18841, 18842, 18843, 18844, 18845, 18846, 18847, 18848, 18849, 18850—திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், நீடாமங்கலம் வட்டம் மற்றும் மன்னார்குடி வட்டம்—

(1) மகிழங்கோட்டை, அருள்மிகு ஞானசித்திவிநாயகர் ஆலயம்.

(2) மகிழங்கோட்டை, அருள்மிகு இராஜகோபாலசுவாமி ஆலயம்.

(3) மறவக்காடு, அருள்மிகு தாமோதரப்பிள்ளையார் ஆலயம்.

(4) வட்டாத்திக்கோட்டை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம்.

(5) வச்சிராநல்லூர், அருள்மிகு காளியம்மன் ஆலயம்.

(6) வேணுக்குடி, அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

(7) வெங்காரம் பேரையூர் அருள்மிகு லெட்சுமிநாரயணப் பெருமாள் ஆலயம்.

(8) இராமநாதன்கோயில், அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

(9) இராமநாதன்கோயில் அருள்மிகு சஞ்சீவி ராமசாமி ஆலயம்.

(10) வடுவூர், அருள்மிகு கோதண்டராமசாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

30—

ஒரத்தநாடு வட்டத்திலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18852, 18855, 18856, 18857, 18858, 18859, 18860, 18861, 18862, 18863***—திரு **ஆர்.** சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம்—

(1) பொன்னப்பூர், அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் ஆலயம்.

(2) ஆலயமூர்த்திபுரம், அருள்மிகு மாணிக்கவாசகர் ஆலயம்.

(3) நெய்வேலி தென்பாதி, அருள்மிகு மருதவானேஸ்வரர் ஆலயம்.

(4) சில்லத்தூர், அருள்மிகு விஸ்வநாதசுவாமி கோயில்.

(5) தலையாமங்கலம், அருள்மிகு அய்யனார் ஆலயம்.

(6) தலையாமங்கலம் (தொண்டராம்பட்டு), அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம்.

(7) தொண்டராம்பட்டு, அருள்மிகு கங்கானேஸ்வர் ஆலயம்.

(8) கருக்காக்கோட்டை தெக்கூர், அருள்மிகு கருவேம்பு அய்யனார் ஆலயம்.

(9) திருமங்கலக்கோட்டை., அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம்.

(10) கருப்பட்டிப்பட்டி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

81—

வலங்கைமான் வட்டத்திலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***19865, 19867, 19868, 19869, 19871, 19888, 19889, 19890, 19891, 19892***—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், மாவட்டம், வலங்கைமான் வட்டம்—

(1) களத்தூர் அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

(2) சாலுவம்பேட்டை, அருள்மிகு அனாதீஸ்வரர் மற்றும் லெட்சுமி நாராயணப்பெருமாள் ஆலயம்.

(3) நல்லூர், அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் ஆலயம்.

(4) மாளிகைதிடல், அருள்மிகு சுந்தரேஸ்வரர் ஆலயம்.

(5) மூவாவொஞ்சேரி, அருள்மிகு பிள்ளையார் மற்றும் அய்யனார் ஆலயம்.

(6) பூந்தோட்டம் அருள்மிகு பிள்ளையார் மற்றும் தண்டாயுதபாணி ஆலயம்.

(7) மேலஅமராவதி, அருள்மிகு செல்லியம்மன் திரௌபதியம்மன் வகையறா ஆலயம்.

(8) ஆதனூர், அருள்மிகு உத்ராபதீஸ்வரர் மற்றும் கூத்த பெருமாள் ஆலயம்.

(9) ஒளிமதி, அருள்மிகு வஸ்புரீஸ்வரர் மற்றும் மாரியம்மன் ஆலயம்.

(10) கப்பலுடையான், அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

82—

ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் வட்டங்களிலுள்ள கோயில்களைப் புதுப்பித்தல்.

வினா எண்கள் ***18864, 18865, 18866, 18867, 18868, 18869, 18870, 18871, 18873, 18875***—திரு. ***ஆர்.*** சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பட்டுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் வட்டம்—

1. மண்டலக்கோட்டை, அருள்மிகு கலிதீர்த்த விநாயகர் ஆலயம்.
2. சோழகன்குடிகாடு, அருள்மிகு தில்லைவிநாயகர் ஆலயம்.
3. மூர்த்தியம்மாள்புரம், அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம்.
4. திப்பியக்குடி, அருள்மிகு வேதவிநாயகர் ஆலயம்.
5. பருத்திக்கோட்டை, அருள்மிகு வண்ணமுடைய அய்யனார் ஆலயம்.
6. மேலையூர், கண்ணத்தக்குடி அருள்மிகு அய்யனார் ஆலயம்.
7. பாரூர் (அவரூர்), அருள்மிகு பொதியழகர் ஆலயம்.
8. தஞ்சாவூர், பாவுக்காரத் தெரு அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி ஆலயம்.
9. தஞ்சாவூர், குறிச்சிதெரு அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம்.
10. தஞ்சாவூர், மேட்டுத் தெரு அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை.—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

83—

தஞ்சாவூர் மற்றும் நீடாமங்கலம் வட்டங்களிலுள்ள கோயில்களைப் புதுப்பித்தல்.

வினா எண்கள் ***18876, 18877, 18878, 18879, 18880, 18906, 18907, 18908, 18910, 18911***—*திரு. ஆர். சிங்காரம்:* -மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம் மற்றும் நீடாமங்கலம் வட்டம்—

1. தஞ்சாவூர், ராஜப்பாநகர் அருள்மிகு செங்கமலநாச்சியம்மன் ஆலயம்.
2. தஞ்சாவூர், மருத்துவக்கல்லூரி அருள்மிகு வேல்முருகன் கோயில் ஆலயம்.
3. வல்லம், அருள்மிகு நரசிங்கபெருமாள் ஆலயம்.
4. வல்லம், அருள்மிகு முத்துமாரியம்மன் (எ) கௌரியம்மன் ஆலயம்.
5. வல்லம், அருள்மிகு சோளீசுவரர் ஆலயம்.
6. பூதமங்கலம், அருள்மிகு வெள்ளைவிநாயகர் ஆலயம்.
7. வாக்கோட்டை, அருள்மிகு வாலிபுரீஸ்வரர் ஆலயம்.
8. வாலாச்சேரி, அருள்மிகு வளஞ்சீஸ்வரர் ஆலயம்.
9. சித்திரக்குடி, அருள்மிகு சிவானாதீஸ்வரர் சுவாமி ஆலயம்.
10. வெண்டயம்பட்டி, அருள்மிகு தான்தோன்றீஸ்வரசுவாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

84—

வலங்கைமான், திருவையாறு வட்டங்களிலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***19893, 19894, 19895, 19896, 19897, 19898, 19899, 19900, 19904, 19906***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம் மற்றும் திருவையாறு வட்டம்—

1. கோவில்வெண்ணி, அருள்மிகு வன்னிகரும்பேஸ்வரர் ஆலயம்.
2. கோவில்வெண்ணி, அருள்மிகு வடகலைரெங்கநாதர் ஆலயம்.
3. நீடாமங்கலம், அருள்மிகு சதுர்வேத விநாயகர் மற்றும் மாரியம்மன் ஆலயம்.
4. முன்னாவல்கோட்டை, அருள்மிகு காளகஸ்தீஸ்வரர் ஆலயம்.
5. பூவலூர், அருள்மிகு வரதராஜபெருமாள் ஆலயம்.
6. பூவலூர், அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.
7. பூவலூர், அருள்மிகு ஜம்புநாதர் மற்றும் வரதராஜப்பெருமாள் ஆலயம்.
8. ராயபுரம், அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம்.
9. கடம்பூர், அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்.
10. திருவலம்பொழில், அருள்மிகு பொன்னியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

85—

திருவையாறு, பாபநாசம் வட்டங்களிலுள்ள கோயில்களைப் புதுப்பித்தல்.

வினா எண்கள் ***19907, 19908, 19909, 19914, 19915, 19916, 19917, 19918, 19919, 19920***—திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம் மற்றும் பாபநாசம் வட்டம்—

1. சுபமூர், அருள்மிகு நவநீத கிருஷ்ணசாமி ஆலயம்.
2. திருப்பழனம், அருள்மிகு அய்யனார் ஆலயம்.
3. நடுக்காவேரி, அருள்மிகு காவேரிக்கரை விநாயகர் ஆலயம்.
4. மேலகபிஸ்தலம், அருள்மிகு காத்தாயியம்மன் மற்றும் மன்னார் ஆலயம்.
5. மாலாபுரம், அருள்மிகு லெட்சுமிநாராயணப்பெருமாள் ஆலயம்.
6. மாலாபுரம், அருள்மிகு விஸ்வநாதசாமி ஆலயம்.
7. மாரப்பநல்லூர், அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலயம்.
8. மேலமாஞ்சேரி, அருள்மிகு வினைதீர்த்த விநாயகர் ஆலயம்.
9. மெலட்டூர், அருள்மிகு மாணிக்க விநாயகர் ஆலயம்.
10. மெலட்டூர், அருள்மிகு அங்காளம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

86—

திருக்காட்டுப்பள்ளி, ஒரத்தநாடு மற்றும் வலங்கைமான் வட்டங்களிலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் *18912, 18913, 18916, 18923, 18926, 18927, 19861, 19862, 19863, 19864*—திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி வட்டம், ஒரத்தநாடு வட்டம் மற்றும் வலங்கைமான் வட்டம்—

1. வளம்பக்குடி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்.
2. தோகூர் அருள்மிகு சிங்கம்பிடாரி ஆலயம்.
3. கோயிலடி அருள்மிகு ராஜவிநாயகர் ஆலயம்.
4. தணிகைவிடுதி அருள்மிகு திருப்பணங்காருடையார் ஆலயம்.
5. கல்லகுடி அருள்மிகு திரௌபதியம்மன் மற்றும் கணபதி பிள்ளையார் ஆலயம்.
6. வீரமாங்குடி அருள்மிகு செல்லியம்மன் ஆலயம்.
7. வலங்கைமான் அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயம்.
8. வலங்கைமான் அருள்மிகு கோதண்டராமசாமி ஆலயம்.
9. விடையன்கருப்பூர் அருள்மிகு அருணாசலேஸ்வரர் மற்றும் வரதராஜப்பெருமாள் ஆலயம்.
10. ஊத்துக்காடு அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ.நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

1994 நவம்பர் 3]

87—

திருக்காட்டுப்பள்ளி, வலங்கைமான் மற்றும் திருவையாறு வட்டத்திலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள்—***18921, 18922, 19860, 19901, 19902, 19911, 19912, 19913***-திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி வட்டம், வலங்கைமான் வட்டம் மற்றும் திருவையாறு வட்டம்—

1. திருக்காட்டுப்பள்ளி அருள்மிகு காளியம்மன் ஆலயம்.
2. ராஜகிரி அருள்மிகு விநாயகர் ஆலயம்.
3. வடக்குப் பட்டம் அருள்மிகு சுந்தரவிநாயகர் ஆலயம்.
4. ரிஷியூர் அருள்மிகு கைலாசநாதர் மற்றும் ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்.
5. வலங்கைமான் அருள்மிகு மாரியம்மன் அய்யனார் மற்றும் பிள்ளையார் ஆலயம்.
6. விளாங்குடி அருள்மிகு பிள்ளையார் ஆலயம்.
7. விளாங்குடி அருள்மிகு கருப்பசாமி ஆலயம்.
8. விளாங்குடி அருள்மிகு செல்லியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

88—

பாபநாசம் வட்டத்திலுள்ள கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள்—***19921, 19922, 19923, 19924, 19925, 19926, 19928, 19929, 19930, 19931***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம்—

1. மேலசெம்மங்குடி அருள்மிகு படைதாங்கி விநாயகர் ஆலயம்.

2. மேலசெம்மங்குடி அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.

3. நரசிம்மபுரம் அருள்மிகு தண்டுமாரியம்மன் ஆலயம்.

4. நக்கம்பாடி அருள்மிகு வெள்ளை வாரண விநாயகர் ஆலயம்.

5. நெடுந்தெரு அருள்மிகு ராஜகோபாலசாமி ஆலயம்.

6. நெடுந்தெரு அருள்மிகு சுந்தரவிநாயகர் ஆலயம்.

7. ஒன்பத்துவேலி அருள்மிகு ஆதரித்த அம்மன் ஆலயம்.

8. அலவந்திபுரம் அருள்மிகு சந்திரசேகர் அய்யனார் ஆலயம்.

9. அரயபுரம் அருள்மிகு வீரப்பெருமாள் ஆலயம்.

10. அன்னப்பன்பேட்டை அருள்மிகு கல்யாணபிள்ளையார் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

89—

கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு செயல் அலுவலர் நியமனம்.

வினா எண் **20140**-திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு தற்சமயம் செயல் அலுவலர் நியமனம் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்திருக்கோயிலுக்கு விரைவில் செயல் அலுவலர் நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நீதிமன்றத்தின் உத்தரவின்படி திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் ஆலயத்திற்கு செயல் அலுவலர் நியமனம் செய்ய இயலாது. எனினும் பரம்பரை அறங்காவலர்களின் விருப்பத்தின் பேரில் 2-ம் நிலை செயல் அலுவலர் நியமிக்கப்பட்டு கண்காணிப்பாளராக செயல் பட்டு வருகிறார்.

90—

திருக்கோயில்களின் நிலையை உதவி ஆணையர் பணியிடத்திற்கு உயர்த்தல்.

வினா எண் 26523-திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டு வருமானம் ரூ. 20 இலட்சத்துக்குமேல் வந்தும் முதல் நிலை செயல் அலுவலர்களின் நிர்வாகத்தில் இயங்கும் திருக்கோயில்கள் மாநிலத்தில் எவ்வளவு?

(ஆ) அவற்றை உதவி ஆணையர்களின் நிர்வாகத்திற்கு உயர்த்தும் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மொத்தம் எட்டு திருக்கோயில்கள்.

(ஆ) இவற்றுள் ஆறு (6) திருக்கோயில்களின் நிலையை உதவி ஆணையர் பணியிடத்திற்கு உயர்த்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள இரண்டில் ஒரு திருக்கோயில் குறித்து ஆணையரால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்றொன்றில் நிர்வாகம் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

91—

ஸ்ரீமாரியம்மன் செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் கடைகள் மூலம் வருமானம்.

*வினா எண் **26820**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஊஞ்சலூர் ஸ்ரீமாரியம்மன் செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் உள்ள கடைகளின் மூலம் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) எத்தனை கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம், ஊஞ்சலூர் மாரியம்மன் செல்லாண்டியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக ஆறு கடைகள் உள்ளன. அக் கடைகளின் மூலம் பெறப்படும் ஆண்டு வருமானம் ரூ. 31.340 ஆகும்.

92—

பழவேற்காடு ஏரியில் மீன்பிடி உரிமையை உறுதிப்படுத்துதல்.

*வினா எண் **34478**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பழவேற்காடு ஏரியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி.ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

நம் மீனவர்கள் பழவேற்காடு ஏரியில் மீன்பிடித் தொழிலில் பரம்பரை உரிமையை அனுபவித்து வருகின்றனர். எனவே மீனவர்களின் பரம்பரை மீன்பிடி உரிமையை அரசு பாதுகாத்து வருகிறது.

93—

கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்குக் கடனுதவி வழங்குதல்.

வினா எண் ***34529*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பெரியதாதம்பாளையத்தில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு தொழில் செய்ய பிற்பட்டோர் நலத்துறை மூலம் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரவக்குறிச்சி தொகுதி க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பெரியதாதம்பாளையத்தில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு மிகப் பிற்பட்டோர் நலத்துறை மூலம் கடனுதவி ஏதும் வழங்கப்படுவதில்லை. கல்லுடைக்கும் தொழில் செய்யும் போயர்களுக்கு மட்டும் இத்துறை மூலம் கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், பெரியதாதம்பாளையத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட/மிக பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் பிரிவினைச் சார்ந்த கல்லுடைக்கும் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைத்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திடம் கடனுதவி கோரினால் அவர்களுக்கு இக்கழகம் கடனுதவி வழங்கும்.

94—

மேட்டூர் அணையைச் சுற்றுலா தலமாக்குதல்.

வினா எண் ***4598*—*திரு. கே. கந்தசாமி:*** மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையைச் சுற்றுலாத் தலமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* : மேட்டூர் அணை மேம்பாட்டிற்காக சுற்றுலாத்துறை ரூ. 35.55 இலட்சம் ஒதுக்கீடு செய்து, முதற் கட்டமாக ரூ. 13.00 இலட்சம் செலவில் பூங்கா அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ரூ. 15.00 இலட்சம் செலவில் தங்குமிட வசதியுடன் கூடிய உணவகம் கட்டப்பட உள்ளது.

95—

திருமலைக்கேணி, செங்குறிச்சி சுற்றுலாமையங்களில் அடிப்படை வசதிகள் செய்தல்.

வினா எண் ***5128*—*திரு.எம். ஆண்டி அம்பலம்:*** மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதிக்குட்பட்ட மாவட்ட சுற்றுலா மையமாக திருமலைக்கேணியில் கழிவு நீர் வசதி மற்றும் செங்குறிச்சி-திருமலைக்கேணி சாலை அமைப்பு பணிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) மேலும் என்னென்ன அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன?

(ஈ) எப்போது அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன? மேலும் அரசு நிதி ஒதுக்கீடு ஏதேனும் செய்துள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) நத்தம் தொகுதிக்குட்பட்ட மாவட்ட சுற்றுலா மையமான திருமலைக்கேணியில் கழிவு நீர் வசதி மற்றும் செங்குறிச்சி-திருமலைக்கேணி சாலை அமைப்பு பணிகள் முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

(ஆ) இதற்காக அரசு செலவிட்ட தொகை ரூ. 86,345. மேலும் இங்கு ஒரு தங்கும் விடுதி இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு 27-11-1991 அன்று திறக்கப்பட்டது.

(இ) தற்போது இல்லை.

(ஈ) தற்போது இல்லை.

96—

வேலூர் கோட்டையை சுற்றுலா மையமாக்குதல்.

வினா எண் *5907*—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டையை தமிழக அரசு சுற்றுலாமையமாக மாற்றி கோட்டை அகழியை சுத்தப்படுத்தி அதில் நல்ல நீரை நிரப்பி படகுகளை விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான். சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

97—

திருநெல்வேலி — கட்டபொம்மன் மாவட்டம், அருள்மிகு பாபநாசம் கோயில், வசதிகள் செய்தல்.

வினா எண் *6295*- திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் அருள்மிகு பாபநாசம் கோயில் முன் 1989-90ல் தாமிரபரணி நதிக்கரையோரம் சுற்றுலாத்துறை மூலம் படித்துறை வேலை மற்றும் நவீன கழிப்பறை, குளியலறை கட்டுவதற்கு அரசு அனுமதித்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு நிதி உதவியுடன் ரூ. 3.57 இலட்சம் செலவில் பாபநாசம் படித்துறையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

98—

தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுலா மையங்களை நிர்ணயித்தல்.

வினா எண் ***14455*** ஏ - திரு. மு. வெங்கடராமரெட்டி (மற்றும்) திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களை சுற்றுலாத் தலங்களாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள (1) தீர்த்தமலை, (2) கிருஷ்ணகிரி அணை மற்றும் (3) வாணியர் அணை ஆகிய மூன்று இடங்கள் மாவட்ட உலாத்தலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தீர்த்தமலையில் சுற்றுலாத்துறையின் சார்பில் ரூ.2.00 இலட்சம் செலவில் பார்வையாளர்கள் தங்கும் கூடம், உடைமாற்றும் அறை மற்றும் உணவருந்தும் அறை கட்டப்பட்டுள்ளது.

99—

கரூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் கட்டுதல்.

வினா எண் ***23746***—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருச்சி மாவட்டம், கரூரில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், தமிழ்நாடு ஓட்டல் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், கரூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஓட்டல் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

100—

தமிழகத்தின் ஹஜ் குழுவின் உறுப்பினர்கள் விவரம்.

வினா எண் *26008*—திருமதி *ஜீனத் சர்புதீன்:* மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஹஜ் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?

(ஆ) அக்குழுவில் பெண் உறுப்பினர்கள் இல்லையெனில் இனிமேல் பெண் உறுப்பினர்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(இ) இவ்வுறுப்பினர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன?

(ஈ) ஹஜ் பயணம் மேற்கொள்ள அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தின் ஹஜ் குழுவில் 7 கூடுதல் உறுப்பினர்கள் உட்பட மொத்தம் 22 உறுப்பினர்கள் உள்ளனர்.

(ஆ) திருமதி கே. மரியம் உல் ஆசியா, எம்.எல்.ஏ அவர்கள் இக்குழுவில் உறுப்பினராக இருக்கிறார்.

(இ) மாநில ஹஜ் குழுவின் கூட்டம் நடைபெறும்போது, அதில் கலந்து கொள்ளும், மாநில ஹஜ் குழு உறுப்பினர்களுக்கு தங்களின் சொந்த ஊரிலிருந்து, சென்னைக்கு வந்து செல்வதற்கு, முதல் வகுப்பு பிரயாண டிக்கெட் செலவு மற்றும் தினப்படி ரூ. 50-ம் அளிக்கப்படுகின்றது. தவிர உள்ளூர் உறுப்பினர்களுக்கு நபரொன்றுக்கு ரூ. 30-ம் வழங்கப்படுகிறது.

(ஈ) இதுபோன்ற திட்டம் ஏதும் இல்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எட்டாம் பட்டியல்

1—

சிறைக்கைதிகளின் நலனைப் பாதுகாக்கக் குழு அமைத்தல்.

*வினா எண் **23156**-திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டனை அனுபவித்து வரும் சிறைக் கைதிகளின் நலன்களைப் பாதுகாக்கக் குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: தண்டனை அனுபவித்து வரும் சிறைவாசிகளின் நலன்களைப் பாதுகாக்க, தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் பாகம் 1 முதல் 4 முடிய அமைக்கப்பட்டுள்ள விதிகளில், அனைத்து வகையான சிறைவாசிகளின் நலன்களைப் பாதுகாக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 14 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்த சிறைவாசிகளின் முன் விடுதலையினை பரிந்துரை செய்ய, தமிழ்நாடு சிறை நடைமுறைகளிலுள்ள விதிகளின்படி அறிவுரை கழகம் (Advisory Board) எனப்படும் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு சீர்திருத்தக் குழுவின் (1978-79) பரிந்துரைகளுக்கிணங்க சிறைகளில் பஞ்சாயத்து முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு, சிறை வாசிகளில் மூன்று குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு குழு உணவுக் கிடங்கில் உணவுப் பொருட்கள் பெற்று, உணவு சரி பார்த்து சிறைவாசிகளுக்கு வழங்குவதற்கும், இரண்டாவது குழு சிறைகளில் கலை மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்கும், மூன்றாவது குழு சிறைவாசிகளிடையே பொது ஒழுங்கு முறை, சுகாதாரம் மற்றும் சுத்தம் பேணுதலை கவனித்தல் போன்ற பணிகளை கவனித்தும் சிறை வாசிகளின் நலன் பேணி வருகிறது. இவற்றைத் தவிர, தண்டனை அனுபவித்து வரும் சிறை வாசிகளின் நலன்களை பாதுகாப்பது குறித்து வேறு குழு அமைக்க செயற் குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை..

2—

கன்னியாகுமரி மாவட்ட தலைமை மருத்துவமனை ஆம்புலன்ஸ்களை சரி செய்தல்.

*வினா எண் **33171**-திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) கன்னியாகுமரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்ள 3 ஆம்புலன்ஸ் வண்டிகளும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அம்மருத்துவமனைக்குப் புதிய ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் டி.எம்.ஓ. 4178 மற்றும் டி.எம்.ஓ. 4198 ஆகிய இரு ஆம்புலன்ஸ்களும் ஓடிக்கொண்டிருப்பதாகவும் மற்றும் டி.என்.கே. 2348 ஆம்புலன்ஸ் ஊர்தி 19-4-1994 அன்று நாகர்கோவில் மாவட்ட பணிமனைக்கு பழுதினைச்சரி செய்ய அனுப்பி வைக்கப்பட்டு பழுதுகள் சரி செய்யப்பட்டு மீண்டும் 17-5-1994இல் திரும்பப் பெறப்பட்டு 3 ஆம்புலன்ஸ்களும் ஓடும் நிலையில் உள்ளன.

(ஆ) மேலே (அ) வில் கண்ட பதிலின் படி 3 ஆம்புலன்ஸ்களும் ஓடும் நிலையில் உள்ளதால் தற்சமயம் புதிய ஆம்புலன்ஸ் வாங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. பிற்காலத்தில் தேவைப்பட்டால் அரசின் நிதிநிலைக்கேற்ப புதிய ஆம்புலன்ஸ் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சை ஊர்தி வழங்குதல்.

வினா எண் 34244-திரு. எம்.சி.தாமோதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு — வள்ளலார் மாவட்டம், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அவசர சிகிச்சை ஊர்தி (Ambulance) வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இதுகாறும் 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கு மட்டுமே அரசு அவசர ஊர்தி (Ambulance) வழங்கியுள்ளது. பண்ருட்டி

அரசு மருத்துவமனை 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். இனி வரும் காலத்தில் 50 படுக்கைகளுக்குக் கீழுள்ள மருத்துவமனைகளுக்கு நிதிநிலையைக் கருத்திற் கொண்டு அவசர ஊர்தி அரசால் வழங்கும்போது பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க ஆவன செய்யும்.

4—

பேராவூரணி-கரம்பக்குடி இடையே நகரப்பேருந்து இயக்குதல்.

வினா எண் 13426-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து தென்னங்குடி, திருச்சிற்றம்பலம், வாட்டாத்திக்கோட்டை இடையாத்தி வழியாக கரம்பக்குடிக்கு 1992-93-ல் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இத்தடத்தில் வாட்டாத்திக்கோட்டையில் இருந்து கொல்லைக்காடு வரை 2 கி.மீ. தூரம் மண்சாலையாக, பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளதால் இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

5—

பேராவூரணி-பாகம்பெரியாள் கோவிலுக்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 13769-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து பாகம் பெரியாள் கோவிலுக்கு 1992-93-ல் ஒரு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்.

இல்லை.

1994 நவம்பர் 3]

6—

பேராவூரணி-கட்டுமாவடிக்கு நகரப்பேருந்து இயக்குதல்.

வினா எண் 13770-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து பெருமகளூர் வழியாக கட்டுமாவடிக்கு 1992-93-ல் ஒரு நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பேராவூரணி தடம் எண் 3 பேராவூரணி-கட்டுமாவடி (வழி) பெருமகளூர் தடத்தில் நான்கு நடைகள் தற்பொழுது இயக்கப்படுகின்றன. தற்பொழுது இயக்கப்படுகின்ற நடைகளே போதுமானதாக உள்ளதாலும், தற்பொழுது இப்பேருந்தின் வருவாய் குறைவாக உள்ளதாலும், இத்தடத்தில் ஒரு நகரப் பேருந்து கூடுதலாக இயக்க இயலாது.

7—

மரவக்காடு—துவரங்குறிச்சி பேருந்து நடைகளை அதிகமாக இயக்குதல்.

வினா எண் 13772-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், செங்கபடுத்தான்காடு ஊராட்சி, மரவக்காட்டிலிருந்து பட்டுக்கோட்டை வழியாக துவரங்குறிச்சி செல்லும் பேருந்தை 6 சிங்கிளுக்கு பதிலாக பள்ளி மாணவர்களுக்காக 9 சிங்கிளாக விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

பட்டுக்கோட்டை தடம் எண் 17 பட்டுக்கோட்டை-மறவக்காடு வழி துவரங்குறிச்சி தடத்தில் 14 நடைகள் தற்பொழுது இயக்கப்படுகின்றன.

[1994 நவம்பர் 3

8—

வி.கே.புதூர் லட்சுமிபுரம் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் *15132*—திரு *எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி கீழப்பாலூர் ஒன்றியத்திலுள்ள வி.கே.புதூரிலிருந்து இராஜகோபாலப்பேரி அதிசயபுரம் வழியாக அச்சங்குட்டம் லட்சுமிபுரம் வரை நகரப்பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்.

இராஜகோபாலப்பேரி அதிசயபுரம் வழியாக தற்போது நாளொன்றுக்கு 3 பேருந்துகள் 24 சுற்றுகள் இயங்கி வருகின்றன. மேலும், அச்சங்குட்டம், லட்சுமிபுரம் கிராமங்களுக்கு 3 பேருந்துகள் வாயிலாக 34 சுற்றுகள் பேருந்து வசதி உள்ளன. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இந்தப் பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதலாம்.

9—

சாலையோர மரங்கள் மூலம் 1991-92 ஆம் ஆண்டு வருமான விவரம்.

வினா எண் *15412*–டாக்டர் *எஸ்.சுந்தரராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலை ஓரத்தில் மரம் வளர்ப்பதால் அரசுக்கு 1991-92ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த சாலையோரங்களில் மரங்கள் வளர்க்கப்பட்டதில் 1991-92 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ. 41,29,658 (ரூபாய் நாற்பத்தி ஒரு லட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்தெட்டு மட்டும்) வருமானமாக கிடைத்துள்ளது.

1994 நவம்பர் 3]

10—

பெரியார்நகர்-சுங்கச்சாவடி பேருந்தை திருவொற்றியூர் வரை நீட்டித்தல்.

வினா எண் ***16304***-*திரு ப. ரங்கநாதன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து, சுங்கச் சாவடி வரை செல்லும் பேருந்து தடம் என் 8 ஏ-வை திருவொற்றியூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து சுங்கச்சாவடிக்கு வழித்தடம் 8 ஏ-யில் 20- நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்படுகின்றன. சுங்கச்சாவடியிலிருந்து திருவொற்றியூர் செல்வதற்கு ஒரு நிமிடத்திற்கு ஒரு பேருந்துவீதம் அதிகமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. வழித்தடம் 8 ஏ பேருந்துகளை திருவொற்றியூர் வரை நீட்டித்து இயக்கினால் அதன் பயண நடைகள் குறைவதுடன், அவ்வழித்தடத்தில் ஒரு பேருந்துக்கும் மற்றொரு பேருந்துக்கும் உள்ள இடைவெளி நேரம் அதிகரிக்கும். இதனால் பெரியார் நகர் பகுதியில் இப்பேருந்துகளை பயன் படுத்திவரும் மக்களுக்கு பாதகம் ஏற்படும். எனவே வழித்தடம் 8 ஏ பேருந்துகளை திருவொற்றியூர் வரை நீட்டித்து இயக்க தற்பொழுது வாய்ப்பில்லை.

11—

மதுரை-செங்கோட்டை செல்லும் பேருந்துகளை தி. குள்ளத்தூரில் நின்று செல்ல ஆவன செய்தல்.

வினா எண் ***16712***—*டாக்டர் எஸ்.சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து செங்கோட்டை, தென்காசி, குற்றாலம் இராஜபாளையம் செல்லும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம். தி. குன்னத்தூரில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

மதுரையிலிருந்து செங்கோட்டை, தென்காசி, குற்றாலம் மற்றும் இராஜபாளையம் செல்லும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பணிபுரியும் அனைத்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு சுற்றறிக்கையின் வாயிலாக தக்க அறிவுரை வழங்கி தி. குள்ளத்தூரில் பேருந்தை நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்ல தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

12—

மயிலாடுதுறை-கும்பகோணம் பேருந்தை மகாதானபுரத்தில் நிறுத்தச் செய்தல்.

வினா எண் 17216-திரு எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்லும் பேருந்துகளை மகாதானபுரத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மகாதானபுரத்தில் ஏற்கனவே பேருந்து நிறுத்தம் உள்ளது. இருப்பினும் இவ்வழியே செல்லும் அனைத்து பேருந்துகளையும் மகாதானபுரத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்ல சோழன் போக்குவரத்துக் கழகம் சுற்றறிக்கை மூலம் நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

13—

வாணியம்பாடி - பெங்களூர் பேருந்தை வெள்ளக்குட்டை வழியாக இயக்குதல்.

வினா எண் 19600—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) வாணியம்பாடி-பெங்களூர் செல்லும் பி.ஏ.டி.சி. பேருந்து வெள்ளக்குட்டை கிராமம் வரை சென்றது. தற்போது நிறுத்தப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மீண்டும் அங்கிருந்து வெள்ளக்குட்டை கிராமத்திற்கு விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வாணியம்பாடி-பெங்களூர் ஒரு இரு மாநில தடமாகும். இத்தடத்தில் இயக்கப்பட்ட பேருந்தில் தற்காலிக உரிமம் கர்நாடக அரசால் நிராகரிக்கப்பட்டு விட்டதால் 10-3-1993 முதல் அவ்வழித்தடம் நிறுத்தப்பட்டு விட்டது. வெள்ளக்குட்டை கிராமத்திலிருந்து வாணியம்பாடிக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் நான்கு நகரப் பேருந்துகள் ஒரு நாளைக்கு 24 நடைகளும், 2 புறநகர் தடத்தின் மூலம் 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. அக்கிராமத்தில் வசிக்கும் பொது மக்களின் எண்ணிக்கைக்கு இவையே போதுமானதாகும்.

14—

மதுரை-பழனிக்கு புதிய வழித்தடம் வழியாக பேருந்து இயக்குதல்.

வினா எண் **20358-ஏ**—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை-பழனி (வழி) டி. வாடிப்பட்டி, அம்மைய நாயக்கனூர், கொடை ரோடு, கொருஞ்சிப்பட்டி, நாயகவுண்டன் பட்டி, ஜல்லிபட்டி, அழகன்பட்டி, சக்கநாயக்கனூர், செம்பட்டி வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மதுரை-பழனி (வழி) கொடைரோடு, செம்பட்டி, வழியாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் 39 தனி நடைகளும், பாண்டியன்

[1994 நவம்பர் 3

போக்குவரத்துக் கழகம் 13 தனி நடைகளுமாக மொத்தம் 52 தனி நடைகள் தடையின்றி இயக்கப்படுகின்றன. வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடம் சுற்று வழித் தடமாகும். நேரடிப் பயணிகள் இச்சுற்று வழித் தடத்தில் பயணம் செய்ய விரும்ப மாட்டார்கள். இதனால் கூடுதல் பயணக் கட்டணம் வசூலிக்க நேரிடும். எனவே கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக் கூறு இல்லை.

15—

நிலக்கோட்டை-தேக்கடிக்கு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **20359**—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டையிலிருந்து தேக்கடிக்கு, பெரியகுளம், தேனி, கம்பம், குமுளி வழியாக பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இது இரு மாநிலத் தடமானதால், கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்த பிறகுதான் இத்தடத்தில் பேருந்தை இயக்க இயலும்.

16—

திருநெல்வேலி-மேலப்பட்டமுடையார்புரம் கிராமத்திற்கு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **20644**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விடை—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பட்டமுடையார்புரம் கிராமத்திற்கு தடம் எண் 8 பேருந்து சென்று வர அரசு ஆவன செய்யுமா ?

1994 நவம்பர் 3]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தென்காசி-ஆலங்குளம் தடத்தில் இயக்கப்பட்டு வரும் நகர வழித்தடம் எண் 8-ன் தற்போதைய வழித்தட தூரம் 29.2 கி.மீ. ஆகும். எனவே பிரதான சாலையிலிருந்து சுமார் 2.4 கி.மீ. தூரத்தில் அமைந்திருக்கும் மேலப்பட்டமுடையார் புரத்திற்கு சென்று வரும்படியான இந்த நகரப் பேருந்தை நீட்டிப்பு செய்து இயக்கினால் வழித்தட தூரம் 30.0 கி.மீ-க்கு மேல் கூடுமாகையால் நீட்டிப்பு செய்ய இயலாது.

17—

புவனகிரி-சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **20834**—செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரியிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 250 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள நீண்ட தூரம் செல்லும் வழித் தடங்களை இயக்குவதற்கு ஏற்பட்டதாகும். புவனகிரி-சென்னை வழித்தடத்தின் நீளம் 250 கி.மீ-க்கும் குறைவாக உள்ளதால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் இத்தடத்தில் பேருந்துகளை இயக்க இயலாது.

18—

கும்பகோணம்-நக்கம்பாடி பேருந்தை கம்பூர் வரை இயக்குதல்.

*வினா எண் **21600**—திரு எஸ். ஆசைமணி :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், கும்பகோணத்திலிருந்து நக்கம்பாடி வரை செல்லும் நெ.58, நகரப் பேருந்தை கம்பூர் வரை இயக்கிட அரசு ஆவன செய்யுமா ?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கும்பகோணம்-நக்கம்பாடி தடத்தின் நீளம் 26 கி.மீ. மேற்கொண்டு 6 கி.மீ. நீட்டித்து கம்பூர் வரை இயக்குவதாயின் தடத்தின் நீளம் 30 கி.மீ.-க்கு மேற்பட்டு விடும். கம்பூர் ஏற்கனவே மயிலாடுதுறையிலிருந்து நகரப் பேருந்து தடம் எண் 10-சியின் மூலம் 8 நடைகள் பேருந்து வசதி பெற்றுள்ளமையாலும், 30 கி.மீ.-க்கு மேற்பட்ட தடத்தில் நகரப் பேருந்து இயக்கமுடியாது என்பதாலும், குறிப்பிட்டவாறு கும்பகோணம்-நக்கம்பாடி பேருந்தினை கம்பூர் வரை நீட்டித்து இயக்க இயலாது.

19—

சிவகாசி-சாத்தூருக்கு புதிய வழித்தடம் வழியாக நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***22020***—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசியிலிருந்து சாத்தூருக்கு விஸ்வநத்தம்-தாயில்பட்டி, எஸ். சுப்பிரமணியபுரம், ஏர்வார்பட்டி வழியாக நகரப் பேருந்து விடப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்சமயம் சிவகாசி-சாத்தூர் (வழி) விஸ்வநத்தம் மேல் ஒட்டம்பட்டி வழியாக இரண்டு பேருந்துகளும், சிவகாசி சாத்தூர் (வழி) மடத்துப்பட்டி, தாயில்பட்டி, எஸ். சுப்பிரமணியபுரம், ஏர்வார்பட்டி வழியாக ஒரு நகரப் பேருந்தையும் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது. இக்கிராம மக்களுக்கு இப்பேருந்து வசதி போதுமானதாகும்.

20—

சென்னையிலிருந்து சீர்காழி, பூம்புகார், பொறையார் ஆகிய ஊர்களுக்கு திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***22238***—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) சென்னை-சீர்காழி, சென்னை-பூம்புகார், சென்னை-பொறையார் ஆகிய ஊர்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துவிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

21—

பூம்புகார் சென்றுவந்த பேருந்து எண் 36-ஐ மீண்டும் இயக்குதல்.

வினா எண் *22282*—திரு எஸ். ஆசைமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், பூம்புகார் மற்றும் ஏவிசி கல்லூரி மற்றும் பேரளம், ஏரவாஞ்சேரி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் நலன் கருதி, நிறுத்தப்பட்டுள்ள (C.R.C.) நகரப் பேருந்து எண் 36-ஐ மீண்டும் இயக்கவும் அல்லது மேற்படி பகுதி மாணவ, மாணவியர் கல்லூரி, பள்ளிக்கு சென்று வர மாற்று பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மயிலாடுதுறை நகரத் தடம் எண் 36 வழக்கம் போல் நன்னிலம், வேலங்குடி, ஆலத்தூர் ஆகிய தடங்களில் இயக்கப்படுகிறது. மயிலாடுதுறை தடம் எண்கள் 21, 21ஏ, 21சி, 2பி ஆகிய பேருந்துகள் பூம்புகார் கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தும் நேரத்திலும், ஏவிசி கல்லூரிக்கு தடம் எண்கள் 2ஏ, 4, 37 ஆகிய பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. மயிலாடுதுறை, ஏரவாஞ்சேரிக்கு பள்ளி நேரத்தில் தடம் எண் 32 இயக்கப்படுகிறது. மேற்படி தடங்களுக்கு தற்போது உள்ள பேருந்து வசதி போதுமானதாக உள்ளது எனக் கருதலாம்.

[1994 நவம்பர் 3

22—

திருவாரூர் - சென்னை இடையே மீண்டும் திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **22401**—திரு. எஸ். ஆசைமணி :* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் பேரூராட்சி வழியாக திருவாரூரிலிருந்து சென்னை வரை சென்று வந்த தடம் எண் 329 திருவள்ளுவர் விரைவுப் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

இந்த வழித்தடத்தைப் பயன்படுத்திய பயணிகள் விகிதாச்சாரமும் ஈட்டிய வருவாயும் மிகவும் குறைவாக இருந்தமையால் 28-12-1991 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் வழித்தட எண்கள் 339, 340 சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்கு திருவாரூர், குடவாசல் வழியாக இயக்கப்படுகின்றன. குடவாசல் பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

23—

பள்ளிபுரம் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து தருதல்.

*வினா எண் **22406**—திரு. ஏ. ரவிக்குமார் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி பள்ளிபுரம் கிராமத்திற்கு பேருந்து வசதி (P.T.C.) செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பொன்னேரி தொகுதி பள்ளிபுரம் கிராமத்தை நோக்கிச் செல்லும் பாதை குறுகலாகவும், பெரிய பேருந்து இயக்கத்திற்கு உகந்ததாக இல்லாததாலும் அப்பகுதியில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது எனத் தெரிவிக்கலாம்.

24—

திருப்பத்தூர் - இராமேஸ்வரம் திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***22422***—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருப்பத்தூரில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் பயணிகளின் எண்ணிக்கை விகிதம் மிகக் குறைவு என்பதாலும், இருமுனைகளிலும் பணிமனை வசதிகள் இல்லாததாலும், திருப்பத்தூர்–இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்குவது தற்போது இயலாது.

25—

சென்னை - போளூர் இடையே இயங்கும் பி.ஏ.டி.சி. தடம் எண் 102-பியை மாம்பட்டு வரை நீட்டித்தல்.

வினா எண் ***23933***—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து போளூருக்கு இயக்கப்படும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்து தடம் எண்.102பி-ஐ சென்னை போளூர் மாம்பட்டு கிராமம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தடம் எண் 102பி முதலில் போளூர் - சென்னை வரை இயக்கப்பட்டு வந்தது. தற்போது அத்தடம் திருவண்ணாமலை வரை நீட்டித்து திருவண்ணாமலை - சென்னை வரை இயக்கப்பட்டு வருகிறது. அதனை மாம்பட்டு கிராமத்திற்கு மாற்றி இயக்கினால் வருவாய் மிகவும் பாதிக்கப்படுவதோடு பயணிகளும் அவதிப்படுவார்கள். எனவே இது சாத்தியமில்லை.

26—

காட்பாடி - கம்மவான்பேட்டைக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் **23935—திரு. தா. வேடியப்பன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் வட்டம், கம்மவான்பேட்டை கிராமத்திற்கு காட்பாடியிலிருந்து பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ : பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் தடம் எண் 11பி வேலூர் - வரகூர் கிராஸ் சாலைக்கு கம்மவான்பேட்டை வழியாக 12 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. காட்பாடி–பாகாயம் தடத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் 2 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் காட்பாடி–கம்மவான் பேட்டை என தனிப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

1994 நவம்பர் 3]

27—

திருப்பத்தூர் - சென்னை இடையே இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

*வினா எண் **24232**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு இரவு நேரப் பேருந்துகளை அதிக அளவில் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை ஆய்வு செய்ததில் சராசரி ஐந்து பயணிகள் மட்டுமே நேரிடையாக திருப்பத்தூர் - சென்னைக்கு ஒவ்வொரு பேருந்திலும் தினசரி பயணம் செய்து வருகிறார்கள். இந்நிலையில் மேற்படி தடத்தில் இரவில் கூடுதலாக பேருந்துகள் இயக்க சாத்தியமில்லை.

28—

அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

*வினா எண் **35118**—திருமதி கே. மரியம் உல் ஆசியா :* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

அனைத்து போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் சுழல் நிதி திட்டத்தின் கீழ் (Revolving Fund Scheme) ரூ.1.5 கோடி செலவில் வீட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1994 நவம்பர் 3

29—

கன்னிவாடி நாய் ஓடையில் அணை கட்டும் திட்டம்.

வினா எண் 3502—திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் – அண்ணா மாவட்டம், ஆத்தூர் தொகுதி, கன்னிவாடி அருகில் 'நாய் ஓடையில்' ஒரு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 25 மீட்டர் தூரம் உட்பகுதியில் இரண்டு மலைப்பகுதிகளை இணைத்து அணை கட்டினால் 25 டி.சி.எம். தண்ணீர் தேக்கி வைக்க வாய்ப்புள்ளதாலும் சுமார் 500 ஏக்கர் பாசனவசதி பெறும் வாய்ப்புள்ளதாலும், அந்தப் பகுதியில் அணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) நாயோடை கண்மாய்த் திட்ட மதிப்பீடு திருச்சி கண்காணிப்புப் பொறியாளர் திட்டம் மற்றும் வடிவமைப்பு அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மேற்படி திட்ட தளத்தை உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து சுமார் 25 மீட்டர் தூரம் உட்பகுதிக்கு மாற்றினால் கண்மாயின் கொள்ளளவு குறைக்கப்பட்டு பாசனம் பெறும் நிலங்களும் குறைவடையும்.

30—

ஆலங்குடி– கறம்பக்குடி சாலையில் ஆக்கிரமிப்பு கடைகளை அகற்றுதல்.

வினா எண் 4706—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், ஆலங்குடி–கறம்பக்குடி சாலையில் வெட்டன் விடுதியில் சாலை இருமருங்கிலும்

1994 நவம்பர் 3]

தனியார்கள் இடங்களை ஆக்கிரமித்து கடைகள் வைத்தும் அதில் மின் இணைப்புகள் பெற்றும் தனது சொந்த கடைகள் போல் பயன்படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அவை அகற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் வெட்டன்விடுதி கறம்பக்குடி சாலையில் இரண்டு கடைகள் சாலையோரம் அமைக்கப்பட்டு மின் இணைப்பு பெற்றுள்ளது அரசுக்குத் தெரியவந்துள்ளது.

(ஆ) அவ்விரண்டு கடைகளையும் அகற்ற தக்க நடவடிக்கை எடுத்து வருவாய்த் துறைக்கும் ஊரக வளர்ச்சித் துறைக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

31—

அழகாபுரி அணை புதுவாய்க்கால் மூலம் பாசனவசதி பெறும் நிலங்களின் விவரம்.

வினா எண் *8373*—திருமதி பி. நிர்மலா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் வேடசந்தூர் அழகாபுரி அணையின் புதுவாய்க்கால் திட்டத்தின் மூலம் அண்ணா மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலம் பாசனவசதி பெறுகிறது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

அண்ணா மாவட்டம் வேடசந்தூர் அழகாபுரி அணையின் (எடைகலாறு மறுகட்டுமான அணை) புதுவாய்க்கால் திட்டத்தின் மூலமாக அண்ணா மாவட்டத்தின் பாசன வசதி பெறும் நிலங்களின் விவரம் பின்வருமாறு :-

1. இடது பிரதான வாய்க்கால் :

கன்வார்பட்டி கிராமம் : 432.78 ஏக்கர்.

2. வலது பிரதான வாய்க்கால் :

(1)	பானைப்பட்டி கிராமம் ..	844.00
(2)	கம்பூர் கிராமம் ..	986.00
(3)	திருக்குர்ணம் கிராமம் ..	1,400.00
		3,662.78 அல்லது 3,663 ஏக்கர்.

32—

குப்பைக்குறிச்சி குளத்தைத் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்.

வினா எண் **11529**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், குப்பைக்குறிச்சி குளத்தைத் தூர் எடுத்து ஆழப்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

குப்பைக்குறிச்சி குளமானது தாமிரபரணி பாசனத்தின் கீழ் உள்ள திருநெல்வேலி கால்வாய் பாசனத்திற்குட்பட்ட முறைப்படுத்தப்பட்ட குளமாகும். முறைப்படுத்தப்பட்டுள்ள குளங்களுக்கு தூர் வாரும் பணி அரசினரால் தடைப்படுத்தப்பட்டுள்ளது.

பாசனக்குளங்களை ஆழப்படுத்துவதைப் பொறுத்தமட்டில் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் சுற்றறிக்கை நாள் : 25-6-1970 கீழ்க்கண்ட விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன :-

1994 நவம்பர் 3]

1. குளத்தில் மண் படிந்து அதனால் கொள்ளளவு குறைந்திருக்க வேண்டும்.

2. தண்ணீர் பற்றாக்குறையினால் பயிர் விளைச்சல் குறைந்திருக்க வேண்டும்.

3. கடந்த ஆண்டுகளில் குளத்தில் மறுகால் பாய்ந்திருக்க வேண்டும்.

4. தூர் வாரும்போது அகற்றப்படும் மண் முழுவதையும் இடுவதற்கு இடவசதி வேண்டும். மேலும் தூர் வாருவதால் தண்ணீரில் மூழ்குவதிலிருந்து விடுபடும் முன் கரை நிலத்தை விவசாயத்திற்குப் பயன்படுத்த சம்பந்தப்பட்ட விவசாயிகள் சம்மதிக்க வேண்டும்.

மேற்படி விதிகளைக் கருத்தில் வைத்து பார்க்கும்போது குப்பைக்குறிச்சி குளமானது முறைப்படுத்தப்பட்ட குளமானதால் இதனைத் தூர் வார வழிவகை இல்லை. மேலும் இக்குளத்திற்கு தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உள்ள சுத்தமல்லி அணைக்கட்டில் இருந்து அணைக்கட்டின் நீர்த்தேக்க நிலத்திற்குட்பட்டு பயிரிடும் ஆயக்கட்டின் தண்ணீர் தேவையறிந்து பாசனத்திற்குப் போதுமான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

33—

கடைமடை பகுதிக்கு மின் இணைப்புக் கோரும் விவசாயிகளுக்கு உடன் வழங்குதல் விவரம்.

*வினா எண் **12194**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை கடைமடைப் பகுதிகளுக்கு மின் இணைப்பு கோரும் அனைத்து விவசாயிகளுக்கும் உடன் மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை கடைமடை பகுதிகளுக்கு மின் இணைப்பு கோரும் அனைத்து விவசாயிகளுக்கும் துரிதமாக மின்சாரம் வழங்கத் திட்டம் ஏதும் இல்லை. இவர்களின் விண்ணப்பம் பதிவு வரிசை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டு குறிப்பிட்ட பகுதிக்கான ஆண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் இணைப்பு வழங்கப்படும்.

[1994 நவம்பர் 3

34—

சேதுபாவாசத்திரம் ஜீவா நகரில் ஒற்றை விளக்கு போட நடவடிக்கை எடுத்தல்.

***வினா எண் 12198*—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம், ஜீவா நகரில் 1992-93-ல் ஒற்றை விளக்கு போட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஜீவா நகர் பகுதி பெருமகளூர் நகரப் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டதாகும். அரசு ஆணையின்படி ஒற்றை விளக்குத் திட்டம் கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கே பொருந்தும். எனவே, ஜீவா நகர் பகுதியில் ஒற்றை விளக்கு அமைக்க இயலாது.

35—

வழுதலை வட்டத்திற்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுத்தல்.

***வினா எண் 12201*—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த வழுதலை வட்டத்திற்கு 1992-93-ல் தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம் வாட்டாத்திக் கோட்டையைச் சேர்ந்த வழுதலை வட்டத்திற்கு தெரு விளக்கு அமைப்பதற்கு கம்பங்கள் நடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இந்தப் பணி 1993-94ல் முடிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

36—

பாலத்தளி வைரவன் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் *12204*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பாலத்தளியைச் சேர்ந்த வைரவன் காலனி மக்களின் குடிசைகளுக்கு 1992-93ல் ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், பாலத்தளியைச் சேர்ந்த வைரவன் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் ஏதும் மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

37—

சேதுபாவாசத்திரம் பெரிய கத்திக் கோட்டைக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் *12222*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரிய கத்திக் கோட்டையிலுள்ள குடிசைகளுக்கு 1991-92ல் ஒற்றை விளக்கு போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெரிய கத்திக் கோட்டையிலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைக்க கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

[1994 நவம்பர் 3

38—

சேதுபாவாசத்திரம், பிள்ளையார் திடல் மீனவர் காலனிக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

*வினா எண் **12228**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி, பிள்ளையார் திடல் மீனவர் குடிசைகளுக்கு *1992-93-ல்* ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி, பிள்ளையார் திடல் மீனவர் குடிசைகளுக்கு மின் வசதி அளிக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்திடம் நிலுவையில் இல்லை.

39—

சேதுபாவாசத்திரம், பளுக்காடு காலனிக்கு மின் இணைப்பு வழங்குதல்.

*வினா எண் **12239**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பளுக்காடு ஆதிதிராவிடர் காலனிக்கு *1992-93-ல்* மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பளுக்காடு ஆதிதிராவிடர் காலனியில் *21* ஒற்றை விளக்கு அமைக்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. *1993-94-ல்* இப்பகுதிக்கு உரிய இலக்கீட்டிற்கேற்ப இவ்விண்ணப்பங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

1994 நவம்பர் 3]

40—

சேதுபாவாசத்திரம் கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தெரு விளக்கு இணைப்புக் கொடுத்தல்.

வினா எண் ***12242***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு 1992-93ல் தெரு விளக்கு இணைப்புக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ***எஸ். கண்ணப்பன்,*** *பொதுப்பணித்துறை அமைச்சர் :*

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தெரு விளக்கு அமைத்துத்தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிலுவையில் இல்லை.

41—

சேதுபாவாசத்திரம், பூவானம் ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் ***13243***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவானம் ஆதி திராவிடர் தெருவிலுள்ள காலனிகளுக்கு 1992-93-ல் ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. ***எஸ். கண்ணப்பன்,*** *பொதுப்பணித்துறை அமைச்சர் :*

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவானம் ஆதி திராவிடர் தெருவிலுள்ள காலனியில் ஒற்றை விளக்கு அமைத்துத் தர 30 விண்ணப்பங்கள்

பெறப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பங்கள் 1993-94 ஆம் ஆண்டின் இலக்கீட்டிற்கேற்ப மின் வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

42—

பேராவூரணி தெற்குக்காடு பகுதியில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

*வினா எ்ண் **13323**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி, சிறிய தெற்குக்காடு மேற்கு பகுதியில் 1992-93ல் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி, ஒட்டங்காடு ஊராட்சி ஒன்றியம், தெற்குக்காடு மேற்குப் பகுதியில் 121 தெரு விளக்குகள் அமைத்துத் தர மின்வாரியத்தில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவை 1993-94ம் ஆண்டில் இப்பகுதிக்கு உரிய இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக்கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

43—

பேராவூரணி, களத்தூர் ஆதிதிராவிடர் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டு தருதல்.

*வினா எண் **13325**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர்களின் வீடுகளுக்கு 1992-93-ல் ஒற்றை விளக்கு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஆதிதிராவிடர் வீடுகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுக் கொடுக்க கோரி 20 விண்ணப்பங்கள் மின்வாரியத்தில் பெறப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்கள் 1993-94ம் ஆண்டில் இப்பகுதிக்கான இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

44—

பேராவூரணி நகரில் உள்ள நரிக்குறவர் காலனிக்கு மின்சார வசதி செய்து கொடுத்தல்.

*வினா எண் **13341**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி நகரத்தில் உள்ள நரிக்குறவர் காலனிக்கு 1992-93-ல் மின்சார வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி நகரத்திலுள்ள நரிக்குறவர் காலனிக்கு 4 தெரு விளக்குகள் அமைத்துத்தர விண்ணப்பம் மின்வாரியத்தில் பெறப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பம் 1993-94-ம் ஆண்டில் இப்பகுதிக்கான இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக்கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

45—

ராஜாமடம் ஊராட்சி, கீழத்தோட்டம் மீனவர் காலனிக்கு மின்சார வசதி செய்து கொடுத்தல்.

*வினா எண் **13344**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடம் ஊராட்சி, கீழத்தோட்டம் மீனவர் காலனிக்கு 1992-93ல் மின்சார வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ராஜாமடம் ஊராட்சி, கீழத்தோட்டம் மீனவர் காலனிக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பம் ஏதும் மின்சார வாரியத்தில் நிலுவையில் இல்லை.

46—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை மீனவர்கள் வீட்டிற்கு மின்வசதி அளித்தல்.

*வினா எண் **13383**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை மீனவர்கள் வீட்டிற்கு ஒரு விளக்கு போட்டுக் கொடுக்க 1992-93ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை மீனவர்கள் வீட்டிற்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

47—

சேதுபாவாசத்திரம் பெத்தக்காச்சிவயல் கிராமத்திற்கு மின் வசதி அமைத்தல்.

*வினா எண் **13599**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சி, பெத்தகாச்சிவயல் கிராமத்திற்கு 1992-93ல் மின்வசதி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஊமத்தநாடு ஊராட்சி, பெத்தகாச்சி வயல் கிராமத்திற்கு 10 தெரு விளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் மின் வாரியத்தால் பெறப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பம் 1993-94 ஆண்டில் அப்பகுதி இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

48—

புதுக்கோட்டை உளூர் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் 13777—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்பு செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் சமுதாயக் கூடத்திற்கு மின் இணைப்புக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

49—

பேராவூரணி, இடையாத்தியில் ஒரு மின்மாற்றி அமைத்துக் கொடுத்தல்.

வினா எண் 13779—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, இடையாத்தியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் ஒரு மின்மாற்றி (Transformer) அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, இடையாத்தியில் ஏற்கனவே மூன்று மின்மாற்றிகள் உள்ளன. இவற்றுடன் மேலும் ஒரு மின் மாற்றி அமைக்கப்பட்டு மின் தடை ஏற்படுவது தவிர்க்கப்பட்டு உள்ளது.

50—

புதுக்கோட்டை உளூர் ஆதிதிராவிடர் காலனிக்கு மின்வசதி அளித்தல்.

வினா எண் 14767—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், புதுக்கோட்டை உளூர் ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு 1992-93ல் மின் வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூர் ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கக் கோரி விண்ணப்பம் எதுவும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

51—

ராசாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு மின்சார இணைப்பு கொடுத்தல்.

வினா எண் 14769—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ராசாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு 1992-93ல் மின்சார இணைப்புக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ராசாமடம் ஆதிதிராவிடர் தெருவிற்கு மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிலுவையில் இல்லை.

52—

புதுக்கோட்டை உளூரில் குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தருதல்.

வினா எண் *14771*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூரில் காலனி அல்லாத குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூரில் காலனி அல்லாத குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர கோரி விண்ணப்பம் எதுவும் மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

53—

கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர்களுக்கு தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் *14772*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை, கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு தெரு விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை *அமைச்சர் :*

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை, கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து தெரு விளக்கு அமைத்துக் கொடுக்கக் கோரி மின் வாரியத்திடம் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

54—

ஏனாதி கிராம குடிசை வாழ் மக்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தருதல்.

வினா எண் *14775*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏனாதி கிராம குடிசை வாழ் மக்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை *அமைச்சர் :*

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏனாதி கிராம குடிசை வாழ் மக்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர கோரி விண்ணப்பம் எதுவும் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிலுவையில் இல்லை.

55—

ஏனாதி கிராம ஆதிதிராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தருதல்.

வினா எண் *14776*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏனாதி ஆதி திராவிடர் மக்களின் குடியிருப்பிற்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏனாதி ஆதி திராவிடர் மக்களின் குடியிருப்பிற்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர விண்ணப்பம் பெறப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற் குறிப்பிட்ட மனுக்களுக்கு மின் ஒயரிங் கட்டணம் செலுத்தக் கோரி அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அக்கட்டணம் செலுத்திய உடன் மின் இணைப்பு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

பழஞ்சூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெரு விளக்கு அமைத்துத் தருதல்.

வினா எண் *14779*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழஞ்சூர் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெரு விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பழஞ்சூர் ஆதி திராவிடர் தெருவிற்கு தெரு விளக்கு அமைத்துத் தரக் கோரி விண்ணப்பங்கள் எதுவும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

57—

செங்கம் நகருக்கு சோடியம் விளக்கு பொருத்தும் திட்டம்.

வினா எண் *15148*—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) செங்கம் நகருக்கு பேரூராட்சி மூலமாக சோடியம் விளக்கு பொருத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை விளக்குகள் பொருத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : செங்கம் தேர்வு நிலை பேரூராட்சியில் ஐந்து சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு 10-11-1992 அன்று எரிய வைக்கப்பட்டது. இது தவிர, சோடியம் ஆவி விளக்கு பொருத்துவதற்கு வேறு விண்ணப்பம் செங்கம் தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து மின் வாரியத்தால் பெறப்படவில்லை.

58—

குண்டாங்கல்காடு பகுதியில் தெரு விளக்குகள் அமைத்தல்.

வினா எண் **15360**—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, குண்டாங்கல்காடு 29 தெரு விளக்குகள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டும், இன்னும் அமைக்கப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சங்ககிரி தொகுதி, குண்டாங்கல்காடு பகுதியில் 13 தெரு விளக்குகள் மட்டும் அமைக்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு தமிழ்நாடு மின் வாரியத்தால் மதிப்பீடும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மின் பாதை விஸ்தரிப்பு பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை முடிவுற்றதும் இவ் விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

1994 நவம்பர் 3]

59—

பரமக்குடி தாலுக்காவில் மின் இணைப்புக்கு காத்திருப்போர் விவரம்.

வினா எண் ***15401*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா––

பரமக்குடி தாலுக்காவில் மின் இணைப்பு வேண்டி உள்ள விவசாயிகள் எத்தனை பேர் உள்ளனர் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பரமக்குடி தாலுக்காவில் 352 விவசாயிகள் மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளனர்.

60—

பரமக்குடி பகுதியில் 1992-93-ல் அமைக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்களின் எண்ணிக்கை.

வினா எண் ***15402*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் 1991-92ல் ஏற்படுத்தப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள் எத்தனை ?

(ஆ) இதனால் மின் அழுத்தம் சரி செய்யப்பட்டு இரவு நேரங்களில் மின் தடை நீக்கப்பட்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) பரமக்குடி தொகுதியில் 1991-92 ஆம் ஆண்டில் மொத்தம் ஏழு (7) டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டன.

(ஆ) ஆம். மேற்கண்ட நடவடிக்கையினால் இப் பகுதியில் மின் அழுத்தம் சீர் செய்யப்பட்டு இரவு நேரங்களில் மின் தடை நீக்கப்பட்டுள்ளது.

61—

அந்தியூர் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்குகளின் விவரம்.

வினா எண் 15863—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் எத்தனை கிராமங்களுக்கு தெரு விளக்கு அமைக்கப்படாமல் உள்ளது ?

(ஆ) அப் பகுதிகளுக்கு தெரு விளக்கு அமைக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும், தெரு விளக்குகள் ஏற்கெனவே பொருத்தப்பட்டுவிட்டது. ஆயினும், மேலும் 691 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக்கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

(ஆ) மேற்குறிப்பிட்ட 691 கூடுதல் தெரு விளக்கு பொருத்துவதில் 143 தெரு விளக்குகளுக்கு ஏற்கனவே மின் வசதியளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 548 தெரு விளக்குகளுக்கு இவ்வாண்டு 1993-94ல் அப் பகுதி இலக்கீட்டிற்கேற்ப படிப்படியாக மின் வசதியளிக்க ஆவன செய்யப்படும்.

62—

அந்தியூர் தொகுதியில் தொகுப்பு வீடுகளுக்கு தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் 15864—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் 1991-92-ல் கட்டியுள்ள தொகுப்பு வீடுகள் அனைத்திற்கும் தெரு விளக்கு மற்றும் ஒரு விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் மொத்தம் 577 தொகுப்பு வீடுகளுக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் கோரி விண்ணப்பம் வரப்பெற்றது. அவற்றுள் 1992-93 இலக்கீட்டிற்கேற்ப 405 தொகுப்பு வீடுகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

மீதமுள்ள 172 தொகுப்பு வீடுகளுக்கு இதற்கு முன்னர் 340 குடிசை விண்ணப்பங்கள் (தொகுப்பு வீடுகள் அல்லாது) நிலுவையில் உள்ளதால் 1993-94 ஆம் ஆண்டுக்கான அப்பகுதி இலக்கீட்டிற்கேற்ப மின் வசதி அளிக்க ஆவன செய்யப்படும். மேற்கூறிய தொகுப்பு வீடுகள் உள்ள கிராமங்கள் அனைத்திற்கும் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுவிட்டன. மேலும் 8 கூடுதல் தெரு விளக்குகள் பொருத்தக் கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றிற்கும் இவ்வாண்டு இலக்கீட்டிற்கேற்ப மின் வசதியளிக்கப்படும்.

63—

பரமக்குடி ஒன்றியத்தில் குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் விவரம்

வினா எண் 15912—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் பரமக்குடி ஒன்றியத்தில் எத்தனை விளக்குகள் வழங்கப்பட்டு உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் பரமக்குடி ஒன்றியத்தில் 953 விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

[1994 நவம்பர் 3

64—

வெட்டன்விடுதி மின் வாரியத்தில் கூடுதல் மின் இணைப்புப் பெற விண்ணப்பித்தவர்கள் விவரம்.

***வினா எண் 16616*—திரு. சி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி மின்வாரிய அலுவலகத்தில் இதுவரையில் கூடுதல் மின் இணைப்பு பெற விண்ணப்பித்த நபர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி மின் வாரிய அலுவலகத்தில் *31-3-1993* முடிய *150* நபர்கள் கூடுதல் மின் இணைப்பு பெற விண்ணப்பித்துள்ளார்.

(ஆ) பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதிநிலைக்கு ஏற்ப கூடுதல் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யப்படும்.

65—

அறந்தாங்கி மின்வாரியத்தில் கூடுதல் மின்சாரம் பெறுபவர்கள் பற்றிய விவரம்.

***வினா எண் 16618*—திரு. சி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மின்வாரிய கோட்டத்தில் மின் மோட்டாருக்கு கூடுதல் மின்சாரம் (Additional Load) பெறுவதற்கு விண்ணப்பம் செய்த நபர்கள் எத்தனை பேர் ?

1994 நவம்பர் 3]

(ஆ) அவர்களுக்கு உடனடியாக கூடுதல் மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மின்வாரிய கோட்டத்தில் விவசாய மின் இணைப்பில் கூடுதல் பளு பெறுவதற்கு 1,220 பேர் விண்ணப்பம் கொடுத்து உள்ளனர்.

(ஆ) வாரியத்தின் நிதிநிலைக்கு ஏற்ப பதிவுவரிசை முன்னுரிமை அடிப்படையில் கூடுதல் மின்சாரம் வரிசைக் கிரமமாக அளிக்கப்படும்.

66—

பொன்னேரி தொகுதியில் மின்சார கம்பிகளைப் புதுப்பித்தல்.

வினா எண் 16570—திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதியில் மின்சார கம்பிகள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியுள்ளதால் அவைகளை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

பொன்னேரி தொகுதியில் மிகப் பழைய மின் கம்பிகளை மாற்ற ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு சின்னம்பேடு, வடக்கு நல்லூர், குமங்கலம், திருவாயற்பாடி, சின்னக் காவனம், புலிகட், அத்திப்பட்டு, மேட்டுரெட்டிபாளையம் மற்றும் நாலூர் கம்மாபாளையம் ஆகிய இடங்களில் 44.2 கி.மீ. நீளத்திற்கு மின் கம்பிகள் மாற்றப்பட்டுள்ளன. மேலும் 20.2 கி.மீ. நீளத்திற்கு மின் கம்பிகளை மாற்ற மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்க ஆவன செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

67—

நன்னிலம் - விசலூர் சாலையில் மின்கம்பங்கள் அமைத்து மின் வசதி செய்தல்.

வினா எண் **17065**—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, விசலூர் கிராமத்திற்குச் செல்லும் சாலையில் மின் கம்பங்கள் அமைத்து மின் வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) நன்னிலம் தொகுதி, விசலூர் கிராமத்திற்குச் செல்லும் சாலையில் மின்கம்பங்கள் அமைத்து மின் வசதி செய்து கொடுக்க கோரி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

68—

போகலூர் கண்மாயை மராமத்து செய்தல்.

வினா எண் **19388**—டாக்டர் எஸ். சுந்தர்ராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போகலூர் ஒன்றியம், போகலூர் கண்மாய்க்கு வரத்துக் காலில் இருந்து தண்ணீர் எந்த ஆண்டு விடப்பட்டது?

(ஆ) அக்கால்வாயை மராமத்து செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) களரிக்கால்வாயிலிருந்து பிரியும் போகலூர் கண்மாய் வரத்துக் கால்வாய் வாயிலாக போகலூர் கண்மாய்க்கு கடந்த நவம்பர் 1992 மற்றும் நவம்பர் 1993 வெள்ளத்தின் போது தண்ணீர் கொடுக்கப்பட்டு போகலூர் கண்மாய் நிரப்பப்பட்டது.

(ஆ) போகலூர் தற்சமயம் கண்மாய் வரத்துக்கால்வாய் நல்ல முறையில் இருப்பதால் தற்சமயம் மராமத்து பணி எதுவும் தேவையில்லை.

69—

துலுக்கன்குறிச்சி—குகன்பாறை சாலையை சீர் செய்தல்.

வினா எண் 22009—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், துலுக்கன்குறிச்சியிலிருந்து குகன்பாறை செல்லும் சாலை சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 21 கி.மீ. நீளமுள்ள சாலை. இச்சாலையில் வெள்ள நிவாரணப்பணியின் கீழ் ரூ. 13,800 மதிப்பில் கி.மீ. 15-0 முதல் 21-0 வரை சாலையிலுள்ள பள்ளங்கள் நொடிகள் சரிசெய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் குறிப்பாக அடிமண் சரியில்லாததால் கி.மீ. 17-0 முதல் கி.மீ. 18-0 வரை பழுதடைந்துள்ள சாலைப் பகுதி நிதி நிலைமைக்கு ஏற்ப எடுத்துச் செய்யப்படும்.

[1994 நவம்பர் 3

70—

துலுக்கன்குறிச்சி—செவல்பட்டி சாலையைச் சீர்செய்தல்.

வினா எண் **22010**—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், துலுக்கன்குறிச்சியிலிருந்து செவல்பட்டி வழியாக மாவட்ட எல்லைவரை செல்லும் சாலை சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஆம், மேற்படி சாலையில் சேதமடைந்த நொடிகள் மற்றும் குண்டுகுழிகள் வெள்ள நிவாரண நிதி மூலம் சீர் செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

71—

கோவை நகரில் தடாகம் சாலை மற்றும் பல சாலைகளைச் சீர் செய்தல்.

வினா எண் **22186**—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் தடாகம் சாலை, சலிவன் வீதி, பேரூர் சாலை ஆகியவை பழுதடைந்துள்ளதால் மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் அவற்றை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): மேற்கண்ட சாலைகள் அனைத்தும் பராமரிக்கப்பட்டு தற்சமயம் நல்ல நிலையில் உள்ளன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1994 நவம்பர் 3]

72—

தோலாம்பாளையம்—கண்டக்கரை சாலையைச் செப்பனிடுதல்.

வினா எண் **22525**—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோலாம்பாளையத்திலிருந்து கண்டக்கரை பிரிவு வரையுள்ள பழுதடைந்த சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், சாலை எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

73—

சிக்கத்தம்பூரில் ஆதி திராவிடர்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தரும் திட்டம்.

வினா எண் **22947**—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிக்கத்தம்பூரில் ஆதிதிராவிடர்களுக்கு குடிசை ஒற்றை விளக்கு அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 நவம்பர் 3

74—

கொப்பமாபுரியிலுள்ள ஆதி திராவிடர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத் தரும் திட்டம்.

வினா எண் **22949**—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, கொப்பமாபுரியிலுள்ள ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட்டுத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

காட்டுமன்னார்கோயில் தொகுதி ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரும் திட்டம்.

வினா எண் **23397**—திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி குமராட்சி ஒன்றியம், கூத்தங்கோயில், கடவாச்சேரி, சாலியந்தோப்பு, அகரநல்லூர், பழையநல்லூர் வேலக்குடி, அக்கரம் பெறும்பட்டு, வல்லம்படுகை ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் குடிசை வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : காட்டுமன்னார்கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்தில் கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்களிலுள்ள ஆதிதிராவிடர்

1994 நவம்பர் **3]**

குடிசைகளுக்கு ஏற்கனவே " ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு " என்ற திட்டத்தின் கீழ் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் விவரம் வருமாறு—

1.	கூத்தங்கோயில்	..	58
2.	கட.வாச்சேரி	..	25
3.	அகரநல்லூர்	..	32
4.	வேலக்குடி	..	10
5.	அக்கரம்பெறும்பட்டு	..	38
6.	வல்லம்படுகை	..	20
	மொத்தம்	..	183

பழையநல்லூர் மற்றும் சாலியந்தோப்பு ஆதிதிராவிடர் காலனியில் இருந்து இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படவில்லை. கடவாச்சேரி கிராமத்திலிருந்து தற்பொழுது 45 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு 1993-94 ஆம் ஆண்டிற்கு குடிசைகளுக்கு மின் இணைப்பிற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு ஏற்கனவே எய்தப்பெற்றுவிட்டமையால் மேற்படி விண்ணப்பங்கள் 1994-95-ஆம் ஆண்டில் பதிவு வரிசை முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும்.

76—

பரமக்குடி வெண்ணீர் வாய்க்கால் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்

வினா எண் **23867**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுக்கா, வெண்ணீர் வாய்க்கால்-பாண்டி கண்மாய் சாலை-வத்தியானந்தல் வழி ஜீவா நகர் தார்ச்சாலையாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : குறைந்த நிதி ஒதுக்கீடு காரணமாக வினாவில் குறிப்பிடப்படும் சாலை மேம்பாட்டு பணியினை எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

77—

ஜமீன் காளியாபுரம் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் **24294**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் ஜமீன் காளியாபுரத்திலிருந்து கேரள எல்லை வரை செல்லும் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

78—

உச்சிநத்தம்—சூரன்குடி இடையே இரண்டு சிறிய பாலம் அமைத்தல்.

வினா எண் **24275**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் உச்சிநத்தம் கிராமத்திற்கும், சிதம்பரனார் மாவட்டம் சூரன்குடி கிராமத்திற்கும் இடையில் இரண்டு சிறிய பாலங்கள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு காரணமாக, தற்போது அத்தகையத் திட்டங்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

79—

தென்காசி மின்வாரிய ஊழியர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

வினா எண் **27411**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி நகரில் மின்வாரிய ஊழியர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி நகரில் மின்வாரிய ஊழியர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

80—

சிவகிரி வழி வள்ளிக்குளத்தை செப்பனிடுதல்.

வினா எண் **27526**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம் சிவகிரி வழி வள்ளிக் குளத்தை செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஆம். சிவகிரி வழி வள்ளி குளத்தின் ஆயக்கட்டு 458.92 ஏக்கர். இக்குளத்தின் தற்போது ஐரோப்பியர் பொருளாதாரக்குழு நிதியுதவியுடன்

மேம்பாட்டு வேலைகளுக்கு ரூ. 26.72 லட்சத்திற்கு மதிப்பீடு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கண்ட கண்மாயின் மராமத்துப் பணிகள் 75 சதவீதம் செய்து முடிக்கப்பட்டு விட்டது. மேற்கொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

81—

தென்னைத் தொழில் அபிவிருத்திக்காக புது வாரியம் அமைத்தல்.

வினா எண் **26492**—திரு. ஆர். சுப்புரத்தினம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை தொழில்கள் அபிவிருத்திக்கு தனி வாரியம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

82—

பட்டுக்கோட்டையில் புதிய விவசாயக் கல்லூரி துவங்குதல்.

வினா எண் **35531**—திரு. எம். எம். எஸ். அபுல்ஹாசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் புதியதாக ஒரு விவசாயக் கல்லூரி துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: ஓர் விவசாயக் கல்லூரி அமைக்க 1,000 ஏக்கர் நிலமும் சுமார் 6.00 கோடி ரூபாய் மூலதனமும், கட்டிடங்களும், ஆராய்ச்சிக் கூடங்களும் மற்றும் நீர்ப்பாசன வசதிகளும் தேவைப்படும். மேலும், தற்போது சுமார் 2,000 வேளாண்மைப் பட்டதாரிகள் வேலை வாய்ப்புகள் இன்றி வேலை தேடிக் கொண்டிருக்கிறார்கள். மேலும், தற்போது, கோவை, மதுரை, கிள்ளிகுளம்,

1994 நவம்பர் 3]

மற்றும் நாவலூர், குட்டப்பட்டு ஆகிய நான்கு இடங்களில் நான்கு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இப்பல்கலைக் கழகத்திலிருந்து வருடத்திற்கு சுமார் 375 மாணவர்களும், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து சுமார் 131 மாணவர்களும், தேர்ச்சி பெற்று வெளி வருகிறார்கள். இது தவிர திருச்சி மாவட்டம் குமலூரில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரியும், மதுரை மாவட்டம் பெரிய குளத்தில் தோட்டக்கலை கல்லூரி ஒன்றும் இயங்கி வருகின்றன. ஆகவே தற்சமயம் பட்டுக்கோட்டையில் புதியதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

83—

தமிழ்நாடு தாய் நிறுவனம் பற்றிய விவரம்.

வினா எண் **36332**—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு 'தாய்' (TAI) நிறுவனம் இலாபத்தில் இயங்குகின்றதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டு இலாபம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாடு 'தாய்' நிறுவனம் இலாபத்தில் இயங்கவில்லை.

(ஆ) 1993-94 ஆம் ஆண்டில் ரூ. 61.20 இலட்சங்கள் உத்தேச நட்டமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன் சேர்ந்து 31-3-1994 ஆம் நாள் வரையிலான திரண்ட நட்டம் ரூ. 1084.86 இலட்சங்கள் ஆகும்.

84—

வெளிவயலுக்கு கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

வினா எண் **13570**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியை சேர்ந்த வெளிவயலுக்கு 1992-93-ல் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

இல்லை.

85—

உடல் ஊனமுற்றோரைப் பணியமர்த்துதல்.

வினா எண் **4386**—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோருக்கான இளநிலை வேலை வாய்ப்பு அதிகாரிகள் காலியிடங்களை உடல் ஊனமுற்ற நபர்களை கொண்டுதான் நிரப்பவேண்டும் என்ற விதிமுறையின் கீழ் தற்போது அதிகமாக தோற்றுவிக்கப்பட்ட நான்கு சிறப்புப் பிரிவுகளில் உடல் ஊனமுற்றோரை பணியமர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம், பரிசிலனையில் உள்ளது.

(ஆ) அரசாணை எண் 228, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-8-1991-ல் தூத்துக்குடி, வேலூர், ஈரோடு மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தோற்றுவிக்கப்பட்ட உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு பிரிவுகளில் உடல் ஊனமுற்றோரை இளநிலை வேலை வாய்ப்பு அலுவலராக நியமனம் செய்ய, தகுதி வாய்ந்த நபர்களை ஒதுக்கீடு செய்யுமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் கோரப்பட்டுள்ளது. ஒதுக்கீடு பெறப்பட்டதும், உடல் ஊனமுற்றோரை அந்த நான்கு சிறப்புப் பிரிவுகளிலும் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலராக நியமனம் செய்யப்படுவர்.

86—

Employment Schemes for Urban Middle class Women.

Question No.22807— Dr. BEATRIX D'SOUZA : Will the Hon'ble Minister for Labour be pleased to state—

1994 நவம்பர் 3]

Whether there are any employment Schemes for urban middle class women ?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

87—

ஆலங்குடி தொகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பட்ட ஐ.ஆர்.டி. பி. கடன் பற்றிய விவரம்.

வினா எண் **25255**—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி சூரக்காடு, காட்டாத்தி, பொன்னன் விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 1993-ல் எத்தனை நபர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதில் ஆதிதிராவிடர் எத்தனை பேர் ? பிற்படுத்தப்பட்டவர் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) ஆலங்குடி தொகுதி சூரக்காடு, காட்டாத்தி, பொன்னன் விடுதி ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் முறையே நபர்கள் 4,2 மற்றும் 15 என மொத்தம் 21 நபர்களுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆதிதிராவிடர் 9, பிற்படுத்தப்பட்டோர் நபர்கள் 12.

88—

வீரோஜீப்பள்ளி கிராம கூட்டுறவுச் சங்கத்திற்கு புது கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **27465**—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பணப்பள்ளி ஒன்றியம், வீரோஜீப்பள்ளி கிராம கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் :

கிருஷ்ணகிரி தொகுதி வேப்பணப்பள்ளி ஒன்றியத்தில் உள்ள வீரோஜீப்பள்ளியில் இயங்கும் நெடுமருதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு அலுவலகத்துடன் கூடிய கிடங்கு கட்ட ரூ. 3.30 இலட்சம், தர்மபுரி மாவட்ட ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு திட்ட அறிக்கை தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி திட்ட அறிக்கை குறித்து தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெறப்பட்டதும், வங்கிக்குக் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

பேரணாம்பட்டு வி.சி.சி. வங்கிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **35713**—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் பேரணாம்பட்டில் இயங்கி வரும் வி.சி.சி. வங்கிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

1994 நவம்பர் 3]

90—

நாகப்பட்டினம் நெடுங்குளம் அரசினர் ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்தல்.

வினா எண் **21841**—*டாக்டர் கு. கோபால் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள நன்னிலம், நெடுங்குளம் அரசினர் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயக்கப்படும் மேநிலைப் பள்ளியில் அடிப்படை வசதிகள் ஏதும் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 1. நெடுங்குளம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆணை எண் 85, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 31-3-1994-ல் ரூபாய் 27.00 லட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடம் கட்ட தாட்கோவுக்கு நிதி வழங்கப்பட்டு கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. 1993-94-ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் இப்பள்ளிக்கு கழிப்பறை வசதி செய்ய ரூபாய் 30,000 வழங்கப்பபட்டுள்ளது.

3. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஊராட்சி ஒன்றியம் மூலம் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. இப்பள்ளி கட்டிடத்தின் மீதுள்ள கூரைக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

5. இரண்டு ஓடுவேய்ந்த கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளது.

[1994 நவம்பர் 3

91—

தஞ்சாவூர் மாவட்டம் பழனியாண்டவர் மற்றும் பிறகோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் **18729, 18930, 18957, 18960, 18963, 18964, 18965, 18966, 18967, 18968**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. லட்சத்தோப்பு, அருள்மிகு பழனியாண்டவர் ஆலயம்.
2. செட்டிப்பாளையம், அருள்மிகு ராமலிங்கசாமி ஆலயம்.
3. திருவையாறு, அருள்மிகு அக்கசாலை பிள்ளையார் ஆலயம்.
4. திருவையாறு, அருள்மிகு பத்ரகாளியம்மன் ஆலயம்.
5. புளியங்குடி, கைலாசநாதர் ஆலயம்.
6. களஞ்சேரி, அருள்மிகு விசாலாட்சி சமேதவிஸ்வநாதர் ஆலயம்.
7. கோனூர், அருள்மிகு ஹரிஹரபுத்திரசாமி ஆலயம்.
8. நல்ல வன்னியக்குடிகாடு அருள்மிகு கருமைத்துரை அய்யனார் ஆலயம்.
9. சாலியமங்கலம், அருள்மிகு அருள்மொழி விநாயகர் ஆலயம்.
10. சாலியங்கலம், அருள்மிகு அங்காளம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

இல்லை.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

92—

பாபநாசம், வலங்கைமான், நீடாமங்கலம் மற்றும் மன்னார்குடி வட்டங்களில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் **18759, 18761, 18762, 18765, 18766, 18767, 18770, 18771, 18774,**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வலங்கைமான் வட்டம் நீடாமங்கலம் வட்டம் மற்றும் மன்னார்குடி வட்டம்—

1. தியாகசமுத்திரம், அருள்மிகு பூலோகநாதர் லெட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம்.
2. திருக்கருகாவூர், அருள்மிகு பிள்ளையார் ஆலயம்.
3. திருப்பாலைத்துறை, அருள்மிகு வீரப்பெருமாள் ஆலயம்.
4. கும்பளப்பாடி, அருள்மிகு வெள்ளைவிநாயகர் ஆலயம்.
5. உம்பளம்பாடி, அருள்மிகு நடராஜர் மடம் மற்றும் வீரனார் ஆலயம்.
6. அரித்துவாரமங்கலம், அருள்மிகு பாதாலேஸ்வரர் ஆலயம்.
7. இராயபுரம், அருள்மிகு பதிவேணுகோபாலசுவாமி ஆலயம்.
8. மன்னார்குடி, அருள்மிகு காமாட்சியம்மன் சமேத ஏகாம்பரேஸ்வரர் ஆலயம்.
9. மன்னார்குடி, அருள்மிகு ஜெயங்கொண்டநாதர் ஆலயம் .
10. ஆலங்குடி, அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

93—

பட்டுக்கோட்டை சுப்பிரமணியசுவாமி மற்றும் திருவையாறு வட்டங்களில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் **18918, 18929, 18930, 19058, 19059, 19060, 19061, 19062, 19065,**— *திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. பட்டுக்கோட்டை வட்டம், செருவாவிடுதி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம்.
2. திருவையாறு வட்டம், ஆவிக்கரை, அருள்மிகு கரைமேல் அழகியம்மன் ஆலயம்.
3. திருவையாறு வட்டம், அம்மன்பேட்டை அருள்மிகு பட்டத்தரசியம்மன் ஆலயம்.
4. திருவையாறு வட்டம், கருப்பூர், அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம்.
5. திருவையாறு வட்டம், கருப்பூர், அருள்மிகு பிடாரியம்மன் ஆலயம்.
6. திருவையாறு வட்டம், கோனேரிராஜபுரம், அருள்மிகு லெட்சுமி நாராயணப்பெருமாள் ஆலயம்.
7. திருவையாறு வட்டம், நடுக்காவேரி, அருள்மிகு செல்லியம்மன் ஆலயம்.
8. திருவையாறு வட்டம், மாரனேரி அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலயம்.
9. திருவையாறு வட்டம், வானரக்குடி, அருள்மிகு நாகநாதசாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

இல்லை.

94—

திருவையாறு பச்சையப்ப முதலியார் கட்டளை மற்றும் பாபநாசம் வட்டங்களிலுள்ள கட்டளைகளைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் **18956, 18971, 18972, 18974, 19006, 19007, 19010, 19016, 19031, 19040,—** திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. திருவையாறு பச்சையப்ப முதலியார் கட்டளை.
2. வலங்கைமான் வட்டம், ஆத்தூர் அன்னதான சத்திரம்.
3. வலங்கைமான் வட்டம், புலவர் நத்தம் சிவகாமி மடம்.
4. வலங்கைமான் வட்டம், சிக்கப்பட்டு மாணிக்கதேவர் கட்டளை (இ) சீனிவாசப்பெருமாள் ஆலயம்.
5. பாபநாசம் வட்டம், தாவரங்குடி அருள்மிகு வனபூஜை கட்டளை (இ) கரும்பாயிரம் கொண்ட அய்யனார் ஆலயம்.
6. பாபநாசம் வட்டம், நெடுந்தெரு, வெங்கடாஜலபதி அன்னசத்திரம்.
7. வலங்கைமான் வட்டம், மேலட்டூர் ஆடிப்பூரக் கட்டளை.
8. வலங்கைமான் வட்டம், தெற்குப்பட்டம், கோதண்டராமசாமி பஜனைமடம் பட்டாபிஷேக இராமசாமி மடம்.
9. வலங்கைமான் வட்டம், காஞ்சி குடிபாடு, அன்னதான சத்திரம்.
10. வலங்கைமான் வட்டம், மேலகபிஸ்தலம் சுந்தரவினாயகர் ஆலயம், ஆகிய கட்டளைகளைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

95—

திருவையாறு வட்டம், திரௌபதியம்மன் ஆலயம் மற்றும் பிற ஆலயங்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள். **18958, 18959, 18962, 18978, 18980, 19008, 19027, 19029, 19032, 19034—** திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. திருவையாறு வட்டம், அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம்.
2. திருவையாறு வட்டம், அருள்மிகு அபிஷ்டவரதமாகா கணபதி ஆலயம்.
3. வலங்கைமான் வட்டம், உடையார் கோயில் அருள்மிகு ஆலடி விநாயகர் ஆலயம்.
4. வலங்கைமான் வட்டம், காலியமங்கலம் அருள்மிகு சிதம்பரேஸ்வரர் ஆலயம்.
5. வலங்கைமான் வட்டம், ஆலங்கோட்டை அருள்மிகு கணபதிகூத்த அய்யனார் வகையறா ஆலயம்.
6. பாபநாசம் வட்டம், கங்காதபுரம் அருள்மிகு கோதண்டராமர் ஆலயம்.
7. வலங்கைமான் வட்டம், பைரவர்கோட்டை அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.
8. வலங்கைமான் வட்டம், வல்லங்குடிகாடு அருள்மிகு கமல விநாயகர் ஆலயம்.
9. வலங்கைமான் வட்டம், கப்பாச்சிக்கோட்டை அருள்மிகு ஆயிஆத்தாள் ஆலயம்.

1994 நவம்பர் 3]

10. வலங்கைமான் வட்டம், திருப்பாலக்குடி அருள்மிகு பாலதண்டாயுதபாணி சுவாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து - திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

96—

தஞ்சாவூர் மாவட்டம், திருப்புவனம் ரெங்கநாதபெருமாள் ஆலயம் மற்றும் பிற ஆலயங்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள். **18969, 18970, 18973, 18976, 18977, 18979, 19009, 19013, 19017 19019**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. திருப்புவனம் அருள்மிகு ரெங்கநாதபெருமாள் ஆலயம்.
2. சங்கரதேவன் தேவங்குடிகாடு அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயம்.
3. பூண்டி அருள்மிகு படித்துறை விநாயகர் ஆலயம்.
4. ராஜாமுத்திரைக்கோட்டை அருள்மிகு குருமைத் துறை அய்யனார் ஆலயம்.
5. சாலியமங்கலம் அருள்மிகு காளஹஸ்தீஸ்வரர் ஆலயம்.
6. அம்மாப்பேட்டை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயம்.
7. தேவராயன்பேட்டை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயம்.
8. சந்திரசேகரபுரம் அருள்மிகு சந்திரசேகரர் மற்றும் நவநீத கிருஷ்ணன் ஆலயம்.
9. தொழுவூர் அருள்மிகு பிள்ளையார் ஆலயம்.

10. மாத்தூர் அருள்மிகு விஸ்வநாதர் மற்றும் லெட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

97—

திருவையாறு வேணுகோபாலசுவாமி ஆலயம் மற்றும் பிற ஆலயங்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள். **19066, 19067, 19070, 19071, 19073, 19074, 19075, 19076, 19078, 19079**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. திருவையாறு வட்டம், விஷ்ணம்பேட்டை அருள்மிகு வேணுகோபாலசுவாமி ஆலயம்.

2. திருவையாறு வட்டம், விஷ்ணம்பேட்டை, அருள்மிகு பாலகுருவிநாயகர் ஆலயம்.

3. திருவையாறு வட்டம், வெங்கடசமுத்திரம் அருள்மிகு வார்த்தலை நாச்சியம்மன் ஆலயம்.

4. திருவையாறு வட்டம், வெங்கடசமுத்திரம், அருள்மிகு வேணுகோபாலசுவாமி ஆலயம்.

5. திருவையாறு வட்டம், திருக்காணூர் அருள்மிகு கரும்பேஸ்வரர் ஆலயம்.

6. வலங்கைமான் வட்டம், அம்மாப்பேட்டை அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்.

1994 நவம்பர் 3]

7. வலங்கைமான் வட்டம், அம்மாப்பேட்டை அருள்மிகு கிருஷ்ணசாமி ஆலயம்.

8. வலங்கைமான் வட்டம், அம்மாப்பேட்டை அருள்மிகு தீபாபாய் பிள்ளையார் ஆலயம்.

9. வலங்கைமான் வட்டம், அம்மாப்பேட்டை, வாணியப்பட்டரை பிள்ளையார் ஆலயம்.

10. வலங்கைமான் வட்டம், அருந்தவபுரம், அருள்மிகு வஷ்ரபுரீஸ்வரர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

98—

அனியமங்கலம் மழுவேந்திப்பிள்ளையார் மற்றும் பிற ஆலயங்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் **19011, 19012, 19022, 19024, 19025, 19026, 19028, 19030, 19033, 19035**—திரு. ஆர் சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. அனிய மங்கலம், அருள்மிகு மழுவேந்தி பிள்ளையார் ஆலயம்.

2. ஆண்டாங்கோயில் அருள்மிகு சொர்ணபுரீஸ்வரர் ஆலயம்.

3. நெம்மேலி அருள்மிகு தில்லைவிநாயகர், மாரியம்மன், நாட்டுமாரியம்மன், குன்னமுடை அய்யனார் ஆலயங்கள்.

4. நல்லிகோட்டை அருள்மிகு காரியழகர் அய்யனார் ஆலயம்.

5. பரவக்கோட்டை அருள்மிகு நாகநாதர் மற்றும் வரதராஜப்பெருமாள் ஆலயம்.

6. பரவக்கோட்டை அருள்மிகு வனமுடைய அய்யனார் ஆலயம்.

7. தளிக்கோட்டை அருள்மிகு காரியழகர் காமாட்சியம்மன் ஆலயம்.

8. ஆலவங்கோட்டை அருள்மிகு மழைமாரியம்மன் ஆலயம்.

9. சுப்பாச்சிக்கோட்டை அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

10. தனிக்கோட்டை அருள்மிகு சுப்பிரமணியசாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

99—

சரம்பத்தூர் நல்ல கூத்தனார் ஆலயம் மற்றும் பிற ஆலயங்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண்கள் **19042, 19045, 19047, 19049, 19051, 19053, 19055, 19056**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. சரம்பத்தூர் அருள்மிகு நல்லகூத்த அய்யனார் ஆலயம்.
2. நாயக்கன்பேட்டை அருள்மிகு விநாயகர், கரும்பாயிரம் கொண்ட அய்யனார் ஆலயம்.
3. ஒலைப்பாடி அருள்மிகு விநாயகர் மற்றும் தர்மராஜர் ஆலயம்.
4. தியாகசமுத்திரம் அருள்மிகு மகாலிங்கசாமி ஆலயம்.

1994 நவம்பர் 3]

5. திருவையாறு அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம்.

6. வைத்தியநாதன்பேட்டை அருள்மிகு சுந்தரவிநாயகர் ஆலயம்.

7. விளாங்குடி அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

8. பருத்திகுடி அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

100—

ஸ்ரீபெரும்புதூரில் சுற்றுலா பயணிகளுக்காக வசதி செய்து தருதல்.

வினா எண் **5925**—*திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி உயிர் நீத்த ஸ்ரீபெரும்புதூரில் பொதுமக்கள் வந்து செல்வதற்கான இருப்பிட வசதிகளை சுற்றுலாத்துறை மூலம் செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ? எவ்வளவு தொகை மதிப்பீட்டில் அது செயற்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசு நிதி உதவியுடன் ரூபாய் 22.15 இலட்சம் செலவில் வழித்தட வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

[1994 நவம்பர் 3

ஒன்பதாம் பட்டியல்.

1—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சிறுசேமிப்பு வளர்ச்சி.

வினா எண் **35846—** திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டிற்கான சிறுசேமிப்பு இலக்கு எவ்வளவு ?

(ஆ) இலக்கு எட்டப்பட்டு விட்டதா ?

(இ) இல்லையெனில், அதன் காரணம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டிற்கான சிறு சேமிப்பு இலக்கு ரூ. 16.00 கோடி.

(ஆ) இலக்கு எட்டப்பட்டு விட்டது.

(இ) வினா எழவில்லை.

2—

சங்ககிரி பேரூராட்சியில் நியாயவிலைக் கடை அமைத்தல்.

வினா எண் **21722—** டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி பேரூராட்சியில் 700-800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) சங்ககிரி பேரூராட்சியில் 700-800 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக்கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

3—

திருநெல்வேலி தொகுதியில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்ட விவரம்.

வினா எண் **26930**—திரு. டி. வேலையா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதியில் 1991, 1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் குடும்ப அட்டை கேட்டுப் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வழங்கப்பட்ட குடும்ப அட்டையின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில் 1991, 1992 மற்றும் 1993 ஆம் ஆண்டுகளில் குடும்ப அட்டை கேட்டு பெறப்பட்ட மனுக்கள் மற்றும் வழங்கப்பட்ட அட்டையின் விவரம் :—

வருடம். (1)	மனுக்கள் பெறப் பட்டவை. (2)	அட்டைகள் வழங்கப் பட்டவை. (3)	மனுக்கள் தள்ளுபடி செய்யப் பட்டவை. (4)
1991	225	110	115
1992	2,045	1,229	816
1993	12,964	7,903	5,061

மேற்படி ஆண்டுகளில் பெறப்பட் மொத்த மனுக்களின் எண்ணிக்கை 15,234 ஆகும். அவற்றில், 9,242 மனுக்கள் தகுதியானவை என கண்டறியப்பட்டு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

4—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டை பற்றிய விவரம்.

வினா எண் **27210—** *டாக்டர். மு. அம்மமுத்துபிள்ளை : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டை விண்ணப்பித்த எவ்வளவு பேருக்கு குடும்ப அட்டை வழங்கப்படாமல் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப அட்டை கோரி 1,08,013 மனுக்கள் 31-10-1993 வரை பெறப்பட்டன. இதில் 64,919 மனுக்கள் தகுதியானவை என கண்டறிந்து அவைகளுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டன. ஏனய 43,094 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 1-11-1993 முதல் 30-3-1994 வரை பெறப்பட்ட 8,875 மனுக்கள் விசாரணையில் உள்ளன.

5—

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டை பற்றிய விவரம்.

வினா எண் **27211—** *டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் குடும்ப அட்டைகள் வேண்டி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) 1992-93-ல் கொடுக்கப்பட்ட கார்டுகள் எத்தனை ?

(இ) குடும்ப கார்டுகளை வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) : கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் 1992 மற்றும் 1993-ம் வருடங்களில் புதிய

1994 நவம்பர் 3]

குடும்ப அட்டை வழங்கக் கோரி பெறப்பட்ட மனுக்கள் புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டவை மற்றும் தள்ளுபடி செய்த மனுக்களின் விவரம்:

	தோவாளை வட்டம்.		அகஸ்தீஸ்வரம் வட்டம்.	
	1992	1993	1992	1993
1. புதிய குடும்ப அட்டை கோரி பெறப்பட்ட மனுக்கள்.	1,488	7,764	3,381	31,653
2. புதிய குடும்ப அட்டை வழங்கப்பட்டவை.	102	4,390	2,028	17,379
3. தள்ளுபடி செய்யப் பட்டவை	1,386	3,374	1,353	14,174

தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணங்கள்:

1. ஏற்கனவே குடும்ப அட்டை வழங்கியது.	221	399	...	2,416
2. இரண்டாவது முறை யாகப் பெறப்பட்ட மனுக்கள்.	187	1,042	550	7,537
3. மனுசெய்த பின்பு விலாசம் மாறியதால்.	17	562	...	2,591
4. இதுபோன்ற நபரில்லை.	25	534	118	940
5. மனுவில் குறிப்பிட்டுள்ள விலாசம் காணப்படாமை.	30	514	355	296
6. கூட்டுக் குடும்ப மனுக்கள்.	906	323	330	394
மொத்தம்	1,386	3,374	1,353	14,714

தோவாளை வட்டத்தில் 1-11-1993 முதல் புதிய குடும்ப அட்டை கோரி பெறப்பட்ட 345 மனுக்களும் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் 727 மனுக்களும் விசாரணையில் உள்ளன.

6—

அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் சீர் செய்தல்.

வினா எண் **5757**—*திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) அனைத்து போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து மழை பெய்தால் பயணிகள் நனைந்து பயணம் மேற்கொள்ளும் நிலையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சில இடங்களில் சாலை வசதிகள் நன்கு இல்லாத காரணத்தால் பேருந்துகளின் கூண்டுகள் ஆட்டம் கண்டு நீர் ஒழுகல் ஏற்படுகின்றது. அவற்றைத் தடுப்பதற்கான தார்பெஸ்ட் மற்றும் நவீன பிளாஸ்டி பெஸ்ட் போன்றவை உபயோகப்படுத்தப்படுகின்றது. அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் கூறை ஒழுகல் உள்ள பேருந்துகள் உடனுக்குடன் பழுது பார்க்கப்படுகின்றன.

7—

இராமநாதபுரம்–செய்யாலூர் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் **15750**—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் இராமநாதபுரத்திலிருந்து செய்யாலூருக்குப் பேருந்துவிட, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

செய்யாலூர் கிராமம், இராமநாதபுரம்-பரமக்குடி பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1.6 கி.மீ. தூரத்தில் உள்ளது. தற்சமயம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராம மக்கள் தொகை 1,000-க்குக் குறைவாக உள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் தற்சமயம் பேருந்து வசதி செய்வதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

8—

பெரியார் நகர்-வடபழனி வரை பேருந்து இயக்குதல்.

வினா எண் **16300**—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் நகரிலிருந்து வடபழனிக்கு நேரடி பேருந்து தொடர்பு இல்லாததால் பேருந்து தட எண் 37பி-யை பெரியார் நகரிலிருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திரு. வி. க. நகர் பேருந்து நிலையத்திலிருந்து வழித்தடம் 37பி-ல் 9 பேருந்துகள் 42 பயணத் தடவைகளில் தினசரி வடபழனிக்கு இயக்கப்படுகின்றன. பெரியார் நகர் பகுதி மக்கள் பெரியார் நகர் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பெரவள்ளூர் சாலை சந்திப்பில் பேருந்து நிறுத்தத்திலிருந்து இவ்வழித்தட பேருந்துகள் மூலம் நேரடியாக வடபழனி சென்றடையலாம். வழித்தடம் 37பி-யை பெரியார் நகர் வரை நீட்டித்து இயக்கினால் அதன் பயண நடைகள் குறையும். மேலும் திரு.வி.க. நகர் பகுதியில் அப்பேருந்தை பயன்படுத்திவரும் மக்களுக்கு அது பாதகமாக அமையும். எனவே, தடம் எண். 37பி பெரியார் நகரிலிருந்து இயக்க வேண்டிய அத்தியாவசியத் தேவை இல்லை.

9—

பேருந்து தடம் எண் 42ஜே—யை பேப்பர் மில் சாலை வழியாக இயக்குதல்.

வினா எண் **16303—***திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேருந்து தட எண் 42ஜே, ஜவஹர் நகர் மற்றும் பெரியார் நகர் வழியாக சென்று பேப்பர் மில் சாலை வழியாக மீண்டும் செல்லும்படியாக பேருந்து தடத்தை மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பெரியார் நகருக்கும் ஜவகர் நகருக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 0.8 கி.மீ. ஆகும். பல்லவன் போக்குவரத்துக் கழக வழித்தடம் 42ஜே பேருந்துகளை இப்பகுதிகள் வழியாக இயக்கினால் பெரியார் நகரைத் தாண்டிச் செல்லும் ஒவ்வொரு பயணியும் ஒரு கட்டணநிலை கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். மேலும் வழித்தடத்தின் பயண நடைகளும் குறையும். இதனால் தற்பொழுது இவ்வழித் தடத்தினை பயன்படுத்திவரும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, வழித்தடம் 42ஜே பேருந்துகளை ஜவகர் நகர், பெரியார் நகர் வழியாகச் சென்று பின்னர் பேப்பர் மில் சாலை வழியாக இயக்க இயலாது.

10—

பெரியார் நகர் — பெசன்ட் நகர் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் **16307—***திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியார் நகரிலிருந்து பெசன்ட் நகர், மந்தைவெளி, லஸ், ஆழ்வார்பேட்டை ஆகிய இடங்களுக்குச் செல்ல நேரடி பேருந்து இல்லையாதலால், தடம் எண் 29சி-யை பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பல்லவன் போக்குவரத்துக் கழகம், பெரியார் நகருக்கு அருகாமையில் உள்ள பெரவள்ளூர் சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தம் வழியாக, வழித்தடம் 29ஆர் ஆர்-ல் லஸ், மந்தைவெளி வரை தினசரி இயக்கி வருகிறது. மேலும், பெரியார் நகர் பேருந்து நிலையத்திலிருந்து 7 வழித்தடங்களில் இயக்கப்பட்டு வரும் இப்பேருந்துகள் மூலம் நகரின் பல இடங்களுக்கும் சென்று அங்கிருந்து தொடர்புடைய பேருந்துகள் மூலம் ஆழ்வார்பேட்டை, பெசன்ட் நகர் ஆகிய இடங்களுக்குச் செல்லலாம். சென்னை பெருநகர் போக்குவரத்தில் ஒரு இடத்திலிருந்து மற்ற எல்லா இடங்களுக்கும் நேரடிப் பேருந்துகள் இயக்க இயலாது.

தற்பொழுது பெரம்பூர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் வழித்தடம் 29சி பேருந்துகளை பெரியார் நகர் வரை நீட்டித்து இயக்கினால் அதன் பயண நடைகள் குறைவதுடன், பெரம்பூர் பகுதியில் இப்பேருந்துகளை பயன்படுத்திவரும் மக்களுக்கு பெரிதும் பாதகமாக அமையும். எனவே, வழித்தடம் 29சி பேருந்துகள் பெரியார் நகர் வரை நீட்டித்து இயக்க வாய்ப்பில்லை.

11—

சென்னை மற்றும் மாவட்ட தலைநகரங்களில் 'சி' சர்குலர் சர்வீசை மீண்டும் இயக்குதல்.

வினா எண் 16341— திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்ட "சி" சர்குலர் சர்வீஸ் ஏன் நிறுத்தப்பட்டது ?

(ஆ) அந்த சர்குலர் சர்வீசை மீண்டும் சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் 'சி' சர்குலர் சர்வீஸ்களை 1980-81 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அப்பேருந்துகளில் ஒன்று ஒரு முனையிலிருந்து புறப்பட்டு கடிகாரச் சுற்று வட்டப் பாதையில் சுற்றிக்கொண்டு புறப்பட்ட இடத்திற்கு திரும்பி வரும். மற்றொரு பேருந்து எதிர் திசையில் இயக்கப்படும். பயணம் மேற்கொள்வோர் மேற்படி இரண்டு தடங்களில் தான் பயன்படுத்த வேண்டிய பேருந்தை சரியான முறையில் தேர்வு செய்யவேண்டும். மாறிப் பயன்படுத்தினால் அதிக கட்டணமும் பயண நேரமும் கூடுதலாகும். எனவே பெரும்பாலான பயணிகள் அப்பேருந்துகளைப் புரிந்து கொள்ள இயலாத காரணத்தால் விரும்பாத நிலையில் வசூல் மிகவும் குறைவாக இருந்த காரணத்தால் இயக்கத்திலிருந்து நிறுத்தப்பட்டன.

(ஆ) இல்லை.

12—

மயிலாடுதுறை—பூம்புகார் இடையே பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் **16354**—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறையில் இருந்து திருநன்றியூர் சாலை வழியாக பூம்புகாருக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கோரிக்கை தடத்தில் வெட்டாறு பாலத்திலிருந்து சேமங்கலம் வரையில் 2 கி.மீ. கப்பிச்சாலையாகவும், சேமங்கலத்திலிருந்து சாவடி வரை (6 கி.மீ.) மண்சாலையாகவும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாக உள்ளதால் மயிலாடுதுறையிலிருந்து திருநன்றியூர் சாவடி வழியாக பூம்புகாருக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு செயற்குறிப்பு ஏதுமில்லை.

1994 நவம்பர் 3]

13—

சிதம்பரம்—சென்னை தடம் எண் 342 பேருந்தை தலைக்குளம் வழியாக இயக்குதல்.

வினா எண் ***16368***—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம்-சென்னை மருதூர் வழியாகச் செல்லும் 342 பேருந்தை தலைக்குளம், உளுந்தூர் வழியாக விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சிதம்பரம்-சென்னை வழி மருதூர் தட நீளம் 248 கி.மீ. இதனை தலைக்குளம் உளுந்தூர் வழியாகத் தடம் மாற்றி இயக்கினால் தட நீளம் 5 கி.மீ. கூடுதலானதால் மற்ற பயணிகளுக்குப் பயணக் கட்டணமும் பயண நேரமும் அதிகமாகும். மேலும் தடமாற்றம் கோரியுள்ள தலைக்குளம் உளுந்தூர் தடப்பகுதியில் தற்போது கீழ்க்கண்ட பேருந்து வசதிகள் உள்ளன.

தடம் எண். 49: சிதம்பரம்-தலைக்குளம் வழி ஆலம்பாடி மருதூர்—4 நடைகள்.

தடம் எண். டி 26 : சிதம்பரம்-தலைக்குளம்—6 நடைகள்
வழி : புவனகிரி, சேத்தியாதோப்பு, உளுந்தூர்.

எனவே தடமாற்றம் கோரியுள்ள பகுதியில் உள்ள தலைக்குளம், உளுந்தூர் கிராம மக்கள் மேற்கண்ட நகரப் பேருந்துகள் மூலமாக சிதம்பரம் செல்லலாம். சிதம்பரத்திலிருந்து சென்னைக்கு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சராசரியாக அரை மணி நேர இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. அதனால் கோரிக்கையில் கேட்டுள்ளபடி தடம் எண் 342 பேருந்தை இயக்க இயலாது.

14—

ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதி, கருக்காகுருச்சி பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் **16617—***திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதியில் இருந்து வானக்கன்காடு, கருக்காகுருச்சி வழியாகச் சென்ற சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

வானக்கன்காடு-வெட்டன்விடுதிவரை தார்ச் சாலை போட்டுக் கொண்டிருந்ததால் பேருந்து செல்ல முடியாமல் சோழன் போக்குவரத்து கழகப் பேருந்து நிறுத்தப்பட்டது. தற்பொழுது சாலை சீர் செய்யப்பட்டு தினசரி நான்கு நடைகள் பேராவூரணியிலிருந்து வானக்கன்காடு—கருக்காகுறிச்சி வழியாக வெட்டன்விடுதிக்கு அக்கழகத்தின் நகரப் பேருந்து இயக்கப்படுகிறது.

15—

மயிலாடுதுறை-ஆனந்ததாண்டவபுரத்திற்கு இடையே கூடுதலாகப் பேருந்து இயக்குதல்.

வினா எண் **17220—***திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மயிலாடுதுறையிலிருந்து ஆனந்ததாண்டவபுரத்திற்குக் கூடுதலாகப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சோழன் போக்குவரத்துக் கழகம், மயிலாடுதுறையிலிருந்து நேரடியாக ஆனந்ததாண்டவபுரத்திற்கு 24 நடைகளும், மயிலாடுதுறையிலிருந்து பொன்மாசநல்லூர் மற்றும் சீர்காழி வழியாக ஆனந்ததாண்டவபுரத்திற்குப் 10 நடைகளும் பேருந்துகள் இயக்கி வருகின்றது. இவை தவிர புறநகர் பேருந்து மயிலாடுதுறை சீர்காழி தடத்தில் 400 நடைகள் உள்ளன. மேற்சொன்ன பேருந்து வசதிகள் போதுமானதாக உள்ளதால் கூடுதல் பேருந்து விட அவசியமில்லை எனக் கருதலாம்.

16—

மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரிக்குக் கூடுதலாகச் சிறப்புப் பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் **172221**—*திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களுக்கு வசதியாக காலையிலும் மாலையிலும் சிறப்புப் பேருந்துகள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு.கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மன்னம்பந்தல் ஏ.வி.சி. கல்லூரிக்குச் சென்று திரும்புவதற்கு காலையில் மயிலாடுதுறையிலிருந்து மன்னம்பந்தல் வழியாக 4 பேருந்துகளும், மாலையில் நான்கு பேருந்துகளும் மற்றும் மன்னம்பந்தலில் இருந்து மயிலாடுதுறைக்கு தனிப் பேருந்து ஒன்றும் இயக்கப்பட்டு வருகிறது. இதுவே இக்கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களுக்குப் போதுமானதாகும்.

[1994 நவம்பர் 3

17—

மயிலாடுதுறை—வடகரை இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் **17226**—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறையிலிருந்து வடகரைக்கு தருமபுரம் வழியாக புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

மயிலாடுதுறை—வடகரைக்கு, தருமபுரம், மன்னம்பந்தல், குளிச்சார் வழியாக நகரப் பேருந்துகள் 40 நடைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நடைகள் மக்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளது. எனவே மயிலாடுதுறையிலிருந்து வடகரைக்கு தருமபுரம் வழியாக புதிய பேருந்து விட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

18—

முன்சிறை—நாகர்கோவில் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் **19821**—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, முன்சிறையிலிருந்து உதச்சிக்கோட்டை, காப்புக்கோடு வழியாக நாகர்கோவிலுக்குப் புதிதாக ஒரு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு.கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : புதுக்கடை முன்சிறை, உதச்சிக்கோட்டை, காப்புகாடு மார்த்தாண்டம் பகுதியில் நாளொன்றுக்கு 12 நகர மற்றும் ஒரு புறநகர்

பேருந்துகள் 200-க்கும் அதிகமான சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. மார்த்தாண்டம்-நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையில் 3 முதல் 4 நிமிட இடைவெளியில் ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கேட்கப்பட்டுள்ள புதிய வழித்தடத்தில் உடனடியாக பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.

19—

திருச்சி—பெருமகளூர் இடையே மீண்டும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை இயக்குதல்.

வினா எண் **20316**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாக பெருமகளூர் வரை இயக்கப்பட்ட மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருச்சி-பெருமகளூர் (வழி) புதுக்கோட்டை வழித்தடத்தில் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் பேருந்து இயக்கவில்லை. மேற்படி வழித்தடப் பகுதிகளில் போதுமான அளவில் பேருந்துகள் இயக்குவதால் திருச்சி-பெருமகளூர் (வழி) புதுக்கோட்டை வழித்தடத்தில் நேரடிப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

20—

பழனி—சோழவந்தான் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் **20358C**—*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பழனி—சோழவந்தான் (வழி) செம்பட்டி நிலக்கோட்டை—பனைப்பட்டி வழியாக பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

21—

சுரண்டை—கடையம் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் **20641**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் பெத்தநாடான்பட்டி கிராமம் பொட்டாலூருக்கு சென்று வந்த சுரண்டை—கடையம் (தடம் எண் 25) பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சுரண்டை—கடையம் வழித்தடத்தில் பெத்தநாடார்பட்டி பொட்டலூர் வழியாக (தடம் எண். 25) நகரப்பேருந்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தினால் பரிட்சார்த்தமாக இயக்கப்பட்டது. போதிய பயணிகள் பயணிக்காமல் வருமானம் மிகமிகக் குறைவாக இருந்த காரணத்தினால் இப்பேருந்து நிறுத்தப்பட்டது. வருவாய் குறைந்த இவ்வழித் தடத்தை மீண்டும் இயக்க தற்போது உத்தேசம் ஏதும் இல்லை. மேலும் பெத்த நாடார்பட்டி வழியாக தற்போது இரண்டு புறநகர் பேருந்துகள் தினசரி 6 சுற்றுகள் இயங்கி வருகிறது. பொட்டலூர் இன்று சுமார் 300 மக்கள் தொகையைக் கொண்ட சிறு கிராமம். இங்கிருந்து சுமார் 0.8 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளதால் இக்கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படும்.

22—

சுரண்டை—சங்கரன்கோவில் இடையே பேருந்து இயக்குதல்.

வினா எண் **20732**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம், லட்சுமிபுரம், அச்சங்குப்பம், கருலந்தா ஊத்துமலை வழியாக சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் வரை பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

லட்சுமிபுரம், அச்சங்குட்டம், கருவந்தா மற்றும் ஊத்துமலை வழியாக சங்கரன்கோவில் செல்வதற்கு ஏற்கனவே பேருந்து வசதி உள்ளது. மேலும் சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் செல்வதற்கும் நேரடிப் பேருந்து வசதியுள்ளது. எனவே கேள்வியில் உள்ளபடி புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் உத்தேசம் இல்லை.

23—

பொன்னேரி தொகுதி அவுரிவாக்கத்திற்குப் பேருந்து வசதி செய்தல்.

வினா எண் **22405**— *திரு. ஏ. ரவிக்குமார் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி அவுரிவாக்கம், பாக்கம், கனவான்துரை, ஆகிய மூன்று கிராமங்களுக்கு பேருந்து வசதி (எம்.ஜி.ஆர். டி.சி.) செய்து தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பொன்னேரி கனவான்துரை வழி பாக்கம், அவுரிவாக்கம் தடத்தில் நீளம் 23.0 கி.மீ. ஆகும். இதில் பொன்னேரியிலிருந்து பாக்கத்திற்கு 16.0-வது கி.மீ. தூரத்தில் உள்ள பொள்ளாச்சி அம்மன்குளம் வரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 74 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றது.

பொள்ளாச்சி அம்மன் குளம்-பாக்கம் கனவான்துறை வரையிலான 7.0 கி.மீ. சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக இல்லாததால் மேற்கண்ட தடத்தில் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

24—

தண்டாரம்பட்டு ஒன்றிய மலை வாழ்மக்களின் வசதிக்காக கூடுதலாகப் பேருந்து இயக்குதல்.

வினா எண் **22543**—திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஒன்றியம், மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கும் மலை ஓரப் பகுதியில் அரசு பேருந்துகள் அதிகம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தண்டராம்பட்டு ஒன்றியம் மலைவாழ் மக்கள் அதிகம் வசிக்கும் மலையோரப் பகுதியில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தால் 6 தடப் பேருந்துகள் மூலம் 12 நடைகள் நாள்தோறும் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்துகளுக்குரிய பயணிகளின் கொள்ளளவு 50% மட்டுமே உள்ளது. எனவே மேற்படி பேருந்துகளே அப்பகுதி மலை வாழ் மக்களுக்கு போதுமானதாகும். மேலும் அதிகப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

25—

வினா எண் **22746**—திரு. கி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் நகரத்திலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து புதிதாக இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : அதிராமபட்டினத்திலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் நாள்தோறும் 2 பேருந்துகள் 4 ஒரு வழிப்பயணங்களுடன் இயக்கப்படுகின்றன. அதிராமப் பட்டினத்திலிருந்து மதுக்கூர் 23 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. மதுக்கூரிலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொள்ள விரும்பும் பயணிகள் அதிராமப்பட்டினத்திலிருந்து இயக்கப்படும் இக்கழகப் பேருந்துகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். மதுக்கூரிலிருந்து சென்னைக்கு பிரத்தியேகமாக பேருந்துகள் இயக்குவது பொருளாதார ரீதியில் சாத்தியமில்லை.

26—

பல்பநத்தம்—லாலாபேட்டைக்கு நகரப்பேருந்து இயக்குதல்.

வினா எண் **22986**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து பல்பநத்தத்திற்கும், லாலாபேட்டைக்கும் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருப்பத்தூர்—ஆலங்காயம் பிரதான சாலையிலிருந்து பல்பநத்தம் கிராமத்திற்குச் செல்லும் 3.4 கி.மீ. தூரம் உள்ள சாலை மிகவும் மோசமாக பேருந்து செல்ல இயலாத நிலையில் மேடு பள்ளங்களாக உள்ளது. அந்த சாலையின் குறுக்கே ஒரு காட்டாறு ஓடுகிறது. மூன்று இடங்களில் சாலையின் குறுக்கே மிகப் பெரிய பாறைகளும், பெரிய கிணறு ஒன்றும் சாலை ஓரத்திலும் அமைந்துள்ளன. ஆலங்காயம்-திருப்பத்தூர் பிரதான சாலையிலிருந்து 2.0 கி.மீ. தூரத்தில் லாலாபேட்டை உள்ளது. அந்த 2.0 கி.மீ. சாலையில் 1 கி.மீ. தூரம் பெரிய ஜல்லிகளாகவும் மீதி 1 கி.மீ. தூரம் மண் சாலையாகவும் உள்ளது. சாலையின் அகலம் 8 அடிதான் உள்ளது. இக்காரணங்களால் திருப்பத்தூரிலிருந்து பல்பநத்தத்திற்கும் லாலாபேட்டைக்கும் நகரப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

27—

திருப்பத்தூர்—சென்னைக்குப் பேருந்து வசதிகள்.

வினா எண் 23370—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூரிலிருந்து சென்னைக்குச் செல்லும் தடம் எண் 102பி பேருந்து எத்தனை விடப்படுகின்றன ?

(ஆ) முக்கிய நாட்களில் சிறப்புப் பேருந்துகள் கூடுதலாக விடப்படுமா?

(இ) சொகுசுப் பேருந்துகள் விடும் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) திருப்பத்தூரிலிருந்து சென்னைக்குப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 102பி-ல் தினசரி 27 பேருந்துகள் மூலம் 54 நடைகள் சென்னைக்கு இயக்கப்படுகின்றன.

(ஆ) பயணிகள் அதிகமாக பயணம் செய்யும் அளவில், விடுமுறை நாட்கள், பண்டிகை மற்றும் முகூர்த்த நாட்களில் தேவையான அளவிற்கு பல சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

(இ) இல்லை.

28—

பேருந்துகளில் வலது புறத்தில் அவசர வழி ஏற்படுத்துதல்.

வினா எண் 23541—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மற்ற மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் வலது புறத்தில் அவசர வழி அமைத்து இருப்பதுபோல், தமிழ்நாட்டில் பேருந்துகளில் வைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சாதாரண சமவெளிப் பகுதிகளில் (Plain Roads) இயக்கப்படும் பேருந்துகளில் அவசரவழி அமைக்க தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளில் இடம் இல்லாததால் இப்பகுதிகளில் இயங்கும் இம்மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வலது புறத்தில் அவசரவழி அமைக்கப்படவில்லை. எனினும் மலைப்பகுதி வழிகளில் (Ghat Section) இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகளிலும் வலது புறத்தில் அவசர வழி தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளது.

29—

திருப்பத்தூரில் பேருந்துகள் அதிகப்படுத்துதல்.

வினா எண் **24229**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர்—பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையில் பேருந்துகளை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருப்பத்தூர் பணிமனையிலிருந்து தற்போது 99 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் 70 புறநகர் பேருந்துகள் 180 நடைகளும், 29 நகரப் பேருந்துகள் மூலம் 348 நடைகளும் மொத்தம் 528 நடைகள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில் மேலும் அதிகப் பேருந்துகள் இயக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

[1994 நவம்பர் 3

30—

ஜெயங்கொண்டத்திலிருந்து பெலாக்குறிச்சிக்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 27014—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, பெலாக்குறிச்சிக்கு ஜெயங்கொண்டத்திலிருந்து மீண்டும் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

ஜெயங்கொண்டம்–பொன்பரப்பி (வழி) பெலாக்குறிச்சி வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. தற்போது சாலைப்பழுது காரணமாக ஜெயங்கொண்டம்-வீரராக்கன்வரை மேற்படி பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. சாலை சரி செய்யப்பட்டவுடன் மேற்படி வழித்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்கப்படும்.

31—

நகரப் பேருந்து எண் 11–ஐ கூடுதல் தடங்கள் இயக்குதல்.

வினா எண் 33065—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து புறப்படும் நகரப் பேருந்து எண் 11-ஐ மணல் மேட்டிலிருந்து காளிப்பாளையம், புத்தாம்பூர், பி. வடுகப்பட்டி, சுக்காம்பட்டி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கரூரிலிருந்து மணல்மேடு, காளிப்பாளையம், புத்தாம்பூர், பி. வடுகப்பட்டி மற்றும் சுக்காம்பட்டி வரையிலான வழித் தடத்தில் மணல்மேடு-புத்தாம்பூர் வரை 2 கி.மீ. கப்பிச் சாலையாகவும், புத்தாம்பூரிலிருந்து ஆறுரோடு வரை

1994 நவம்பர் 3]

4 கி.மீ. மண் சாலையாகவும், மேடு பள்ளங்கள் நிறைந்ததாகவும் குறுகலான சாலையாக இருப்பதாலும் பேருந்து இயக்க இயலாது.

32—

ஆவுடையார் பாறைக்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் **33764**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி-வேலூர் வழியாக ஆவுடையார் பாறைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கொடுமுடி-வேலூர் வழித்தடத்தில் ஆவுடையாம்பாறை கிராம மக்களுக்கு 0.5 கி.மீ. உள்ள ரயில்வே கேட்டின் வழியாக போதுமான அளவு பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது. மேலும் கொடுமுடி-கரூர் வழித்தடத்தில் ஆவுடையாம்பாறை பிரிவில் இருந்து ஆவுடையாம்பாறை வரைக்கும் பயணிகள் பேருந்து இயக்கக்கூடிய அளவிற்கு அகன்ற சாலை வசதி இல்லாததாலும், பேருந்து சென்று திரும்பக் கூடிய அளவிற்குப் போதிய இடவசதி இல்லாததாலும் தற்போதைய சூழ்நிலையில் மேற்படி கோரிக்கையினை நிறைவு செய்ய இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

33—

அரியலூர்—ஓரியூர் நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் **35787**—டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, அரியலூரிலிருந்து ஆம்பலவர் கட்டளை, கண்டக்குடி, புங்கங்குழி வழியாக ஓரியூர்வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கோரிக்கையில் உள்ள வழித்தடத்தை ஆய்வு செய்ததில் அம்பலவர் கட்டளைக்கும், சுண்டக்குடிக்கும் இடையில் உள்ள மருதையாறு தரைப்பாலம் பேருந்து இயக்க இயலாத அளவுக்கு சேதமடைந்துள்ளது. இதே போன்று சுண்டக்குடிக்கும் ஓரியூருக்கும் இடையில் உள்ள மூன்று சிறிய வாய்க்கால் தரைப் பாலங்கள் உடைந்து பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. சாலையை செப்பனிட்டு, சாலைத் தகுதிச் சான்று கிடைத்த பிறகு மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்க தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

தியாகராஜபுரம் சாலையை மேம்படுத்துதல்.

வினா எண் **5242**—*திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

வேதாரண்யம் தொகுதி தென்னம்புலத்திலிருந்து தியாகராஜபுரம் செல்லும் சாலையை மேம்பாடு செய்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

வேதாரண்யம் தொகுதி தென்னம்புலத்திலிருந்து தியாகராஜபுரம் செல்லும் சாலையை மேம்பாடு செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

அண்ணா மாவட்டத்தில் குளங்களை மராமத்து செய்தல்.

வினா எண் **8479**—*திரு. எம் ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அண்ணா மாவட்டத்தில் எங்கெங்கு எந்தெந்த கண்மாய்கள் கசிவு நீர் குட்டை மற்றும் குளங்களில் மண் மேடிட்டிருப்பதைத் தூரெடுத்து ஆழப்படுத்த வேண்டுமென கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட

1994 நவம்பர் 3]

விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாயப் பிரதிநிதிகளிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) கசிவுநீர்க் குட்டைகள், பெரும்பாலும் விவசாயத் துறையினாலும் அவ்வப்போது பொதுப்பணித் துறையினாலும் செய்யப்பட்டு, அந்தந்த பஞ்சாயத்து யூனியனிடம் பராமரிப்பதற்காக ஒப்படைக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் அண்ணா மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு பஞ்சாயத்து யூனியன் பொதுப்பணித்துறை குளங்கள் பல சிறுபாசனத் திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

திட்டத்தின் பெயர்.	வருடம்			மதிப்பீடு தொகை.
	1990-91	1991-92	1992-93	(ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)	(4)	(5)
விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம் (பொதுப்பணித்துறை கண்மாய்)	..	..	4	2.00
விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம் (முன்னாள் ஜமீன்.)	3	1	..	2.05
விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம் (பஞ்சாயத்து யூனியன்)	70	..	10	26.60
சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்	..	59	..	30.40
சிறப்பு கசிவு நீர்க் குட்டை விவசாயத் துறையினரால் செய்யப்பட்டது	..	21	..	27.30
வறட்சி நிவாரணத் திட்டம் (JVIII).	..	..	37	9.61

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கரைகளை பலப்படுத்துவதற்கு தேவையான மண் பொதுவாக கண்மாய் படுகையில் இருந்தே தோண்டி எடுக்கப்படுவதால் கண்மாயும் குறிப்பிட்ட அளவு ஆழப்படுத்தப்படுகிறது.

36—

அக்கினி ஆற்றின் குறுக்கே தாம்போகி கட்டுதல்.

வினா எண் **12170**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி உதவிக் கோட்டம் உப்பு விடுதி வாட்டாத்திக் கோட்டை சாலையில் கி.மீ. 1-ல் அக்கினி ஆற்றின் குறுக்கே தாம்போகி கட்டும் பணிக்கு பாலம் கட்டியதற்கு நில எடுப்புக்கான தொகை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வருவாய்க் கோட்ட அலுவலரால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

37—

பட்டுக்கோட்டை பயணிகள் விடுதிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **12902**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை பயணிகள் விடுதிக்குக் கூடுதல் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது திட்டம் ஏதும் இல்லை.

1994 நவம்பர் 3]

38—

பட்டுக்கோட்டை பயணிகள் விடுதியில் குளிர்சாதன வசதியை ஏற்படுத்துதல்.

வினா எண் **12903**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை பயணிகள் விடுதியில் குளிர்சாதன வசதியை ஏற்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

39—

பேராவூரணி தொகுதியில் நெடுஞ்சாலையைப் பராமரித்தல்.

வினா எண் **13330**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி கோட்டம், ஒட்டங்காட்டிலிருந்து, சிறுபாலக்காடு வழியாக அழகியநாயகிபுரம்வரை செல்லும் நெடுஞ்சாலையை 1992-93-ல் பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பேராவூரணி கோட்டம், ஒட்டங்காட்டிலிருந்து சிறு பாலக்காடு வழியாக அழகியநாயகிபுரம் வரை செல்லும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிப்புச் செய்யப்பட்டு வரும் இதர மாவட்டச் சாலையாக திருச்சித்தம்பலம்-ஆண்டிக்காடு சாலை கி.மீ. 0/0-14/2 ஆகும். இச்சாலையில் பழுதடைந்த பகுதிகளால் கி.மீ. 0/6-10, 1/2-4, 3/0, 6, 4/0-6/6, 7/0-6 மற்றும் 11/0-14/0 ஆகிய பகுதிகளை பழுதுற்ற சாலைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் சீர் செய்ய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி செயல்படுத்தப்படும். எஞ்சியுள்ள பகுதிகளை நிதி நிலைக்கேற்ற வகையில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

அரிச்சந்திரா ஆற்றில் இணைப்புப் பாலம் கட்டுதல்.

வினா எண் **13647**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஆலிவலம் ஆதனூர் இடையில் அரிச்சந்திரா ஆற்றில் இணைப்புப் பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

41—

அரிச்சந்திரா நதியில் பாலம் கட்டுதல்.

வினா எண் **13649**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் பள்ளிவர்த்த பாலம் அரிச்சந்திரா நதியில் பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

42—

வெட்டாற்றில் வண்டிப்பாலம் கட்டுதல்.

வினா எண் **13653**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

1994 நவம்பர் 3]

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் வட்டம், திருவாரூர் ஒன்றியம், திருவாரூர் நகரத்தையும் பழையவலத்தையும் இணைக்க வெட்டாற்றில் வண்டிப் பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

43—

செங்கமலத்திலுள்ள சாலையைத் தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் **14337**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமலத்திலுள்ள ஒன்றியச் சாலையை செப்பனிட்டு, தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செங்கமலம் ஒன்றியச் சாலை 1991-92 ஆம் ஆண்டு கிராமச்சாலை திட்டத்தில் ரூ. 7.5 இலட்சம் செலவில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

44—

அனந்தபத்மநாபசுவாமி கோவில் அருகில் தடுப்புச்சுவர் கட்டுதல்.

வினா எண் **15116**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியம் குறிச்சிகுளம் பெரிய குளத்தில் அனந்தபத்மநாபசுவாமி கோவில் அருகில் தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

குறிச்சிகுளம் பெரியகுளத்தில் அனந்தபத்மநாபசுவாமி கோவில் அருகில் தடுப்புச் சுவர் கட்டுவதற்குத் தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணி 1993-94 ஆம் வருட நிதி ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறு முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

துவரங்குறிச்சி சாலையில் ரிவெட்மெண்ட் கட்டுதல்.

வினா எண் **15289**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஒன்றியம் செங்கபடுத்தான்காடு ஊராட்சி அரவங்காடு-துவரங்குறிச்சி சாலையில் 2-1/4 கி.மீ. தூரத்தில் ஒத்தநடைக்கு அருகில் ரிவெட்மெண்ட் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

46—

பட்டுக்கோட்டை நெடுஞ்சாலையைப் பராமரித்தல்.

வினா எண் **15419**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மன்னார்குடியிலிருந்து மகாதேவபட்டினம் வழியாக பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத் துறைச் சாலையை அகலப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

மன்னார்குடியிலிருந்து மகாதேவபட்டினம் வழியாக பட்டுக்கோட்டை செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

47—

உப்பனாறு பாலத்தை அகலமான பாலமாக அமைத்தல்.

வினா எண் **15773**—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், சூரக்காடு குக்கிராமத்திற்கு அருகில் கூப்பிடுவான்-உப்பனாறு கப்பிப் பாலத்தை போக்குவரத்துக்கு அகலமான பாலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

48—

சீர்காழி—தரங்கம்பாடி தார்ச் சாலையை அகலப்படுத்த நடவடிக்கை.

வினா எண் **15774**—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி—தரங்கம்பாடி தார் சாலையை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தற்போது திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. கடலூரிலிருந்து நாகப்பட்டினம் வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலைப் பகுதியை மேம்பாடு செய்யும்போது இச்சாலைப் பகுதிகள் அகலப்படுத்தப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

49—

மயிலாடுதுறை—தரங்கம்பாடி தார்ச்சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் **15775**—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை—தரங்கம்பாடி தார்ச்சாலை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) திட்டம் எதுவும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

50—

வீரசோழநாற்றில் நடைபாலம் அமைத்தல்.

வினா எண் **15790**—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியம், வேலம்புதுக்குடி—திருவிளையாட்டம் வீரசோழநாற்றின் குறுக்கே நடைப்பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(ஆ) மற்றும் (ஆ) : இல்லை.

51—

கிராமச்சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பராமரித்தல்.

வினா எண் **16061**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி பட்டுக்கோட்டை சூரப்பள்ளத்தில் பிரிந்து ஆலடிக்கு முனையில் மெயின் சாலையில் இணையும் சாலையை கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் (ஆர். ஆர்.) சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி பட்டுக்கோட்டை, சூரப்பள்ளத்தில் பிரிந்து ஆலடிக்கு முனையில் மெயின் சாலையில் இணையும் சாலையில் இடையில் எந்த ஊர்களும் இல்லை. ஆலடிக்கு முனை மற்றும் சூரப்பள்ளம் ஆகிய கிராமங்கள் ஏற்கனவே அரசு சாலையில் அமைந்துள்ளதால் கிராமச் சாலைகள் திட்டத்தில் செயல்படுத்தும் சாத்தியக் கூறுகள் இல்லை.

52—

கொள்ளிடம் ஆற்றில் நடைபாதை பாலம் அமைத்தல்.

வினா எண் **16125**—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பனங்காட்டங்குடி அரசூர் என்ற ஊர்களுக்கு மத்தியில் நடை பாதை பாலம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

53—

திருமணஞ்சேரியில் பாலம் கட்டுதல்.

வினா எண் **16271**—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் திருமணஞ்சேரியில் பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது புதுக்கோட்டை-பட்டுக்கோட்டை (Major District Road) சாலை கி.மீ. 40/6-ம் பிரிந்து திருமணஞ்சேரி வழியாக கருங்காகுறிச்சி செல்லும் ஊராட்சி ஒன்றிய சாலையின் (கி.மீ. 0/0—8/0) கி.மீ. 1/6-ல் அக்னியாற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டும். இவ்விடத்தில் ஆற்றின் நீர் வழிப்பாதையின் அகலம் 200 மீட்டர்களாகும். இவ்விடத்தில் உயர்மட்ட பாலம் கட்ட தோராயமாக ரூ. 200 லட்சம் தேவையாகும்.

இப்பணி இதுவரையில் அரசின் திட்டப்பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் பாலப்பணிகளை பகுதி 2 திட்டத்தில் மேற்கொள்ள வழிவகை ஏதும் செய்யப்படாததால் இப்பால பணியை நெடுஞ்சாலை துறையின் மூலம் மேற்கொள்ள இயலாது. இருப்பினும், இப்பாலம் கட்டும் பணியை "மத்திய சாலை நல திட்டத்தில்" (Central Road Fund) மேற்கொள்வதற்காக மத்திய அரசின் ஒப்புதலுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பின்னர் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

1994 நவம்பர் 3]

54—

அவினாசி ரோட்டிலுள்ள பாலங்களை அகலப்படுத்துதல்.

வினா எண் **16332**—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் அவினாசி ரோட்டில் உள்ள பாலங்களை அகலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கோயமுத்தூர் அவினாசி சாலையில் தேசிய நெடுஞ்சாலை-47 கி.மீ. 153/6 மற்றும் 154/4-ல் உள்ள பாலங்களைப் புதுப்பித்து அகலப்படுத்தும் மதிப்பீடு ரூ. 192.5 இலட்சத்திற்கு உலக வங்கி திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட உள்ளது. இப்பணிக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முன் தகுதிக்கான (Pre Qualification) ஒப்பந்தம் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு கருத்துருக்கள் தற்சமயம் திட்ட மேலாண்மை குழுவில் (பி.எம்.ஜி.) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அக்குழுவின் ஒப்புதல் பெற்ற பின்பு முன் தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வேலைக்குரிய ஒப்பந்தங்கள் கோரப்பட்டு அவற்றை பரிசீலனை செய்து மீண்டும் திட்ட மேலாண்மை குழுவின் ஒப்புதல் பெற்றபின்பு வேலை ஒப்படைப்பு செய்யப்படும்.

55—

திருவாலி சாலையை அகலப்படுத்துதல்.

வினா எண் **16472**—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி-பூம்புகார் திருவாலி வழியாகச் செல்லும் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சீர்காழி-பூம்புகார் திருவாலி வழியாகச் செல்லும் சாலையை அகலப்படுத்தும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

56—

சீர்காழி தொகுதியில் தார்ச்சாலையைப் புதுப்பித்தல்.

வினா எண் **16654**—திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் அன்னம் பெருமாள் கோவில்- திருநாங்கூர் செல்லும் தார்ச் சாலையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதியில் அன்னம்பெருமாள் கோவில்-திருநாங்கூர் செல்லும் தார்ச்சாலையின் சரியான பெயர் அன்னங்கோயில் நாகூர் (இதர மாவட்டச் சாலை) சாலை கி.மீ. 0/0—5/0 என்பதாகும். இச்சாலையில் சென்ற நிதியாண்டில் கி.மீ. 1/6 : 8: 10 : 2/2: 4: 6 ஆகிய பகுதிகளில் "பழுதடைந்த அரசு சாலைகளைச் சீர்செய்தல்" திட்டத்தின் கீழ் ரூ. 1.35 இலட்சம் மதிப்பீட்டில் தார்தளம் புதுப்பிக்கப்பட்டது. இச்சாலை தற்போது போக்குவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளது. இச்சாலையில் எஞ்சியுள்ள புதுப்பிக்கப்படாத பகுதிகள் அரசின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டு வரும் ஆண்டுகளில் சீர்செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

57—

சீர்காழி—நாகப்பட்டினம் சாலையைச் சீர்படுத்துதல்.

வினா எண் **17243**—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, சீர்காழி—நாகப்பட்டினம் சாலையைச் சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பூம்புகார் தொகுதியில் சீர்காழி—நாகப்பட்டினம் சாலையைச் சீர்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1994 நவம்பர் 3]

58—

தலைவாசல் தொகுதியில் சாலைகளைப் பழுது பார்த்தல்.

வினா எண் **17504**—*திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தலைவ்ாசல் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறை சாலைகள் பழுதடைந்துள்ளதை சீர்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

51.02 லட்சத்திற்கான சாலைப்பணிகள் தலைவாசல் தொகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் தலைவாசல் தொகுதியில் உள்ள பழுதடைந்துள்ள அரசு நெடுஞ்சாலைத்துறை சாலைகளை ஆண்டு பராமரிப்பு நிதி நிலைமைகளுக்கேற்ப பேருந்து போக்குவரத்திற்கு குந்தகம் ஏற்படாமல் தொடர்ந்து பராமரிப்பு செய்வதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

59—

மதிமாலையாற்றில் பாலம் அமைத்தல்.

வினா எண் **17517**—*திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி மேலூருக்கும் கிளியனூருக்கம் இடையில் மதிமாலை ஆற்றில் பாலம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மயிலாடுதுறை தொகுதி, மேலூருக்கும் கிளியனூருக்கும் இடையில் மதிமாலை ஆற்றில் பாலம் அமைக்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

60—

கடகம்—கொல்லாபுரம் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் **17522**—*டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TRUTH ALONE TRIUMPHS

(அ) நன்னிலம் தொகுதி, கடகம் கிராமத்திலிருந்து கொல்லாபுரம் வரை இருக்கும் கப்பிச்சாலையை மாற்றி தார்ச் சாலையாக போடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) கடகம்—கொல்லாபுரம் சாலையில் தற்சமயம் பேருந்து போக்குவரத்து ஏதும் இல்லாததால் அதனைத் தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

61—

புத்தாற்றின் கரைகளைப் பலப்படுத்த நடவடிக்கை.

வினா எண் **1940**—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, புத்தாற்றின் கரையோரம் திருவிடாச்சேரியிலிருந்து மாப்பிள்ளைக்குப்பம் மற்றும் ஆண்டிப்பந்தல் வரை செல்லும் பேருந்து சாலை பழுதுபட்டு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த புத்தாற்றின் கரைகள் பலப்படுத்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நன்னிலம் தொகுதி புத்தாற்றின் கரையோரம் திருவிடாச்சேரியிலிருந்து மாப்பிள்ளைகுப்பம் மற்றும் ஆண்டிப்பந்தல் வரை செல்லும் பேருந்து சாலையில் மிகவும் பழுதடைந்த 2.2 கி.மீ. சாலையை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப்பகுதியை ஆண்டு பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஆதாரத்தைப் பொறுத்து சிறுகச்சிறுக எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1994 நவம்பர் 3]

62—

நன்னிலம் தொகுதியில் சாலைகளை மேம்படுத்துதல்.

வினா எண் **19141**—*டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

நன்னிலம் தொகுதி, வெட்டாற்றின் கரையில் கங்களாஞ்சேரியிலிருந்து—செல்வபுரம் வரையிலான பேருந்து சாலையையும், வெட்டாற்றின் கரையையும் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

நன்னிலம் தொகுதி, வெட்டாற்றின் கரையில் கங்களாஞ்சேரியிலிருந்து செல்வபுரம் வரையிலான பேருந்து சாலையையும், வெட்டாற்றின் கரையையும் பலப்படுத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை. இருப்பினும், இச்சாலையை வாகனப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் நல்ல முறையில் பராமரிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

63—

திருக்கண்ணபுரம் பில்லாளி மத்தளங்குடி சாலையைப் பராமரித்தல்.

வினா எண் **19146**—*டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், தன்னிறைவு திட்டத்தில் பேருந்து தடச்சாலை திட்டத்தின் கீழ் திருக்கண்ணபுரத்திலிருந்து பில்லாளி வரை உள்ள 2.4 கி.மீ. சாலை அமைக்கவும் திருபயந்தங்குடி சாலையுடன் இணைக்கும் வகையில் மீதமுள்ள 0.8 கி.மீ. தூரத்திற்கு சாலை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருக்கண்ணபுரம், பில்லாளி, மத்தளங்குடி சாலை திருமருகல் ஒன்றிய பராமரிப்பில் உள்ள சாலையாகும். இச்சாலையின் நீளம் கி.மீ. 2/4, 6/8

ஆகும். இச்சாலை திருக்கண்ணபுரம் அரசு சாலை 2/4-ல் தொடங்கி விற்குடி திருப்பயந்தாங்குடி அரசு சாலையில் கி.மீ. 3/6-ல் சேர்கிறது. இச்சாலையினால் பயனடையும் கிராமங்களின் மக்கட்தொகை 1000-க்கும் குறைவாக உள்ளதால் அரசு கொள்கைப்படி கிராமச்சாலைகள் திட்டத்திலோ அல்லது சிறப்பு உறுப்பு திட்டத்திலோ மேற்கொள்ள இயலாது.

64—

பண்ணை விளாகம் வெட்டாறு குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா எண் **19147**—*டாக்டர் க. கோபால் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், நீலகுடி-பண்ணைவிளாகம் வெட்டாறு குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை. மேலும் நீலக்குடி கிராமத்தில் இருந்து 2.80 கி.மீ. தூரத்தில் ஆற்றின் கீழ்ப்படுகையில் பேருந்து செல்லும் பாலம் ஒன்று மயிலாடுதுறை—முத்துப்பேட்டை சாலையில் கி.மீ. 35/2-ல் அமைந்துள்ளதால் குறுகிய இடைவெளி தூரத்தில் மேற்குறிப்பிட்டுள்ள பாலம் அமைப்பது அவசியமில்லாத ஒன்றாகும்.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

65—

விக்கிரமங்கலத்தில் மின் அலுவலகம் அமைத்தல்.

வினா எண் **19562**—*திருமதி இரா. பாண்டியம்மாள் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்தில் மின் அலுவலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதிய வேலைபளு ஒப்பந்தத்தின்படி, விக்கிரமங்கலத்தில் ஒரு பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை.

66—

மதுக்கூர் ஒன்றிய பயணியர் விடுதியைப் புதுப்பித்தல்.

வினா எண்—**19637**—திரு. கி. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுக்கூர் ஒன்றிய பயணியர் விடுதியைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு இல்லை.

67—

திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியில் மாற்றுவழிப்பாதை அமைத்தல்.

வினா எண் **20291**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியின் சாலை, போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் மாற்று வழிப்பாதை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளாதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

68—

திருவையாறு ஒன்றியத்தில் சாலைகளை தார்சாலைகளாக மாற்றுதல்.

வினா எண் **20295**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு ஒன்றியம், பொமூர் ஊராட்சி, ஆணைக்குடி, ஏக்கக்குடி, கொள்ளிடக்கரை, வில்லியனூர், விளாங்குடி வழியாக திருவையாறு—திருமானூர் சாலையில் இணையும் சாலையை விரிவுபடுத்தி தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

69—

விளவங்கோடு தொகுதியில் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் **20437**—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, விளாத்துறை பேரூராட்சியில் வீடுகளுக்கு மீட்டருக்கு கட்டணம் செலுத்தியும், மீட்டர் கிடைக்காததால் மின் இணைப்பு பெறமுடியாத நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு தேவையான நடவடிக்க எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): விளவங்கோடு தொகுதி விளாத்துறை பேரூராட்சியில் 17 விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்புப் பெற மீட்டருக்கான

1994 நவம்பர் 3]

காப்புத் தொகை செலுத்தியுள்ளனர். மீட்டர் கைவசம் இல்லாததால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

70—

தேவூர்—ஏரிவளவு பாலத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் **20499**—*டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்ககிரி ஒன்றியம், தேவூர்—ஏரிவளவு அருகிலுள்ள பாலத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்ககிரி ஒன்றியம், தேவூர்—ஏரிவளவு அருகில் தற்போதுள்ள குழாய் பாலம் நன்கு செயல்படுவதால் திரும்பக் கட்டவேண்டிய அவசியமில்லை.

71—

கொண்ட சமுத்திரம் குடிசைகளுக்கு இலவசமாக ஒரு விளக்கு வழங்கும் திட்டம்.

வினா எண் **20575**—*திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காட்டுமன்னார்கோயில் தொகுதி, கொண்டசமுத்திரம் கிராம குடிசைகளுக்கு இலவசமாக ஒரு விளக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

காட்டுமன்னார் கோயில் தொகுதி, கொண்ட சமுத்திரம் கிராமத்தில் 25 குடிசைகளுக்கும், காலனியில் 95 குடிசைகளுக்கும் சேர்த்து மொத்தம்

இதுவரை 120 குடிசைகளுக்கு இலவசமாக ஒரு குடிசை 'ஒரு விளக்கு' வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கப்பட்டு உள்ளது. மேலும் அப்பகுதி காலனியில் இருந்து 74 குடிசைகளுக்கு இணைப்பு வழங்க கோரி விண்ணப்பங்கள் வந்துள்ளன. இவ்விண்ணப்பங்கள் வரும் ஆண்டு இலக்கீட்டிற்கு ஏற்ப, பதிவு வரிசை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும்.

72—

கீழக்கலங்கலில் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் **20727**—*திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கீழக்கலங்கல் கிராமம், 5–வது வார்டு வடக்கு கடைசி தெருவிற்கு புதிய தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கீழக்கலங்கல் கிராமம், 5—வது வார்டு வடக்கு கடைசி தெரு உள்பட்ட பகுதிகளில், மொத்தம் ஐந்து புதிய தெரு விளக்குகள் அமைத்து 22—10—1993 முதல் செயல்பட துவங்கி உள்ளன.

73—

பரங்குன்றாபுரம் காமராஜ் நகரில் தெருவிளக்குகள் அமைத்தல்.

வினா எண் **20731**—*திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் பரங்குன்றாபுரம், காமராஜ் நகர், வடக்குத்தி அம்மன் கோயில் பக்கம் புதிய தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் பரங்குன்றாபுரம், காமராஜ் நகர், வடக்குத்தி அம்மன் கோயில் பக்கத்திற்கு புதிய தெருவிளக்குகள் அமைத்து கொடுக்கக் கோரி, தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

74—

புதுநகருக்கு தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் **20760**—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி மெயின் ரோடு புது நகருக்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பின்னவாசல் ஊராட்சி மெயின்ரோடு புதுநகருக்கு 33 தெருவிளக்கு அமைத்துக் கொடுக்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. ஆனால் இதற்கான காப்புத் தொகை பேராவூரணி ஒன்றிய ஆணையர் இது வரை செலுத்தவில்லை. காப்புத் தொகை செலுத்தப்பட்டவுடன் இந்த விண்ணப்பம், பதிவு வரிசை அடிப்படையில் வரும் ஆண்டுகளில் இலக்கீட்டிற்கேற்ப எடுத்துக் கொள்ளப்படும்.

75—

கண்ணன்மேடு கிராமத்தில் தெருவிளக்கு அமைத்தல்.

வினா எண் **20778**—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கண்ணன்மேடு கிராமத்தில் தெரு விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கண்ணன்மேடு கிராமத்தில் தெரு விளக்கு அமைத்துத்தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிலுவையில்லை.

76—

பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணிக்கு மின்பாதை அமைத்தல்

வினா எண் **21007**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணிக்குத் தற்சமயம் காரைக்குடி, நாகுடி வழியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருவதில் பாதிப்பு ஏற்பட்டால், தொடர்ந்து மின்சாரம் கிடைக்க மாற்று ஏற்பாடாகப் பட்டுக்கோட்டையிலிருந்து மின்சாரம் பேராவூரணிக்கு பெற மற்றொரு மின்பாதை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பேராவூரணியில் உள்ள துணை மின் நிலையத்திற்குத் தற்சமயம் காரைக்குடியிலிருந்து நாகுடி வழியாக 66 கி.வோ. மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இம் மின் வழங்கலில் பாதிப்பு ஏற்படும் காலங்களில் தொடர்ந்து மின்சாரம் கிடைக்க மாற்று ஏற்பாடாக தஞ்சாவூரில் உள்ள துணை மின் நிலையத்திலிருந்து பட்டுக்கோட்டை வழியாக ஏற்கனவே உள்ள மின்பாதை மூலம் பேராவூரணிக்கு மின்சாரம் வழங்க இயலும். எனவே, பட்டுகோட்டையிலிருந்து பேராவூணிக்கு புதிய மின்பாதை நிறுவும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

77—

செம்மநாயக்கன் பாளையத்தில் தெருவிளக்கு ஏற்படுத்துதல்.

வினா எண் **21524**—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசித்தொகுதி, அன்னூர் ஒன்றியம், செம்மநாயக்கன் பாளையத்தில் புதியதாய் தெருவிளக்கு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ); அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், செம்மநாயக்கன் பாளையத்தில் புதிதாக இரண்டு தெரு விளக்குகள் அமைக்கக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பம், 1994—95 ஆம் ஆண்டில் இலக்கீட்டிற்கு ஏற்ப, எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

78—

மயிலாடுதுறையில் சாலையைச் செப்பனிடுதல்.

வினா எண் **21604**—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் – காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை நகரத்தில் ரயில் நிலையங்களிலிருந்த பேருந்து நிலையம் வரை செல்லும் சாலையைச் செப்பனிட்டு புதுப்பித்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை நகரத்தில் ரயில் நிலையத்திலிருந்து பேருந்து நிலையம் வரை செல்லும்

சாலைப் பகுதியிலிருந்து கும்பகோணம் சீர்காழி சாலை (Major District Road) கி.மீ. 33/2 முதல் 35/8 வரையுள்ள பகுதியாகும். இச்சாலையில் மிகவும் மோசமான பகுதிகளாக கி.மீ. 34/6, 8, 10, 35/2, 36/2 ஆகிய பகுதிகளை ரூ. 3.00 லட்சம் மதிப்பீட்டிலும், கி.மீ. 35/4, 6, 35/8, 10 ஆகிய பகுதிகளை முறையே ரூ. 3.75 லட்சம் மற்றும் ரூ. 2.65 லட்சம் மதிப்பீட்டிலும் பழுதுற்ற சாலைகள் சீர் செய்யும் திட்டத்தில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன் இப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

79—

குடவாசல் ஒன்றியத்தில் மின் அலுவலர் வசூல் செய்து செல்லும் வசதியை ஏற்படுத்துதல்.

வினா எண் 21616—*திரு. எஸ். ஆசைமணி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், வயலூர், கலப்பாலகரம், பரவாக்கரை, பூங்குடி ஆகிய கிராம மக்கள் வசதிக்காக வடமட்டத்தில் மின் அலுவலர் வந்து வசூல் செய்து செல்லும் வசதியை ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம் வயலூரில் 51 மின் இணைப்புகளும், கலப்பாலகரத்தில் 25 மின் இணைப்புகளும், பரவாக்கரையில் 125 மின் இணைப்புகளும் பூங்குடியில் 15 மின் இணைப்புகளும் ஆக மொத்தம் 216 மின் இணைப்புகள் மட்டுமே உள்ளன.

குறைந்த எண்ணிக்கையில் மின் இணைப்புகள் இருப்பதாலும், அதம்பார் பிரிவு அலுவலகத்திலிருந்து 12 கல் தொலைவில் உள்ள வடமட்டம் பகுதிக்கு நேரடியாகப் பேருந்து போக்குவரத்து இல்லாததாலும், வாரியத்தில் காலவரையறை செய்யப்பட்ட குறித்த காலத்தில் சென்று வசூல் பணி செய்து திரும்பி தலைமையகம் வர முடியாது. வாரிய வசூல் பணத்தைப் பாதுகாப்புடன் கொண்டுவர முடியாத நிலையில் மேற்படி இடம் அமைந்துள்ளதால், வடமட்டம் கிராமத்தில் வசூல் முகாம் அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

நீடாமங்கலத்தில் புறவழிச்சாலை அமைத்தல்.

வினா எண் **22423**—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலத்தில் ஒரு புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

81—

செங்கமங்கலம் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் **23138**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் செங்கமங்கலம் கீழ்க்காடிலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

82—

பேராவூரணி துணைமின் நிலையத்தில் தொலைத்தொடர்பு சாதனங்கள் ஏற்படுத்துதல்.

வினா எண் **23142**—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

பேராவூரணி துணைமின் நிலையத்தில் மின்சார வாரிய தொலைத் தொடர்பு சாதனங்கள் ஏற்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பேராவூரணி பட்டுக்கோட்டை மற்றும் நாகுடி துணை மின் நிலையங்களை இணைத்து தொலைத் தொடர்பு சாதனங்கள் அமைப்பதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றது.

83—

சங்ககிரி வட்டத்தில் சாலை வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் **23546**—*டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம் கத்தேரி கிராமம், சாமியம்பாளையம் சில்லாங்காடு, நலக்காடு, பள்ளக்காடு சடையம்பாளையம் வரை சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

எட்டாவது ஐந்தாவது திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் ஊராட்சி/ ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் பணிகளுக்கு வழிவகை செய்யப்படவில்லை எனவே, சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம், கத்தேரி கிராமம், சாமியம்பாளையம், சின்னங்காடு, நவங்காடு, பள்ளக்காடு, சடையப்பாளையம் வரையுள்ள ஊராட்சி சாலைப் பணியை நெடுஞ்சாலைத் துறை பகுதி 2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது.

1994 நவம்பர் 3]

84—

சேலம் மாவட்டத்தில் சாலைகளை மேம்படுத்துதல்.

வினா எண் **23547**—*டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கத்தேரி கிராமம் சேலம் மெயின்ரோடு—கள்ளிப்பாளையம் அருந்ததியர் தெரு, கள்ளிப் பாளையம், குட்டியாக்கவுண்டன் புதூர், மஞ்சிபாளையம் வரை சாலை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கத்தேரியர் கிராமம் சேலம் மெயின்ரோடு கள்ளிபாளையம் அருந்ததி தெரு கள்ளிப்பாளையம், குட்டியாக்கவுண்டன் புதூர், மஞ்சிபாளையம் வரை சாலை வசதி செய்து கொடுக்கும் பணி அரசு அங்கீகரிக்கும் திட்டப்பணிகள் எதிலும் இடம் பெறவில்லை. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்ய வழிவகை செய்யப்படவில்லை. எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இயலாது.

85—

நாட்டாற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண் **23646**—*டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை—முத்துப்பேட்டை சாலையிலுள்ள, கொல்லுமாங்குடியிலுள்ள, நாட்டாற்றின் பாலத்தை இடித்து விட்டு, புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

86—

வடகரை ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின்விளக்கு அமைத்தல்.

வினா எண் **23757**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கோடந்தூர் கிராமம், வடகரையிலுள்ள ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின் விளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

க. பரமத்தி ஊராட்சி கோடந்தூர் கிராமம் வடகரையிலுள்ள ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்பு கோரி இதுவரையில் விண்ணப்பம் மின்சார அலுவலகத்தில் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டபின் இத்திட்டத்திற்கான ஆண்டு இலக்கு மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

87—

திருநரையூர் மக்களுக்கு மின்வசதி அளித்தல்.

வினா எண் **26085**—திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், திருநரையூர் பகுதி மக்களுக்கு மின்வசதி அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அளிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், திருநரையூர் பகுதி மக்களுக்கு அதே பகுதியில் மின்மாற்றிகள் மூலம் மின்வசதி அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

88—

கருப்புக்கல் ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

வினா எண் **1002**—*திரு. ஆர். பி. பரமசிவம்:* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

"கருப்புத் தங்கம்" என்று போற்றப்படும் கருப்புக்கல் (கனிம சுரங்க வேலை) ஏற்றுமதி தொழில் பாதிக்கப்பட்டிருப்பதை அரசு நிவர்த்தி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் கருப்பு கற்கள் (கிராணைட்) ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, 1959 தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகளில் சில திருத்தங்கள் வெளியிடப்பட்டன. இந்த ஆணையின் மூலம் கருப்பு கல்லிற்கு குத்தகை வழங்க, மெருகேற்றும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது. எனவே, பட்டா நிலங்களின் சொந்தக்காரர்களின் விண்ணப்பங்கள் அரசால் பரிசீலிக்கப்பட்டு குத்தகைகள் வழங்கப்பட்டு வருவதால், ஏற்றுமதி தொழில் பாதிக்கப்படுவது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

89—

கருப்புக்கல் ஏற்றுமதியை அரசே ஏற்று நடத்துதல்.

வினா எண் **3747**—*திரு. செ. ஆறுமுகம்:* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில் மிக அதிகமாக கருப்புக்கல் வெட்டி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனங்களை தடை செய்து அரசே ஏற்று நடத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) வானூர் தொகுதி, வானூர் வட்டம் உட்பட, தமிழ் நாட்டில் கருப்புக்கல் வெட்டி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனங்களைத் தடைசெய்து அரசே ஏற்று நடத்த அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

90—

அரசு அலுவலகங்களில் முதல்வர் படத்தை வைப்பதற்கு அனுமதி.

வினா எண் **21710**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள எல்லாத் துறை அலுவலகங்களிலும் இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா படம் வைக்குமாறு ஆணை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் அரசு பணத்தை செலவிடாமல் முன்னாள் மற்றும் இந்நாள் முதலமைச்சர்களின் படங்களை வைத்துக் கொள்ளலாம் என அரசு ஆணை எண் 1681, பொதுத்துறை, நாள் 21—7—1970 மற்றும் அரசுக் கடிதம் எண் 15532/பொது—1/நாள் 17—5—1989—இல் ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

91—

மறைந்த திரு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுதல்.

வினா எண் **35189**—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

சிறுவாணி நீரை கோவைக்கு கொண்டு வர மூல காரணமாக இருந்து மறைந்த சி.எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **23712**—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்திற்கான கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

93—

அன்னூர் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு கோயில் கட்டுதல்.

வினா எண் **4502**—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவநாசி, அன்னூர் ஒன்றியத்தில் ஆதிதிராவிட மக்களுக்கும் கோயில் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதிதாக கோயில் கட்டித்தர இந்து சமய அறநிலைய சட்ட விதிகளில் வழி வகையில்லை.

94—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் திருக்கோயில்களில் பக்தர்களுக்கு சுகாதார வசதி அளித்தல்.

வினா எண் **14576**—திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் திருக்கோயிலுக்கு முக்கியமான விசேஷ காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சுகாதார செலவு வருடம் ஒன்றுக்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சுகாதார செலவு கடந்த மூன்று வருடங்களாக கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது:—

வருடம். (1)	மொத்த செலவினம். (2)
1989—90	22,017.00
1990—91	18,062.00
1991—92	32,016.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

95—

நின்றநாராயணப்பெருமாள் கோவில் தேரைப் பழுது பார்த்தல்.

வினா எண் **21493**—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தலங்களில் உள்ள 'நின்ற நாராயணப்பெருமாள் கோவில்' தேர் பழுது அடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தேரின் மரச்சக்கரம் மற்றும் தேரின் மற்ற பாகங்கள் சீர் செய்ய முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளதால் புதிதாகத் தேர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

96—

அனந்தீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டுதல்.

வினா எண் **21805**—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில், உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோயில், உடையார்குடி அருள்மிகு அனந்தீஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

97—

வள்ளலார் பிறந்த நாளை விழாவாகக் கொண்டாடுதல்.

வினா எண் **26088**—*திரு. கு. சிவசுப்பிரமணியன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வள்ளலார் பிறந்த அக்டோபர் 5—ம் தேதியினை விழாவாகக் கொண்டாட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) வள்ளலார் பிறந்த அக்டோபர் 5—ம் தேதியினை அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

(ஆ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணைக்குட்பட்ட வடலூர், திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் சிதம்பரம் வட்டம், மருதூர் கிராமத்தில் தந்தை ராமையாவிற்கும், தாய் சின்னம்மைக்கும் அருட்குழந்தையாக 5—10—1823—ல் பிறந்த வள்ளலார் அவதாரத் திருவிழாவை ஒவ்வொரு வருடமும் பிரதி அக்டோபர் 5—ம் தேதி வடலூர் திருவருட் பிரகாச வள்ளலார் தெய்வநிலையம் சார்பில் வடலூரிலும் மற்றும் மருதூரிலும் அரசு விழாவாக வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

98—

வெங்கம்பூர் வரதராஜப்பெருமாள் கோவில் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

வினா எண் **26799**—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

வெங்கம்பூர் வரதராஜப்பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுவதும் தனியார் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மதில் சுவர் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை.---

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

வெங்கம்பூர் வரதராஜப்பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள காலியிடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஏதுவாக மதில்சுவர் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பொறியாளர்கள் மூலமாக வரை படங்கள், மதிப்பீடுகள் தயாரித்து, சட்ட விதிகளின்படி உரிய அனுமதி அளிக்கப்பட்டதும் மதில்சுவர் கட்ட ஆவன செய்யப்படும்.

99—

காட்டம்மன் திருக்கோவிலைச் செப்பனிடுதல்.

வினா எண் **33055**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாராபுரம் வட்டம், மணக்கடவு அருள்மிகு காட்டம்மன் திருக்கோவிலைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், தாராபுரம் வட்டம், மணக்கடவு அருள்மிகு காட்டம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இல்லாததால் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்திட நிதி வழங்க சட்ட விதிகளில் வழிவகைகள் இல்லை.

100—

சின்னதாராபுரத்தில் சுற்றுச்சுவர் கட்டுதல்.

வினா எண் **24248**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், சின்னதாராபுரம் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் கபரஸ்தான் சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

இதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை. எனினும் திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் உள்ள சின்னதாராபுரம் ஜும்மா பள்ளிவாசல் மற்றும் கபரஸ்தான் இடுகாட்டு மைதானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்காக ரூ. 15,000 மானியம் தமிழ்நாடு வக்ப் வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

பத்தாவது பட்டியல்.

1—

தர்மபுரியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் **24795**—*திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி நகரில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 1–க்கு சொந்த கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தருமபுரி மாவட்டம், தருமபுரியில் உள்ள நீதித் துறை நடுவர் நீதிமன்றம்—1–க்கு கட்டிடம் கட்ட உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில் 1994-95—1996-97–ம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட உள்ள திட்ட இனங்களில் தருமபுரியில் உள்ள நீதித் துறை நடுவர் நீதிமன்றத்திற்கு கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு (ரூ. 69 லட்ச மதிப்பீட்டில்) சேர்க்கப்பட்டு மைய அரசின் இசைவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் நிதி உதவிக்குத் தக்கவாறு இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

2—

கொடுமுடியில் தினசரி சந்தை அமைத்தல்.

வினா எண் **19195**—*திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொடுமுடியில் சி.எஸ்.ஐ. பள்ளியின் பின்புறம் தனியார் ஆக்கிரமித்துள்ள 25 செண்ட் ஊர் நத்தம் புறம்போக்கு நிலத்தைக் கையகப்படுத்தி, பேரூராட்சி தினசரி சந்தைக்கு அந்த இடத்தை ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், கொடுமுடி பேரூராட்சிக்கு உட்பட்ட சி.எஸ்.ஐ. பள்ளியின் பின்புறம் உள்ள 25 சென்ட் ஊர் நத்தம் புறம்போக்கில் (மறு அளவை எண் 302) தென்னிந்திய திருச்சபையினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு 30 தென்னங்கன்றுகள் வைத்துள்ளனர். அவற்றில் 15 தென்னை மரங்கள் பலன்தரும் நிலையில் உள்ளன.

மேற்படி இடம் சம்பந்தமாக ஈரோடு முன்சிப் கோர்ட்டில் வழக்கு நடைபெற்று வருகிறது (வழக்கு எண் 413/90). தற்போது கொடுமுடி பேரூராட்சியில் தினசரி காய்கறி விற்பனை மகுடேஸ்வரன் கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி ஆக்கிரமிப்பு செய்துள்ள புறம்போக்கு நிலம், வருவாய்த்துறையைச் சார்ந்ததாகும். மேலும், கொடுமுடி பேரூராட்சி சந்தைக்கு நிலம் கேட்டு அரசுக்கு இதுவரை கருத்துரு அனுப்பவில்லை.

3—

பட்டா புத்தகங்கள் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை.

வினா எண் 19290—*திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராம நிர்வாக அலுவலகங்களில் பட்டா புத்தகங்கள் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

தற்போது நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டம் (1) வடாற்காடு—அம்பேத்கார், (2) தஞ்சாவூர், (3) திருச்சி, (4) கோயம்புத்தூர், (5) மதுரை மற்றும் (6) சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் அடங்கிய 50 வட்டங்களில் மட்டும்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்படும்போது புதிய வடிவிலான நில உரிமைப் பதிவேடுகள் போதிய அளவு இருப்பில் வைத்துக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

4—

குடிமனைப் பட்டா வழங்குதல்.

வினா எண் **21017**—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தமிழகம் முழுவதும் குடிமனை சொந்தமாக இல்லாதவர்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

ஆண்டு வருமானம் ரூ. 9,000—க்குக் குறைவாக உள்ளவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கத் திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆண்டு வருமானம் ரூ. 9,000—க்கு மேல் உள்ளவர்களுக்கு ஒரு மடங்கோ அல்லது அதற்கு மேலோ நிலக்கிரயம் வசூலித்துக் கொண்டு, வீட்டுமனை வழங்கப்படுகிறது. மேலும், குடியிருப்பதற்கான ஆக்ரமணங்கள் தகுதியின் அடிப்படையில் முறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

5—

கோட்டூரில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்குதல்.

வினா எண் **24325**—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அருகில் கோட்டூரில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அருகில் கோட்டூரில் தற்காலிக வாடகை கட்டிடத்தில் நெல் கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

கோட்டூரில் நிரந்தர நேரடி கொள்முதல் நிலையம் கட்ட எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1992—93 முதல் 1996—97 முடிய) செயற் குறிப்பு ஏதும் இல்லை.

6—

திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனைக்கு மருத்துவ வசதிகளை அதிகரித்தல்.

வினா எண் **1949**—*திருமதி பி. நிர்மலா:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் குளுகோஸ் திரவப்புட்டி, பாம்பு, நாய்கடிக்கு போடப்படும் மருந்து ஆகியவை இருப்பில் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை உடனுக்குடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவ மனையில் குளுகோஸ் திரவப்புட்டி மற்றும் நாய்கடிக்கு போடப்படும் மருந்து தேவையான அளவுக்கு உள்ளது. மேலும் பாம்பு கடிக்கு போடப்படும் ஊசி மருந்து தேவையான அளவுக்கு பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறு, அம் மாவட்ட மருத்துவப்பணி இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வழங்குதல்.

வினா எண் **23657**—*திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு புதிய ஆம்புலன்ஸ் வாங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு 1992 ஆம் ஆண்டிலேயே ஒரு ஆம்புலன்ஸ் வாகனம் வழங்கப்பட்டு; அது தற்போது அம்மருத்துவமனையில் இயங்கி வருகிறது. எனவே, மேலும் ஒரு புதிய ஆம்புலன்ஸ் வாகனம் வாங்கும் நிலை ஏற்படவில்லை.

1994 நவம்பர் 3]

8—

விவசாயப் பொருட்களை எடுத்துச் செல்ல டாப் வசதியுடன் பேருந்து இயக்குதல்.

வினா எண் **9449**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கிராமங்களில் சென்று வருகின்ற பேருந்துகளில் விவசாயிகள் விவசாயப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு வசதியாக 'டாப்' வைத்த பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கிராமப் புறங்களுக்குச் செல்லும் அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்துகளும் தற்போது விவசாயிகளின் விவசாய பொருட்களை ஏற்றிச் செல்லுவதற்கு வசதியாக டாப் வசதியுடன் இயங்கி வருகின்றன.

9—

சின்னரெட்டவயல் வழியாக செல்லும் சோழன் நகரப்பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் **12416**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னரெட்டவயல் வழியாக செல்லும் சோழன் நகரப் பேருந்து தடம் எண் 3—ஐ, 1992–93—ல் மீண்டும் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேராவூரணி கிளை, நகரப் பேருந்து தடம் எண் 3, நான்கு நடைகள் பேராவூரணி—ரெட்டவயல் (வழி) சின்ன ரெட்டவயல், நெல்லியடிக்காடு தடத்தில் இயங்கி வந்தது.

இத்தடத்தில் நெல்லியடிக்காடு—ரெட்டவயல் வரை நான்கு கி.மீ. தூரத்திற்கு சாலை பழுதடைந்துவிட்டமையால், பேருந்தினை நெல்லியடிக்காடு வரை மட்டுமே இயக்க முடிகிறது. சாலை சீர் செய்யப்பட்டதும் ரெட்டவயல் வரை பேருந்து இயக்கப்படும்.

10—

பேராவூரணி—தூத்துக்குடி பேருந்து இயக்குதல்.

வினா எண் **12427**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து தூத்துக்குடிக்கு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து அறந்தாங்கி, காரைக்குடி, ராமநாதபுரம் வழியாக தூத்துக்குடிக்கு செல்லும் தடத்தின் நீளம் 301 கி.மீ. ஆகும். இத்தடத்தில் நேரடையாக பேருந்து இயக்கும்படி பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்படவில்லை. மேலும் பேராவூரணியில் இருந்து நேரடியாக தூத்துக்குடிக்கு வியாபார சம்பந்தமாகவோ அல்லது புனித ஸ்தலமாகவோ பயணம் மேற்கொள்ளும் பயணிகள் விகிதாசாரம் மிகவும் குறைவாகத்தான் இருக்கும். எனவே இத்தடத்தில் பேருந்துகளை இயக்குவது பயணிகளின் தேவை அடிப்படையில் அமையாது எனக் கருதலாம்.

11—

சுப்பிரமணியபுரம் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் **13625**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து கீரமங்கலம் வழியாக சுப்பிரமணியபுரம் வந்து கொண்டிருந்த பேருந்தை மீண்டும் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்து கீரமங்கலம் வழியாக சுப்பிரமணியபுரத்திற்கு இதுவரை சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து இயக்கப்படவில்லை. எனவே, மீண்டும் இயக்குவது என்பது எழவில்லை.

12—

மருங்கூர் கிராமத்திற்கு நகரப்பேருந்து இயக்குதல்.

வினா எண் **14447**—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, மருங்கூர் கிராமத்திற்கு நன்னிலம் மருங்கூர் (ஆண்டிபந்தல், திருப்பயத்தன்குடி) வழியாக நகரப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நன்னிலம்—மருங்கூர் வழித்தடத்தின் நீளம் 21 கி.மீ. ஆகும். இத்தடத்தில் ஆண்டிப்பந்தலில் இருந்து மருங்கூர் வரை 16 கி.மீ. நீள சாலை மிகவும் சேதம் அடைந்து உள்ளது. மேலும் திருவாரூரில் இருந்து பாக்கம் கோட்டூர் வழியாக திருமருகலுக்கு நகரத் தடம் எண் 22—ன் மூலம் 12 நடைகளும், திருவாரூரில் இருந்து மருங்கூருக்கு நகரத் தடம் எண் 13—ன் மூலம் 10 நடைகளும், நாகையில் இருந்து மருங்கூருக்கு நகரத்தடம் எண் 11—ன் மூலம் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானது ஆகும் எனக் கருதலாம். வேறு திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

13—

கீழப்பாவூருக்கு கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் **14602**—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தென்காசியிலிருந்து திருநெல்வேலிக்கு செல்லும் பேருந்துகளையும், திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்கு வரும் பேருந்துகளையும் ஆலங்குளம் தொகுதி கீழப்பாவூருக்கு வந்து செல்லுமாறு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கீழப்பாவூர் கிராமம், திருநெல்வேலி—தென்காசி பிரதான சாலையில் அமைந்துள்ள பாவூர்சத்திரத்திலிருந்து பிரிந்து சுரண்டை செல்லும் சாலையில் 2.8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அங்கிருந்து இயக்கப்பட்டு வரும் நகர, புறநகர் பேருந்துகளைப் பயன்படுத்தி பாவூர்சத்திரம் வந்து விட்டால் திருநெல்வேலி செல்வதற்கு ஏராளமான பேருந்து வசதிகள் உள்ளன. திருநெல்வேலி—தென்காசி நேரடி வழித்தடத்தில் இயக்கப்பட்டு வரும் பேருந்துகளை கீழப்பாவூர் வழியாக திருப்பி இயக்கினால் வழித்தடத்தின் தூரம் அதிகரிப்பதுடன், கூடுதல் பயணக்கட்டணம்,கூடுதல் பயணநேரம் போன்றன ஏற்படுமாதலால் பயணிகள் இதில் பயணிப்பது குறைவாகும். மேலும் பேருந்தில் வருமானத்திலும் இழப்பு ஏற்படும். எனவே திருநெல்வேலி—தென்காசி பேருந்துகளை கீழப்பாவூர் வழியாக இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

14—

மேட்டுப் பிராஞ்சேரி கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் **15099**—*திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், மேட்டுப் பிராஞ்சேரி கிராமத்திற்கு பேருந்து வசதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மானூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த மேட்டுப் பிராஞ்சேரி வழியாக கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று திருநெல்வேலி சந்திப்பிலிருந்து வடக்கு செழியநல்லூர் வரை தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இதே வழித்தடத்தில் தனியார் பேருந்து ஒன்றும் தினசரி 3 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இப்பேருந்து வசதிகளையே போதுமானதாக கருதலாம்.

15—

பரங்குன்றாபுரம் வரை இயக்கிய 6-பி நகரப்பேருந்தை மீண்டும் இயக்குதல்.

*வினா எண் **15133**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், பரங்குன்றாபுரம் வரை இயக்கிய 6-பி நகரப்பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

பரங்குன்றாபுரத்திற்கு 2 தடவைகள் இயக்கப்பட்டு வந்த கட்டபொம்மன் போக்குவரத்து கழக நகர வழித்தடம் எண் 6-பி, பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாக இருந்த காரணத்தினால் இச்சுற்றுக்கள் நிறுத்தப்பட்டது. இதனால் முழுமையாக பேருந்து வசதி இழந்த கிராமம் ஏதும் இந்த வழித்தடத்தில் இல்லை. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப பரங்குன்றாபுரம் கிராமத்திற்கு நாளொன்றுக்கு 5 பேருந்துகள் மூலம் 52 சுற்றுகள் தற்போது பேருந்து வசதி உள்ளது. எனவே தடம் எண் 6-பி பேருந்தை மீண்டும் இயக்க உடனடி அவசியம் இல்லை என கருதப்படுகிறது.

[1994 நவம்பர் 3

16—

பல வழித்தடப் பேருந்துகளை ஒரே வழித்தட பேருந்துகளாக மாற்றுதல்.

வினா எண் *15395*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகக் கிளையில் பல வழித்தடப் பேருந்துகள் எத்தனை? இதனை ஒரே வழித்தட பேருந்துகளாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பரமக்குடி கிளையில் பல வழித்தட நகரப் பேருந்துகளின் எண்ணிக்கை 21. 38 வழித் தடங்களில் இயக்கப்படும் இப்பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாசாரம் 58.08 விழுக்காடுகள் தான் உள்ளது. மேற்கண்ட ஒவ்வொரு வழித்தடத்திற்கும் தனித்தனி பேருந்தாக இயக்கும் அளவுக்கு பயணிகளின் பயண விகிதாச்சாரம் இல்லாததால் பல வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும், இப்பேருந்துகளை ஒரு வழித்தட பேருந்துகளாக இயக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

17—

பெரம்பூர், மாதவரம் பணிமனை மற்றும் பெரியார் நகரிலிருந்து இயக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குதல்.

வினா எண் *16311*—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள பெரம்பூர் பணிமனை மற்றும் மாதவரம் பணிமனை மற்றும் சென்னை பெரியார் நகரிலிருந்து இயக்கப்பட்ட பேருந்துகள் 1991-92 பிப்ரவரி முடிய இயக்காமல் நிறுத்தப்பட்டு உள்ளனவா?

1994 நவம்பர் 3]

(ஆ) அவைகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

18—

பூம்புகார்—சென்னைக்குப் பேருந்து வசதி

வினா எண் 16356—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் இருந்து திருவெண்காடு, திருவாலி, சீர்காழி வழியாக சென்னைக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பூம்புகாரில் இருந்து மயிலாடுதுறைக்கும், சீர்காழிக்கும் போதிய அளவு நகர் மற்றும் புறநகர்ப் பேருந்து வசதி உள்ளது. தற்போது சோழன் போக்குவரத்துக் கழகம் மயிலாடுதுறையில் இருந்து சீர்காழி வழியே சென்னைக்கு ஒரு பேருந்தும், திருத்துறைப்பூண்டியிலிருந்து மயிலாடுதுறை—சீர்காழி வழியே சென்னைக்கு மற்றொரு கோடைகால சிறப்புப் பேருந்தும் இயக்குகின்றது, மேலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மயிலாடுதுறை சென்னைக்கு 12 நடைகள் இயக்குகின்றது. பூம்புகாரிலிருந்து சென்னைக்கு செல்லும் பயணிகள் இவ்விரு பேருந்துகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே பூம்புகாரில் இருந்து சென்னைக்கு (வழி) திருவெங்காடு, திருவாலி, சீர்காழி தடத்தில் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

19—

இராமநாதபுரம்—பாண்டிக்கண்மாய் பேருந்து இயக்குதல்

வினா எண் 16624—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி இராமநாதபுரம்—பாண்டிக் கண்மாய் பேருந்து 9-சி நிறுத்தப்பட்டு இயக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போது இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம்-பாண்டிக்கண்மாய் தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்ட நகரப் பேருந்து 9-சி டீசல் தட்டுப்பாடு காரணமாக சிறிது காலம் நிறுத்தப்பட்டது. மீண்டும் 20-2-1992 முதல் 2 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இரண்டு நடைகள் குறைக்கப்பட்டதை ஈடுசெய்வதற்காக 2-4-1992 முதல் மற்றொரு நகரப் பேருந்து மூலமாக இராமநாதபுரம்-பாண்டிக்கண்மாய் வழித்தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே ஏற்கனவே இருந்த 4 நடைகள் தற்சமயம் 6 நடைகளாக இயங்கி மேலும் கூடுதலாக 2 நடைகள் இயக்கப்படுகின்றன.

20—

தஞ்சை—புதுக்கோட்டைக்கு புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்குதல்.

வினா எண் 16733—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலிருந்து கந்தர்வகோட்டை, காட்டுநாவல், கணபதிபுரம் தொண்டமான் ஊரணி, மீனப்பட்டி, ஊதாம்பூர், ஆலங்குடி வழியாக புதுக்கோட்டைக்கு பேருந்து வசதி செய்து தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பெரிச்சிவன்னியன் விடுதிக்கு அருகில் பேருந்து இயக்கிட இயலாத வகையில் பாலம் இல்லாத ஒரு காட்டு ஓடை உள்ளது. கோரிக்கை தடத்தில் கணபதிபுரத்திற்கு ராஜபகதூர் விளக்கிற்கும் இடையே ஜீப் கூட செல்லமுடியாத அளவில் பாலம் இல்லாத ஒரு காட்டு ஓடை உள்ளது. கந்தர்வக் கோட்டையிலிருந்து கணபதிபுரம் வரையிலான சாலையில் 1.0 கி.மீ. தூரம் பேருந்து இயக்கிட இயலாத அளவில் சாலை பழுதடைந்தும் குழிகளும் மேடு பள்ளங்களாகவும் உள்ளது. தெற்கு தொண்டைமானுரணி விலக்கின் சாலையின் அருகில் எவ்வித தடுப்பும் இல்லாத இரண்டு விவசாய கிணறுகள் உள்ளன. தெற்கு தொண்டைமானுரணியிலிருந்து மீனம்பட்டி வரையில் பேருந்து இயக்குமளவில் சாலை இல்லாமல் வண்டிப்பாதையாக குழிகள் நிறைந்து உள்ளன. எனவே கேட்கப்பட்டிருக்கும் வழித்தடத்தில் பேருந்து இயக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

21—

பரமக்குடி—செய்யாலூருக்குப் பேருந்து விடுதல்

வினா எண் ***17206—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடியிலிருந்து செய்யாலூருக்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செய்யாலூர் கிராமம் இராமநாதபுரம்—பரமக்குடி பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1.6 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்தக் கிராமத்தில் மக்கள் தொகை 775 ஆகும். தற்சமயம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராம மக்கள் தொகை 1,000-க்கு குறைவாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் தற்சமயம் பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

22—

மகாதானபுரத்திலிருந்து மாயவரம் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***17217*****—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மூவலூர் தேரடியிலிருந்து மாயவரம் செல்லும் சோழன் போக்குவரத்துக் கழக நகரப்பேருந்தை மகாதானபுரத்திலிருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை-கும்பகோணம் பிரதான தடத்திலேயே அமைந்துள்ள மகாதானபுரம் வழியே போதிய அளவு புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தற்போது இயக்கப்படுகின்ற நடைகள் விவரம் பின்வருமாறு:

	புறநகர்	நகர்
சோழன், சகோதர போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் பேருந்துகள்	*396* நடைகள்	*166* நடைகள்

என்வே, மூவலூர் தேரடியிலிருந்து மயிலாடுதுறை செல்லும் பேருந்தை மகாதானபுரம் வரை நீட்டிக்க செயற்குறிப்பு எதும் இல்லை.

23—

ஆலங்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்குப் புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***17275*****—திரு. எஸ். சண்முகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு வெட்டன்விடுதி, கருக்காகுருச்சி வழியாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கருக்காகுருச்சி, உப்புவிடுதி அவுட்டரிலிருந்து வடக்கு செருவாவிடுதி, திருச்சிற்றம்பலம் வரையிலான 10.2 கி.மீ. பேருந்து இயங்காத பகுதியாகவும், தார்ச் சாலையாகவும் இடையில் பேருந்து செல்ல இயலாத இரண்டு குறுகலான பாலங்களும் உள்ளன. ஆலங்குடியிலிருந்து வட்டன்விடுதி, வானத்துக்காடு, கருக்காகுருச்சி, வடக்கு செருவாவிடுதி, உப்புவிடுதி, திருச்சிற்றம்பலம் வழியாகப் பட்டுக்கோட்டைக்கு இடையே குறுகிய இரண்டு பாலங்கள் வழியே பஸ்கள் இயங்குவதற்கு தகுதியில்லாமல் இருப்பதால் வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

24—

அஞ்சுகண்டறையிலிருந்து தக்கலைக்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***19308***—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, அஞ்சுகண்டறையில் இருந்து தக்கலைக்கு ஒரு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மார்த்தாண்டத்திலிருந்து அஞ்சுகண்டறைக்கு நாளொன்றுக்கு 6 சுற்றுகள், தடம் எண் 89-எச் நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இயக்கப்பட்டு வருகிறது. மார்த்தாண்டத்திற்கும் தக்கலைக்கும் இடையே நாகர்கோவில்-திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் இயக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அஞ்சுகண்டறையிலிருந்து தக்கலைக்கு நேரடிப் பேருந்து இயக்கும் அவசியம் எழவில்லை.

[1994 நவம்பர் 3

25—

பட்டுக்கோட்டை, மதுக்கூர், அதிராமபட்டினம் ஆகிய பகுதிகளுக்குப் புதுப் பேருந்துகள் விடுதல்.

வினா எண் ***19320***—*திரு. கி. பாலசுப்பிரமணியன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டைக்கும் அதைச் சார்ந்துள்ள மதுக்கூர் ஒன்றியம், அதிராமபட்டினம் ஆகிய மூன்று பகுதிகளுக்கும் தனித்தனியே புதுப் பேருந்துகள் விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டையிலிருந்து மதுக்கூர் தடத்தில் தினசரி 102 நடைகளும், பட்டுக்கோட்டையிலிருந்து அதிராமபட்டினம் தடத்தில் தினசரி 126 நடைகளும் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகள் தற்போது போதுமானதாக உள்ளது.

26—

செங்காநத்தம் கிராமத்திற்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் ***19596***—*திரு. சி. ஞானசேகரன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதியில் செங்காநத்தம் கிராமத்திற்கு விடப்பட்ட பி.ஏ.டி.சி பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செங்காநத்தம் கிராமத்திற்குச் செல்லும் சாலையில் பல இடங்கள் பழுதடைந்திருந்தமையால் பேருந்து இயக்க முடியாமல் நிறுத்தப்பட்டிருந்தது.

1994 நவம்பர் 3]

சாலை சரிசெய்யப்பட்டு கடந்த 26-2-1993 முதல் தடம் எண் 3 மூலம் தினசரி 4 நடைகள் வீதம் வேலூர்-செங்காநத்தம் வரை நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

27—

பேராவூரணி—ஆலங்குடிக்குப் புதிய வழித்தடம் தொடங்குதல்.

வினா எண் ***20312***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து களத்தூர்-செருவாவிடுதி, நெடுவாசல்-வடகாடு வழியாக ஆலங்குடிக்குப் புதிய வழித்தடம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது பேராவூரணி-ஆலங்குடி (வழி) செங்கமங்கலம், ஆவணம், கைகாட்டி, அன்னவயல், வடகாடு தடத்தில் நகரப் பேருந்துகள் தினசரி பத்து நடைகளும் பட்டுக்கோட்டை-புதுக்கோட்டை (வழி) ஆலங்குடி தடத்தில் புறநகர் பேருந்துகள் இரண்டு 14 நடைகளும் இயக்கப்படுகின்றன. கோரப்பட்டுள்ள தடம் தற்போது, இயக்கப்படும் தடத்தின் தூரத்தை விட 8 கி.மீ. சுற்று வழித்தடம் ஆதலால் பேருந்து இயக்கினால் போதிய மக்கள் பயன்பாடும், வருவாயும் இருக்காது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஆலங்குடிக்குப் புதிய வழித்தடம் அவசியமில்லை எனக் கருதலாம்.

28—

சிவகாமியாப்புரத்திற்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***20637***—*திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவகாமியாப்புரத்திற்குச் சென்று வந்த ஆலங்குளம்-தென்காசி பேருந்து (தடம் எண். 8) நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

(ஆ) ஆம் எனில், பேருந்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சிவகாமிபுரம் ஊருக்குள் சென்று வரும்படியாக ஆலங்குளம்-தென்காசி தடத்தில், தடம் எண் 8 என்ற நகரப் பேருந்து பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டதில் பயணிகளின் போதிய ஆதரவு இல்லாத காரணத்தினால் இப்பேருந்து இவ்வூருக்குள் செல்லாமல் பிரதானசாலையில் இயக்கப்படுகிறது. எனவே இப்பேருந்து சிவகாமிபுரத்திற்குள் மீண்டும் சென்று வரும்படியாக இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

29—

பூம்புகார் கப்பல்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கும் விவரம்.

Question No. 20822–Thiru S. Rajaraman: Will the Hon'ble Minister for Transport be pleased to state—

(a) Whether the Poompuhar Shipping Corporation Ltd. is purchasing large quanatity of deck/engine stores and non-bonded provisions and stores each year?

(b) The quantity purchased and the amount for which purchased during the years 1991-92; and

(c) The rate at which they were purchased?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

1994 நவம்பர் 3]

(ஆ)

	1990-91	1991-92	1992-93
	(ரூபாய் இலட்சத்தில்.)		
மேல் தள உபகரணங்கள்	41.59	19.52	59.21
பொறி உபகரணங்கள்	16.90	15.11	16.40
உரிமை பெற்ற பொருட்கள்	34.40	36.19	42.93

மேற்குறிப்பிட்ட பொருட்கள் அதிக அளவில் வாங்கப்படுகின்றன.

(இ) கப்பல்களுக்குத் தேவையான தரை, பொறி உபகரணங்கள் மற்றும் உரிமை பெற்ற பொருட்கள் மட்டுமே ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் வாங்கப்படுகின்றன. தினந்தோறும் தேவைப்படும் தரை, பொறி உபகரணங்கள் மற்றும் உரிமை பெற்ற பொருள்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி கொடுத்த நபர்களிடம் வாங்கப்படுகிறது.

30—

பேராவூரணி-பட்டுக்கோட்டைக்கு புதிய வழத்தடத்தில் மாற்றி பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் ***21161***—***திரு. ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி-பட்டுக்கோட்டைக்கு வர்த்தலைக்காடு, குருவிக்கரம்பை வழியாக செல்லும் தடம் எண். 8, வர்த்தலைக்காடு, மறுச்சுக்கட்டி பள்ளிக்கூடம் வழியாக செல்லும்படி மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

தற்போது சோழன் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண். 8 பேராவூரணி-பட்டுக்கோட்டை (வழி) குருவிக்கரம்பை, வர்த்தலைக்காடு, கறம்பைக்காடு தடத்தில் தினசரி 12 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. கோரியுள்ள தடத்தில் 4 கி.மீ. தூரத்திற்கு சாலை குறுகலாக பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாக உள்ளது. எனவே, தற்போது உள்ள தடத்தினை மாற்றியமைக்க இயலாது.

31—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் இயக்கப்படும் பேருந்துகள் விவரம்.

வினா எண் ***21927***—ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகள் எத்தனை?

(ஆ) அவற்றின் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் என்ன?

(இ) எத்தனை வழித்தடங்கள் நட்டத்தில் இயங்குகின்றன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தால் 652 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

(ஆ) இதனால் நாளொன்றுக்கு சராசரியாக ரூ. 19 லட்சம் வருவாய் கிடைக்கிறது.

(இ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் 299 நகரத்தடங்களில் 220-ம், 353 புறநகர் தடங்களில் 67-ம் ஆக மொத்தம் 287 பேருந்துகள் நட்டத்தில் இயங்குகின்றன.

32—

வால்பாறை-சென்னைக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் ***22194***—டாக்டர். அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலிருந்து சென்னை வரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பொள்ளாச்சியிலிருந்து வால்பாறைக்குச் செல்லும் சாலை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதல்ல. சேரன் போக்குவரத்துக் கழகம் வால்பாறையிலிருந்து பொள்ளாச்சிக்கும், கோயம்புத்தூருக்கும் பேருந்துகள் இயக்குகின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகம் நாள்தோறும் பொள்ளாச்சியிலிருந்து இரண்டு நடைகளும், கோயம்புத்தூரில் இருந்து 6 நடைகளும் சென்னைக்கு இயக்குகின்றன. வால்பாறை பயணிகள் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம்.

33—

ரெட்ஹில்ஸ்—மீஞ்சூர் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **22404**—திரு. ஏ. ரவிக்குமார்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரெட்ஹில்ஸ்—மீஞ்சூர் (வழி) சோழபுரம், திருநிலை அருமந்தை, பெரிய ஈச்சங்குழி, நன்னிலம் வழியாக பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இத்தடத்தில் அனைத்து பகுதிகளும் பல்லவன் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் நல்ல பேருந்து வசதி பெற்றுள்ளன. மேலும் தடத்தின் நீளம் 33.0 கி.மீ. ஆக இருப்பதால் ரெட்ஹில்ஸ் ஸ்லிருந்து மீஞ்சூருக்கு நேரடியாக நகரப் பேருந்து இயக்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 நவம்பர் 3

34—

திருப்பத்தூர்-சென்னைக்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **23375**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து சென்னைக்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு உள்ள தூரம் 235 கிலோ மீட்டர்களாகும். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 250 கிலோ மீட்டர்களுக்கு தூரமுள்ள தடங்களில் மட்டுமே பேருந்துகளை இயக்க இயலும். எனவே, திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்க இயலாது.

35—

இயற்கை எரிவாயுவினால் பேருந்துகள் இயக்குதல்.

*வினா எண் **23638**—டாக்டர் க. கோபால்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் இயற்கை எரிவாயுவினால் இயக்கப்பட்ட சோழன் போக்குவரத்துப் பேருந்துகள் நிறுத்தப்பட்டு, மீண்டும் டீசலினால் இயக்கப்படுவ்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சோழன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்ட இயற்கை எரிவாயு பேருந்துகளில் சில பழுதுகள் ஏற்பட்டதால்

இயக்கப்படவில்லை. தற்பொழுது பழுதுகள் சீர் செய்யப்பட்டு 20-3-1994 முதல் இரண்டு பேருந்துகள் இயற்கை எரிவாயுவின் பயனால் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் நான்கு பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

36—

திருக்கனங்கூர்—பித்தந்தூர் வழியாக புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***23894***—*திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் திருக்கனங்கூர்-பித்தந்தூர் வழியாக புதிய வழித் தடங்களில் டி.டி.சி. பஸ் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : திருக்கனங்கூர் மற்றும் பித்தந்தூர் கிராமங்கள் நெடுஞ்சாலையிலிருந்து விலகி உட்புறமாக அமைந்துள்ளன. சாலையும் மண் சாலையாக உள்ளது. எனவே இச்சாலையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்குவது இயலாது.

37—

மேலநீவிதநல்லூர் ஒன்றியத்தில் மாணவர்களுக்கு பேருந்து விடுதல்.

வினா எண் ***27394***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், திருமலாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி வள்ளிக்கோனேந்தல் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் செல்ல மாலை நேரத்தில் நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

தற்பொழுது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகர வழித்தடம் சங்கரன்கோவில்-தெற்கு அச்சம்பட்டி (தடம் எண். 18) திருமலாபுரம் வள்ளிக்கோனேந்தல் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து தெற்கு அச்சம் பட்டியிலிருந்து மாலை 4 மணிக்கு புறப்பட்டுச் செல்லும் சுற்றில் வள்ளிக்கோனேந்தல் மற்றும் திருமலாபுரம் வழியாக செல்கிறது. இந்தச் சுற்று திருமலாபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் வள்ளிக்கோனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்த நகரப் பேருந்தையே மேற்படி பள்ளி மாணவர்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள்.

38—

துறையூர்—சோபனபுரம், காஞ்சேரி மலைக்கு புதிய பேருந்து இயக்குதல்.

*வினா எண் **33255**—திரு.வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர்-சோபனபுரம், காஞ்சேரிமலைக்கு புதிய பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : துறையூர்-காஞ்சேரி மலைத்தடத்தின் நீளம் 27.6 கி.மீ. நீளம். இதில் துறையூர்-சோபனபுரம் வரை (19.6 கி.மீ. தூரம்) தற்போது பேருந்து வசதி பெற்றுள்ளது.

தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் துறையூர் சோபனபுரத்திற்கு ஒரு நகரப் பேருந்தின் மூலம் 14 நடைகளும், பேருந்து மூலம் 4 நடைகளும் தினசரி இயக்கப்படுகிறது. மிகுதி பகுதியான

சோபனபுரம் காஞ்சேரி மலை வழித்தடத்தில் நீளம் 8 கி.மீ. இவ்வழித்தடம் முழுவதும் குண்டும் குழியுமாகவும், மேலும் வழியில் உள்ள இரண்டு பாலங்களும் பழுதடைந்த நிலையிலும், மிகக் குறுகலான முட்கள் அடர்ந்த சாலையாகவும் இருப்பதால் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது எனத் தெரிவிக்கலாம்.

39—

சங்கரேஸ்வரர் திருக்கோவில் மற்றும் சங்கரமலைக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் ***33729*****—திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், வீரப்பூர் திருவிழாவிற்கான சிறப்புப் பேருந்துகளை சங்கரேஸ்வரர் திருக்கோவில் மற்றும் சங்கரமலை வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

சங்கரமலை, சங்கரேஸ்வரர் திருக்கோவில், கரூர்-திருச்சி பிரதான சாலையில் சங்கரமலைப்பட்டி கிராசில் இருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. இவ்வழித்தடம் மண்சாலையாகவும் மேடுபள்ளங்கள் நிறைந்தும், முட்கள் அடர்ந்து குறுகலான சாலையாக இருப்பதால் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

40—

போளூர் ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை நீக்குதல்.

வினா எண் ***6848*****—திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பகுதி ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை நீக்கி கையகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கையகப்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): போளூர் பகுதியில் உள்ள ஏரிகளில் கடந்த ஆண்டு ஆக்கிரமிப்பு இருந்தது. ஆனால் ஏரியில் முழு, நீர்மட்டம் அடைந்து, விட்டதால் ஆக்கிரமணம் செய்துள்ள பகுதியில் நீர்பிடிப்பு ஏற்பட்டதன் காரணமாக பயிர்கள் அழிந்து மண்மேடிட்டு விட்டது. அதன்பின் ஆக்கிரமணம் எதுவும் இல்லை.

41—

மன்னார்புரம் டோல்கேட் சாலையை விரிவுபடுத்தல்

வினா எண் *13844*—டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி ஜங்ஷனிலிருந்து மன்னார்புரம்-டோல்கேட் சாலையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி சந்திப்பிலிருந்து மன்னார்புரம் டோல்கேட் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை-45ல் கி.மீ. 314-2 முதல் 324-4 வரை சாலை உறுதிப்படுத்தி மேம்பாடு செய்யும் பணி முடிவடைந்து விட்டது.

42—

நீலாம்பூர் மதுக்கரை புறவழிச்சாலைத் திட்டம்.

வினா எண் *14120*—திரு. வி.கே. லட்சுமணன், திரு. கே. செல்வராஜ் மற்றும் திரு. கே. பி. ராஜூ: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் அவிநாசிரோடு, திருச்சி ரோடு பாலக்காடு ரோடு ஆகியவைகளை இணைக்கும் "நீலாம்பூர் மதுக்கரை" "புறவழிச் சாலைத் திட்டம்" எப்பொழுது நிறைவேற்றப்படும்?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் நகருக்கு அமைக்கப்பட உள்ள புறவழிச் சாலை (கி.மீ. 0-0-27-2)க்கான திட்டம் 1992-93-ஆம் ஆண்டிற்கான தேசிய நெடுஞ்சாலைகள் மேம்படுத்தும் பணிகளின் பட்டியலில் சேர்ந்து மைய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கான விரிவான மதிப்பீடு ரூ. 19.93 கோடிக்கு தயார் செய்யப்பட்டு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த வேலையில் தளம் என்ன தன்மையில் அமைப்பது என்று மைய அரசினால் முடிவு செய்யப்படாததால், மதிப்பீட்டிற்கான ஒப்புதல் இன்னும் மைய அரசினால் வழங்கப்படவில்லை. மைய அரசின் ஒப்புதல் மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்டபின்பு பணியை எடுத்துச் செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

43—

கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் அமைத்தல்.

வினா என் ***16598*****—*டாக்டர். எஸ். சுந்தரராஜ்:*** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுர மாவட்ட மின் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் சிவகங்கையில் செயல்படுவதால், இம்மாவட்டத்திற்கு என்று இராமநாதபுரம் மாவட்ட கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

தற்போதுள்ள இராமநாதபுரம் மின் பகிர்மான வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒன்று இராமநாதபுரத்தினை தலைமை இடமாகக் கொண்டு இராமநாதபுரம் மின் பகிர்மான வட்டம் என்றும், மற்றொன்று சிவகெங்கையை தலைமை இடமாகக் கொண்டு புதிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மின் பகிர்மான வட்டம் என்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு மின் பகிர்மான வட்டங்களும் அந்தந்த தலைமை இடத்தில் 15-4-1993 முதல் செயல்பட்டு வருகின்றன.

44—

பழமங்களம்—சிவகிரி சாலையை இணைத்து ஓரே பாதையாக அமைத்தல்.

வினா எண் ***19230***—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டம் பரப்பில் உள்ள பழமங்களம் கிராம பொதுமக்களுக்கு பாசூர் சிவகிரி மார்க்கெட் சாலை, பழமங்களம், சிவகிரி சாலையையும் இணைத்து ஓரே பாதையாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாசூர் சிவகிரி மார்க்கெட் சாலையிலிருந்து பழமங்களம்-சிவகிரி சாலைவரை உள்ள மொத்த நீளம் 6.40 கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 0/0-3/4 வரை கொடுமுடி ஒன்றியத்தைச் சார்ந்தது. கி.மீ. 3/4-6/4 வரை மொடக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்டது. இது சரளை கற்கள் பரத்தப்பட்ட ஒரு பழுதடைந்த சாலையாகும். இச்சாலையால் பயனடையும் வள்ளியம்பாளையம் புதூர் அரிசன காலனி மக்கள் தொகை (1981 கணக்கெடுப்பின்படி) 1060 ஆகும். வடக்குப்பாளையம் அரிசன காலனி மக்கள் தொகை 375. இவர்கள் அனைவரும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள். பயனடையும் மக்கள் தொகை 50-விழுக்காடுக்கு மேல் உள்ளது. எனவே இச்சாலையினை இனி வரும் ஆண்டுகளில் நிதி நிலைமை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு உறுப்புத் திட்டத்தில் சேர்த்து மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

பாக்கியலட்சுமிபுரம் கிராமத்தில் புதிய மின் கம்பங்களில்—மின் விளக்குகள் அமைத்தல்.

வினா எண் ***20636***—*திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பாக்கியலட்சுமிபுரம் கிராமத்தில் புதிய மின் கம்பங்களில் மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை *அமைச்சர்:*

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் பாக்கியலட்சுமிபுரம் கிராமத்தில் 22-9-1993 அன்று ஒரு புதிய மின் விளக்கு அமைத்து செயல்பட துவங்கியுள்ளது.

46—

திருநெல்வேலி சுரண்டை மேலக்கலங்கல் சாலையிலுள்ள ஓடையில் பாலம் அமைத்தல்.

*வினா எண் **20736**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரத்திற்கு மேல்புரம், சுரண்டை மேலக்கலங்கல் சாலையிலுள்ள ஓடையில் பாலம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை *அமைச்சர்:*

இவ்வினாவில் குறிப்பிடப்படும் சாலையின் சரியான பெயர் குருந்தாமொழி கீழக்கலங்கல் சாலையாகும் இந்த சாலையின் மொத்த நீளம் 8.8 கி.மீ. ஆகும். (அதாவது கி.மீ. 0/0-8/8 வரை) இச்சாலை ஒரு வழிப்பாதை கொண்ட தார்சாலையாகும். இச்சாலை நெடுஞ்சாலைத்துறையால் பராமரிக்கப்படும் இதர மாவட்ட சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 3/0-3/2 வரையுள்ள பகுதியில் மரியதாய்புரம் என்கின்ற கிராமம் உள்ளது. இச்சாலையில் கி.மீ. 1/0-2/0, கி.மீ. 3/0-4/0, கி.மீ. 4/0-5/0 மற்றும் கி.மீ. 6/0-7/0 வரையுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய 1992-93ஆம் ஆண்டு பழுதடைந்த அரசு சாலைகளை சீர் செய்தல் (தொழிற்சாலை அல்லாத) திட்டத்தின் கீழ் ரூ. 8.40 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இச்சாலையில் கி.மீ. 2-6-ல் உள்ள பள்ளத்தில் தரைமட்ட

[1994 நவம்பர் 3

தாம்போகி கட்ட ரூ. 2.00 லட்சம் தேவைப்படுகிறது. இப்பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும் வரும் காலங்களில் அரசு நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி வசதிக்கேற்ப இப்பணியினை எடுத்துச் செய்ய தக்க பரிசீலனை செய்யப்படும்.

47—

கீழப்பாவூர் ஒன்றியம், வீராணம் கால்வாயிலுள்ள பாலத்தை சீர்செய்தல்.

*வினா எண் **20739**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், இராஜகோபாலப்பேரிக்குத் தெற்கே வீராணம் கால்வாயிலுள்ள பாலத்தை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இச்சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இனம் பிரிக்கப்படாத சாலையில் இராஜகோபாலபேரிக்கு தெற்கே வீராணம் கால்வாயின் குறுக்கே கி.மீ. 0/2-ல் அமைந்துள்ளது. இப்பாலம் ஒவ்வொன்றும் 1.20/1.50 மீ. அளவுள்ள இரண்டு கண்களைக் கொண்ட மூடு கல் (cut stone) பாலமாகும். இப்பாலம் ஏறத்தாழ 50 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட இரண்டு கண்கள்ளைக் கொண்ட பாலமாகும்.

நடப்பு எட்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலுள்ள சாலை மற்றும் பால கட்டுமான பணிகள் நெடுஞ்சாலைத்துறையின் பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்ய வழிவகை செய்யப்படவில்லை. எனவே சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலம் நெடுஞ்சாலைத்துறையின் பகுதி 2 திட்டத்தின் கீழ் திரும்பக் கட்ட இயலாது.

1994 நவம்பர் 3]

48—

வல்லம் துணை மின் நிலையம் மூலம் பயன் பெறும் தொகுதிகள்.

*வினா எண் **20761**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் வல்லத்தில் தொடங்க இருக்கும் துணை மின் நிலையத்தினால் பயன்பெறும் தொகுதிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தஞ்சாவூரில் ஒரு 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் நிறுவ மின்சார வாரியத்தின் மின்சாரம் செலுத்துதல் மற்றும் வழங்கலுக்கான பெருந்திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையத்தை நிறுவ தேவையான இடம் தஞ்சாவூரில் கிடைக்கவில்லை. எனவே தஞ்சாவூரிலிருந்து சுமார் 12 கி.மீ. தொலைவிலும், வல்லத்தில் இருந்து சுமார் 3.6 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கானூர்பட்டி என்ற இடத்தில் இத்துணை மின்நிலையம் நிறுவப்படவுள்ளது. இத்துணை மின் நிலையத்தால் ஒன்பது தொகுதிகள் பயன்பெறும். அவை திருவையாறு, தஞ்சாவூர், திருவோணம், வலங்கைமான், பேராவூரணி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு தொகுதிகளும் மற்றும் பாபநாசம் தொகுதியில் ஒரு பகுதியும் புதுக்கோட்டை தொகுதியில் ஒரு பகுதியும் ஆகும்.

49—

குலசேகரம் மின்வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **20956**—திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, குலசேகரம் உதவிப் பொறியாளர் மின்வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவட்டார் தொகுதி, குலசேகரம் உதவிப் பொறியாளர் மின்வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு இல்லை.

50—

பிள்ளையார் திடல் மீனவர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தருதல்.

*வினா எண் **21163**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடல் மீனவர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடல் மீனவர் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

51—

திருப்பத்தூர் நகர் பெரிய ஏரியைச் செப்பனிடுதல்.

*வினா எண் **22419**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகர் பெரிய ஏரியை ஆழப்படுத்தி கரையை உயர்த்தி செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் பெரிய ஏரியின் தற்போதைய கொள்ளளவு அதன் பாசனத் தேவையை நிறைவு செய்யப் போதுமானதாக உள்ளது. எனவே ஏரியை ஆழப்படுத்தி கரையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

52—

திருப்பத்தூர் ஒன்றியத்தில் ஏரி கால்வாயைச் செப்பனிடுதல்.

*வினா எண் **22420**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் ஒன்றியம், குரிசலாப்பட்டு, செலந்தம்பள்ளி வரை ஏரி கால்வாயைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் ஒன்றியம், குரிசலாப்பட்டு அருகே பாம்பாற்றின் குறுக்கே ரிட் சாகிப் அணை உள்ளது. இந்த அணையிலிருந்து வழங்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் மடவாளம் ஏரி, செலந்தம்பள்ளி ஏரி ஆகிய ஏரிகளுக்குச் செல்கிறது. இக்கால்வாயை செப்பனிடும் பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு தற்போது கால்வாய் நல்ல நிலையில் உள்ளது. இருப்பினும் இக்கால்வாய் படுகைக்கு கான்கிரீட் போடவும், கரையின் இருபக்கமும் அலை கற்கள் பதிக்கவும் உள்ள கருத்துரு ஆய்வு செய்யப்படுகிறது.

53—

வெட்டன்விடுதி பகுதி விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்காதது குறித்து.

*வினா எண் **23007**—திரு. எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி மின்சார அலுவலகத்தில் கூடுதல் மின்சக்தி கோரியுள்ள விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மின்சக்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வெட்டன்விடுதி மின் பிரிவு அலுவலகத்தில் தற்பொழுதுள்ள விவசாய மின் இணைப்புகளில் கூடுதல் பளு கோரி 163 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றிற்கு அனுமதி வழங்க புதியதாக 50 மின் பகிர்மாற்றிகள் 50 கி.மீ. உயர் அழுத்த மின்னூட்டி, 125 கி.மீ. தாழ்வழுத்த மின்னூட்டி ஆகியவை அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு சுமார் 2 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை 1994-95 நிதியாண்டில் தொடங்கி வருடாந்திர திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப படிப்படியாக இணைப்புகள் வழங்கப்படும்.

54—

திருப்பத்தூரில் உள்ள பெரிய ஏரிக்கரையை அகலப்படுத்தும் திட்டம்.

*வினா எண் **23160**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலுள்ள பெரிய ஏரிக்கரையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் பெரிய ஏரியில் நீரை தேக்க போதுமான அகலம் உள்ளது. எனவே, ஏரியின் கரையினை அகலப்படுத்தும் திட்டம் தற்போது துறையின் பரிசீலனையில் இல்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

55—

மாம்பட்டு கிராமத்தில் மின்துறை பிரிவு அலுவலகம் அமைத்தல்.

வினா எண் ***23936***—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போரூர் வட்டம், மாம்பட்டு கிராமத்தில் மின்துறை பிரிவு அலுவலகம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): போரூர் வட்டம், மாம்பட்டு கிராமம், போரூர் நகர் பிரிவு அலுவலகத்தின் கீழ் வருகிறது. மாம்பட்டு கிராமத்தில் தற்போது மொத்தம் ஐந்து மின் மாற்றிகள் மட்டுமே (Distribution Transformers) இயக்கத்தில் உள்ளன. மேலும் மாம்பட்டை சுற்றியுள்ள குக்கிராமங்களில் (Hamlets) மொத்தம் ஏழு மின்மாற்றிகள் மட்டுமே உள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள வேலைப் பளு ஒப்பந்தப்படி, கிராமப்புற பிரிவு அலுவலகம் ஏற்படுத்த மொத்தம் 63 மின் மாற்றிகள் தேவை. எனவே, மாம்பட்டு கிராமத்தில் மின்துறை பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை.

56—

கக்கன்புரம்—என்னேகொள்புதூர் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் ***24796***—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி-ஒசூர் சாலையில் கக்கன்புரம் வழியாக என்னேகொள்புதூர் செல்லும் மண் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரங்கள் என்ன?

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

57—

பிசானத்தூர்—கந்தர்வக்கோட்டை சாலையைத் தார்ச்சாலையாக மாற்றுதல்.

*வினா எண் **25208**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, பிசானத்தூர்—துருசுப்பட்டி புதுநகர் வழியாக கந்தர்வக்கோட்டைக்குத் தார்ச்சாலை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, பிசானத்தூர்-துருசுப்பட்டி-புதுநகர் வழியாக கந்தர்வக்கோட்டைக்குச் செல்லும் வழித்தடத்தில் இரண்டு ஊராட்சி ஒன்றியச் சாலைகளும் ஒரு இதர மாவட்டச் சாலையும் உள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மூலம் மேம்பாடு செய்ய வழிவகை செய்யப்படவில்லை. 1.60 கி.மீ. நீளமுள்ள புதுநகர் சாலை (இதர மாவட்டச் சாலை) தார்ச்சாலையாக நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

58—

தனியார் மற்றும் பொதுத்துறைகளில் பணிபுரிபவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம்.

*வினா எண் **4310**—திரு. ப. ரங்கநாதன்:* மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1954-இல் மத்திய, மாநில அரசுகள் ஒன்றுபட்டு தனியார் துறையில் பணிபுரிபவர்களுக்கும், பொதுத்துறையில் பணிபுரிபவர்களுக்கும், வீடுகள் கட்டிக் கொடுத்து ஒதுக்கீடு செய்துள்ளதை உரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனை செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தொழிலாளர் மலிவு விலை வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளை அதில் உண்மையாக குடியிருப்போருக்கும் மற்றும் ஓய்வு பெற்ற இறந்துபோன தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்ய அரசு நிலையாணை எண். 691, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 10-8-1993-இல் திருத்திய ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. இதன்மீது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

59—

வேளாண்மை பயிற்சி பெற்றவர்களுக்கு களப்பணியாளர் பதவி வழங்குதல்.

வினா எண் ***19732***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண்மையில் ஓராண்டு பயிற்சி பெற்று வேலையில்லாதவர்களுக்கு பனை எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தில் களப்பணியாளர் பணிக்கு நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

இல்லை.

60—

அவினாசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் ***35666***—*டாக்டர் மு. சீனியம்மாள்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டிடம் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அவினாசி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் 1-12-1972-ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மேற்படி நாளிலிருந்து வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு அலுவலகம், கிட்டங்கி, ஊரகக் கிட்டங்கி, கழிப்பறை வசதி, மேல்நிலைத் தொட்டி, மாட்டுக் கொட்டகை போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க நிலம் கையகப்படுத்தி கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது.

61—

நத்தம் தொகுதி, வடுகப்பட்டியில் கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **10358**—திரு. எம். ஆண்டிஅம்பலம்:* மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், திம்மனநல்லூர் பஞ்சாயத்திற்குட்பட்ட வடுகப்பட்டியில் கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தரச் சொந்த கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

நத்தம் தொகுதி, சாமுனார்பட்டி ஒன்றியத்தில் உள்ள வடுகப்பட்டியில் இயங்கி வருவது ஒரு கால்நடை கிளை நிலையம் ஆகும். கால்நடைக் கிளை நிலையங்கட்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட நடப்பு ஆண்டில் நிதி வசதி இல்லை.

1994 நவம்பர் 3]

62—

திருப்பத்தூரில் ஆவின் பால்-கடை திறப்பு

வினா எண் ***24595***—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரில் ஆவின் பால் கடை திறக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

வடஆற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் மூலம் திருப்பத்தூர் நகரில் 1-4-1994 தேதி முதல் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

63—

சின்னசேலம் ஆட்டுப்பண்ணையை அபிவிருத்தி செய்தல்

வினா எண் ***35940***—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், சின்னசேலம் ஆட்டுப்பண்ணையை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் செம்மறி ஆடு இனவிருத்தியைத் தீவிரப்படுத்தி விவசாயிகளுக்கு நல்ல கிடாக்கள் விநியோகம் செய்வதற்காக மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் ரூ. 5.00 இலட்சம் செலவில் திட்டம் செயல்பட உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் பண்ணையில் ஏற்கெனவே உள்ள ஆடுகளுக்குப் பதிலாகப் புதிய தரமான ஆடுகள் இனவிருத்திக்காக வாங்கவும் மேய்ச்சல் தரை மேம்படுத்துவதற்காகவும், ஆடுகள் இருக்கும் கொட்டகைகள் சீர் செய்யவும் பணம் செலவிடப்பட உள்ளது.

64—

வணிகவரித் துறை கட்டிடங்களுக்காக கொடுக்கப்படும் வாடகை பற்றிய விவரம்.

வினா எண் ***35159*****—திரு வ. மு. சுப்பிரமணியன்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிகவரித்துறை கட்டிடங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வாடகையாக கொடுக்கப்பட்டு வருகிறது?

(ஆ) இத்தொகையைக் குறைக்கும் வகையில் சொந்தக் கட்டிடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர்:

(அ) தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் வணிகவரித் துறை அலுவலகங்களுக்காக 1993-94-ஆம் ஆண்டு மொத்தம் வழங்கப்பட்ட வாடகைத் தொகை ரூ. 83.50 இலட்சம் ஆகும்.

(ஆ) வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் வணிகவரி அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அரசின் நிதி நிலைமைகளையும், தேவையையும் கருத்தில் கொண்டு வணிகவரி அலுவலகங்களுக்கு படிப்படியாகச் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் மூலம் வாடகைக்கான செலவினம் குறைந்து வருகிறது.

65—

நன்னிலம் தொகுதி வணிகவரித்துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 35625—**டாக்டர் க. கோபால்:** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி துணை வணிகவரித்துறை அலுவலகம் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித்துறை அமைச்சர்:

(அ) ஆம். இலக்கம் 35, கடைவீதி, நன்னிலம் என்ற முகவரியில் நன்னிலம் துணை வணிகவரி அலுவலர் அலுவலகம் இயங்கி வருகிறது.

(ஆ) துணை வணிகவரி அலுவலகம் மட்டுமே அங்கு இயங்கி வருவதால் அதற்கென நன்னிலத்தில் கட்டிடம் கட்டும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

66—

பச்சமலைப் பகுதி கிராம மகளிர்க்கு தையல் பயிற்சி அளிக்கும் திட்டம்

வினா எண் ***36201***—*திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பச்சமலை வல்லாடுபுதூர், வண்ணாடு கிணத்தூர் கிராமத்தில் மகளிருக்குத் தையல் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தையல் பயிற்சி எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

67—

அரசு வனங்களில் 'மென்மரம்' நடும் திட்டம்

வினா எண் ***19428***—*திரு.இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசு வனங்களில் மென்மரம் நடும் திட்டத்தை மாற்றி தேக்கு மரம் நடவுசெய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்.

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசு வனங்களில் மென்மரம் நடும் திட்டத்தை மாற்றி தேக்கு மரம் நடவுசெய்ய சாத்தியம் இல்லை. ஏனெனில் இங்கு தேக்கு போன்ற கடின இன மரங்கள் வளர்ப்பதற்கேற்ற மண் மற்றும் தட்பவெப்ப நிலையில்லை என்பதால் மென்மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.

68—

செங்கம் வட்டம் வனத்துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***22029***—*டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம் வனத்துறை அலுவலகத்திற்குப் போதுமான இடவசதியுடன் கூடிய கட்டிடம் இல்லாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இடவசதியுடன் வனத் துறை அலுவலகத்தை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்.

(அ) ஆம்.

(ஆ) செங்கம் வட்டம் வனத்துறை அரசு அலுவலகம் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. போதுமான இடவசதியுடன் புதியதாகக் கட்டிடம் கட்டத் தகுதியான நிலத்தினைத் தீயணைப்பு நிலையம் அருகில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அந்நிலத்தினைக் கையகப்படுத்திய பின்னர் அலுவலகம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

1994 நவம்பர் 3]

69—

சாலையோரங்களில் தேக்குமரம் வளர்த்தல்.

வினா எண் ***27457***—திரு.கே. *முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சாலை ஓரங்களில் வனத்துறையின் மூலம் தேக்குச் செடிகள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

சாலை ஓரங்களில் வனத்துறை மூலம் தேக்குச் செடிகள் நடும் திட்டம் தற்போது அரசிடம் ஏதுமில்லை.

70—

வீட்டுக்கு ஒரு தேக்குமரம் வளர்க்கும் திட்டம்.

வினா எண் ***33141***—திரு. கு. *சிவசுப்பிரமணியன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டுக்கு ஒரு தேக்குமரம் வளர்க்கும் திட்டத்தினைக் கட்டாயமாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) வறண்ட வேளாண்காடுகள் மற்றும் தனியார் நிலங்களிலும் மரங்கள் வளர்க்க வேளாண்மைத் துறையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் வீட்டுக்கு ஒரு தேக்குமரம் வளர்க்கும் திட்டத்தினைக் கட்டாயமாக்கிட வனத்துறையில் தற்போது திட்டம் எதுவுமில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

71—

ரப்பர் கழகத்தைக் கண்காணிக்கக் குழு அமைத்தல்.

*வினா எண் **33646**—திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசு ரப்பர் கழகத்தில் சேகரிக்கும் ரப்பர் பால் மற்றும் ரப்பர் சீட்டுகள் விற்பனை செய்வதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அரசு ரப்பர் கழகத்தில் இயக்குநர்கள் குழுவினரின் ஒப்புதலின் படியும் அரசாணை எண் 749, சுற்றுப்புறம் (மற்றும்) வனம், நாள் 28-6-1988 ஆணையின் படியும் ரப்பர் சந்தையின் அவ்வப்போதைய நிலவரத்துக்குத் தக்கபடி பதப்படுத்தப்பட்ட ரப்பர் பால் (CENEX) விற்பனை முதலியன மேற்கொள்ளப்படுகிறது. மேற்படி அரசாணையின்படி பொது மேலாளர் அவை நடத்துநராகவும் செயலர் மற்றும் தலைமை கணக்கர் வணிக மேலாளர் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட வணிகக்குழு ஒன்று அமைக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட பாலின் விலை கேரள அரசு நிறுவனமாகிய கேரளா தோட்டக் கழகம் மற்றும் ரிகாபிலிடேசன் பிளான்டேசன் (Rehabilitation Plantation) மற்றும் கர்நாடக வன வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் விற்பனை விலை மற்றும் இருப்பு விற்பனைக்குள்ள கிராக்கி முதலியவற்றைக் கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்யப்பட்டு, நிர்வாக இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. ஆர். எம். எ. ரப்பர் ஷீட்டுகள் இ.பி.சி. முதலியன விற்பனைக்குச் செய்தித் தாள்களில் டெண்டர்கள் கோரப்பட்டு கோட்டயம் சந்தையில் அன்றாட விலைப் பருவம், மறுநாள் மலையாள மனோரமா செய்தித்தாள்களில் வெளியிடப்படுவதை அடிப்படையாகவும், மேலே சொன்ன விலை விகிதத்திலிருந்து ஆர்.எம்.எ.ஷீட் முதலியவற்றிற்குக் கூடியும் இ.பி.சி.முதலியவற்றுக்குக் குறைத்தும் (+) அல்லது (-) அன்றாடம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கிடைக்கப்பெறும் விலை முதலியன பருவ காலத்தில் இயக்குநர்கள் குழுவினால் ஆய்வு செய்யப்படுகிறது. கணக்குகள்

1994 நவம்பர் 3]

உள்துறை தணிக்கை மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தணிக்கைக்குழு மற்றும் மாநில கணக்கரால் தணிக்கை செய்யப்படுகிறது. மேலும் தணிக்கைத் தடைகள் ஏதுமிருப்பின் சட்டமன்ற உறுப்பினர்களடங்கிய பொதுக்கணக்குத் தணிக்கைக் குழுவினரால் ஆய்வு செய்யப்படுகிறது. எனவே மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கண்காணிப்புக் குழு அவசியமில்லை.

72—

முன்துவக்கப்பள்ளிகளை (Pre-Primary Schools) அரசு ஏற்பது பற்றிய விவரம்.

வினா எண் 8593—திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன் துவக்கப்பள்ளிகளை (Pre-Primary Schools) அரசு ஏற்கும் கொள்கை பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : முன்துவக்கப்பள்ளிகளை அரசு ஏற்கும் கொள்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

சேலம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரியில் வேலை நிறுத்தம்.

வினா எண் 19777—திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாக மாணவர்களையும் கோஷ்டி சேர்த்துக் கொண்டு, அதனால் அக்கல்லூரி தரம் தாழ்ந்து வருகிறதா?

(ஆ) 1992-93-ஆம் ஆண்டில் எத்தனை முறை வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டது?

(இ) அதற்குக் காரணங்கள் என்ன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) சேலம் அரசு ஆண்கள் கலைக்கல்லூரியில் முதல்வர் மற்றும் பேராசிரியர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் ஏதும் இல்லை. எனவே, இதன் காரணமாக கல்லூரியில் கல்வித் தரம் தாழ்ந்து வருவதற்கு இடமில்லை.

(ஆ) 1992-93-ஆம் கல்வி ஆண்டில் ஒரே ஒரு முறை மட்டும் நவம்பர் 1992-ல் கல்லூரியில் மாணவர் வேலை நிறுத்தம் நிகழ்ந்துள்ளது.

(இ) இதற்குக் காரணம் மாண்வரிடையே காணப்பட்ட அமைதியின்மையே.

74—

பரமக்குடி—திருவள்ளுவர் நகரில் ஆரம்பப்பள்ளி துவங்குதல்.

வினா எண் 22255—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகராட்சியில் திருவள்ளுவர் நகரில் புதிய ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அரசுக்கு பரிந்துரை ஏதும் வரவில்லை.

(ஆ) கருத்துரு பெறப்பட்டால் பரிசீலிக்கப்படும்.

75—

பி. மேட்டூரில் அரசு நடுநிலைப்பள்ளிக்கு நூலகம் அமைத்தல்.

வினா எண் 27221—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி, பி. மேட்டூரில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளிக்கு நூலகம் அமைத்துக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

76—

மிராளூர் கிராமத்தில் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***33545***—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், மிராளூர் கிராமத்தில் நூலகக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித்தரப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

77—

போரூரில் திருமணக்கூடம் அமைத்தல்.

வினா எண் ***24301***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

போரூரில் கூட்டுறவுத் துறை மூலம் ஒரு சமுதாய திருமணக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

இல்லை.

78—

பணியாளர்களுக்குக் கூட்டுறவு பயிற்சி அளித்தல்.

வினா எண் ***33161***—திரு.சி. ஞானசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவ்ட்டத்தில் கூட்டுறவு தொடக்க வங்கிகளில் பணியாற்றுபவர்கள் அனைவரும் கூட்டுறவு மேற்பார்வையாளர்கள் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற தேர்வு செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அனைவருக்கும் கூட்டுறவு பயிற்சி அளிக்க எப்போது அரசு ஆவன செய்யும்?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம். அரசு அறியும்.

(ஆ) வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் மொத்தம் 185 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் உள்ளன. அவற்றில் வேலை பார்க்கும் 1,754 பணியாளர்களில் 789 பணியிடங்களுக்கு மட்டுமே கூட்டுறவு பயிற்சி இன்றியமையாததாகும். இவர்களில் 454 பேர்கள் கூட்டுறவு பயிற்சி பெற்றுள்ளார்கள். எஞ்சியுள்ள 335 பேர்களில் 125 பேர்கள் தற்போது கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் அல்லது அஞ்சல் வழி பயிற்சி மூலம் பயிற்சி பெறுகின்றனர். எஞ்சியுள்ள 210 பேர்களும் வரும் ஆண்டுகளில் அஞ்சல் வழி கூட்டுறவு பயிற்சி பெற வாய்ப்பு உள்ளது.

79—

செட்டிகாட்டில் மயானக்கரைக்கு தகரக் கொட்டகை அமைத்தல்.

வினா எண் *15842*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டான் ஊராட்சி செட்டிகாட்டிற்கு 1992-93-ல் மயானக்கரைக்கு தகரக்கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பள்ளிகொண்டான் ஊராட்சி, செட்டிகாடு கிராமத்திற்கு மயானக் கொட்டகை 1993-94-ஆம் ஆண்டில் அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1994 நவம்பர் 3]

80—

போகனூர் ஒன்றியத்தில் தாட்கோ மூலம் வழங்கிய கடன்கள் விவரம்.

வினா எண் ***16688***—டாக்டர் எஸ். *சுந்தரராஜ்:* மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகனூர் ஒன்றியத்திற்கு தாட்கோ மூலம் 1991-92-ல் வழங்கிய கடன்களின் மதிப்பு என்ன?

(ஆ) அதனால் பயன் பெற்றோர் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி தொகுதி, போகனூர் ஒன்றியத்திற்கு தாட்கோ மூலம் 1991-92-ல் ரூ. 1,70,000 (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 34 பேர் பயனடைந்துள்ளனர்.

81—

பரமக்குடி, நயினார் கோயில் ஒன்றியங்களில் தாட்கோ மூலம் வழங்கப்பட்ட கடன் பற்றிய விவரம்.

வினா எண் ***16693***—டாக்டர் எஸ். *சுந்தரராஜ்:* மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டம், பரமக்குடி நயினார் கோயில் ஒன்றியங்களில் 1991-92-ல் தாட்கோ மூலம் வழங்கிய கடன்தொகை எவ்வளவு?

(ஆ) கடன் பெற்றோர் எத்தனை பேர்?

(இ) வழங்கிய கடன்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) ரூ. 14,00,500 (ரூபாய் பதினான்கு இலட்சத்து ஐநூறு மட்டும்).

(ஆ) 251 நபர்கள்.

(இ) கரிமூட்டம், செங்கல் காளவாய், டீ ஸ்டால், பெட்டிக்கடை, சைக்கிள்கடை, மைக்செட், தையல் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், கட்பீஸ், பால்மாடு, பனை ஓலைத் தொழில், மோட்டார் ரிக்ஷா, வண்டியும் மாடும், செப்பல் கடை மற்றும் பேக்கரி ஆகிய தொழில்களுக்கு கடன் வழங்கப்பட்டது.

82—

ஆதிதிராவிடர் பெண்கள் விடுதியின் சுற்றுச்சுவரை உயர்த்துதல்.

வினா எண் *17541*—திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியிலுள்ள ஆதிதிராவிடர் பெண்கள் விடுதியின் சுற்றுச்சுவரை உயர்த்திக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

ஆம். மதுரை மாவட்டம், சிலம்பட்டி அரசு ஆதிதிராவிடர் பெண்கள் விடுதியின் சுற்றுச்சுவரை உயர்த்திக் கட்டி இரும்பு முள்வேலி அமைக்க மதிப்பீடுகள் கோரப்பட்டுள்ளன.

83—

சங்ககிரி மாணவிகள் விடுதியில் குடிநீர் குழாய்களைப் பழுதுபார்த்தல்.

வினா எண் *22354*—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

சங்ககிரி—அரசினர் ஆதிதிராவிட மாணவிகள் விடுதியில், பழுதடைந்துள்ள குடிநீர் குழாய்களைச் சரி செய்து மேல் நிலைத் தொட்டியில் நீர் தேக்கி தொடர்ந்து தண்ணீர் வழங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

சங்ககிரி அரசு ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியில் உள்ள பழுதுபட்ட குடிநீர் குழாய்கள் மற்றும் மின் மோட்டார்கள், ரூ. 5,000 செலவில் பழுது நீக்கப்பட்டு, தற்போது நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

84—

கிருட்டிணகிரி வட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி துவங்குதல்.

வினா எண் ***22849*—திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம், மேகல சின்னம்பள்ளி அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கும் குருபரப்பள்ளி, குந்தாரப்பள்ளி, மகராசன்கடை, பெல்லாராம்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் மாணவர் விடுதி துவங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி வட்டம், மேகல சின்னம்பள்ளியில் புதிதாக ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி துவங்க, அரசு ஆணை நிலை எண். 194, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 18-8-1993-ல் ஆணை வெளியிடப்பட்டு அவ்விடுதி 4-1-1994 முதல் இயங்கி வருகிறது. மகாராஜக்கடை, பெல்லாரம்பள்ளி மற்றும் குருபரப்பள்ளி ஆகிய உயர்நிலைப்பள்ளிகளில் ஆதிதிராவிட மாணவர்களின் எண்ணிக்கை, தற்போது குறைவாக உள்ளதால், இவ்விடங்களில் ஆதிதிராவிட மாணவர் விடுதிகள் தற்போது துவக்க அவசியமில்லை எனக் கருதப்படுகிறது. குந்தாரப்பள்ளியில் மாணவர் விடுதி துவக்க அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்படும் என தருமபுரி

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தெரிவித்துள்ளார். இச்செயற்குறிப்புகள் வரப்பெற்றதும் தேவை மற்றும் நிதி நிலைமைக்கேற்ப அரசு முடிவெடுக்கும்.

85—

சாத்தாப்பாடி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்.

***வினா எண் 24539*—திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, சாத்தப்பாடி ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1993-94 ஆம் ஆண்டிற்கான புதிய விடுதிகள் திறக்க பரிசீலிக்கப்படும் பட்டியலில் சேலம் மாவட்டம், சாத்தப்பாடி ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு ரூ. 22 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்பட்டது. எனினும் தேவையைக் கருத்தில் கொண்டு வேறு ஆறு விடுதிகளுக்குக் கட்டிடம் கட்டும் திட்டம் தேர்வு செய்யப்பட்டது. வரும் ஆண்டுகளில் தேவை மற்றும் நிதி நிலைக்கேற்ப, சேலம் மாவட்டம், சாத்தப்பாடி ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

86—

ஸ்ரீரெங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள்.

***வினா எண் 4454*—திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரெங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தின் ஆகம விதிகள், ஆலயத்தின் தொன்மையான மரபு முறைகள் ஆகியவற்றிற்கு மாறாக முறைகேடுகள் மற்றும் மாற்றங்கள் நடைபெறுவதாக அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1994 நவம்பர் 3]

(இ) மேற்படி ஆலயத்தில் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டிருப்பதாக அரசுக்கு தகவல் வந்துள்ளனவா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இத்திருக்கோயிலின் மடப்பள்ளியில் தண்ணீர் இறைத்து பயன்படுத்துவது குறித்து நடைமுறை இன்னல்களைக் கருத்தில் கொண்டு கிணற்றில் மோட்டார் பம்புசெட் பொருத்தி மடப்பள்ளிக்கு பம்புசெட் மூலம் தோல் சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏதும் பயன்படுத்தாமல் இரும்புக்குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆகம விதிகள், ஆலயத்தின் தொன்மையான முறைகள் ஆகியவற்றிற்கு மாறாக முறைகேடுகளோ அல்லது மாற்றங்களோ நடைபெறவில்லை.

(இ) இல்லை. இத்திருக்கோயிலின் பாதுகாப்பு ஏற்பாடுகள் நல்ல முறையில் உள்ளன.

87—

பூந்தமல்லி—திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் ஆக்கிரமிப்புகளை நீக்க நடவடிக்கை.

வினா எண் ***5196*—திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், பூந்தமல்லி திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமாள் திருக்கோயில் திருக்குளத்தில் தனி நபர்கள் கட்டிடம் கட்டி ஆக்கிரமித்து இருப்பதையும், திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளதையும், அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பாளர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

[1994 நவம்பர் 3

88—

ஆண்டிக்காடு ஆதிதிராவிடர் கோயிலைச் சீரமைத்தல்.

*வினா எண் **7374**—திரு ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஆதிதிராவிடர் தெருவில் உள்ள ஆதிதிராவிடர் கோயிலைப் பழுதுபார்த்து சீரமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

89—

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்களைப் புதுப்பித்தல்.

*வினா எண்கள் **13182, 15936, 15941, 15978, 15980, 15983, 15987, 16931, 16932**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. பேராவூரணி வட்டம், ஸ்ரீநீலகண்டப் பிள்ளையார் கோயில்குளம்.

2. திருவையாறு வட்டம், மருவூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலயம்.

3. தஞ்சாவூர் வட்டம், சூரக்கோட்டை அருள்மிகு பரமநாத அய்யனார் ஆலயம்.

4. வலங்கைமான் வட்டம், சந்திரசேகரபுரம் அருள்மிகு அகத்தீஸ்வரசுவாமி ஆலயம்.

5. வலங்கைமான் வட்டம், சின்னகரம் அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம்.

6. வலங்கைமான் வட்டம், வெள்ளாள தெரு அருள்மிகு அங்காளம்மன் ஆலயம்.

1994 நவம்பர் 3]

7. வலங்கைமான் வட்டம், வடக்குப்பட்டம் அருள்மிகு செல்லியம்மன் ஆலயம்.

8. வலங்கைமான் வட்டம், அரித்துவாரமங்கலம், அருள்மிகு பிரசன்ன விநாயகர் கோயில்.

9. வலங்கைமான் வட்டம், அருள்மிகு சாந்தப்பிள்ளையார் கோயில்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ.நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

90—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட திருக்கோயில்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***15947, 16926,16929, 16930, 16933, 16935, 16939, 16941, 16942, 16943***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1. நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் திருநாகேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி ஆலயம்.

2. தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், வீராணம் அருள்மிகு வீரசக்தி விநாயகர் ஆலயம்.

3. தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், நெய்குப்பம் அருள்மிகு ஐயனார் பிடாரி திருக்கோயில்.

4. தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அன்னிக்குடி அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

5. தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், வடக்குப்பட்டம் அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம்.

6. தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், தொழுவூர் அருள்மிகு பழனியாண்டவர் ஆலயம்.

7. தஞ்சாவூர் மாவட்டம், ஆலங்குடி அருள்மிகு காளியம்மன் ஆலயம்.

8. தஞ்சாவூர் மாவட்டம், ஆலங்குடி அருள்மிகு வக்ரதாண்டவிநாயகர் கோவில்.

9. தஞ்சாவூர் மாவட்டம், ஆலங்குடி அருள்மிகு செல்லக்கருப்பு அய்யனார் மற்றும் வெங்கடாஜலபதி பூஜை நெய்வேத்திய தர்மாலயம்.

10. தஞ்சாவூர் மாவட்டம், சாத்தனூர் அருள்மிகு வெள்ளை விநாயகர் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

91—

வெட்டன் விடுதியில் கல்யாண மண்டபம் கட்டுதல்.

வினா எண் 16589—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதிக்கு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் புதியதாக கல்யாண மண்டபம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

1994 நவம்பர் 3]

92—

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்கள் திருப்பணி செய்தல்.

வினா எண்கள் ***18704, 18769, 18772, 18773, 18788, 19870, 19872, 19873, 19874, 19887***—திரு. ஆர்.சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. திருவையாறு வட்டம், நடுக்காவேரி அருள்மிகு சண்முகவேல் தர்மம் ஆலயம்.

2. மன்னார்குடி, மன்னார்குடி வட்டம், அருள்மிகு சேது பாவா அறக்கட்டளை ஆலயம்.

3. பூவனூர், மன்னார்குடி வட்டம், பசுமடம் அர்த்த ஜாமக்கட்டளை (இ) சதுரங்க வல்லபநாதர் ஆலயம்.

4. நரிக்குடி, நீடாமங்கலம் வட்டம், அருள்மிகு குஞ்சிதபாதத்து உடையார் அன்ன சத்திரம்.

5. நீட்டாமங்கலம் வட்டம், அருள்மிகு திருவாசக தண்ணீர் பந்தல் இராமநாதன் கோயில்.

6. வலங்கைமான் வட்டம், அருள்மிகு மாளிகைத்திடல் கட்டளை (இ) சுந்தரேஸ்வரர் ஆலயம்.

7. விளத்தூர், வலங்கைமான் வட்டம் அருள்மிகு சுப்பிரமணியர் அறுபத்து மூவர் மடம்.

8. வலங்கைமான் வட்டம், விளத்தூர் அருள்மிகு வேணுகோபாலசுவாமி மடம்.

9. அரித்துவாரமங்கலம், வலங்கைமான் வட்டம் அர்த்தஜாமக் கட்டளை அருள்மிகு பாதாளேஸ்வரர் ஆலயம்.

10. நரிக்குடி, வலங்கைமான் வட்டம் அருள்மிகு அருணாசலத்துடையார் அன்னசத்திரம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதிப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

93—

தஞ்சை வட்டத்தில் திருக்கோயில்களைப் புதுப்பித்தல்.

வினா எண்கள் ***19903, 19910, 19927, 19935***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. வலங்கைமான் வட்டம், பூவனூர், நந்தவனம் கட்டளை (இ) அருள்மிகு சதுரங்கவல்லபநாதர் ஆலயம்.

2. திருவையாறு வட்டம், விளாங்குடி அருள்மிகு துவாதசி கட்டளை.

3. பாபநாசம் வட்டம், நெடுந்தெரு அருள்மிகு உத்திரவளி மடம்.

4. மன்னார்குடி வட்டம், காரக்கோட்டை அருள்மிகு தண்ணீர்பந்தல் தர்மம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

94—

பொன்மனை மகாதேவர் ஆலயத்தில் கொடிமரம் அமைத்தல்.

வினா எண் ***20366***—திரு. இரா. அப்புநடேசன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருவட்டார் தொகுதி, பொன்மனை மகாதேவர் ஆலயத்தில் கொடிமரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், பொன்மனை, அருள்மிகு பொன்மனை மகாதேவர் திருக்கோயிலில் கொடிமரத்தை 14-7-1994-ல் பிரதிஷ்டை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

95—

மகாதேவர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் நிறைவடைதல்.

வினா எண் *20367*—திரு. இரா. அப்புநடேசன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, திற்பரப்பு மகாதேவர் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் முடிந்தும் கொடிமரம் அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கொடிமரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஆம். திருவட்டார் தொகுதி திற்பரப்பு மகாதேவர் ஆலயத்திற்கு ரூ. 1,10,000 செலவில் புதிய கொடிமரத்திற்கு ரூ. 53,188 செலவில் செப்புத் தகடு வேய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக்கொடிமரம் இவ்வாண்டு ஜூலை மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்.

96—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோயில் திருப்பணிக்கு நிதி உதவி வழங்குதல்.

வினா எண் *26376*—டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992-93-ல் கோயில் திருப்பணிக்கென்று ஒதுக்கிய தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டில் கோயில் திருப்பணிக்கென ரூ. 1,50,766 நிதி உதவி வழங்கப்பட்டது.

97—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை திருப்பணி செய்தல்.

வினா எண் *27645*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், இலுப்பூர் அருள்மிகு மாங்குடி பிடாரி ஆலயம், மதிய நல்லூர் பிடாரி ஆலயம், மாம்பட்டி த/அ பரம்பூர் கண்ணியாப்பட்டி அடைக்கலம் காத்த அய்யனார் கோவில், மாங்குடி கரிய மருத அய்யனார் ஆலயம், மதிய நல்லூர் ஈஸ்வரர் ஆலயம், நீர்ப் பழனி லெட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம், நாஞ்சூர் விஸ்வநாத சுவாமி ஆலயம், நல்லம்மாள் சமுத்திரம் மந்தையம்மன் பிள்ளையார் ஆலயம், கருப்பூர் ஆலயம் ஆகிய கோவில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

98—

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள திருக்கோயில்கள் விவரம்.

வினா எண் *33101*—திரு.ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள திருக்கோயில்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள திருக்கோயில்கள் எண்ணிக்கை 888 ஆகும்.

99—

தாவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு கல்யாண மண்டபம் கட்டுதல்.

வினா எண் ***35476***—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வைத்தூர் ஊராட்சி, தாவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு அறநிலையத்துறையின் மூலம் கல்யாண மண்டபம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

100—

1992–ஆம் ஆண்டு வருகை தந்த சுற்றுலா பயணிகள் மற்றும் வருவாய் விவரம்.

வினா எண் ***16335***—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1992-ஆம் ஆண்டு வரை தமிழகத்திற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் எத்தனை பேர்?

(ஆ) அதன் மூலம் தமிழக அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) புள்ளி விவரங்களின் அடிப்படையில் 1992-ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு 4,03,424 அயல் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், 1,31,09,863 உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுமாக 1,35,13,287 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

(ஆ) இவர்களின் வருகையினால் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை ஒலி ஒளிக் காட்சி, பூம்புகார், சுற்றுலா வளாகம், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக்கோட்டை முதலியவற்றின் மூலமாகவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் தங்கும் விடுதிகள், சுற்றுலாப் போக்குவரத்துகள், படகு ஓட்டம், சுற்றுலாப் பொருட்காட்சிகள் முதலியவற்றின் மூலமாகவும் 1991-92-ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கு ரூ. 11,22,81,926 வருமானம் கிடைத்தது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

பதினொன்றாம் பட்டியல்.

1—

நத்தம் புறம்போக்கில் பட்டா வழங்குதல்.

வினா எண் 6955—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேதுபாவா சத்திரத்தில் நத்தம் புறம்போக்கில் சர்வே செய்தவர்களுக்கு விரைவில் பட்டா வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், சேதுபாவாசத்திரம் கிராமத்தில் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பட்டாக்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன:—

1. மொத்தம் வழங்கப்பட்ட பட்டாக்கள்—115.

தனிப்பட்டா	..	92
கூட்டுப்பட்டா	..	23

2. மொத்தம் பயனடைந்தவர்—186 நபர்கள்.

தாழ்த்தப்பட்டவர்கள்	..	29
மிகவும் பிற்பட்டோர்	..	67
பிற்பட்டவர்கள்	..	90
மொத்தம்	..	186

3. பட்டா வழங்கப்பட்ட பரப்பு .. 0.13 ச.கிமீ.

உட்பிரிவுகள் .. 313

2—

போலிச் சான்றிதழ் வழங்கிய விவரம்.

*வினா எண் **20534**—டாக்டர் மு. காளிராஜன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் 1991-92-ல் (ஆதி திராவிடர் என) கொடுக்கப்பட்ட போலிச் சான்றிதழ்கள் எத்தனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(ஆ) கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மதுரை மாவட்டத்தில் 1991-92-ல் ஆதி திராவிடர்கள் என்ற தகவலின் பேரில் போலிச் சான்றிதழ்கள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

(ஆ) எந்த அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3—

சலுகை விலையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு பொருட்கள் வழங்குதல்.

*வினா எண் **11891**—டாக்டர் அ. ஸ்ரீதரன்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொது விநியோக முறையில் சலுகை விலையில் விற்கப்படும் அரிசி, எண்ணெய் போன்ற பொருட்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

பொது விநியோக முறையில் சலுகை விலையில் விற்கப்படும் அரிசி, எண்ணெய் போன்ற பொருட்களை வசதி அற்றவர்களுக்கு மட்டுமே வழங்குவது தொடர்பான செயற்குறிப்பின் மீது இறுதி முடிவு எடுக்கும்

பொருட்டு அச்செயற்குறிப்பு தேசிய வளர்ச்சி மன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை இந்த அரசு இப்பிரச்சினை பற்றிய கொள்கை முடிவு எடுக்கவில்லை.

4—

தஞ்சாவூர் மாவட்டத்தில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்குதல்.

*வினா எண் **24322**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை பேராவூரணி, பட்டுக்கோட்டை, கும்பகோணம், ஒரத்தநாடு போன்ற பகுதிகளில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா 1994 பருவத்தில் தேவைக்கேற்ப 276 கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. சம்பா பருவம் முடிவடைந்துவிட்ட நிலையில் தற்சமயம் நேரடி கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து முற்றிலும் குறைந்து 31-5-1994 முதல் நேரடி கொள்முதல் நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை பேராவூரணி, பட்டுக்கோட்டை, கும்பகோணம், ஒரத்தநாடு போன்ற வட்டங்களில் குறுவை பருவத்திற்கு 1994 செப்டம்பர் மாதத்தில் தேவைக்கேற்ப நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

5—

ஊஞ்சலூரில் கூட்டுறவு அங்காடியை விரிவுபடுத்துதல்.

*வினா எண் **26600**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, ஊஞ்சலூரில் உள்ள கூட்டுறவு அங்காடியை அதிகப்படுத்த மூன்று கடைகளாக விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, ஊஞ்சலூரில் உள்ள கூட்டுறவு அங்காடியை அதிகப்படுத்தி மூன்று கடைகளாக விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் இல்லை. இக்கடையில் மொத்தம் 1,061 அட்டைகள்தான் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்டுள்ள குக்கிராமங்களும் கடையிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ளன.

6—

திருப்பத்தூர் தொகுதியில் குடும்ப கார்டுகள் வழங்குதல்:

வினா எண் *27762*—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் குடும்ப கார்டுகள் வேண்டி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) 1993-ல் கொடுக்கப்பட்ட குடும்ப கார்டுகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : திருப்பத்தூர் தொகுதியில் 31-10-1993 வரை பெறப்பட்ட 10,480 மனுக்களில் 7,035 தகுதியான மனுக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 3,445 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 1-11-1993 முதல் 25-4-1994 வரை பெறப்பட்ட மனுக்கள் 634. அவைகள் விசாரணையில் உள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

7—

புவனகிரி பேரூராட்சியில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் *33534*—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் உள்ள யாதவர் தெரு நத்தத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) தென் ஆற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் உள்ள யாதவர் தெரு நத்தத்தில் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டித் தர அரசிடம் திட்டம் ஏதும் இல்லை. மேலும், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணலூரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 4,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. ஆதலால், வேறு கிடங்கு கட்ட திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

8—

ரேஷன் கடைகளில் தினசரி மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை.

வினா எண் *35285*—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ரேஷன் கடைகளில் தினசரி மண்ணெண்ணெய் வழங்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், உணவு அமைச்சர்:

நியாய விலைக் கடைகளில் இருப்பைப் பொறுத்து, தினசரி மண்ணெண்ணெய் வழங்கப்படும் முறைதான் இருந்து வருகிறது. சுழல் முறைத் திட்டம் அமலில் உள்ள இடங்களில் அட்டைதாரர்களுக்கு, அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட நாட்களில் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

9—

விளாத்திக்குளம் தொகுதியில் சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **3394**—திருமதி என். கனகவல்லி:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திக்குளம் தொகுதிக்குட்பட்ட வேம்பார், பூதலபுரம் ஆகிய இடங்களில் சுகாதார நிலையக் கட்டிடம் கட்டும் பணி எந்த நிலையிலுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

வேம்பூர் மற்றும் பூதலபுரம் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

10—

உப்பிலியாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **27251**—திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி, எரகுடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

உப்பிலியாபுரம் தொகுதி, எரகுடி ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது ஒரு தனியார் கட்டிடத்தில் வாடகை இல்லா அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்தப்படவில்லை. பொது நன்கொடை செலுத்தப்படவில்லை.

தற்போது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

1994 நவம்பர் 3]

11—

கண்ணனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

*வினா எண் **27253**—திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி, கண்ணனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

கண்ணனூர் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான அரசுக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட 4.16 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பொது நன்கொடை ரூ. 10,000 தயாராக உள்ளது. புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

12—

முருக்கன்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **35748**—திரு. ஏ. தா. பொன்னுவேலு:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், முருக்கன்குடியில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் அரசு மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

முருக்கன்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ. 10.58 இலட்சத்தில் கட்டிடம் கட்ட அரசு ஆணை எண் 721, சுகாதாரம், நாள் 28-5-1993 மற்றும் அரசு ஆணை எண் 135, நாள் 10-2-1994-ல் அரசு ஆணை வழங்கப்பட்டு கட்டிடப் பணி நடைபெற்று வருகின்றது.

[1994 நவம்பர் 3

13—

வில்வகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் *36399*—திரு. என்.ஆர். இராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதி, வீரானந்தபுரம் ஊராட்சி, வில்வகுளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : வில்வகுளம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

அடைக்கத்தேவன் ஆலமரத்தடியில் பேருந்து நிறுத்துமிடம் அமைத்தல்.

வினா எண் *3034*—திரு.ஆர்.சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் ஆலமரத்தடியில் பஸ் நிறுத்துமிடம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கத்தேவன் ஆலமரத்தடி நகரப் பேருந்து நிறுத்துமிடம் ஆகும். இங்கு நகரப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுப் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

15—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள படுக்கை வசதி, குளிர் சாதன வசதி பற்றிய விவரம்.

*வினா எண் **7756**—திரு. எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மற்றும் எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களில் படுக்கை வசதியுடன் (Sleeping berth) கூடிய நீண்டதூர பேருந்துகள் இயங்குகின்றன.

(ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின்கீழ் குளுகுளு வசதியுள்ள நீண்டதூர விரைவு பேருந்துகள் எத்தனை இயங்குகின்றன ?

(இ) இது போன்ற மற்ற போக்குவரத்துக் கழகங்களில் குளு குளு வசதியுள்ள நீண்ட தூர விரைவுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றது.

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ), (ஆ) மற்றும் (இ) : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் படுக்கை வசதி கொண்ட மற்றும் குளு குளு வசதி கொண்ட நீண்ட தூர பேருந்துகள் ஏதும் இயக்கப்படவில்லை. ஆனால் புதிய போக்குவரத்துக் கழகமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நடப்பு ஆண்டில் (1994-95) 12 குளிர் சாதன மற்றும் ஒளி ஒலி அமைப்புகளைக் கொண்ட சொகுசுப் பேருந்துகள் கட்டப்படவுள்ளன. இவற்றில் தற்பொழுது 2 குளிர்சாதன பேருந்துகள் ஒளி ஒலி வசதியுடன் கட்டப்பட்டு சென்னையில் இருந்து அண்டை மாநிலங்களிலுள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் தடங்களில் இயக்கப்பட வேண்டும். இதே போக்குவரத்துக் கழகங்களில் குளு குளு வசதியுள்ள நீண்ட தூர விரைவுப் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1994 நவம்பர் 3

16—

மாட்டு வண்டிகளின் பின்புறம் சிவப்பு விளக்குகள் பொருத்துதல்.

வினா எண் 8050—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இரவு நேரங்களில் வரும் மாட்டு வண்டிகளுக்கு விபத்துக்கள் நேரா வண்ணம் தடுக்க அந்த வண்டிகளின் பின்புறம் சிவப்பு விளக்குகள் (Danger Signal) கண்டிப்பாகப் பொருத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையாளர்கள் மாட்டு வண்டிகளுக்கு விபத்துக்கள் நேராவண்ணம் அவ்வண்டிகளின் பின்புறம் சிவப்பு விளக்குகள் பொருத்த சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கடலூர் விழுப்புரம் ஆகிய பகுதிகளில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., கிழக்கு மாவட்டத்தில் யுனைட்டெட் இந்தியா நிறுவனம், தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களில் சோழன் போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம், மதுரையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகமும் மற்ற மாவட்டங்களில் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு மாட்டு வண்டிகளின் பின்புறம் சிகப்பு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

17—

வால்பாறை—திருநெல்வேலி இடையே திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்.

வினா எண் 8081—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

(அ) வால்பாறையிலிருந்து திருநெல்வேலிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : நிதி நெருக்கடி காரணமாக வால்பாறையிலிருந்து திருநெல்வேலிக்கு மதுரை வழியாகத் தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து உடனடியாக இயக்க இயலவில்லை. பொள்ளாச்சியிலிருந்து புறப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு வால்பாறையில் இடம் முன் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

18—

கரூர் வட்டம் பள்ளப்பட்டி நகருக்குப் பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் *10906 திருமதி கே. மரியம் உல் ஆசியா :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், பள்ளப்பட்டி வழியாகச் செல்லுகின்ற பேருந்துகளில் பெரும்பாலான பேருந்துகள் பள்ளப்பட்டி நகருக்குள் வருவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆமெனில், பள்ளப்பட்டி நகருக்குள் பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், பள்ளப்பட்டி கிராமத்திற்குள்ளும் பின்னர் பள்ளப்பட்டி பேருந்து நிலையத்திற்குள்ளும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தால் கரூர்-திண்டுக்கல் வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் சென்று வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

19—

பேராவூரணி—பெருமகளூர் நகரப் பேருந்தை கூடுதல் தடங்கள் இயக்குதல்.

*வினா எண் **12470**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து பெருமகளூர் செல்லும் நகரப் பேருந்தை பழுக்காடு, ருத்திரசிகாமணி வழியாக செல்ல அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

பேராவூரணி—பெருமகளூர் (வழி) ரெட்டவயல், பழுக்காடு, ருத்திரசிகாமணி, வெள்ளாலங்காடு தட நீளம் 20 கி.மீ. ஆகும். பழுக்காடு முதல் வெள்ளாளங்காடு வரையிலான 5 கி.மீ. சாலை பேருந்து இயக்க தகுதியற்றதாக உள்ளது. எனவே பேராவூரணியிலிருந்து பெருமகளூர் செல்லும் நகரப் பேருந்தை பழுக்காடு, ருத்திரசிகாமணி வழியாக இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

20—

பேராவூரணி-பட்டுக்கோட்டைக்கு நகரப் பேருந்து புதிய வழித் தடத்தில் இயக்குதல்.

*வினா எண் **13595**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து ஒட்டங்காடு—மதன் பட்டுவர்—கீழ்ப்புனவாசல்—வாடிக்காடு வழியாக பட்டுக்கோட்டைக்கு ஒரு புதிய வழித் தடம் ஏற்படுத்தி 1992-93-ல் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

1994 நவம்பர் 3]

21—

பேராவூரணி-இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **13766**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக இராமேஸ்வரத்திற்கு 1992-93-ல் ஒரு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இல்லை.

22—

பட்டுக்கோட்டைக்கு முடச்சிக்காடு மருங்கப்பள்ளம் வெளிமடம் வழியாக நகரப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **14600**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பேராவூரணியிலிருந்து முடச்சிக்காடு மருங்கப்பள்ளம், வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டை செல்ல ஒரு நகரப் பேருந்தை 1992-93-ல் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

கோரிக்கை வழித் தடத்தில் வீரயங்கோட்டை-மருங்கபள்ளம் வரை உள்ள ஒரு கி.மீ. கருங்கல் சாலை பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாக உள்ளது. இந்த ஒரு கி.மீ. பகுதியில் வாழும் மக்கள் பூங்கொல்ல மருங்கப்பள்ளம் சேதுபாவாசத்திரம் மற்றும் பூங்கொல்லை—வீரியங்கோட்டை., காரங்குடா தடப் பகுதிகளில் இயங்கும் பேருந்துகளின் மூலம் பேருந்து வசதி பெறுகின்றனர். அரசு கொள்கைப்படி பேருந்து வசதி பெற்ற தடங்களில் இருந்து ஒரு கி.மீ.க்குள் இருக்கும் கிராமங்கள் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாக கருதப்படும்.

[1994 நவம்பர் 3

23—

நல்லம்மாள்புரம் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் ***15135***—*திரு. எஸ். எஸ். ராமசுப்பு :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் தொகுதி மானூர் ஒன்றியத்திலுள்ள தென்கலம்புதூர் 33பி பேருந்தை நல்லம்மாள்புரம் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி வரை வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தடம் எண் 33பி நகரப் பேருந்து மகராஜநகர் மற்றும் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து தென்கலம்புதூருக்கு தினசரி 16 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் 6 சுற்றுக்களில் நல்லம்மாள்புரம் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி வழியாக புளியன்கோட்டாரம் வரை ஏற்கனவே இயக்கப்பட்டு வருகிறது. தவிர இப்பள்ளிக்கூடம் இப்பேருந்து இயங்கும் பிரதான சாலையிலிருந்து 0.3 கி.மீ. தூரத்திலேயே அமைந்துள்ளதால் இப்பேருந்தில் பயணிக்கும் மற்றும் ஊர் பொதுமக்களின் நலன்கருதி இப்பேருந்தை ஏனைய சுற்றுக்களில் நல்லம்மாள்புரம் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி வரை சென்று வரும்படியாக இயக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதலாம்.

24—

மாணவ—மாணவியர்களுக்கு தனி பேருந்து இயக்குதல்.

வினா எண் ***15155***—*திரு. கே. செல்வராஜ் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவ-மாணவியர் வசதிக்காக காலை-மாலை நேரங்களில் தனி பேருந்து விடப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தீரன் சின்னமலை, மருதுபாண்டியர், அன்னை சத்தியா, இராணி மங்கம்மாள், சேரன், பாண்டியன், பல்லவன், டாக்டர் அம்பேத்கார், பட்டுக்கோட்டை அழகிரி, கட்டபொம்மன், நேசமணி ஆகிய போக்குவரத்துக் கழகங்களினால் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பெண்களுக்காக காலை மற்றும் மாலை நேரங்களில் தனி பேருந்துகள் விடப்படுகின்றன. ஏனைய போக்குவரத்துக் கழகங்களின் மூலம் இயக்கப்படும் பேருந்துகள் பெரும்பாலும் காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளி மாணவ-மாணவியர் வசதிக்கு ஏற்ப போதிய அளவு இயக்கப்பட்டு வருகின்றன.

25—

கொள்ளிடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தி செல்லுதல்.

*வினா எண் **16359**—திரு. து. மூர்த்தி :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் திருவள்ளுவர் மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து நிற்காமல் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்களின் நலன் கருதி கொள்ளிடத்தில் பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மேற்படி தடத்தில் இயக்கப்படும் அண்ணா போக்குவரத்துக் கழக ஒரே பேருந்து சீர்காழி தொகுதியில் கொள்ளிடத்தில் நிறுத்தம் செய்து பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்லும்படி இயக்கப்படுகிறது. மேலும் கொள்ளிடத்தை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளுக்கு நிறுத்துமிடமாக அறிவித்து ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பயணிகளிடமிருந்து எவ்வித

புகாரும் கிடைக்கப்படவில்லை. இருந்தபோதிலும் பொது மக்களின் நலன் கருதி கொள்ளிடத்தில் திருவள்ளுவர் போக்குவத்துக் கழகப் பேருந்து நிறுத்தி செல்லுமாறு மீண்டும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

26—

பொன்னேரி—தொட்டிமேடு பேருந்து இயக்குதல்.

*வினா எண் **16575**—திரு. ஏ. ரவிக்குமார் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதியில் தொட்டிமேடு கிராமத்திற்கு பொன்னேரி தொட்டிமேடு பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தொட்டிமேடு கிராமம், பொன்னேரி-பழவேற்காடு தடத்தில் உள்ள திருப்பாலைவனத்திலிருந்து இடதுபுறமாக 2.00 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருப்பாலைவனத்திலிருந்து தொட்டிமேடு செல்லும் கிளைச் சாலை மிகவும் குறுகலாக இருப்பதாலும், தொட்டிமேடு கிராமம் வரை தற்போது சாலை சரியில்லாததாலும் பொன்னேரி தொட்டிமேடு தடத்தில் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

27—

பரமக்குடி, மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு பேருந்துகள் அதிகரித்தல்.

*வினா எண் **17200**—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கூடுதலாக பேருந்துகள் வேண்டி அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்பொழுது மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பரமக்குடி கிளையில் 26 நகரப் பேருந்துகளும் 24 புறநகரப் பேருந்துகளும் 6 உபரி பேருந்துகளும் ஆக மொத்தம் 56 பேருந்துகள் உள்ளன. மேலும் பேருந்துகள் அதிகரிப்பதற்கான செயற்குறிப்பு தற்பொழுது ஏதுமில்லை.

28—

மதுரை—பாப்பாபட்டிக்கு நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் **19640**—திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் இருந்து வாலாந்தூர் வழியாக பெரிய குறவக்குடி வரை செல்லும் பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை பாப்பாப்பட்டி வரை இயக்க அரசு வகை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மதுரையிலிருந்து பெரிய குறவக்குடி கிராமத்திற்கு பேருந்து பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படவில்லை. ஏனெனில் மேற்படி வழி தடத்தின் தூரம் நகரப் பேருந்துக்கு வரையறுக்கப்பட்ட தூரத்தை விட கூடுதலாக உள்ளது. மதுரையிலிருந்து பெரிய குறவைக்குடி வழியாக பாப்பாப்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

29—

விலவங்கோடு தொகுதியில் தடம் எண் 87 சாதாரணப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***20436***—*திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

விலவங்கோடு தொகுதி விளாத்துறை பேரூராட்சியின் வழியாகச் செல்லும் தடம் எண் 87 'வி' விரைவுப் பேருந்தை சாதாரண பேருந்தாக இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தடம் எண் 87-ல் தற்போது நேசமணி போக்குவரத்துக் கழகத்தினால் 'வி' விரைவுப் பேருந்து ஒன்றும் இயக்கப்படவில்லை. அந்தத் தடத்தில் சாதாரண பேருந்துகளே இயக்கப்பட்டு வருகின்றன. அவை போதுமான அளவில் உள்ளன.

30—

இயற்கை வாயுவைப் பயன்படுத்தி பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் ***20595***—*திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் இயற்கை வாயுவைப் பயன்படுத்தித் தற்போது இயக்கப்படும் பேருந்துகள் எத்தனை ?

(ஆ) இவற்றை மேலும் அதிகரிக்கும் திட்டம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 6 பேருந்துகள் இயற்கை எரிவாயு பேருந்துகளாக இயக்கத் தயார் நிலையில்

1994 நவம்பர் 3]

உள்ளது. இவற்றில் 2 பேருந்துகள் ஏற்கனவே எரிவாயு மூலம் இயக்கப்படுகின்றது.

தற்போது 2-ம் கட்ட சோதனை ஓட்டம் முடிந்த பின்பு தொழில்நுட்ப முறையில் பேருந்துகளை இயற்கை எரிவாயு மூலம் இயக்குவது பற்றி பரிசீலிக்கப்படும். அதற்கு பின்பு இயற்கை எரிவாயு பேருந்துகளுக்கு உபயோகப்படுத்துவதில் பொருளாதார கணிப்பு மேற்கொண்டு (Economic Feasibility) மூன்றாவது கட்டமாக இயற்கை எரிவாயு உபயோகத்தினை வர்த்தக ரீதியில் (Commercialisation) கொண்டு வர அழுத்த வாயு நிரப்பும் நிலையம் அமைக்க (Compressor Filling Station net work) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தில் முடிவு எடுத்தப் பின்பு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

31—

சங்கரன்கோவில்–ஊத்துமலை இடையே பேருந்து வசதி செய்து கொடுத்தல்.

*வினா எண் **20726**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலிருந்து ஊத்துமலை கிராமத்திற்கு சங்கரன்கோவிலிலிருந்து இரவு 6-00 மணிக்குமேல் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இரவு நேரத்தில் பேருந்து வசதியில்லா காரணத்தை கருத்தில் கொண்டு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 11 பேருந்து வாயிலாக 5-8-1993 முதல் சங்கரன்கோயிலிலிருந்து இரவு 8-30 மணிக்கு புறப்பட்டு ஊத்துமலை வழியாக வீராணம் வரை கூடுதல் சுற்று இயக்கப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

32—

சுரண்டை—கருவந்தா இடையே புதிய வழித்தடம் வழியாக பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் *20729*—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், அண்ணாமலைப்புதூர், மருதாத்தாள்புரம், மருக்கலாக்குளம், கங்கனாங்கிணறு கிராமங்களுக்கு சுரண்டையிலிருந்து கருவந்தா வழியாக புதிய பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

அண்ணாமலைப்புதூர் மருதாத்தாள்புரம், மருக்காலன்குளம், கங்கனாங்கிணறு ஆகிய கிராமங்கள் ஏற்கனவே பேருந்து வசதி பெற்றவையாகும். இக்கிராம மக்கள் தற்போது இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்தி கருவந்தாவிலக்கு, ஊத்துமலையிலிருந்து சுரண்டை செல்வதற்கு போதிய நகர மற்றும் புறநகர் பேருந்து வசதிகள் உள்ளன. எனவே கூடுதலாக பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை.

33—

வள்ளுவர் கோட்டத்திற்கு மைலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதிகளில் இருந்து பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் *20862*—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தாரால் வள்ளுவர் கோட்டத்திற்கு அல்லது வள்ளுவர் கோட்டம் வழியாக திருவல்லிக்கேணி, மைலாப்பூர் மற்றும் சாஸ்திரி நகர் போன்ற பல்வேறு குடியிருப்பு பகுதிகளிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றனவா ?

(ஆ) இல்லையெனில் இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பல்லவன் போக்குவரத்துக் கழகம்— திருவல்லிக்கேணி பகுதியிலிருந்து வள்ளுவர் கோட்டம் வழியாக பேருந்துகள் தடங்கள் 25, ஜே25, 25பி, மற்றும் 25ஈ ஆகியவற்றை இயக்குகிறது.

சாஸ்திரி நகர், அடையார் பகுதியிலிருந்து வள்ளுவர் கோட்டம் வழியாக தடங்கள் 47, 47எ, 47ஜெ, 47ஆர், பிபி47ஜெ, ஜெ47பி ஆகியவற்றை இயக்குகிறது. மைலாப்பூர் பகுதிக்கு மைலாப்பூர்-லஸ் பகுதியிலிருந்து தடம் 5பி, 12, 12பி, ஆகிய தடங்களில் ஏறி முறையே தி.நகர் மற்றும் பாண்டிபஜார் பகுதியை அடைந்து அந்த இடத்திலிருந்து வள்ளுவர் கோட்டம் வழியே செல்லும் 47 வரிசையில் உள்ள தடங்களில் ஏதேனும் ஒன்றில் பயணித்து வள்ளுவர் கோட்டத்தை அடையலாம்.

34—

தஞ்சாவூரிலிருந்து ஒரத்தநாடு திருவோணம் வழியாக பேராவூரணிக்கு பேருந்து இயக்குதல்.

வினா எண் **2116**0—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து ஒரத்தநாடு–திருவோணம்–ஊரணிபுரம் வெங்கரை, பூதலூர்–வாகொல்லக்காடு–திருச்சிற்றம்பலம் வழியாக பேராவூரணிக்கு ஒரு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர்—பேராவூரணி (வழி) ஒரத்தநாடு, திருப்புவனம் ஊரணிபுரம், வெங்கரை, பூவலூர், திருச்சிற்றம்பலம் தடத்தின் நீளம் 90 கி.மீ. ஆகும். கோட்டை, கொல்லைக்காடு வரை உள்ள 4 கி.மீ. தூரம் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இந்த நான்கு கி.மீ. தூரம் வரை மற்ற பகுதியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. எனவே கோரியுள்ள தடத்தில் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

35—

கிருஷ்ணகிரி—சென்னைக்கு திருப்பத்தூர் வழியாக பேருந்து இயக்குதல்.

வினா எண் 22988—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரியிலிருந்து சென்னை செல்லும் தடம் எண் 400 பேருந்தை திருப்பத்தூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்தின் தடம் எண் 400 சென்னையிலிருந்து கிருஷ்ணகிரிக்கு வாணியம்பாடி வழியாக இயக்கப்படுகிறது. இவ்வழித் தடத்தினை திருப்பத்தூர் வழியாக இயக்கினால் பயண நேரமும், பயணக் கட்டணமும் அதிகமாகும். எனவே வழித்தடத்தினை மாற்றம் செய்ய உத்தேசமில்லை.

36—

பரமக்குடி டெப்போவில் இருந்து இயங்கும் பேருந்துகளின் சராசரி தூரம் பற்றிய விவரம்.

வினா எண் 23582—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி டெப்போவில் இருந்து இயக்கும் நகரப் பேருந்துகளின் சராசரி தூரம் எவ்வளவு ?

(ஆ) மேலும் பேருந்துகள் வேண்டி அரசிடம் பரிந்துரை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது பேருந்துகள் கிடைக்கும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மருதுபாண்டியர் போக்குவரத்து கழகத்தின் பரமக்குடி பணிமனையில் இருந்து இயங்கும் நகரப் பேருந்துகளின் சராசரி தூரம் 30.00 கி.மீ. ஆகும்.

(ஆ) மற்றும் (இ) : பரமக்குடி பணிமனையில் 26 நகரப் பேருந்துகளும் 26 புறநகர் பேருந்துகளும் 4 உபரி பேருந்துகளும் ஆக 56 பேருந்துகள் இயங்கி வருகின்றன. முதுகுளத்தூர் கிளையிலிருந்து 5 நகரப் பேருந்துகள் பரமக்குடி வரை வந்து செல்கின்றன. பரமக்குடியில் நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் 58.08 விழுக்காடுகள்தான் உள்ளது. எனவே மேலும் நகரப் பேருந்து விடுவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

37—

பரமக்குடி—சென்னைக்குப் பேருந்து இயக்குதல்.

*வினா எண் **23583**—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி—சென்னைக்குப் பேருந்துவிட அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடி—சென்னைக்குப் பேருந்து விட பரிந்துரைகள் ஏதும் வரப்பெறவில்லை. தற்போது சென்னையிலிருந்து பரமக்குடிக்கு திருச்சி, புதுக்கோட்டை, திருப்பத்தூர் வழியாக ஒரு விரைவு பேருந்தும், கொட்டாம்பட்டி, சிங்கம்புனரி வழியாக ஒரு மற்றொரு பேருந்தும் திருவள்ளுவர் போக்குவரத்தால் இயக்கப்படுகின்றன. பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் அதிகரிக்கும்போது அதிகப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

38—

தடம் எண் 59 பேருந்தை மீண்டும் இயக்குதல்.

வினா எண் ***25689***—*திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் இருந்து இயக்கப்படும் தடம் எண் 59 பேருந்து மீண்டும் பழைய வழித்தடத்தில் இராதாபுரம் இருக்கன்துரை செட்டிகுளம் வழியாக பள்ளி நேரத்திற்கு கன்னியாகுமரிக்கு இயக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தடம் எண் 59ஏ புறநகர் பேருந்து தற்போது வள்ளியூரிலிருந்து பழைய வழித்தடமாகிய இருக்கன்துரை, செட்டிகுளம், அஞ்சுகிராமம் வழியாக கன்னியாகுமரி வரை பழைய நேரப்படியே பள்ளி நேரத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.

39—

பல்லவன் பேருந்துகளைச் சுத்தம் செய்ய கூடுதல் தண்ணீர் வசதி வழங்குதல்.

வினா எண் ***26013***—*திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

(அ) பல்லவன் பேருந்துகளைச் சுத்தப்படுத்தும் தானியங்கி இயந்திரங்களுக்குப் போதுமான தண்ணீர் இல்லாமையால் பேருந்துகள் சுத்தப்படுத்தப்படாமல் உள்ள நிலையை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போதுமான தண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைச் சுத்தப்படுத்தும் தானியங்கி இயந்திரங்களுக்கு போதுமான தண்ணீர் இல்லாத நேரங்களில் தண்ணீர் வெளியில் இருந்து வாங்கப்பட்டு தானியங்கி இயந்திரங்கள் இயக்கப்பட்டு பேருந்துகள் சுத்தம் செய்யப்பட்டன.

(ஆ) தற்பொழுது தண்ணீர் போதிய அளவு கையிருப்பில் இருப்பதால் இப்பிரச்சினை எழ வாய்ப்பில்லை.

40—

சுப்பலாபுரத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்குதல்.

வினா எண் **27004**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம் சங்கரன்கோவில் ஒன்றியம், சுப்பலாபுரத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

இராஜபாளையம் சங்கரன்கோவில் பிரதான சாலையில் உள்ள கரிவலம் வந்தநல்லூரிலிருந்து பிரிந்து சுமார் 7.0 கி.மீ. தொலைவில் உட்புறமாக அமைந்துள்ள சுப்பலாபுரம் என்ற இக்கிராமத்திற்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று தினசரி 8 நடைகளும், தனியார் புறநகர் பேருந்து ஒன்று வாயிலாக 10 நடைகளும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பாண்டியன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றும் இராஜபாளையத்திலிருந்து இக்கிராமம் வரை இயக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்துகளில் இவ்வூருக்கு செல்லும் பயணிகளின் விகிதாச்சாரம் குறைவாகவே காணப்படுவதால் சுப்பலாபுரத்திற்குக் கூடுதல் பேருந்து வசதி ஏற்படுத்தப்பட வேண்டிய அவசர சூழ்நிலை ஏதும் தற்போது எழவில்லை.

41—

சென்னை—செந்துறைக்குப் பேருந்து இயக்குதல்.

வினா எண் 27265—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து செந்துறைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சென்னை—செந்துறை வழித்தடத்தில் ஜெயங்கொண்டத்திலிருந்து செந்துறைக்குச் செல்லும் சாலை குறுகலான பஞ்சாயத்து சாலை ஆகும். இதில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளை இயக்குவது இயலாத ஒன்றாகும்.

42—

சித்தன்பச்சேரி கிராமத்திற்கு தனியாக பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் 27268—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், சித்தன்பச்சேரி கிராமத்திற்கு தனியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சித்தன்பச்சேரி என்ற சிறு கிராமம் தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வரும் பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 0.8 கி.மீ. தூரத்தில் நடந்து செல்லும் தொலைவிலேயே அமைந்துள்ளது. இக்கிராமத்தின் ஜனத்தொகை சுமார் 400 ஆகும். எனவே அரசின் கொள்கைப்படி.

1994 நவம்பர் 3]

தற்போது இக்கிராமம் பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படுகிறது. எனவே, இக்கிராமத்திற்கு தனிப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை எனக் கருதலாம்.

43—

சங்கரன்கோவில் நகரில் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் 27274—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்போது சங்கரன்கோவில் மையமாக வைத்து 15 நகரப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் அதன் அருகாமையில் அமைந்துள்ள கிராம மக்கள் பயன் பெறத்தக்க வகையில் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது காணப்படும் பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இப்போது இயக்கப்பட்டு வரும் நகரப் பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுவதால் சங்கரன்கோவில் நகரில் கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அவசியம் இல்லை எனக் கருதலாம்.

44—

வடக்கு ஆலங்குளத்திற்கு நிரந்தரமாக பேருந்து இயக்குதல்.

வினா எண் 27275—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் ஒன்றியம் வடக்கு ஆலங்குளத்திற்கு நிரந்தரமாக பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வடக்கு ஆலங்குளம் கிராமத்திற்கு தற்போது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக புறநகர் பேருந்து ஒன்று வாயிலாக 6 சுற்றுக்களும், தனியார் புறநகர் பேருந்து ஒன்று மூலம் 2 சுற்றுக்களும் மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று வாயிலாக 2 சுற்றுக்களும் ஆக மொத்தத்தில் தினசரி 10 சுற்றுக்கள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் நிரந்தரமாக இயக்கப்பட்டு வருகின்றன.

45—

தென்காசி நகரில் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்குதல்.

வினா எண் 27276—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி நகரில் நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தற்போது தென்காசி நகரை மையமாக வைத்து 31 நகரப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் அருகாமையில் அமைந்துள்ள கிராம மக்கள் பயன் பெறும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இப்போதுள்ள நகரப் பேருந்துகளே போதுமானதாக கருதப்படுவதால் தென்காசி நகரில் கூடுதல் நகரப் பேருந்துகள் ஏதும் இயக்கப்பட வேண்டிய அவசர சூழ்நிலை ஏதும் தற்போது எழவில்லை எனக் கருதலாம்.

46—

தென்காசி ஒன்றியத்தில் கூடுதல் பேருந்து இயக்குதல்.

வினா எண் 27277—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஒன்றியம் விஸ்வநாதப்பேரிக்குப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெரியபிள்ளை வலசை என்ற ஊராட்சியில் விஸ்வநாதபேரி என்ற ஊர் இல்லை. விஸ்வநாதபுரம் என்ற குக்கிராமம் உள்ளது. ஜனத்தொகை 2,640 கொண்ட இக்கிராமத்திற்கு தற்போது நாளொன்றுக்கு 9 நகரப் பேருந்துகள் மூலம் 98 சுற்றுகளும் 8 புறநகர் பேருந்துகள் மூலம் 36 சுற்றுகளும் பேருந்து வசதிகள் உள்ளன.

47—

திருப்பத்தூர் பல்வநத்தம் வழி மிட்டூர் ரெட்டி வலசை குரிசிலாபட்டு வழியாக நகரப் பேருந்து இயக்குதல்.

வினா எண் ***3311***—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் பல்வநத்தம் வழி மிட்டூர் ரெட்டி வலசை குரிசிலாப்பட்டு வழியாக நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

திருப்பத்தூர் ஆலங்காயம் பிரதான சாலையிலிருந்து மிட்டூர் பஞ்சாயத்தில் 3.4 கி.மீ. தூரத்தில் பல்வநத்தம் கிராமம் உள்ளது. மேற்படி 3.4 கி.மீ. தூர சாலை மிகவும் மேடு பள்ளமாகவும், பெரும் பெரும் ஜல்லிகளாகவும் உள்ளதாலும் சாலையின் குறுக்கே ஒரு காட்டாறு ஓடுவதாலும் சாலையின் குறுக்கே 3 பெரும் பாறைகள் இருப்பதாலும் சாலையின் ஓரத்தில் ஒரு இடத்தில் ஒரு பெரிய கிணறு இருப்பதாலும், போதிய பாதுகாப்பு இல்லாமையால் மேற்படி தடத்தின் வழியாக நகரப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

[1994 நவம்பர் 3

48—

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக பணிமனை உப்பிலியாபுரத்தில் அமைத்தல்.

வினா எண் ***36148***—*திரு. வி. ரவிச்சந்திரன் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் பேரூராட்சியில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் இன்னும் பணி துவக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிமனை தொடங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருச்சி மாவட்டம், துறையூர் தாலுகா, உப்பிலியாபுரம் கிராமத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பதற்காக புல எண். 99/3பி/4-ல் 2.63 ஏக்கர் நிலம் 1991 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்டது. ஆனால் குறுகிய இடை தூரமாகிய 16 கி.மீ. தூரத்தில் துறையூரில் ஒரு பணிமனை செயல்பட்டு வருகிறது. தற்பொழுது உப்பிலியாபுரத்தில் குறைந்த அளவே பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் அங்கு ஒரு பணிமனை அமைப்பது பொருளாதார ரீதியில் சிக்கனமாக இராது. எனவே, தற்சமயம் உப்பிலியாபுரத்தில் பணிமனை அமைக்கும் செயற் குறிப்பு இல்லை.

49—

எண்ணானி வயல் ஆதி திராவிடர் காலனிக்கு மின் இணைப்பு வழங்குதல்.

வினா எண் ***12205***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பாலத்தளி ஊராட்சி, எண்ணானி வயல் ஆதி திராவிடர் காலனி வீடுகளுக்கு 1992-93-ல் மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பாலத்தளி ஊராட்சி எண்ணானி வயல் ஆதிதிராவிடர் காலனி வீடுகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

50—

மடத்துக்காட்டில் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்தல்.

வினா எண் 13333—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மடத்துக்காட்டில் 1992-93-ல் தெரு விளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பேரவூரணி ஒன்றியம், மடத்துக்காட்டிற்கு ஆறு தெரு விளக்குகள் அமைக்கக் கோரி மனு பெறப்பட்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு இலக்கீட்டிற்கேற்ப 1993-94-ல் பணி முடிக்கப்படவுள்ளது.

51—

நேதாஜி நகருக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்.

வினா எண் 14577—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கைச் சேர்ந்த நேதாஜி நகருக்கு 1992-93-ல் குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கைச் சேர்ந்த நேதாஜி நகருக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தர விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

[1994 நவம்பர் 3

52—

போகனூர் ஒன்றியத்தில் மின் அழுத்தக் குறைவை நீக்க நடவடிக்கை.

வினா எண் ***15904***—*டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போகனூர் ஒன்றியத்தில் கீழம்பல் கிராமத்தைச் சுற்றி மின் அழுத்தம் குறைவாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) போகனூர் ஒன்றியத்தில் உள்ள கீழம்பல் கிராமப் பகுதிகளில் மின் அழுத்தம் சீராக நிலவும் பொருட்டு அங்கு புதிய 22 கே.பி. உயர் அழுத்தப் பாதை புதிய மின் பகிர்மாற்றி மற்றும் தாழ்வழுத்தப் பாதை அமைக்க ரூபாய் 2.14 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மேம்பாட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட்டு முடிவுற்றதும் மின் அழுத்தம் சீராகும்.

53—

மதுரையில் மேம்பாலங்கள் அமைத்தல்.

வினா எண் ***16583***—*திரு. ஓ. எஸ். அமர்நாத் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் பெரியார் பேருந்து நிலையம், அரசு இராஜாஜி மருத்துவமனை, நெல்பேட்டை, சிம்மக்கல், கீழ்வாசல் ஆகிய இடங்களில் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது திட்டமேதுமில்லை.

1994 நவம்பர் 3]

54—

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றி மேம்படுத்துதல்.

*வினா எண் **17234**—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளம் மற்றும் ஆறுகளில் தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அவற்றை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில், குளம் மற்றும் ஆறுகளில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகள் படிபடிப்படியாக வருவாய்த்துறை மற்றும் காவல் துறை உதவியுடன் அகற்றப்பட்டு வருகிறது. குளங்களை ஆழப்படுத்தும் வேலைகள் அரசின் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

55—

காரவலசு உபகிளையில் வாய்க்கால் கட்டுதல்.

*வினா எண் **19239**—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் சென்னசமுத்திரம் கிராமம், காரவலசு உபகிளையில் வாய்க்கால் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள காரவலசு வாய்க்கால் சென்னசமுத்திரம் முதன்மை வாய்க்கால் (*74.0.560*) இருந்து பிரியும் கிளை வாய்க்கால் (*7.0.225*) இருந்து பிரியும் உபகிளை வாய்க்கால் (*0.3.70*) உள்ள மதகு பற்றியதாகும். இதில் உள்ள அனைத்து மதகுகளும் *1994-95* ஆம் ஆண்டில் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம், பணிகள், காங்கேயம் உபகோட்டம் மூலம் மேற் கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

56—

கந்தர்வக்கோட்டை யூனியனில் தார் சாலை அமைத்தல்.

*வினா எண் **25212**—திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை யூனியன் தஞ்சாவூர் சாலையில் இருந்து அரியாகிப்பட்டிக்கு செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இச்சாலையின் பெயர் அரியானிப்பட்டி சாலை ஆகும்.

இச்சாலையின் மொத்த நீளம் 1.60 கி.மீ. ஆகும். இச்சாலை ஏற்கனவே கி.மீ. 0/0-1/0 வரை 1.00 கி.மீ. நீளம் தார் சாலையாக நல்ல நிலையில் உள்ளது. எஞ்சிய பகுதி கி.மீ. 1/0-1/6 வரை கப்பிச் சாலையாக உள்ளது. இப்பகுதியை தார்ச்சாலையாக்க தோராயமாக ரூ. 3.00 இலட்சம் தேவைப்படும். எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறையினால் ஊராட்சி ஒன்றிய பணிகளை எடுத்துச் செய்ய வழி வகை செய்யப்படவில்லை. எனவே இச்சாலையில் மேம்பாட்டுப் பணியை நெடுஞ்சாலை துறையின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது.

57—

ஓசூரில் வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளில் சிறப்பின ஓதுக்கீடு விவரம்.

*வினா எண் **26209**—திரு. கே. ஏ. மனோகரன் :* மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூரில் கட்டப்பட்டுள்ள தமிழ் நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு கட்டிடங்களில் சுதந்திரப் போராட்ட வீரர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பினமாக ஒதுக்க அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : 1993-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட அரசு ஆணையின்படி வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் அனைத்துத் திட்டங்களிலும், பத்திரிகையாளர்களுக்கு மூன்று சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த அரசு ஆணை ஒசூருக்கும் பொருந்தும்.

சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு மேற்கண்ட அரசு ஆணையின்படி கிடையாது.

தாழ்த்தப்பட்டோர், ஆதிதிராவிடர், மலை ஜாதியினர், சலவையாளர், முடிதிருத்துனர் மற்றும் பொது மக்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலிருந்து ஒரு விழுக்காடு இடம் அரசியல் தியாகிகளுக்கு, முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

58—

மெட்ரோ வாட்டர் நிறுவனத்திற்கு தண்ணீர் தொட்டிகள் செய்து வழங்குதல்.

Question Number 22219—Thiru M. Sundaradoss : Will Hon'ble Minister for Rural Industries be pleased to State—

(a) The rates at which contractors were selected for fabricating water tanks for Metro Water Board by Tamil Nadu Small Industries Corporation Limited and

(b) The basis for the fixation of these rates ?

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மெட்ரோ வாட்டர் நிறுவனத்திற்கு தண்ணீர் தொட்டிகளை துரிதமாக செய்து கொடுக்க வேண்டி இருந்ததால் அப்பணிக்காக வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மிகக் குறைந்த விலை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் சட்ட விதிகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. குறைந்த விலை கோரிய ஒப்பந்தக்கார நிறுவனம் குறிப்பிட்ட விலை விகிதத்தில் பணியினை முடித்துத்தர ஒப்புக்கொண்ட பிற நிறுவனங்களுக்கும் இப்பணி கொடுக்கப்பட்டுள்ளது.

59—

பரமக்குடி தொகுதியில் ஆழ்துளைக் கிணறுகளைச் சீரமைக்க நடவடிக்கை.

வினா எண் ***19385*****—***டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பரமக்குடி தொகுதியில் அரசால் ஏற்படுத்தப்பட்ட 39 ஆழ்துளைக் கிணறுகளில் பயன்படும் மூன்றைத் தவிர மற்றவற்றை பயன்படுத்தும் வகையில் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியில் (50:50 என்ற விகிதத்தில்) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அத்திட்டத்தின்கீழ், பரமக்குடி சட்ட மன்ற தொகுதியில் 1988-89 ஆண்டுக்கு முன்பு அமைக்கப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளின் எண்ணிக்கை 32 ஆகும். இவைகளில் 6 தற்போது பயன்படுபவைகளாகவும், 3, மின் இணைப்புப் பெற வேண்டிய நிலையில் உள்ளவைகளாகவும், 6 பிற துறைகளுக்கு ஒப்படைக்கப்பட்டவைகளாகவும் உள்ளன. 1988-89-க்கு பின்னர் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பணிகளில் (Eligible activities) இருந்து நீக்கம் செய்யப்பட்டது. பழுதடைந்துள்ள ஆழ்குழாய்க் கிணறுகளைச் சரி செய்து இயக்க ரூ. 1.90 இலட்சம் தேவைப்படுகிறது என, வேளாண்மை பொறியியல் தலைமை பொறியாளர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். பராமரிப்பு பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்ய விதிமுறையில் வழி இல்லை. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களின் பராமரிப்பு, மாநில அரசின் பொறுப்பாகும். எனவே பராமரிப்பிற்கு தேவையான நிதியை மாநில அரசு ஒதுக்க வேண்டும். இராமநாதபுரத்திலுள்ள சமுதாயக் கிணறுகளை பராமரிக்க நிதி ஒதுக்கீடு கோரி இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை அனுப்பியுள்ள கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. அச்செயற்குறிப்பில் எந்த தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வது என்று முடிவெடுத்தவுடன் மேற்படி ஆழ்குழாய் கிணறுகளுக்கு அந்த தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யும்.

60—

போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி ஆலையின் உற்பத்தி விவரம்.

வினா எண் 36324—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி ஆலை இலாபத்தில் இயங்குகின்றதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டுதோறும் எத்தனை டன் எண்ணெய் உற்பத்தி செய்கிறது?

விடை.—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி ஆலை இலாபத்தில் இயங்கவில்லை.

(ஆ) கடந்த மூன்றாண்டுகளின் எண்ணெய் உற்பத்தி அளவு கீழ்வருமாறு—

வ.எண்.	வருடம்.	எண்ணெய் உற்பத்தி அளவு. (மெ. டன்னில்)
(1)	(2)	(3)
1	1991-92	2,796
2	1992-93	2,432
3	1993-94	3,197

மேற்படி கழகம் ஆண்டுதோறும் எண்ணெய் உற்பத்தி அளவை கூட்டிவருகின்றது. எனினும், சந்தையிலுள்ள மற்ற நிறுவன எண்ணெய்களின் விலைக்கு ஏற்ப விற்பதாலும், சந்தையின் விற்பனை விலையில் ஏற்றத்தாழ்வு ஏற்படுவதாலும், உற்பத்தி செலவு அதிகம் ஆவதாலும் நட்டம் ஏற்படுகின்றது. நடைமுறை மூலதன பற்றாக்குறை, வங்கி மற்றும் பிற கடன்களால் ஈடு செய்யப்படுவதால் அதற்குரிய வட்டியின் காரணமாக நட்டம் மேலும் அதிகமாகிறது.

[1994 நவம்பர் 3

61—

சங்ககிரியில் தானியங்கி பால்வழங்கும் நிலையம் ஏற்படுத்துதல்.

*வினா எண் **23352**—டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் ஒரு தானியங்கி பால் வழங்கும் நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) சங்ககிரி மக்களின் பால் தேவை அதிக பட்சமாக 500 லிட்டர் ஆக இருப்பதால் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நாளொன்றுக்கு 300 லிட்டர் முதல் 500 லிட்டர் வரை தரமான ஆவின் பால் பாக்கெட்டுகள் இரண்டு முகவர்கள் மூலம் விற்பனை செய்து வருகின்றது. மேலும் தேவைப்படும் முகவர்களை நியமனம் செய்து விற்பனையை அதிகரிக்க ஒன்றியம் அனைத்து நடவடிக்கையும் எடுத்துள்ளது. எனவே தானியங்கி பால் வழங்கும் நிலையம் தனியாக அமைக்க நடைமுறையில் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

62—

கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை ஒழிக்க கண்காணிப்புக் குழு அமைத்தல்.

*வினா எண் **24715**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து நோயை ஒழிக்க உயர்மட்ட நோய் கண்காணிப்புக்குழு அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

கோழிகளுக்கு ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து நோயை ஒழிக்க ஒரு உயர்மட்ட நோய் கண்காணிப்புக் குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

63—

வணிகவரித்துறை உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

*வினா எண் **35144**—திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்திலுள்ள வணிகவரித்துறையில் உதவி ஆணையர் அலுவலகங்கள் எத்தனை?

(ஆ) அவற்றில் எத்தனை இடங்களில் அரசிற்குச் சொந்தமான கட்டிடம் உள்ளது.

(இ) அரசுக் கட்டிடம் இல்லாத இடங்களில் சொந்தமான கட்டிடம் கட்ட அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர்:

(அ) வணிகவரித் துறையில் மொத்தம் 98 உதவி ஆணையர் அலுவலகங்கள் உள்ளன.

(ஆ) அவற்றில் 92 அலுவலகங்கள் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் இயங்கிவருகின்றன.

(இ) அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு தனியார் கட்டிடங்களில் இயங்கும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு படிப்படியாக அரசுக் கட்டிடங்கள் கட்டத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

64—

பாலர்பள்ளி 'மைய' சத்துணவுக்கூடம் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***33779***—திரு. ஆர். தங்கராஜு: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் சட்டப்பேரவை தொகுதி நொட்டலக் குறிச்சி காலனியில் இருக்கின்ற பாலர்பள்ளி மைய சத்துணவுக்கூடம் இடிந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதை கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

ஆண்டிமடம் ஒன்றியம் நொட்டலக்குறிச்சி காலனியில் உள்ள குழந்தைகள் சத்துணவு மையக் கட்டிடம் இடிந்துள்ளதனை 'தாரா' திட்டத்தின்கீழ், பழுது நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

65—

விருதுநகர் தொகுதியில் சத்துணவுக் கூடங்கள் கட்டுதல்.

வினா எண் ***35633***—திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதியில் பழுதடைந்த சத்துணவு கூடங்கள் எத்தனை புதுப்பிக்கப்பட்டுள்ளன?

(ஆ) புதிதாக எத்தனை சத்துணவு கூடங்கள் கட்டப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத்துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் தொகுதியில் பழுதடைந்த கீழ்க்குறிப்பிட்டுள்ள சத்துணவு மையங்கள் தாரா நிதியில் பழுது பார்க்கப்பட்டது.

(1) கரைக்குண்டு ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி.

(2) வடமலைக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

(3) வள்ளியூர் குழந்தைகள் நல மையம்.

(4) உசிலம்பட்டி குழந்தைகள் நல மையம்

(5) பொட்டல்பட்டி குழந்தைகள் நல மையம்.

(6) சொட்டநத்தம் குழந்தைகள் நல மையம்.

(7) எட்டுநாய்க்கன்பட்டி குழந்தைகள் நல மையம்.

(8) நந்திரெட்டியப்பட்டி குழந்தைகள் நல மையம்.

(ஆ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட மூன்று புதிய மையங்கள் 1993-94 நிதி ஆண்டில் கட்டப்பட்டுள்ளன.

(1) தடங்கம்.

(2) குமாரலிங்கபுரம்.

(3) மீசலூர்.

66—

மரம் நடும் முக்கியத்துவத்தை மாணவர்களிடையே உணர்வு ஏற்படுத்துதல்

வினா எண் ***5335***—*டாக்டர் அ. ஸ்ரீதரன்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை ஓரங்களிலும், வீடுகளிலும் மரம் நடும் முக்கியத்துவத்தை பள்ளி மாணவர்களிடத்தில் வலியுறுத்த அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மரக்கன்றுகளை வளர்ப்பதற்கு வேண்டிய நாற்றங்கால் எழுப்பப்பட்டு, அதில் மரச் செடிகளை வளர்த்து வேண்டுபவர்களுக்கு கொடுப்பதோடு, அன்றி வனத்துறைக்கும் நாற்றுக்களை கொடுக்கும் வகையில் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் ஆர்வமுள்ள பள்ளி மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். நாற்றுக்கள் வளர்க்க பள்ளி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாணவர்கள் ஈடுபடும் பொழுது அதற்கான ஊதியமும் அந்தந்த பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டு, அதனை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பள்ளிக்கு வேண்டிய உபகரணங்கள் ஒலிபெருக்கிகள் தொலைக் காட்சிப் பெட்டிகள் போன்ற பொருட்கள் வாங்க அந்த தொகை உபயோகப்படுத்தப்படுகிறது. அய்யலூர் இடைபடு காடுகள் தோட்ட கிராமம் ஒன்றில் நாற்றங்கால் வளர்த்ததால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு கிணற்றிலிருந்து நீர் ஏற்றும் மோட்டாரும் குடிதண்ணீர் வசதியும் அப்பள்ளி பெற்றுள்ளது. நகர்ப்புறங்களிலுள்ள பள்ளிகளில் மாணவர்கள் மரச் செடிகள் வளர்த்தலில் ஈடுபாடு கொண்டால், அவர்களுக்கு அதற்கு வேண்டிய பயிற்சியும் தொழில் நுட்ப உதவியும் கொடுத்து உதவ வனத்துறை சமூக காடுகள் பிரிவு தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளது. கிராமப்புறங்களில் மரச் செடி நாற்றுக்கள் வளர்க்க வேண்டிய தேவையான விதை, பாலிதீன் பை, நீர் ஊற்றும் வசதி, நாற்றங்கால் அமைக்க இடம் முதலியவைகளை வனத்துறையின் சமூகக் காடுகள் பிரிவு கொடுத்து, பள்ளி மாணவர்கள் தங்கள் சொந்த உழைப்பால் நாற்றுக்களை வளர்த்து, தேவையானவர்களுக்கு கிராமப் புறங்களில் அந்த நாற்றுக்களை விற்கவும் வசதியாகப் பரிட்சார்த்த முறையில் ஒரு திட்டம் தற்பொழுது செயல் படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி மாணவர்களுக்கு மரங்களின் அவசியத்தையும் சுற்றுப்புற சூழலையும், பாதுகாத்து மேம்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும், வன அலுவலர்கள் அடிக்கடி பள்ளிகளில், கூட்டங்களில் கலந்துக் கொண்டு உரையாற்றுகின்றனர்.

67—

பட்டுக்கோட்டை வட்டத்தில் கருவேல் மரங்களை ஊராட்சியிடம் ஒப்படைத்தல்.

வினா எண் 16174—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம் அலிவலம் முடதாலி ஏரியில் உள்ள கருவேல் மரங்களை ஊராட்சியிடம் ஒப்படைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?,

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை வட்டம், அலிவலம் முடதாலி ஏரியிலுள்ள கருவேல் மரங்களை ஊராட்சியிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு `அரசிடம் இல்லை.

1994 நவம்பர் 3]

68—

ஜவ்வாது மலையில் சந்தனக் கட்டையின் மூலம் கிடைத்த வருவாய் விவரம்.

வினா எண் ***22676***—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலை, சந்தனக் கட்டையால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. சு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

ஜவ்வாது மலைப் பகுதிகளில் கடந்த ஐந்தாண்டுகளில் களைந்தெடுத்த சந்தன மரங்கள் விவரம் மற்றும் அவற்றை விற்பனை செய்வதால் கிடைத்த/ கிடைக்கக்கூடிய உத்தேச வருமானம் பின்வருமாறு:—

வருடம்.	கடந்த ஐந்தாண்டுகளில் ஜவ்வாது மலையில் களைந் தெடுக்கப்பட்ட சந்தன மரங்களின் எண்ணிக்கை/ அளவு.		கடந்த ஐந்தாண்டு களில் ஜவ்வாது மலையில் களைந் தெடுக்கப்பட்ட மரங் களை விற்பனை செய்வதால் கிடைத்த/ கிடைக்கக் கூடிய உத்தேச வருமானம்.
(1)	(2)		(3)
		(டன்கள்)	ரூபாய் கோடியில்.
1989-90	7,390 மரங்கள்	200	3.33
1990-91	8,466 மரங்கள் 1,047 வேர்கள்	227	4.60
1991-92	16,073 மரங்கள் 5,335 வேர்கள்	465	10.28
1992-93	22,194 மரங்கள் 9,637 வேர்கள்	650	14.64
1993-94	19,537 மரங்கள் 6,085 வேர்கள்	500	·11.36

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

69—

புதூர் நாடு—சிங்காரப்பேட்டை வனத்துறை சாலைகளை சீர்செய்தல்.

வினா எண் 25009—*திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலை, புதூர் நாடு முதல் சிங்காரப்பேட்டை வரை உள்ள வனத்துறை சாலைகள் சீர் செய்து கொடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

ஜவ்வாது மலை புதூர் நாடு முதல் சிங்காரப்பேட்டை வரை உள்ள வனச்சாலை 1990-91ம் ஆண்டில் அமைக்கபபட்ட சாலையாகும். இச் சாலையின் மொத்த நீளம் சுமார் 25.70 கி.மீ. ஆகும். இச் சாலை தற்போது மண் சாலையாக உள்ளது. இச் சாலையினை கப்பிச் சாலையாக மாற்றும் பணி கடந்த மூன்று ஆண்டுகளாக வனப் பொறியியல் கோட்டம் மூலம் வேலை தொடங்கப் பெற்று சுமார் 8.0 கி.மீ. தூரம் பணி நடை பெற்று வருகிறது. இச் சாலையினை தினக் கூலியாட்கள் மூலம் (Gang Mazdoor) பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சாலையினை தார் சாலையாக மாற்ற முற்பட்டால் இப் பகுதியில் உள்ள விலை உயர்ந்த சந்தன மரங்கள் வசதியாக வாகனங்கள் மூலம் கடத்தப்பட அதிக வாய்ப்பு உள்ளது. இச் சாலை செல்லும் வழியே ஒரு சில சிறிய கிராமங்களே உள்ளதாலும், அக் கிராமங்களிலும் அதிக அளவில் மக்கட் தொகை இல்லாத காரணத்தாலும் இச் சாலையினை தார் சாலையாக மாற்ற அவசியம் எழவில்லை. இச் சாலையினை முழுவதுமாக கப்பிச் சாலையாக மாற்ற ஒவ்வொரு ஆண்டும் பகுதி பகுதியாக பணி மேற்கொள்ளப்படும்.

70—

ஆங்கிலோ இந்திய பள்ளிக் குழந்தைகளுக்கு தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்துதல்.

Question No. 8875—Dr. Beatrix D'Souza: Will the Hon'ble Minister for Education be pleased to state—

Whether the Government will consider free coaching class in Tamil in specified centres for Anglo-Indian Children?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஆங்கிலோ இந்தியப் பாடத் திட்டத்திலேயே தமிழை இரண்டாவது மொழியாகப் படிக்க விதிமுறை உள்ளது. பெரும்பாலான ஆங்கிலோ இந்திய மாணவர்கள் அவர்களது பள்ளிகளில் தமிழை இரண்டாவது மொழியாகப் பயில்கின்றனர். வெளி நாடு செல்ல வாய்ப்புகள் ஒரு சில பெற்றோர்களின் குழந்தைகள் மட்டும் பள்ளிக் கல்வி இயக்குநரின் அனுமதியின் பேரில் பிரெஞ்சு மற்றும் இந்தி ஆகிய மொழிகளை இரண்டாவது மொழியாக பயில்கின்றனர். மொழிவாரியான சிறுபான்மை இன மாணவர்கள் அவர்களது தாய் மொழியோடு தமிழையும் படிக்க வேண்டுமென்று விரும்பினால் பள்ளி நேரம் முடிந்த மற்ற நேரங்களில் தமிழை கற்கலாம் என்று 1971 ஆம் ஆண்டிலேயே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்காக அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியர்களே, மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஏற்பாடு செய்வார்கள். எனவே, அந்த ஆங்கிலோ இந்தியப் பள்ளி தலைமையாசிரியர்களே ஆங்கிலோ இந்திய மாணவர்கள் தமிழை இலவசமாக பயில ஏற்பாடு செய்வார்கள்.

71—

வால்பாறை தாலூகா மற்றும் ஆனைமலை ஒன்றியத்தில் பள்ளிக் கட்டிடங்களை மேம்படுத்துதல்.

வினா எண் *10739*—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தாலுக்கா மற்றும் ஆனைமலை ஒன்றியத்திற்கு உட்பட்ட பள்ளிகளில் கட்டிடம் கட்டுவதற்கும், பராமரிப்பபதற்கும் பொதுப் பணித் துறையில் எவ்வளவு பணம் ஆண்டு ஒன்றுக்கு செலவிடப்படுகிறது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வால்பாறை தாலுக்கா மற்றும் ஆனைமலை ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளிகளுக்குப் புதிதாக கட்டிடம் கட்டப்படவில்லை. பராமரிப்பு பணிகளுக்கு 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 41,438.00-ம் 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 42,974.00 மற்றும் 1992-93 ஆம் ஆண்டில் ரூ. 30,000 மும் செலவு செய்யப்பட்டுள்ளது.

72—

பர்கூரில் மகளிர் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 27436—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் பர்கூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகளிர் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், பர்கூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகளிர் கல்லூரிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக, தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுக்கா, அன்கி நாயனஹள்ளி கிராமத்தில் 9.46 ஏக்கர் நிலத்தை பேசித் தீர்த்தல் குழு மூலம் (Private Negotiation Committee) வாங்க, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. நிலம் வாங்கப்பட்ட பின்னர் கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்படும். இக்கல்லூரி தற்போது பர்கூர், அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் மூன்று வகுப்புக்களில் செயல்பட்டு வருவதால், இக் கட்டிடத்திற்கு மேல் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 6.32 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

73—

பரமக்குடியில் நூலக கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 33516—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நூலகக் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இல்லை.

1994 நவம்பர் 3]

74—

புவனகிரி ஒன்றியத்தின் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **33548**—செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், மேல்புவனகிரி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல் நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேல்புவனகிரி அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல் நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகக் கட்டிட மதிப்பீட்டில் 50 சதவீதம் தொகையை கட்ட முன் வருமானால் இப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படும்.

75—

தாண்டாம்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிட வசதி ஏற்படுத்துதல்.

*வினா எண் **33891**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், தாண்டாம்பாளையம் அரசு உயர் நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தாண்டாம்பாளையம் அரசு உயர் நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகக் கட்டிட மதிப்பீட்டில் 50 சதவீதம் தனது பங்குத் தொகையாக செலுத்த முன் வருமானால் இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

76—

அரவக்குறிச்சி அரசினர் மேல் நிலைப் பள்ளிக் கட்டிடத்தை பழுது பார்த்தல்.

*வினா எண் **34013**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரவக்குறிச்சி அரசினர் மேல்நிலைப் பள்ளி பழுதடைந்த கட்டிடத்தைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற் குறிப்பு ஏதுமில்லை.

77—

பெரிய திருமங்கலத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **34042**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பெரிய திருமங்கலத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

78—

சோபனபுரம் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **34398**—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, சோபனபுரம் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

79—

வடலிவிளை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***35675***—டாக்டர் எம். மோசஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதி, வடலிவிளை அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

நாகர்கோவில் தொகுதி, வடலிவிளை அரசு உயர்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகம் கட்டிட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் தன்னுடைய பங்காகச் செலுத்தி கட்டிடம் கட்ட முன் வருமானால் மீதி 50 சதவிகிதம் பங்குத் தொகையை அரசு செலுத்தி மேற்படி பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

80—

தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரிக்குக் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்.

வினா எண் ***36486***—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூரில் உள்ள தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரிக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வேலூர், தனபாக்கியம் கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, ஒரு அறக்கட்டளையால் தொடங்கப்பட்ட அரசு நிதியுதவி பெறும் கல்லூரியாகும். அவ்வறக்கட்டளையின் நிறுவனர் காலமானதால் அவருடைய இளைய சகோதரர் அறக்கட்டளை தலைவரானார். அவருடைய காலத்தில் நடந்த நிதி முறைகேடுகள் மற்றும் சட்ட ஒழுங்குப் பிரச்சினை காரணமாக இக் கல்லூரி நிர்வாகத்தை 17-7-81 முதல் அரசே ஏற்றுக்கொண்டு சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வி துணை இயக்குநரைப் பாதுகாவலராக (care taker) நியமித்தது. அவரே இக்கல்லூரியின் பாதுகாவலராக தற்போது இருந்து வருகிறார். கல்லூரி நிர்வாகிகளுக்கிடையே வாரிசுரிமை குறித்து பரஸ்பர வழக்குகள் நிலுவையாக உள்ளன. இந்நிலையில் இக்கல்லூரியை அரசுக் கல்லூரியாகக் கருதி அடிப்படை வசதிகளை அரசே செய்ய இயலாது. தனியார் கல்லூரிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை அந்தந்தக் கல்லூரி நிர்வாகத்தின் சொந்தச் செலவில்தான் செய்து கொள்ள வேண்டும்.

81—

நியாயவிலைக் கடைகளில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் விவரம்.

வினா எண் *16305*—*திரு. ப. ரங்கநாதன்:* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகளில் ஏற்படும் இருப்புக் குறைவு குறித்து நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மண்டல அதிகாரிகளால் 1991 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் மாவட்ட வாரியாக எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

நியாயவிலைக் கடைகளில் ஏற்படும் இருப்பு குறைவு குறித்து கூட்டுறவுத் துறை அலுவலர்களாலும், நுகர்வோர் பாதுகாப்புத் துறை அதிகாரிகளாலும் 1991-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் மாவட்ட வாரியாகப் பின்வருமாறு:—

1994 நவம்பர் 3]

வ.எண்.	மாவட்டத்தின் பெயர்.	கூட்டுறவுத் துறை அலுவலர்களால் கண்டுபிடிக்கப் பட்டவை.	நுகர்வோர் பாதுகாப்புத் துறை அதிகாரி களால் கண்டு பிடிக்கப்பட்டவை.
(1)	(2)	(3)	(4)
1.	சென்னை	2,323	4,616
2.	செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்.	396	400
3.	வடாற்காடு-அம்பேத்கர்	1,121	498
4.	தருமபுரி	1,332	2,686
5.	சேலம்	1,859	1,395
6.	பெரியார்	313	336
7.	கோயம்புத்தூர்	891	1,492
8.	நீலகிரி	204	326
9.	தென்னாற்காடு	287	1,292
10.	தஞ்சாவூர்	1,630	438
11.	திருச்சிராப்பள்ளி	1,709	774
12.	புதுக்கோட்டை	227	689
13.	மதுரை	232	656
14.	திண்டுக்கல்-அண்ணா	441	702
15.	இராமநாதபுரம்	28	158
16.	காமராசர்	160	121
17.	பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர்	147	472
18.	திருநெல்வேலி-கட்டபொம்மன்	504	236

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)
19.	சிதம்பரனார்	327	149
20.	கன்னியாகுமரி	212	363
21.	நாகப்பட்டினம்-காயிதே மில்லத்	0	0
22.	திருவண்ணாமலை-சம்புவராயர்	0	99
	மொத்தம்	14,343	17,890

82—

பொக்கன்விடுதி கிராமத்தில் சி.எம்.பி. வாய்க்காலில் பாலம் கட்டுதல்.

வினா எண் 7034—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பொக்கன்விடுதி தெற்கு கிராமத்தின் ஓரத்தில் சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பொக்கன் விடுதி தெற்கு கிராமத்தின் ஓரத்தின் சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டுவதற்கு ரூ.70,000 உத்தேச மதிப்பீடு ஆகும். நிதி வசதி இல்லாததால் இப்பணியை தற்போது எடுத்துச் செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

83—

குளக்குடி ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் 7079—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

தஞ்சை மாவட்டம் சேதுபவாசத்திரம் குளக்குடியில் ஊராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம், குளக்குடி ஊராட்சிக்கு ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம் 1992-93 ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் (கூடுதல் திட்டம்) ரூ 87,000 மதிப்பீட்டில் வேலை அனுமதிக்கப்பட்டு ஊராட்சி மன்ற அலுவலக் கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.

84—

திண்டுக்கல் வட்டப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் *8373*—ஏ—திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம், வேடசந்தூர், அழகாபுரி அணையிலிருந்து திண்டுக்கல் வட்டப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) திண்டுக்கல், அண்ணா மாவட்டம், வேடசந்தூர் அழகாபுரி அணையிலிருந்து திண்டுக்கல் வட்டப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

85—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் சாலையை மேம்படுத்துதல்.

வினா எண் *11635*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பாளமுத்திபள்ளி சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பாளமுத்திபள்ளி சாலையின் மொத்த நீளம் 600 மீட்டரில் 300 மீட்டர் சாலையை செம்மண் கப்பிச் சாலையாக 1991-92ல் மேம்பாடு செய்யப்பட்டுவிட்டது. மீதமுள்ள சாலையை வரும் ஆண்டில் நிதி நிலைமைக்கேற்ப மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

86—

சூரன்காடு-சூரப்பள்ளம் குளம் சாலையை மேம்படுத்துதல்.

வினா எண் ***11663***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், சூரன்காடு-சூரப்பள்ளம் குளம் சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சூரன்காடு-சூரப்பள்ளம் சாலையின் நீளம் 0.6 கி.மீ. இச்சாலை ஏற்கனவே செம்மண் கப்பிச் சாலையாகவுள்ளது. எனவே இச்சாலையை மீண்டும் செம்மண் கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

87—

மகிழங்கோட்டை சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் ***11461***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டான்-மகிழங்கோட்டை சாலையை 1992-93ல் தார்ச்சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பள்ளிக்கொண்டான்-மகிழங்கோட்டை சாலையின் நீளம் 5.6 கி.மீ. இச்சாலை 1990-91ல் கருங்கல் கப்பிச் சாலையாக மாற்றப்பட்டது. இதை தார்ச் சாலையாக மாற்ற ரூ. 11.00 இலட்சம் செலவாகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் இச்சாலையை தார்ச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

88—

பழைய பேராவூரணியில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **11484**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பழைய பேராவூரணியில் 1992-93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணித் தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பழைய பேராவூரணியில் 1992-93-ல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

89—

திட்டக்குடி-சூரன்காடு சாலையை கப்பிச்சாலையாக மாற்றுதல்.

*வினா எண் **11646**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், திட்டக்குடி-சூரன்காடு சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திட்டக்குடி-சூரன்காடு சாலையை நிதிப் பற்றாக்குறை காரணமாக செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

90—

வீரியங்கோட்டை மண் சாலையைச் செப்பனிடுதல்.

வினா எண் *12060*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பையிலிருந்து பள்ளிவாசல் வழியாக வீரியங்கோட்டை செல்லும் மண்சாலையை செப்பனிட்டு அதனை கப்பிச் சாலையாக 1992-93-ல் மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

குருவிக்கரம்பையிலிருந்து பள்ளிவாசல் வழியாக வீரியங்கோட்டை செல்லும் 2 கி.மீ. நீளமுள்ள இச்சாலை தற்போது சிகப்பு கப்பிச் சாலையாக உள்ளது. இதனை மேம்படுத்த ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி வசதி இல்லாததால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

91—

இத்திக்குளம் ஒன்றியப் பள்ளி மற்றும் சமையற் கூடங்களைப் பராமரித்தல்.

வினா எண் *15053*—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், இத்திக்குளத்திலுள்ள ஒன்றியப்பள்ளி மற்றும் சமையற் கூடங்களைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம், இத்திக்குளத்திலுள்ள ஒன்றியப் பள்ளி மற்றும் சமையல் கூடங்கள் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு 5-8-1993-ல் முடிவடைந்து விட்டது.

92—

பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சிக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***16164***—திரு. ***ஆர். சிங்காரம்:*** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருகோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சிக்கு 1992-93-ல் அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெற்கு) ஊராட்சியில் 1989-90-ல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் ஊராட்சி அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு தற்பொழுது செயல்பட்டு வருகின்றது.

93—

குளிச்சார் கிராமத் தொடக்கப்பள்ளிக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்.

வினா எண் *16797*—திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, குளிச்சார் கிராமத்தில் தொடக்கப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதி, குளிச்சார் கிராமத்தில் உள்ள பழுதடைந்த தொடக்கப் பள்ளிக் கட்டிடம் ரூ. 5,000 மதிப்பீட்டில் பழுது நீக்குவதற்கான வேலை துவக்கப்பட்டு தற்போது முடியும் தருவாயில் உள்ளது.

94—

புத்தூர்-கல்லாக்கா பாலத்தி ஒன்றியத்தில் சாலை அமைத்தல்.

*வினா எண் **23118**—திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, புத்தூர் கிராமத்திலிருந்து கல்லாக்கா-பாலத்தி ஒன்றியம் சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலை அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புத்தூர் கிராமத்தில் உள்ள கல்லாக்கா-பாலத்தி என்ற இடத்தில் மக்கள் யாரும் வசிப்பதில்லை. மேற்படி இடம் ஊர் மக்கள் சாமி கும்பிடும் இடமாக மட்டுமே உள்ளதால் சாலை அமைக்க ஒன்றிய அளவில் எந்தவிதத் திட்டமும் இல்லை.

95—

காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **24827**—திரு. கா.பூ. முனுசாமி:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

96—

புதுக்கோட்டை ஒன்றியத்தில் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிட வசதி.

*வினா எண் **25452**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், ஏ. மாத்தூர் மற்றும் மூக்கம்பட்டி, புத்தாம்பூர் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு கூடுதல் கட்டிட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை ஒன்றியம், ஏ. மாத்தூர் மற்றும் மூக்கம்பட்டி, புத்தாம்பூர் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்குக் கூடுதல் கட்டிடம் நடப்பு நிதியாண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் அல்லது வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும்.

97—

பழங்குடி மக்களுக்கு இட ஒதுக்கீடு விவரம்.

*வினா எண் **21329**—திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள படித்த பழங்குடி மக்களுக்கு அனைத்து அரசுத் துறைகளிலும் ஒரு சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறதா?

[1994 நவம்பர் 3

(ஆ) இன்னும் எந்தெந்தத் துறையில் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இட ஒதுக்கீடு குறித்து வேலை முறைபட்டியலில் (Roster) பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள முறை வரும்பொழுது அனைத்துத் துறைகளிலும் பழங்குடியினர் நியமிக்கப்படுவார்கள்.

98—

மதுரை கே. புதூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் கட்டுதல்.

வினா எண் *22329*—டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கே.புதூர் ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதி, பள்ளி மாணவர் விடுதி, தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கான விடுதிகள் ஒரே கட்டிடத்தில் நடந்து கொண்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவற்றிற்கு தனித்தனியே விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மதுரை கே. புதூரில் ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, பள்ளி மாணவர் விடுதி மற்றும் தொழிற் பயிற்சி மாணவர்களுக்கான விடுதி ஒரே கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. கூடுதல் அறைகள் கட்டுவதற்கும், இடநெருக்கடியை சமாளிக்க ஒரு விடுதியை வாடகைக் கட்டிடத்திற்கு மாற்றுவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

99—

சங்ககிரி தொகுதியில் தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் விவரம்.

வினா எண் ***25539***—*டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாட்கோ திட்டத்தின்கீழ் (Individual Entrepreneur Scheme) *சங்ககிரி தொகுதியின் பயனாளிகள் எத்தனை பேர்?*

(ஆ) முழு விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் சங்ககிரி தொகுதியில் 1989-90 ஆம் ஆண்டு முதல் 1993-94 ஆம் ஆண்டு வரை மொத்தம் 16 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

100—

தலைவாசல் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு வசதிகள் அளித்தல்.

வினா எண் ***25595***—*திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டம் தலைவாசலில் உள்ள அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், தலைவாசல் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி மாணவர்களுக்கென தனியாக விடுதிக் கட்டிடம் இல்லாததால், தலைவாசல் பள்ளி மாணவர் விடுதியில், கல்லூரி விடுதி மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் போதுமான இடவசதி உள்ளது. அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குளியலறை, கழிவறை போன்ற வசதிகள் இல்லாமல் இருந்தது. இவ்வசதிகள் கடந்த மார்ச் மாதத்தில் செய்து முடிக்கப்பட்டன.

பன்னிரெண்டாம் பட்டியல்.

1—

கொடுமுடியில் சார்நிலைக் கருவூலம் கட்டுதல்.

வினா எண் 27286பி—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடியில் பொதுமக்கள் இலவசமாக அளிக்கும் நிலத்தில் சார்நிலைக் கருவூலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

கொடுமுடி, ஊர் பொதுநலக்கமிட்டித் தலைவர் அவர்கள் சார்நிலைக் கருவூலக் கட்டிடம் கட்ட 4.872 சென்ட் நிலத்தை ஒதுக்கித் தர முன்வந்துள்ளார். அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிலை முன்மாதிரி வடிவமைப்பு எண். 613/20ஆர் படி 20 சென்ட் நிலமும், எண். 3993/1ன்படி கட்டிடம் கட்ட 10 சென்ட் நிலமும் தேவைப்படுகிறது. அவசியமான மிகக் குறைந்த 10 சென்ட் நிலத்தை ஒதுக்கித் தர ஊர் பொது மக்கள் முன்வந்தால், மேற்படி நிலம் சார்நிலைக் கருவூலக் கட்டிடம் அமைய தகுதி வாய்ந்ததாக இருப்பின் கட்டிடம் கட்டுவது குறித்துப் பரிசீலிக்கலாம்.

2—

தமிழக அரசுக்கு லாட்டரிச் சீட்டு விற்பனை மூலம் கிடைத்த வருவாய் விவரம்.

வினா எண் 36554—**திரு. சிங்கை கோவிந்தராசு:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசுக்கு லாட்டரிச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் ஆண்டு வருவாய் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

தமிழக அரசுக்கு லாட்டரி சீட்டு விற்பனை மூலம் அரசுக்குக் கிடைக்கும் ஆண்டு வருவாய் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 3]

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு வரவு-செலவுப் பட்டியல்.

வருடம்.		மொத்த வருவாய்.	மொத்த செலவு.	நிகர வருவாய்.
(1)		(2)	(3)	(4)
			(ரூபாய் இலட்சத்தில்.)	
1968-69	..	716.14	255.73	469.41
1969-70	..	704.51	333.74	370.79
1970-71	..	850.10	417.37	435.73
1971-72	..	710.97	279.46	431.51
1972-73	..	250.12	153.55	96.97
பாதுகாப்பு நிதி				
(1971-73)	..	236.41	24.03	212.33
1973-74	..	238.52	117.68	120.84
1974-75	..	256.93	148.92	108.01
திட்டம் தடை செய்யப்படுவதற்கு முன்னால்—				
1975-76	..	185.19	128.13	57.06
திட்டம் மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட்ட பிறகு—				
(1976-77)	..	336.53	140.09	196.44
1977-78	..	388.06	212.53	175.53
1978-79	..	498.47	304.29	194.18
1979-80	..	435.85	277.27	158.58
1980-81	..	436.56	257.55	229.09
1981-82	..	722.91	404.87	318.04

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)		(2)	(3)	(4)
1982-83	..	874.37	581.38	292.99
1983-84	..	552.35	479.36	72.99
1984-85	..	377.43	316.18	61.25
1985-86	..	554.96	450.13	104.77
1986-87	..	993.65	967.20	26.45
1987-88	..	1,065.73	935.70	130.02
1988-89	..	675.46	562.37	113.08
1989-90	..	1,316.42	1,074.16	242.26
1990-91	..	1,874.06	1,560.49	313.56
1991-92	..	1,210.60	1,280.45	(-)67.83
1992-93	..	1,016.59	760.64	255.64
1993-94	..	1,329.88	926.61	403.27

3—

சங்ககிரி ஒன்றியத்தில் தாலுகா சேமிப்புக் கிடங்குக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***15886*****—***டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி ஒன்றியம், ஐ.ஓ.சி அருகில் உள்ள இடத்தில் தாலுகா சேமிப்புக் கிடங்குக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் எப்போது கட்டிடம் கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

சங்ககிரி தாலுகா, மோசூர் பிட் 1 கிராமம் சர்வே எண் 378/3ல் 0.80 சென்ட் நிலம் சங்ககிரி கோட்ட வளர்ச்சி அலுவலரால் 26-4-1993 அன்று

1994 நவம்பர் 3]

கையகப்படுத்தப்பட்டு, 14-6-1993 அன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சேமிப்புக் கிடங்கு கட்டிட வேலைகள் 31-8-1994 அன்று முடிக்கப்பட்டுவிட்டன.

4—

சித்தா, ஆயுர்வேதா, ஓமியோபதி மருத்துவர்களை ஊக்குவித்தல்.

*வினா எண் **36018**—திரு. உ. பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

சித்தா, ஆயுர்வேதா, ஓமியோபதி மருத்துவத் துறையில் பணியாற்ற முன்வரும் மருத்துவர்களை ஊக்குவிப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தற்சமயம் இந்திய மருத்துவக் கழகத்தில் பதிவு செய்த மருத்துவர்கள் தமிழ்நாட்டிலுள்ள 19 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் 91 தாலுக்கா மற்றும் தாலுக்கா அல்லாத மருத்துவ மனைகளிலும் 269 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 40 மருந்தகங்கள் 415 உள்ளாட்சித்துறை கீழ் உள்ள கிராம மருந்தகங்களில் உள்ள சித்தா பிரிவுகளிலும், 3 மாவட்டத் தலைமை மருத்துவமனை, 5 மருந்தகங்கள், 92 உள்ளாட்சித்துறை கீழ் உள்ள கிராம மருந்தகங்களில் உள்ள ஆயுர்வேதா பிரிவுகளிலும் 14 உள்ளாட்சித் துறை கீழ் உள்ள கிராம மருந்தகங்கள், 2 மாவட்டத் தலைமை மருத்துவமனை, ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம், யுனானி பிரிவுகளிலும், 30 ஓமியோபதி மருந்தகங்களிலும் பணிபுரிகிறார்கள்.

இந்திய மருத்துவ முறையின் கீழ் அதிகப்படியான மருத்துவப் பிரிவு திறக்க அரசுக்கு கருத்துரு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பப்படுகிறது. தற்சமயம் 1993-94ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் 5 சித்தா பிரிவு வட்ட மருத்துவமனையில் திறக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்திய மருத்துவத் துறையில் பயின்ற மருத்துவர்களை ஊக்குவிப்பதற்கும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிதிநிலைமைக்கேற்ப பெரிய அளவில் திட்டங்களைத் தீட்டவும் எண்ணியுள்ளது.

[1994 நவம்பர் 3

5—

அவினாசித் தொகுதியில் சாலை வசதி ஏற்படுத்துதல்.

*வினா எண் **23974**—டாக்டர் மு. சீனியம்மாள் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசித் தொகுதி, முருககவுண்டன் புதூரிலிருந்து புளியம்பட்டி மெயின்ரோடு வரை புதிய சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கோவை-சத்திசாலை (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 44/8-ல் பிரிந்து முருக கவுண்டன்புதூர் வரை செல்லும் இச்சாலையின் நீளம் 2.00 கி.மீ. ஆகும். இது அவிநாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கப்பிச் சாலையாகும். இச்சாலையில் பேருந்து செல்லவில்லை. இச்சாலையை தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய ரூ. 5.00 இலட்சம் செலவாகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியச் சாலை மேம்பாட்டுப் பணிகளை நெடுஞ்சாலைத் துறையினால் மேற்கொள்ள வழிவகை செய்யப்படவில்லை. எனவே, இச்சாலை மேம்பாட்டுப் பணியை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி 2 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

6—

வெட்டன்விடுதி கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டுதல்.

*வினா எண் **25500**—திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதி கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

வெட்டன்விடுதி என்ற கிராமம் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. இக்கிராமத்தில் 1989 ஆம் வருடம், கால்நடை மருந்தகம் தோற்றுவிக்கப்பட்டு, வாடகையில்லாக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடம் கட்ட குறைந்தது ஒரு ஏக்கர் நிலமாவது கால்நடைத் துறைக்கு இனாமாக அளிக்க வேண்டும். கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவில் உரிய பங்குத் தொகையினை ஊராட்சி ஒன்றியம் பொதுநிதியிலிருந்து வழங்க வேண்டும். (ஒன்றியத்தின் முதல் கால்நடை மருந்தகம் எனில், 25 சதவீதமும், 2ஆவது கால்நடை மருந்தகம் எனில் 50 சதவீதமும், 3ஆவது கால்நடை மருந்தகம் எனில் 75 சதவீதமும், 4ஆவது, 5ஆவது கால்நடை மருந்தகம் எனில், 100 சதவீதமும் ஒன்றியம் பங்குத் தொகையாக வழங்க வேண்டும்).

பங்குத் தொகை மற்றும் நிலம் பெறப்பட்டவுடன், நிரந்தரக் கட்டிடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

7—

எரியூர் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***33373***—டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், எரியூர் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், எரியூர் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

எரியூர் என்ற கிராமம் தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம், ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. எரியூர் கிராமத்தில் 27-10-1992 முதல் கால்நடை மருந்தகம், ஊராட்சி ஒன்றியம் வழங்கிய இலவச வாடகையில்லாக் கட்டிடத்தில் செயல்படுகிறது. கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்ட குறைந்தது ஒரு ஏக்கர் நிலமாவது கால்நடைத் துறைக்கு இனாமாக அளிக்க வேண்டும். கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவில் உரிய பங்குத் தொகையினை ஊராட்சி ஒன்றியம் பொது நிதியிலிருந்து வழங்கச் சம்மதித்து தீர்மானம் நிறைவேற்றித்தர வேண்டும். (ஒன்றியத்தின் முதல் கால்நடை மருந்தகம் எனில் 25 சதவீதமும், 2ஆவது கால்நடை மருந்தகம் எனில் 50 சதவீதமும், 3ஆவது கால்நடை மருந்தகம் எனில் 75 சதவீதமும், 4ஆவது கால்நடை மருந்தகம் எனில் 100 சதவீதமும் ஒன்றியம் பங்குத் தொகையாக செலுத்த வேண்டும்). எரியூர் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட நில ஒதுக்கீடும், ஊராட்சி ஒன்றியம் பங்குத் தொகை வழங்க இசைவும் பெற்ற பின்னர் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

திருமண நிதி உதவித் தொகை திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றவர்கள் விவரம்.

வினா எண் 19601— திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் திருமண உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் எப்போது நிதியுதவி அளிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலத் துறை அமைச்சர்:

(அ) நிலுவை ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

9—

செக்போஸ்ட்டில் கட்டணம் வசூல் செய்வதை ரத்து செய்தல்.

வினா எண் 14439—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாபநாசம் மணிமுத்தாறு செக்போஸ்ட்டில் கட்டணம் வசூல் செய்வதை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் :

பாபநாசம் மணிமுத்தாறு செக்போஸ்ட்டில் தற்போது (9-8-1992 முதல்) கட்டணம் வசூல் செய்யப்படுவதில்லை.

10—

திருப்பத்தூர் தொகுதியில் சந்தனமரங்கள் மூலம் கிடைத்த வருமானம் விவரம்.

வினா எண் 27779—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதியில் 1992 மற்றும் 1993-ஆம் ஆண்டு சந்தன மரங்கள் எவ்வளவு தொகைக்கு ஏலம் விடப்பட்டது ?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு இலாபம் கிடைத்தது ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : திருப்பத்தூரில் 1992-93-ஆம் ஆண்டு ஏலம் விடப்பட்ட சந்தன மரத்தின் அளவும் அரசுக்குக் கிடைத்த வருமானமும் பின்வருமாறு:—

வருடம்.	ஏலம் விடப்பட்ட சந்தன மரத்தின் அளவு (டன்னில்.)	அரசுக்கு வருமானம் (ஏலம் போன தொகை) (ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)	(3)
1992	148.100	333.44
1993	487.000	1,107.49

11—

சந்தனக் கட்டைகளை எடுத்துச் செல்ல தடைச் சட்டம்.

வினா எண் 34487—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சந்தனக் கட்டைகளைக் கொண்டு செல்வதற்கு தடைச் சட்டம் இருப்பது போல், எல்லா மாநிலங்களிலும், ஒரே மாதிரியான சட்டம் கொண்டுவர மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் :

எல்லா மாநிலங்களிலும் ஒரே சீரான சட்டம் கொண்டுவர தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. ஒரே சீரான கொள்கை குறித்து மத்திய அரசிடமிருந்து ஆணை ஏதும் இதுவரை பெறப்படவில்லை.

12—

பட்டுக்கோட்டை வட்டத்தில் தார்ச்சாலை அமைத்தல்.

வினா எண் 563—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், அதிராம் பட்டினத்திலிருந்து ஏரிப்புறக்கரை வழியாக கீழத்தோட்டம் ராஜாமடம் வந்தடையும் கப்பிச் சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை 7.0 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலையாகும். இச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற போதிய நிதிவசதி ஊராட்சி ஒன்றியத்தில் இல்லாததால் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

13—

போகலூர் ஒன்றியத்தில் ஊரணிகளைப் பராமரித்தல்.

வினா எண் *1440—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் குடிநீருக்காக பயன்படும் ஊரணிகள் யாவை ?

(ஆ) அவற்றைப் பராமரிக்க அரசு நிதி வழங்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குடிநீர் ஊரணிகள் ஊராட்சிகளின் சொத்துக்களாகும். ஆதலால் அவைகளைப் பராமரிக்க வேண்டியது ஊராட்சிகளின் கடமையாகும். இவைகளைப் பராமரிப்பதற்குச் சட்டப்படியாக அரசு மான்யம் எதுவும் வழங்கப்படுவதில்லை. ஆனால், இவைகளை வறட்சி போன்ற அசாதாரண காலங்களில் வேலை வாய்ப்பு இழந்த விவசாயக் கூலிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான சிறப்பு நிதியின் கீழ் எடுத்துச் செய்யப்பட்டு வந்துள்ளன. போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1993-94-ஆம் ஆண்டில் வேலையளிப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 79- குடிநீர் ஊரணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ. 12.455 இலட்சம் செலவில் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

[1994 நவம்பர் 3

14—

புதுக்கோட்டை உளூரிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புதுப்பித்தல்.

வினா எண் ***2798***—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உளூரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உடைந்து விட்டதால், அதை மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை உளூரிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் சீர் செய்யப்பட்டு தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால், மாற்றுத் தொட்டிக் கட்டித்தர வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

மயிலாடுதுறை ஒன்றியத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளை சீரமைத்தல்.

வினா எண் ***5530***—*திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியத்திலுள்ள அனைத்து குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளையும் சீரமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கிராம மக்களுக்குக் குடிநீர் கிடைக்கும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மயிலாடுதுறை ஒன்றியத்தில் மொத்தம் 63 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. அவற்றில் 22-2-1994 வரை—

1994 நவம்பர் 3]

பழுதானவை	..	8
பின் பழுதானவை	..	11
மொத்தம்	..	19

மேற்காணும் 19 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளையும் சீரமைக்க உதவிப் பொறியாளர் (கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு) மூலம் மதிப்பீடு பெறப்பட்டு, வேலை உத்திரவு வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலை ஒரு மாதத்திற்குள் முடிவுற்று கிராம மக்களுக்குக் குடிநீர் கிடைக்கும்.

16—

அந்தோணியார்புரத்தில் வீடுகளுக்கு கதவிலக்கு எண் பொருத்தல்.

வினா எண் 6622—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அந்தோணியார்புரத்தில் அமைக்கப்பட்ட மீனவர் காலனி வீடுகளுக்கு வீட்டு இலக்கம் (வீட்டு வரி ரசீதில்) போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அந்தோணியார்புரம் கிராமம், கொள்ளுக்காடு ஊராட்சியைச் சார்ந்தது. 1990-91-ஆம் ஆண்டில் 32 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டிலிருந்து வீடுகளுக்கு கதவிலக்கு எண் கொடுத்து வரி விதிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

17—

குண்டாமரைக்காடு-வேலர்குடி வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் 7384—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குண்டாமரைக் காட்டிலிருந்து வேலர்குடி வரை செல்லும் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், குண்டாமரைக் காட்டிலிருந்து வேலர்குடி வரை செல்லும் சாலையின் நீளம் 8.2 கி.மீ. 1989-90-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கி.மீ. 0/2-2/0 வரை கருங்கல் ஜல்லி பரப்பப்பட்டு உள்ளது. எஞ்சிய பகுதி சிகப்பு கப்பிச் சாலையாக உள்ளது. இதில் பேருந்து போக்குவரத்து நடைபெறவில்லை. இச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்றத் தேவையான நிதி வசதி ஊராட்சி ஒன்றியத்தில் இல்லாததால் இச்சாலையைத் தார்ச்சாலையாக மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

18—

பேராவூரணி பேரூராட்சி அண்ணாநகர் சாலையை மராமத்து செய்தல்.

வினா எண் 7401—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி நகரம் அண்ணாநகர் செல்லும் சாலையை அகலப்படுத்தி மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி பேரூராட்சி, அண்ணாநகர் சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1989-90-ஆம் ஆண்டு 286 மீ. நீளத்தில் 3.20 மீட்டர் அகலத்திற்குக் கருங்கல் ஜல்லி சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

19—

குருவிக்கரம்பை ஊராட்சியில் கப்பிச்சாலை அமைத்தல்.

வினா எண் 7408—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி நாடாகாடு அருகில் உள்ள நம்பர் 5 சி.எம்.பி. வாய்க்காலில் இருந்து நுணுமாக்காடு செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் நீளம் 1.6 கி.மீ. இச்சாலையில் கருங்கல் ஜல்லி பரப்பப்பட்டு, தற்போது ஆங்காங்கே கருங்கல் இல்லாத நிலையில் உள்ளது. மீண்டும் கருங்கல் ஜல்லிப்போட ரூ. 1,92,000 தேவைப்படும். நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினைச் செய்திட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

20—

சாந்தாம்பேட்டைக்கு சாலை வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் *7409*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சாந்தாம்பேட்டைக்கு வடக்கு பகுதிக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சாந்தாம்பேட்டை வடக்குப் பகுதி, மருங்கப்பள்ளம் ஊராட்சியைச் சார்ந்தது. சாந்தாம்பேட்டை வடக்குப் பகுதிக்கு 1 கி.மீ. தூரமுள்ள மண்சாலை உள்ளது. இதனை சிகப்பு கப்பிச் சாலையாக்க ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி ஆதாரம் இல்லாததால் இப்பணியினை செய்திட செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

21—

சோழகனார் வயலுள்ள விளக்கு ரோட்டுக்கு கல்வெர்ட்டு கட்டுதல்.

வினா எண் *7416*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஊராட்சி சோழகனார் வயலுள்ள விளக்கு ரோட்டுக்கு கல்வெர்ட்டு ஒன்று கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஊராட்சி, சோழகனார் வயலுள்ள விளக்கு ரோட்டுக்கு கல்வெர்ட் ஒன்று கட்டித்தர ஊராட்சி ஒன்றியத்தில் நிதி ஆதாரம் இல்லாததால் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

22—

ஊராட்சிகளில் குடிநீர் வசதிகளை மேம்படுத்துதல்.

வினா எண் *7543*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சிகளில் ஒப்படைக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் ஆழ்குழாய்க் கிணறு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பழுதுபார்க்க ரூ. 500 வரை செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரசு ஆணை எண் 44, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17-2-1992-ன்படி ஆழ்குழாய் கிணறு கைப்பம்புகள் பராமரிப்புச் செலவுக்காக அரசு மான்யம் ரூ. 700-ஐ அந்தந்த ஊராட்சிகளின் ஆண்டு வருவாய் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பழுதின் தன்மைக்கேற்ப செலவிடப்படுவதாலும் அதற்கான அளவு மேலளவுகள் உரிய அலுவலர்களால் எடுக்கப்படுவதானாலும் இதற்கு உச்சவரம்பு விதிக்க அவசியமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

23—

சீர்காழி மற்றும் கொள்ளிடம் யூனியனில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகள்.

*வினா எண் **8344**—திரு. து. மூர்த்தி :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி மற்றும் கொள்ளிடம் யூனியனில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற வேலைகள் மற்றும் அதன் மதிப்பீடுகளும் பற்றி விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சீர்காழி மற்றும் கொள்ளிடம் வட்டாரங்களில் 1991-92-ஆம் ஆண்டில் தன்னிறைவு திட்டத்தின் கீழ் தெருவிளக்குகள் அமைத்தல் "ஏ" வகுப்பு வாய்க்கால், குடிநீர்த் திட்டப் பணிகள் மற்றும் தொலைக் காட்சி பெட்டிகள் வழங்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் சீர்காழி வட்டாரத்தில் தூர் அகற்றும் பணிகள் தொலைக்காட்சி பெட்டி வழங்குதல், குடிநீர்த் திட்டப் பணிகள் ஆகியவைகள் முடிக்கப்பட்டுவிட்டன. தெரு விளக்கு அமைக்கும் பணி மற்றும் ஊரக ஆலை மேம்பாடு ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. 1992-93-ஆம் ஆண்டில் கொள்ளிடம் வட்டாரத்தில் தெரு விளக்குகள் அமைக்கும் பணி, தூர் அகற்றும் பணி ஆகியன மேற்கொள்ளப்பட்டன. குடிநீர்த் திட்டத்தின் கீழ் ரூ. 12.84 இலட்சம் ஒதுக்கீட்டில் ரூ. 2.74 இலட்சம் செலவு செய்யப்பட்டு மீதமுள்ள ரூ. 10.10 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

24—

தென்னாம்பட்டிணம் ஊராட்சியில் ஆதிதிராவிடர்களுக்கு மின் வசதி அளித்தல்.

*வினா எண் **8535**—திரு. து. மூர்த்தி :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி ஊராட்சி ஒன்றியம், தென்னாம்பட்டிணம் ஊராட்சியில் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட கூட்டுக் குடியிருப்பில் மின்சார வசதியும் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டிணம் ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு கொடுக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு மின்வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து மின்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. குடிநீர் வசதி தொடர்பாக கைப்பம்புகள் அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் கடற்கரை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான பணி நடைபெற்று வருகின்றது.

25—

பேராவூரணி ஒன்றியத்தில் சாலையை மராமத்து செய்து பாலம் கட்டுதல்.

வினா எண் ***8810***—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கடைத் தெருவிலிருந்து களத்திக்குளம் செல்லும், விவசாயிகள் செல்லும் ஊராட்சி சாலையை கப்பிச் சாலையாக்கவும் இடையில் பாலம் கட்டவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், களத்தூர் கடைத்தெருவிலிருந்து களத்திக்குளம் செல்லும் ஊராட்சி சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றி ஒரு பாலம் கட்டுவதற்கு அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

26—

திட்டக்குடி செண்டாங்காடு சாலையைக் கப்பிச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் ***11447***—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 நவம்பர் 3]

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், திட்டக்குடி செண்டாங்காடு சாலையை 1992-93-ல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திட்டக்குடி செண்டாங்காடு சாலையின் நீளம் 1.2 கி.மீ. இதில் ஏற்கனவே 0.5 கி.மீ. செம்மண் சாலையாக உள்ளது. மீதமுள்ள தூரத்தை கப்பிச் சாலையாக மாற்ற பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் செயற்குறிப்பு அரசிடமில்லை.

27—

ஏரிப்புறக்கரை ராஜாமடம் சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றுதல்.

வினா எண் ***11452*—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை-ராஜாமடம் சாலையை 1992-93-இல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஏரிப்புறக்கரை–ராஜாமடம் சாலையின் நீளம் 5.00 கி.மீ. இச்சாலை ஏற்கனவே கருங்கல் சாலையாக உள்ளது. ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் இச் சாலையை மேலும் மேம்பாடு செய்ய தற்போது செயற்குறிப்பு அரசிடமில்லை.

28—

கார்காவயல்-பண்ணவயல் சாலையைக் கப்பிச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் ***11454*—திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கார்காவயல்-பண்ணவயல் சாலையை 1992-93-இல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கார்காவயல்-பண்ணவயல் சாலையின் நீளம் 4.4 கி.மீ. இச்சாலை ஏற்கனவே, கருங்கல் சாலையாக உள்ளது. இதை மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

29—

பரக்கலக்கோட்டை—கரிசல்காடு சாலையைக் கப்பிச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் *11456*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஊராட்சி, பரக்கலக்கோட்டை-கரிசல்காடு சாலையை 1992-93-இல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

30—

அதிராம்பட்டினம்—பெக்களிக்காடு சாலையைப் பராமரித்தல்.

வினா எண் *11463*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கே.எம்.எம். அதிராம்பட்டினம்-பெக்களிக்காடு சாலையை 1992-93-இல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

கே.எம்.எம். அதிராம்பட்டினம்—பெக்களிக்காடு சாலை நகவினி ஆற்றின் குறுக்கே செல்கிறது. ஆற்றின் இரு பக்கங்களிலும் பாதையின் அகலம் போதுமானதாக இல்லை. ஆற்றின் கரை இருபக்கமும் ஆக்கிரமிப்பு உள்ளது. ஆக்கிரமிப்பை அகற்றி ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்ட ரூ. 10 இலட்சமும், சாலையைச் செப்பனிட ரூ. 5 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 15 இலட்சமும் தேவை. ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதியில்லாத காரணத்தால் இச்சாலையைக் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் தற்போது செயற்குறிப்பு இல்லை.

31—

சஞ்சய் கொள்ளை-வீரக்குறிச்சி சாலையைப் பராமரித்தல்.

வினா எண் ***11471***—**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், சஞ்சய் கொள்ளை-வீரக்குறிச்சி சாலையை 1992-93-இல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சஞ்சய்கொள்ளை—வீரக்குறிச்சி சாலையின் நீளம் 1 கி.மீ. இது வரையறுக்கப்படாத சாலையாகும் செம்மண் கப்பிச் சாலையாகவுள்ள சாலையை கருங்கல் கப்பிச் சாலையாக மாற்ற ரூ. 1.25 இலட்சம் தேவைப்படும். பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி ஆதாரமில்லாததால் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

32—

ஓமவயல் பாலச்சேரிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் இணைத்தல்.

வினா எண் ***11627***—**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஓமவயல் பாலச்சேரிக்காட்டில் உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு 1992-93-இல் மின் மோட்டார் இணைத்து தண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை ***அமைச்சர்:***

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கங்காதரபுரம் ஊராட்சியில் உள்ள ஓமவயல் பாலச்சேரிக்காட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தற்பொழுது மின் மோட்டார் இணைக்கப்பட்டு பொதுமக்களுக்குக் குடிநீர் தடையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

33—

பேரூராட்சி, ஊராட்சிகளுக்கு நிதி வசதி அளித்தல்.

வினா எண் *11760*—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள பேரூராட்சி, ஊராட்சிகளுக்கு போதிய நிதி வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை ***அமைச்சர்:***

பேரூராட்சிகளின் அவசிய அடிப்படை வசதிகளைச் செய்ய அவ்வப்போது நிதிநிலைக்கேற்ப அரசு மான்யம் வழங்கி வருகிறது. நலிந்த பேரூராட்சிகளின் நிதி நிலையை மேம்படுத்தக்கூடிய வகையிலும் தொடர்ந்து அரசு மான்யம் வழங்கி வருகிறது. பேரூராட்சிகளில் நிதி ஆதாரத்தைப் பெருக்கக் கூடிய வகையில், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் பேருந்து நிலையம் கட்டுதல், வணிக வளாகம் கட்டுதல், கடைகள் மற்றும் தங்குமிடங்கள் கட்டுதல், போன்றவற்றிற்கு கடனுதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் மைய மற்றும் மாநில திட்டங்களின் செயலாக்கத்தில் அனைத்துப் பேரூராட்சிகளும் பயன்பெறக்கூடிய வகையில் தொடர்ந்து மான்யமும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் 137 பிரிவில் குறிப்பிட்டவாறு கீழ்க்கண்ட இனங்களிலிருந்து ஊராட்சிகளின் நிதி ஆதாரங்கள் உள்ளன:-

(1) வீட்டு வரி, தொழில் வரி மற்றும் வாகன வரி.

(2) சொத்து மாற்றுக் கட்டணம்.

(3) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 115—வது பிரிவின்கீழ் வசூலிக்கப்படும் தலவரியில் 75 சத விகிதம்.

(4) வீட்டுவரி ஈட்டு மான்யம்.

(5) சந்தைகள், வண்டிப்பேட்டைகள் ஆகியவற்றில் கட்டணம் வசூலித்தல்.

(6) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமம் கட்டணம் வசூலித்தல்.

மேற்கண்ட ஆவணங்களில் வரும் வருமானத்தைத் தவிர, ஊராட்சிகளுக்கு கைப்பம்பு மற்றும் விசைப்பம்பு பராமரிப்பு, தெரு விளக்கு பராமரிப்பு போன்றவற்றிற்கு அரசு நிதியிலிருந்து சிறப்பு மான்யம் வழங்கப்படுகிறது. மேலும் ஊராட்சிகளுக்குப் போதிய நிதி வசதி ஏற்படுத்துவதற்கும் ஆதாரங்களைப் பெருக்குவதற்கும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அவற்றின் பரிந்துரைகளை ஏற்று செயல்படுத்துவதற்கும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

34—

வலச்சேரிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல்.

வினா எண் **12032**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எப்பொழுது வேலை முடியும் ?

(ஆ) இதில் நீர் மூழ்கி மோட்டார் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் திருச்சிற்றம்பலம் ஊராட்சி வலச்சேரிக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு மின் மோட்டார் பொருத்தப்பட்டு ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் 14-9-1993-இல் எடுத்துக்கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

35—

நலக்கொல்லை-தண்டாமரைக்காடு சாலையில் தடுப்புச் சுவர் அமைத்தல்.

*வினா எண் **12089**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, நாடியம் ஊராட்சி, நலக்கொல்லை தண்டாமரைக்காடு சாலையில் 1992-93-இல் தடுப்புச் சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, நாடியம் ஊராட்சி, நலக்கொல்லை தண்டாமரைக்காடு சாலையில் 1991-92 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 10,000 செலவில் ஏற்கனவே தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

36—

மாவடுகுறிச்சி ஊராட்சியில் தெரு விளக்குகள் அமைத்தல்.

*வினா எண் **12283**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சி கீழக்காட்டிற்கு 1992-93-இல் தெருவிளக்கு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சி ஊராட்சியில் மொத்தம் 103 தெரு விளக்குகள் உள்ளன. அவற்றில் கீழக்காடு கிராமத்தில் 1992-93-ஆம் நிதியாண்டில் 16 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு ஊராட்சியின் பராமரிப்பில் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன.

1994 நவம்பர் 3]

37—

ஆழ்குழாய்க் கிணறு ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் அமைத்தல்.

*வினா எண் **15195**—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடன் தொகையில் நிலத்தடி நீர் கீழே சென்ற இடங்களில் கிணறுகளுக்குப் பதில் ஆழ்குழாய் கிணறு அமைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதன் மூலம், ஊரகப் பகுதிகளில், போதிய வேலை வாய்ப்பு வழங்க இயலாது என்பதால் மாநில அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்கவில்லை.

38—

கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் பொதுக்கழிப்பிடம் அமைத்தல்.

*வினா எண் **15221**—திரு. கே. செல்வராஜ் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் ஒப்பணக்கார வீதி, ராஜவீதி, பெரியகடை வீதி பகுதிகளில் பொதுக் கழிப்பிடம் அமைக்கப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோவை மாநகராட்சி ஒப்பணக்காரவீதி, ராஜவீதி, பெரிய கடை வீதி பகுதிகளில் பொதுக் கழிப்பிடம் கட்ட தகுந்த இட வசதி இல்லாத காரணத்தால் மேற்கண்ட பகுதிகளில் பொதுக் கழிப்பிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

39—

பூம்புகார் தொகுதியில் வீட்டுவரி வசூலிக்க நடவடிக்கை.

*வினா எண் **16878**—திரு. எம். பூராசாமி :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1994 நவம்பர் 3

(அ) பூம்புகார் தொகுதியில் பல ஊராட்சிகளில் கிராம வீட்டுவரி வசூலிக்காமல் நிலுவையில் உள்ளது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அதனால் ஊராட்சியில் நிதிநிலைமை குறைவாக உள்ளதை ஈடு கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சீர்காழி ஒன்றியத்தைச் சேர்ந்த 9 ஊராட்சிகளில் 31-7-1993 தேதிவரை ரூபாய் 5,028 வீட்டு வரியாக வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள வரி 31-3-1994-க்குள் வசூலிக்கப்படும். செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உள்ள 57 ஊராட்சிகளும் பூம்புகார் தொகுதியைச் சார்ந்தது. இவ்வனைத்து ஊராட்சிகளில் வீட்டுவரி முறையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. 31-12-1993 முடிய ரூ. 95,941 வீட்டு வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது. பாக்கி வரிகள் 31-3-1994-க்குள் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கண்ட ஊராட்சிகளில் நிதி நிலைமை பாதிப்பு ஏதும் இல்லை.

40—

பரமக்குடி தாலுகாவிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் விவரம்.

வினா எண் 22254—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தாலுகாவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அவற்றில் தண்ணீர் வரப்பெற்று புழக்கத்தில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை ?

(இ) உபயோகத்தில் இல்லாத நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை ?

(ஈ) அவற்றில் இடிந்த நிலையில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை ?

விடை.—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) பரமக்குடி தாலுகாவில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்	..	223
(ஆ) அவற்றில் தண்ணீர் வரப்பெற்று புழக்கத்தில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள்	..	113
(இ) உபயோகத்தில் இல்லாத நீர்த்தேக்கத் தொட்டிகள்	..	110
(ஈ) அவற்றில் இடிந்த நிலையில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள்	..	53

41—

அரியக்குமட்டி குடிநீர் தேக்கத் தொட்டியில் மோட்டாரைப் பழுது நீக்குதல்.

வினா எண் *22387*—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், அரியக்குமட்டி கிராமத்திலுள்ள குடிநீர் தேக்கத் தொட்டியில் மோட்டார் பழுதாகியுள்ளதால் அதைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை.—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரியக்குமட்டி என்ற கிராமத்திலுள்ள குடிநீர் தேக்கத் தொட்டி மின்மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

42—

திருப்பத்தூர் நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

வினா எண் **22688**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் நகராட்சியில் 162 துப்புரவுப் பணியாளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்க இயலாமல் நிதி நிலை நெருக்கடி உள்ளது. நிதி நெருக்கடி உள்ள நகராட்சிகளில் திருப்பத்தூர் நகராட்சியும் ஒன்றாகும். எனவே திருப்பத்தூர் நகராட்சியில் கூடுதல் துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்க வாய்ப்பில்லை.

43—

தச்சுழாம்பள்ளத்தில் தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் **22922**—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தாலுகா, குலசேகர நல்லூர் ஊராட்சி, தச்சுழாம்பள்ளம் ஆதிதிராவிடர் தெருவிற்கு தெரு மின்விளக்கு வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், குலசேகர நல்லூர் ஊராட்சி, தச்சுழாம்பள்ளி கிராம ஆதிதிராவிடர் தெருவில் 42

வீடுகள் உள்ளன. அத்தெருவில் 9 மின்கம்பங்கள் உள்ளது. இவைகளில் உள்ள மின்விளக்குகள் நல்லமுறையில் எரிந்து வருகிறது. இவ்விளக்குகளே போதுமானதாக உள்ளதால் கூடுதல் தெரு விளக்குகள் தேவையில்லை.

44—

ஏ. கிளியனூரில் தெரு விளக்கு அமைத்தல்.

வினா எண் ***23090***—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் மயிலாடுதுறை தாலுகா ஏ. கிளியனூர் கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை *அமைச்சர்:*

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா ஏ. கிளியனூர் கிராமத்தில் 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகை 780 ஆகும். இக்கிராமத்தில் 35 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக ஏ. கிளியனூர் கிராமத்தில் தெரு விளக்குகள் அமைத்திடத் தேவை இல்லை.

45—

நாகம்பள்ளி ஊராட்சியில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல்.

வினா எண் ***23497***—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதி நாகம்பள்ளி ஊராட்சியிலுள்ள பாரதிநகர் கேத்தம்பட்டி மற்றும் மலைக்கோவிலூர் ஆகிய இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குடிதண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நாகம்பள்ளி ஊராட்சி பாரதிநகர் சேத்தாம்பட்டி மற்றும் மலைக்கோயிலூர் ஆகிய இடங்களில் 1993-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறு புதிதாக அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்படி கிராமங்களில் குடிநீர் பிரச்சினை எதுவும் இல்லை.

46—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல்.

வினா எண் 23662—திரு. எ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கட்டப்பட்டு இன்னும் திறக்கப்படாமல் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வடஆற்காடு - அம்பேத்கார் மாவட்டத்தில் கட்டப்பட்டு இன்னும் திறக்கப்படாமல் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் மொத்தம் 25 ஆகும்.

47—

கீரனூரில் சோடியம் பல்புகள் அமைத்தல்.

வினா எண் 25346—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, கீரனூரில் உள்ள தெருக்களுக்கு சோடியம் பல்புகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

குளத்தூர் தொகுதி, கீரனூர் பேரூராட்சியில் தற்போது கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் உள்ளது.

4' குழல் விளக்கு	205
மெர்குரி விளக்கு	13
சோடியம் விளக்கு	4
சோகஸ் விளக்கு	12
மொத்தம் ..	234

1993-94-ம் ஆண்டிற்கு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.1.70 லட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 1.06 லட்சம் செலவில் 40 புதிய தெருவிளக்குகள் 4' குழல்விளக்கு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சோடியம் விளக்குகள் ஏற்கனவே 4 இருப்பதாலும், மேலும் சோடியம் விளக்கு அமைக்க கூடுதலாக செலவு ஏற்படும் என்பதாலும் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததாலும் புதிதாக சோடியம் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

48—

புதுக்கோட்டை ஒன்றியத்தில் குடிதண்ணீர் வசதி அளித்தல்

*வினா எண் **25434**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், நத்தம்பண்ணை ஏ.மாத்தூர் கிராமத்தில் இருக்கும் பள்ளிக்கூடம் மற்றும் வடக்கு செட்டியாபட்டிக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

9எ.நத்தம்பண்ணை ஊராட்சியில் 24 கையிறைப்பான்களும் 1 விசையிறைப்பானும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இங்குள்ள மக்கள் தொகை 1,900 க்கும் இது போதுமானதாகும். 9.பி. நத்தம்பண்ணை ஊராட்சியில் 2 கையிறைப்பான்களும், ஒரு விசையிறைப்பானும் நன்றாக இயங்கி வருகின்றன.

ஏ. மாத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் மூலம் பள்ளிக்கூடத்தின் உள்ளே ஒரு திருகு குழாய் விரிவுபடுத்தப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இதுவே போதுமானதாகும்.

வடக்குச் செட்டியாபட்டி கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 320. இங்கு ஒரு கையிறைப்பான் உள்ளது. தெற்குச் செட்டியாப்பட்டியிலிருந்து ஒரு பொது குடிநீர் குழாய் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கையிறைப்பானில் நீர் ஆதாரம் குறைவாக உள்ளதால் 1993-94-ம் ஆண்டில் உலகவங்கித் திட்டத்தின் மூலம் முன்னுரிமை அடிப்படையில் ஒரு கையிறைப்பான் விரைவில் அமைக்கப்படும்.

49—

புதுக்கோட்டை தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

வினா எண் 25508—திரு.சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, அண்டனூர் ஊராட்சி, வேலாடிப்பட்டி ராஜபகதூர் நம்புகை ஊராட்சி, மட்டங்கால் ஊராட்சியில் வடக்குத்தெரு, பிரசானத்தூர் ஊராட்சி, வனவன்பட்டி கொண்டையன் தெரு, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், காட்டு நாவல் பகுதி ஆகிய இடங்களில் குடிதண்ணீருக்கு புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மேற்கண்ட ஊராட்சிகளில் உள்ள மக்கள் தொகைக்கு குடிநீர் வழங்க போதுமான விசையிறைப்பான்களும் மற்றும் கையிறைப்பான்களும் உள்ளன. இவை நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. குடிநீர் பற்றாக்குறை என்ற பிரச்சினை எழாத காரணத்தினால், கூடுதல் குடிநீர் குழாய் அமைத்திட எந்த செயற்குறிப்பும் அரசிடம் இல்லை.

50—

கந்தர்வக்கோட்டை, முதுகுளம் ஊராட்சி மற்றும் புனக்குளம் ஊராட்சியில் கூடுதல் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.

வினா எண் 25515—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் அமைச்சர் துறை கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வக்கோட்டை, முதுகுளம் ஊராட்சி, புனக்குளம் ஊராட்சி மேலவிடுதியிலிருந்து வாடிமனைப்பட்டி, சொக்கம்பேட்டை, முத்துராஜா தெரு, மாத்தங்குடி ஆகிய இடங்களுக்கு கூடுதலாக குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

முதுகுளம் மற்றும் புனக்குளம் ஊராட்சிகளில் குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது.

சங்கம்விடுதி ஊராட்சி, சொக்கம்பேட்டை, முத்துராஜா தெருவிற்கு கூடுதலாக குடிநீர் குழாய் அமைத்திட உலக வங்கித் திட்டம் மூலம் 1994-95-ல் எடுத்துக்கொள்ள பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது சொக்கம்பேட்டையில் உள்ள விசையிறைப்பான் ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாத்தங்குடி கிராமத்தில் கையிறைப்பான்களும் விசையிறைப் பான்களும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. தற்போது இங்குள்ள மக்கள் தொகைக்கு குடிநீர் தட்டுப்பாடு என்பதே இல்லை.

51—

கொடுமுடி பேரூராட்சியில் வெள்ளத்தடுப்புச்சுவர் கட்டுதல்.

*வினா எண் **26454**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி பேரூராட்சி 5 வது வார்டு இலுப்புத்தோப்பு பகுதியில் வாய்க்கால் கரை ஓரத்தில் குடியிருந்துவரும் மக்களுக்கு, வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க புகளூர் வாய்க்கால் கரை ஓரத்தில், வெள்ளத்தடுப்புச் சுவர் ஒன்றை கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி பேரூராட்சி 5 வது வார்டு இலுப்புத் தோப்பு பகுதியில் வாய்க்கால் கரை ஓரமாக வெள்ளத்தடுப்புச் சுவர் ஒன்று கட்டிக் கொடுக்க பொதுப்பணித் துறையினரிடம் தொடர்பு கொள்ளப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

52—

சமூகக் காடுகள் திட்டத்தின்மூலம் இலவசமாக தேக்கு மரக்கன்றுகள் வழங்குதல்.

*வினா எண் **27453**—திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மரம் வளர்க்கும் திட்டத்தை தீவிரமாக அமுல்படுத்தும் வகையில் ஊராட்சியில் இருக்கும் சமூக காடுகள் திட்டத்தின் மூலம் இலவசமாக தேக்கு மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஊராட்சிகளில் சமூகக் காடுகள் திட்டத்தின் மூலம் இலவசமாக தேக்கு மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான செயற்குறிப்பு

1994 நவம்பர் 3]

ஏதும் ஆய்வு செய்யப்படவில்லை. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பயனாளிகள், ஜீவன்தாரா பயனாளிகள், பூமிதானப் பயனாளிகள் ஆகியோருக்கு அம்மரக் கன்றுகள் வழங்கப்படுகின்றன.

53—

வத்திராயிருப்பு ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **31927**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம், துலுக்கப்பட்டி, வடுகப்பட்டி, பபுதுப்பட்டி, அக்கனாபுரம், அர்ச்சனாபுரம், கோவிந்தநல்லூர், கல்யாணிபுரம், வலயங்குளம், வலையம்பட்டி, வெள்ளப்பொட்டல் ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

54—

பாபநாசம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **31996**—திரு. ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், சூலமங்கலம் கீழ கபிஸ்தலம், இலுப்பக்கோரை கபிஸ்தலம், மேல கபிஸ்தலம், திருவைகாவூர், ஒலம்பாடி, அவந்திரபுரம், களஞ்சேரி, தியாக சமுத்திரம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

55—

திருவையாறு ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **32036**—திரு. ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவையாறு ஒன்றியம், அம்மையகரம், தளர்பட்டி, கழுகணகனம், கழுமங்கலம், வளப்பக்குடி, விண்ணமங்கலம், கடமங்குடி, திருவையாறு, ராயம்பேட்டை திருப்புவனம், காமுகுடி ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

56—

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **32427**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருப்புவனம், மெலட்டூர், தாராசுரம், வல்லம், அய்யம்பேட்டை, சூரியம்பட்டி, திட்டை ஆகிய கிராமங்களில் வாழும்

1994 நவம்பர் 3]

வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

57—

கொள்ளிடம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **32506**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், வடகால், அரசூர், ஆலங்காடு, வேப்பங்குடி, திருமுல்லைவாசல், ஓதவந்தான்குளம், மாதனம் பழையபாளையம், தண்டவங்குளம், புதுப்பட்டினம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

58—

குத்தாலம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் **32876**—திரு.ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

நாகப்பட்டினம்–காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், அரியலூர் கழனிவாசல், வில்லியநல்லூர், பொரும்பூர், கோனேரிராஜபுரம், கிளியனூர், அசிக்காடு பெரம்பூர், மேலையூர் கோமல் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

59—

ஆலங்குளம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 32951—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம், வேலாயுதபுரம் மருந்தை, மருக்காலங்குளம், கண்ணாடிகுளம், வெண்ணிலிங்கபுரம், ருக்மணியம்மாள்புரம், இருதயமுடையார்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீதி வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1994 நவம்பர் 3]

60—

குமரன் காலனிக்கு சலுகைகள் வழங்குதல்.

*வினா எண் **33878**—திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், குமரன் காலனி மக்களுக்கு அரசு வழங்கும் தொகுப்பு வீடுகளுக்கான அனைத்துச் சலுகைகளையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

61—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **33946**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் அருகில் உள்ள சின்னவளையபாளையத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1994 நவம்பர் 3

62—

சாத்தப்பாடி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **33985**—திருமதி கே.மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சாத்தப்பாடி கிராமம், இலவச தொகுப்பு வீடுகள் கிடைக்காத ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

63—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **33986**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் அஞ்சூர் கிராமம், பாப்பாவலசு ஆகிய இடங்களில் இலவச தொகுப்பு வீடுகள் கிடைக்காத ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருடிஎம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1994 நவம்பர் 3]

64—

உப்பிலியாபுரம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் ***34403***—*திரு.வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலையில் உள்ள மன்மனை மேலக்காடு புதுப்பட்டி, சிக்கநத்தம்பூர், ஏரகுடி, தண்ணீர்பள்ளம், வைரிசெட்டிபாளையம், துறையூர் ஒன்றியம், சுக்கலாம்பட்டி ஆகிய ஊர்களில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

65—

பாகநத்தத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் ***35002***—*திருமதி கே.மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

66—

பனையம்பாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 35003—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பனையம்பாளையம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

67—

ஆதிதிராவிடர்களுக்கு அஞ்சூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 35009—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் கிராமம், பாப்பாவலசில் மனைப்பட்டா பெற்றுள்ள 18 ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

1994 நவம்பர் 3]

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

68—

பள்ளமருதப்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 35010—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பள்ளமருதப்பட்டி ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

69—

தான்தோன்றி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 35012—திருமதி கே.மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தான்தோன்றி ஊராட்சி ஒன்றியம், சின்ன முக்கணாங்குறிச்சியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம்

அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

70—

கரூர் வட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **35020**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், தென்னிலை கீழ்பாகம் கிராமம், அம்மாபட்டியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

71—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

*வினா எண் **35021**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பெரிய மஞ்சுவளி கிராமம், நந்தால் நாயக்கனூரில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

1994 நவம்பர் 3]

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

72—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் *35039*—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கார்வழி கிராமம், அத்தப்பகவுண்டன்வலசு (இராமநாதபுரம்) ஆதிதிராவிடர்களுக்கு தனியாக ஒருவர் இலவசமாக வழங்கிய நிலத்தில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

73—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் *35049*—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ராஜபுரத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

74—

அரவக்குறிச்சி சோழதாசம்பட்டியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 35052—திருமதி கே.மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சோழதாசம்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

அணைக்கட்டு தொகுதியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்குக் கழிப்பறைகள் கட்டுதல்.

வினா எண் 35676—திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அணைக்கட்டுத் தொகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

1994 நவம்பர் 3]

செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

76—

திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 35723—திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், அரசங்குடி, வேங்கூர் போன்ற கிராமங்களில தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

77—

வேதாரண்யம் பகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 36266—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் முன்னுரிமை அடிப்படையில் ஆதிதிராவிடர்களுக்குக் கூடுதலாக தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

78—

கோயில் சொத்துக்கள் மற்றும் வருமானத்தை கவனிக்க சிறப்பு கமிட்டி அமைத்தல்.

வினா எண் 4816—திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில் சொத்துக்கள் வருமானம் முதலியவற்றில் குறைகள் ஏற்படாமல் இருக்க ஒரு சிறப்பு (ஸ்பெஷல்) கமிட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) கோயில் சொத்துக்களை அனுபவிப்பவர்கள் கோயிலுக்குச் செலுத்தவேண்டிய பாக்கித் தொகையை ஒரு குறிப்பிட்ட காலக்கெடு கொடுத்து அதற்குள் செலுத்தாதவர்களிடம் இருந்து சொத்துக்களை எடுத்து வேறு நபருக்குக் கொடுக்க அரசே வழி செய்யுமா?

(இ) கோயில் சொத்துக்களை வைத்திருப்பவர்கள் எதிர்பார்க்கப்படும் மகசூலில் 40 சதவீதம் முன்பணமாகக் கோயிலுக்குச் செலுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய (திருத்தப்பட்ட சட்டம் 46/91) ன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் மாநில அளவில் 18 உறுப்பினர்களைக்கொண்ட ஆலய நிருவாக வாரியம் தற்போது செயல்பட்டு வருகிறது. எனவே வேறு சிறப்பு குழு அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தற்போதுள்ள நடைமுறைச் சட்டங்களின்படி குத்தகைகளை ரத்து செய்து வேறு நபர்களுக்குக் குத்தகைக்கு விடமுடியாது. வருவாய் நீதிமன்றங்களின் ஆணைக்கேற்ப, கோவிலுக்குச் செலுத்தவேண்டிய பாக்கித் தொகையை செல்ுத்ததாதவர்களிடமிருந்து குத்தகை தொகை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 3]

(இ) சட்டப்படி 40 சதவிகிதம் முன்பணமாக வசூலிக்க இடமில்லை.

79—

விளாத்திக்குளம் தொகுதியில் கோயில்களைப் பராமரித்தல்.

*வினா எண் **4943**—திருமதி என். கனகவல்லி:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி பழங்கால கோயில்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இந்த கோயில்களை அரசு செலவில் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இத்திருக்கோயில்களின் திருப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் சுமார் 70 சதவிகிதம் நிதி ஆதாரங்களை பொதுமக்களிடமிருந்து திரட்டிக் கொடுத்தால் மீதமுள்ள தொகையை அரசு மானியத்திலிருந்து வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

80—

திருக்கோயில்களில் திருட்டுகள் நடப்பதைத் தடுக்க நடவடிக்கை.

*வினா எண் **5549**—திரு.எம். ஆண்டி அம்பலம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1988-89, 1989-90, 1990-91 ஜனவரி முடிய தமிழ்நாட்டில் திருக்கோயில்களில் நடந்த கொள்ளை, திருட்டுகள் விவரம் என்ன?

(ஆ) அவற்றில் புகார் செய்யப்பட்டு இன்னமும் உரிய விசாரணை மேற்கொள்ளப்படாமல் இருப்பதாக ஏதேனும் அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(இ) அப்போது ஆட்சியில் இருந்த அரசியல் கட்சியின் தலையீடுதான் இவற்றிற்கு காரணமா?

(ஈ) ஆம் எனில் அத்தகு அரசியல் தலையீடுக்கு உரியவர்கள் யாரென விசாரித்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) 1988 முதல் 1991 ஜனவரி முடிய தமிழ்நாட்டில் நடந்த கொள்ளை, திருட்டுகள் விவரம் பின்வருமாறு:

	1988.	1989.	1990.	1991.
சிலை திருட்டு ...	44	48	37	47
சிலை பெயர்த்தல் ..	3	9	36	63
நகை திருட்டு ..	25	42	57	55
இதர திருட்டுகள் ..	85	135	160	208
	157	234	290	373

(ஆ) உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை மேற்கொள்ளப்படாமல் இருப்பதாக அரசுக்கு முறையீடு எதுவும் வரவில்லை.

(இ) கட்சித் தலையீடு இல்லை.

(ஈ) கேள்விக்கு இடமில்லை.

81—

அருள்மிகு வெள்ளை பிள்ளையார் கோயில் நிலங்களை வாடகைக்கு விடுதல்.

*வினா எண் **10457**—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆத்தூர் நகராட்சி எல்லையில் அருள்மிகு வெள்ளை பிள்ளையார் கோயில் பஸ் ஸ்டாண்டிற்கு அருகில் இக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 15 கடைகளை மிகக் குறைந்த வாடகைக்கு எடுத்துள்ள நபர்கள் 10 மடங்குக்கு மேல் வாடகைக்கு விட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உத்தரவின்படி எப்போது இக்கடைகள் பாத்தியதை ரத்தாகும்?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) இத்திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தர்ம கர்த்தாக்கள் காலத்தில் காலியிடமாக வாடகைக்கு விடப்பட்டு வாடகைதாரர்களே சொந்த செலவில் கடைகளாகவும், குடியிருப்பாகவும் கட்டி இருந்து வருகின்றனர். வாடகைதாரர்களே சொந்த செலவில் கட்டியிருந்தாலும், 3 வருடங்களுக்கு ஒரு முறை வாடகை உயர்வு செய்யப்பட்டு வாடகை ஒப்பந்தப்பத்திரம் எழுதி வாங்கப்பட்டுள்ளது. எனவே இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் முறையாக வாடகைக்கு விடப்பட்டுள்ளன. வாடகைக்கு எடுத்துள்ளவர்கள் 10 மடங்கு உயர்வு செய்து உள்வாடகைக்கு விடவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

82—

காரைப்பாடி ஆதிதிராவிடர்கள் கோயிலைச் சீர்செய்தல்.

வினா எண் ***15438***—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், காரைப்பாடி ஆதிதிராவிடர்கள் கோயிலைச் சீர் செய்ய நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கோயில் சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் வட்டம், காரைப்பாடி, ஆதிதிராவிடர் காலனியில் உள்ள அருள்மிகு கன்னிமார் திருக்கோயிலை, இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து அறங்காவலர்க்குழு மற்றும் திருப்பணிக்குழு அமைத்து, நிதியுதவி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

83—

கோவில் திருப்பணிக்கு பொறியாளரையும் வழக்கறிஞர்களையும் நியமனம் செய்தல்.

*வினா எண் **15794**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டத்தில் உள்ள கோவில்களில் திருப்பணிக்கு பொறியாளரையும் கோவில்கள் பராமரிக்க வழக்கறிஞரையும் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் திருப்பணிக்கு ஒவ்வொரு மாவட்டத்தில் ஏற்கனவே பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். வழக்கறிஞர் நியமனத்தைப் பொறுத்தவரையில் ஆலயங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள், அறநிலையத்துறை ஆணையர்களாலும், மற்றைய அதிகாரிகளாலும் நடத்தப்பட்டு வந்தன.

நடைமுறை சட்டத்தின் கீழ் தனி நபர் சொத்துக்களுக்குள்ள பாதுகாப்பு மற்றும் உரிமங்கள் தமிழ்நாடு திருக்கோயில் சொத்துக்களுக்கும் பொருந்தும். இந்து சமய அறநிலையத் துறையினை இது சம்பந்தமாக அரசின் பிற துறைகளுடன் ஒப்பிடலாகாது. தனி நபர் சொத்தினை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கும் நடவடிக்கைப் போன்றே ஆலய சொத்துக்கள் பொறுத்து, ஆலய நலனில் நாட்டமுள்ள அறங்காவலர் மற்றும் அந்தந்த திருக்கோயிலின் நலன் கருதி செயல்படும் நிர்வாகிகளைச் சார்ந்ததாகும். மேலும் அறநிலையங்களின் நிர்வாக நலன் கருதி நிர்வாகிகளின் கருத்துகளுக்கும் உடன்பாடுகளுக்கும் ஏற்ப அந்தந்த அறநிலைய வழக்குகளை நடத்திட நிர்வாகிகளே தகுந்த வழக்குரைஞர்களை நியமித்துக்கொள்வது திருக்கோயில்களின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். எனவே, ஏற்கனவே இருந்து வந்த நடைமுறையையே அதாவது அறநிலையங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை அறநிலையத் துறையே நடத்திக் கொள்வது தொடர்ந்து கடைப்பிடிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 3]

84—

பாபநாசம் நகர் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயத்தை திருப்பணி செய்தல்.

*வினா எண் **15955**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் நகர் அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

85—

சீர்காழியில் கல்யாண மண்டபம் கட்டுதல்.

*வினா எண் **16585**—திரு. து. மூர்த்தி:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கல்யாண மண்டபம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நாகை-காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழியில் அருள்மிகு சட்டநாதசாமி திருக்கோயில் சார்பாக ஏற்கனவே ஒரு திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலைத் தவிர சீர்காழியில் அறநிலையத் துறையின் சார்பில் வேறு கல்யாண மண்டபம் கட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

86—

ஆபத்சகாயேஸ்வரர் கோயிலை புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண் ***16938***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், ஆலங்குடி சபாநடராஜ அபிஷேகக் கட்டளை (இ) ஆபத்சகாயேஸ்வரர் கோயிலைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

சபா நடராஜ அபிஷேகக் கட்டளை ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுடன் இணைந்துள்ளதால் இத்திருக்கோயிலுக்கு ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

87—

ஒரத்தநாடு மற்றும் நீடாமங்கலம் வட்டங்களில்
திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்.

வினா எண் ***18882, 18883, 18884, 18885, 18887, 18888, 18889, 18890, 18891, 18892***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

(1) ஒரத்தநாடு வட்டம், நெல்லுப்பட்டி அருள்மிகு செல்வ விநாயகர் ஆலயம்.

(2) ஒரத்தநாடு வட்டம் நெய்வேலி வடபாதி அருள்மிகு தண்டாயுதபாணி பெரிய அய்யனார் மற்றும் மாரியம்மன் ஆலயம்.

(3) ஒரத்தநாடு வட்டம் ஆவிடநல்ல விஜயபுரம் அருள்மிகு அழகிய மங்கைநாதசுவாமி ஆலயம்,

(4) ஒரத்தநாடு வட்டம், இருமனை பூங்கடை அருள்மிகு அய்யனார் ஆலயம்,

(5) ஒரத்தநாடு வட்டம், வேய்க்கம்பர் கோட்டை அருள்மிகு ருக்மணி நாராயணசுவாமி (எ) அம்பிகை விநாயகர் திருக்கோயில்,

(6) நீடாமங்கலம் வட்டம், தேவங்குடி அருள்மிகு ஆனந்த விநாயகர் ஆலயம்,

(7) நீடாமங்கலம் வட்டம், தேவங்குடி அருள்மிகு இந்திரபுரீஸ்வரர் ஆலயம்,

(8) நீடாமங்கலம் வட்டம், நாகங்குடி அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம்,

(9) மன்னார்குடி வட்டம், நெம்மேலி அருள்மிகு கைலாச நாதர் மற்றும் சீனிவாசப்பெருமாள் ஆலயம்,

(10) மன்னார்குடி வட்டம், நோக்கன் உக்கடை அருள்மிகு விஸ்வநாதசுவாமி ஆலயம்,

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

88—

தஞ்சாவூர் வட்டத்திலுள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல்.

வினா எண்கள் ***18895, 18898, 18899, 18984, 18985, 18986, 18987, 18988***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா----

தஞ்சாவூர் மாவட்டம்—

(1) மன்னார்குடி வட்டம், மேலப்புத்தூர் அருள்மிகு மாரியம்மன் ஆலயம்,

(2) நீடாமங்கலம் வட்டம், பண்டுதகுடி அருள்மிகு ஈராதபுரீஸ்வரர் ஆலயம்,

(3) நீடாமங்கலம் வட்டம், பண்டுதகுடி அருள்மிகு கட்டியப்ப அய்யனார் ஆலயம்,

(4) வலங்கைமான் வட்டம், மூவர்கோட்டை நெய்வேத்திய கட்டளை (இ) அருள்மிகு பிள்ளையார் மற்றும் மாரியம்மன் ஆலயம்,

(5) வலங்கைமான் வட்டம், பேரையூர் அருள்மிகு கைலாசநாதர் ஆலயம்,

(6) வலங்கைமான் வட்டம், வடுவூர் பஜனை மடம்,

(7) வலங்கைமான் வட்டம், வடுவூர் அருள்மிகு மேல்பாதி கோவிந்தராஜ பெருமாள் ஆலயம்,

(8) வலங்கைமான் வட்டம், மகாதேவ பட்டினம் வளவப்பதேவர் சத்திரம்

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

89—

மருத்தூர் அருள்மிகு மாரியம்மன் ஆலய திருப்பணிக்கு நிதியுதவி வழங்குதல்.

வினா எண் **21618**—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்–காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா, மருத்தூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு மாரியம்மன் ஆலய திருப்பணிக்கு நிதியுதவி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

மேற்கூறிய திருக்கோயிலுக்கு ரூ. 42,500 மொத்த மதிப்பீட்டில் புதிய விமானம் கட்டவும் புதிதாக அர்த்த மண்டபம் கட்டவும், அதில் கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி உதவித் திட்டத்திலிருந்து ரூ. 25,000 வழங்கவும் மீதம் ரூ. 17,500 பொது மக்கள் நன்கொடையெனவும், நிதி உதவி அளித்து திருப்பணி செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

90—

வேத ஆகமக் கல்லூரி ஏற்படுத்துதல்.

*வினா எண் **23575**—திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேத ஆகமக் கல்லூரி எந்த இடத்தில் ஏற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

வேத ஆகமக் கல்லூரிக்குப் பதிலாக கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவலாம் என முடிவெடுக்கப்பட்டு தமிழ்நாடு வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி சங்கத்திற்கு 17-1-1994 அன்று அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் சட்டத்தின்கீழ் இந்நிறுவனம் 7-2-1994 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக திருச்சி மாவட்டத்தில் உள்ள கம்பரசம்பேட்டையில் 9.49 ஹெக்டேர் நிலம் தமிழ்நாடு வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

91—

சேந்தமங்கலம் அய்யனார் கோவிலைப் புதுப்பித்தல்.

*வினா எண் **25071**—திரு. ஆர். தங்கராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, சேந்தமங்கலம் அய்யனார் கோவிலை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலுக்கு போதுமான நிதி வசதியில்லை. எனவே, மேற்காணும் ஆலயத்திற்கு கிராமப்புற திருப்பணி செய்ய நடவடிக்கை எடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

92—

கொடுமுடி மகுடேஸ்வரர் கோவில் பகுதியில் நவீன கழிப்பிடம் கட்டுதல்.

வினா எண் ***26814***—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி மகுடேஸ்வரர் கோவிலுக்கு வரும் பக்தர்கள் பயன்படுத்த கோவில் பகுதியில் நவீன கழிப்பிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், கொடுமுடி கிராமம், அருள்மிகு மகுடேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களோ, நிலங்களோ ஏதுமில்லை. எனவே, கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன கழிப்பிடம் கட்ட இயலாது.

93—

ஸ்ரீகன்னியம்மன் திருக்கோயிலை புதுப்பித்தல்.

வினா எண் ***26840***—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

கொடுமுடியிலுள்ள தனிப்பட்டவருக்குச் சொந்தமான பாழடைந்த நிலையிலுள்ள ஸ்ரீகன்னியம்மன் திருக்கோயிலைப் புதுப்பித்துத் திருப்பணி செய்ய அரசு திருக்கோயில் நிதியிலிருந்து உதவி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், கொடுமுடியில் உள்ள அருள்மிகு ஸ்ரீகன்னியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் இல்லாத சிறிய கோயில். இந்த திருக்கோயிலுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. மேலும் இந்தத் திருக்கோயிலை வழிபடும் சமூகத்தார்க்கு இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் கொண்டுவர விருப்பமில்லை என்பதால், இத்திருக்கோயிலை திருப்பணி செய்ய திருக்கோயில் நிதியிலிருந்து உதவி செய்ய இயலாது.

94—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலயங்களைத் திருப்பணி செய்தல்.

வினா எண் ***27635***—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வத்தானக்குறிச்சி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம், வாணியம்பட்டி வளந்தான் கோட்டை கருப்பர் விளாப்பட்டி முத்துமாரியம்மன் ஆலயம், விளத்துப்பட்டி ஊரப்பட்டி அடைக்கலம் காத்த அய்யனார் கோயில், விடுதாப்பட்டி த/அ பொய்யாமணி சிவன் கோயில், விராலிமலை கார்த்திகை கட்டளை இணைப்பு சுப்பிரமணியசுவாமி ஆலயம், தைப்பூசக்கட்டளை இணைப்பு சுப்பிரமணியசுவாமி ஆலயம், விராலிமலை வீரேஸ்வரர் ஆலயம், பேயால் சேவகப்பெருமாள் ஆலயம், தென்னம்பாடி அன்னமார் ஆலயம் ஆகிய கோவில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

95—

ராஜபுரத்தில் காசி விஸ்வநாதர் கோயிலை சீரமைத்தல்.

வினா எண் *33096*—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதி, ராஜபுரத்தில் பழுதடைந்துள்ள காசி விஸ்வநாதர் கோயிலை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

96—

மொடக்குறிச்சியிலுள்ள கோவில்களுக்கு ஒரு கால பூஜை நடத்துதல்.

வினா எண் *36307*—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி பேரூராட்சியிலுள்ள 8 திருக்கோயில்களுக்கும் ஒரு கால பூஜைக்குரிய நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி பேரூராட்சியிலுள்ள 8 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை நிதி உதவி திட்டத்தின்கீழ், திருக்கோயில் சார்பில் ரூ. 2,500 நன்கொடை செலுத்தினால் அரசு தனது பங்காக ரூ. 22,500 சேர்த்து மொத்தம் ரூ. 25,000 வைப்புநிதி ஏற்படுத்தி அதன் மாதாந்திர வட்டியை திருக்கோயிலின் ஒரு கால பூஜை செலவுகளுக்கு பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

97—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வியாபார ரீதியான போட்டிகள்.

Question No. 7944—Thiru M. SUNDARADOSS: Will the Hon'ble Minister for Tourism be pleased to state—

(a) Whether the rest homes/hotels/restaurants operated by the T.N.T.D. Corporation find competition from such homes run by India Tourism Corporation?

(b) The steps taken to meet this competition?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டில் மதுரையிலும், மாமல்லபுரத்திலும் தான் ஓட்டல்கள் நடத்தி வருகிறது. இங்கு விற்கும் பண்டங்களின் விலை ஏற்கனவே அதிக அளவில் உள்ளது. ஆகவே போட்டி என்பதற்கு இடமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

98—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நஷ்டத்தினை சரிகட்ட நடவடிக்கை.

Question No. 7942—Thiru M. SUNDARADOSS: Will the Hon'ble Minister for Tourism be pleased to state—

Whether any investigations have been undertaken into the causes of the loss incurred by the hotels/restaurants/rest houses run by the T.N. Tourism Development Corporation in recent years?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள், உணவகங்கள் மற்றும் ஓய்வு விடுதிகளில் ஏற்படும் நஷ்டத்திற்கான காரணங்களை ஆய்வுகள் செய்து, நஷ்டத்தினை சரிகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

99—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்கள் இயங்கும் விதம்.

Question No. 7936—Tmt. V.G. MANIMEGALAI: Will the Hon'ble Minister for Tourism be pleased to state—

(a) Whether the Hostels/restaurants/rest houses run by the T.N. Tourism Corporation is running on loss now?

(b) If so, the details there of?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) :

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகின்ற 24 ஓட்டல்கள், 11 இளைஞர் விடுதிகள் மற்றும் 4 உணவகங்களில் சுற்றுலா அபிவிருத்தி நோக்கத்துடன் மட்டுமே இயங்குகின்ற பிச்சாவரம் அறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம், மண்டபம், ஏலகிரி, கோத்தகிரி மற்றும் பூம்புகார் போன்ற இடங்களில் உள்ள ஓட்டல்கள் மட்டுமே நஷ்டத்தில் இயங்குகின்றன.

100—

மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்களில் தாழ்த்தப்பட்டவர்களையும் சேர்த்தல்.

*வினா எண் **11016**—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் 20 சதவிகிதம் சேர்க்கப்பட்டுள்ளதை நீக்க வேண்டும் என கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், அரசு அதனை செயல்படுத்த முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம், பிரிவு *33* (1)-ன்படி நிர்வாகக் குழுவில், பெண்களுக்கு *30* சதவிகிதமும் மற்றும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு *18* சதவிகிதமும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். மேற்படி பிரிவில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு *20* சதவிகிதம் ஒதுக்கப்படவில்லை. கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் பரிந்துரைப்படி, நிர்வாகக் குழுவில் *30* சதவிகிதம் பெண்கள் மற்றும் *18* சதவிகிதம் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு வழங்கப்படவேண்டும் என்ற விதிக்குப் பதிலாக கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் பெண்களுக்கு *30* சதவிகிதம் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று விதியை மாற்றியமைக்கலாம் என அரசு ஆலோசனை செய்து வருகிறது.

·53/304-50

[1994 நவம்பர் 3

பதின்மூன்றாம் பட்டியல்.

1—

வடலூரில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***26097***—*திரு. கு. சிவசுப்பிரமணியன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் வடலூரில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வடலூர் சார்பதிவகத்துக்கு நில ஆர்ஜிதம் ஏதும் செய்யப்படாததால் அரசு கட்டிடம் கட்டுவது பற்றிய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

2—

பழனி பத்திரப் பதிவுத் துறை சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***26499***—*திரு. ஆ. சுப்புரத்தினம்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரில் உள்ள பத்திரப் பதிவுத்துறை சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) பழனி மாவட்டப் பதிவாளர் அலுவலகம் தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) பழனி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்துக்கு அரசு கட்டிடம் கட்ட பொதுப்பணித் துறையினரிடம் மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெறப்பட்டதும் அரசு கட்டிடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

1994 நவம்பர் 3]

3—

அவிநாசி மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம்.

*வினா எண் **1105**—டாக்டர் மு. சீனியம்மாள்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசியில் உள்ள மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், பணியாளர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக் குறையை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அவிநாசியிலுள்ள அரசு மருத்துவமனையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்:—

உதவி அறுவை மருத்துவர்	1
மருந்தாளுநர்	1
செவிலியர்	1
உதவி செவிலியர்	1
செவிலிப்பணி உதவியாளர்	1
சமையல்காரர் மற்றும் நீராளர்	1
துப்புரவாளர்	1
மொத்தம் ..	7

(ஆ) இம் மருத்துவமனையை 32 படுக்கைகள் கொண்டதாக விரிவாக்கம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கான கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்தபின் அதிகரிக்கப்பட்ட படுக்கை என்ணிக்கைக்கு தக்கபடி கூடுதல் மருத்துவர்கள், அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

4—

அவிநாசி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் பணியமர்த்த நடவடிக்கை.

*வினா எண் **8525**—டாக்டர் மு. சீனியம்மாள்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசியில் உள்ள மருத்துவமனையில் போதிய படுக்கை வசதி, அறுவை சிகிச்சைக் கூடம் இருந்தும் இதுவரை அறுவை சிகிச்சை மருத்துவர், மகப்பேறு மருத்துவர் பணியமர்த்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மருத்துவர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) அவினாசியிலுள்ள அரசு மருத்துவமனையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்:—

உதவி அறுவை மருத்துவர்	1
மருந்தாளுநர்	1
செவிலியர்	1
உதவி செவிலியர்	1
செவிலிப்பணி உதவியாளர்	1
சமையல்காரர் மற்றும் நீராளர்	1
துப்புரவாளர்	1
மொத்தம் ..	7

தற்போதைய தேவைக்கு இது போதுமானதாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) இம் மருத்துவமனையை 32 படுக்கைகள் கொண்டதாக விரிவாக்கம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கான கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்தபின் அதிகரிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கைக்கு தக்கபடி கூடுதல் மருத்துவர்கள், அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

5—

வழிப்பாட்டுத் தலங்களில் சுகாதார ஆய்வாளரை நியமித்தல்.

வினா எண் 26345—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வழிப்பாட்டுத் தலங்களில் (Pilgrim Centres) சுகாதார ஆய்வாளரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விழாக்கள் பெரும்பாலும் சில நாட்களிலேயே முடிந்துவிடும். உரிய பகுதிகளில் செயல்படும் ஆய்வாளர்கள் அதைக் கவனித்துக் கொள்வார்கள். எனவே புதிதாக வழிபாட்டுத் தலங்களில் சுகாதார ஆய்வாளர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை.

6—

பரமக்குடி வட்டத்திலுள்ள தாய்சேய் நல விடுதிகள் விவரம்.

வினா எண் 33508—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் உள்ள தாய்சேய் நல விடுதிகள் எத்தனை?

(ஆ) உள் நோயாளிகளாக தங்கி மருத்துவம் பார்த்து கொள்ள எத்தனை விடுதிகள் கட்டப்பட்டுள்ளன?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் மொத்தம் 44 தாய் சேய் நல விடுதிகள் இயங்கி வருகின்றன.

(ஆ) தாய் சேய் நல நிலயங்களில் பணிபுரியும் கிராம சுகாதார செவிலியர்கள் அந்தந்த மையங்களில் பிரசவம் பார்ப்பதுடன் அந்தப் பகுதியில் தாய்சேய் நலப்பணிகள், குடும்ப நலப் பணிகள் மற்றும் சிறு நோய்களுக்கு மருத்துவம் பார்த்தல் போன்ற பணிகளை செய்து வருகின்றனர். ஆனால் பொது நோய்களுக்கு உள் நோயாளிகளாகத் தங்கி மருத்துவம் பார்த்துக்கொள்ள இங்கு வசதிகள் இல்லை.

7—

மன்னார்குடி தொகுதி, தலையாமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண் ***35910***—*திரு. கு. சீனிவாசன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, தலையாமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் எப்பொழுது கட்டித்தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஆம். வாடகைப் பணம் அவ்வூர் மக்களால் செலுத்தப்படுகின்றது. எனவே இதற்கான செலவினம் அரசால் செலுத்தப்படவில்லை.

(ஆ) இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை. இனிவரும் காலங்களில் அரசின் நிதி நிலைக்கேற்ப இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

1994 நவம்பர் 3]

8—

சோற்றுக் கற்றாழைப் பயிரிட்டு வளர்க்கும் திட்டம்

வினா எண் *36937*—திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவத்திற்குப் பயன்படும் சோற்றுக் கற்றாழையைப் பயிரிட்டு வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) இல்லை எனில், பயிரிட்டு வளர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) ஏற்கெனவே, சென்னை, அரும்பாக்கம் அறிஞர் அண்ணா மூலிகைப் பண்ணையில் சோற்றுக் கற்றாழைப் பயிரிடப்பட்டு வருகிறது.

(ஆ) சோற்றுக் கற்றாழை அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கும், திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் உள்ள மண்டல மருந்துசெய் அலுவலகத்திற்கும் மற்றும் பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரி ஆய்விற்கும் மருந்துகள் தயார் செய்ய அனுப்பப்படுகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

9—

விருத்தாசலத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பணிமனை அமைத்தல்

வினா எண் **24304**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1994 நவம்பர் 3

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எதுவும் தென்னாற்காடு மாவட்டம், விருத்தாசலம் நகரில் இருந்து இயக்கப்படவில்லை. ஆறு பேருந்துகள் விருத்தாசலம் வழியாக பாண்டி-ஊட்டி, பாண்டி-கோவை, நாகர்கோவில், நெய்வேலி-சென்னை வழித் தடங்களில் இயக்கப்படுகின்றன. எனவே, விருத்தாசலம் நகரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

10—

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் கப்பல்கள் விவரம்

*வினா எண் **38433**—திரு. கே. முனிவெங்கடப்பன்:* மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தில் எத்தனை கப்பல்கள் உள்ளன?

(ஆ) இந்த ஆண்டு இலாபம் எவ்வளவு?

(இ) புதிய கப்பல்கள் வாங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மூன்று கப்பல்கள் உள்ளன.

(ஆ) 1993-94—ரூ. 2,116.52 இலட்சம்.

(இ) ஆம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1994 நவம்பர் 3]

11—

அரசுப் பேருந்துகளில் தனியார் நிறுவனங்கள் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்தல்

வினா எண் ***38453***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பேருந்துகளில் தனியார் நிறுவனங்கள் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்ய அனுமதி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

1994 ஆம் ஆண்டு திறந்த வெளி இடங்களில் (அழகு கெடுக்கப்படுவதைத் தடுத்தல்) திருத்தச் சட்டத்தில் பொது மக்கள் பார்வையில் படக் கூடிய இடங்களிலும் இயக்கூர்திகளின் மீதும் சுவரொட்டிகளை ஒட்டுவதைத் தடுப்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளதால் அரசுப் பேருந்துகளில் எந்த நபரும் (போக்குவரத்துக் கழகத் தலைவர் அவர்களின் அனுமதியின்றி) விளம்பரங்கள் செய்ய இயலாது.

12—

திப்புரேவு அணைத்திட்டம் மற்றும் பாலக்கோம்பை கண்மாய்த் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் ***792***—திரு. கே. தவசி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதியில் 200 ஏக்கர் நிலம் பயன்பெறும் வகையில் திப்புரேவு அணைத் திட்டம் மற்றும் பாலக் கோம்பை சண்மாய்த் திட்டம் இரண்டையும் செயல்படுத்த அரசிடம் தற்போது திட்டம் ஏதும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திப்புரேவு அணைக்கட்டு திட்டத்தை விரிவாக ஆய்வு செய்து தொழில் நுட்ப காரணங்களினால் இத்திட்டம் சாத்தியமில்லை என்பதால் இதனை கைவிடலாமென்று அரசுக்குத் தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) பரிந்துரை செய்துள்ளார். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. பாலக்கோம்பை கண்மாய்த் திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.

13—

பெரிய ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துதல்

வினா எண் *1979*—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி, வல்லம்பக் கொல்லை பெரிய ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு புறம்போக்கில் மாற்று இடம் அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

14—

கண்டியன்கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்தல்

வினா எண் *14774*—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை, கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம், தென் ஏரிப்புறக்கரை கண்டியன் கொல்லை ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒற்றை விளக்கு அமைத்துத் தரக் கோரி விண்ணப்பம் எதுவும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

15—

கூத்தனூர் வாய்க்காலை நவீனப்படுத்துதல்

வினா எண் 15636—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் (தஞ்சை மாவட்டம்) காவிரி நவீனமய கோட்டத்தின் கீழ் கூத்தனூர் வாய்க்காலை நவீனப்படுத்த அதிக நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

கூத்தனூர் வாய்க்காலில் லைனிங் வேலைகள் செய்யப்படவேண்டிய மொத்த நீளம் 21.43 கி.மீ. இதில் 10.37 கி.மீ. வரை லைனிங் செய்யப்பட்டுள்ளன. 2.60 கி.மீ. தூரத்திற்கு லைனிங் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இக்கோடையில் முடிக்கப்படும். மீதமுள்ள 8.46 கி.மீ.-ல் 1.08 கி.மீ. வரை லைனிங் பணிகள் செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அடுத்த மீதமுள்ள 7.38 கி.மீ. வரை லைனிங் செய்ய ரூ. 74 இலட்சம் தேவைப்படும். இது நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப 1994-95 முதல் அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒட்டுமொத்த கருத்துருவில் சேர்க்கப்பட்டு அரசு ஒப்புதல் அளித்தவுடன் லைனிங் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

16—

நன்னிலம் தொகுதியில் வாய்க்கால் கரைகளைப் பழுதுபார்த்தல்

வினா எண் *17071*—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, ஓமக்குளம் ராசாதிமங்கலம் வாய்க்கால்-நடுவச்சேரி-ராசாதிமங்கலம் வழியாகச் செல்லும் வாய்க்காலில் இரு கரைகளும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கரைகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நன்னிலம் தொகுதி, ஓமக்குளம்-ராசாதிமங்கலம் வாய்க்காலில் 1990 ஆம் ஆண்டு குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் தூர் எடுத்து கரைகள் செப்பனிடப்பட்டன. மீண்டும் இந்த ஆண்டு சுழற்சி முறையில் குடிமராமத்து திட்டத்தின்கீழ் செப்பனிடும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

17—

அரசலாற்றின் குறுக்கே பெட் டேம் கட்டுதல்

வினா எண் *17313*—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கொங்கராய நல்லூரில் அரசலாற்றின் குறுக்கே (Bed Dam) பெட் டேம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது செயற்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நன்னிலம் தொகுதி, கொங்கராய நல்லூரில் அரசலாற்றின் குறுக்கே பெட் டேம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

1994 நவம்பர் 3]

18—

கல்லணைக் கால்வாய் மற்றும் வாய்க்கால்களும் தூர் எடுத்து கரையைப் பலப்படுத்துதல்

வினா எண் ***20324***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லணைக் கால்வாய் மற்றும் அதில் உள்ள அனைத்து வாய்க்கால்களும் 1993-94 ஆம் ஆண்டு தூர் எடுத்து கரையைப் பலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

19—

கால்வாய் அமைக்கும் திட்டம்

வினா எண் ***20817***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கட்டளை வாய்க்கால் மூலம் பாசனத்திற்குப் பயன்படும் ஏரிகளுக்கு நேரிடையாக தண்ணீர் விட கால்வாய் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

20—

காற்றாடிகள் மூலம் மின் உற்பத்தி

வினா எண் ***21502***—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 நவம்பர் 3

(அ) காற்றாடிகள் மூலம் மின் உற்பத்தி செய்யும் ஒரு கருவியின் (Wind Mill) விலை என்ன?

(ஆ) அரசின் சார்பில் எத்தனை உள்ளன?

(இ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) காற்றாலைக் கருவிகள் மூலம் மின் உற்பத்தி செய்யும் 200 கி.வா. 250 கிலோ வாட் மின் திறனுள்ள ஒரு கருவியின் விலை கிட்டத்தட்ட ரூபாய் எழுபதிலிருந்து எழுபத்தைந்து இலட்சம் வரை ஆகும்.

(ஆ) இது வரையில் கீழே தரப்பட்டுள்ள 120 மின் காற்றாலைக் கருவிகள், தமிழ்நாடு மின்வாரியத்தினால் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

திறன்	எண்ணிக்கை
55 கி.வா.	25
90 கி.வா.	17
200 கி.வா.	58
225 கி.வா.	6
250 கி.வா.	14
மொத்தம் ..	120

(இ) மின்சார உற்பத்தி காற்றின் வேகத்திற்குத் தகுந்தாற்போல் வேறுபடுவதால், தினசரி காற்றாலைக் கருவிகள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு வேறுபடும். இந்த 120 மின் காற்றாலைக் கருவிகள் மூலம் ஆண்டொன்றிற்கு 380 இலட்சம் அலகுகள் மின்சாரம் கிடைக்கிறது.

சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

21—

சோன வாய்க்காலை செப்பனிடுதல்

வினா எண் ***21614***—*திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா*—

நாகப்பட்டினம்—காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மேலப்பாலையூர் கிராமத்தில் சோன வாய்க்காலில் செடி, கொடிகள் வளர்ந்து தூர்ந்து போய் இருப்பதை புல்டோசர் இயந்திரம் மூலம் தூர் வாரி செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். ***கண்ணப்பன்,*** *பொதுப்பணித் துறை அமைச்சர்:*

நாகப்பட்டினம் –காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மேலப்பாலையூர் கிராமத்தில் உள்ள சோன வாய்க்காலின் நீளம் 6 கி.மீ. அகலம் 7மீட்டர். இவ்வாய்க்காலில் நெய்வேலி காட்டாமணி செடிகளைத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியரிடம் நிதி ஒதுக்கீடு பெற்று, வரும் கோடையில் மணவாரி இயந்திரங்கள் மூலம் முன்னுரிமை அடிப்படையில் அகற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

22—

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அணைகளையும் வயர்லெஸ் மூலம் தொடர்பு கொள்ளுதல்

வினா எண் ***23605***—*திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அணைகளையும் சென்னையிலிருந்து வயர்லெஸ் மூலம் தொடர்பு கொள்ள அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் அணைகள் பாதுகாப்பு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், அணைகளை வட்ட அலுவலகம், கோட்ட அலுவலகம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஆகிய இடங்களுடன் வயர்லெஸ் மூலம் தொடர்பு கொள்ள திட்டம் உள்ளது. திருவாளர்கள் எல்காட் நிறுவனம் செயலாக்கத் திட்டம் தயாரித்துக் கொடுத்துள்ளது. உலக வங்கி முறைகளின் மூலம் டெண்டர் விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் அமலாக்கம் 1994-95-ம் வருடம் எடுத்துக் கொள்ளப்படும். அதனை செயல்படுத்த ரூ. 2.00 கோடி தேவைப்படும்.

23—

தமிழ்நாட்டில் அணைகளைப் பாதுகாக்க உலக வங்கி நிதியுதவி அளித்தல்

வினா எண் **23612**—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அணைகளைப் பாதுகாக்க உலக வங்கி நிதியுதவி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் பயன் பெறும் அணைகள் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) அணை பாதுகாப்பு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் உலக வங்கி அணைகளைப் பாதுகாக்க ரூ. 41.85 கோடி நிதியுதவி அளித்துள்ளது. பயன்பெறும் அணைகளின் விவரம்:

(1) பெரியாறு அணை

(2) குடகனார் அணை

(3) மணிமுத்தாறு அணை

(4) பேச்சிப்பாறை அணை

(5) சாத்தனூர் அணை

(6) விடூர் அணை

(7) கோமுகி அணை

(8) உப்பாறு அணை

(9) பொன்னியாறு அணை

மேற்கண்ட அணைகளைப் பலப்படுத்துதல், கூடுதல் நீர்போக்கிகள் அமைத்தல், கரைகளை உயர்த்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் சாலையைப் புதுப்பித்தல், கூடுதல் ஜெனரேட்டர் அமைத்தல், தொலைத் தொடர்புக் கருவிகள் அமைத்தல், தளவாடக் கருவிகள் அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

24—

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் இணையம் விவசாயக் கடன் வழங்குவதை ஊக்குவித்தல்

வினா எண் 34206—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் இணையம் மூலம் விவசாயிகளுக்கு டிராக்டர் உள்பட விவசாயக் கருவிகளை வாங்க கடனுதவி வழங்குவதை மேலும் ஊக்குவிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

[1994 நவம்பர் 3

25—

ஆரணிப்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு ஏற்படுத்துதல்

*வினா எண் **38229**—திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றியம், மூட்டாம்பட்டி ஊராட்சி ஆரணிப்பட்டி கிராமத்தில் விவசாயத்திற்கு ஆழ்துளைக் கிணறு திட்டத்தின்கீழ் புதிய ஆழ்துளைக் கிணறு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. குப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

விவசாயிகள் தங்கள் நிலங்களில் குழாய்க் கிணறு அமைக்க விரும்பினால், வேளாண்மைப் பொறியியல் துறையில் சிறுபாசன திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறுகள் அமைத்துத் தரப்படும். வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களைக் கொண்டு அமைக்கப்படும் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் மேம்படுத்தும் பணிகளுக்கு, இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு கருவிகள் வாடகையில் *50* சதவீதம் மானியமாகவும், இடுபொருள் செலவினத்தில், *50* சதவீதம் மானியமாகவும் வழங்கப்படும். இதுபோன்று சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் குழாய்க் கிணறு அமைக்கும் செலவில் *50* சதவீதம் மானியமாக, அதிக பட்சமாக ரூ. *5,000* வழங்கப்படும்.

26—

சங்ககிரி நகரில் ஆவின் பால் சரிவர வழங்க நடவடிக்கை

*வினா எண் **22603**—டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி நகரில் ஆவின் பால் சரிவர வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

சங்ககிரி பேரூராட்சி எல்லையில் *12-3-1986* முதல் ஆவின் பால் விற்பனை முகவர் ஒருவர் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தால் நியமனம் செய்யப்பட்டு, இப்பகுதி மக்களுக்கு நல்ல முறையில் நாள் ஒன்றுக்கு *300* லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டு

1994 நவம்பர் 3]

வருகிறது. மேலும், சங்ககிரி பொதுமக்களின் பால் தேவையினை அனுசரித்து, ஒன்றியத்தால் மற்றும் ஒரு முகவர் 11-6-1993-ல் நியமனம் செய்யப்பட்டு, இம்முகவரும் பிரதி தினம் 300 லிட்டர் பால் விநியோகம் செய்கின்றார். ஆக, சங்ககிரி பேரூராட்சியில் தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 600 லிட்டர் வரை ஆவின் பால் விற்பனைப் செய்யப்பட்டு வருகின்றது. சங்ககிரி பேரூராட்சியில் பால் விற்பனைப் பணியை கண்காணிக்க திருச்செங்கோடு பால் விற்பனை அலுவலர் அவர்களுடன் ஒன்றியத்தின் தலைமைப் பிரிவு உதவி மேலாளரும் (விற்பனை) அவ்வப்போது சங்ககிரிக்குச் சென்று பால் விநியோகம் செய்வதைக் கண்காணிக்கின்றார்கள். முகவர்களது பால் விநியோகத்தில் பால் வாங்கிவரும் பொதுமக்களிடமிருந்து புகார்கள் எதுவும் பெறப்படவில்லை.

27—

கோம்பை மஜாரா ஏரிக்காட்டில் குட்டை அமைத்தல்

*வினா எண் **26754**—திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதியில் பச்சைமலை கோம்பை மஜாரா ஏரிக்காட்டில் ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்கும் குட்டை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத்துறை அமைச்சர்:

உப்பிலியாபுரம் தொகுதியில் பச்சைமலை கோம்பை மஜாரா ஏரிக்காட்டில் ஆடு மாடுகள் தண்ணீர் குடிக்கும் தொட்டி கட்ட ஏற்பாடுகள் ஏதும் தற்போது செய்யப்படவில்லை. ஏற்கெனவே இக்கிராமத்தில் ஒரு தண்ணீர் குட்டை உள்ளது. அதில் நிரம்பியுள்ள தண்ணீரை ஆடு மாடுகள் குடிக்கின்றன.

28—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் பால் உற்பத்தியாளர் சங்கங்களை மீண்டும் இயக்குதல்

*வினா எண் **33150**—திரு. கு. சிவசுப்பிரமணியன்:* மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு – வள்ளலார் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி தொகுதியில், தற்போது இயங்காமல் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை மீண்டும் இயங்க வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல் வடிவம் கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி தொகுதியில் தற்போது இயங்காமல் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை, அச்சங்கங்களைச் சார்ந்த அங்கத்தினர்கள் மீண்டும் இயங்க வைக்க முன்வந்தால், மீண்டும் இயங்க வைக்க அரசு முன்வரும். மேலும், அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் குறிஞ்சிப்பாடி தொகுதியில் தற்போது இயங்காமல் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களை, அச்சங்கங்களைச் சார்ந்த அங்கத்தினர்கள் மீண்டும் இயங்க வைக்க குறைந்த அளவு நாள் ஒன்றுக்கு 75 லிட்டர் பால் கொடுக்க முன்வந்தால் அந்த அங்கத்தினர்கள் கொடுக்க வரும் தேதியிலிருந்து 10 தினங்களுக்குள் அச்சங்கங்களைச் செயல்படச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

29—

ஒன்றியங்கள்தோறும் ஆட்டுப் பண்ணைகள் அமைத்தல்

வினா எண் 36927—திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒன்றியங்கள்தோறும் ஆட்டுப் பண்ணைகள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

ஒன்றியங்கள் தோறும் ஆட்டுப் பண்ணை அமைக்க தேவைப்படும் மேய்ச்சல் நிலம், கொட்டகைகள் அமைப்பதற்குத் தேவையான 50 ஏக்கர் நிலம், தண்ணீர் வசதி மற்றும் நிதி வசதி தற்போதுள்ள சூழ்நிலையில் எல்லா

1994 நவம்பர் 3]

ஒன்றியங்களிலும் அமைவது கடினம் என்பதால் தற்போது ஒன்றியங்கள் தோறும் ஆட்டுப் பண்ணை அமைப்பது அரசால் இயலாத ஒன்றாகும்.

30—

மூலதன உதவியை முகவர் முதலீட்டுப் பங்குத் தொகையாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கருதிட வழிவகை செய்தல்

*வினா எண் **1039**—டாக்டர் அ. ஸ்ரீதரன்:* மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசிய அல்லது பட்டியலிடப்பட்ட வங்கிகளிடமிருந்தோ மற்றும் தேசிய சிறு தொழில் அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்தோ கிடைக்கப்பெறும் மூலதன உதவியை முகவர் முதலீட்டுப் பங்குத் தொகையாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கருதிட வழிவகை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

தேசியமயமாக்கப்பட்ட அல்லது அட்டவணையிடப்பட்ட வங்கிகள் தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தில் கடன் வசதி பெறுவதற்காகத் தேவைப்படும் சமபங்கு உதவித் தொகையை தொழில் பிரிவுகளுக்கு வழங்குவதில்லை. முயற்சி மூலதன நிதி (Venture Capital Fund) என்ற புதுத் திட்டத்தினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் ஆராய்ந்து வருகிறது. இத்திட்டத்தில் தொழில் முனைவோர்களுக்கு மூலதனத் தொகை வழங்க வகை செய்யப்படும்.

31—

தமிழ்நாட்டிலுள்ள பிச்சைக்காரர் விடுதிகள் விவரம்

*வினா எண் **20782**—திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பிச்சைக்காரர் விடுதிகள் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவை எவ்வாறு செயல்படுகின்றன?

(இ) இவ்வாண்டில் (1993-94) விடுதிகள் தொடங்க திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமுக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்காக உள்ள 10 மறுவாழ்வு இல்லங்களும், தமிழ்நாடு பிச்சைக்காரர்கள் தடுப்புச் சட்டம் 1945-ன் கீழ் தண்டிக்கப்படும் பிச்சைக்காரர்களுக்கென மேல்பாக்கத்தில் உள்ள அரசினர் ஏழைகள் பாரமரிப்பு விடுதியும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

(இ) 1993-94 ஆம் ஆண்டில் புதியதாக விடுதிகள் தொடங்குவதற்கான திட்டம் ஏதும் இல்லை.

32—

அரசு ரப்பர் கழகத்தில் உற்பத்தி செய்யும் ரப்பரை விற்பனை செய்தல்

வினா எண் 21164—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ரப்பர் கழகத்தில் உற்பத்தி செய்யும் ரப்பரை டெண்டர் மூலம் விற்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், டெண்டர் மூலம் விற்காமல், பொது ஏலத்தில் விற்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அரசு ரப்பர் கழகம் அமைக்கப்படும் முன்னர், அது வனத் துறையின் ஒரு பிரிவாக செயல்பட்டு வந்தது. காடுபடு பொருட்கள் அனைத்தும் வன விதித் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வந்தன. இதே நடைமுறையே, அரசு ரப்பர் கழகத்திலும் பின்பற்றப்பட்டது.

ஆனால், அது ஒரு வணிக நிறுவனமாக இருப்பதால், பிற ரப்பர் உற்பத்தியாளர்களுடன் போட்டியிட இயலும் வகையில் புதிய விற்பனை உத்திகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கருதப்பட்டது. இந்த நோக்கத்தை எய்துவதற்காக, அரசு ரப்பர் கழக இயக்குநர் குழு பரிந்துரைத்தபடி ரப்பர்

1994 நவம்பர் 3]

விற்பனைக்காக கீழ்க்கண்ட புதிய நடைமுறையினை அங்கீகரித்து 28-6-1988 தேதிய வனம் மற்றும் மீன்வளத் துறை அரசாணை எண் 749-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(i) ரப்பரைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு, அதிக அளவு 6 மாதங்களுக்கு அனைத்து ரகங்களிலுமான ரப்பர்களை ஒப்பந்த அடிப்படையில் இடைத்தரகர் யாருமின்றி நேரடியாக விற்பனை செய்தல், பல்வேறு தரங்களைச் சேர்ந்த ரப்பர்களுக்கு கோட்டயம் அங்காடியில் கிடைப்பதைவிட (மலையாள மனோரமா பத்திரிகையில் இவ்வீதங்கள் வெளியிடப்படுகின்றன) அதிக பிரிமியத் தொகையை அல்லது தள்ளுபடித் தொகையை நிர்ணயித்தல், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் வீதங்களை இக்கழகத்தின் பயன் கருதி, ஒவ்வொரு ஒப்பந்தக்கால இறுதியிலும் மறு ஆய்வு செய்வதற்கும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்தல்.

(ii) விற்பனைத் தொகை முழுவதையும் முன்னரே செலுத்துவதன் பேரில், இக்கழகம் ஒப்புதலளித்த வீதங்களில் முதலில் வந்தவர்களுக்கு முதலில் விற்பனை செய்தல் என்ற அடிப்படையில் அடர்த்திப் பாலை (Cenex) நேரடியாக விற்பனை செய்தல்.

(iii) மேலும், இக்கழகமே, அடர்த்திப் பாலை நேரடியாக விற்பனை செய்வதோடன்றி, உரிய நிதி உத்திரவாதத்துடன் கேரள மலைத் தோட்டக் கழகம் பின்பற்றும் அதே முறையில், விற்பனை முகவர்களையும் நியமிக்கலாம். இந்த விற்பனை முகவர்களுக்குத் தரகுத் தொகையாக 0.5 சதவீதம் கொடுக்கலாம்.

(iv) குறித்த காலத்திற்கொருமுறை அல்லது தேவை எழுகின்ற போது அங்காடி விலை நிலவரத்தையும், வழங்கல், தேவை நிலைமையையும் ஆய்வு செய்யவும், விற்பனைக்காக வழிகாட்டி நெறிமுறைகளை வகுக்கவும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முடிவு எடுப்பதற்கு ஏதுவாக, அனைத்துத் தரங்களையும் சேர்ந்த ரப்பர்களுக்கு நியாயமான விலைகள் நிர்ணயிப்பதற்குரிய செயற்குறிப்புகள் அளிக்கவும், அரசு ரப்பர் கழகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் விற்பனைக் குழு ஒன்றை ஏற்படுத்துதல், அக்குழுவில் பொது மேலாளர் (குழுக்கூட்ட அமைப்பாளராக இருப்பவர்), செயலாளர்-தலைமை கணக்கு அதிகாரி, விற்பனை மேலாளர் ஆகியோர் இடம் பெற்றிருப்பர்.

(v) இருப்புச் சேர்ந்துவிடும் போதெல்லாம் பகிரங்க ஏலம்/ஒப்பந்தப் புள்ளி முறை பின்பற்றப்படலாம்.

மேற்சொன்னவற்றின் அடிப்படையில், புதிய விற்பனைக் கொள்கை பின்பற்றப்பட்டு, துணைக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. குறித்த காலத்திற்கொருமுறை அல்லது தேவை ஏற்படும் போதெல்லாம், வழங்கல், தேவை நிலவரங்கள், அங்காடிப் போக்கு ஆகியவற்றிற்கேற்ப, அங்காடி விலை குறித்து ஆய்வு செய்தல், விற்பனை வழிகாட்டி நெறிமுறைகளை வகுத்தல், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முடிவெடுப்பதற்கு வசதியாக, ரப்பரின் அனைத்துத் தரங்களுக்கான விலையை நிர்ணயிப்பதற்கான செயற்குறிப்புகள் அளித்தல் ஆகிய நோக்கங்களுக்காகத் துணைக்குழு கூடுகிறது. பத்திரிகைகளில் விரிவான விளம்பரம் செய்து, ஒப்பந்தப் புள்ளிகள் கோரிய பின்னர், மேற்சொன்ன அரசாணைக்கிணங்க, அரசு ரப்பர் கழகத்தில் ரப்பர் விற்பனை மற்றும் ஏலம் நடைபெற்று வருகிறது.

பொது ஏலத்தில் விற்பனை செய்து வந்த காலத்தில் ரப்பர் வாடிக்கையாளர்கள் தங்களுக்குள்ளே கூட்டு அமைத்து குறைந்த விலையில் ஏலம் கேட்டு வந்தமையால் கழகத்திற்கு மிகவும் குறைந்த விலையே கிடைத்தது. மேலும், அரசு ரப்பர் கழகம் அடர்த்தி மிகுந்த பாலை உற்பத்தி செய்கிறது. இது எளிதில் கெட வாய்ப்புள்ள பொருள். இதன் விற்பனை தாமதப்பட்டால் அதன் தரம் கெட்டுவிடும். எனவே, போட்டி விலையிலும் தரம் கெட்டுப் போவதற்கு முன்பாகவும் ரப்பர் விற்பனை செய்ய டெண்டர்/பேரம் பேசுதல்/ஏலம் முதலிய முறைகளைக் கையாண்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

33—

வன உயிரினங்களை பாதுகாக்க நடவடிக்கை

வினா எண் 26890—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வன உயிரினங்களைப் பாதுகாக்க தற்போது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் விவரமென்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர் :

வன உயிரினங்களைப் பாதுகாக்க, வனத் துறையில் பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றன. அவற்றின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :

1994 நவம்பர் 3]

தமிழ்நாட்டில் தற்போது பதினான்கு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் ஐந்து தேசிய பூங்காக்கள் உள்ளன. இவையன்றி, நீலகிரி பயோஸ்பியர் ரிசர்வ், மன்னார் வளைகுடா பயோஸ்பியர் ரிசர்வ், புலிகள் பாதுகாப்பு மற்றும் யானைகள் பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரப்படுகின்றன.

வன உயிரின பாதுகாப்பு மற்றும் அவற்றின் வளர்ச்சிக்காக என்று தனியே ஒரு பிரிவு வனத் துறையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவின் கீழ் நான்கு வன உயிரின மண்டலங்களும் ஒன்பது வன உயிரின கோட்டங்களும் உள்ளன.

அரசின் தீவிர திட்டங்களின் பயனாக பல உயிரினங்கள் அழியும் நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளன. உதாரணமாக நீலகிரி வரையாடு, சிங்கவால் குரங்கு, சாம்பல் நிற அணில், புலிகள் போன்றவை எண்ணிக்கையில் பெருகியுள்ளன. சரணாலயங்கள் மற்றும் தேசிய பூங்காக்களில் வசிக்கும் மலைவாழ் மக்களை புறப்பகுதிகளில் குடியமர்த்தி கால் நடைகள் மேய்ச்சல், மீன் பிடித்தல் மற்றும் மனித நடமாட்டம் போன்றவை சரணாலயப் பகுதிகளில் குறைக்கப்பட்டுள்ளன.

வன உயிரினங்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டதன் பேரில் அவ்வன உயிரினங்களால் ஏற்படும் உயிரிழப்பு, பயிர்ச் சேதம் மற்றும் கால்நடை ஒழிப்பு போன்றவற்றிற்கு உரியவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வன உயிரினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு மேலும் பல புதிய சரணாலயங்கள் ஏற்படுத்துவதுடன் சரணாலயங்களிலிருந்து மரம் வெட்டுதல், கல் உடைத்தல், சிறு மகசூல் பயிர்களை விற்பனைக்கு விடுதல் போன்றவை நிறுத்தப்பட்டுள்ளன.

வன உயிரினப் பாதுகாப்பில் பல நாடுகளில் கையாளும் முறைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் அவ்வப்போது கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி யானைகள் பற்றிய கருத்தரங்கு உதகையிலும், சிங்கவால் குரங்கு பற்றிய கருத்தரங்கு அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிலும் நடைபெற்றது. இந்தியாவிலுள்ள உயிரியல் பூங்காக்களின் மாநாடு நடைபெற்றது. அதில் வன உயிரினங்களின் பரிமாற்றம், அரிய உயிரினங்களைப் பாதுகாக்கவும் இனவிருத்தி செய்தல் வேட்டையாடுதலைத் தடுத்தல் ஆகியவையும் விவாதிக்கப்பட்டன.

வேட்டையாடுதலைத் தடுக்கும் வண்ணம் பாதுகாப்பை அதிகரிக்க துரித வாகன வசதி, வயர்லெஸ் கருவிகள், துப்பாக்கிகள் போன்றவை தேவைப்படும் அளவில் வன உயிரினப் பிரிவு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வன உயிரினப் பாதுகாப்புச் சட்டமும் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

34—

ஆசிரியர்களுக்கான நலத் திட்டங்கள் விவரம்

வினா எண் 12140—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்களுக்காக அறிவிக்கப்பட்ட சில நலத் திட்டங்களின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

பள்ளி ஆசிரியர்கள் நலன் :—

தனியார் உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்காக சட்டபூர்வமான பாதுகாப்., தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள், 1973 மற்றும் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி (விதிமுறைகள்) விதிகள் 1974, 1-12-1974 முதல் இயற்றப்பட்டு அமலில் உள்ளன. இச்சட்டம் மற்றும் விதிகள் மேல் நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்தும்படி செய்யப்பட்டுள்ளன.

தற்காலிகமாக அரசுப் பள்ளிகளில் பணிபுரிந்த, 661 பள்ளி உதவி ஆசிரியர்கள்; 585 மொழி ஆசிரியர்கள் மற்றும் 22 உயற்பயிற்சி இயக்குநர்களுடைய பணி, வரன் முறைப்படுத்தப்பட்டு 3-8-1988 முதல் பணப் பலன் அடைந்துள்ளனர். 1-7-1978 முதல் 28-4-1981 வரையிலான காலத்தில் தற்காலிகமாக நியமனம் பெற்ற முழுத் தகுதியுடைய 355 முதுநிலை ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கை 750-ம் அதற்கு மேல் உள்ள மேல் நிலைப் பள்ளிகளில் ஏற்கனவே பி.டி. தரத்தில் உள்ள உதவித் தலைமையாசிரியரைத் தவிர ரூ. 1820-3200 ஊதிய விகிதத்தில் உள்ள முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ஒருவர் உதவித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றவும் அதற்கான சிறப்பு ஊதியமாக ரூ. 25 பெறவும் வகை

1994 நவம்பர் 3]

செய்யப்பட்டுள்ளது. இது உயர் நிலை வகுப்புகளுக்கு உள்ள பி.டி. தர உதவித் தலைமை ஆசிரியர் பதவியைத் தவிர கூடுதல் பதவியாகும்.

மாணவர்களின் எண்ணிக்கை 750 அல்லது அதற்கு மேல் உள்ள உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் நடுநிலை வகுப்புகளுக்கு மற்றொரு இடைநிலை ஆசிரியர், உதவித் தலைமை ஆசிரியராக பணியாற்றவும், அதற்காக சிறப்பு ஊதியமாக ரூ. 25-ஐப் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் "உட்படுத்தப்பட்ட உடற் கல்வி இயக்குநர்களுக்கு ஓராண்டு கால முதுநிலை சான்றிதழ் வகுப்புகள்" நடத்திட 1989-90-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, இதன்மூலம் 400 உடற் கல்வி இயக்குநர்கள் பயனடைந்தனர்.

அரசு அல்லாத கல்வி நிறுவன ஆசிரியர்கட்கும் பிற பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் :

அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) பள்ளி ஆசிரியர்களுக்கு 1-6-1970-லிருந்தும் தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1-4-1972-லிருந்தும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2-10-1970-லிருந்தும் பிறவகையான தனியார் கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதிகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சிறப்பு வைப்பு நிதி பணிக் கொடைத் திட்டம், 1-4-1994 முதல் அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. மேலும், மானிய உதவி பெறும் பள்ளி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் மாதம் ரூ. 15 வீதம் மருத்துவப்படி 1-4-1990 முதல் வழங்கப்படுகிறது.

உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிவோருக்கு வைப்புநிதி:

தனியார் பள்ளி ஆசிரியர்களின் வைப்பு நிதிக் கணக்குகள் அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமாகச் செயல்படுவதற்குப் பதிலாக அரசு ஊழியர்களுக்கு எவ்வாறு செயல்படுத்தப்படுகிறதோ அதே முறையில் 1-4-1986 முதல் செயல்படுத்துமாறு ஆணையிடப்பட்டுள்ளது. அப்படியே உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் வைப்பு நிதியை மாவட்டக் கல்வி அலுவலர்கள் மகளிர் பள்ளி ஆய்வாளர்கள் கவனித்து வருகின்றனர். 1-4-1988 முதல் வைப்பு நிதிச் சந்தா அரசுக் கணக்கில் செலுத்தப்படுகின்றது. அவ்வப்போது அரசு

[1994 நவம்பர் 3

ஊழியர்களுக்கு எவ்வாறு வழங்கப்படுகிறதோ அவ்வாறே உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிவோரும் ஆசிரியர் வைப்பு நிதிக்கான வட்டியைப் பெறுகின்றனர்.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி:—

ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தையொட்டி கொடி விற்பனை, நன்கொடை முதலியவற்றின் மூலம் வசூல் செய்யப்பட்ட தொகையில் பெரும் பகுதி ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதிக்கு மாற்றப்பட்டது. ஆசிரியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும்போது நிதியுதவி செய்யவும் அவர்களுடைய குழந்தைகளுக்கு மேற்படிப்புக்காக உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைகளுக்குட்பட்டு அளிப்பதற்கும் 1962-ல் தொடங்கப்பட்ட இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1,000, தொழிலியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 500 என்பது உதவித் தொகையின் விகிதமாகும். காச நோய் போன்று சில குறிப்பிட்ட கடுமையான நோய்களால் அவதிப்படும் ஆசிரியர்களுக்கு ரூ. 750 நிதியுதவி தரப்படுகிறது. சைதாப்பேட்டை கல்வியியல் கல்லூரி வளாகத்தில் ஆசிரியர் இல்லம் ஒன்றைக் கட்ட அரசு நிதி அளித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான விருதுகள்:

பள்ளி ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இவ்விருது ஒவ்வொன்றும் ரூ. 1,000 பண முடிப்பு, வெள்ளிப் பதக்கம், தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம்:

பள்ளிகளில் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்களைத் தமிழ் நாடு தேர்வாணைக் குழு மூலம் ஆசிரியர்களைத் தேர்வு செய்து நிரப்புவதில் இருந்து வந்த நடைமுறை இடர்பாடுளை நீக்க ஆசிரியர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்வி என்னும் பெரும் பணியின் அங்கமாகிய ஆசிரியர் பெருமக்களின் நியாயமான குறைகளை ஆராய்ந்து அவற்றைக் களையும் நோக்கத்துடன் ஆசிரியர் நல நான்கு அடுக்குக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. சரக அளவில் உதவிக் கல்வி அலுவலராலும், கல்வி மாவட்ட அளவில், மாவட்டக் கல்வி அலுவலராலும், வருவாய் மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலராலும், மாநில அளவில் பள்ளிக் கல்வி இயக்குநராலும்

1994 நவம்பர் 3]

ஆசிரியர்களின் குறைகள் அறியப்பட்டு அவை களையப்படுகின்றன. சென்னையில் ரூ. 28.30 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. வெகு தூரத்தில் உள்ள மாவட்டங்களிலிருந்து அலுவலகப் பணி நிமித்தம் சென்னைக்கு வரும் ஆசிரியர்கள் தங்குவதற்கான வசதிகளைச் செய்வதுதான் ஆசிரியர் இல்லத்தின் முக்கிய நோக்கமாகும்.

35—

1991-92 ஆம் கல்வி ஆண்டில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்வி நிறுவனங்கள்

*வினா எண் **21964**—திரு. பி.வி. இராஜேந்திரன் மற்றும் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் 1991-92 ஆம் நிதி ஆண்டில் கிராமப் புறங்களில் ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் கொண்ட ஆரம்பக் கல்வி நிறுவனங்கள் எத்தனை திறக்கப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதுபோன்று நலிவுற்ற பகுதியிலுள்ள ஆரம்பக் கல்வி நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி அளித்து வருகிறதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) 1991-92 ஆம் கல்வி ஆண்டில் நிதியுதவி இன்றி 17 பள்ளிகளைத் (1 முதல் 5 வகுப்புகள்) துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசின் தற்போதைய கொள்கைப்படி நிதி உதவியின்றியே தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருவதால் நலிவுற்ற பகுதிகளிலுள்ள ஆரம்பக் கல்வி நிறுவனங்களுக்கு அரசு நிதி உதவி அளிக்கும் பிரச்சினை எழவில்லை.

36—

மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க நடவடிக்கை

*வினா எண் **22508**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்குவிக்க கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—

1. விளையாட்டுத் திறனை தட்டி எழுப்ப 4 விளையாட்டுப் பள்ளிகளும், 4 விளையாட்டு விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறுமிகளுக்குத் தனியே ஒரு பள்ளியும் விடுதியும் தொடங்கப்பட்டுள்ளது.

2. விளையாட்டு திறம்பாட்டு விடுதி சென்னையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் தேர்வு செய்து உருவாக்கப்பட்ட மாணவர் அணி அகில இந்தியப் பள்ளி மாணவர் இணையம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளச் செய்தல்.

4. ஊரக விளையாட்டு மையங்கள் ஏற்படுத்துதல்.

5. ஊரக இளைஞர்களின் திறமை வெளிப்பட வட்ட, மாவட்ட மாநில விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அதன் மூலம் அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறச் செய்தல்.

6. மகளிர்க்கு விளையாட்டில் சம பங்கு.

7. தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை.

8. சிறந்த விளையாட்டு வீரர்களைத் தத்து எடுத்தல்.

37—

வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குதல்.

வினா எண் ***23964***—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் அரசு உதவி பெறும் கீழ்க்கண்ட துவக்கப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

மேட்டுப்பட்டி செல்வபாக்கியம், சிவகிரி கமிட்டி நாடார் உறவின் முறை, அய்யாபுரம் இந்திரா சிவகிரி சித்தி விநாயகர், சிவகிரி இந்து சிங்கராயர், சிவகிரி டிடிடிஏ அய்யாபுரம் சகாயம், அருக்கன்குளம் இனாம் கோவில்பட்டி, ஜனநாயக இராமநாதபுரம் இராஜம் ஆகிய துவக்கப் பள்ளிகள்.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

1993-94 மற்றும் 1994-95 ஆம் கல்வி ஆண்டில் துவக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் மாணவர் சேர்க்கைக்காக பள்ளிகளில் அனுமதிப்பதற்காக அரசினரால் இடைநிலையாசிரியர் பணியிடங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. கூடுதல் சேர்க்கைக்காக பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக இடை நிலையாசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டால், மேல்குறித்த பள்ளிகளுக்கு பணியிடம் தேவையுள்ள பள்ளிகளில் முன்னுரிமையின்படியும், விதிகளின்படியும் உரிய மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழியாக ஒதுக்கீடு செய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

38—

வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் அரசு உதவி பெறும் துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களை நியமித்தல்.

வினா எண் *27954*—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் அரசு உதவி பெறும் சமதரானா துவக்கப்பள்ளி, தேவிப்பட்டணம், டி.டி.டி.ஏ. துவக்கப்பள்ளி, தேவிப்பட்டணம், கம்மவாள் துவக்கப்பள்ளி, விஸ்வநாதப்பேரி அருணோதயா துவக்கப்பள்ளி, தலைவன் கோட்டை, டிடிடிஏ துவக்கப்பள்ளி, மலையடிக்குறிச்சி சண்முகானந்த துவக்கப்பள்ளி, மலையடிக்குறிச்சி சுதந்திரா துவக்கப்பள்ளி, கரிசல்குளம், பாரதியார் துவக்கப்பள்ளி, மேல் கரிசல்குளம், புனித அந்தோணியார் துவக்கப்பள்ளி, வடுகப்பட்டி உயர்குடி கணேசர் துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

1993-94 மற்றும் *1994-95* ஆம் கல்வியாண்டில் கூடுதல் சேர்க்கைக்காக பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக இடைநிலையாசிரியர்கள் பணியிடங்கள் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே மேற் குறித்த பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்கள் வழங்கும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் போக்கத் திட்டம்.

வினா எண் ***27974***—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவ நல்லூர் ஒன்றியத்தில் அரசு உதவி பெறும் கீழ்க்கண்டுள்ள துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

வேலாயுதபுரம் ஆர்.சி. துவக்கப்பள்ளி, புளியங்குடி, எஸ்.ஆர்.ஜி.பி., புளியங்குடி முகைதீனியா, வாசுதேவநல்லூர் லால்பகதூர் சாஸ்திரி, வாசுதேவநல்லூர் நாடார் உறவின் முறை, புளியங்குடி வாழநந்தா, வாசுதேவ நல்லூர் இராமசாமி, வாசுதேவநல்லூர் ஆர்.சி., வாசுதேவ நல்லூர் காந்தி, வாசுதேவ நல்லூர் அகத்தியர் துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகள்.

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

1993-94 ஆம் கல்வியாண்டில் துவக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளிகளின் கூடுதல் மாணவர் சேர்க்கைக்காக இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. 1994-95 ஆம் ஆண்டில் கூடுதல் சேர்க்கைக்காக பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக இடைநிலையாசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டால், மேற் கூறப்பட்ட, பள்ளிகளுக்கு பணியிடம் தேவையுள்ள பள்ளிகளில் முன்னுரிமையின்படியும் விதிகளின்படியும் ஆராய்ந்து உரிய மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழியாக ஒதுக்கீடு செய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

40—

பரமக்குடியில் மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடம் நிரப்புதல்.

வினா எண் ***36706***—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி கல்வி மாவட்டத்தில் மாவட்ட கல்வி அலுவலர் பதவி காலியாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளத?

1994 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது அப்பதவி நிரப்பப்படும் ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) 27-1-1994 அன்று நிரப்பப்பட்டுள்ளது.

41—

பொறியியற் பல்கலைக் கழகத்திற்கு முதல்வர் பெயரைச் சூட்டுதல்.

வினா எண் ***36986***—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாகத் துவக்கப்படும் பொறியியற் பல்கலைக் கழகத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வரின் பெயரைச் சூட்டிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

42—

திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்.

வினா எண் ***22824***—திரு. எஸ்.எம்.துரை : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

43—

காயிதே மில்லத் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 27422—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

இல்லை.

44—

தொழிலாளர் நலத் திட்டங்களின் கீழ் பயிற்சி பெறுபவர்கள் விவரம்

வினா எண் 35498—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிலாளர் நலவாரியத்தின் மூலம் தொழிலாளர் நலத் திட்டங்களின் கீழ் பயிற்சி பெறுபவர்கள் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிலாளர் நல மையம் ஏதும் செயல்படவில்லை.

45—

இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் கிளை மேலாளர் மற்றும் பணிபுரிபவர்கள் விவரம்

*வினா எண் **33501**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கியில் பணிபுரிபவர்களில் ஆதிதிராவிடர் எத்தனை சதவீதம்?

(ஆ) வங்கியின் கிளை மேலாளர்களில் ஆதிதிராவிடர்கள் எத்தனை சதவீதம்?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) (1) வங்கியில் பணிபுரிபவர்கள் எண்ணிக்கை 30-6-1994-ல் 198.

(2) ஆதிதிராவிடர் அலுவலர்கள் எண்ணிக்கை-2.

(3) மொத்தப் பணியாளர்களில் ஆதிதிராவிடர் பணியாளர்கள் சதவீதம்- 1.

(ஆ) (1) தலைமையகம் மற்றும் கிளைகளில் மேலாளர்களாகப் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை-32.

(2) அதில், ஆதிதிராவிடர் வகுப்பினைச் சேர்ந்தவர்கள் மேலாளர்களாகப் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை-1.

(3) மொத்த மேலாளர்களில் ஆதிதிராவிட வகுப்பினைச் சேர்ந்த மேலாளர்கள் சதவீதம் 3.

46—

திருப்புவனம் பேரூராட்சியில் நடுநிலைப்பள்ளிகளைச் சீர்படுத்தல்

*வினா எண் **1387**—திரு. வ. மு. சுப்பிரமணியம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்புவனம் பேரூராட்சியில் இடிந்து விழும் நிலையில் உள்ள பழையூர் பள்ளி, சந்திரபள்ளி போன்ற ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளைச் சீர்ப்படுத்திதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சியில் உள்ள பழையூர்பள்ளி, சந்திரபள்ளி போன்ற ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பழுது பார்க்கும் வேலைகள் முடிந்து வகுப்புகள் நடைபெறுகின்றன.

47—

அடைக்கலததேவனில் ஊராட்சிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 6576—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அடைக்கலத்தேவனில் ஊராட்சிக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், அடைக்கலத்தேவன் ஊராட்சிக்கு 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்பு கூடுதல் திட்டத்தில் ரூ. 87,000 மதிப்பீட்டில் ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

48—

குளக்குடி ஊராட்சி பனங்குளத்திலிருந்து ஐயனார் கோவிலுக்குச் செல்லும் சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 6705—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குளக்குடி ஊராட்சி, பனங்குளத்திலிருந்து ஐயனார் கோவிலுக்குச் செல்லும் சாலையை செப்பனிடவும் இடையில் சிறு பாலம் அமைக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பனங்குளத்திலிருந்து ஐயனார் கோவிலுக்குச் செல்லும் சாலையின் நீளம் 1 கி.மீ. இச்சாலையைச் செப்பனிடவும் சிறு பாலம் கட்டவும் ரூ. 1.45 இலட்சம் தேவை. சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதிவசதி இல்லாததால் இச்சாலையைச் செப்பனிடும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

49—

முத்தரையர் இனமக்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்

*வினா எண் **6913**—திரு. **ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் மேற்கு மிகவும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த முத்தரையர் இனமக்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே தொகுப்பு வீடுகள் கட்டித்தர இயலும். மிகவும் பின் தங்கிய வகுப்பினர்களுக்கு காலனி வீடுகள் கட்டித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

50—

வேட்டைக்காரன் புதூரில் மயான வசதி ஏற்படுத்துதல்

***வினா எண் 8547—டாக்டர் அ. ஸ்ரீதரன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சியில், வேட்டைக்காரன் புதூர் என்ற ஊருக்கு போதிய மயான வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சிப் பகுதியில் மயானவசதி செய்து கொடுக்கும் பொருட்டு வேட்டைக்காரன் புதூர் அமுக்குசாமிகோவில் வீதியில் முடிவு பகுதியில் அமைந்துள்ள உப்பாற்றின் ஓரப் பகுதியில் (புறம்போக்கு) நிலம் சர்வே எண். 1-'பி' யில் உள்ள 0.80 ஏக்கர் நிலம் வருவாய்த் துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பகுதி தற்போது மயானமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

51—

மேலப்பட்டமுடையார்புரம்—கழுநீர்குளம் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 10176—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பட்டமுடையார்புரம் கிராமத்திலிருந்து கழுநீர்குளம் வரை தார்ச் சாலை போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் மொத்த நீளம் 2.60 கி.மீ. ஆகும். இதில் கீழப்பாவூர் பேரூராட்சிக்குட்பட்ட சாலையின் நீளம் 1.00 கி.மீ. இதில் 0.60 கி.மீ. கல் சாலையாக பேரூராட்சி மூலமாக செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலையில் தார்ச்சாலை அமைக்க பேரூராட்சியில் நிதி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. மேற்படி சாலை 1993-94-ல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்த்து தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1994 நவம்பர் 3]

52—

பேராவூரணி ஒன்றியம், பெரிய தெற்கின் காட்டில் பள்ளிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் ***11485****—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பெரிய தெற்கின் காட்டில் *1992-93*-ல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பெரிய தெற்கின் காட்டில் *1992-93*-ல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

53—

நம்பிவயல் ஜீவா நகர் ஆதிதிராவிடர் காலனி சாலையை செம்மண் கப்பிச் சாலையாக்குதல்

வினா எண் ***11633****—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், நம்பிவயல்-ஜீவாநகர், ஆதிதிராவிடர் காலனி வழியாகச் செல்லும் சாலையை *1992-93*-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற ரூ. *50,000* செலவாகும். பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இன்மையால் செம்மண் கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

54—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் செம்மண் கப்பிச்சாலை அமைத்தல்

*வினா எண் **11641**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஆலடிக்குமுளை-சூரப்பள்ளம் சாலையில் 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஆலடிக்குமுளை—சூரப்பள்ளம் சாலை 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.13,500 செலவில் செம்மண் கப்பிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. எனவே, இவ்வினாவுக்கு இடமில்லை.

55—

கரம்பயம் - மாரியம்மன் கோயில் சாலையை செம்மண் கப்பிச் சாலையாக மாற்றுதல்

*வினா எண் **11643**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம்-மாரியம்மன் கோயில் சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கரம்பயம் - மாரியம்மன் கோவில் சாலை 0.8 கி.மீ. நீளமுள்ள வரையறுக்கப்படாத சாலை. இது 1991-92-ல் ரூ. 20,000 செலவில் செம்மண் கப்பிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

1994 நவம்பர் 3]

56—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் ஓதியடிக்காடு பதன்காடு சாலையைக் கப்பிச் சாலையாக்குதல்

*வினா எண் **11645**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஒதியடிக்காடு-பதன்காடு சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஒதியடிக்காடு - பதன்காடு சாலை மண் சாலையாக இருந்தது. இதை 1991-92-ம் ஆண்டு செம்மண் கப்பிச் சாலையாக ரூ. 13,500 மதிப்பீட்டில் மாற்றப்பட்டது.

57—

அதம்பை மயானத்திற்குத் தகரக் கொட்டகை அமைத்தல்

*வினா எண் **11980**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வடக்கு) ஆதிதிராவிடர்கள் மயானத்திற்கு 1992-93-ல் தகரக் கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1994-95 ஆம் ஆண்டில் ரூபாய் 15,000 மதிப்பீட்டில் அதம்பை ஊராட்சி மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

58—

பெரிய கள்ளங்காட்டில் மயானக் கொட்டகை அமைத்தல்

வினா எண் **11981**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குருவிக்கரம்பை ஊராட்சி பெரிய கள்ளங்காட்டில் 1992-93-ல் மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

குருவிக்கரம்பை ஊராட்சி, பெரிய கள்ளங்காடு கிராமத்தில் மயானக் கொட்டகை வரும் 1994-95 நிதி ஆண்டில் எடுத்துச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

அதம்பை சாலையை மராமத்து செய்தல்

வினா எண் **11991**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கைச் சேர்ந்த திருவள்ளுவர் நகர் நடுவிக்கோட்டை வரை அதம்பை (தெற்கு) வழியாக செல்லும் சாலையை 1992-93-ல் மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த அதம்பை கிராம திருவள்ளுவர் நகரிலிருந்து நடுவிக்கோட்டை வரை முன் காலத்தில் 1.0 கி.மீ. நீளத்தில் சாலை இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் காலப்போக்கில் ஆக்கிரமிப்பினால் மறைந்துவிட்டது. 0.5 கி.மீ. நீளத்திற்கு நடைபாதை மட்டுமே உள்ளது. 0.5 கி.மீ. விளைநிலமாக மாற்றப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு முற்றிலும் அகற்றப்பட்டு முழுவதும் கையகப்படுத்தினால்தான் சாலை அமைக்க இயலும். ஆதலால் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

1994 நவம்பர் 3]

60—

தேவிப்பட்டினம் ஊராட்சி மீனவர் காலனி சாலையில் தடுப்புச் சுவர் அமைத்தல்

வினா எண் ***12078***—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, செம்பியமாதேவிப்பட்டினம் ஊராட்சி மீனவர் காலனி சாலையில் 1992-93-ல் தடுப்புச் சுவர் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், செம்பியமாதேவிப்பட்டினம் மீனவர் காலனி சாலையில் ரூ. 2,723 செலவில் தடுப்புச்சுவர் 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் இக் கேள்விக்கு இடமில்லை.

61—

பள்ளத்தூர் ஊராட்சி உயர்நிலைப்பள்ளி சாலையில் கல்வர்ட் அமைத்தல்

வினா எண் ***12065***—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பள்ளத்தூர் ஊராட்சி உயர்நிலைப் பள்ளி சாலையில் கல்வர்ட் 1992-93-ல் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஊராட்சி, பள்ளத்தூர் உயர்நிலைப்பள்ளி சாலையில் ரூ. 6,645 செலவில் 1991-92 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஏற்கெனவே கல்வர்ட் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

[1994 நவம்பர் 3

62—

அம்மையாண்டி ஆதிதிராவிடர்களின் இடிந்த காலனி விடுகளை மாற்றி புதிய வீடுகள் கட்டுதல்

*வினா எண் **12576**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஆதிதிராவிடர்களின் இடிந்துபோன காலனி வீடுகளை மாற்றி புதிய வீடுகள் கட்டித்தர 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடைமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கப்படும். எனவே, இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

63—

புளியம்பட்டி பஞ்சாயத்து மயான பிரச்சினையில் எடுக்கப்பட்ட முடிவு விவரம்

*வினா எண் **15359**—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

சங்ககிரி தொகுதி, புளியம்பட்டி பஞ்சாயத்து மயான பிரச்சினையில் எடுக்கப்பட்ட முடிவின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புளியம்பட்டி அருந்ததியர் காலனி, குமாரபாளையம் எடப்பட்டி பாதையில் அமைந்துள்ளது. இதற்கு மேற்குப்புறம் புளியம்பட்டி அருந்ததியர்

மயானம், காவிரிக் கரையின் ஓரத்தில் உள்ளது. மேற்படி மயானத்தின் பாதை 2 பர்லாங் தூரம். இதனை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னால் புளியம்பட்டி அருந்ததியர்கள் சார்பில் சொந்தப் பொறுப்பில் சிரமம் மூலம் பெறப்பட்டுள்ளது. இந்தப் பாதையின் வழியாகச் சடலங்களை எடுத்துச் சென்று மயானத்தில் அடக்கம் செய்கிறார்கள். இதுகுறித்து எந்தப் பிரச்சினையும் எழவில்லை.

64—

கன்னார்பாளையத்திலிருந்து காரமடை வரை சாலை அமைத்தல்

வினா எண் ***20551***—திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரமடை பஞ்சாயத்து யூனியன் கன்னார்பாளையத்தில் இருந்து காரமடை வரை சாலை போட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது போடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர் :*

(அ) மற்றும் (ஆ): காரமடை பஞ்சாயத்து யூனியன் கன்னார்பாளையத்திலிருந்து காரமடை வரையுள்ள சாலை 1994-95 ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்படும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

65—

சத்தியமங்கலம் பேருந்து நிலையத்திற்கு அன்னை சந்தியா பெயர் சூட்டல்

வினா எண் ***21461***—திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் பேருந்து நிலையத்திற்கு அன்னை சந்தியா பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

சத்தியமங்கலம் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்திற்கு அன்னை சந்தியா பேருந்து நிலையம் என பெயர் சூட்டக் கோரிய சத்தியமங்கலம் நகர் மன்றத்தின் 30-11-1992 நாளிட்ட 190 எண்ணிட்ட தீர்மானம் அரசால் பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டது.

66—

பள்ளிகளில் காவலராகப் பணியாற்றுபவர்களைப் பணி நிரந்தரம் செய்தல்

*வினா எண் **22240**—திரு.எம்.பூராசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சீர்காழி ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் காவலராக 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுபவர்களின் பணி, ஊதியத்தை நிரந்தரமாகச் செய்யும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா ?*

(ஆ) *ஆம் எனில், எப்போது ?*

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) *சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுபவர்கள் யாரும் இல்லை.*

(ஆ) *கேள்விக்கு இடமில்லை.*

67—

அம்மையாண்டி ஆதிதிராவிடர் காலனியைப் பழுதுபார்த்தல்

*வினா எண் **22270**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஆதிதிராவிடர் காலனியைப் பழுதுபார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கப்படும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

68—

மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் புதிய வீடுகள் கட்டுதல்

*வினா எண் **22272**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் இடிந்து போன வீடுகளை மாற்றி புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பழுதுபார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கப்படும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

69—

இராஜாமடத்தில் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டுதல்

*வினா எண் **22273**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

70—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்

*வினா எண் **24065**—திருமதி கே. மரியம் உல் ஆசியா :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், எலவனூர், முன்னூர் தொக்குப்பட்டி, புதூர், பெரிய திருமங்கலம் ஆகிய இடங்களில் பள்ளிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 1993-94-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் எலவனூர், தொக்குப்பட்டி, புதூர், முன்னூர்

1994 நவம்பர் 3]

ஆகிய கிராமங்களில் பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. பெரிய திருமங்கலத்தில் *1993-94*-ல் எடுக்கப்பட்ட பள்ளிக் கட்டட வேலை முடியும் தருவாயில் உள்ளது.

71—

அனந்தகோபாலபுரத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் **26358**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் வட்டம், திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (வடக்கு) ஊராட்சி, அனந்தகோபாலபுரத்தில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

72—

வெம்பக்கோட்டை ஒன்றியம் ஆலங்குளம் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் **26361**—திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியம் ஆலங்குளம் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

73—

மஹாராஜ சமுத்திரம் காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

வினா எண் ***28976***—**திரு. சி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கறம்பக்குடி ஒன்றியம் கீராத்தூர் பஞ்சாயத்தில் – மஹாராஜ சமுத்திரம் காட்டாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மேற்காணும் இடத்தில் பாலம் சேதமடைந்ததை அகற்றிவிட்டு புதிய பாலம் கட்ட ரூ. 30 இலட்சம் செலவாகும். இவ்வளவு தொகையை ஊராட்சி ஒன்றியத்தினால் மேற்கொள்ள இயலாது. எனவே, பாலம் கட்டும் திட்டம் அரசிடம் தற்சமயம் இல்லை.

74—

சிவகாசி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *31887*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 3]

காமராஜர் மாவட்டம், சிவகாசி ஒன்றியம், மங்கலம் கச்சநாயக்கன்பட்டி, கவண்டன்பட்டி, காறையார் குறிச்சி, இனாம் நாராணாபுரம், எரிச்ச நத்தம், வி. சொக்கலிங்கபுரம், ஆணையர், ஆணைகுட்டம், ஆல மரத்துப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

திருவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *31917*—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் ஒன்றியம், பிள்ளையார்குளம், பிள்ளையார் நத்தம், பாட்டாக்குளம், கல்லபட்டி, படிக்காசு, வைத்தான்பட்டி, முள்ளிக்குளம், டி. மாகைசேரி, மம்சாபுரம், மல்லிபுதூர், மல்லி, கோட்டைப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

76—

ஆதிதிராவிடர்களுக்கு வத்திராயிருப்பு ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *31937*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம் மகாராஜபுரம், மாதூர், மேல கோபாலபுரம், மூவரைவென்றான், இராமசந்திரபுரம், இராமசாமிபுரம், ரெங்கப்ப நாயக்கன்பட்டி, சேதுநாராயணபுரம், சுந்தரபாண்டியம், தம்பிபட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

77—

வத்திராயிருப்பு ஒன்றியத்தில் ஆதிதிரர்விடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *31947*—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம், வத்திராயிருப்பு ஒன்றியம், அம்மாபட்டி, அயன்கரிசல் குளம், அயதி நத்தம்பட்டி, இரந்தைக்குளம், காடனேரி, கீழ் கோபாலபுரம், கான்சாபுரம், எஸ். குடிகுளம், கோட்டையூர், குன்னூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1994 நவம்பர் 3]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

78—

குண்ணன்டார் கோவில் ஒன்றியத்தில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் ***31967*—திரு. *ஆர். சிங்காரம்* :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குண்ணண்டார் கோவில் ஒன்றியத்தில், கோட்டுச்சாரன்பட்டி, மலையப்பட்டி, செங்களூர், குமரப்பட்டி, ஐயாப்பட்டி, கீழையூர், கனியப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

79—

தஞ்சாவூர் மாவட்டத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

***வினா எண் 32085*—திரு. *ஆர். சிங்காரம்* :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கள்ளப்பெரம்பூர் மானாங்கோரை, துறையூர், கல்லுச்சேரி, சக்கர சாமந்தம், திருமண சமுத்திரம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

80—

திருவோணம் ஒன்றியத்தில் சில கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32403**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், மேடையக் கொல்லை, திப்பியக்குடி, உஞ்சியவிடுதி, பிள்ளையூர், இல்லத்தூர், திருநல்லூர், நெம்மேலி, ஆகிய இடங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1994 நவம்பர் 3]

81—

மயிலாடுதுறை ஒன்றியத்தில் சில கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32434**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், வள்ளலாகரம் காளி, தாழஞ்சேரி, குறிச்சி, ஆத்தூர், குறிச்சாறு, நீடூர், அருள்மொழித் தேவர் ஆனந்த தாண்டவபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

82—

கொள்ளிடம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32486**—*திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், கோபாலசமுத்திரம், நல்லவினாயகவரம், அகர எவத்தூர், ஓலையம்புதூர், வடரங்கம், மந்திர வேலூர் குண்ணம், எடவலை திருக்கருக்காவூர், உமையாள்பதி ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

83—

குடவாசல் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32526**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சரபோஜிராஜபுரம், திருவிழிமழலை, நெம்மேலி, கடகக்குழி, விளாகம், வடுகக்குடி ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

84—

சீர்காழி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32541**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், மங்கைமடம், நெப்பத்தூர், வண்ணுவகுடி நிம்மேலி, மேலையூர் கீழையூர், திருப்பங்கூர், மணிக்கிராமணி, புங்கசூர், கொண்டல் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

85—

குத்தாலம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32866**—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், தத்தங்குடி, திருவாலங்காடு, கப்பூர், கொடவிளாகம், கொக்கூர், சேத்திராமாலபுரம், எழுமகளூர், பெருஞ்சேரி, மங்கநல்லூர், தொழுதாழங்குடி ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1994 நவம்பர் 3

86—

குத்தாலம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **32886**—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

